



ஏழு நாடுகளில் எழுபது நாட்கள்

அ.மு.பரமசிவானந்தம்





495

ஏழு நாடுகளில்
எழுபது நாட்கள்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்

வள்ளியம்மாள் கல்வி அறம்
எப் 40, முதல் பெருந்தெரு
அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 102

முதல் பதிப்பு : 1985 செப்டம்பர் 7.

உரிமைப் பதிப்பு
பக்கங்கள் 464+8

விலை முப்பத்தாறு ரூபாய்

(வருவாய் அனைத்தும் பள்ளிக்கு உரியது)

படங்கள் பக்கம்

1. (க) உரோம்-போப்பாண்டவர் திருக்கோயில் முன்—அன்பர் குழந்தைராஜ் அவர்களுடன் 64—65

(உ) மலேயா சிரம்பான்—திரு. இலக்குமணன் செட்டியார் பிறருடன்

2. நியூயார்க்—திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் குடும்பத்துடன் 128—129

3. விஸ்கான்சன் பல்கலைக் கழகம் 288—289

4. லாஸ் ஏஞ்சிலஸ்..... 368—369

(க) திரு. பதுமநாபன் அவர்கள் குடும்பத்துடன்

(உ) கடற்கரையில்

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் சாலை,
சென்னை - 600 014.

அன்பர்தம் கடிதங்கள் - அறிமுகம்

Prof. Paramasivanandam! You are welcome to pilgrimage to the Adheenam at any time. There is a small guest facility on the property quite close to the temple. You would surely enjoy it very much. Please try to give us some idea when you would be here so that reservation in the guest house can be arranged accordingly.

May Lord Siva ever guide and bless you.

Hawaii.
23-11-1984

Siva Kathirswami
(Rev. Swami Thambynathan Kathir)
Saiva Siddhanta Church

Dear Professor Paramasivanandam,

We are pleased to invite you to the South Asia Center, the University of Chicago, for lectures/seminars for a few days in April-May 1985. You may write to us your exact dates when arrangements are made. Please exclude the week of April 7-14 when other programs are already planned.

Sincerely yours,

University of Chicago
26-11-1984

(Dr.) Joan L. Erdman
Convenor, South Asia Seminars
Committee on Southern Asian Studies

Dear Professor Paramasivanandam,

The Department of Asian Languages and Literature would like to invite you to give a series of lectures at the University of Washington during April or May, 1985. Please let us know your exact dates when you will be available to visit us. We would prefer that you try to visit us during April, 1985, since the month of March is chopped up by holidays and breaks in the quarter.

Seattle
29-11-1984

Sincerely,
Harold F. Schiffman
Washington University

Dear Professor Paramasivanandam,

We are happy to invite you to visit our Department during your upcoming trip to the United States. Spring term classes will end on April 26. If you can visit us before that time, we would like to have you give a lecture or conduct a seminar on some aspect of Tamil literature or culture.

Sincerely,
Rosane Rocher

Philadelphia
23-1-1985

Chairman, Department of South Asia Regional Studies
University of Pennsylvania

தமிழ்ப் பல்கலைக்கழகச் சார்பில் தாங்கள் உலகப் பயணம் செய்வதறிந்து மிக்க மகிழ்ச்சி. மலேசியா வரும் நாளை எழுதுங்கள் எங்களுடன் தாங்கள் தங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கோலாலம்பூர்
28-1-1985

தங்கள் மாணவன்
இரா. தண்டாயுதம்
மலேயா பல்கலைக் கழகம்

தங்கள் வருகை அறிந்து அனைவரும் மகிழ்ந்தனர். பல அறிஞர்கள் தங்களொடு அளவளாவிப் பேச விரும்பு கின்றனர். தாங்கள் வரும் நாள்கள் ஈஸ்டர் விடுமுறை நாட்களானமையின் பள்ளி கல்லூரிகளைக் காண இயலாது. தமிழ் முன்னேற்றக்கழகம், திருவள்ளுவர் பள்ளி ஆகிய இடங்களைக் காட்ட ஏற்பாடாகி உள்ளது.

இலண்டன்
19-3-1985

பணிவுள்ள,
எ. அரங்க முருகையன்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம் அவர்களுக்கு,

தாங்கள் நலமே அமெரிக்கா சென்று சேர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். அங்குப் பெரும்பான்மையும் இஃது இளவேனிற்காலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

இங்கு நாங்களெல்லாம் தங்களின் அன்பையும் பணி வான நல்லியல்புகளையும், தங்களின் பட்டறிவு, அறிவுரை களையும் எண்ணி எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தங்கள் சுற்றுலா பீடுறவும் செம்மையாகவும் அமையு மென்று நம்புகிறேன். நன்றி.

இலண்டன்
16-4-1985

தங்கள் பணிவுள்ள,
அரங்க முருகையன்

Dear Prof. Paramasivanandam,

Thank you for your letter indicating that you will be in Seattle from the 20th May through the 22nd. We have made a reservation for you at the University Motor Inn, 4140 Roosevelt way NE. They will hold the reservation until 6 p. m.

I have asked some students and members of the Tamil community here to help arrange somethings to make your stay more interesting. I hope by then our dictionary work will have reached a stage that will show some interesting things to you.

Sincerely yours,
Harold F. Schiffman
Chairman and Professor
University of Washington

Seattle
6-5-85

Dear Prof. Paramasivanandam,

I have received your letters and made the following arrangements for your stay in Tokyo from 2nd June.

A single room reservation has been made at Y.M.C.A., Mitoshiro—Cho, Kanda, Tokyo (phone 03-293 - 1911) for three nights from the 2nd June.

Looking forward to meeting you next month,

Yours Sincerely,
Noboru Karashima
Professor of South Asian History

University of Tokyo
10-5-1985

SAIVA SITHANTHA CHURCH-KAVAII-SEND OFF

வணக்கம்—Prof. Paramasivanandam

Have a wonderful trip.

Come back soon.

Aum.

Sadhaka Kaddiresan. 1-6-1985

தமிழ் நேசன் (கோலாலம்பூர்)—நாளிதழ்.

மலேயா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப்பிரிவு அவசியம் என்று வலியுறுத்திய பேராசிரியர் பரமசிவானந்தம் வருகை.

மலேயா பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிப் பிரிவு ஒன்றை அமைப்பதற்காகத் தமிழக அரசின் சார்பில் 1948-49ல் மலேயாவுக்கு வந்து பல மாநிலங்களுக்குச் சென்று ஆங்காங்கே உள்ள தமிழர்களைச் சந்தித்து, தமிழ் மொழியின்பால் ஏற்பட்ட உணர்வினைக் கண்டறிந்து அவற்றைத் தமிழக அரசிடம் சொல்லி, மலேயா பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பிரிவு அவசியம் என்பதை வலியுறுத்திக் கூறியவர் தான் பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம். நேசனுக்கு அளித்த சிறப்புப் பேட்டியில், அன்று மலேயா தமிழ்ச் சங்கம் நாடு முழுவதும் தமக்குத் துணையாக நின்று செயல்பட்டது என்றார்.

தற்போது தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் பணியாற்றி வருகிறார். சுமார் இரண்டு மாதகாலம் கல்விச் சுற்றுலா மேற்கொண்டு இத்தாலி, சுவிஸ்சர்லாந்து, பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா, ஜப்பான், ஆங்காங், சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் பயணத்தை முடித்துக்கொண்டு, தாயகம் திரும்பும் வழியில் இங்கே ஒரு நாள் தங்கிவிட்டுச் செல்லுகையில் மேற்கண்ட பேட்டியைப் பேராசிரியர் வழங்கினார்.

பேராசிரியர் மேலும் தமிழ் மொழிக்கு அரும் பணியாற்றிச் சேவை செய்ய வேண்டுமென்று நேசன் தனது வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்ளுகிறான்.

11-6-85 சந்திப்பு—மு. முருகையன்

Dear Mr. Paramasivanandham,

It was so nice to see you at Professor Schiffman's dinner party when you were visiting Seattle. I hope that the rest of your trip was smooth and pleasant.

Sincerely,

11-6-1985 Maddie Terada

Washington University, Seattle.

Dear Professor Paramasivanandam,

Thank you for your kind letters. I must tell you how delighted we were to see you in Chicago. We felt we and our students found a true and harmonious friendship in Tamilnadu.

I'm delighted you had a fine trip in this country. All of us send our best wishes to you and your enterprises.

University of Chicago Sincerely,

25-6-1985 A. K. Ramanujan

Dear Prof. Paramasivanandam,

Thank you very much for your kind letter of June 15; I also received your note mailed from Hawaii. We enjoyed your visit with us so much and are happy to know that you have returned safely to India. I will convey your greetings to my wife and her mother; they both enjoyed meeting you.

University of washington Sincerely,

8-7-1985 Harold F. Schiffman

பேரன்புமிக்க பேராசிரியர் திரு. பரமசிவானந்தம் அவர்கட்கு:—

உங்களது பயண நூலைப் பெரிதும் வரவேற்கின்றேன். வெளி வந்ததும் தெரிவிக்கவும். தமிழகக் கல்வி நிலையங்கள் இதனால் நல்ல பயன் பெறும் என்றே நம்புகின்றேன்.

சைவ சித்தாந்த மையம் அன்புடன்,

இலண்டன் 5-8-85 ஞானசூரியன்

We greatly enjoyed your short stay here at the Aadheenam, hearing the teachings always so quickly translated into the Tamil verses of our Samayachariyas We are glad you were able to meet with Mr. Palasundaram and Mr. Thiruvachagam also. We understand your sincere request for us to leave aside philosophical matters for the present is made with love and care. You, as We, are concerned that Saivites do not so polarize themselves into two camps that we feel more distant from ourselves than we do from, say, those of entirely other faiths. Gurudev's strongest message at this time in Hindu Unity.

We stand together.

8-8-1985

Rev. Swami Adiyan Murugan
Saiva Siddhanta Church, Hawaii.

உயர்திரு பேராசிரியர் அவர்களுக்கு,

தங்கள் அமெரிக்கப் பயணமும் பிற வழிச் செலவுகளும் இனிதே அமைந்தன என நம்புகிறேன். பள்ளிக் குழந்தைகளும் பிறரும் மிக ஆவலுடன் எல்லாவற்றையும் உசாவி அறிந்திருப்பர். தங்கள் கல்வித் தொண்டு என்றென்றும் போற்றத்தகுந்தது; பல்லாண்டு தொடர்க!

தாங்கள் எங்கள் பல்கலைக் கழகத்துக்கு வந்து, அனைவரோடும் கலந்து பழகி, விரிவுரையாற்றி, எங்களை மகிழ்வித்த நிகழ்ச்சி என்றும் மறக்கமுடியாதது.

பென்சில்வேனியா
பல்கலைக் கழகம்
பிளடெல்பியா
28-8-85

அன்புள்ள
இராசம்
(தமிழ்ப் பேராசிரியை)
கிழக்காசிய மண்டலத் துறை

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தர்

டாக்டர். திரு. வ. அய். சுப்பிரமணியம்

அவர்கள்

அறிமுக உரை

பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், தமிழ்ப் பல்கலைக் கழக ஆளுநர் கூட்டம் முடிந்ததும், ஒரு நாள், தாம் பல நாடு களுக்குச் சென்றுவரத் திட்டமிட்டிருப்பதாகவும் அந்த நாட்டு அறிஞர்களுக்குக் கடிதமெழுதி அறிமுகப்படுத்தி உதவுமாறும் கேட்டுக் கொண்டார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழக வளர்ச்சித் திட்டங்கள் உருவாக்குவதற்கு, இத்தகைய பணயம் வழி உலகில் வாழும் தமிழர்கள், தமிழாய்வாளர்கள் முதலியவர்களின் கருத்தை அறிதல் நலமென்றும் அவ்வாறு பயணம் மேற்கொள்ளும் போது தமிழ் ஆய்வுத் தொடர்பு, தமிழ்ப் பல்கலைக் கழகம் நல்கும் வாய்ப்பு, எத்தகையத் திட்டத்தால் உலகின் பலபகுதி களில் வாழும் தமிழர்களைத் தாயகத்தோடு நெருங்கிய தொடர்பு கொள்ளச் செய்ய இயலும் முதலான கூறுகளை, கவனித்து குறிப்பு ஒன்று தருமாறும் கேட்டுக் கொண்டேன். பல நாட்டுப் பயணம் இந்த முதிய வயதில் மேற்கொள்ளும் மன உரத்தைப் பாராட்டினேன். உடல் நலத்துடன் திரும்ப வேண்டும் என்றும் வாழ்த்தினேன்.

பேராசிரியர் பரமசிவானந்தனார் 3-4-85ல் புறப்பட்டு 12-6-85ல் திரும்பினார்கள். செப்டம்பர் மாதம் முதல் நாளில் தனது நூலின் முதல் படியைக் காட்டினார்கள். இங்கிலாந்து, அமெரிக்க ஐக்கிய நாடு முதலிய தேசங்களுக்கு பலமுறை சென்றவர்கள்கூட அறியாத பல செய்திகளை

அவர்கள் தொகுத்துத் தந்துள்ளார்கள். பாராட்டு நிலையில் அவர்கள் பார்வை அமைந்துள்ளது. குறையிருப்பின் கூறுகின்ற சீர்தூக்கு நிலையும் பலவிடங்களில் காணப்படுகின்றது.

பிறநாட்டுத் தமிழர்களின் குழந்தைகள் தமிழை, தமிழ்ப் பண்பாட்டை மறந்து வருகின்றனர். அதற்கு நாம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பல இடங்களில் குறித்துள்ளார்கள்.

இடம் பெயர்ந்து வாழும் எல்லாச் சமுதாயத்தினரும் எதிரிடும் சிக்கலில் இது ஒன்று. பண்பாட்டுக் கூறுகளில் மதப்பற்று மறைவது மிகக் கடினம். மொழி மறைவது எளிது. ஏனெனில், அதற்கு அந்த நாட்டில் தேவையின்மையே காரணம். இடம் பெயர்ந்தோர் பலர் ஒரே இடத்தில் கூடி வாழ்ந்தால் அல்லது தாயகம் திரும்புதற்குத் திட்டமிட்டிருந்தால் தாய்மொழிப் படிப்பைத் தமது குழந்தைகளிடையே வளர்க்க எண்ணுவர். இல்லையேல் செய்தி பரிமாற்றத்திற்கு வேற்றுமொழிகள் பயனாவதால் தாய்மொழி, வீட்டு மொழியாக நாளாவட்டத்தில் பழக்கம் இன்றி மறையும் நிலையை பிஜி, டிரினடாடு முதலிய இடங்களில் வாழும் மக்களிடையே நாம் காண இயலும். இந்தியாவின் பிற மாநிலங்களில் வாழும் தமிழர்களிடையேயும் இந்த இடர்ப்பாடு உண்டு.

தாய்மொழிப் படிப்பு, பண்பாடு இவற்றை வளர்க்க இடம்பெயர்ந்தோர் தாய்நாட்டை எதிர் நோக்குவது, தாமே கழகங்கள் அமைத்துத் தேவையான பாடநூற்கள், கருவிகள் முதலியவற்றை உருவாக்குவது, இரு நிலையினரும் சேர்ந்து கூட்டு முயற்சி செய்வது என்று மூன்று நிலைகளில் இந்தச் சிக்கலுக்கு நாம் விடைகாண முயல இயலும். பிட்ஸ்பர்கில் உள்ள திருமால்கோவில், ஐக்கிய அமெரிக்காவில் வாழும் இந்தியர்கள் தொகுத்த நிதியினால், தென்னகக் கலைச் சிற்பிகளின் உதவியால் உருவாக்கப்பட்டது. மூன்றாவது நிலைக்கு இது தக்க எடுத்துக்காட்டு. தமிழ் நாட்டில் உள்ள சூழ்நிலைக்கேற்பத் தமிழ்ப் பாடநூற்கள்

உருவாக்கப்படுபவை. இலண்டலில் அல்லது சிக்காகோவில் வாழும் இளைஞர்களுக்கு இவை சுவை தரா. குறைந்த பயனை ஒரு வேளை தரலாம். என்னென்ன வகையில் இந்த நூற்கள் அமையவேண்டும், என்னென்ன ஒளி வில்லைகள், வீடியோப் படங்கள் தேவையென அறிவிப்பின் அவற்றை நாம் உருவாக்கி அனுப்பலாம். அல்லது பொருள் வளமும் எந்திர முன்னேற்றமும் உடைய அந்த நாட்டு அன்பர்களே உருவாக்கலாம். இங்கிலாந்து, நெதர்லாந்து, ஐக்கிய அமெரிக்கா முதலிய நாட்டுப் பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறைகள் இருக்கின்றன. அவற்றில் பணியாற்றும் ஆய்வாளர்களின் உதவியை நாடலாம். இப்போது அமெரிக்காவில் உருவாகியுள்ள தமிழ்நாடு அற நிறுவனம் (பவுண்டேசன்) தனது கிளையொன்றை இலண்டனிலும், தமிழ்நாட்டிலும் தோற்றுவித்து இப் பணியை மேற் கொள்ளலாம். தன் காலில் நிற்கமுயன்று வெற்றி கண்ட தமிழ் நண்பர்கள் இவற்றைச் சிந்திக்க வேண்டும். இவ்வாறு கூறினும், தொடக்கத்தில் தமிழக நிறுவனங்கள், பிறநாட்டுத் தமிழர்க்கு உதவுவதைத் தமது கடமையாகக் கருதிச் செயற் படவேண்டும் என்பதை நாம் மறக்கலாகாது.

மதக் கண்ணோட்டத்துடனும், கல்வியாளர், தமிழ்ப் பற்றாளர் என்ற கண்ணோட்டங்களுடனும் இந்த நூல் உருவாகியுள்ளது. நாட்குறிப்பு வடிவில் உருவானதால் தூங்கச் சென்ற நேரம், காலையில் எழுதல் முதலியவை பல பக்கங்களில் காணப்படுவதை மறந்து படித்தால் நூல் பயனுள்ளதாக அமையும்.

வ. அய். சுப்பிரமணியம்
சிறப்பு இயக்குநர்,
பன்னாட்டுத் திராவிட மொழியியல் நிறுவனம்
திருவனந்தை

தமிழ்ப்பல்கலைக் கழகப்

பரிந்துரை

Prof. A. M. Paramasivanandam, a renowned Tamil Scholar and Syndicate member of the Tamil Univeisity, Thanjavur, India-613 001, is on his world tour to have an on the apot study of the Universities and other Educational Institutions abroad. Besides, he will make an objective assessment of the growth of Tamil language and culture amongst the Tamils in the countries he is visiting and will suggest ways and means of fostering the same.

THANJAVUR
9-8-84

REGISTRAR
TAMIL UNiVERSITY

முன்னுரை

உலகம் உருண்டையானது. 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' என மணிவாசகர் இந்த உண்மையினை என்றோ காட்டி விட்டுச் சென்றார். அப்படியே பரந்து விரிந்த அண்ட கோள எல்லையில் இந்த உலகம் அணுவினுக்கு அணுவாய் மிகமிகச் சிறிய ஒரு உருண்டையே என குறித்துள்ளார். 'இல்நுழை கதிரின் துன் அணு' ஒப்ப, பரந்த அண்ட கோள எல்லையில் அமைந்த எத்தனையோ கோடானு கோடி தூசுக்களில் இந்த உலகமும் ஒரு சிறு தூசு. அப்படியே அளவற்ற நீண்ட கால எல்லையில் நம் வாழ்நாள் நொடியினும் நொடியாகும். மிகமிகக் குறுகிய எல்லையே நம் வாழ்நாள். எனினும் இந்த விரிந்த எல்லையைக் காணாத காரணத்தாலேயே இன்றைய மனிதன் தன்னைப் பற்றியும் தன் உலகைப் பற்றியும் எதை எதையோ எண்ணி எப்படி எப்படியோ கணக்கிட்டுக் காலத்தைக் கழிக்கிறான். ஆம்! அந்த மனித இனத்தில் நானும் ஒருவன்தானே!

என் இளமைக் காலத்தில் இந்த உலகை—இந்திய நாட்டு எல்லைக்கு அப்பாற்பட்ட நாடுகளைக் காண வாய்ப்பு இருந்தது. இலண்டனுக்கும் ஆப்பிரிக்க நாடு களுக்கும் மலேயாவுக்கும் பணிபுரிய அழைத்தனர் பலர். எனினும் அப்பொழுதெல்லாம் என் மனம் தாயகத்தை விட்டுச் செல்ல இடம் தரவில்லை. இங்கே ஓண்டிவீரன் ஈராண்டில் பெறும் ஊதியத்தை ஒரே திங்களில் தருவித்தர்க் கூறின போதிலும் அன்னைத் தமிழும் அகன்ற பார்த்தும் என்னை வெளியே அனுப்பவில்லை; எனக்கு அங்கே கோடி பெறுவதிலும் இங்கே கூழ் குடித்து வாழினும் போதும் என்ற மனநிலை இருந்தது. எனினும் அன்பர்கள் அழைப்பின் வழி இலங்கைக்கு மூன்று

முறையும் மலேயா சிங்கப்பூருக்கு ஒருமுறையும் சென்று வந்துள்ளேன். ஆனால் உலகை முற்றும் சுற்றி வர வேண்டும் என்ற எண்ணம் அப்போதெல்லாம் உண்டாக வில்லை.

இன்று எழுபது வயது கடந்தபின் இந்த எண்ணம் உண்டாயிற்று. 'வள்ளியம்மாள் கல்வி அறம்' என்று அன்னையின் பெயரில் அறக்கட்டளை நிறுவி, அதன்வழியே பள்ளிகள் அமைத்து, இரண்டாயிரம் பிள்ளைகளுக்குக் கல்வி அளிக்கும் நிலையில், பிற நாடுகளில் உள்ள கல்வி முறையினைக் காணவும், ஆங்காங்குள்ள சமுதாய நெறியினை உணரவும் எண்ணவும், அவற்றில் அமைந்த நன்நெறி வழியே நம் நாட்டைத் திருத்த முடியாவிடினும் நம் பள்ளியில் பயிலும் பிள்ளைகளையாயினும் ஓரளவு திருத்திச் சமுதாய நெறியினைச் செம்மையாக்கலாம்; நல்ல கல்வி நிலையினை ஓம்பலாம் என எண்ணியும் இப்பயணம் மேற்கொண்டேன். அதே சமயத்தில் தமிழக அரசின் நல்லாணை வழியே, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆட்சிக் குழு உறுப்பினனாகச் செயலாற்றுகின்றமையின், அத்தமிழ்ப் பல்கலைக்கழகமும் பிற நாடுகளில்-பிற நாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழ் வாழும்-வளரும் நிலை கண்டறிந்து சொல்லுமாறு பணித்தார்கள். அமெரிக்க நாட்டுப் பல்கலைக் கழகங்கள் சிலவும் மலேயாப் பல்கலைக் கழகமும் கவாயத் தீவின் சைவசித்தாந்த மடமும் எனை வருமாறு அழைப்பினையும் அனுப்பிவைத்தனர். இவற்றின் பிணைப்பின் வழியே இந்த என் உலகப் பயணம் அமைந்தது.

நான் புறப்படு முன் பல அன்பர்கள் இந்த வயதில் தனியாகச் செல்ல வேண்டாம்; யாரையாவது உடன் அழைத்துச் செல்லுங்கள் என வற்புறுத்தினர். எனினும் நான் எப்படியோ மனஉறுதியுடன், என்றும் உடனிருக்கும் இறையருளையே எண்ணிப் புறப்பட்டேன். அடிக்கடி விமான விபத்துகள் நடக்கும் இந்த நாளில் முப்பது முறை விமானங்களில் ஏறி இறங்கிய என் உலகப் பயணம் ஓரளவு அஞ்சத்தக்கதாக் இருந்த போதிலும், யாதொரு தடங்கலோ-சிக்கலோ-மாறுபாடோ ஒன்றும் இல்லாமல்

குறித்த கால எல்லைப்படி என் பயணம் அமைந்ததை எண்ணி, அதற்குக் காரணமாகிய இறைவனைப் போற்றி, வாழ்த்திய நல்ல அன்பர்களுக்கு நன்றி கூறி அமைந்தேன் — அமைகின்றேன். நான் சென்ற இடமெல்லாம் தமிழ் மக்களும் அமெரிக்க, ஜப்பான் நாட்டு மக்களும் வழியிடைக் கண்ட போதெல்லாம் உதவிய பிற நாட்டு மக்களும் என்னை முன்பின் அறியா நிலையில் பரிந்து எல்லா வகையான உதவிகளையும் செய்து ஆதரித்த பெருநிலையினை எண்ணி அவர்களை யெல்லாம் வணங்கக் கடமைப்பட்டவனாவேன். அவர்கள் செய்த உதவிகளைப்பற்றியெல்லாம் என் நூல் முழுவதும் குறித்துள்ளேன். அவர்களுக்கு என் நன்றி உரித்து.

அரசாங்கத் தூதுவனாகவோ அல்லது அமைச்சர் களுடன் இணைந்து கொண்டோ அன்றி வேறு அதிகார நெறியிலோ நான் பிற நாடுகளுக்குச் சென்றிருந்தேனா யின், பலவகையான சிறப்புகளுடன் நான் வரவேற்கப் பெற்றிருப்பேனாயினும், இத்துணை மக்களைக் கண்டு, அவர்களுடன் ஒன்றி வாழ்ந்து, எல்லா வகையான வாழ்க்கை நெறிகளையும் அறிந்து அலசி மகிழ்ந்து, உடனுறைந்து, இந்த நூலையும் எழுதியிருக்க மாட்டேன் என எண்ணுகிறேன். உயர்ந்த பெருமாளிகையிலோ - பெரிய விடுதிகளிலோ அரசாங்க விருந்தாளியாக இருந்து வருவதிலும் எல்லா மக்களொடும் இணைந்து வாழ்ந்த நிலையில் பெற்ற இன்பம் பெரிது. இதுவே என் பயணத்தின் குறிக்கோளுமாகும். பெரும்பாலான இடங் களில் நான் என் சொந்த வீட்டில் இருப்பது போன்ற உணர்விலேயே இருந்து வந்தேன். நான் ஒரு பேராசிரியன் என்ற காரணத்தால் பிற நாட்டு அறியா மக்களும் என்னிடம் காட்டிய மரியாதையை எண்ணி, அந்த நிலைக்கு என்னை உயர்த்திய அன்னைத் தமிழின் அடி பணிந்து போற்றக் கடமைப் பட்டுள்ளேன்.

எழுபது வயதில் எழுபது நாட்கள் (1985 ஏப்பிரல் 3 தொடங்கி ஜூன் 12 வரை) என் பயணம் அமைந்தது. சுற்றிய நாடுகள் ஏழு; தனி நகர் இரண்டு. எனவே இரு

தனிநகர் விட்டு 'ஏழு நாடுகளில் ஏழுபது நாள்கள்'* என இந்த நூலுக்குப் பெயரிட்டேன். நாள் தொறும் நான் கண்டவற்றையும் கேட்டவற்றையும் அன்றாடம் இரவிலோ மறுநாள் காலையிலோ குறிப்பு எழுதி முடித்து, அன்றாடக் குறிப்பு முறையிலேயே இந்த நூலைத் தொகுத்துள்ளேன்.

நான் பார்த்த இடங்கள் பல. பார்த்த துறைகளும் பலப்பல. 'கல்வி' 'தமிழ்' என்ற இரு நோக்கோடு என் பயணம் அமைந்தது என மேலே குறிப்பிட்ட போதிலும், பிறதுறைகள் பலவற்றையும் கண்டு எழுதும் நிலையில் நான் ஈர்த்துச் செல்லப் பெற்றேன். அவ்வந் நாட்டு மக்களின் வாழ்க்கை நெறி - சமுதாய நிலை - பொருளாதாரம் - தொழில்வளம் - பணிநிலை - தனியார் செயல் - அரசாங்கப் பணி - போக்குவரத்து—வாழ்வின் வசதிகள் - சமய நெறி - பண்பாட்டு மரபு - வரலாறு -நீதி- இயற்கை இணைப்பு முதலிய பல வகையினையும் கண்டு ஆங்காங்கே குறித்துள்ளேன். இவற்றுள் ஒரு சிலவற்றை நான் நூல்கள், இதழ்கள், தொலைக் காட்சி ஆகியவற்றைக் கண்டும் படித்தும் எழுதியுள்ளேன். ஒருசிலவற்றை நேரே கண்டு—பொருள்காட்சிகள் முதலியன கண்டு - அவ்வப்போது

---

*'நாட்கள் என்ற சொல் பற்றி ஒரு சிறு விளக்கம். 'நாள்கள்' என்பதுதான் இலக்கண முறைப்படி சரியாயினும், 'நாட்கள்' என்று நான் கொண்டதற்கு காரணம் காட்டல் வேண்டும். 'நாள்கள்' என்னும் போது ஒலியமைப்பில் ஒசை தடைப்படுகின்ற (Hiatus) காரணத்தால் இம்மாற்றம் கையாளப் பெறுகின்றது. பதினைந்து ஆண்டுகளுக்குமுன் சென்னைப் பல்கலைக்கழகச் சார்பில் பச்சையப்பர் கல்லூரியில் என் பெறுப்பில் நடைபெற்ற புத்தொனிப் பயிற்சி (Crientation Coures) வகுப்பில் பெரும் புலவர் மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை உட்பட பல அறிஞர்களும் இருபது கல்லூரிகளின் பேராசியர்களும் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த் துறையினரும் இரண்டு மணி நேரம் இச்சொல் பற்றி விவாதித்து, ஆராய்ந்து. 'நாள்கள்' தான் இலக்கண மரபில் ஏற்றுக் கொள்ள வேண்டியதாயினும், ஒசை இனிமை கருதியும் இடையில் ஒசைத் தடங்கல் இன்றிச் செல்ல வேண்டியும் (இலக்கண நெறியும் அந்த வகைக்கே வழிசெய்கின்ற ஒன்றாதலானும்) 'நாட்கள்' எனவும் எழுதலாம் என முடிவு செய்தனர். பலரும் அச் சொல்லைப் பயன் படுத்துகின்றனர். எனினும் தமிழாசிரியனாகிய நான் பயன் படுத்துவது தவறு எனச் சிலர் கருதக்கூடும். எனவே இக் குறிப்பினை எழுதினேன்.

உண்டான் கருத்துகளுடன் இணைத்து எழுதியுள்ளேன். பல்வேற்றை ஆங்காங்கே உள்ள அன்பர்கள் கூறிய சொற்களைக் கொண்டும் அவர் பெற்ற அனுபவ முதலியவற்றைச் சொல்லக் கேட்டும், சில அனுபவங்களை நானே நேரில் பெற்ற நிலையினும் எழுதியுள்ளேன். எனவே இங்கே பல கருத்துகள் ஆங்காங்குள்ள அன்பர்கள் சொன்னவை என எண்ணல் வேண்டும். அக் கருத்து அடிப்படையில் நான் என் உள்ளத்தெழுந்த சில நெகிழ்ச்சி களையும் எழுத்தில் வடித்து, அவர்கள் காட்டியன நல்லன வாயின் நாமும் கொள்ளலாமே என்ற உணர்வில் சில எழுதியுள்ளேன். எனவே இந்நூலின் என் கருத்துடன் வேறு பலருடைய கருத்துக் கோவைகளும் எண்ண அலைகளும் இடம்பெற்றுள்ளன.

பல நாடுகளையும் நகரங்களையும் கண்டபோது அவ்வந்நாட்டு வளர்ச்சிகளும் பிறவும் என்னை நெடிது நினைக்கத் தூண்டின். சிறப்பாக நம் தமிழ் மொழி வளர்ச்சி, தமிழ்ச் சமுதாய நிலை ஆகியவை ஆங்காங்கே யும் நம் தமிழ் நாட்டிலும் எப்படி உள்ளன என்பதை என் உள்ளம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சில உண்மைகளை யும் -ஏன்? சில கசப்பான செய்திகளையும் எழுத வேண்டி வந்தது. அவற்றால் நான் யாரையும் குறை கூற வில்லை; குறைகூற வேண்டும் என்ற எண்ணமும் கிடையாது. சிறு சிறு நாடுகளெல்லாம் - சென்ற போரில் முற்றும் அழிந்த தாகக் கருதப் பெறும் நாடுகளெல்லாம் - ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன் தன்நிலை உணராதிருந்த நாடு எல்லாம் இன்று உலகின் உச்சியில் ஓங்கி நிற்கும்போது, நம் நாடு—பல ஆயிரமாயிர்மாண்டுகளாகப் பண்பாட்டு டன் வாழ்ந்த நாடு - உரிமை பெற்று நாற்பது ஆண்டுகள் முடியப் போகிற நாடு எங்கோ பின்னிற்பதை எண்ணும்போது உண்டான வருத்தத்தில் சிலசில எழுத்துக்கள் உருவாகி உள்ளன. அப்படியே அவ்வந் நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் திருக் கோயில்களிலும் நூல் நிலையங்களிலும் தமிழ் ஓங்கி வாழ, தாயாகிய நம் நாட்டு நிறுவனங்களில் அந்த அளவில்கூட இல்லாமல் - வேற்று மொழி வளரும் அளவில்கூட நம் தாய் மொழி

வளராம்ல் இருக்கும் நிலையினை எண்ணும்போது உள்ளம் நைந்து சில எழுத்துக்கள் உருவாகி உள்ளன. அவை அனைத்தும் நம் நாடும் மொழியும் சிறக்கவேண்டும் என்று உள்ளத்தில் எழுந்தவையேயன்றி யாரையும் எந்த நெறியினையும் குறை சொல்ல எழுந்தன அல்ல.

தனி உடைமை, அரசுடைமை பற்றிப் பலவிடங்களில் சுட்டியுள்ளேன். பிறநாடுகளில் போட்டி இருப்பதால்-தக்கவர் தக்க இடத்தில் அமர்த்தப் பெறுவதால்-பொது மக்களுக்குத் தேவையானவை கிடைப்பதோடு, எல்லாச் செயல்களும் செம்மையாக நடை பெறுகின்றன. நம் நாட்டில் சாதாரணப் பொருள்களையும்கூட அரசாங்கம் விற்க வேண்டியுள்ளது. காரணம் என்ன? தனி மனிதன் அவற்றைப் பதுக்கி, இல்லாத சூழ்நிலையை உண்டாக்கி, தானே கொள்ளை லாபம் அடிக்க நினைத்தான். அதனைப் போக்கி, நியாய விலைக்குத் தர அரசாங்கம் நினைத்தது தவறு இல்லைதான். ஆனால் அதைச் செயல்படுத்துப வர்கள் தனி மனிதன் தரும் விலையைக் காட்டிலும் உயரும் வகையில் வழி செய்கின்றனரே! நியாயவிலைக் கடைகள் தவிர, நியாய எடைக் கடைகள் இல்லை என்னு மாறு பல கூட்டுறவுப் பண்டக சாலைகளே செயல்படு கின்றவே. இவற்றை ஒடுக்க, ஒழிக்க அரசாங்கம் சட்டம் செய்யலாம். அதைச் செயல் படுத்தும் பணியாளர்கள் செம்மையாக இயங்கவில்லையானால் நாடே வருந்த வேண்டியுள்ளது. இந்த இடையில் நேரும் குறைகளை அரசாங்கம் நீக்க வேண்டாமா!

சாலைகள் பிறநாடுகளில் செம்மையாக உள்ளனவே. ஏன் நம் நாட்டிலும் அவ்வாறு அமையக்கூடாது. 'Tolgate -Tax' எனும் பாதை வரியினை இட்டுத் தேவையைச் செய் தால் நாடு - சாலை - அனைத்தும் நலமுறுமே. இந்த வரிபற்றிப் பலவிடங்களில் நூலில் குறித்துள்ளேன். அப் படியே சிற்றூர்கள் தாமே தம் வரியை வசூலித்து, அரசாங் கப் பொருள் உதவியின்றியே தம் எல்லாத் தேவைகளை யும் நிறைவேற்றிக் கொள்ளுகின்ற தன்மையினையும் காட்டியுள்ளேன். இவ்வாறு அவ்வந் நிலத்தவர் செயல்புரி

யின் எல்லாப் பகுதிகளும் சிறக்காதா? பள்ளிகளிலும் பிற பொதுவிடங்களிலும் தூய்மையும் செம்மையும் போற்றப் பெறுகின்ற நிலையினைப் பலவிடங்களில் காட்டி யுள்ளேன். அதற்கெல்லாம் காரணம் அரசாங்கத்தின் திட்டமான ஆணையும் அவற்றை மதிக்கும் மக்களுமே. நம் நாட்டு மக்கள் நிலை?

கல்வியிலும் இந்த நிலை காண முடிகின்றது. நம் தமிழகத்தில் ஆறு வகைக்கு மேற்பட்ட பள்ளிக் கல்வி உள்ளது. மக்களை ஒன்று படுத்த வேண்டும் என்று அன்று தொட்டு இன்றுவரை அரசியலாளர்களும் அறிஞர்களும் பிறரும் பேசியும் எழுதியும் வந்தும், இவ்வாறு கல்வியாலே இல்லாத புது ஏற்றத் தாழ்வை உண்டாக்குவானேன்? தமிழ் பயிற்சி மொழி என்று சொல்லிக் கொண்டே, பணம் உள்ளவர் ஆங்கிலப் பயிற்சிப் பள்ளிகளில் சேர, மாநில, மைய அரசுகள் போட்டியிட்டுக் கொண்டு, ஆங்கிலப் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்குவது ஏனோ? இவற்றால் மக்களிடை பிளவு வளர்ந்து வருவதைக் கண்டும் மேலும் மேலும் அத்துறைகளை வளர்பது வருங் கால நாட்டுக்குப் பொருந்தாது. இவற்றையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டுவது நல்லவர் செயலல்லவா!

தமிழ்நாட்டில் தமிழ்மட்டும் பயின்றவர் உயர்பதவி பெறமுடியாது. உலக அரங்கிலே மிக முன்னேறியுள்ள ஜப்பானிலே கல்வித் துறை உயர் அதிகாரிகள் (Director, Deputy Director) ஜப்பான் மொழி மட்டும் அறிந்தவர் களாக உள்ளனரே. அங்கே 99.9%கற்றவர் இல்லையா? உலகெங்கும், நம் அண்டை நிலமாகிய கன்னடம் உட் பட அவ்வந்நாட்டு மொழியினைக் கட்டாயம் படிக்க வேண்டும் என வற்புறுத்த - செயலாக்க - தமிழ் நாட்டில் மட்டும் தமிழ் பயிலாமலேயே எத்தனை உயர் பட்டங்களும் பெறலாமே. இது நல்லதா என எண்ணிப் பார்க்க வேண்டாமா! தமிழ் மட்டும் அறிந்தவர்களை உயர்பதவிகளில் அமர்த்த வேண்டாமா! சிங்கப்பூர் மலேயா முதலிய இடங்களில் தமிழுக்கென்றே தனி ஒலி பரப்பு விடியற் காலை முதல் நடு இரவு வரையில் உள்ளது. அதிலே வேற்று மொழியோ வேறு நிகழ்ச்சிகளோ விரவு

தல் இல்லை. அப்படியே தொலைக் காட்சிகளிலும் தமிழக்குத் தனி இடம் உண்டு. தாயகமான தமிழ் நாட்டில் அந்நிலை வருதல் வேண்டுமன்றோ! இதனால் பிறமொழிகளோ ஆங்கிலமோ வேண்டாம் என்பதன்று. உறியதற்கு உரிய இடம் தரவேண்டும் என்பது கருத்து.

கைத்தொழில் துறையிலும் எத்தனை வகையில் நாம் முன்னேற வேண்டியுள்ளது. நம் சென்னையைக் காட்டிலும் மிகச் சிறியதான 'ஆங்காங்' தீவில் நூற்றுக் கணக்காக மின் அணுத் (Electronic) தொழிற் சாலைகள் அமைத்து, எவ்வளவு குறைந்த வகையில் எண்ணற்ற பொருள்களைத் தயார் செய்கின்றனர். மேலை நாடு களிலும் பிற நாடுகளிலும்தான் தொழிற் சாலைகள் எப்படி வளர்ந்துள்ளன. அதற்காக, நாம் சிலரைப்போல, அழிவுப் பாதைக்கு அழைத்துச் செல்லும் தொழில் வளர்ச்சியை மேற் கொள்ள வேண்டாம். மக்கள் வாழ்வுக்குத் தேவையான, ஆக்கப் பணிகளுக்கு வேண்டிய ஆயிரம் ஆயிரம் தொழிற் சாலைகள் செயல்படலாமே. அமெரிக்க நாட்டில் உள்ளமை போன்று பெரிய தொழில் நிறுவனங்கள் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவர்களை ஊக்கும் வகையில் பொருள் உதவி செய்து, தத்தம் துறைக்கு ஏற்ற ஆய்வாளர்களைத் தேர்ந்தெடுத்து, அவர் கள் படிப்புச் செலவை ஏற்று, பின் தத்தம் நிறுவனங்களில் இணைக்கும் வகை காணலாமே. அரசாங்கத்துக்கும் செலவு குறையுமே! அனைவரும் விரும்பினால் தொழில் தொடங்க வாய்ப்பளிக்க வேண்டும். அதே வேளையில் நகர் வாழ்விடங்களில் தொழிற் சாலைகளை அமைத்து மக்கள் நலனைக் கெடுக்கா வகையிலும் பார்த்துக் கொள்ள வேண்டும். 'போபால் சம்பவம், இன்னும் நம் நாட்டிற்கு நல்ல வழி காட்டவில்லையோ என எண்ணு கிறேன். பல தொழிற்சாலைகள் - கழிவுப் பொருளும் நச்சுக் காற்றும் வெளியே வராத வகையில் ஏற்பாடு செய்ய, அத்தொழிற்சாலைகளை வற்புறுத்த வேண்டும். இவையெல்லாம் பிறநாடுகளில் முடியும்போது நம் நாட்டில் ஏன் முடியாது? நான் பலவிடங்களில் நூலுள் காட்டியபடி, நம் பணத்தால் - இலட்சலட்சமாக நாம் செலவிட—அவற்றால் பட்டம் பெறும் நல்லறிஞர்கள்

வெளிநாடுகளுக்குப் பயன்பெறு நிலையினைத் தடுத்து, நம் நாட்டிலேயே அவர்தம் அறிவும் ஆற்றலும் பயன்படுகின்ற வழித்துறைகளை ஆய்ந்து செயல் பெறல் வேண்டாமா? ஆம்! பொது மக்களும் அரசாங்கமும் எல்லா வேறுபாடுகளையும் விடுத்து ஒத்துழைத்தால் 'நாடென்ப நாடா வளத்தன' என்ற வள்ளுவர் வாக்கை மெய்யாக்கலாமே.

சமுதாயத்தைப் பற்றிச் சற்றே சிந்திக்க வேண்டும். பலவிடங்களில் இதுபற்றி எழுதியுள்ளேன். மேலை நாடுகளில் நம்நாட்டில் உள்ளமை போன்று சமுதாயப் பிணைப்பு இல்லை. தந்தைக்கு மகன் இல்லை - தாய்க்குப் பிள்ளை இல்லை, வயது வந்ததும் அவர்கள் விரட்டப்படுகின்றனர். முதியோர் அரசாங்க உதவியாலும் பிறவகையாலும் வாழ்கின்றனர். இது மனித உணர்வுக்கு அப்பாற்பட்ட ஒன்றே எனக் கருதுகிறேன். என்றாலும் அந்த வாழ்வில் சுய நலத்தால் நடைபெறும் பல கொடுமைகள் நடைபெறா நிலையினையும் காண்கிறேன். தனக்கு - தன் பிள்ளைக்கு - பேரப்பிள்ளை எனச் சேர்த்து வைக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லையாதலால் குறுக்கு வழியிலெல்லாம் பணக்காரர் ஆக வேண்டும் என்ற எண்ணம் பலருக்கு இல்லை. ஒன்றும் இல்லாவிட்டாலும் வயதான காலத்தில் அரசாங்கமே இடந்தந்து உணவிட்டு எல்லாச் சலுகைகளும் தருகின்ற காரணத்தால் கவலையும் படுவதில்லை. எனவே கையூட்டு போன்றவையும் ஏமாற்று வேலைகளும் அவர்களுக்கு அதிகம் தெரிய வழியில்லை. ஆகவே சமுதாய வாழ்வுக்கு ஒருவகையில் அவர்கள் மாறுபட்டவராயினும் ஒரு வழியில் அச் சமுதாயம் தூய்மையாக வாழ வகை செய்கின்றனர். எனினும் அத்தகைய பிணைப்பற்ற வாழ்வினை நாம் மேற்கொள்ள வேண்டியதில்லை. அப்படியே நாட்டில் உள்ள எல்லாப் பணிநிலைகளும் அளவிட்டு - எல்லையிட்டு வழங்கப் பெறுவதால் உழைப்பும் உழைப்புக்கேற்ற ஊதியமும் பெற்று மனநிறைவோடு வாழ்கின்றனர். சம்பளம் வழங்குபவர்களும் அதற்கேற்ற செய்வினை முற்றுப் பெறுவதால் சொல்லியதற்கும் அதிகமாகவே வழங்குகின்றனர். ஆதலால் நாட்டில் முதலாளி தொழி

லாளி வேறுபாடும் வேலை நிறுத்தங்களும் கதவடைப்பு களும் அருகி உள்ளன.

உலக நாடுகள் அத்தனையும் நான் கண்டுவிட்டேன் என்றோ அல்லது நான் சென்ற நாடுகளில் எல்லாப் பகுதிகளையும் முற்றக்கண்டு விட்டேன் என்றோ சொல்ல இயலாது. எனினும் நான் கண்டவரையில் எல்லா நாடு களும் எல்லா வகையிலும் சிறந்திருக்க நாம் மட்டும் ஏன் இப்படித் தாழ்ந்த நிலையில் இருக்க வேண்டும் என எண்ணுகிறேன். வீடு, நாடு இரண்டும் நம்மதே என்ற உணர்வு இல்லாத ஒன்றே இதற்குக் காரணமாகும். இதற்கு அரசாங்கத்தை மட்டும் குறை கூறிப் பயனில்லை. மக்களும் காரணமாகின்றனர். திட்டமான கடுமையான செயல்களை அரசாங்க அதிகாரிகள் மேற்கொண்டால் ஓரளவு நாடு திருந்தும்.

அரசாங்கம் தக்கவர்களைப் பல நாடுகளுக்கு அனுப்பி, எவ்வெத் துறையில் எவ்வெவ்கையில் முன்னேற்றம் காணலாம் என ஆய்ந்து, அவற்றைச் செயலில் கொண்டு வர வேண்டும். தமிழ்நாட்டு அரசாங்கம் உலகெங் கணும் தமிழ், தமிழ்க்கலை, தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம் தமிழ்ச் சமயம், தமிழர் தொன்மை போன்ற வற்றை ஆய்ந்து தெளிந்து, அவற்றைத் தொகுத்து உலகுக்கு காட்ட முற்பட வேண்டும். வாய்ப்பு நிறைய உண்டு 'கூட்டத்தில் கூடி நின்று கூடிப் பிதற்றலின்றி நாட்டத்தில் கொள்ளாரடி' என்று அன்றைய தமிழனைப் பார்த்துப் பாடிய பாரதி வாக்கை, தமிழன்-தமிழ், அரசாங்கம் பொய்யாக்கி, இன்று 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும்கொண்ர்ந் தீங்கு சேர்ப்பிர்' என்ற அவர் வாய் மொழிப்படி செயலாற்றி வையம் உள்ளளவும் கன்னித் தமிழும் அதன் பண்பும் பழமையும் நாகரிகமும் நன்னலமும்வாழ உடனே வழி காண வேண்டும் என வேண்டிக் கொள்ளுகிறேன்.

இந்நூல் முழுவதிலும் இத்தகைய கருத்துக்களை வாரித் தெளித்துள்ளேன். இங்கே ஓரளவு அவற்றைச் சுருக்கிக் காட்டினேன். நான் முன்னரே காட்டியபடி

யாரையும் தாழ்த்துவதற்கோ அன்றித் தாக்குவதற்கோ இவை சுட்டப் பெறவில்லை. பரந்த பாரதம் - சிறப்பாகத் தமிழகம் உலகநாடுகளோடு போட்டியிட்டு எல்லா வகையிலும் உயர்ந்து சிறக்கவேண்டும் என்ற உள்ளத்து உணர்வாலேயே இந்நூலை எழுதி விரைவிலும் வெளிக்கொணர்ந்தேன்.

கடந்த சில ஆண்டுகளாக நான் தமிழாசிரியர் உலகை விட்டே—நூல்கள் எழுதுவதைவிட்டே வேறு பணியின் பொருட்டு விலகி நின்றபோது, பல அன்பர்களும் மாண வர்களும் தொடர்ந்து நூல்கள் எழுத வேண்டுமென்றும் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தி வந்துள்ளனர். அவர்கள் விருப்பம் இந்நூல் வெளியீட்டால் ஓரளவுநிறைவுறுகின்றது. அதற்குமேலாக இங்கே காட்டப் பெற்ற வழி பொது மக்களும் அரசாங்க மும் இணைந்து செய்யலாற்றி உயர வேண்டும் என்பதே என் வேண்டுகோளும் குறிக்கோளும் ஆகும்.

நான் சென்ற இடங்களிலெல்லாம் அன்பர்கள் புகைப்படங்கள் எடுத்தனர். அவை அனைத்தும் இந்நூல் வெளியிடுவதன் முன் வந்து சேரவில்லை. வந்த ஒருசில வற்றை மட்டும் நூலில் இணைத்துள்ளேன். புகைப்படங் கள் உதவிய அவர்களுக்கு என் நன்றி உடைத்து. மேலட் டையில் சென்ற நாடுகளில் முக்கியமாக உள்ள இடங்கள், கட்டடங்கள், இயற்கைச் சூழல்கள் ஆகியவை இடம் பெறுகின்றன.

நான் வெளிநாடுகள் செல்வதற்காக எல்லா வகையான உதவிகளையும் செய்து ஆற்றுப் படுத்தியும், பல பல்கலைக்கழகங்களுக்கு எழுதி என்னை அறிமுகம் செய்து வைத்தும் பயணத்துக்கு வேண்டிய வேறுபல உதவிகளைச் செய்தும், பயணம் முடித்து வந்தபின் கண்ட வற்றையும் கருத்தினையும் ஆட்சிக்குழுவில் சொல்ல வைத்தும், பிற நாட்டுத் தமிழர் தேவை அறிந்து, உடனே தக்கன செய்ய ஏற்பாடுகள் செய்தும் இந்நூலுக்கு அறி முகஉரை தந்தும் எல்லா வகையிலும் உதவிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. டாக்டர்.

வ. அய். சுப்பிரமணியம் அவர்களுக்கு என் நன்றியினையும் வணக்கத்தினையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். என்னை இந்த ஆட்சிக் குழுவில் இருத்தி அதன் வழியே இப்பயணத்தை நினைக்கத் தூண்டிய தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு. திரு. அரங்கநாயகம் அவர்களுக்கும் என் நன்றி உரித்து, அனைத்துக்கும் மேலாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவி என்னையும் அதனுடன் பலவகையில் இணைத்து, தமிழ் நலம் காணும் அண்ணல் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களுக்கும் என் நன்றியினையும் தலை தாழ்ந்த வணக்கத்தினையும் உரிமையாக்குகிறேன்.

இந்நிலையில் என்னை ஆற்றுப்படுத்திய இறைவனையும் தமிழன்னையையும் வணங்கி அமைகின்றேன்.

அண்ணாநகர்,
சென்னை 102
7-9-1985

அ. மு. பரமசிவானந்தம்
வள்ளியம்மாள் கல்வி அறம்

விரைந்த பணியில் அச்சுப் பிழைகள் உள்ளன. மன்னிக்க. அடுத்த பதிப்பில் செம்மையாக்கப் பெறும்.

முதல் நாள் 3-4-85

சென்னை விமான நிலையத்தில் அன்பர்கள் அனைவரும் நல்வாழ்த்துடன் வழியனுப்பப் பம்பாய் செல்லும் விமானத்தின் அடிவைத் தேறினேன். எனக்குப் பக்கத்தில் ஒரு நல்ல நண்பர் இருந்தார். விமானம் நேராகப் பம்பாய் செல்லாது பெங்களூர் சென்றது. 35 நிமிடத்தில் தரை தட்டவே நான் வியந்தேன். எனினும் விமான அலுவலர் முன்னமே அதுபற்றி அறிவித்திருந்தமையால், பிறர் சிந்திக்க வில்லை. தான் என்னை மறந்த நிலையில் அதைக் கேட்க வில்லை போலும். பெங்களூரில் விமானம் நிறுத்தப்பட்ட தால், இடமிருந்ததால், சுமார் நூறுபயணிகள் இதில் ஏற்றப் பெற்றனர் போலும். பெங்களூர் நிலையத்தில் முக்கால் மணி நேரம் நின்றபின், விமானம் பம்பாய் நோக்கிப் புறப் பட்டது. விமானிகள் மாற்றத்துக்கும் காலதாமதத்துக்கும் மன்னிக்கும்படி வேண்டினர். விமானம் ஒருமணி நேரம் தாமதித்து இரவு 9.10க்குப் பம்பாய் உள் நாட்டு விமான நிலையத்தில் இறங்கிற்று. இறங்கி வெளிவந்ததும் அன்பர் கள் வே. நாகராஜனும் அவர் மருமகனும், திரு. கந்தசாமி அவர்களும் காத்திருந்தனர்; அவர்களுடன் வாடகை வண்டி ஏறி, 'வேனா' மருகர் இல்லத்துக்கு - பன்னாட்டு விமான நிலையத்துக்கு அருகில் உள்ள வீட்டிற்கு - சென்றேன். 'வேனா' அவர்தம் மனைவியாரும் மகளும் அன்புடன் வரவேற்று நான் முன்னமே எழுதிக் கேட்டுக்கொண்டபடி நல்ல 'இட்டலி'யினை, சிறிது இனிப்போடு வழங்கினர். 'வேனா'வின் பேரக் குழந்தைகள் (ஒரு பையன், ஒரு பெண்)

இருவரும் என்னிடம் அன்போடு பழகினர். 'வேனா'வின் மகள் நான் எப்பொழுதோ அவர் மிகச் சிறிய பெண்ணாக இருந்தபோது - சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் வாங்கித் தந்த காஞ்சிபுரம் பட்டுப் பாவாடையினை நினைப் பூட்டினர். அவர்தம் நினைவாற்றலை வியந்தேன்.

உணவுக்குப்பின் நெடுநேரம் உரையாடிக் கொண் டிருந்தோம். திரு. கந்தசாமி அவர்கள் இடையில் தொடர்பு இல்லாதிருந்த காரணத்தால், பல நிகழ்ச்சிகளைப் பற்றிக் கூறினார். 'வேனா' சென்னை வரும்போதெல்லாம் பள்ளிக்கு வந்து என்னைக் கண்டு செல்வார். தமிழர் வாழ்வு - பம்பாயிலும் உலகிலும் - மொழிநிலை; பிற பற்றியெல்லாம் பேசினோம். பின் நள்ளிரவு 12 மணி அளவில் வாடகை வண்டியில் குழந்தைகளிடம் விடைப் பெற்றுக்கொண்டு, பன்னாட்டு விமான நிலையத்துக்குப் புறப்பட்டோம். அங்கே அனைவரையும் உள்ளேவிட மறுத்தபோதிலும், திரு. கந்தசாமி அவர்கள் அதிகாரிகள் இசைவுபெற்று உள்ளே வந்து உதவி செய்து திரும்பினர்.

'சுவிஸ்சர்லாந்து' விமானப் போக்குவரத்தினர் என் பயணத்துக்கு உரிய எல்லாப் பயணச் சீட்டுகளையும் உதவினர். பம்பாய்வரை நான் நம் நாட்டு விமானத்தில் (Indian Airlines) வந்தபோதிலும், பம்பாயிலிருந்து 'சுவிஸ்' விமானத்திலேயே ஜினிவா வரையில் செல்லவேண்டியிருந் தமையின், அவர்கள் பகுதியில் வழிவிட்டு, திரு. கந்தசாமி திரும்பினர். திரு. 'வேனா' வும் மருமகனும் வெளியிருந்தே வழியனுப்பினர். சுவிஸ் - பணியாளர் - பெண் - எனக்கு உடனிருந்து எல்லா ஏற்பாடுகளையும் - டிக்கெட், சாமான் கள் அனைத்தையும் சரிபார்த்து வேண்டிய டாலர் (20) வாங்கி உதவி, உடன்வந்து, இரவு சிறு உணவுச் சாலையில் விட்டு, அங்குள்ள மற்றொரு பெண்ணிடம் என்னை ஒப்படைத்துச் சென்றதோடு, பின் விமானம் புறப்படுமுன் அந்த இடத்துக்கு வந்து, என்னை ஆற்றுப்படுத்தி விமானத்

தில் ஏற்றிவிட்ட நிலையினை எண்ணிப் போற்றினேன். அந்த விமானம் பெரியது; பிறநாட்டு அமைப்பில் அமைந்தது. ஏற இறக்க, மின் வழிச் செலவு இருந்தமையின் எளிதாக இருந்தது. இடையிடையே காப்பி, டீ குளிர்பானங்கள் நிலையத்தே வழங்கினர். பலர் பல மது வகைகளைப் பருகினர். விமானம், டோக்கியோவிலிருந்து வந்து, சுவிஸ் நகர், 'சூரிச்' செல்ல வேண்டியது; ஒரு மணி நேரம் கடந்து வந்தது; என்வே விடியல் 2.30க்கே விமானம் புறப்பட்டது. அது நேராகச் சுமார் 5000கல் (8000 கிலோ மீட்டர்) எங்கும் இறங்காது, நேரே செல்லும் தன் பயணத்தைத் தொடங்கியது.

விமானத்தில் பணியாளர் - ஆண், பெண் இருபாலரும் - நன்கு உபசரித்தனர். அந்த வேளையிலும் நல்ல உணவு பரிமாறினர். நான் ஒன்றும் கொள்ளவில்லை. வானவெளியில் சென்ற அந்த விமானத்தில் அசைவோ, ஒலியோ ஒன்றுமில்லை. எனவே வீட்டில் உறங்குவது போன்று அப்படியே காலை நீட்டிக்கொண்டு உறங்கி விட்டேன். நம் இந்திய விமானத்தில் (Airlines) காலை நீட்டவும் இடமில்லா நிலையினையும் இதில் இருந்த இடவசதியினையும் அப்படியே நினைத்துப் பார்த்தேன்.

விமானம் ஆடாது அசையாது எத்தனையோ நாடுகளைக் கடந்திருக்க வேண்டும். விடியல் ஆறுமணி அளவில் கண் விழித்தேன். காலைக் கடன்களை முடித்துக் கொண்டு நாள்தோறும் முறையாகச் செய்யும் இறைவழிபாட்டினை இருந்த இடத்திலிருந்தே செய்துமுடித்தேன். அதற்குள் காப்பி, டீ முதலியன தரப்பெற்றன. அந்த நேரத்தில் 6.30 அளவில் (நம் நாட்டில் 10.30 இருக்கலாம்) நல்ல உணவு - சைவ உணவு - (பழவகை, பால், ரொட்டி, பழரசம் முதலியன) வழங்கப்பெற்றது. உண்டு முடித்த அளவில் 'சூரிச்' விமான நிலையத்தில் சுமார் 8 மணிக்கு விமானம் இறங்கியது. அந்த விமான நிலையம் மிகப் பெரியது. பல பெரிய - சிறிய - பயிற்சியளிக்கும் மிகச் சிறிய - விமானங்கள்

இருந்தன. எங்கும் நம் சென்னையில் உள்ளமைபோன்று படிவைத்து ஏறவேண்டிய நிலையில்லை. நேராக நடந்து விமானத்துள் செல்லும் வகையில் அமைப்பு இருந்தது. பம்பாயிலும் அப்படியே. இங்கே ஸ்விட்ஸர்லாந்து நகராகிய சூரிச்சில் இறங்கி அதே நாட்டின் மற்றொரு நகரான ஜினிவா செல்ல வேண்டும். அந்த நெறியினையும் அலுவலர் நன்கு ஆற்றுப்படுத்தினர். எனவே அங்கிருந்த தனி விமானத்தில் அமர்ந்ததும் மறுபடியும் சிற்றுணவு வழங்கப் பெற்றது. மது அருந்தினோர் பலர். சரியாக 9 மணியளவில் (சுமார் 20 நிமிடப் பயணம்) விமானம் ஜினிவா நகரில் இறங்கியது. விமான நிலையம் மிகப் பெரிய தாக இல்லை; விமானத்தில் இறங்கி நெடுந்தூரம் நடந்தே நிலைய எல்லையை அடையவேண்டும். எப்படியோ வந்து உரிய சாமான்களை எடுத்துக்கொண்டு வாடகை மோட்டார் வழியே (செக் பணம் நிலையத்தே மாற்றிக் கொண்டு) எனக்கென ஒதுக்கியுள்ள ஓட்டலுக்கு வந்து சேர்ந்தேன்.

ஜினிவா 4-4-85

ஜினிவா விமான நிலையம் சிறியதாக இருப்பினும் எல்லா வசதிகளும் நிறைந்திருந்தது. என் சாமான்களை எடுத்துக்கொண்டு வெளிவரும்போது, காவலர் (police) ஏனோ என் பெட்டிகளை ஆராய்ந்தனர். பலரை அப்படியே விட்டுவிட்டனர். என்னோடு பம்பாய் விமானத்தில் வந்த பலரும் செல்ல, என்னைத் துருவி ஆராய்ந்த காரணம் தெரியவில்லை. ஆனால் ஆராய்ந்தபின் மலர்ந்த முகத்துடன் மன்னியுங்கள் (excuse us) என்று கூறி வழியனுப்பினர். எனவே யாரிடமோ ஐயம் கொண்ட காரணத்தால் என்னைச் சோதனையிட்டதை உணர்ந்தேன். பெட்டிகளில் உள்ளே உள்ள பொருள்களை அகம் காட்டும் கருவி வழியே ('x' ray) தெரிந்து விரைவில் அனுப்புகின்றனர். எனினும் என்னுடைய பெட்டியினைத் திறந்து எல்லாவற்றையும் பிரித்துப் பார்த்தே அனுப்பினர்.

உடன் ஒரு வாடகைக் மோட்டாரை எடுத்துக்கொண்டு எனக்கென ஒதுக்கியிருந்த விடுதிக்குச் (hotel) சென்று 11 மணி அளவில் சேர்ந்தேன். எங்கும் சாமான்களை எளிமையாக எடுத்துச் செல்ல 'டிராலிகள்' உள்ளமையின் கடினமாக இல்லை. எனக்கென இருந்த அறையில் சென்று நன்கு குளித்து, சற்றே ஓய்வெடுத்துக் கொண்டேன். (காலை இரு முறை உண்டமையின் பசியே இல்லை). பின் 2 மணிக்கு மேல் வெளியே வந்தேன். பக்கத்தில் உள்ள ஓர் உணவு விடுதியில் புகுந்தேன். அது வெறும் உணவு விடுதியாக மட்டும் இல்லை. மின் அலைகள் கொண்டு (electronics) பலப்பல விசித்திர

வேலைப்பாடுகள் செய்த வண்ணப் படங்கள், உருவங்கள், பெரும் தோற்றங்கள் - மாறிமாறிவரும் காட்சிகள் முதலியன சுற்றிலும் அமைக்கப் பெற்று ஒருசூதாடும் கூடமாகக் (Gampling) காட்சி தந்தது. பலர் பலவிடங்களில் அவற்றோடு தொடர்பு கொண்டிருந்தனர். நான் ஒருவகையான பழம் கலந்த ரொட்டியினையும் காப்பியினையும் அருந்தினேன். காப்பி இங்கே ஒரு கப் நம் நாட்டுப் பணத்தின்படி 7 ரூபாய்/ =ரொட்டி 15/=ரூபாய். பின் வெளியே வந்து வேறிடத்தில் இரு வாழைப் பழங்களும் (ஒன்று 2 ரூபாய்) இரு ஆப்பிள்களும் (ஒன்று 4 ரூபாய்) வாங்கிக் கொண்டு அறைக்கு வந்து ஒவ்வொன்றை உண்டேன். பிறகு வெளியே புறப்பட்டு, பக்கத்தில் உள்ள இரயிலடிக்குச் சென்றேன். விமான நிலையத்திலிருந்து வரும்போது பலப்பல கடைத் தெருக்களையும் குடியிருப்புகளையும் கண்ட நான் அவற்றின் உயரத்தினைக் கண்டு வியந்தேன். 10, 12 அடுக்குகளுக்கு மேற்பட்டவற்றைக் கண்டு மகிழ்ந்தேன். இரயிலடி மிகமிகச் சிறப்பாக அமைந்துள்ளது. இங்கிருந்து வெளிநாடுகளுக்கும் - ரோம் - பாரிஸ் முதலிய நகரங்களுக்கும் வண்டிகள் செல்கின்றன. தரைக்கடியில் பெரிய கடைவீதிகள் உள்ளன. பலர் அங்கேயே தேவையான பொருள்களை வாங்குகின்றனர்.

கடைகளில் அதிகமான ஆட்கள் இல்லை. எல்லாப் பொருள்களிலும் அவற்றின் விலைகளை (தனியாகவோ - கிலோ கணக்கிலோ) எழுதி வைத்திருக்கிறார்கள். சிறுசிறு டிராலிகளும் உள்ளன. அதிக பொருள்களாயின் அவற்றைப் பயன்படுத்தலால், வேண்டியவர் வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு, வாயிற்புறத்தில் செல்ல, அங்குள்ளவர் அனைத்துக்கும் 'பில்' இட்டு (எல்லாம் இயந்திர வழியே— கம்பியூடர் முறை) தானே வெளியே தெரியுமாறு காட்டுவர். தொகை தந்ததும் அதைக் கிழித்துத் தந்துவிடுவார். எல்லாப் பொருள்களும் ஒரே கடையில் உள்ளமையின் வாங்குபவருக்கு எளிமையாகின்றது. (உடை, உணவு

விளையாட்டு, பிறபொருள்கள் அனைத்தும் உள்ளன) பெரும்பாலோர் உணவுக்கான ரொட்டி, ஜாம், வெண்ணெய், பிறவற்றை வாங்கி எடுத்துச் செல்லுகின்றனர். பலர் வீட்டில் ரொட்டி செய்வது கிடையாது எனக் கூறினர். நம் நாட்டு உருளை, வாழைப்பழம், கோசு, கேரட் போன்ற பதார்த்தங்களும் உள்ளன. ஆனால் விலைகள் அதிகம். வெங்காயம் மட்டும் விலை குறைவாக (பெரிது பெரிதாக) கிலோ ரூ. 7.50—இந்த நாட்டு 1½ பிராங்குக்குக் கிடைக்கிறது. மற்றவை அதிகமே. எல்லா விடத்தும் இறங்கவும் ஏறவும் மின் படிகள் அமைக்கப் பெற்றுள்ளன. படியில் கால் வைத்தால் மெல்லக் கீழ் இறக்கியோ மேல்தூக்கியோ வரும் நிலையில் வருத்தமின்றிச் செல்லலாம்.

இத்தகைய கடைகளைப் பார்த்துக்கொண்டு ரயிலடியில் நுழைந்தேன். அதன் அமைப்பும் சிறந்தது. மேலும் கீழுமாக இரண்டடுக்குகளில், வெவ்வேறு இடங்களுக்கு வண்டிகள் செல்லுகின்றன. நான் முன் சொன்னபடி எவ்வளவு சாமான்கள் இருந்தாலும் வெளியிலிருந்து ரெயில் பக்கம் வரையில் டிராலியில் கொண்டுவரலாம். 'போர்டர்' என்கின்ற பேரே கிடையாது. எப்பொழுதும் மக்கள் சென்று கொண்டும் வந்துகொண்டும் உள்ளனர். பணம் மாற்றும் நிலையமும் பிற நிலையங்களும் முறையாகச் செயல்படுகின்றன. (நான் எனக்கு வேண்டிய சுவிஸ் நாணயங்களை விமான நிலையத்திலேயே மாற்றிக் கொண்டேன்) ஆடவரும் பெண்டிரும் அணி அணியாகச் செல்லுகின்றனர். சுவிஸ் நாட்டவர் மட்டுமன்றி (விமான நிலையத்திலும்கூட) பிற ஐரோப்பிய நாட்டவரும் நீக்ரோக்கள் போன்ற ஆப்பிரிக்க நாட்டவரும் ஆசிய நாட்டவரும் மிகத் தாராளமாகப் புழங்குகின்றனர். உள்ளே சென்று ரயிலமைப்புகளைக் கண்டேன். சாதாரண வகுப்பு வண்டி நம் நாட்டு முதல் வகுப்பினைக் காட்டிலும் சிறந்துள்ளது. தேவையின் தானாகத் திறந்தும் மூடும் கதவுகளுடன் தூய்மையாக

உட்காரும் இடம் எல்லாம், இரப்பர் பஞ்சிட்ட இருக்கை களுடன் நல்ல இடைவெளியீட்டுக்கிடையில் அகலமாக-இருக் கின்றன. அடிக்கடி வண்டிகள் வந்தும் சென்றும் இருக்கின் றன. டிக்கெட் பரிசோதகரோ, படுக்கை விரிக்கும் தரகரோ இல்லை. டிக்கெட் தருவதற்கு மட்டும் விற்பனையாளர் உள்ளனர். எல்லாம் மின்சாரத்தின் துணையால் இயங்கு வதால் யாதொரு இடர்ப்பாடும் இல்லை.

இத்தகைய இரயில் நிலையத்தைப் பார்த்துக்கொண்டே வெளியில் வந்தேன். மணி நான்கு ஆகியிருந்தது. எனவே அருகிலுள்ள பொருட்காட்சியினையும் கடிகாரப் பொருட் காட்சியினையும் காண, ரயிலடியிலேயே வந்து'வண்டியில் (Bus)ஏறினேன். பஸ் பற்றியும் இங்கே ஒன்று சொல்லத் தான் வேண்டும்.

இங்கே பெரும்பாலோர் கார் வைத்துள்ளமையின் 'பஸ்' சில் அதிகக் கூட்டம் இல்லை என அறிந்தேன் (பதினைந்து பேருக்கு ஒரு கார் வீதம் இருக்கிறது என்றனர்). பஸ் ஏறுவதற்குமுன் ஒவ்வொரு நிறுத்துமிடத்தும் (Bus stop) உள்ள அந்த பஸ்களுக்குரிய 'டிக்கெட்' பெட்டியில் தேவை யான காசு இட்டால் உரிய டிக்கெட் வெளிவருகிறது. அது அடுத்த ஒரு மணி நேரத்துக்குச் செல்லும். விலை பிராங்கு 1-20 (ரூபாய் 6 =). பல பஸ்களிலும் மாறி ஏறலாம். பின்பும் அதைப் பயன்படுத்தினாலும் சரிபார்க்க யாரும் இல்லை. மக்களிடத்தில் அரசாங்கம் அவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கிறது. நான் (1 பிரா 20 சென்டு) ஒரு டிக்கெட் எடுத்து, பொருட்காட்சி பக்கம் செல்லும் உந்து வண்டியில் ஏறினேன். வழியில் ஜினிவாவுக்கே அழகு செய்யும் ஏரியின் அகன்ற கால்வாய் அழகுற நீரோட்டம் பெற்றிருந்தது. சுற்றிலும் பனிதோய்ந்த சிகரங்களைக் கொண்ட மலைகள் கண்ணுக்கு அழகாகவும் இனிமையாகவும் இருந்தன. விமானத்தில் வந்தபோது அவைகளைக் கண்டு மகிழ்ந்த நான், இங்கே நின்று நாற்புறமும் நோக்கி மகிழ்ந்தேன்.

பொருட்காட்சிச் சாலையில் இறங்கினேன். வழியில் இடம் அறியவும் டிக்கெட் எடுக்கவும் பலர் உதவினர். ஒரு சிலர் நாம் சொல்வதைக் காதில் போட்டுக்கொள்ளாது எப்படியோ செல்கையில், ஒருசிலர் (பெண்கள் உட்பட) தாமே வலியவந்து 'நான் உங்களுக்கு உதவக்கூடுமா?' (Canh I help you?) என்று கேட்டுப் போதிய உதவிகளையும் செய்கின்றனர். இங்கே பெரும்பாலும் பிரஞ்சு மொழியே வழக்கத்தில் உள்ளமையின் பலருக்கு ஆங்கிலமும் புரிவ தில்லை. நான் ஏறிய பஸ்சில் என் பக்கத்திலிருந்த ஒரு இளம்பெண் வலியவந்து உதவி செய்தாள். தான் நம் அண்டை நாடான பர்மாவைச் சேர்ந்தவரென்றும் (தாய் பர்மியர் - தந்தை சுவிஸ்) தன் அண்டை நாட்டிலிருந்து வந்த எனக்கு உதவ வேண்டும் என்றும் கூறினர். வேண்டுமானால் இறங்கி வழிகாட்டுவதாகவும் கூறினர். நான் வேண்டாம் என்றமையின் பொருட்காட்சி நிற்குமிடம் காட்டி இறங்கச் சொல்லி வாழ்த்தி அனுப்பினர். அவர் பள்ளியிலே படிக்கும் இளம் பெண். எனவே அவள் வரும் காலம் 'சிறப்பதாக' என வாழ்த்தினேன்.

பொருட்காட்சிச்சாலை நான்கு மாடங்களால் ஆனது. உள்ளே பல வகை விலங்குகள், பறவைகள், பாம்பு, நண்டு, தேள், நட்டுவாக்காளி, வண்டு, தும்பி, மீன் போன்றவை இறந்த நிலையில் உள்ளீடு இட்டு முறையாக அமைத்து யாரும் தொடக்கூடாதவகையில் கண்ணாடி இட்டு, பெரிய பெரிய அறைகளிலும் சிறு அலமாரிகளிலும் அழகுற வைத் திருந்தனர். அவைபற்றிய வரலாறுகள், சிறப்பு நிலைகள், பறவைகள் பல ஆயிரம் கல் பறந்து நம் நாடுவரை வரும் உண்மைகள் போன்றவையும் பொறிக்கப் பெற்றிருந்தன. திமிங்கலம், யானை போன்றவற்றின் எலும்புக் கூடுகளும் இருந்தன. ஒருபகுதியில் உயிருள்ள மீன்கள் உலவவிட்டிருந் தனர். அவற்றுள் சில இதுவரையில் நான் காணாதவை. அங்கேயே இவ்வாறு பலவற்றை கண்ட நான், அடுத்துள்ள கடிகாரப் பொருட்காட்சிச்சாலையினையும் கண்டேன்,

அது மிகச் சிறியதாயினும் பழங்காலத்திய நாழிகை வட்டில் முதலாகிய கடிகாரம் தொடங்கி, இன்றைய வரையில் உள்ள வற்றை அமைத்து, அது வளர்ந்த வரலாற்றைக் காட்டி யுள்ளனர். நம் நாட்டு இலக்கியங்களில் குறிக்கப்பெறும் நீர் விடுமுறையாகிய நாழிகை வட்டில் போன்ற பொருளும் இருந்தது. இவற்றையெல்லாம் கண்டு கொண்டு, மறுபடியும் பஸ் ஏறி ரயிலடிக்கு வந்தேன். மணி ஏழு ஆகும் நிலையில் இருந்தது.

பக்கத்தில் இருந்த நிலவரைக் கடைத் தெருக்குள் புகுந்து, அங்கிருந்த விதவிதமான பொருள்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக மெல்லப் பார்த்துக் கொண்டே வந்தேன். அங்கேயே ஒரு கடையில் சில பழங்களை வாங்கிக் கொண்டு, ஒரு 'கப் டீ'யும் அருந்தி விட்டு, அருகில் இருந்த நான் தங்கிய விடுதிக்கு வந்து சேர்ந்தேன். முன்னாள் இரவின் நெடும் பயணக் களைப்பாலும் இன்றைய அலைச் சலாலும் உடன் படுக்கைக்குச் செல்லவேண்டும் எனத் தோன்றிற்று. இங்கே 8 மணி வரையில் சூரியன் இருப்பதால் உறக்கமும் வரவில்லை. என் அறை தெரு ஓரமாக இருந்த தால் விரைந்தோடும் வண்டிகளைக் கண்டு கொண்டே இருந்தேன். ஓடும் வண்டிகளால் ஓசை ஒளியோ, புகையோ, பிற தொல்லைகளோ இல்லை. அங்கங்கே சிகப்பு விளக்கு கள் சாலை ஓரங்களில் கடக்கவும் நிறுத்தவும் அமைக்க, அவற்றின் வழியே தவறாது கார்களை ஓட்டுவது கண்டு மகிழ்ந்தேன். நம் நாட்டில் அத்தகைய விளக்குகள் இருந்தும், உடன் காவலர் இருப்பதுண்டு அல்லவா! அதையும் கடக்கும் ஓட்டுநர் வீரத்தை அறிந்த எனக்கு, இங்கே சாலைப் போக்குவரத்து செம்மையாக—விரைந்து செல்லும் வகையில் அமைந்த நிலை மகிழ்ச்சி தந்தது. மேலும் இங்கே மெல்லச் செல்லும் மாட்டு, குதிரை வண்டி களோ, கைவண்டிகளோ—இல்லை. ஏன்? சைகில் போன்ற வையே அருகியுள்ளன. பேரொலி எழுப்பும் புகைக்கும் மோட்டார் சைக்கிலோ, ஸ்கூட்டரோகூட இல்லை எனலாம்,

இங்கே வண்டிகளின் போக்குவரத்து வலப்பக்கமாகவே (Keep to The right) அமைந்துள்ளது. சாலை, இரெயில் இரண்டும் அப்படியே. இங்கேயும் இத்தனை ஒழுங்குகளுக்கு இடையில், குறித்த இலக்குகளை விட்டு, கண்ட இடத்தில் சாலைகளைக் கடக்கும் ஆண்களும் பெண்களும் இல்லாமல் இல்லை. மேலும் ஓடும் வண்டிகளில் ஏற முயலும் இருவகையினரும் உள்ளனர். இவர்களைக் கண்டபோது, நம்நாட்டு மரபினைப் போற்றுவர் இங்கும் உள்ளனரா என வியந்தேன்.

சுவிஸ்நாடு மிகச் சிறியது; நம் இமயத்துக்கு அடுத்த உயர் நிலையில் உள்ள 'ஆல்ப்ஸ்' (Alps) மலைச்சரிவில் உள்ளது. எனவே எங்கும் பனிபடர் நெடுமலைகளைக் காணமுடிகின்றது. இங்கே மூன்று மொழிகள் வழக்கத்திலுள்ளன; எனினும் பிரஞ்சுமொழியே பெரும்பாலோர் கொள்ளுகின்றனர். இந் நாட்டுச் சாலைகளும் ஒழுங்காக உள்ளன. இந் நாட்டில் 'ஜினிவா' மூன்றாவது பெருநகரம் என்கின்றனர். இது தலைநகரம் இன்றேனும் அதனிலும் மேலாகப் பல வெளி நாட்டு மக்கள் கலந்து உறையும்—வந்து செல்லும் இடமாக உள்ளது என அறிகிறோம். தெருவுதொறும்—நிலையந் தொறும் இந்த நிலையினைக் காணமுடிகின்றது. இதன் எல்லையில் விரைந்தோடும் அகன்ற கால்வாய் ஏரியும் அதன் எல்லையில் அமைந்துள்ள எல்லையற்ற படகுகளும் பிறவும் இதற்கு எழிலூட்டுகின்றன. இதன் சிறப்பினைக் கருதித் தான் போலும் முதல் உலகப் போர் முடிந்தவுடன் 'ஐக்கிய நாடுகள் சங்கம், (League of Nations) இங்கே அமைத்தனர். 1920 முதல் 1936 வரை அது செயலாற்றிய இடத்தினை நாளை காணப்போகிறேன். இன்றும் இது உலக அரங்கில் முக்கிய இடத்தினை வசிக்கின்றதல்லவா, 'UNISCO' 'யுனிஸ்கோ' போன்றவை செயல்படுகின்ற இடமல்லவா!

இத்தகைய எண்ணங்களுக்கிடையில் என்னைப்பற்றிய எண்ணமும் எழுந்தது, இலங்கை, மலேயே முதலிய வெளி

நாடுகளுக்கு முன் சிலமுறை நான் சென்றிருந்த போதிலும் இவ்வளவு தூரம் கடந்து ஒரு நாட்டில் கால்வைத்து நாளைக் கழிப்பது இதுவே முதல்தடவை. ஆம். என் பிறந்த ஊர், காஞ்சிநகர், சென்னை, பச்சைப்பர் கல்லூரி, வள்ளியம்மை கல்வி அறம், பள்ளிகள், முதல்வர், ஆசிரியர், பள்ளிகளின் பிள்ளைகள், தொண்டர்கள், பணியாளர்கள் அங்கே நடை பெற்ற பல நிகழ்ச்சிகள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம், அதன் துணைவேந்தர் ஒன்றன்பின் ஒன்றாக என் உள்ளத்தில் திரைப்படக் காட்சிகள் போன்று வந்து வந்துசென்றனர். இவற்றிற்க்கெல்லாம் காரணமாய் என் அன்னையையும் என்னைவிட்டு என்றும் பிரியாது உடனுறை யும் ஆறுமுக அண்ணலையும் அவர் தம் முற்றிய குடும்பத் தினையும் எண்ணி எண்ணி அப்படியே என்னை மறந்து உறங்கிவிட்டேன்.

பாரிஸ்-ஜினிவா 5-4-85

கதிரவன் காலை 8-30க்குத்தான் தெரிந்தான். எனினும் நான் முறைப்படி விடியல் 5-மணிக்கு எழுந்து காலைக்கடன் களை முடித்துக்கொண்டு, அமைதியாக இருந்தேன். 8-30க்குக் காலை உணவு தரப்பெற்றது. விடுதி வாடகை யுடனேயே இந்தக் காலை உணவுக்கும் சேர்த்து வாங்கிக் கொள்ளுகின்றனர். மேலை நாடுகள் அனைத்திலும் இந்த ஏற்பாடு உண்டு என்று கூறினர். அளவு இல்லை: எனவே நிறையச் சாப்பிடலாம். காலை உணவு கொண்டபின் நகர் நலம் காணப் புறப்பட்டேன். நான் தங்கிய இடத்துக்கு அருகிலேயே அதற்கென அமைந்த கூடமும் இருந்தது.

'கி' (key) எனும் நிறுவனத்தார் இச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்கின்றனர். ஒரு மணிக்கு ஒரு பஸ் வீதம் நகர் நலம் காணவும், வேறு பிற இடங்களுக்கும் பனிபடர்மலை களுக்கும் அழைத்துச் செல்லவும் ஆல்ப்ஸ் உச்சிக்குச் செல்லவும் ஏற்பாடு செய்கின்றனர். நான் சென்று 10 மணிக்குப் புறப்படும் 'பஸ்' ஏறி நகர் நலம் காணப் புறப் பட்டேன். விளக்கக்கூற வந்த பெண் ஆங்கிலத்திலும் வல்லவளானமையின் என் கேள்விகளுக்கெல்லாம் நன்கு பதிலளித்தாள்.

ஊர் நடுவில் ஓடும் ஏரியோடு கலந்த ஆற்றில் பல படகுகள் நிறுத்தப் பெற்றிருந்தன. அதன் கரை ஓரமே இந்த ஊரின் 'பீச்சு' (Beach) எனலாம். விடுமுறை நாளானமையின் இயக்கமில்லை என்றனர். நடுவில் ஓரிடத்தில் சுமார் 150

அடி உயரம் எழும்பும் ஒரு நீர் உயிர் காட்சி வேகமாக இயங்கியது. நெடுந்தூரத்திலிருந்தும் அது தெரிந்தது. பின் பலவிடங்களுக்கும் சென்றோம். 1150 ஆண்டில் கட்டப் பெற்ற பழைய மாதா கோயில் நிமிர்ந்து காட்சியளித்தது. பழங்காலப் பாணியில் கல்லும் மரமும் கொண்டு கட்டப் பெற்ற, பழங்கால உரோமர் கட்டிடக்கலைக்கு நிலைக் களனாக அது நிமிர்ந்து நின்றது. தற்போது அது கதோலிகர் வழிபடு இடமாக உள்ளது. வழியிலே, சென்னையில் பழங்காலத்தில் ஓடியது போன்று, தண்டவாளமிட்ட 'டிராம்' வண்டிகள் சாலைகளில் ஓடக் கண்டேன். அகன்ற தெருக்களானமையின் அவற்றால் இடர்ப்பாடு இல்லை போலும். (இங்குள்ள பஸ் எல்லாம் பம்பாய் போல, மேலே உள்ள மின்சாரக் கம்பிகளின் உதவியாலேயே இயங்கு கின்றன) வழியிலே பல இடங்களில் பத்திரிகைகள் சிறு மாடங்களில் வைக்கப்பெற்றிருந்தன. அதை விற்க யாரும் இல்லை. தேவையானோர் உரிய காசினை அங்குள்ள பெட்டியில் இட்டு, தேவையான பத்திரிகையினை எடுத்துக் கொள்ளலாம். ஒரு பத்திரிகை குறைந்தது 1 பிராங்கு (5 ரூபாய்). தெருவுதொறும் எண்ணற்ற கார்கள் அலுவலகங் கள் இல்லா இடங்களிலும் நிறுத்தப் பெற்றிருந்தன. இங்கே காருக்கு 'ஷெட்' இருக்கவேண்டிய தேவை இல்லை போலும். 20,25 அடி அகலமுள்ள சிறு தெருக்களிலும் இரு புறங்களி லும் கார்கள் நிற்க, செல்வோர் தம் கார்களை மிக எச்சரிக்கையாக ஓட்டிச் செல்கின்றனர். ஜினிவா பழைய நகரத்தில் கார் புக முடியாத சிறு தெருக்கள்கூட உள்ளன. எனினும் அவற்றிலும் ஆங்காங்கே சில கார்களை நிறுத்தி யுள்ளனர்.

ஜினிவாவில் தெருவுதொறும் பெருஞ்சிலைகள் வைக்கப் பெற்றுள்ளன. பழைய நகரில் பழங்காலப் பெருஞ்சிலைகள், பழைய உரோம கிரேக்கப் பாணியில் ஓங்கி நிற்கின்றன. அவ்வப்போது உலகில் நடைபெறும் பல நிகழ்ச்சிகளைக் குறிக்க எழுப்பப்பெற்ற சில சின்னங்களும் உள்ளன. மிகப்

பழங்காலந் தொட்டு, இன்றுவரை உலக வரலாற்றைச் சிறப்பாக மத்தியதரைச் கடலை ஒட்டிய வரலாற்றை அறிய இவை உதவும் என எண்ணுகிறேன். 1911ல் நிறுவப் பெற்ற அனைத்துலகத் தொழிலாளர் நலத்துறைக் கழகம் இன்றும் சிறப்பாக இங்கே செயல்பெற்று வருகின்றது. ஐக்கிய நாடுகள் (League of Nation) சங்கம் (1920-36)ல் செயல்பட்ட இடங்களும் வரலாற்று இடங்களாய்ப் போற்றப் பெறுகின்றன. நகரத்தெருக்கள் சில மேடு பள்ளமாக ஏறியும் இறங்கியும் உள்ளன, மலைச்சரிவுகளில் பழங்காலத்தில் கட்டியவை இவை போலும். நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட பல நிறுவனங்கள் இங்கே உள்ளன. கால எல்லையைக் கடந்து வாழும் சில நகரங்களில் இதுவும் ஒன்று என்கின்றனர். 'ஜினிவா' என்ற ஊரின் பெயர்க் காரணத்தைக் கேட்டேன், யாரும் விளக்க முன்வரவில்லை.

நகரின் பலவிடங்களில் நம் ஊரைப்போன்றே காக்கைகள் பறக்கக் கண்டேன்; புறாக்களும் இருந்தன. மரங்கள் அனைத்தும், பனிக்காலமாதலால் எல்லா இலைகளும் உதிர்ந்து பட்ட மரங்களாகக் காட்சி அளித்தன. ஆங்காங்கே உள்ள சிலைகள் இங்கே ஆட்சி செய்த பல தலைவர்களை நினைவூட்டுகின்றன என்றனர். அவ்வப்போது அவர்கள் செய்த சீர்திருத்தங்கள் பற்றிய குறிப்புகளும் செதுக்கப் பெற்றன என்றனர்.

இங்கே 1781ல் நிறுவிய பல்கலைக் கழகம் செயல்படுகின்றது. இன்று விடுமுறையானதால். அனைத்தும் மூடியிருந்தன. பல்கலைக்கழகக் கட்டிடத்தைச் சுற்றி நான்—மற்றவருடன் நடந்தே வந்தேன். அதை அடுத்த உயர்ந்த மதிற் சுவர் ஒன்றும், அதன் புறத்தில் பல பெரும் தலைவர்தம் சிலைகளும் பிற உருவங்களும் உயர்ந்த நிலையில் உள்ளன. பிள்ளைகள் விளையாடுதற்கென பரந்த நிலப் பரப்பு இருந்தது. அச் சாலைகளில் இன்று விடுமுறை யாதலால், பல காதலர்—முதியரும் இளையரும்—அணைந்தும் பிணைந்தும், தம்மை மறந்து உலாவந்து கொண்டிருந்தனர்.

மேலும் அப் பல்கலைக் கழகத்தை அடுத்து—கழக அமைதியைக் காக்கும் வகையில்—பரந்த நிலப்பரப்பு விடப் பெற்றிருந்தது. அதன் நடைமுறைகளைக் காண வந்த எனக்கு அந்த வாய்ப்பு கிட்டவில்லையே என வருந்தினேன். ஈஸ்டர் விடுமுறையாதலால் வேறு பள்ளிகளையும் காணமுடியவில்லை.

வழிநெடுக, பலகட்டிடங்கள் பழமையும் புதுமையும் கலந்து நின்றன. பழைய நகர் மலைச்சரிவில் இருந்தமையின் தெருக்கள் வளைந்தும் குறுகலாகவும் சென்றன. அங்கே நினைவுச் சின்னமாகப் போற்றப் பெறத்தக்க பல கட்டிடங்கள் காலத்தை வென்று நிமிர்ந்து நிற்கின்றன. 1602ல் கட்டிய கட்டிடங்களும் வழிபாட்டிடங்களும் உள்ளன. ஒரு கோயில் பொற்கோயில் என்னுமாறு உயர்ந்த பொற்சிகரங்கள் ஐந்தினைப் பெற்றுச் சிறந்து நிற்கின்றது. ஓரிடத்தில் மிகப் பழைய கோட்டை போன்ற கட்டிடத்தில் எங்களையெல்லாம் இறக்கிப் பல காட்சிகளைக் காட்டினர். மிகப் பழங் காலத்திய (12, 13, 14 நூற்றாண்டாகலாம்) பீரங்கிகள் பல நிறுத்தப்பெற்றிருந்தன; மிகப் பெரியனவாக மூன்று உள்ளன. அவையாவும் பழங்காலப் போர்ச் சின்னங்களாகப் பாதுகாக்கப் பெறுகின்றன என்றனர். உரோம, கிரேக, போர்ச்சுகீசிய, பிரஞ்சு நாடுகளுக்கு இடையில் இங்கே பல போர்கள் பிற்காலத்தில் நடைபெற்றன என்றும் அவற்றைக் குறிக்கும் சின்னங்கள் பல எனவும் எங்களுக்கு விளக்கக் கூறிய அம்மையார் உரைத்தார். மிக உயர்ந்த நீல மாளிகையினைக் காட்டி, அங்கே தொழிலாளர் நலக் கழகம் இடம் பெற்றுள்ளது என்றார். பிற பெருங் கட்டடங்களையும் உலக வரலாற்றொடு அவை கொண்ட தொடர்புகளையும் ஓரளவு எடுத்துரைத்தார். இவ்வாறு பலப்பல இடங்களைக் கண்ட நாங்கள் புறப்பட்ட இடத்துக்கே 12 மணி அளவில் வந்து சேர்ந்தோம். வானம் மேகத்தால் மந்தாரமாக இருந்தமையின் நான் மேலும் மாலையில் வேறு ஏற்பாடுகளைச் செய்து கொள்ளவில்லை.

12 மணிக்குமேல் நான் தங்கிய விடுதிக்கு வந்து தங்கி சிறிது நேரம் கழித்து அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். அங்கே பணிசெய்த பணியாளர் அனைவரும் இன்முகத்தோடு உபசரித்து, 'திரும்ப வருக' என்ற வாழ்த் தோடு வழியனுப்பினர். பிறகு நான் ரெயிலடிக்கே வந்து அங்கே என் பெட்டிகளை வைத்துவிட்டு, உணவுக்கு எதிரில் உள்ள கீழ் நிலைக் கடைகளுக்குச் சென்றேன். பழங்களுடன் ரொட்டி வெண்ணெயும் காப்பியும் உண்டு, பின் அக் கடை களில் பலவற்றைப் பார்த்துக் கொண்டே மறுபடியும் இரெயிலடிக்கு வந்தேன். அங்கே இருந்து ஆயிரக்கணக்கில் —கூட்டம் கூட்டமாக—பெரும்பாலும் காதலர் பிணைப்பாக —மக்கள் செல்வதும் பெரு மூட்டைகளை முதுகில் சுமந்து வெளிநாட்டுப் பார்வையாளர்கள் செல்வதும் இளம் பிள்ளை கள் அங்குள்ள கடைகளிலும், பத்திரிகை நூல் விற்பனை நிலையங்களிலும் கூடி, விளையாட்டுப் பொருள்களையும் நூல்களையும் வாங்கி மகிழ்வதும் காணவேண்டுவன. எனினும் மாலை 5-30க்கு நான் விமான நிலையத்தில் இருக்க வேண்டியவனாதலால் (6-30 பாரிசுக்கு விமானம் புறப்பாடு) நான் 5 மணி அளவில் அங்கிருந்து விமான நிலையத்துக்குப் புறப்படும் 'பஸ்'சில் புறப்பட்டு விமானநிலையம் அடைந் தேன். அங்கே முறைப்படி சோதனைகள் எல்லாம் முடிந்தன. நான் முன்பே குறித்தபடி, இது பெரிய விமான நிலையமாக இல்லையாதலால் (நம் சென்னைவிக்காட்டிலும் சிறியது எனலாம்) அதிக மக்கள் கூட்டம் இல்லை. எனினும் நான் ஒரு பக்கத்தே அமர்ந்து, அருமையாக எதிரிலே தெரிந்த— பனி மூடிய வெள்ளிய சிகரங்களையும் அவற்றின் சிறப்பினை யும் கண்டு கண்டு மகிழ்ந்தேன். இமயம் சூடிய நம் பனி மலையினைப் பாடிய பழைய தமிழ்ப் புலவர்தம் பாடல் களெல்லாம் நினைவுக்கு வந்தன. இருபத்தெட்டு ஆண்டு களுக்குமுன் காஷ்மீர் சென்றபோது கண்ட பனிச்சிகரங்கள் என் கண்முன் பளிச்சிட்டன. இவ்வாறு பல்வேறு எண்ணங்களுக்கிடையில் நேரம் எனக்கென நிற்காது ஓடியது. 6-00 மணி அளவில் விமானத்தில் ஏற ஆணை வந்தவுடன்

மற்றவர்களுடன் நானும் விமானத்தில் ஏறினேன்; அதற்கு முன்னும் பின்னும் வேறு விமானங்கள் பாரிசுக்கு இருந்தமையின் இதில் கூட்டம் அதிகம் இல்லை.

விமானத்துக்குச் செல்லும்போது சிறு தூறல் இருந்தது. உட்கார்ந்த சில நிமிடங்களில் விமானம் கிளம்பிற்று. ஒரு மணி நேரமே பாரிசுக்குச் செல்ல; எனினும் இடையில் மேகக் கூட்டம் கடுமையாக நடைபோட்டது. விமானம் உயர்ந்தது. மேகங்கள் கீழே தங்கின. மேகத்தை வெற்றி கொண்ட காரணத்தால் விமான ஓட்டியை 'மேகநாதன்' (இந்திரஜித்து) என அழைக்கலாமோ என நினைத்தேன். (பாவம் அவனுக்குத் தமிழும் தெரியாது; இராமாயணமும் தெரியாது) மிக உயரத்தில் விமானம் பறந்தது. முறையாக உண்ணச் சில வந்தன. நான் காப்பியை மட்டும் குடித்து, பிறவற்றைத் தொடவில்லை. விமானம் 7.30க்குப் பாரிஸ் விமான நிலையத்தை அடைந்தது. அது இறங்கிய இடம் வெறும் காடாக இருந்தது. ஒரு வேளை வழியில் எங்காவது இறங்கிற்றோ என நினைத்தேன். தூரத்தே வட்டமான உயரிய ஒரே கட்டடம் தெரிந்தது. நிலையமும் பெரியதாகவே இருந்தது. அனைவரும் இறங்கவே நானும் இறங்கினேன். பெரிய கட்டடம் நோக்கி அனைவருடன் சென்றேன். இன்னும் கதிரவன் ஒளிவீசிக் கொண்டிருந்தான். சிறிது தூரம் நடந்ததும் வழிநெடு மின்அசைப் படிகளும் வழிகளும் இருந்தமையின் நடக்கத் தேவை இல்லை. உள்ளே செல்லச் செல்ல நிலையத்தின் சிறப்பு விளங்கிற்று. மிகப் பெரிய கட்டடம் - வட்டமானது - பல சுற்றும் மாடியும் உள்ளது. சாமான்கள் எடுக்கும் இடத்திற்குச் சென்றேன். சிறிது நேரமாயிற்று. என்னுடன் தம் நான்கு பிள்ளைகளுடன் வந்த அன்னையார் எனக்கு வழிகாட்டி உதவி செய்தனர். அக் குழந்தைகள் என்னுடன் நன்கு பழகின. ஆங்கிலம் பேசின. விமானத்தில் அவர்களுக்குக் கொடுத்த 'சாக்லெட்டை' எனக்கு தந்து எடுத்துக் கொள்ளுமாறு வற்புறுத்தின. என் பெட்டியினை எடுத்து உதவி, உடன் வந்து, பிரான்சு பிராங்கு வாங்க உதவி, வாடகை மோட்டார் ஏற்பாடு செய்தே அவர்கள் புறப்பட்டனர்.

நான் வரும் நேரத்தினையும் நாளையும் விமானத்தையும் குறித்துப் பாரிசில் அறுவருக்கு எழுதினேன். எனினும் ஒரு வரும் வரவில்லை. இருட்டத் தொடங்கிவிட்டது. அந்த அன்னையார் உதவி இல்லாதிருந்தால் இன்னும் காலம் தாழ்ந்திருக்கும். எனக்கே சுவிஸ்சு விமானத்தார் ஒரு விடுதியினைப் பதிவுச் செய்திருந்தனர். எனினும் அது நாளையே (6-4-85) எனக்குக் கிடைக்கும். என் முதற் பயணத் திட்டப்படி நான் 6-4-85-ல் பாரிஸ் செல்ல இருந் தமையே காரணம். எனினும் திருமதி காந்திமதி அவர்கள் சொல்லிய 'ஓரியன்டு' விடுதிக்கு வாடகை வண்டியைச் செலுத்தச் சொன்னேன். அந்த இடம் அவனுக்குப் புரிய வில்லையாயினும், அங்கிருந்த காவலன் விளக்கிச் சொல்லவே புறப்பட்டான். வழிநெடுக நல்ல மழை; நெடுந்தூரம்- அப்போது நான் நகருக்கு வெகு தொலைவில் விமான நிலையம் அமைத்துள்ளார்கள் என அறிந்தேன். (ஊருக்கு அருகிலேயே மற்றொரு விமான நிலையம் - பம்பாயைப் போல் உள்ளதெனவும் - அது உள்ளூர் பயணங்களுக்குப் பயன்படுவதெனவும் கூறினர்) பெருமழை - நெடுந்தூரம் - வழிநெடுக வளைந்தோடும் கார்கள் - விளக்கொளி - வரை குடைந்தாற்போன்ற அகன்ற உள் பாதைகள் - அவை பாலங்களோ - இ ய ற் கை யோ அறியக்கூடவில்லை. இருட்டும் வாகன விரைவும் தெளிவைத் தரவில்லை. இரவு 9-15க்கு நான், குறித்த விடுதியை அடைந்தேன். அவர் களுக்கு நான் எழுதிய கடிதம் இன்று காலைதான் கிடைத் தது போலும். ஈஸ்டர் விடுமுறையின் கூட்டமிகுதியாலும் கடிதம் காலந்தாழ்த்து கிடைத்தமையாலும் இந்த விடுதிக்கு உரிமையான வயதான மூதாட்டியார் இடம் கிடையாது என்று வன்மையாகக் கூறிவிட்டார். நான் புதியவனாகை யாலும் வேறு எங்கும் செல்ல முடியா நிலையினையும் விளக் கினேன். அவர்களுக்கும் அவர் பணியாளர்களுக்கும் ஆங்கிலம் புரியவில்லை. நல்லவேளை 'ஆம்ஸ்டர்டாமி' (Amsterdam) லிருந்து வந்து தங்கியிருந்த ஒருவர் வந்தார்; நல்ல ஆங்கிலம் பேசினார். அவர் என் நிலையினை அவர்க

ஞக்கு விளக்கினார். அதற்குள் 'ஒய்.எம்.சி.ஏ.'க்குத் தொலை பேசியில் தொடர்பு கொண்டேன். அவர்களும் விடுமுறை யில் இடம் நிறைந்துள்ளமையைக் கூறினர். சுவிஸ் விமான நிலையத்தார் கூறிய விடுதி கிடைக்கவில்லை. அதற்குள் அந்த மூதாட்டியார் எப்படியோ மனம் இரங்கி, ஏதோ ஒரு மூலையில் தங்க இடம் கொடுத்து, மறுநாள் அறை ஒதுக்குவ தாக வாக்களித்தார்.

பாரிஸ் நகரம் பெரியது; பல ஆயிரக்கணக்கான ஓட்டல் களை-தங்கும் இடங்கள் நாடொறும் ஒரு வேளை பல லட்சம் மக்களை - பிற நாட்டவரை-தங்கவைக்கும் அளவில் அவை செயல்படுகின்றன. ஒரு நாளைக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்டும் ஐம்பதுக்கும் குறைந்தும் வாடகை வாங்கும் வகையில் பலப்பல விடுதிகள் உள்ளன போலும். சில கேளிக்கை விடுதிகளாக - குடியும் பிறவும் மிகுதியாக உள்ள தன்மையில் உள்ளனவாம். பாரிஸ் நகரை இரவில் வலம் வந்த நான் இந்த உள்ளீடுகளை அறிய முடியாவிட்டாலும் நகரின் பரப்பையும் பரபரப்பையும் அகன்ற வீதிகளில் வளைந்தோடும் வாகனங்களையும், விண்ணாங்கு மாளிகைகளையும், மின்னொளியினையும் கண்டேன். 'இரவில் பாரிசைக் காண்' என்ற பழமொழி எனக்கு நினைவு வந்தது. எனினும் முன்கூறியபடி அதன் உள்ளீடு எனக்குப் புரியாதது.

ஓட்டல் மூதாட்டியார் ஒரு தனித்த இடத்தில் கட்டிலும் பிற வசதிகளும் செய்து தந்து, அந்த இரவில் அங்கே தங்குமாறு பணித்தனர். அதற்குள் மணி பத்தாகிவிட்டது; பகலில் பலவிடங்களில் உழன்ற நிலையிலும் காலம் கடந்த மையாலும் பசி இன்மையாலும் உடன் படுத்துக்கொண் டேன். எனினும் உறங்குமுன் முறையான இறைவணக்கம் செலுத்தினேன். பிறந்த பொன்னாட்டினை விட்டு இன்று சற்றே தொலைவில் வந்ததனை நினைத்து, யாரும் வரவில் லையாதலால் நாளை என்ன செய்யப்போகிறோம் என்ற எண்ணத்தோடு படுத்துக் கொண்டேன்; உறங்கினேன். காலையில் எப்போதும்போல் 5 மணிக்குக் கண்விழித்தேன்.

பாரிஸ் 6-4-85

விடியற்காலை முறைப்படி எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வெளிவந்தேன். வானம் இன்னும் இருண்டிருந்தது. 8-30க்குத்தான் சூரியன் தெரிவான். அதிலும் இன்று வானம் இருண்டு மழையாக இருந்த காரணத்தால் மிகக் குளிராகவும் இருட்டாகவும் இருந்தது. மக்கள் நடமாட்டமும் இல்லை. எனக்கு 8 மணிக்குக் காலைச் சிற்றுண்டி தந்தனர் (இதுவும் வாடகையுடன் சேர்ந்ததே). ரொட்டி, வெண்ணெய், ஜாம், காப்பி இவையே முறையான காலை உணவு. அதை உட்கொண்டேன். வெளியே தூரல். எனவே எங்கும் செல்ல முடியவில்லை. நான் திருமதி. காந்திமதி அவர்கள் தந்த முகவரிகளுக்குச் செல்ல நினைத்து ஒவ்வொரு இடமாகத் தொலைபேசியில் தொடர்புகொள்ள முயன்றேன். ஒருவர் அலுவலகம் இல்லையாதலால் பெறவில்லை. மற்றவர் வீட்டு முகவரிக்கே பேசினாலும் யாரும் எடுக்கவில்லை. மற்றொரு எண் சுழற்றினால் எடுத்தனர். ஆயினும் அதே முகவரி, அதே எண் இருந்த போதிலும் நான் கேட்டவர் அங்கே இல்லை என்ற பதிலே வந்தது. மற்றவர்தம் தொலைபேசி எண் இல்லை. அவர்கள் இருக்கும் இடம் பற்றியும் யாரும் தெளிவாகச் சொல்லவில்லை. ஈஸ்டர் நாள் விடுமுறையானதால் அவர்கள் எங்கேனும் வெளியே சென்றிருக்கக்கூடும் என்றனர். என்ன செய்வது எனத் தெரியாது திகைத்து நின்றேன். ஜினிவாவில் யாரும் இல்லை என்ற உணர்வோடு வந்தமையின் கவலை இல்லாதிருந்தேன். இங்கே ஐவர் தமிழர் உளர்;

எனவே அவர்களைக் கண்டு மகிழலாம்; முருகன் பக்த சபையில் பங்கு கொள்ளலாம் என எண்ணி வந்தேன். ஆனால் ஏமாற்றமே மிஞ்சியது. இதுவும் முருகன் அருளே என எண்ணி அமைதியுற்றேன்.

நான் பாரிசில் தங்க ஏற்பாடு செய்த நேரம் பொருத்த மில்லை என உணர்ந்தேன். தொடர்ந்து நான்கு நாட்கள் விடுமுறை; பின்னும் விடுமுறை சில அலுவலகங்களில். விடாத மழை. எல்லா அலுவலகங்களும் பல பெரும் கடை களும் பிற காட்சிச்சாலை முதலியனவும் மூடியே கிடந்தன. தபால் நிலையம் மட்டும் இன்று (சனிக்கிழமை) பகல் 12 வரை வேலை செய்யும் என்றனர். உடனே அத் தபால் நிலையம் சென்று இரு வெளிநாட்டுக் கடிதம் (Air Mail Letter) வாங்கி ஊருக்கும் இலண்டனுக்கும் எழுதி அஞ்சல் பெட்டியில் இட்டேன். தபால் நிலைய அமைப்பு நம் ஊர் நிலையங்களை ஒட்டியதாகவே இருப்பினும் பெட்டிகள் அமைந்த நிலை சற்றே புதியதாக இருந்தது. மறுபடியும் தபால் நிலையத்திலே முன்சொன்ன மூவருக்கும் தொலை பேசியில் தொடர்புகொள்ள முயன்றேன். ஒரு பிராங்கு இட்டால் உள்ளூரில் எங்கும் பேசலாம். நம் ஊரில் உள்ள தானியங்கிப் பெட்டிகளை ஒத்தே இவை இருக்கின்றன. எனவே தொல்லையில்லை. மறுபடியும் யாரையும் காண முடியவில்லையே என்ற சோர்வோடு விடுதி திரும்பினேன். பலப்பல உயர்ந்த கட்டிடங்களைக் கண்டேன். விடுமுறை யானமையின் தெருவுதொறும் கார்கள் இரு பக்கங்களிலும் வரிசையாக நிறுத்தப்பெற்றிருந்தன. ஆயினும் பலப்பல கார்கள் பறந்தவண்ணம் இருந்ததை எண்ணிப் பார்த்தேன். இங்கே கார் அதிகப் புழக்கத்தில் உள்ளமையின் பஸ் போக்குவரத்து அதிகமில்லை. மேலும் மெட்ரோ 'Metro' என்னும் பாதாள ரெயில் ஊரின் பல பாகங்களுக்கும் செல்வ தால் அதில் பலரும் விரைந்து செல்கின்றனர்.

தூறல் இடைவிடாது இருந்தது; செய்வதறியாது திகைத்தேன். மெல்ல விடுதிக்குத் திரும்பினேன். வரும்

வழியில் பிஸ்கட், ஆப்பிள், வாழை முதலியவற்றைப் பகல் உணவுக்கென வாங்கிக் கொண்டேன். மணி 12க்குமேல் ஆகியிருந்தது. தபாலகமும் மூடிவிட்டனர். சற்றே ஓய்வு கொண்டு வாங்கிய உணவினை உண்டு, பக்கத்தில் உள்ள காப்பிக்கடையில் காப்பி சாப்பிட்டுவிட்டு இரண்டு மணி அளவில் வெளியே சுற்றிப் பார்க்கப் புறப்பட்டேன். மழை யும் சற்றே தனிந்திருந்தது.

'METRO' என்னும் பாதாள இரெயில் வழியே பயணம் செய்ய நினைத்தேன். மேலும் நான் கொண்டுவந்த அமெரிக்கன் டாலரில் சிலவற்றை இங்கே செலவுக்காக மாற்ற வேண்டியிருந்தது. விமான நிலையத்தில் மிஞ்சிய 'சுவிஸ்' நோட்டுகளை மாற்றிக் கொண்டேன், இங்கே 'அமெரிக்கன் - தாமஸ் குக்கின்' பயணிகள் காசோலையினை (Travellers' Cheque) தாராளமாக மாற்றலாம் எனப் பலர் சொல்லினர். எனக்கும் உடன் தேவை. எனவே அதை மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. நான் நினைத்தபடி பயணக் காசோலையினை எளிதாக யாரும் வாங்கிக்கொள்ள வில்லை. எனவே அதை மாற்ற நினைத்தேன். இன்று விடுமுறையானதால், 'தாமஸ்குக்' ஒரே இடத்தில்தான் இயங்கும் எனவும் 'அது இது' எனவும் படத்தில் சுட்டிக் காட்டினர். நான் தங்கி இருந்த விடுதியின் தலைவியோ பிற பணியாளர்களோ ஆங்கிலத்தைப் புரிந்துகொள்ள வில்லை. நல்ல வேளையாக விடுதியில் பணிபுரியும் இரு நீக்ரோ பெண்களில் ஒருவர் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசினார். என் வேதனையை உணர்ந்து கொண்டார். அவரே 'மெட்ரோ' வழிபற்றியும் 'குக்' மாற்றும் இடம் பற்றியும் செல்லும் வழிபற்றியும் விளக்கினர். அப்போது சற்று வானம் வெளிவிட்டுக் கதிரவனும் ஒளி வீசினான். அவன் என்மீது இரக்கப்பட்டிருக்க வேண்டும்; இன்றேல் எப்படி வந்திருப்பான்? அவனொளியே கண்ணாக மெட்ரோ நோக்கிச் சென்றேன். இங்கும் பல இடங்களிலும் பாதாள ரெயில்கள் தனியார் நிறுவனங்களாக இயங்குகின்றன

என்றும் அவர்கள் பயணிகளின் நலன்களில் அக்கறை காட்டி எல்லாவகையான வசதிகளையும் செய்கின்றனர் என்றும் கூறினர். நான் இது எப்படி இயலும் என வியந்தேன்

பெரும் கடைகள் உள்ள மிக்க போக்குவரத்துடைய வீதிக்களைக் கடந்தேன். ஓட்டுநர் கார்களை ஒழுங்காக ஓட்டுகின்றமையின் குறித்த இடங்களில் தாண்டுவதில் தொல்லை இல்லை. அப்படியே இடையில் ஓரிருவர் தாண்டினும் ஓட்டுநர் எவ்வளவு வேகமாகச் சென்றாலும் உடனே நிறுத்திச் செல்வதைக் கண்டேன். அவர்கள் செயல் போற்றற்குரியது. மெட்ரோ செல்லும் வழி நம் ஊரில் சாலைகளின் கீழ்ப்பாலம் வழியே செல்ல அமைக்கும் படிகள் போன்றே உள்ளன. நான் அதைப் பொருட்படுத்தாது பக்கத்தில் சென்றவர்களை மெட்ரோ வழி கேட்டேன். அவர்கள் அந்தப்படிகளைக் காட்டினர். அதன் வழியே உள்ளே சென்றபோதுதான் அந்த இரெயில் அமைப்பின் சிறப்பினை எல்லாம் கண்டேன். ஒரு பெரிய ரெயில் நிலையத்தைக்காட்டிலும் மிகப் பெரியதாக உள்ள நிலையும், அங்கே டிக்கெட் தருமிடம் பிளாட்பாரத்துக்குச் செல்லும் நெறிகள், பிற ஏற்பாடுகள் யாவும் வியக்கத்தக்கனவாக உள்ளன. டிக்கெட்டில் ஊர்ப்பெயர் எதுவும் இல்லை. இரு குறியீடுகள் உள்ளன. அதைக்கொண்டு எங்கும் செல்லலாம் போலும். நான் சென்ற நிலையம் (Saint Placide) செயிண்ட் பிளாசையிட் என்பதாகும். அங்கிருந்து மற்றொரு பெரிய சந்திப்பு நிலையத்துக்குச் செல்ல வேண்டும். நான் பார்த்த சிறு நிலையமே இப்படி வியத்தகு நிலையில் இருப்பின் பெரும் சந்திப்பு நிலையம் எப்படி இருக்குமோ என்ற எண்ணத்தில் வண்டியில் ஏறினேன். இரண்டு மூன்று நிமிடங்களுக்கு ஒருமுறை (இன்று விடுமுறையாயினும்) வண்டிகள் செல்லுகின்றன, பிளாட்பாரத்தில் பயணிகள் உட்கார வேண்டுவதில்லை. எனினும் அவர்கள் உட்கார அழகிய பிளாஸ்டிக் நாற்காலிகள் வரிசையாக நிலைபெற வைக்கப்பெற்றுள்ளன. இடங்கள்

தூய்மையாக உள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் வண்டியி லிருந்து இறங்கும் இடத்துக்கு நேராக (சுமார் 10 (அ) 12 இடங்களில்) அந்த நிலையத்தின் பெயர் பொறிக்கப் பெற்றுள்ளது. 'எடுத்தது கண்டனர் இற்றது கேட்டார்' என்ற தமிழ் இலக்கியபடி வண்டி நின்றது தெரியும்; சென்றது எப்போது என்ற ஐயம் எழுகின்றது. அத்துணை விரைவு.

நான் செல்ல வேண்டிய இடம் 12 நிலையங்கள் தாண்டி உள்ளது. ஒவ்வொரு பெட்டியில் நான்கு ஐந்து வாயில்கள்; அவை நின்றதும் தாமாகத் திறந்தும் முடியும் இயங்குவன. ஒவ்வொரு வாயின் மேலும் அந்த வண்டி புறப்படும் இடமும் சேரும் இடமும் குறித்திருப்பதோடு வரிசையாக ஒவ்வொரு நிலையத்தின் பெயரும் பொறிக்கப்பெற்றிருந்தது. எனவே யாரையும் கேட்காமலே நாம் இறங்கும் இடத்தினைச் சுலப மாகக் கண்டு இறங்க முடியும்; இறங்கும் துறைக்கு நேரே பெரிய எழுத்தில் அந்த இடத்தின் பெயரும் குறிக்கப் பெற்றுள்ளது. எனவே இடையில் இருந்த நிலையங்கள் ஒவ்வொன்றினையும் எண்ணிக் கொண்டே சென்றேன். வண்டியில் விடுமுறையானதால் அதிகக் கூட்டம் இல்லை; வேலை நாட்களில் கூட்டம் நிரம்பிவழியும் என்றனர். நான் நாளை என்ன செய்யவேண்டும்? இப்படி அறிந்தவரி ஒருவரையும் காணமுடியாத நிலையில் இங்கே ஏன் தங்க வேண்டும் என்ற நினைவோடு நான் செல்கையில், பக்கத்தில் ஒருவர் 'நீங்க தமிழரா' என்று தமிழில் கேட்டார். நான் வியந்து திரும்பி 'ஆம்' என்றேன். அவர் இலங்கை யாழ்ப் பாணத்தவர் என்றும், பெயர் 'சுதா' என்றும் கூறி, அவர் போன்ற இலங்கை அன்பர் பலர் உள்ளமை குறித்தார். தற்போதைய அந் நாட்டுக் கலவரத்தால் சுமார் எண்ணூறு (800) பேர் பாரிசில் வந்து தங்கியுள்ளனர் என்றும் சொன்னார். பிறகு என்னைப் பற்றி நன்கு கேட்டு, தாமும் நான் இறங்கும் அதே இடத்தில் இறங்குவதாகவும் உடன் வந்து உதவுவதாகக் கூறினர். அதற்குள் நான் இறங்க வேண்டிய இடம் வந்தது. அவருடன் இறங்கினேன். அது ஒரு

பெரிய சந்திப்பு நிலையம். அனைத்தையும் சுற்றிக்காட்டி, பின் மேல் பக்கத்துக்கு அழைத்து வந்தார். மேலேயும் அது ஒரு பெரிய ரயில் நிலையம். அங்கிருந்து பல ஊர்களுக்கு எப்போதும் ரெயில்கள் புறப்படுகின்றன, அதுதான் பெரிய நிலையம் போலும்; மிக நீண்டு பரந்து காணப்பட்டது. அவர் எல்லாவற்றையும் விளக்கிக் கொண்டே 'தாமஸ் குக்' அலுவலகம் அழைத்துச் சென்றார். நல்ல வேளை அது திறந்திருந்தது. எனினும் நீண்ட 'கியூ' வரிசை யிருந்தது. நான் என் பணத்தை மாற்றக் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஆகும் என்றார். அவர் தங்கும் அறை பக்கத்தில் தான் உள்ளதெனவும் கூறி, அவர் தொலைபேசி எண் தந்து, என் முகவரியினையும் பெற்றுக்கொண்டு, பணம் மாற்றிய பின், பக்கத்தில் உள்ள தொலைபேசி வழி தேவையாயின் தன்னைக் கூப்பிடச் சொன்னார். அவர் சென்ற பின் சுமார் 1 மணி 15 நிமிடங் கழித்து நான் எனக்குரிய மாற்றுத் தொகை பெற்று வெளி வந்தேன். பின் அவருக்குத் தொல்லை தர வேண்டாம் என்று, திரும்ப 'மெட்ரோ' பகுதிக்கு உள் சென்றேன். அது பெரிய சந்திப்பு ஆதலால் நான் திரும்ப வேண்டிய வண்டியை எளிதில் கண்டுபிடிக்க இயலவில்லை. (இங்கேயும் இரெயில், கார் எல்லாப் போக்குவரத்துமே வலப்பக்க மரபினையே - Kept to the right - கொண்டுள்ளன). நான் செல்லும் நெறி பற்றிப் பலரிடம் கேட்டேன். நிறுவனத்தார் பாதைகள் பற்றிப் பல வகைகளில் படங்களை அச்சிட்டுள்ளனர். பெரிய படங்கள் ஆங்காங்கே - நிலையத்தில் வழியாய் - பிளாட்பாரத்தில் - இரெயிலில் - ஒட்டப்பெற்றுள்ளன. கையடக்கமாக நாட் குறிப்பில் கொள்ளவும் சிறு படிகள் உள்ளன. எனக்கு உதவ நினைத்த பலர் அத்தகைய படங்களைப் பார்த்தே நான் செல்லவேண்டிய திசை, வண்டி, பிளாட்பாரம் ஆகிய வற்றைச் சுட்டினர். அடிக்கடி செல்பவர்களும் திசை மாறாதிருக்க அத்தகைய படங்களை வாங்கி வைத்துக் கொண்டு தேவையானபோது பார்த்துக் கொள்ளுகின்றனர். எப்படியோ பலர் உதவியால் நான் திரும்பவேண்டிய

இரெயில் நிற்கும் பிளாட்பாரத்துக்கு வந்து, உரிய இரெயில் ஏறி, செயிண்ட் பிளாசையிட் (St. placide) வந்து சேர்ந்தேன்; வெளி வந்தேன்.

மாலை 6 மணி இருக்கும்; சோர்வாய் இருந்தமையால் டீ அல்லது காப்பி அருந்தலாம் என நினைத்தேன். வெளியில் எங்கும் (விடுமுறையானதால்) கடை இல்லையாதலால் ஒரு ஓட்டல் உள் புகுந்தேன். அங்கே பல மது வகைகள் பரிமாறப்பெற்றன. ஆண்களும் பெண்களும் கலந்து அவற்றை குடித்து மகிழ்கின்றனர். ஆண்களும் பெண்களும் பழகும் முறையும், ஒருவரை ஒருவர் காணும்போது - பெரிய வர்கள்கூட - முத்தம் அளிக்கும் முறையும் நமக்கு விரசமாகத் தோன்றினும் அவர்களுக்கு அது பழக்கம் போலும். உண்ணும் பருகும் இடத்தும் அப்படியே. நான் ஓரமாக உட்கார்ந்து காப்பி கேட்டேன். 'சர்வருக்கு' வியப்பாக இருந்தது. பிறகு கொண்டு வந்து கொடுத்தான். பால் இல்லை; கரிய காப்பி - சர்க்கரைக்கட்டிகள் 2. அதை அருந்தினேன். காப்பி நல்ல காப்பிதான். ஆனால் பில் 9.20 பிராங் என்று இருந்தது. (ரூபாய் 13/-) இதில்-8 விலை, 1.20 வரி. உடன் தொகையினைக் கொடுத்து வெளி வந்தேன். மழையின்றி வானம் வெளுத்திருந்தமையின் சற்றே சுற்றிப் பார்க்க நினைத்தேன். எனினும் நெடுந் தூரம் சென்றால் வழி தவறுமோ என்ற அச்சமும் ஒரு புறம். எனவே பக்கத்திலே சில சில சாலைகளைக் கடந்து பார்த்து விட்டு விடுதிக்குத் திரும்பினேன்.

நாளை என்ன செய்வது என யோசித்துக் கொண்டே இருந்தேன். ஞாயிறு ஆனதால் எல்லாக் கடைகளுமே - இன்று திறந்திருக்கும் சில உட்பட - மூடி இருக்கும் என்றனர். நாளை வெய்யில் இருந்தால் வெளியே சில இடங்களுக்குச் செல்லலாமே என நினைத்தேன். ஏர் பிரான்சு (Air France) சென்று என் உரோம் பயணத்தை உறுதி செய்ய வேண்டி யிருந்தது. என்ன செய்வது என்று எண்ணிக்கொண்டு, விடுதி முக்பில் உட்கார்ந்து இருந்தபோது, இந்த விடுதியில்

தங்கியிருக்கும் எகிப்து நாட்டு நண்பர் ஒருவர் வந்தார். அவர் ஆங்கிலம் நன்கு பேசினார். அவரிடம் என் அவல நிலையை விளக்கினேன். தானே நாளை உதவுவதாகக் கூறினார். அவர் பெயர் மகமது என்றும், தன் மகள் வைத்தியத்துக்காக வந்துள்ளார் என்றும், மகள் மருத்துவமனையில் உள்ளார் என்றும் கூறினார். அவருக்கு நன்றி கூறினேன். நாளை அவர் துணையால் பல இடங்களைக் காணலாம் என முடிவு செய்தேன். பிறகு வாங்கி வந்த பழம், ரொட்டி முதலியனவற்றை உண்டு உலவினேன். இரவு 8.30 வரை சூரியன் ஒளி வீசியது. நாளை எப்படி இருக்குமோ. என்ற எண்ணத்துடன் நான் இறைவனை வணங்கி இரவு 10 மணி அளவில் படுக்கச்சென்றேன். இன்னும் இரண்டு நாட்கள் - முற்றும் பாரிசில் விடுமுறை. மழையும் இருக்கும் என்றனர். எனவே எதைக் காண்பது என்ற வினாவோடு என்னை மறந்து உறங்கினேன். காலை 5மணிக்கு கண்விழித்தேன்.

பாரிஸ் 7-4-85

இன்று காலையிலே வானம் கனத்து மழை பொழியத் தொடங்கி விட்டது. குளிரும் இருந்தது. எனவே எங்கே வெளியே செல்வது என்பதே புரியவில்லை. இன்றும் நாளையும் விடுமுறையானதால் எந்த அலுவலகத்தையும் காண முடியாது. எனினும் இன்று ஞாயிறு ஆனதால் வழிபடும் இடம் ஒன்றைக் காண நினைத்தேன். நான் தங்கிய இடத்துக்குச் சற்றே தொலைவிலுள்ள ஒரு பெரிய மாதா கோவிலுக்குச் (கத்தோலிகர் வழிபாட்டிடம்) செல்ல நினைத்தேன். நேற்று பழகிய எகிப்திய நண்பர் உடன் வந்து உதவினார். இருவரும் மழையில் நனைந்தே சென்றோம். இன்றும் 'மெட்ரோ' என்னும் பாதாள இரெயில் வழியே சென்றோம். முழு விடுமுறையானதால் கூட்டமே இல்லை. ஒரு சந்திப்பில் இடம் மாற வேண்டியிருந்தது. எனவே இறங்கிப் படிகள் ஏறி மறு இடம் சென்றோம். நோயாளிகளோ கை காலற்ற ஊனமுற்றவர்களோ இவற்றிலெல்லாம் எப்படி வாழ முடியும் என்றது என் மனம். சிலரிடம் அதுபற்றிக் கேட்டேன். சிறு வண்டிகளோ வேறு சாதனங்களோ இல்லாத நிலையில் வருவது கடினமே. ஆளே தூக்கிவரின் ஒழிய வழி இல்லை என்றனர். 'நோயாளிகளுக்காகக் கிறித்துவை' வழிபடுகின்ற நாட்டிலே இந்த அவலநிலையா என எண்ணிற்று என் மனம். வண்டியில் ஏற இறங்கவும் ஒரு (செகண்டு) நொடி கூடத் தாமதிக்க முடியாது. விரைந்து பறக்கும் இந்தப் பாரிஸ் மக்களுக்கு ஏற்ற ஒன்றே இந்தப் பாதாள இரெயில் என்ற நினைவோடு சென்றேன்.

'மேலைநாடுகளில் பிச்சைக்காரர்களே இல்லை; இந்தியாவில் அதிலும் தமிழ்நாட்டில் எங்கும் பிச்சைக்காரர் தொல்லை' எனப் பலர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் இங்கே நான் கண்ட காட்சி அவர்கள் அறியாது கூறிய கூற்றை மறுத்தது. வழி நெடுக இல்லையானாலும் ஆங்காங்கே இரண்டொருவரைக் காணமுடிந்தது. (நேற்று ஜினிவாவிலும் அப்படியே) மெட்ரோ செல்லும் உள்வழியில் ஒரு குருடன் துணியை முன் விரித்துப் பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். 5 முதல் 50 வரை பல காசுகள் அத்துணியில் இருந்தன. நம் தெருக்களில் கோலம் இட்டோ, கடவுள் உருவம் எழுதியோ பிச்சை எடுப்பது போல இங்கேயும் சிலர் வழி ஓரத்தில் - நடைபாதையில் கோலங்கள் பொம்மைகள் போட்டு, பக்கத்தில் இருந்து பிச்சை எடுப்பதைப் பார்க்க முடிந்தது. அளவில் குறைந்த தாயினும் பிச்சைக்காரர் அடியோடு இல்லையென்று சொல்ல முடியாது. ஆனாலும் தெரு ஓரத்தில் நம் ஊர்களில் காணுவது போன்ற நடைபாதைக் கடைகளோ அவர் களுக்குக் காப்பளிக்க நினைக்கும் மன்றங்களோ அரசோ இல்லை என்பது மகிழ்ச்சிக்குரியது. அது மட்டுமின்றி எங்கும் குடிசைகளோ குடிசைப்பகுதிகளோ (Slums) கிடையாது. எனவே குடிசை மாற்று வாரியமும் இல்லை. நம் நாட்டுக்கு வரும் பிறநாட்டவர் தெருவுதொறும் - இரெயில்பாதை இரு புறங்களிலும் பெருங்கல்விச்சாலை, மருந்தகங்கள் ஓரங்களிலும் நடுத்தெருக்களிலும் உள்ள குடிசைகளைக் காண்கின்றனர். அங்கே குடிசைகள் அமைத்து, ஆளும் கட்சியின் தலைவர்களின் பெயர்களையும் சூட்டி, தமக்கு விளக்கு, குழாய் முதலியனவும் அரசாங்கத் தாலே தரப்பெற்று வாழும் பெருமக்களை இங்கு காண முடியவில்லை. அதற்கென ஊர்ப்புறங்களிலும் சென்று கண்டேன். வறியராயினும் எளியவகையில் வரையறுத்த வீடுகளில் வாழ்வார்கள் போலும்.

மெட்ரோவை விட்டு எங்கோ சென்று விட்டேன். மெட்ரோ இரெயிலில் சென்று இறங்கிய நாங்கள் நேரே

அந்தப் பெருங்கோயிலுக்குள் சென்றோம். மணி பதினொன்று. வழிபாடு முடியும் வேளை; எனினும் பலர் விரைந்து வந்து புகுந்து கொண்டிருந்தனர். உள்ளே மேடையில் ஒளி விளக்கு மிளிர்ந்தது. ஞானாசிரியர் வேதங்கள் ஓதினார். மக்கள் வழிபாடும் முடியும் நிலை; சிறிதுதான் நின்றோம். அப்போது என் இளமைப்பருவத்தில் நான் செங்கற்பட்டிலும் காஞ்சிபுரத்திலும் கிறித்தவர் கோயிலுக்குள் சென்று வழிபாடாற்றிய நிலை யாவும் நினைவுக்கு வந்தன; தம்மை ஒறுத்து உலகுக்கு ஈந்த தலைவனின் சமயத்தில் இன்று என்னென்ன வகையில் இன்னல் புகுந்தன என்பதையும் என் உள்ளம் எண்ணிற்று. வெறும் சின்னமாகச் சிலுவையினை அணிந்து ஏசுவை ஏட்டிலே வைத்து வழிபடும் நிலையினை எண்ணினேன். அப்போதுதான் ஆங்கில அறிஞர் பெர்னாட்சா சொன்ன சொல் என் நினைவுக்கு வந்தது, 'உலகில் ஒரே கிறித்தவன் தான் இருந்தான்; அவன் சிலுவையில் மாண்டான்' (There was only one christian who died on the cross) என்றனர். ஆம்! இந்த உண்மை இன்று எல்லா சமயங்களுக்கும் பொதுவாக அமையும் நிலையினை எண்ணினேன். மறுபடியும் திசை திரும்பினேன்.

நாங்கள் சென்ற சில நிமிடங்களில் வழிபாடு முடிந்து அனைவரும் வரிசை வரிசையாக வெளி வந்தனர். முதியரும் இளையரும் - வறியரும் செல்வரும் பலப்பல வகையினர் வந்து கொண்டேயிருந்தனர். கூட்டம் ஐயாயிரத்துக்கு (5,000) மேலும் இருக்கும். எனினும் பலரும் வெளிவரும் போது ஏதேதோ சமயத்துக்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்தனர். ஒரே ஆரவாரம்; விரைந்து சென்றோர் பலர். மழையாக உள்ளமையின் தளர்ந்து நின்றோர் சிலர். எனினும் யாரும் இயேசுவின் தியாகத்தையும் - ஈஸ்டர் சண்டே என்ற நினைவையும் கொண்டவராக இல்லை. மேலும் பலரும் பகட்டான வண்ண உடைகளை அணிந்து கொண்டிருந்தனர். அவர்களைக் கண்டதும் எனக்கு நம் நாட்டுக் கவிஞர் அமரர் பாரதிதாசனின் பாடல்

நினைவுக்கு வந்தது. நகையும் பட்டாடையும் இல்லாது கோவில் வர வேண்டுமென்று பாதிரி சொல்ல, யாரும் கோயிலுக்கு வரவில்லை. அறிந்த பாதிரி பின் எல்லா உறுப்புக்களிலும் நகையணிந்து பட்டுடை உடுத்து வரலாம் என்று கூற ஆயிரக் கணக்கில் நகையணிந்தார் பகட்டாக வந்தார்கள் எனவும் இயேசுநாதர் மட்டும் அங்கு வரவில்லை என்று பாடிய பாடல் நினைவு வந்தது.

'தலை காது மூக்குகை கழுத்து மார்பிடுப்புடன்
தாள் என்ற எட்டுறுப்பும்,
தங்கநகை வைரநகை ரத்னம் இழைத்த நகை
தையலர்கள் அணியாமலும்
விலைகுறையும் ஆடைகள் அணிந்துமே கோயில்வா
வேண்டுமென்றே பாதிரி
விடுத்த ஒரு சேதியால் விடமென்று கோயிலை வெறுத்
தார்கள் பெண்கள் புருடர்;
நிலைகண்ட பாதிரி பின் எட்டுறுப்பே அன்றி
நீள் இமைகள் உதடு நாக்கு
நிறையநகை போடலாம் கோயிலில் முகம்பார்க்க
நிலைக் கண்ணாடியும் உண்டென
இலை போட்டழைத்ததும் நகை போட்ட பத்தர்கள்
எல்லாரும் வந்து சேர்ந்தார்
ஏசுநாதர் மட்டுமே அங்குவர வில்லையே

இனிய பாரத தேசமே' என்பது அவர் எழுத்து.

இவ்வாறெல்லாம் எண்ணி நின்ற நான் அவர்கள் ஆரவாரத்தைக் கண்டு மலைத்தேன். பிறகு அந்த இடத்தினை விட்டு 'Air France' அலுவலகம் செல்லப் புறப்பட்டோம். எனினும் பெருமழை காரணத்தால் வெளியே செல்ல முடியாது விரைந்து விடுதி வந்து சேர்ந்தோம். வாங்கி வைத்திருந்த பழம், ரொட்டி இவைகளை உண்டேன். காலை உணவுக்குப் பிறகு விடுதியில் ஒன்றும் விலைக்குக்கூடத் தருவதில்லை. இன்றும் நாளையும் விடுமுறையாதலால் வெளியில் காப்பி முதலிய பானங்

களைக்கூட வாங்க முடியாது என்றனர். என்போன்று வெளிநாட்டிலிருந்து வருவோர் எவ்வாறு வருந்துவர் என நினைத்தேன். நல்லவேளை நான் தங்கியிருந்த விடுதியின் பக்கத்தில் ஒரு சிறு கடை திறந்திருந்தது. அங்கே வாழைப் பழம், ஆப்பிள், பிஸ்கட் முதலியன வாங்கி வந்தேன். அங்கே நம் ஊர் வேர்க்கடலையும் இருந்தது. விலை கிலோ 18 பிராங் (சுமார் 25 ரூபாய்) என்றனர். நான் அதை வாங்க வில்லை. அதனால் உடலுக்கு வேறு ஊறு நேருமோ என அஞ்சினேன்.

உணவு கொண்டபிறகு மறுபடியும் வெளியே செல்ல முயன்றேன். எனினும் மழைவிடாது தொடர்ந்தது. ஆகவே வெளியே செல்ல இயலவில்லை. விடுதியிலேயே இருந்து கொண்டு, வந்த பல நாட்டு மக்களுடன் பேசிக் கொண் டிருந்தேன். ஆப்பிரிக்கா நாடுகளிலிருந்தும் வடக்கே சுவீடன், நார்வே முதலிய இடங்களிலிருந்தும் வந்தவர் பலர். ஆயினும் பலருக்கு ஆங்கிலமே தெரியவில்லை. பிரஞ்சு அனைவரும் நன்கு பேசினர். ஓர் ஆப்பிரிக்க மாது தனியாக வந்தார். அவருக்கு ஆங்கிலம் பிரஞ்சு இரண்டும் தெரிய வில்லை. எப்படியோ தனியாக ஏதோ ஒரு பணியாக வந்த தாகக் குறிப்பாக அறிந்தேன். அவர் தனியாக இப்படி வந்தமையைப் பாராட்டினேன். நான் இத்துணை தூரம் தனியாக வருவது பற்றி அஞ்சியது உண்டு;- அன்பர் பலரும் உடன் யாரையாவது அழைத்துச் செல்ல வேண்டும் எனக் கூறியதும் உண்டு. எனினும் இந்த அம்மையாரைக் கண்ட வுடன் நான் வந்தது ஒன்றும் தவறு இல்லைஎன அறிந்தேன். இவ்வாறு பல நாட்டு மகளிர் பணி பொருட்டும் பிற வகை யிலும் பாரிஸ் முதலிய நகரங்களுக்கு வருகின்றனர் என அறிந்தேன்.

மாலை சற்றே எங்கேனும் சூடான பானம் ஏதேனும் கிடைக்குமா என எங்கும் தேடினேன். எல்லாக் கடைகளும் மூடி இருந்தமையின் ஒன்றும் கிடைக்கவில்லை. அப்போது தான் நினைத்தேன், மெய்கண்டான் வாங்கி வந்த

'குளுகோஸ்' எடுத்து வந்திருந்தால் வெந்நீரில் இட்டாயினும் உண்டிருக்கலாமே என்று. எதையும் வாங்க வழி இல்லை. வைத்திருந்த ஆப்பிள், பிஸ்கட், வாழைப்பழம் முதலிய வற்றை உண்டு இரண்டு குவளை வெந்நீர் குடித்து முடித்தேன். ஓய்வு அதிகமாக இருந்ததால் இந்த நாட் குறிப்பினை அதிகமாக எழுதி முடித்தேன். பின் 9.30 க்கு முறையாக இறைவனைத்தொழுது உறங்கத் தொடங் கினேன். நல்ல உறக்கம். விடியல் இயல்பாக ஐந்து மணிக்கே கண் விழித்தேன்.

* இந்த நிலைதான் எங்கும் இருக்குமோ என அஞ்சினேன், எனவே விரைவில் ஊர் திரும்ப நினைத்து, அப்படியே ஊருக்கும் கடிதம் எழுதினேன். ஆயினும் இந்த ஊரை விட்டு (பாரிசை விட்டு) புறப்பட்டபின் இத்தாலிய ரோம் நகரம் தொடங்கி கடைசியாக நின்ற சிங்கப்பூர் வரையிலும் எல்லா விடங்களிலும் நான் எதிர்பாராத விதத்தில் பல அன்பர்கள் தாமேவந்து உதவி எல்லாவிதத்திலும் துணையாக இருந்தனர். அவற்றின் நிலைகளையெல்லாம் ஆங்காங்கே காணலாம்.

பாரிஸ் 8-4-85

பொழுது விடிந்தது. ஆயினும் 'பொற்கோழி கூவ வில்லை'. லாரிகளின் பேரொலியும் இல்லை; வேறு ஆர வாரமும் இல்லை. அமைதியே எங்கும். அதிலும் ஈஸ்டர் திங்களாதலால் கடைகள், அலுவலகங்கள், கல்வி நிலையங் கள் அனைத்துமே மூடிக்கிடந்தன. தெருக்களெல்லாம் - எங்கோ இரண்டொரு காரோட்டமே தவிர்த்து, வேறு ஊர்தி ஓட்டமில்லை. இங்கேயும் கார் அதிகமாக உள்ளமை யின், பிற வண்டிகள் கிடையா. பஸ் அருகி ஓடுகிறது.

இன்று கதிரவன் கடைக்கண் திறந்தான். காலைப் பொழுதே இளஞாயிற்றின் தோற்றத்தால் நகரை பொன் னெனக் கர்ட்டிற்று. காலையில் என் எகிப்திய நண்பர் என்னைப் பல இடங்களுக்கு அழைத்துச் செல்வதாகச் சொன்னார். அவர் மகள் - சிறு பெண் மருத்துவ விடுதியில் சேர்க்கப் பெற்றிருப்பதைக்கூடப் பொருட்படுத்தவில்லை. காலைச் சிற்றுண்டிக்குப்பின் (அவர் சிற்றுண்டியும் கொள்ள வில்லை) வலிய வந்து அழைத்தார்; புறப்பட்டோம். முதலில் நான் விரும்பியபடி அவர் மகள் இருந்த மருத்துவ விடுதிக்குச் சென்றோம். மிகப் பெரிய கட்டடம்; ஒரே முகப்பு வாயில்; வாயிலிலே வழிவிட மறுக்கும் மலை போன்ற தடைகள் இல்லை. உள்ளே சென்றோம். யாண்டும் அமைதி; நோயாளிகள் மிக அமைதியான பகுதியிலே வைத்துப் பாதுகாக்கப் பெறுகின்றனர். வேளைக்கு ஒரு நண்பரோ - நாளைக்கு ஒரு உறவினரோ சென்று அமைதியைக் குலைத்த

முடியாது. அங்கே பணியாற்றுகின்றவர்களும் மிக அமைதியாகப் பணிபுரிகின்றனர். உள்ளே மிக எளிமையாக யாராலும் செல்ல முடியாது. நானும் ஓரளவுதான் செல்ல முடிந்தது. அங்கிருந்த அமைதி என்னைக் கவர்ந்தது. மருந்து, பிற சிகிச்சைகளைக் காட்டிலும் அமைதியும் சூழ் நிலையும் பல நோய்களை நீக்கும் என்று நம்நாட்டு மருத்துவ அறிஞர் காலஞ்சென்ற குருசாமி முதலியார் அடிக்கடி சொல்லுவார். அப்படியே அவரிடம் வரும் பல நோயாளிகளை, அப்போதே திருக்கழுக்குன்றம் முதலிய அமைதியான இடங்களுக்குச் சென்று சில நாள் தங்கி வருமாறு சொல்லுவார். அவர் சொல்லின்படி அப்படிச் சென்றவர்கள் அவர் குறித்த நாள் எல்லைக் கடந்து வந்து, தாம் நோய் நீக்கம் பெற்றமையை அவரிடம் கூறிச் சென்றமையை நானே நேரில் கண்டிருக்கிறேன். இங்கே அந்த அமைதியினை - ஆரவாரப் பெருநகருக்கு இடையில் அமைத்து மருத்துவம் நடத்துவதைக் காண மகிழ்ந்தேன். அதே வேளையில் பேராரவாரத்துக் கிடையில் அமைந்த சென்னையின் மருத்துவமனைகளை நினைந்தேன். இம்மருத்துவமனையில் பலவகை நோய்களையும் போக்குகிறார்களென்றும் வெளி நாட்டிலிருந்தும் பலர் இங்கே மருத்துவத்துக்காக வருகிறார்கள் என்றும் அறிந்தேன். என் எகிப்திய நண்பரும் அதே நிலையில் தன் மகளின் மருத்துவத்தின் பொருட்டே இங்கே வந்து தங்கியிருக்கிறார்.

மருத்துவமனையை விடுத்து வெளிவந்து சுற்றுலாத் துறைக்குச் செல்ல நினைத்தோம். நல்ல கதிரொளி அமைந்தமையின் சுற்றுலா சிறப்பாக அமையும் என நினைத்தோம். ஆயினும் சுற்றுலாத்துறையும் விடுமுறையில் உள்ளதாகவும் புதிதாக எங்கும் செல்ல இயலாதெனவும் கூறினர். எனவே மூடியிருந்த கடைகளின் கண்ணாடிக் கதவுகள் வழியே பல தெருக்களில், பல பொருள்களின் விலை, தரம் முதலியன கண்டு கொண்டே மறுபடியும் பன்னிரண்டு மணி அளவில் விடுதிக்குத் திரும்பினோம்.

இன்று காலை மறுபடியும் திருமதி காந்திமதி அம்மையார் தந்த எல்லா முகவரிக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். எனினும் பயனில்லை. பாரிசுக் காரர் தொலைபேசியினை அப் பக்கம் யாரும் தொடவில்லை. மற்றைய நம் தமிழ்நாட்டவர் நிலையும் அதுவே. திரு. கிருஷ்ணன் என்பவர் முகவரியில் யாரோ வேற்று மொழி யாளர் எடுத்து, அவர் ஒரு மாதத்துக்கு முன் வேறிடம் சென்றதாகக் கூறினார். அவருக்கும் அந்த புது இடத்துத் தொலைபேசி எண் தெரியவில்லை. மற்ற இரு நண்பர்களுக் குத் தொலைபேசியில்லை. எனவே நான் சென்னை யிலிருந்து எதிர்பார்த்துக் கடிதம் எழுதிய ஏழு அன்பரில் ஒரு வரைக்கூடக் காண முடியவில்லை. இதுவும் கடவுள் எண்ணம் போலும். அதே வேளையில் முதல் நாள் மெட்ரோ இரெயிலில் கண்ட யாழ்ப்பாண அன்பர் 'சுதா' அவர் களுடன் அவர் தந்த தொலைபேசியில் முயன்றேன். மறு பக்கத்திலிருந்து அவர் வேறு ஒரு எண்ணில் இருப்பதாகக் கூறி அந்த எண்ணையும் தந்தனர். உடனே நான் அந்த எண்ணொடு தொடர்பு கொண்டேன். அவர் நேற்றே சொல்லி இருந்தால் வந்து உதவியிருப்பேனே என்றார். மழையின் காரணமாகச் சொல்லவில்லை என்றேன். இன்று பகல் 3 மணி அளவில் வந்து பல இடங்களுக்குச் செல்லலாம் என்றார்.

இடையில் பலபல கடைத்தெருக்களைக் கண்டதாகக் கூறினேன் அல்லவா! கடைகளெல்லாம் அடைத்திருந்தன. எனினும் அவற்றின் தெருப்பக்கம் அனைத்தும் திண்ணிய கண்ணாடிச் சுவர்களால் ஆயவை. எனவே எல்லாப் பொருள் களையும் காண முடிந்தது. ஒவ்வொன்றிலும் அதனதன் விலையினையும் குறித்திருந்தார்கள். கம்பியூட்டர் தொடங்கி காலணி வரையில் எத்தனை வகைகள் - எத்தனை விலைகள் - எத்தனை அமைப்புகள் - இவை பற்றி எண்ணிக் கொண்டே பல கடைத்தெருக்களைக் கண்டேன். காலணி (பூட்சு) 500 பிராங்கு முதல் 1100 பிராங்கு வரையில்

உள்ளது. (அதாவது 750 ரூபாய் முதல் 1600 வரை) பார்வைக்கு ஒரே வகையில் இருந்தாலும் அவற்றின் தோல், ரெக்சைன், பிளாஸ்டிக் முதலியவற்றின் தரம் தன்மை முதலியனவும் செய்தொழில் அமைப்பு முதலியனவும் இடத்துக்கு இடம் மாறும் போலும். ஒரே பொருள் பெரிய மாளிகைக் கடைகளில் 2000 ரூபாய் என்றால் சாதாரணக் கடைகளில் 1000க்குக் கிடைக்கும். கம்பியூட்டர் 3000 பிராங்கு முதல் 30,000 பிராங்கு வரையில் பலவகையில் வைக்கப் பெற்றிருந்தன. உடைவகையிலும் காலணி போன்றவற்றிலும் எண்ணற்ற வகைகள் - எட்டிப்பிடிக்க முடியாத விலைகள். சாதாரண கோட்டும் சூட்டும் 1000 முதல் 3000 வரையில். இப்படியே ஒவ்வொரு பொருளும் விற்கும் இடம், தன்மை, அமைப்பு, செய்திறன் முதலிய வற்றால் பல வகைகளில் மாறுபடக் கண்டேன்.

இங்குள்ள விடுதிகளைப் பற்றியும் சில எழுத வேண்டும். ஒரு நாளைக்கு 50 பிராங்கு முதல் 2000 பிராங்கு வரை வாங்கும் விடுதிகள் பல உள்ளன. பெரியவை கேளிக்கை களும் பிற சிறப்புகளும் உடையன. அறைகள் மிகச் சிறந்த முறையில் மணவறைகள் போல உள்ளன. ஒரு விடுதியில் உள்ளே சென்று பார்த்தேன். பல வண்ணப்படங்கள், டி.வி., தொலைபேசி, இதுபோன்ற இன்னும் சில நவீனக் கருவிகள், மெல்லிசை ஒலிக்கும் குழாய்கள், அழகான குளியல் அறை (பலர் சில நாட்கள் குளிக்கவே மாட்டார்கள் போலும்) முதலிய உடைய அறை. வெளியே கார் விட வசதி, தோட்டம், பொழுதுபோக்கு அறை இன்ன பிற ஏற்பாடுகள். சென்னையில் உள்ள சில ஓட்டல்கள் போன்று இங்கேயும் காதலர்கள் தங்கி மகிழ்ந்து செல்லுவர். மிக அதிகமாக அத் தகைய கூட்டம்தான் வரும் என்கின்றனர்.

இவையன்றி நடுத்தர விடுதிகளும் உள்ளன. நாளைக்கு 400, 500 வரை எல்லையிட்டு அதற்கேற்ற வசதிகள் செய்து தரப் பெற்றுள்ளன. அதற்கடுத்து 200, 300க்கும் பிறகு 100-150க்கும், அதற்குப்பின் 70, 80ம் கடைசியாக 50,

40க்கும் பல வகையில் விடுதிகள் உள்ளன. அனைத்தும் அரசாங்க இசைவு பெற்றே நடக்கின்றன. நான் தங்கிய விடுதியில் 100 பிராங்கு வீதம் பெறுகின்றனர். எனினும் குளிப்பதற்குத் தனியாக 15 பிராங்கு, பிறவற்றிற்குத் தனித் தனி என்று 125 முதல் 150 வரை செல்லும். குளியலோ வேறு தேவையோ இல்லாதவர்கள் நூறோடு நிற்கலாம். எல்லா விடுதிகளிலும் காலைச் சிற்றுண்டி (Breakfast) இலவசமாக வழங்குகின்றனர். அதன் தரமும் அவ்வவ்விடுதியின் மதிப்பினை ஒட்டி உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கும்.

கட்டடங்களும் பலவகையில் உள்ளன. 100 அடுக்குக்கு மேற்பட்ட சில கட்டடங்கள் உள்ளன. பெரும்பாலும் ஐந்து முதல் எட்டு, ஒன்பது அடுக்குகள் கொண்டவை. இரண்டு மூன்று அடுக்குகள் கொண்டவையும் உள்ளன. யாவும் மூகப்புப்பொலிவுடன் உள்ளன. சில மாளிகைகளின் கதவுகள் பழைய பெரிய அரண்மனைக் கதவுகளை ஒத்துள்ளன. மாளிகைகளுக்கும் சாலைக்கு மிடையே அகன்ற நடைபாதைகள் உள்ளன. அவற்றில் யாரும் கடை முதலியன வைக்கவில்லை யாதலால் எல்லோரும் தாராளமாக நடந்து செல்ல வாய்ப்பு உண்டு. கடக்க வேண்டிய இடைவெளிகளை குறியீட்டுக்காட்டி, அங்கங்கே வண்டிகள் நிற்க வேண்டிய குறியிடுகளை அமைத்துள்ளனர். எனவே சாலைகளில் நடப்பதற்கும் கடப்பதற்கும் கவலை இல்லை. சாலை ஓரங்களில் 100 மீட்டருக்கு ஒரு தொலைபேசி உள்ளது. எனவே யாரும் தேவைக்கேற்ப (5, 1, $\frac{1}{2}$, $\frac{1}{4}$ பிராங்கு இட்டு) பேசிக்கொள்ளலாம். அப்படியே பலவிடங்களில் தபால்பெட்டிகள், வாய் மூடியுள்ள நகரும் குப்பைத் தொட்டிகள் தெருவுதொறும் பலப்பலவிடங்களில் உள்ளன. இப்படிப் பலபல வசதிகள் இங்கே உள்ளன.

மொத்தத்தில் நான் முதலில் கூறியபடி பாரிசுக்கு நான் வந்தவேளை பொருத்தமானதாக இல்லை. நான்கு நாள் விடுமுறை - நல்ல மழை - இரண்டும் தடையாக இருந்தமையாலும் நினைத்த அன்பர் தம் உதவி கிட்டாமையாலும்

தொல்லையின்றேனும், காண வேண்டிய முக்கியமான இடங்களைக் காணமுடியவில்லை. பேராசிரியர் குரோ அவர்கள் பல்கலைக் கழகத்துக்கு வரச் சொன்னார். ஆனால் பல்கலைக்கழகத்துக்கு விடுமுறை - அவர் வீட்டு முகவரியும் தொலைபேசியும் தெரியவில்லை. சிலருக்குத் தொலை பேசியில்லை; இடம் தெரிந்து செல்ல மழை தடையாயது. ஒருவர் இடம் மாறினார். இப்படிப் பலப்பல மாறுபாடு களால் முக்கியமான இடங்களை - கல்வி நிலையங்கள் - பல்கலைக்கழகங்கள் - சமய இடங்கள் (ஒரு மாதாகோயில் தவிர) பொது இடங்கள் ஆகியவற்றைக் காணமுடிய வில்லை. எனினும் பொதுமக்களோடு கலந்து பழகும் நல்வாய் பினையும் விடுதியில் பல நாட்டு மக்களுடன் கலந்து பேசும் வாய்ப்பினைப் பெற்றேன்.

இலங்கை நாட்டு நண்பர் தி. 'சுதா' காலையில் சொன்னபடி மற்றொரு நண்பருடன் மாலை மூன்று மணி அளவில் வந்தார். இரவு 8 மணி வரையில் பொழுது உள்ளமையின் பல இடங்களைக் காண முடியும் என்றார். மூவரும் (Matro) மெட்ரோவில் புறப்பட்டோம். இரண்டு இடங்களில் இரெயில் மாறி, பின் வெளியே ஓடிற்று. நாங்கள் உலகிலேயே மிக உயர்ந்த கோபுரமாக உள்ள இந் நகரின் பழைய சின்னத்தைப் பார்க்க உரிய இடத்தில் இறங்கினோம். அந்த உயர்ந்த கோபுரத்தைச் சுற்றி ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். நல்ல மாலை வெய்யில், பலர் மகிழ்ச்சியில் கூத்தாடினர் - பாடினர் - கூவினர் - எக்களித்தனர். அவருள் பலர் வெளிநாட்டவரே என்றார் நண்பர். எங்கும் ஆரவாரமும் குதூகலமும் நிரம்பி வழிந்தன. பலர் கோபுரத்தின் உச்சிக்கு மின்னியங்கித் துணையுடன் ஏறிக்கொண்டிருந்தனர். நான் அதை நினைத் துக்கூடப் பார்க்க முடியவில்லை. அண்ணாந்து பார்த்தாலே மயக்கம் வரும் போலிருந்தது. அந்த இடத்தை முற்றும் சுற்றிப்பார்த்து, அருகிலுள்ள ஒரு கடைக்குள் நுழைந்தோம். இங்கே கோபுரம் போன்ற இந்நகரத்தின் பழமை குறிக்கும்

சின்னங்கள் பற்றிய படங்கள் வாங்கினோம். இந்தக் கோபுரம் 1899ல் கட்டப்பட்டதெனக் குறிப்பு உள்ளது. இந்த இடம் மக்கள் பொழுதுபோக்குக்கு ஏற்ற இடமாக அமைக்கப்பெற்றுள்ளது போலும்.

பிறகு நூல்நிலையம் காண வேண்டும் என்னும் அவாவி னால் அதை நோக்கி மறுபடியும் 'மெட்ரோ'வில் புறப் பட்டோம். அப்போது அதற்கும் கீழே சிலர் சென்றதைக் கண்டு அவர்கள் எங்கே செல்கிறார்கள் எனக் கேட்டேன். அன்பர் நாங்கள் செல்லும் மெட்ரோ மேல்மட்டத்திற்கும் 15 அடிக்குக் கீழே செல்வதாகும். அதற்கு கீழ் சுமார் 40 அடி அளவில், மேல்மட்டத்திலிருந்து, இதேபோல் மற்றொரு இரெயில் அமைந்து செயல்படுகிறதென்றும் கூறினார். மேலும் இவை இல்லாவிட்டால் பாரிஸ் போக்குவரத்து அவலமாகி நகரமே 'ஸ்தம்பித்து' நிலைகெடும் என்றனர். அது ஓரளவு உண்மை என்றே எனக்குப் பட்டது. நான் சென்ற விடுமுறை நாட்களிலேயே கூட்டம் நிரம்பி இருந்த தென்றால், எல்லா அலுவலகங்களும் பணிபுரியும் நாட்களில் நெரிச்சல் எப்படி இருக்கும் என நினைத்துப் பார்க்க முடிய வில்லை. இந்த ஆழ்ந்த இடங்களில் எப்படி இவ்வளவு தூரம் பள்ளம் எடுத்து, மேலே மூடி, காப்பிட்டு, பல கல்தூரம் இரெயில் ஓடவிட முடிந்தது என எண்ணினேன். பிரஞ்சு ஆதிக்கம் மிக விரிந்து ஆப்பிரிக்கா நாடுகள் பலவற்றிலும் தன் ஆணை செலுத்திய காலத்து, அங்கிருந்து எண்ணற்ற அடிமைகளை இங்கே கொண்டுவந்து இந்த வேலைக்குப் பயன்படுத்தினார்களாம். இவ் வண்டிகளின் விரைவு பற்றி யும் அமைப்பு பற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளேன்.

நேராக புத்தக நிலையத்துக்குச் சென்றோம். அந்தப் பெரிய எட்டடுக்குக்கும் மேற்பட்ட நீல நிறக் கட்டடம் உயர்ந்த நீல நிற மலையினைப் போன்று காட்சி அளித்தது. அதன் பெருவாயிலில் நுழையச்செல்லுமுன் அங்கெலாம் நடைபெற்ற காட்சிகளைச் சொல்லி முடியாது. ஆண்களும் பெண்களும் மேளம், தப்பட்டை அடித்துக்கொண்டும்

தாரை போன்ற வாத்தியங்களை வாசித்துக்கொண்டும் தாளமிட்டுக்கொண்டும் ஆடியும் குதித்தும் கூத்து நவிற்றியும் நின்ற நிலை கண்டு துணுக்குற்றேன். மேலும் அவர்களெல்லாம் பெரும்பாலும் வெளியூர்க்காரர்களென்றும், இங்கே வந்து இப்படி ஆடிப் பிச்சை எடுக்கிறார்களென்றும் கூறினர். பல ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டம் கூட்டமாக ஆரவாரம் செய்து கூத்தடிக்கும் காட்சியும் கண்டேன். மேலும் சோதிடம் சொல்லிப் பலர் பிழைப்பதைப் பார்க்க முடிந்தது. நம்மைத்தான் சோதிடப்பித்து எனப் பலர் பரிகசிப்பதை எண்ணும்போது, இவர்களை அவர்கள் கண்டால் கண்மூடி மௌனியாவர்களென எண்ணினேன். தமிழ்நாட்டில் எந்த இடத்திலும் இத்தனை சோதிடர்களையும் கைரேகை பார்ப்பவர்களையும் காணமுடியாது. அப்படியே எதிரில் நிற்க வைத்து 15 நிமிடங்களில் நம் போன்று படம் எழுதித் தருவாரும் பலர் இருந்தனர். இவ்வாறு பலகடைகளையும் பிறவற்றையும் பார்த்துக் கொண்டே வந்த நண்பருடன் நான் நூல் நிலையத்துள் நுழைந்தேன்.

நூல்நிலையம் எட்டு மாடிக் கட்டடமாயினும் கடந்து செல்வதற்கு மின்னியங்கு படிகள் இருந்தமையின் தொல்லை இல்லை; அடித்தளத்தில் எத்தனையோ சாமான்கள் இருந்தன. முதல் தளத்தில் பல மொழிகளில் நிலைத்த பெரு நூல்கள் இயற்றிய நல்லாசிரியர் தம் படங்களை எழுதி வரலாறு குறித்து, அவர்தம் நூல்களைப் பற்றிய விளக்கமும் தந்து அழகிய பொருட்காட்சிச் சாலை அமைந்திருந்தது. பர்ந்த இடம்; விரைந்து சுற்றிப் பார்த்தோம். தமிழ்நாட்டுப் பேரறிஞர்கள் வள்ளுவரும் பாரதியும் கம்பனும் இளங்கோவும் எங்கேனும் உளரா எனத் தேடினேன்; இல்லை. எனினும் மேலைநாட்டு மொழிக் கவிஞர்கள், நாவலாசிரியர்கள், தத்துவ மேதைகள் ஆகியோர் படங்களும் விளக்கங்களும் நிறைந்திருந்தன. தனித்தனி அறைகளில் தக்க பேரறிஞர் படங்களும் சிலைகளும் காட்சி தந்தன. அவை

களைக் கண்டு கொண்டே அடுத்த மாடிக்குச் சென்றோம். அங்கே நூல்நிலையம் செயற்பட்டது. பல ஆயிரக்கணக் கானவர்கள் பலப்பல நூல்களைப் புரட்டிப் படித்துக் கொண்டும் குறிப்பெடுத்துக் கொண்டும் இருந்தனர். அமைதி குடி கொண்டிருந்தது. அடுத்த வெளிப்புறத்திலே உள்ள அந்த ஆரவாரப் பெருங்கூச்சல் ஒன்றும் உள்ளே புகாதபடி செம்மையாகப் பெருங்கண்ணாடிகள் இட்டும் ஒலிக்காப் பிட்டும் நூல்நிலையம் இயங்கியமை போற்றற்குரியது.

அடுத்து மேல்மாடிக்குச் சென்றோம். அங்கேயும் பல வகை நூல்கள் வைக்கப்பெற்று, சில அறிஞர்கள் கூடி எழுதிக் கொண்டும் படித்துக்கொண்டும் இருந்தனர். நான் அவர் களிடம் சென்று, தமிழ்நாட்டிலிருந்து - பாண்டிச்சேரியி லிருந்து கொண்டுவந்த தமிழ்நூல்களைப்பற்றி, அங்கிருந்த ஒரு முக்கிய அலுவலரைக் கேட்டேன். அவர் வேறொரு வரிடம் ஆற்றுப்படுத்தினார். அவரிடமும் கேட்டேன். ஏதோ ஒரு 'கேட்டலாக்' எடுத்துத் தந்தார். அதில் ஒரு குறிப்பும் இல்லை: இந்திய நாட்டு மொழிகளாகிய குஜராத்தி, மராத்தி, வடமொழி போன்றவற்றின் நூல்கள் பல இருந்தன. எனினும் தென்னாட்டு மொழிநூல்கள் இல்லை. தமிழ்பற்றி அவர்கூறி, ஓரிடத்தைச் சுட்டினர். அங்கும் இரு அகராதி தவிர்த்து வேறு இல்லை. வேறு இடங்களுக்கு அந்த அம்மையார் எங்களை அழைத்துச் சென்று, அங்குள்ள அலுவலர் பலரிடம் கேட்டும் யாருக்கும் ஒன்றும் தெரியவில்லை. எனினும் அந்தப்பெருநூல் நிலையத் தில் நம் நூல்கள் பலவும் ஓலைச்சுவடிகளும் பாண்டியி லிருந்து நிரம்பக் கொண்டுவரப்பெற்றன என்பதை யாவரும் அறிவர். ஆனால் அங்குள்ள ஒருவருக்கும் அதுபற்றி ஒன்றுமே தெரியவில்லை. உண்மையிலேயே நான் வருந் தினேன். 'உலகத்தமிழ் மாநாடு நடந்த ஒரு இடத்திலே' - உயரிய நூல்கள் இருக்கும் இடத்திலே - தமிழ்பற்றிய குறிபேடுகூட உள்ளதா இல்லையா என்று அறியமுடியாத - காட்டமுடியாத நிலையினை எண்ணி வருந்தினேன்.

நூல் நிலையத்திலிருந்து வெளிவந்தபோது ஏழு மணிக்கு மேல் ஆகியிருந்தது. எனினும் வேறு பல இடங்களையும் கண்டோம். அணையா விளக்கு இருப்பதை அறிந்தோம்; கண்டோம். பின் அவர்கள் தங்கியுள்ள இடத்துக்கு என்னை உணவு உட்கொள்ள அழைத்தனர். அவர்களுடன் சென்று அவர்தம் அறையை அடைந்தேன். அறை 16×8 அளவுதான். அதில் ஒருபுறம் கழிவிடம், ஒருபுறம் சமையல்; மற்றொரு புறம் படுக்கை. இந்தச் சிறிய இடத்துக்கு 2000 பிராங்கு (சுமார் 3000 ரூபாய்) வாடகை என்றனர். திகைத்தேன். பாரிஸ் இடநெருக்கடியின் நிலையை உணர்ந்தேன். அந்தச் சிறிய அறையில் ஐவர் தங்கி, தாமே சமைத்து உண்டு, பல விடங்களில் பணியாற்றி வாழ்கின்றனர். இருவர் மணமான வர். எனினும் அவர்கள் தனிக்குடித்தனம் வைக்க இடம் கிடைக்கவில்லை. எத்தனை அகலமாக அன்றி உயரமாக இந்நகரம் வளர்ந்தாலும் இடப்பிரச்சினை என்றும் தீராது என்றனர் பலர்.

அனைத்தையும் பார்த்த எனக்கு, பள்ளிக்கூடம் ஒன்றை யும் காணவில்லையே என்ற ஏக்கம் இருந்தது. அதை அறிந்தோ அறியாமலோ, நான் அவர்கள் அறையில் தங்கியிருந்தபோது, ஒரு பள்ளியைப்பற்றிச் சுமார் 40 நிமிடங்கள் (T. V.) தொலைக்காட்சியில் காட்டினர். அதைப் பார்த்தபின்னர், நான் பள்ளிகளுக்குப் போகாமல் இருந்ததே சரி என உணர்ந்தேன். நம் நாட்டுச் சீருடை இங்கே இல்லை. சில ஆண்டுகளுக்கு முன் இருந்ததாம், நாடெங்கும் உள்ள மாணவர் அது கூடாது என்று கிளர்ச்சி செய்து அரசாங்கத்தையே அதிரவைத்து பள்ளிக்கு வெளியே நின்று ஆரவாரம் செய்து 'சீருடை வேண்டாம்' என்ற முடிவினைப்பெற்றனராம். எனினும் காட்சியில் அப்பிள்ளை களையும் அதில் அவர்கள் பலவகை உடையணிந்து புழங்கும் நிலையினையும் கண்டபோது வருந்தினேன். பலவகை உடைகள்; ஆணும் பெண்ணும் கலந்து பழகிய முறை; ஆசிரியர்களைத் தினர வைக்கும் மாணவர் செயல்; இன்னபிற அது பள்ளியா என நினைக்க வைத்தன.

பள்ளியின் ஒரு பக்கத்திலிருந்த ஒரு தானியங்கி வண்டியினை, இரு மாணவர் ஓட்டிவிட்டு வகுப்புக்கு ஒன்றுமறியாத வராகச் செல்ல, அதை நிறுத்த ஆசிரியர்களும் முதல்வரும் பட்டபாடு கொடிது; அவர்கள் பட்டபாட்டைக்கண்டு, மேலே வகுப்பிலிருந்த மாணவர்கள் காகிதங்களைக் கிழித்து, அவர்கள் தலைமேல் கொட்டிய அவலநிலை என் உளத்தை சுட்டது. அப்படியே வகுப்பில் விசையால் கைதாளமிடும் ஒரு குரங்கு பொம்மையை மேல்வைத்து, அந்த வகுப்பில் ஆசிரியர் வந்ததும் அது தாளமிட்டுச் சிரிக்க, மாணவர்கள் கைகொட்டி நகைக்க, முதல்வர் வந்தும் அந் நிலை நீங்காத அவலம் என் உள்ளத்தைச் சுட்டது. இப்படியே இன்னும் பல. இவற்றை தொலைக்காட்சியில் காட்டினால் மற்ற மாணவர்களும் கெட்டுவிட மாட்டார்களா என்று கேட்டேன். உடனிருந்த நண்பர் இதுதான் இங்குள்ள கல்விமுறையாதலால் யாரும் கவலைப்படுவதில்லை என்றார். மேலும் எவ்வளவு தொல்லை தந்தாலும் மாணவரைக் கைதீண்டி அடிக்கலாகாது என்ற சட்டம் உண்டாம். மாணவர் என்ன செய்தாலும் ஆசிரியர் சகித்துக் கொள்ள வேண்டும் போலும். வகுப்பில் பாடம் நடக்கும் போதும் மாணவர்கள் கவனிக்காது பேசிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருந்தனர் - பாவம் ஆசிரியர் ஒன்றும் கேட்க முடியவில்லை.

அன்பர்கள் நல்ல உணவு செய்திருந்தனர். ஆறு நாட்களுக்குப் பிறகு நம் வீட்டு உணவினை அந்த யாழ்ப் பாண இளைஞர்கள் கையில் முதலாக உண்டு மகிழ்ந்தேன். என்னிடம் உள்ள மேசை விரிப்பு ஒன்றினை அவர்களுக்கு அன்பளிப்பாகத் தந்தேன். அவர்கள் அறையில் 'திருவள்ளுவர் ஆண்டு' எனத் தமிழில் அச்சிடப்பெற்ற நாள்காட்டி தொங்கியதைக் கண்டு, மகிழ்ந்தேன். அவர்கள் தம் நாட்டில் தமிழர்கள்படும் அவதியினையும் அவர்கள் பிற இடங்களில் பட்டுழல்வதையும் வருந்திக் கூறினர். அவர்தம் கண்ணீர் மாறும் காலம் விரைவில் வாராதா என எண்ணி

னேன். அவர்களிடம் பிரியாவிடை பெற்றேன். ஒருவர் மட்டும் நான் தங்கும் விடுதிவரை வழிகாட்ட வருவதாகக் கூறினார். அவருடன் இரவு 10 மணி அளவிற்கு 'மெட்ரோ' இரெயிலில் வந்தேன். இரெயிலில் ஆடவரும் பெண்டிரும் -முதியவரும்கூட, ஒருவரை ஒருவர் அணைத்தும் பிணைத்தும் முத்தம் கொடுத்தும், மடியில் உட்கார வைத்தும் நின்ற காட்சி, மனிதன் விலங்கினும் கொடியவனாகி விட்டான் என்பதைக் காட்டியதாக நான் நினைத்தேன். என் வீட்டில் உயர்ந்த வேப்பமரத்தில் உள்ள கிளிகள் அருகிலே நெருங்கும் போதுகூட, சுற்றிலும் பார்த்து யாரும் இல்லையா என உணர்ந்து அருகில் நெருங்கி மகிழ்வதை நாள்தோறும் கண்ட நான், இந்த மனிதன் - வண்டியில் பலர் முன்னிலையில் இவ்வளவு மோசமாக நடப்பதை எண்ணியபோது, 'இவன் என்ன நாகரிகத்தைக் கண்டான்?' என்று கேட்கத் தோன்றியது. இதுதான் 'பாரிஸ்' நகரமா என்ற எண்ணத்தோடு என் அறைக்கு வந்தேன். அன்பர் விடைபெற்றுச் சென்றார். நான் விடியல் எழவேண்டும் என்ற எண்ணத்தோடு படுத்துக்கொண்டேன்.

உரோம் 9-4-85

மூன்று முழு நாட்கள் பாரிசில் கழிந்தன. இன்று போப் ஆண்டவர் உள்ள உரோம் செல்லவேண்டும். விடியல் எழுந்து காலைக்கடன்களை முடித்தேன். விடுதி அலுவலர் சரியாக ஐந்து மணிக்கு வந்து எச்சரித்தார். மூட்டைகளை யெல்லாம் கட்டினேன். மூன்று நாட்கள் பாரிசில் கழிந்ததை யெல்லாம் எண்ணிக்கொண்டே பெட்டிகளைச் சரி செய்தேன். சரியாக ஆறு மணிக்கு வாடகை மோட்டார் வந்தது. அதற்குள் அலுவலர் காப்பி போட்டுத் தந்தார். (பொதுவாக இங்கே எட்டு மணிக்கு முன் காப்பி போட மாட்டார்கள்). அவருக்கு நன்றி சொன்னேன். கார் வாடகைக்கு இருநூறு பிராங்கு (சுமார் 300 ரூபாய்) என்ற னர். விடியுமுன் வந்தமையின் அதிகம் என்றார். வேறு வழியின்றி ஏறி அமர்ந்தேன்.

பாரிசை இரவில் பார்க்கவேண்டும் என்றனர். முதலில் இறங்கிச் சென்றபோது பெருமழையாக இருந்தமையால் ஒன்றும் காணமுடியவில்லை. இரண்டு இரவுகளிலும் உள்ளேயே சில இடங்களில் சுற்றியமையால், ஒன்றும் காண முடியவில்லை. எனவே இந்த இனிய விடியற்காலைப் பயணம் பாரிசின் இரவின் மின்னொளிச் சிறப்பை நன்கு காட்டிற்று. அந்த வேளையிலும் அடுக்கடுக்கான ஊர்திகள் விரைந்து சென்றன. மேலும் கீழும் சாலைகள் (பூமிக்குள் இரு இரையில் சாலைகள்) உயர்ந்த மாடிக்கட்டடங்கள். சாலை கள் எல்லாம் நேருக்கு நேராக அமைந்திருந்தன. பல

மேலோடிகள் ஐந்து அல்லது ஆறு சாலைகள்கூ பிடப்பிரித்துக் காட்டும். எங்கும் அந்த விடியலிலும் புழக்கம் அதிகமாக இருந்தது. வண்டி சுமார் 40 நிமிடங்கள் வந்தது. 110 கிலோ மீட்டர் வேகம். எனவே சாலை விதிப்படி சிகப்பு விளக்கின் முன் நின்றனபோக அரைமணி நேரமாயினும் ஓடியிருக்கும். எனவே குறைந்தது 40 (அ) 45 கிலோ மீட்டர் இருக்கும் (ஒரு கி. மீ. நம் நாட்டுக் கணக்குப்படி சுமார் 7.50ரூபாய். வாடகையாகின்றது). வண்டியை விட்டு விமான நிலையத் தில் இறங்கியதும் மற்றொரு மாற்றம். வண்டியை ஓட்டி வந்தவர் ஒரு பெண். இங்கெல்லாம் ஆண்களைக்காட்டிலும் பெண்கள் அதிகம் கார் ஓட்டுவார்களோ என எண்ண வேண்டியுள்ளது. விடியற்காலை (சூரியன் 8க்குத்தான் புறப்படும்) 5 மணி அளவில் தைரியமாக ஒரு பெண் தனியாக வாடகை வண்டி ஓட்டி வருகிறார் என்றால் வியக்கத்தானே வேண்டும். மேலும் அப் பெண் விமான நிலையத்தில் நடந்து கொண்ட விதம் வெறுப்பைத் தந்தது. இங்கெல்லாம் ஊர்தி ஓட்டுநர் நேர்மையானவர் எனப் பலர் சொல்லினர்., அந்தச் சொல்லை இப் பெண் பொய்யாக்கினார். சாமான்களை இறக்கி வைத்து விட்டு 220 பிராங்கு தரவேண்டும் என்றார். நன்கு விடியவில்லை; மின்ஒளி பகலிலும் அதிகமாக ஒளி வீசிக்கொண்டிருந்தது. 6.45 இருக்கும். பலர் இறங்கிக் கொண்டிருந்தனர். நான் தாழ்வாக 200 தானே என்றேன். அவள் 'மீட்டரை'க்காட்டி 220 ஆகியிருக்கிறது என்றாள். நான் சொன்னபடி 200 தான் தருவேன் என்றும் புறப்படும் போது மீட்டரைக் காட்டவில்லையே என்றும் கூறினேன். உடனே அவள் அருகிலே உள்ள காவல் நிலையத்துக்கு 'வா' என்றாள். ஏதடா தொல்லை என்று 220 பிராங்கு கொடுத்துவிட்டு, விமானநிலையத்துள் புகுந்து கொண் டேன்.

காலைப்பொழுது இனிமையாக விடிந்தது, எங்கும் குளிர்ச்சி; இனிமை. பார்க்குமிடமெங்கும் பசுமை. மக்கள் புழக்கம் அதிகம் இல்லை. நான் என்னிடமிருந்த 600

பிராங்கை இத்தாலியப் பணமாக மாற்றினேன்: 1,22,000 எண்ணுள்ள 'நோட்டு'கள் தந்தனர். அத்தனைப் பெரிய எண்ணை நினைத்து மலைத்தேன். பின் கேட்டபோது, அது அளவில் பெரியதாயினும் புழக்கம் ஆயிரம் ஒரு ரூபாய் அளவினதே என அறிந்தேன். (பின் கணக்கிட்டு நம் 1 ரூபாய்க்கு 150 இத்தாலி நாணயம் ஆகின்றது என அறிந்தேன்.) போலீஸ், பாஸ்போர்டு எல்லாம் முடிந்தபின் விமானம் புறப்படுமிடத்திற்கு வந்தேன். இறங்கியபோது இருந்த அலைச்சல் தொல்லை ஒன்றுமில்லை. நம் சென்னை நிலையத்தைப் போன்று மிக எளிமையாகவும் அருகாகவும் இருந்தது. மிலான், உரோம் இரு இடங்களுக்கும் காலையில் விமானங்கள் புறப்பட்டன. கூட்டம் அதிகமில்லை. நான் ஏறிய விமானத்திலும் பாதிக்கு மேல் காலியாக இருந்தது. (மொத்தம் 300 பேர் அமரலாம்). விமானத்தில் பணியாளர் நான் கேட்டபடி ரொட்டி, ஜாம், வெண்ணெய், பழம், பழரசம் ஆகியவை தந்தனர். விமானம் பனிபடர் - வெண்நிற உச்சியினை உடைய உயர் மலைகளையெல்லாம் கடந்தது. அங்கங்கே விமானிகள் செல்லும் இடத்தையும் உயரத்தை யும் கூறினர். (இப்பழக்கம் முன்பெல்லாம் நம் நாட்டு விமானங்களில் இருந்தது; இப்போது இல்லை.) என் பயணத் திலும் இதுதான் இங்கே நான் கேட்டது. உயர்ந்த உச்சி யிடையே பனிமலைகளின்மேல் 16,000 அடி உயரத்தில் விமானம் பறந்தது. உரிய வேளைக்கு முன்பாக 10.20க்கே விமானம் உரோம் நிலையத்தை அடைந்தது.

உரோம் விமான நிலையமும் பாரிஸ் விமான நிலையத் தைப் போன்று ஊருக்கு வெகுதொலைவில் 30 (அ) 35 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது. காவல், பாஸ்போர்ட்டு சோதனைகள் எளிமையாக முடிய வெளியே வந்தேன். பல பஸ்கள் இருந்தன. எனினும் இடம் புதியதாகையாலும் எங்கும் வேண்டிய குறிப்பிட்ட இடம் தெரியாதாகையாலும் கனத்த பெட்டியுடன் செல்ல இயலாதாகையாலும் வாடகை வண்டியில் சென்றேன். 35000 இத்தாலிய காசு தந்தேன்.

உரிய இடத்தில் சுமார் 11.30க்கு என்னைச் சேர்த்து விட்டான் டிரைவர்.

திரு. சோதரர், குழந்தைராஜ் - நான் காண வேண்டியவர்-எனக்காகக் காத்திருந்தார்; அவர் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவர். இளமையிலேயே 'சேசு சபையில்' சேர்ந்து தொண்டரானவர்; இங்கே பயில (3 ஆண்டுகள்) வந்துள்ளார். லயோலா கல்லூரி, முன்னாள் முதல்வர் டாக்டர் குழந்தைசாமி (எஸ். கே. சாமி) அவர்கள் இவருக்கே எழுதி இருந்தார். என்னைக் கண்டதும் அன்புடன் வரவேற்றார். அவர் தங்கியிருந்த மாடம், அவர் போன்ற தொண்டர்களுக்கே ஏற்ற இடமாதலால் எனக்கு வேறு அச் சமயத்தார் நடத்தும் விடுதியில் அறை ஏற்பாடு செய்திருந்தார். அங்கிருந்து இருவரும் பஸ் ஏறிச் சென்றோம். பஸ் டிக்கெட் கடைகளில் - ஒரு சில இடங்களில்தான் விற்கும் போலும். பஸ் நிலையத்திலோ (ஜினிவாவைப்போல்) அன்றி பஸ்சிலோ (நம் ஊரைப் போல்)டிக்கெட் பெறமுடியாது; எடுக்கமுடியாது. முன்னமே ஒரு சில கடைகளில் (T எனும் குறிப்பு இருக்கும்) வாங்கிக் கொள்ளவேண்டும். புதிதாக வருபவர்கள் அல்லல் உறுவரன்றோ! குழந்தைராஜ் எனக்கு எல்லா ஏற்பாடுகளும் செய்தமையால் யாவும் நலமாக முடிந்தது; எனக்குரிய அறையில் விடுத்து பஸ் டிக்கெட் சிலவற்றையும் என்னிடம் கொடுத்து, திரும்ப 4மணிக்கு வரச்சொல்லி, அவர் பணிமேற் சென்றார். உலக குருவாகப் போற்றப்பெறும் போப்பாண்டவர் தங்கியுள்ள இந்த உரோம் நகரில்-இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் தமிழகத்தோடு தொடர்பு கொண்ட பெரு நாட்டின் நகரில் - நான் தங்கியதை நினைத்து மகிழ்ந்தேன். தூய வகையில் நீராடி, கையில் உள்ள பிஸ்கட், பழம் அருந்தி, சிறிதுநேரம் ஓய்வுபெற்றேன். என் எண்ண அலைகள் எங்கெங்கோ பரந்தன. சுமார் ஒரு வார காலத்தில் நான் கண்ட இடங்கள், சென்ற நாடுகள், பார்த்த சூழல்கள் இவைபற்றி யெல்லாம் எண்ணிக் கொண்டே சிறிதுநேரம் ஓய்வுபெற்றேன். தங்கிய விடுதி

யினை இரு பாதிரியார் - அன்னையர் செயல் புரிந்து காத்து வருகின்றனர்.

மாலை நான்கு மணிக்கு மறுபடியும் குழந்தைராஜ் இருந்த இடத்துக்குச் சென்றேன். அவர்கள் அருகிலுள்ள போப் ஆண்டவர் மாளிகைக்குச் சென்று சிலவற்றைக் காணுமாறு கூறி ஆற்றுப்படுத்தினர். மிக அருகிலே இருந்தமையால் நானும் புறப்பட்டேன். 'ஈஸ்டர்' கூட்ட அலை இன்றும் ஓயவில்லை; எங்கும் பெருங்கூட்டம். போப் ஆண்டவர் தங்கிய மாளிகை மிகப் பெரியது - உயரியது. பல அடுக்குகளை உடையது. எதிரே வட்டவடிவமான உயரிய தூண்களோடு கூடிய சுற்றுச்சாலை; இடையில் பரந்தவெளி. அங்கேதான் நாளை பலரும் கூடி, 'போப்' பினைக் காண்பர் என்றனர். அதற்கேற்ப, பல பிரிவுகளிட்டு, நிறைய நாற்காலிகளும் போடப்பெற்றிருந்தன. உள்ளே சென்றதும் பலப்பல காட்சிகளைக் கண்டேன். வெளியிலேயும் பல பெரிய பெரிய சிலைகள் வட்டச்சுற்று முழுதும் உச்சியில் எழுப்பப் பெற்றிருந்தன. உள்ளேயும் அப்படியே. சுரங்கம் போன்ற ஒரு நீண்ட பகுதிக்குள் நுழைந்தேன். அங்கெல்லாம், இது வரை 'போப்' ஆண்டவராக இருந்து இறைபணி ஆற்றிய நல்லவர்தம் சமாதிகள் இருந்தன. நல்லவர் சமாதிகளே வழிபடும் இடங்கள் என்பது நம் கொள்கையல்லவா! பழநி 'போகர்' என்ற முனிவர் சமாதி என்பர். எனவே இப் புனித இடங்களையெல்லாம் கண்டபோது என் உடம்பு புல்லரித்தது. ஆயினும் காணவந்த பலர், இவற்றைக் காட்சிப் பொருளாகக் கண்டனரேயன்றி, இவர் உலக வாழ்விற்குத் தம்மை ஒறுத்துநின்ற உத்தமப் பாதிரியர் என எண்ணி வழிபடவில்லை. அதிலும் பலர் - ஆடவரும் பெண்டிரும் - இதைப் பொழுதுபோக்கு இடமாக எண்ணிய நிலை கண்டு வருந்தினேன். உள்ளே இருந்த பெரும்பெரும் சிலைகள் நம் நாட்டுப் பழங்கோயில்களை எனக்கு நினைவூட்டின. பெரும்பாலான சிலைகள் உலோகத்தாலாயவை; சில கற்கள் - படிகக் கற்கள் கொண்டு செய்யப்பெற்றன. இயேசுவினுடைய

வாழ்க்கையினை முறையாகக் காட்டிய படிமங்களும் உள்ளன. எங்கும் - மேலும் சுற்றிலும் - வண்ணக் கலவை கொண்டு தீட்டிய எண்ணற்ற ஓவியங்கள் காட்சியளித்தன. சில ஆயிரம், ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கும் முற்பட்டன என்றனர். உயர்ந்த கோபுரத்து உள்ளீடுகளெல்லாம் பழம்பெரு வரலாற்றுக் கூடங்களாக விளங்கின. இவை பற்றிய விளக்கங்களைச் சொல்வார் இவர். 'Guide' எனும் வழிகாட்டிகள் நம் நாட்டில் உள்ள சிலரைப்போன்று ஏதேதோ சொல்லுகின்றனர். இவற்றின் வரலாற்று முக்கியமோ - சிறப்பியல்புகளோ அவர்களுக்கு ஒன்றும் தெரிய வில்லை. ஏதோ 'மிஷன்' போன்று, யாரோ சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவிக்கின்றனர். பல புரைகளைக் கண்டு, அகன்ற வெளியிடத்துக்கு வந்தேன். உயர்ந்த கோபுரத்துக்கு ஏற மின் ஏற்ற முறை இருந்தது; என்றாலும் நான் சொல்லவில்லை.

திரும்பவும் குழந்தைராஜ் அவர்கள் தங்கிய இடத்துக்கு வந்தேன். அவர் உண்மையிலேயே குழந்தையாக இருந்தார். தமிழ் நாட்டிலிருந்து வந்திருக்கும் ஒரு சில பாதிரிமார்களை எனக்கு அறிமுகப்படுத்தினார். நான் வழியிடை வந்தபோது, திசை மாற, அங்கே இரண்டு மலையாள அன்னையரே (Mothers) எனக்கு வழிகாட்டினர் - அண்டை நாடான தமிழ் நாட்டில் இருந்துவந்த எனக்கு வாழ்த்துத் தந்து வழிகாட்டினர். குழந்தைராஜ் அன்று இரவு உயிரிய மலைக்குச் சென்று சுற்றுப்புரத்தைக் காணலாம் என்றார். இந் நகரின் நடுவில் ஒரு சிற்றாறு ஓடுகிறது. எப்போதும் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது. சுமார் 20கல் (32 கி. மீ.) தூரத்தில் உள்ள கடலில் இது கலக்கிறதாம். இங்கே தெருக்களில் எப்போதும் குழாய்களில் தண்ணீர் வேகமாக வந்துகொண்டே இருக்கின்றது. தண்ணீர்ப் பஞ்சமெல்லாம் இங்கே என்றும் தலைகாட்டிய தில்லையாம். நான் சென்னையை நினைந்து வெம்பினேன்.

இருவரும் 'பஸ்' வழி உயிரிய மலை உச்சிக்குச் சென்றோம். அங்கிருந்து உரோமின் பல பாகங்களைக்

கண்டோம். பலவற்றை விளக்கினார். பழைய ஊரே 2000 ஆண்டுகளுக்குமுன் பல மன்னர் தம் மாளிகைகள் உள்ள இடம் எனச் சுட்டினர். பிற இடங்களைக் காட்டினார். இரவு 9 வரை அக் காட்சிகளை கண்டு, அங்கேயே சிற்றுண்டி கொண்டு, நான் தங்கிய இடத்துக்குத் திரும்பிவந்தோம். என்னை என் அறையில் விட்டுவிட்டு அவர் தம் இடம் சென்றார். நானும் என் அறையில் சற்றே அமைதியாக இருந்து, பழைய உரோம் மக்கள் யவனர் என்னும் பெயரோடு, தமிழ்நாட்டில் காவிரிபூம்பட்டினக் கடற்கரையில் தமிழரோடு எவ்வெவ்வாறு கலந்து பழகினார் என்ற தன்மையினையும் அவற்றை விளக்கும் இலக்கியங்களையும் எண்ணி எண்ணி மயங்கினேன். எத்தனை சொற்கள் இரு மொழிகளில் மாறி இடம்பெற்றுள்ளன! இவற்றையெல்லாம் எண்ணி, எண்ணிய நினைவு அளவில் உறக்கம் ஆட் கொண்டது.

உரோம் 10-4-85

விடியல் 5 மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டேன். நான் தங்கிய விடுதி அமைதியாக இருந்தது. நிர்வகிக்கும் இரு தாயர் தெய்வநெறி பற்றி வழிபாடாற்றிக்கொண்டிருந்தனர் (7 மணி அளவில்). நான் ஒருமணி நேரம் இந்த நாட்குறிப்பை எழுதி முடித்தேன். 8-30க்குக் காலை உணவு தந்தனர். உணவு கொண்டபின் குழந்தைராஜ் சொல்லியபடி, போப்பாண்டவரைக் காணப் பதவிச் சீட்டினை பெறும் இடம் சென்றேன். (குழந்தைராஜ் வேறுபணியின் பொருட்டு வெளியே சென்றிருந்தார்.) சரியாக 9 மணிக்கு நுழைவுச்சீட்டு பெறும் இடம் சென்றேன். முன் ஏற்பாட்டின்படி அவர்கள் என் பெயரிட்ட உறையில் ஒரு சீட்டு வைத்து, என் பெயர் சொன்னவுடன் எடுத்துத் தந்தனர். (குழந்தைராஜ் முன்னரே என் பெயரைப் பதிவு செய்து வைத்திருந்தார்.) அதைப் பெற்றுக்கொண்டு உலகில் பலரால் போற்றப்பெறும் உலக குருவினைக் காணப் போகிறோம் என்ற உணர்வோடு பெரு வாயிலில் நுழைந்தேன் (மிக அருகில் அமருவதற்கெனத் தனியான நுழைவுச் சீட்டு பெற்றமையால் அருகில் இருக்கும் வாய்ப்பு உண்டாயிற்று).

அதே வேளையில் மற்றொரு உணர்வும் தோன்றிற்று. சென்ற வாரம் இதே வேளையில் நான் புறப்படு முன் உலக குரு (ஜெகத்குரு) காஞ்சி காமகோடிபீடம் சங்கராச்சாரியாரைச் சென்னை மயிலாப்பூர் சென்று வணங்கி விடை

பெற்றுக்கொண்ட காட்சி என் கண்முன் நின்றது. சென்ற புதன் காலை ஓர் உலக குரு; இந்தப் புதன் காலை மற்றொரு உலககுரு; அடுத்த புதன் காலை நியூயார்க்கில் இருக்கும் போது எந்த உலக குருவினைக் காண்பேனோ என்ற எண்ணத்துடன் உள்ளே நுழைந்தேன்.

பலத்த காவல் துறையினர் ஆற்றுப்படுத்தினர். எனக் கென ஒதுக்கிய இடம் போப் குரு இருந்து பேசும் இடத்துக்கு உயரிய பீடத்துக்கு வலப்புறமாக மிக அருகில் இருந்தது. அந்தப் பகுதி முன், இப் பெருமடத்தின் உயர்பணியாளர் - அவர் உற்றார், வெளிநாட்டுத் தூதுவர் அவர்வழி வருபவர் ஆகியோர் இருக்க ஏழெட்டு வரிசை நாற்காலிகள் இருந் தன. நான் சென்ற இடம் அதற்குப்பின், குரு இடத்திற்குச் சுமார்.40 அடி தள்ளி இருந்தது. அங்கேதான் பல நாட்டுப் பெரும் குழுக்களும் தங்கி இருந்தனர். மிக நெருக்கமாகத் தான் பார்க்க முடிந்தது. வேறு பல ஒதுக்கிடங்களும் பொதுவாக யாரும் வரும் இடங்களும் பரந்த அந்த வெளியில் ஒதுக்கப்பெற்றிருந்தன. (அங்கே யார்ரும் சீட்டு இன்றி வரலாம்). ஒவ்வொரு பகுதியிலும் பலப்பல நாட்டி னர், பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர். பலரும் புகைப்படக் கருவி வைத்திருந்தனர். எங்கும் கூட்டம். ஆயினும் இன்று இங்கே சற்றே அமைதி நிலவக் கண்டேன். நாற்புறமும் நோக்கினேன். மக்கள் கூட்டம் கடலென அலைமோதிற்று.

சரியாகப் 10-45; வண்ண உடையணிந்த துப்பாக்கி, கத்தி தாங்கிய வீரர் எண்மர் திசைக்கு இருவராகக் 'குரு' அமரும் பீடத்துக்கு அருகில் நின்றனர். அவர்தம் உடையும் தோற்றமும் சூலியஸ் சீசர் காலத்துக்கு என்னை அழைத்துச் சென்றன. அத்தகைய பழைய மரபில் உடையணிந்து தலை குல்லாய் கவிப்ப, துப்பாக்கியும் கூரிய கத்தியும் தாங்கி அசைமாது புனையா ஓவியம்போல நின்றனர். பின் ஒரு மணி வரையிலும் அவர்கள் அப்படியே அசையாது நின்ற நிலை - அவைகள் வெறும் பதுமைகள்தானோ என

எண்ணுமாறு செய்தது. அத்தகைய பழங்காலத்திய மரபினை இங்கே கட்டிக்காத்த நிலைகண்டு வியந்தேன்.

போப் சரியாகப் பதினொரு மணிக்கு மக்கள் கூட்டத்தினிடை புகுந்தார் என்றனர். எப்பக்கம் வருவார் என்று யாராலும் சொல்ல இயலவில்லை. திடீரென ஒரு பக்கம் மக்களிடையில் புகுந்து அவர்தம் வாழ்த்தையும் வணக்கத்தையும் ஏற்றுக்கொண்டு மெல்ல மேடை நோக்கி வந்தார். அவர் அசைவினை மாளிகையின் மேநிலையில் அமைந்துப் படமெடுக்கின்ற கருவி வழியே, எளிமையாகக் காண முடிந்தது. மக்கள் கூட்டத்தே - பலர் எழுந்து நின்றும் புகைப்பட மெடுத்தும் இருந்தமையால், தொலைவில் அவர் வரும் காட்சி அனைவருக்கும் புரியவில்லை. சரியாகப் 11.40க்கு மேடையில் அமர்ந்தார், அமைதி குடிகொண்டது. பிறகு அவர் முறையாக அனைவரையும் கைதூக்கி வாழ்த்தியும் கைகுவித்து வணங்கியும் நிற்க நிகழ்ச்சி தொடர்ந்தது. இது வழிபாட்டு நிகழ்ச்சியன்று. பல நாட்டவரும் பல சமயத்தவரும் சந்தித்துக் கொள்ளும் இடமாதலால் இதை வழிபடு கூட்டமாக்கவில்லை பொதுவும், பெரும்பாலும் அறிமுகக் கூட்டமாக இருந்தது. வெளிநாடுகளிலிருந்து வந்த நிறுவனங்கள் - கல்வி நிலையங்கள் ஆகியவற்றின் பெயர்கள் படிக்கப்பெற்றன; என் பெயரையும் சேர்த்துத் தான். என் பெயர் வெளிநாட்டில் - இந்தியாவிலிருந்து வந்தவர் என முன்னரே அங்கேபதிவுசெய்யப்பெற்றதல்லவா. எனினும் நம் மாணவர்களை அழைத்துவந்து, பள்ளியின் பெயரை போப் சொல்லி வாழ்த்த ஏற்பாடு செய்ய இயலுமா என நினைத்தேன். ஆஸ்திரேலியா, ஜப்பான் தொடங்கி அமெரிக்கநாடு வரை பல நாட்டிலிருந்து வந்தவர்களை வாழ்த்தினர். இத்தாலிய மொழியில், பிரஞ்சு மொழியில், ஆங்கிலத்தில் நிகழ்ச்சிகள் இருந்தன. முறையான் நிகழ்ச்சிக் குப்பின் 12.45க்கு சபை கலைந்தது. போப் ஆண்டவர் தம்மிடம் நோக்கிப் புறப்பட்டனர். மக்கள் கலையத் தொடங்கினர்; நானும் குழந்தைராஜ் இருந்த திருமடம்

சென்றேன். பிற்பகல் உணவு ஒரு கடையில் பிஸ்கட், பழம், உருளை சிப்ஸ் இவற்றோடு முடிந்தது. முன்நாள் பதிவு செய்திருந்தபடி, சுற்றுலா 'பஸ்'சில் பிற்பகல் 2.30முதல் 6 வரை பல இடங்களுக்குச் சென்றேன்; ஆங்கிலத்தில் ஒரு பெண்மணி (பஸ்ஸில் அதற்கென வந்தவர் - Guide) எல்லா இடங்களைப் பற்றியும் நன்கு விளக்கினார். இரு பெரிய மாதா கோயில்களின் உள்ளே அழைத்துச் செல்லப் பெற்றோம். அவற்றின் அமைப்பு நம் தஞ்சைப் பெரிய கோவில் போலக் காட்சி தந்தது. எங்கும் பெரிய சிலைகள் - பலவகையான வண்ணங்கள் தீட்டப்பெற்ற மேல் வட்டங்க்ள், சலவைக்கல்லால் ஆகிய தரைகள்; 'மோசேக்' (Mosaic) என்று சொல்லப்படும் அழகிய தரைகள். இவற்றுள் பல கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்குரியன என்று கூறினர். அந்தக் காலந்தொட்டு, கிறித்தவ சமய வளர்ச்சிக்குப் பாடு பட்ட பல தொண்டர்கள் சிலைகள் அவை என்றனர். ஒரு கோயிலுக்கு அமைந்த பெரியவாயிலில் மிகப் பழங்காலத்திய இரும்புக் கதவுகள் பொருத்தப்பெற்றிருந்தன. அவை 1300 ஆண்டுகளுக்கு முன் செய்யப்பெற்றவை என்றனர். கோயில் அமைப்பு - முகப்பு, பிறநிலைகள், நம் பிற்காலச் சோழர்தம் பணிகளை நினைவூட்டின. அதற்கேற்றாற்போல், வழி காட்ட வந்தவர், அந்தச் சிலைகளையும் பிறவற்றையும் செய்ய எகிப்து, கிரிஸ் போன்ற பிற கீழைநாட்டுக் கலைஞர் கள் வரவழைக்கப்பெற்றனர் என்றனர். கீழை நாடாகிய நம் தமிழகத்தோடு கிரேக்க, உரோம, எகிப்திய நாட்டவராகிய யவனர் கொண்ட தொடர்பினை நம் இலக்கியங்கள் காட்டுகின்றனவே. எனவே இப் பெரும் பணிகளில் நம் நாட்டவர் பங்கும் நிச்சயம் இருந்திருக்கும் என முடிவு கொண்டேன். வேறுபல பெருங் கட்டிடங்கள், சதுக்கங்கள் முதலியன கண்டுகொண்டே 'பழைய ரோம்' என்று கூறப் பெறும் அக் காலத்திய அரசர்வாழ் மாளிகை இருந்த எல்லையில் புகுந்தோம். அந்தப் பழைய நகர எல்லை சுமார் 30கி.மீ. சுற்றளவை உடையது என்றனர். அதை சுற்றிப் பல சுடுமண் சுவர்கள் 30,40மீ. உயரம் நிற்க, பல பகுதிகள்

அழிக்கப் பெற்றுள்ளன. வழிகாட்டியவர் வருத்தத்தோடு, பலர் அவற்றிலுள்ள செங்கற்களைத் தங்கள் வீடுகள் கட்ட எடுத்துச் செல்லுகின்றனர் என்று சொல்லினர். சில இடங்களில் செடிகள் அவற்றின் தோற்றத்தைக் கெடுத்தன. சுற்றிய அகழிகளும், அடுத்துச் செல்லும் உரோம் நகரை ஊடுருவிச் செல்லும் சிற்றாறும் நகருக்குப் பொலிவூட்டின. எனினும் தொல்பொருள் போற்றும் நிலை, இங்கே தேவையான அளவு செயலாற்றவில்லை என்பதனை, அந்தப் பழம் பெரும் சின்னங்கள் கூறாமல் கூறிக்கொண்டு நின்றன.

இவ்வாறு பல புறநகர்ப் பகுதிகளைக் கண்டுகொண்டே, நாங்கள் ஒரு தனி இடத்துக்கு அழைத்துச் செல்லப் பெற்றோம். அங்கே பாதாளத்தே பல குகைகளும் குடவறைகளும் அவற்றிற்குச் செல்லும் சிறு புழைகளும் இருந்தன. அங்கே கடந்த 3000 ஆண்டுகளில், மக்கள் எவ்வாறு புதைக்கப் பெற்றனர் என்பதைக் கூறினர். நகரின் புறத்தே இடுகாடாக அது பயன்பட்டது. பலப்பல இடங்களில் மறைந்தோரைப் பற்றிய நினைவாக ஓடுகள், உடைந்த சில்கள் போன்றவை பாதுகாக்கப்பெற்றன. ஓரிடத்தில் மூன்று உருவங்கள் தீட்டப்பெற்ற வண்ண ஓவியம் மங்கலாகத் தெரிந்தது. அது கிறிஸ்து பிறக்க 500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்றது என்றனர். மேலும் ஒரே சவக்குழியில் அடுத்தடுத்து வரும் பிணங்களை அப்படி அப்படியே தூக்கி - மாற்றி இட்டு மூடிவிடுவர் எனவும், அடுத்து வருபவர் அதை நீக்கி, மற்றொரு சவத்தை இடுவர் எனவும் இக் காலத்தைப் போல யாதொரு காப்பும் அக் காலத்து இல்லை எனவும் கூறினர். அங்கே நடு அறை ஒன்றில் பாதிரிமார் வருபவர்களைக் கொண்டு வழிபாடுகள் செய்தனர். உரோமில் நாள்தோறும் வரும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர் ('பஸ்'கள்) இந்த இடத்தினைக் காணாது செல்ல மாட்டார்கள். உரோமில்தான் மிக அதிகமான யாத்திரிகர்கள், ஐரோப்பாவின் பல பகுதிகளிலிருந்தும் ஆப்பிரிக்கா, அமெரிக்கா போன்ற இடங்களிலிருந்தும்

ஆண்டுதோறும் வந்துகொண்டே இருக்கின்றனராம். பழங் காலத்திய உரோமர் ஆட்சி, சீசர் போன்றார் ஆட்சி செய்த இடங்கள், இன்னபிற பழைய கட்டடங்கள் பூமிக்குள் அழிந்து மூடிக்கிடக்கின்றன எனவும் அவற்றை வெளிக் கொணர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன எனவும் கூறினர்.

வழியில் ஓரிடத்தில் உயர்ந்த குதிரைமீது ஒரு பேரரசன் இருந்த பெருஞ்சிலை இருந்தது. அதில் 'உரோம் அல்லது சாவு' என்று (Rome to death) எழுதப் பெற்றுள்ளது. அந்த மாற்று வேந்தன் 'பிடித்தால் ரோம் நகரரைப் பிடிக்க வேண்டும் அல்லது இறக்கவேண்டும்' என்ற முடிவோடு வந்து, வெற்றிவாகை சூடி இந்த நகரையும் நாட்டையும் ஆண்டான் என்றும் அவன் நினைவாகவே அந்தச் சிலை உள்ளதென்றும் அறிந்தேன்.

பின் பல கடைத் தெருக்கள் வழியே உந்துவண்டி வந்தது. மாலை 5மணிக்கு மேலாகிவிட்டபடியால் சாலை களில் வண்டிகள் போக்குவரத்து மிக அதிகமாக இருந்தது. சுமார் ½கிலோ மீட்டரைக் கடக்க ½மணி நேரத்துக்கு மேலா யிற்று. எனினும் என் கணிப்பு, பாரிஸ், ஜினிவாவை நோக்க இங்கே கார் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும் என்பதே மேலும் அங்கெல்லாம் சாலைகளில் வண்டிகளை - கார்களை நிறுத்தக் கட்டணம் வாங்கினர். ஆனால் இங்கே கட்டணம் இல்லாமலேயே இரவு பகல் எந்த நேரத்திலும் சாலைகளில் வண்டிகளை நிறுத்தலாம் போலும்.

மாலை 6.30 மணி அளவில் திரும்பி வந்து திரு. குழந்தைராஜ் அவர்களுடன் நான் தங்கிய இடத்துக்குச் சென்றேன். அவர் என்னை அங்கே இருக்கவிட்டுத் திரும்பினார். இரவு 9 மணிக்கு மேலாயிற்று. நான் படுத்துக் கொண்டேன், எனினும் உறக்கம் வரவில்லை. பழைய உரோம்-அதனொடு தொடர்புகொண்ட பழைய தமிழகம்-சுற்றியுள்ள கிரேக்க எகிப்திய நாடுகள் இவற்றின் மூவாயிரம் ஆண்டு தொடர்பு - இவைகளைப் பற்றியெல்லாம் எண்ணி

னேன். எத்தனையோ வேற்று நாட்டவர் படையெடுப்பு களுக்கு இடையில் மாற்றார் ஆட்சிகளுக்கு இடையே தமிழகம் மூவாயிரம் ஆண்டுகளாகத் தன் தொன்மை மொழி யின் இயற்கை நலத்தையும், உயரிய கலைநலம் காட்டும் கோபுரங்களையும், மாமல்லபுரம் போன்ற சிற்பக் களஞ்சியங் களையும், ஆனைமாமலை ஆதியாய இடங்களில் சிற்றன வாசல், திருமய்யம் போன்ற இடங்களில் அமைந்த சமயச் சின்னங்கள் - வண்ணங்கள், காஞ்சி பல்லவமேடு போன்ற வற்றையும் காத்து வருகின்றமை போன்று, உரோமர்களும் எத்தனையோ மாற்றார் போர்களுக்கும் ஆட்சிகளுக்கும் இடையிலும் தம் பழைய சின்னங்களையும் இடிந்த சுவர், பாழி, அகழி முதலியவற்றையும் பாதுகாத்து வருகின்ற சிறப்பினை எண்ணினேன். எனினும் இரண்டிடத்தும் இன்னும் தொல்பொருள் காப்புக்கு அதிக முக்கியத்துவம் தரவேண்டும் என உள்ளம் எண்ணிற்று.

இவ்வாறு பலவகையில் எண்ணிய நான் அக்காலத்திய தொல்காப்பியர் காலத்தியமுப்பெருவேந்தர்கள் ஆட்சியினை யும் அன்றைய தமிழர் இந்த நாட்டொடு கொண்ட தொடர் பினையும் எண்ணிக்கொண்டே என்னை மூவாயிரம் ஆண்டு களுக்கு முன் பிறந்த ஒருவனாக்கிக்கொண்டு - அந்த வரலாற்று வாழ்வுக்கிடையில் வாழ்வதாக எண்ணிக் கொண்டே - என்னை மறந்த நிலையில் அப்படியே உறங்கி விட்டேன். காலை முறைப்படி 5 மணிக்கு எழுந்தேன்.

இலண்டன் 11-4-1985

காலை எழுந்து கடன்களை முடித்துக்கொண்டு, நாட் குறிப்பினை எழுதி, காலை உணவு கொண்டு லண்டனுக்குப் புறப்படத் தயாரானேன். புறப்படுமுன் நான் தங்கிய விடுதியில் உள்ள தாயர் நடத்தும் குழந்தைகள் பள்ளி ஒன்றினைக் கண்டேன். சில விளையாட்டுக் கருவிகள் இருந்தன - நூல்கள் கிடையா - ஆடியும் பாடியும் வேடிக்கையாகக் கதை சொல்லியும் பொழுது கழியுமாம். நல்ல தூய உடை; வேடிக்கையான பொழுதுபோக்கு; தூய்மையான சுவர்கள் - தரை - சுற்றுச் சார்வு.

9 மணிக்குப் புறப்பட்டு, 'போப்பாண்டவர்' வாயிலுக்கு வந்தேன். திரு. குழந்தைராஜும் இங்கே வானொலியில் பணியாற்றும் அன்பர் ராஜனும் வந்தனர். நான் வந்தது அவருக்கு இன்று காலைதான் தெரிந்ததாம். முன்னே தெரிந்திருந்தால் வானொலியில் பேட்டி அமைத்திருக்கலாம் என்றனர். பின் புகைப்படம் எடுத்துக்கொண்டோம். குழந்தைராஜ் உண்மையிலேயே குழந்தைமனம் உடையவர். என்னுடைய பாரம் தாங்கும் பெட்டியை அவரே எல்லா இடங்களுக்கும் சுமந்து வந்ததோடு, கடைசிவரை வந்து பஸ்ஸில் ஏற்றிவிட்டார். அவரைப் பிரியும்போது நான் கண்கலங்கினேன். இரண்டே நாள் பழகியபோதிலும் அவர் என் உள்ளத்தில் நிறைந்துவிட்டார். எனவே 'உள்ளப் பிரியும்' நிலையில் நின்றேன். பஸ் புறப்பட்டது.

12 மணிக்கு விமான நிலையத்துக்கு வந்து 1-15க்குப் புறப்படவேண்டிய விமானத்துக்காகக் (British Air ways) காத்திருந்தேன். இங்கெல்லாம் போலீஸ், சுங்கம் முதலியன சாதாரணமே; அனைவரையும் பெருந்தன்மையாக நடத்து கின்றனர். விமானநிலையம் பெரியது. ஐரோப்பிய நாடு களுக்கும் ஆப்பிரிக்கா ஆசிய நாடுகளுக்கும் பாலமாக இந்த உரோம் - இத்தாலியின் தலைநகரம் இருந்தமையின் பல நாட்டு விமானங்களும் இங்கே இருந்தன. ஜப்பான் நாடு தொடங்கி அமெரிக்க நாடுவரை - ஆப்பிரிக்காவின் பல நாடுகள் உட்பட பல நாடுகளின் விமானங்கள் இருந்தன. அப்படியே அவை விரைந்து செயல்பட்டன. நான் இருந்த சுமார் ஒரு மணி நேரத்தில் 20 விமானங்கள் கிளம்பிச் சென்றன என்றால் அதன் எல்லை தெரிகிறதல்லவவா உள்நாட்டு வெளிவிநாட்டு விமானநிலையங்கள் தனித்தனி யாக உள்ளன. ஒரு பெரிய ஜப்பான் விமானம் நின்றிருந் தது. இன்னும் மாலைப் பொழுதிலும் இரவிலும் அதிகமான விமானங்கள் போக்குவரத்து உண்டு என்றனர். நான் வியந்தேன்.

சரியாக 1-15க்கு விமானம் புறப்பட்டது. மிக உயர்ந்து கடலை ஒட்டியே சென்று உயரிய ஆல்ப் மலையைக் கடக்கும்போது 16,000 அடிக்கு மேலாக இருக்கும். கீழே பனி மூடிய மலைகள் நன்கு காட்சி அளித்தன. மேகங்கள் எங்கோ கீழே ஓடின. குளிர்ந்த பானம் அளித்தனர். உணவு அளிக்குமுன் நான் அசைவ உணவு வேண்டாம் என்று சொல்லியும், பயணச்சீட்டில் அது பற்றிய குறிப்பு இருந்தும், விமானப் பணிப்பெண் மீன் கலந்த உணவினைப் படைத் தாள். நான் பக்கத்தில் இருந்தவரைக் கேட்டேன். அவர் அரேபியாவில் செயலாற்றும் ஆங்கிலேயர். அவர் உடனே பணிப்பெண்ணை அழைத்து அரிசி சாப்பாடு கொண்டுவரச் சொன்னார். அரிசி உணவு அங்கே உண்டா என வியந்த வேளையில் நல்ல அரிசிச் சோறு, பச்சைப்பட்டாணி முதலிய கறிகள் கலந்து பக்குவப்படுத்தப்பட்ட வகையில் கொண்டு

வந்து வைத்தனர். நன்கு அமைந்து ருசியாகவும் இருந்தது. ஐஸ், குளிர்பானங்கள், காப்பி முதலியவையும் அளித்தனர்.

உடனிருந்த ஆங்கிலேயர் தமிழ்நாட்டைப்பற்றியும் பழங்காலத்தில் அரெபிய, மத்திய தரைக்கடல் நாடுகளுடன் கொண்ட தொடர்புகள் பற்றியும் பேசினார். நானும் விளக்கினேன். பல கருத்துக்களை அறிய விரும்பினார்; சொன்னேன். நேரம் சென்றதே தெரியவில்லை. இலண்டன் விமான நிலையத்தே 3 15க்கு (அந்த நேரப்படி) விமானம் இறங்கியது. அவர் வெளிவரும் வரையில் என்னுடன் இருந்து, சாமான்கள் எடுக்கும் வரையில் உதவி, பிறகு புறப்பட்டுச் சென்றார். நான் என் சாமான்களை எடுத்துக் வெளியே வர மணி 3.45 ஆகிவிட்டது. வெளியே வந்தேன். ஆனால் யாரும் அழைக்கவில்லை, செய்வதறியாது திகைத்தேன். தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். ஆடவர் யாரும் வீட்டில் இல்லை. அதற்குள் 4.15 ஆகி விட்டது. பக்கத்தில் யாழ்ப்பாணத்து அன்பர் தம் துணைவியாருடன் வந்திருந்தார்; அவர்தம் தமையனார் வருகைக்காகக் காத்திருந்தார். வெளியில் நல்ல மழை - குளிர். அவர் தாம் வேறு திசையில் செல்ல வேண்டியிருந்த தால், என்னை உடன் அழைத்துச்செல்ல (அவர் தமையனார் காரில்) இயலாநிலைக்கு வருந்தினர். பின் அவரே என் சாமான்களை டிராலியில் கொண்டு, பாதாள இரெயிலில் 'YMCA'க்கு அருகிலுள்ள நிலையத்துக்கு டிக்கெட் எடுத்து அனுப்பிவைத்தார். பின் குறித்த இடத்தில் இறங்கி, வாடகை வண்டியில் ('YMCA') இந்திய மாணவர் விடுதிக்கு வந்தேன். அங்கே இருந்த அன்னையர் அன்போடு ஏற்று, எனக்கு ஓர் அறை தந்து உதவினார்கள். உணவும் இங்கே உண்டு - மரக்கறி உணவே. எனவே என் அறைக்குச் சென்று சிறிது நேரம் ஓய்வு கொண்டேன். ஏழு மணிக்கு உணவு; எனவே அதற்குரிய இடத்துக்குச் சென்றேன். இன்று இங்கே தங்குப வர்தம் குடும்ப விருந்து என அமைத்திருந்தனர். இப் பகுதித் தலைவர் திரு. தாமஸ் என்பார் தலைமை வகித்தார். நல்ல அரிசி, பூசணிக்காய்கறி, உருளைக்கிழங்கு சாம்பார், ஐஸ்

கிரீம், தயிர் பச்சடி ஆகிய நம் நாட்டு உணவை நன்கு உண்டேன். உணவுக்குப்பின் கூட்டத்தலைவர் இங்கே விடுதியிலேயே தங்கிப் படிக்க வந்துள்ள வெளிநாட்டு மாணவர் சிலர் செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டி, செம்மையாக வாழவேண்டிய வகையினையும் இந்த மன்றம் எப்படி எப்படி வளர்ந்தது என்பதையும் வெளிநாட்டவருக்கு - சிறப்பாக இந்தியருக்கு எவ்வெவ்வாறு உதவுகின்றது என்பதையும் விளக்கினார். 8-30க்குக் கூட்டம் முடிந்தது.

நான் வெளியே வந்ததும் இரு அன்பர்கள் (திருவாளர்கள் வீர சிங்கம், தேவதாசு) என்னைத் தேடி வந்தனர். பேசினர்; அறைக்குச் சென்றோம். திரு. தமிழ்மணி அரங்கமுருகையன் அவர்கள் விமான நிலையத்துக்குச் சற்றே தாழ்த்துச் சென்றதாகவும் (நான் புறப்பட்டு 3 நிமிடங்களுக்குள்) அங்கே அந்த யாழ்ப்பாண நண்பரைக் கண்டதாகவும் அவர் நான் 'YMCA' சென்றதைச் சொல்ல, அதன் வழியே பின் தொலைபேசியில் உறுதிசெய்துகொண்டு, அவர் அனுப்ப இவர்கள் இருவரும் இங்கே வந்ததாகவும் அவரும் வந்து கொண்டிருப்பதாகவும் கூறினர். அவரும் அதற்குள் வந்து விட்டார். அனைவரும் அறையில் அமர்ந்து பலப்பல பொருள்களைப் பற்றிப் பேசினோம்.

நான் நடத்தும் பள்ளியினைப் பற்றியும் அதன் முறை முதலியனபற்றியும் கேட்டறிந்தனர். அவர்கள் பிள்ளைகளுக்கு இங்கே தமிழ் பயில வாய்ப்பே இல்லை எனவும் தமிழ் நாட்டு அரசாங்கம் எவ்வளவு வேண்டியும் வெளிநாட்டுத் தமிழர்களுக்கு ஒன்றும் செய்யவில்லை எனவும் வருந்திக் கூறினர். அமைச்சர்கள் நெடுஞ்செழியன், இராசாராம் போன்றவர்களும் பிற தலைவர்களும் வந்தபோதும் பல குறைகளை முறையிட்டும், ஆவன செய்வதாகச் சொல்லிச் சென்றவர்கள், பல நினைவூட்டுக் கடிதம் எழுதியும் ஒன்றும் செய்யவில்லை என்றனர். தமிழ்நாட்டுப் பாடநூல்கள் உயர்ந்த தரமுள்ளனவாக உள்ளமையின் இன்னும் எளிய வகையில் பயிலப் பாடநூல்கள் வேண்டும் என்று கேட்டும்

அரசாங்கமோ பிறரோ ஒன்றும் செய்யவில்லை என்றனர். நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தோடு தொடர்பு கொண்டுள்ளமையின் அங்காவது செய்யமுடியுமா என்றனர். தமிழ்ப்பல்கலைக்கழகச் சார்பில் சென்ற ஆண்டு இங்கே வந்த ஒருவர் ஏதேதோ செய்வதாகச் சொல்லிச் சென்று எழுதிய கடிதங்களுக்குப் பதில் கூடப்போடவில்லை என வருந்தினர். தற்போது புலவர் நன்னர் வழியே ஏதோ ஒரு நூலைத் தயார் செய்வதாகவும் அதன் செலவு முழுவதையும் திராவிட கழகம் ஏற்றுக்கொண்டு விரைவில் அனுப்ப இருப்பதாகவும் கூறினர். இங்கே தமிழுக்குத் தனியாகப் பள்ளி இல்லையாதலால், வாரத்தில் ஒரு நாள் சனிக்கிழமையில் தமிழைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்துள்ளனர். அதற்கும் முறையான ஆங்கிலப்பள்ளியில் இடம் பெற, பெரிதும் இடர்ப்பட்டு முயன்று பெற்றார்களாம். தற்போது 150 பிள்ளைகள் சேர்ந்திருந்தாலும் மிகக்குறையாகவே சனிக் கிழமை தொறும் பிள்ளைகள் வருவதாகச் சொன்னார்கள். இது போலவே இலண்டனில் பிற படுதிகளிலும் இந்நாட்டில் பிறபகுதிகளிலும் பள்ளி தொடங்க விருப்பம் உண்டு என்றும் தமிழ்நாட்டு அரசாங்கமோ - தமிழ்ப் பல்கலைக்கழகமோ முயன்று, இத்தரத்துக்கு ஏற்பப் பாடநூல்களைத் தயாரித்துக் கொடுத்தால் பயன்விளையும் என்றும் கூறினர். பொதுவாக, தமிழக அரசு வெளிநாட்டுத் தமிழர்களை - தமிழ்மொழி பயிலும் வகையில் ஆற்றுப்படுத்த ஒன்றும் செய்யவில்லை என வருந்தினர். திரு. இராசாராம் அவர்கள் மௌரிஷியஸ், பிஜி முதலிய தீவுகளுக்குச்சென்று அங்குள்ள தமிழர் நிலை அறிந்து, அவர்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்கில் நூல்கள் அனுப்பியுள்ளதைச் சுட்டினேன். எனினும் அந்த வகை உதவி உண்மையில் பயன்படாது என்றும் அந்நூல்கள் அலமாரிகளில் தூங்கும் என்று கூறி, தமிழ்ப் பிள்ளைகள் எளிதாகப் பயிலும் வகையில் - படம் காட்டி - எழுத்தினை எண்ணி எண்ணிக்கூட்டி வண்ணப்படச் சோலை அமைத்து - பிள்ளைகள் உளங்கொள்ளும் வகையில் நல்லத்தமிழ்ச் சொற்களை மெல்ல மெல்லப் பயிலும் வகையில் பாடநூல்களை வெளி

நாட்டுமக்களுக்கு வழங்கினால் நிச்சயமாக அவ்வந்நாட்டுப் பிள்ளைகள் தமிழில் பற்றுகொண்டு பயில்வர் என்றனர். (தமிழர் மட்டுமன்றிப் பிறமொழியாளரும் பிறநாட்டவரும் தமிழ் கற்க விரும்புவதையும் கூறினர்) பின் மெல்ல மெல்ல மேல் வகுப்புகளில் தமிழர் மரபு, பழக்கவழக்கங்கள், விழாக்கள், பண்பாட்டு நிலைக்களன்கள் இவைபற்றியும் குறள் போன்ற இலக்கியங்கள் பற்றியும் பயில வாய்ப்பு உண்டாக்கலாம் என்றனர். தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டாருக்குத் தமிழ் பயிற்றும் துறை ஒன்று உண்டு என்று நான் கூற, அது எங்கோ ஒருவர் இருவரை வரவழைத்து சில நாட்கள் இருக்கவைத்து ஏதோ படிப்பதாகக் காட்டி அனுப்புவதாகவும் அதனால் உண்மையில் தமிழுக்கோ உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கோ பயன் ஒன்றுமில்லை என்றும் கூறினர், நான் ஊர் சென்றதும் துணைவேந்தர் அவர்களைக்கண்டு, இவர்கள் விரும்பும் வகையில் வெளிநாட்டுத் தமிழர் தமிழ் பயில வழி வகைகளைக் காணுமாறு கேட்டுக் கொள்வேன் என்றேன். எனினும் பல பெருந்தலைவர்கள் என்னென்னவோ சொல்லிச் சென்றும் பயனில்லையாதலால் இதையும் ஏற்க அஞ்சினர்!

ஒன்று மட்டும் நிச்சயம் தெரிகிறது. கோடி கோடியாகக் கல்விக்குச் செலவிடும் தமிழக அரசு, ஒரு சில இலட்சங்களை ஒதுக்கி, ஏங்கெங்கோ அன்னைத் தமிழை மறந்து, அன்னையை அறியத் துடிக்கும் பிற நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு நூல்களை எழுதி இனாமாகக் கொடுத்து உதவினால் எங்கும் உள்ள தமிழர்கள் நலம் பெறுவர். உண்மையில் தமிழ் மரபு, நாகரிகம், பண்பாடு இவற்றின் அடிப்படையில் அமைந்த மொழி உலகெங்கணும் பிறரெலாம் போற்றும் வகையில் வளர்ச்சியுறும். தமிழகம் வந்ததும் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும் கல்வி அமைச்சருக்கும் இவைபற்றிச் சொல்ல நினைத்தேன். அவர்கள் என் சொல்லை ஏற்றுக்கொள்வார்களா என்பதற்கு எதிர்காலம்தான் பதில் சொல்லவேண்டும். மணி பத்தாயிற்று. அவர்கள் விடைபெற நான் உறங்கினேன்.

இலண்டன் 12-4-85

நல்ல உறக்கம்; எனினும் ஐந்து மணிக்கு விழித்துக் கொண்டேன். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, நேற்றைய குறிப்புக்களை எழுதி முடித்தேன். மணி 8 ஆயிற்று. எனவே காலை உணவுக்கு நேரமாக - நேரே உண்ணும் இடம் சென்று உணவு கொண்டேன். பிறகு இலண்டன் நகரைச் சுற்றிப் பார்க்க நினைத்தேன். முந்நாள் இரவே அன்பர்கள் செல்லும் வழியெல்லாம் சொன்னார்கள். அப்படியே பாதாள இரெயில் வழியே விக்டோரியா நிலையம் சென்றேன். அதன் அமைப்பும் தோற்றமும் சிறந்தன. மிகப் பெரிய இடம். பலவிடங்களுக்குச் செல்ல உந்து வண்டிகள். உல்லாசப் பயணம் சுற்றுலா முதலியன தொடங்கும் இடமாகவும் இருந்தது. எங்கும் 'பரபரப்பு. இங்கே காலை 9 மணிக் கெல்லாம் எல்லா அலுவலகங்களும் தொடங்கும். எனவே இரெயில், பஸ்போக்கு வரத்து மிகநெரிச்சல். எல்லோரும் - ஆண் பெண் அனைவரும் ஓடிக்கொண்டே இருக்கிறார்கள். இங்குள்ளவர்கள் பணியிடைக் கருத்திருத்தி, காலம் தாழ்க்காது உரிய வேளையில் சென்று உரிய வேலைகளைச் செய்கின்றனர். சில அலுவலகங்களில் சென்று பார்த்தபோதும் அவரவர் தத்தம் பணிகளில் முற்றும் ஈடுபட்டிருப்பதை உணர்ந்தேன். 'Work Concience' என்னும் செயல் முனைவு இங்கே நூற்றுக்குநூறு உண்டு. இங்கே வண்டிகள் நம் ஊரைப் போன்றே இடப்பக்கம் (Keep to the left) செல்லுகின்றன. மொழியும் தெரிந்ததே. எனவே அதிகத் தொல்லை இல்லை.

காலை 9-30க்கு இலண்டன் நகரைச் சுற்றிப் பார்ப்பதற்குரிய சீட்டினை வாங்கிக் கொண்டு, அதற்கென அமைந்த இரட்டைமாடி வண்டியில் மேலே சென்று அமர்ந்தேன். சரியாகப் 10 மணிக்குப் புறப்பட்டு 12 மணி அளவில் திரும்பி வந்தது. எங்கும் இறங்கவில்லை யாயினும் (உரோம் நகரில் சிலவிடங்களில் இறங்கி உள்ளே சென்று கண்டத்தைக் குறித்தேன்) எல்லா இடங்களையும் வண்டியிலிருந்தே காண வாய்ப்பு இருந்தது. வழிகாட்டியாக இருந்த பெண் எல்லாவற்றையும் நன்கு விளக்கினார். பல குடியிருப்புக்களைக் கண்டோம். இங்கே நம் நாட்டைப் போன்று மக்கள் அதிகமாக நடக்கின்றனர். ஒரு வேளைக் 'கார்'கள் இங்கே எண்ணிக்கையில் குறைவு போலும். பாரிஸ், ரோம் முதலிய இடங்களைக் காட்டிலும் நடைபாதையைப் பயன்படுத்துவர் இங்கே அதிகம். விக்டோரியா இரெயிலடியில் இருந்த அரை மணி நேரத்தில் கடலென மக்கள் வெள்ளம் அலை புரள்வதைப் போல், அசைந்து ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டேன். உந்து வண்டியில் மேல் தளத்தில் இருந்தமையால் மக்கள் நடமாட்டம் மிக நன்றாகத் தெரிந்தது. அப்படியே சுற்றி வந்த பல இடங்களிலும் அதிக மக்கள் நடந்தே சென்றனர். ஒரு வேளை வெளிநாட்டு மக்கள் அதிகமாக இங்கே உள்ளமையின் இந்த நிலையோ என எண்ணினேன். வண்டி சரியாகப் பத்து மணிக்குப் பயணம் தொடங்கியது.

15ம் நூற்றாண்டு தொடங்கி, அவ்வப்போது ஒவ்வொரு நூற்றாண்டிலும் எழுந்த கட்டடங்களையும், கோயில்களையும், அலுவலகங்களையும், வேற்றுநாட்டார் அலுவலகங்களையும் அவற்றைச்சுற்றியுள்ள மாளிகைகளையும் விளக்கிக் காட்டினர். உலகிலேயே மிகப் பெரிய பூங்காவிடைச் சென்று—அதை சார்ந்த சாலைகளில் நெடுந்தூரம் சென்று காட்டினர். உலகிலேயே பெரியது என்றனர். அப்படியே தெம்ஸ்நதி ஓரமாக இருப்பக்கத்திலும் சென்று அங்கே நிற்கும் விசைப்படகுகள், சிறுகப்பல்கள் ஆகியவற்றைக் காட்டினர். நம் பாம்பன் பாலத்தைப போன்று, சில இடங்களில் உள்ள

பாலங்கள் - தொங்கு பாலங்களாகி, கப்பல் செல்லும்போது நிமிர்ந்து வழிவிட்டும், பிறவேளைகளில் அமைந்து தரைப் போக்குவரத்துக்குத் துணையாகவும் இருந்தன. ஒன்றின் அருகில் சென்று நிறுத்தி அதன் தன்மையை விளக்கினார்கள். படகு வீடுகளும் இருந்தன. படகில் இலண்டனைக் காணும் வசதியும் உண்டு. ஆறு அகலமின்றேனும் ஆழமாக உள்ளது போலும். தண்ணீர் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. வழியிடை ஆங்காங்கே எண்ணற்ற சிலைகள் இருந்தன. சில விடங்களில் கழுகுச் சிலைகள் இடம் பெற்றன. (உரோம் நகரிலும் அத்தகையை சிலைகள் இருப்பதைக் கண்டேன்) இரண்டினையும் தொடர்பு படுத்த முயன்றேன். தக்க சான்று பெற முடியவில்லை. எல்லாவிடங்களிலும் இடையில் சிறு பூங்கா, சுற்றிலும் குடியிருப்புப் பகுதிகள் - பெருபாலும் 5 மாடிகள் - இருந்தன. இலண்டனில் புதிய அமைப்புக்கள் இந்த வகையில் அமைய, இதே நிலையில் தில்லி 'காரோல்பாக்' எல்லையில் இருப்பதைகண்ட நான், இந்த லண்டன் அமைப்பை ஒட்டியே அதையும் அமைத்தார்களோ என எண்ணினேன்.

1960 முதல் கட்டிய பல கட்டடங்கள், கிழக்கியக் கம்பெனிக்கு உரிய இடம், பக்கிங்காம் அரண்மனை; பார்லிய மெண்ட் கூடம், தலைமை அமைச்சருக்கு உரிய 10 டவுனிங் தெரு, உயர்நீதி மன்றம், பிற மன்றங்கள், லாட்ஸ் சாலை கூடும் இடம், நகரத் தந்தையின் இடம் (Lord Mayor of London) அவற்றைச் சேர்ந்த அலுவலகங்கள், பிறநாட்டுத் தூதுவரகங்கள் (சில, ஆங்கிலேயர், அமெரிக்கருக்கு இனாமாக வும் ஆண்டுக்கு ஒரு பவுண்டு எனப் பேருக்கு வாடகை பெறும் வகையிலும் தரப்பெற்றுள்ளன). இங்கிருந்து வெளிவரும் Daity Telegraph, London Times. Sunday Editions ஆகிய நாளிதழ்களும் பிறவும் வெளிவரும் கட்டடங்கள் அனைத்தை யும் கண்டேன். ஒருவிடத்தில் பெரிய படுத்த நிலை யிலே உள்ள சிங்கங்கள் இருபுறமும் இருக்கும் சிலைகள் இருந் தன. அவற்றின் முகம் மனிதமுகமாக இருந்தது. இலண்டன்

நுழைவாயில் என்ற பகுதியினையும் கண்டேன். இலண்டன் கோபுரமும் கண்டேன். பலவிடங்களில் மிக உயரிய கோபுரங்களும் அவற்றின் மேல் பலப்பல சின்னங்களும் இருப்பதைக் கண்டேன். இலண்டனில் உண்டான பெருந் தீ விபத்தில் பாழாகிச் செம்மையாக்கப் பெற்ற கட்டடங்களையும் காட்டினர். அப்படியே கார்கள் செய்யும் தொழிற்சாலைகள் காட்டப்பெற்றன. பழங்காலத்திய செல்வர்தம் மாளிகை வங்கிகள், காசோலைகள் மாற்றும் இடம் (Exchange office) பல பெரும் வியாபார நிலையங்கள் கண்டேன். அப்படியே சர்ச்சில், ஆப்பிரகாம்லிங்கன் போன்றோர் தம் சிலைகளைத் தெருமுனைகளில் கண்டேன். பெரிய நூல்நிலையம் பல்கலைக் கழகக் கட்டிடம், வெஸ்டுமினிஸ்டர் ஆபே எனும் இடம் ஆகியவற்றையும் காட்டினர். அவற்றுள் சிலவற்றை நான் நாளை உள் சென்று காணவேண்டும். வில்லியம் ஷேக்ஸ்பியர் போன்றார் வாழ்ந்த இடம், பிற அறிஞர் அரசியலாளர் வாழ்ந்த இடங்கள் ஆகியவற்றையும் கண்டேன். இந்தியத் தொடர்புடைய சில கட்டடங்கள் கண்டேன்.

இங்கே பல இட்ங்களில் 'வாடகைக்கு விடப்படும்' என்ற பலகைகளைக் கண்டேன். அவை பெரும்பாலும் வாணிபத்துக்கும் வங்கிகள் போன்றவை இருப்பதற்கும் ஏற்ற இடமாக இருந்தன. எனவே இவ்வளவு நெருக்கடியிலும், பல இடங்கள் காலியாக உள்ளமை, ஒருவேளை இங்கே வாணிப வளம் குறைந்து விட்டதோ என்ற உணர்வை உண்டாக்கிற்று. அப்படியே சிலவிடங்கள் 'விற்பனைக்கு' என்ற விளம்பரங்களைக் கொண்டிருந்தன. இவற்றை நோக்கும் போது இலண்டனில் செல்வ வளம் ஓரளவு சரிந்திருக்குமோ என்றும் நினைக்கத் தோன்றுகின்றது. உலக வரலாற்றில் எத்தனையோ வகையில் பங்கு கொண்ட இடங்களைச் சுற்றிப்பார்க்கும்போது, என் எண்ணம் மிகப் பின் நெடுந் தூரம் சென்றது. இந்த இலண்டனில் எத்தனையோ மாநாடுகள் சமாதானக் கூட்டங்கள் - போர்க்கால முழக்கங்கள்

பண்பாட்டு நிலைக்களன்கள், நடைபெற்று, வாழ்ந்து, வளர்ந்து, நிலையுற்றும் நிலைகெட்டும் நின்ற தன்மைகளை யெல்லாம் எண்ணிக்கொண்டே எல்லா காட்சிகளையும் கண்டுகொண்டே வந்தேன். உந்து வண்டியும் 12-30 மணி அளவில் விக்டோரியா நிலையத்தில் வந்து நின்றது.

காலையில் நல்ல வெப்ப நிலையில் வெளிக் கிளம்பினேன். 12 மணிக்குத் திடீரெனக் குளிர்காற்று வீசத் தொடங்கிற்று. குளிர் அதிகமாயிற்று. இன்னும் கோடை வரவில்லை எனவும் இடையில் ஒருசில நாட்கள் இத்தகைய மாறுபாடுகள் இருக்கும் என்றும் இன்னும் இரண்டு மூன்று நாட்களில் கோடை நிலைபெற்று, நல்ல வெப்பச்சூல் உருவாகும் என்றும் கூறினர். நான் நேராக அஞ்சல் நிலையம் சென்று கடிதங்கள் வாங்கிக் கொண்டு அறைக்கு வந்தேன். பின் ஊருக்கும் அமெரிக்காவிற்கும் (நியூயார்க்) கடிதங்கள் எழுதி, பகல் 2 மணி அளவில் அஞ்சலகம் சென்று பெட்டியில் இட்டேன். இங்கே சனிக் கிழமைகளில்கூட அஞ்சலகம் திறப்பு இல்லை என்றனர். எங்கோ ஓரிடத்தில் ஒரு பெரிய அஞ்சலகம் மட்டும் செயலாற்றும் என்றனர். மூன்று மணிக்குப் பெட்டியைத் திறந்து எடுப்பராம். நான் செவ்வாய்க்கிழமை (16-4-85) நியூயார்க் செல்வதால், அங்கே விமான நிலையத்துக்கு வருமாறு அன்பர்களுக்கு எழுதிய கடிதம் அதற்குள் சேருமா என்ற ஐயம் எழுந்தது. எனவே நாளை தந்தி கொடுக்க முடிவு செய்தேன். உணவுக்குப் பின் சற்று நேரம் ஓய்வு கொண்டேன். அன்பர்கள் இன்று மாலை அல்லது நாளை காலை வருவதாகச் சொல்லிச் சென்றனர்.

மாலை 5 மணி அளவில் திரு. ஞானசூரியன் அவர்கள் வந்தார். இரவு 8-30 வரை உரையாடிக் கொண்டிருந்தார். இவர் யாழ்ப்பாணத்தவர்; இங்கேயே தங்கிச் செயலாற்றுகின்றவர். அறிவியல் அறிஞர் (M. Sc.,). சொந்தமான இடம் கொண்டு, ஒரு மகனையும் இரு பெண்களையும் படிக்க வைத்து, பணிகளில் ஈடுபடுத்தியுள்ளார். (கடைசி மகள் படிக்கிறாள்). சைவசமயத்து ஆழ்ந்த பற்றுள்ளவர். சென்ற

ஆண்டு, தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகம் வெளிநாட்டுத் தமிழர்களுக்காக நடத்திய வகுப்பில் பயிலுவதற்கென வந்து ஒரு மாதம் தங்கி இருந்தார். நான் அப்போது அங்கே காண வில்லையாயினும், இங்கே அவர் வந்த பின் எல்லாத் தகவல் களையும் சொன்னார். இவரும் வெளிநாட்டில் உள்ள தமிழர் அவல நிலையினையும் சிறப்பாகச் சைவ சமயத்தவர் உள்ள தன்மையினையும் விளக்கினார். இலண்டனில் 30,000 சைவத் தமிழர் உள்ளனர் என்றும் சில கோயில்களும் உள்ளன என்றும் அவற்றைக்காணவோ, சிறப்புச் செய்யவோ தமிழ் நாட்டு மடாதிபதிகள் யாரும் முன் வரவில்லை என்றும் கூறி வருத்தமுற்றார். சைவ சித்தாந்தத்தில் ஆழ்ந்த பற்றுள்ளவர்; அது பற்றிச் சில நூல்களும் எழுதியுள்ளார்.

எங்கள் பேச்சு பல கோணங்களில் சென்றது. நம் சைவ சமயம் எவ்வெவ்வாறு வளர்ந்தது என்பதையெல்லாம் சுட்டி, இன்று உலகெங்கணும் பரவி இருப்பினும் தமிழ்நாட்டு மடாதிபதிகள் இதுபற்றிக் கவலையுறாது இருப்பதைப் பற்றிக்கூறி, அவர்களுக்கும் தாம் பலமுறை கடிதங்கள் எழுதி யும் பயனில்லை என நைந்தார். பிற சமயத்தவர் - சிறப் பாகக் கிறித்தவர்களுக்கு குருமார்கள் வழிகாட்டுவதைப் போன்று, நம் சமயத்ததருக்கு - சிறப்பாகச் சைவ சமயச் சித்தாந்திகளுக்கு யாரும் வழிகாட்ட இல்லையே என வருந்தினார். வேதாந்திகளுக்காயினும் சில தலைவர் கள் உள்ளமை காட்டினார். தாம் தமிழ்நாட்டுக்குப் பல முறை வந்துள்ளதாகவும் பல கோயில்களைக் கண்டதாக வும் கூறினார். தற்போதைய தமிழ்நாட்டு அரசாங்கம் இத்துறையில் செய்துவரும் சில சீர்த்திருத்தங்களைப் பாராட்டிப் பேசினார். இவர் உள்ளத்தின் தன்மை உணர்ந்த நான், பல கருத்துளைக் கூறித் தெளிய வைத்தேன்.

ஏழு மணிக்கு உணவு வேளை. எனவே என்னுடனேயே அந்த உணவு அறைக்கு வந்து இருந்தார். கடைசியில் பழக் கலவை, காப்பி மட்டும் உடன் உண்டார். இன்றும் நல்ல அரிசி உணவு, மோர்குழம்பு, நல்ல பதார்த்தங்கள் இருந்தன.

நம்ஊர்ச் சாப்பாடு இரண்டு நாளாக இங்கே 'YMCA'வில் உண்டு மகிழ்ந்தேன். பின் இதை நடத்தும் தலைவர் திரு. தாமஸ் அவர்களை இரு செயலாளர்களுடன் கண்டேன். அனைவரும் சென்னையில் பயின்றவர்கள். எனவே நான் பச்சையப்பன் கல்லூரியிலிருந்து வந்தவன் என்றதும் என் பெயரை அவர்களே சொல்லிக் கேட்டனர். நான் 'ஆம்' என்றேன். முதல்நாள் தலைவர் பேசிய உரையின் உணர்வைச் சுட்டி, அவர் செயல் நன்கு சிறக்க என வாழ்த்தினேன். பின் திரு. ஞான சூரியன் அவர்கள் மறுபடியும் அறைக்கு வந்து 8-30வரை பேசிக் கொண்டிருந்தார். நாளை காலை திரு. தமிழ்மணியிடம் சொல்லத் தக்காரை அனுப்புவதாகவும் சில இடங்களை நேரில் காண வேண்டும் எனவும் சொல்லிச் சென்றார். தெலைபேசியில் இன்று தொடர்புகொண்ட திரு. கண்ணன் அவர்களும் கிருபாகரன் அவர்களும் ஞாயிறு காலை - நாளை - நான் தங்கப் போகும் இடத்திற்கு வருவதாகச் சொன்னார்கள். அன்று பல தமிழ் அன்பர்களைக் காண ஏற்பாடு செய்திருந்தனர். வெளியே சற்றே குளிராயிருப்பினும் அறையில் வெம்மை இருந்தது. எனவே நான் 9 மணி அளவிலே உறங்கத் தொடங்கிவிட்டேன். காலை 4-30க்கு எழுந்தேன்.

இலண்டன் 13-4-85

விடியற்காலை முறைப்படி எழுந்து, காலைக்கடன்களை முடித்துக் கொண்டு 7.30 மணி அளவில் நேற்றைய குறிப்புக் களை எழுதிமுடித்து, நண்பர்களை எதிர்நோக்கி இருந்தேன், வந்தனர். திரு. சுந்தரம் என்னும் அன்பர் 9 மணி அளவில் வந்தார். காலைச் சிற்றுண்டி முடித்து நின்ற நான் என் அறையினைக் காலி செய்துவிட்டு அவருடன் புறப்பட்டேன். பாதாள ரெயில் வழியே அவருடன் சென்றேன். அவர் புதுக் கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் குடும்பம் ஊரில் உள்ளதென்றும் மூத்தமகன் திருப்பத்தூர் (மதுரை அடுத்தது) கல்லூரியில் 'பி. எஸ்சி' படிக்கிறான் என்றும் கூறினார். தீவிரத் தமிழ்ப்பற்றும் நாட்டு வளர்ச்சியில் நாட்டமும் கொண்டவராக இருந்ததோடு, இன்றைய தமிழக அரசியல்பற்றியும் நன்கு அறிந்திருந்தார். நெடுந் தூரம் சென்றபிறகு ஓரன்பர் - திரு. இரத்தினம் என்பவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கே பெரியார், அண்ணா போன்ற தலைவர்தம் படங்களுடன் திருவள்ளுவர் படமும் பெரிய அளவில் மாட்டப்பெற்றிருந்தன. அப் பகுதி யில் பல தமிழர்கள் வாழ்கின்றார்களென்றும், பெரும்பாலும் சிங்கப்பூரில் இராணுவத்துறையில் வாழ்ந்து, சிங்கப்பூர் விடுதலை அடைந்த ஞான்று அவர்களுள் விரும்பியவரே இங்கே குடியேற்றினார்களென்றும் கூறினர். மேலே சொன்ன சுந்தரம் அவர்களும் அவ்வாறு வந்தவரே. இருவரும் வேறு சில அன்பர்களும் திராவிட கழகத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள் என அறிந்தேன். இப் பகுதியில்

தமிழர் முன்னேற்றக் கழகம் செயல்படுகின்றது. தமிழ் குழந்தைகளுக்கெனச் சனிக்கிழமை தோறும் வகுப்புகள் நடத்தும் பள்ளி ஒன்று திருவள்ளுவர் பெயரால் உள்ளதோடு, தமிழர்களை ஒன்று சேர்த்து, கூட்டங்கள் விழாக்கள் நடத்துவதாகவும் கூறினர். பலர் நல்ல தமிழ் நூல்களை தங்களுக்கெனவே வாங்கி வைத்திருந்தனர். விடுதலை இதழ் இங்கே பலர் வாங்குகிறார்களாம். வெளிநாட்டுத் தமிழர்களுக்கெனவே விடுதலை, சிறிய அளவில் முக்கிய நிகழ்ச்சிகளை அடக்கிக் கொண்டதாக, கிழமைக்கு ஒருமுறை வெளியிடப்பெற்று இவர்களுக்கும் பிற நாட்டில் உள்ள தமிழர்களுக்கும் அனுப்பப்பெறுகிறது; கையடக்கமாக முக்கிய நாட்டு நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது. இவர்கள் திரு.வி.க. நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடி மலரும் வெளியிட்டுள்ளனர். பரந்த தமிழ்நாட்டின் படம் ஒன்று அச்சிட்டு (பிற மாநிலங்களிலும் ஈழத்திலும் இணைய வேண்டிய பகுதிகள் காட்டி) பல்ருக்கும் அனுப்பியுள்ளனர். இதன் மூலப்படம் சென்னை கோடம்பாக்கத்தே உள்ள 'தமிழர் விடுதலை இயக்கம்' வெளியிட்டுள்ளது. இவர்கள் தனியாகக் கையெழுத்துப் பிரதியாகத் (படிகள் எடுத்து) திங்கள் வெளியீடும் வெளியிடுகின்றனர். இவர்கள் அனைவரும் தீவிரமான தமிழ்ப்பற்றும் தமிழ்நாட்டு வாழ்வில் அக்கறையும் கொண்டுள்ளனர். இவர்கள் தமிழகம் திரும்பவும் விழைகின்றனர். வீட்டு முகப்பில் பாரதிதாசன் பாடல்களைப் பொருத்தி வைத்துள்ளனர். இங்கே உள்ள வேறு சில தமிழ்க் குடும்பங்கள் வீட்டிற்கும் அழைத்துச் சென்றனர். எங்கும் ஒரே வகை உணர்வினைக் கண்டேன். இவர்களிடம் உள்ள உள்ளக்கிளர்ச்சியும் உணர்ச்சியும் தமிழ் நாட்டில் வாழும் தமிழ் மக்கள் இடையே உண்டானால் தமிழும் தமிழரும் எவ்வளவோ வகையில் முன்னேற முடியுமே என எண்ணினேன். அனைவர் பற்றினையும் பாராட்டிப் போற்றினேன்.

பிறகு இங்குள்ள கல்விமுறை, சமுதாய வாழ்க்கை நெறி முதலியனபற்றிக் கேட்டறிந்தேன். பள்ளிகளில் தமிழ்

இல்லை. ஆங்கிலமும் பிற பாடங்களும் உள்ளன. வற்புறுத்தல் கிடையாது. பள்ளியிலேயே பால் உணர்வு காட்டும் பாடங்களும் படங்களும் உள்ளனவாம். ஐந்து வயதுக்குக் கீழே தனியார் நடத்தும் 'விளையாட்டுப் பள்ளிகள்' (Kinder garden) நடைபெறுகின்றன என்றும் பெரும் பாலும் அங்கே நூல்கள் இரா என்றும் வெறும் விளையாட்டுப் பொருள்கள், பொம்மைகள் உள்ளன என்றும் அவற்றின் வழி எண்ணும் எழுத்தும் ஓரளவு புரியவைக்கப்பெறுகின்றன என்றும் கூறினர். மேலே, பள்ளி வகுப்பிலும் கல்லூரியிலும் உள்ள பாடங்களும் மக்கள் வாழ்வோடு தொடர்புடையன வாக இல்லா நிலையினையும் சுட்டினர். ஏறக்குறைய நம் நாட்டுக்கல்வி முறை போன்றே இங்கே கல்விமுறை அமைகின்றது எனலாம். அதட்டலோ மிரட்டலோ இல்லா மலேயே பிள்ளைகள் அடங்கி முறையாகப் பயிலும் நிலை உள்ளதாம். தமிழ்ப் பிள்ளைகள் படிப்பதற்கு என இவர்கள் நடத்தும் பள்ளிக்கும் அரசாங்கம் இடம் தந்து, ஆகும் செலவிலும் (ஆசிரியர் சம்பளம் முதலியன) பெரும் பகுதி தருகின்றதாம். ஓவியம், கைத்தொழில் போன்ற வகுப்புகளும் இசை வகுப்புகளும் நடன வகுப்புகளும் நம் நாட்டு மரபுக்கு ஏற்ப இவர்கள் நடத்துவதாகவும் அதற்கெனவும் அரசாங்கம் மானியம் வழங்குவதாகவும் கூறினர். மேலும் நம் சமயக் கோயில் கட்டவும் அரசாங்கம் இடமும் பொருளும் தந்து உதவுவதைக் கூறினர். அண்மையில் இந்தப் பகுதியில் சுமார் இலட்சம் பவுனில் கட்டப் பெற்ற (15 லட்ச ரூபாய்) ஒரு முருகன் கோயிலுக்கு 50,000 பவுன் உதவியது என்றனர். மற்றும் அக் கோயில்களில் முறையாக 'சிறப்பொடு பூசனை, நடைபெற ஆண்டுதொறும் மானியம் (சுமார் 1½ லட்சம் பவுன்) தருகிறதாம். பூசைக்கு ஒருவர், பராமரிப்புக்கு ஒருவர் என அவர்களுக்குரிய சம்பளமும் இதில் கணக்கிடப் பெறுகிறதாகும். இவ்வாறு பிற மொழியாளர்களுக்கும் பிற சமயங்களுக்கும் ஆங்கில அரசு உதவுவது சிறந்து போற்றக் கூடிய செயலாகுமன்றோ!

ஆயினும் இங்குள்ள தமிழர் என்பவரில் சிலர் ஒற்றுமை இல்லார் நிலையினையும் சுட்டினர். தமிழ்நாட்டில் வாழும் பிற மொழியாளாரும் இங்கே தங்கி வாழும் நிலையில் இவர்களும் தம்மைத் தமிழர் எனவே கூறிக்கொள்ளுகின்றனர்; எனினும் தமிழ்வளர்ச்சியில் அதிகமாகப் பங்கு கொள்ளாதிருப்பதோடு, தமிழரிடத்தில் பிளவு காணும் செயல்களையும் சிலர் செய்கின்றனர் என்று வருத்தத்தோடும் கூறினர். தமிழ் நாட்டிலிருந்து சில தலைவர் செல்லும்போது அந்த வேறுபாட்டு உணர்ச்சியுடனேயே அவர்கள் செயல்படுவதாக அறிந்தேன். நான் தங்கியிருந்த திரு. இரத்தினம் அவர்கள் வீட்டில் அடிக்கடி தமிழ்நாட்டுத் தலைவர்கள் வந்து தங்கிச் செல்வார்களாம். அமைச்சர் நெடுஞ்செழியன், விடுதலை வீரமணி போன்றோர் அண்மையில் வந்து சென்றனர் என்றனர். இவ்வாறே தமிழறிஞர் சிலரும் வந்து தங்குவது உண்டு போலும். இப் பகுதி தமிழ்நாட்டை போன்றே இருந்தது. தமிழ்நாட்டுக் காய்கறிகள் பிற பொருள்கள் அனைத்தும் கடைகளில் விற்கக் கண்டேன். இங்கே யாரும் எளிதில் தமக்கென ஒரு வீட்டினை வாங்கிக் கொள்ளமுடியும் என்றும் அதற்கு வேண்டிய தொகையை அரசாங்கம் வங்கிகளின் மூலம் குறைந்த வட்டிக்குத் தவணை முறையில் (25 ஆண்டுவரை) தருகிறதென்றும் எனவே பல தமிழர்கள் இப்பகுதியில் வீடுகள் வாங்கியுள்ளார்களென்றும் கூறினர். கடன் வாங்குவதற்கோ பதிவு செய்வதற்கோ பிறவற்றிற்கோ கையூட்டு - லஞ்சம் - தரும் கொடும் பழக்கமோ பிறவோ இல்லாது யாவும் எளிமையாக முடிவுறுவதையும் சுட்டினர். இங்குள்ள அரசாங்கம் பிற நாட்டிலிருந்து வந்து குடியேறும் மக்களையும் தம் மக்களைப்போன்று ஒத்து நடத்தும் உயர்நிலை எண்ணி வியந்து போற்றிப் பாராட்டினேன்.

அரசாங்கம் செய்யும் வேறு சில நல்ல வேலைகளும் உள்ளன: குழந்தை ஒன்றுக்கு வாரத்துக்கு ஆறு பவுன் வீதம் தந்து அவர்களுக்கு வேண்டிய உணவு உடை முதலியன பெற

வசதி செய்கின்றது. அப்படியே ஓய்வு பெற்றவர்களுக்கோ - வயது மூத்தவர்களுக்கோ 'பென்ஷன்' என்பது மட்டுமின்றி வயதானவர் வாடாவகையில் வாரந்தொறும் 50, 60 பவுன் வீதம் இனாமாகக் கொடுக்கின்றது. அப்படியே வேலையற்றோர் யார்யினும் அவர்கள் வேலையில் இருந்தால் பெறும் பங்கில் ஏறக்குறைய முக்கால் பாகம் மானியமாக வழங்குகின்றது. இன்னும் மக்களுக்கு வேண்டிய நல்ல தேவைகள் பெற வழிவகையும் செய்கிறது.

பஸ், ரெயிலில் நான் உரோம், பாரிஸ் ஆகிய நகரங்களில் கண்ட நிலைக்கு மாறாக இங்கே டிக்கெட் கொடுப்பது, வழியில் சரிபார்ப்பது, திரும்ப வெளிவரும்போது வாங்குவது போன்ற வழக்கம் உள்ளது. நம் நாட்டிலும் இவர்கள் ஆண்ட காலத்தில் கொண்ட அதே முறையினைத்தானே இன்றும் பின்பற்றுகிறோம். இதைப்போன்றே சமுதாயத்துக்கு அரசாங்கம் எல்லாம் நான் மேலே சுட்டிய சில உதவிகளையும் பிறவற்றையும் யாதொரு வேறுபாடும் இன்றி நம் நாட்டு அரசாங்கம் உதவினால் மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருப்பார்கள் என எண்ணிப் பார்த்தேன்; செய்வார்களா?

இங்குள்ள தமிழர் அனைவரும் பேசும்போது தூய தமிழ்ச் சொற்களையே பயன்படுத்துகின்றனர். தமிழக அரசியலில் உண்டாகும் மாறுதல்களையும் தலைவர்தம் செயல்களையும் அறிந்து நன்கு அலசிப்பார்க்கின்றனர். எப்படியாவது உலகின் பல பாகங்களில் வாழும் தமிழினம் ஒன்றுபடவேண்டும் என எண்ணுகின்றனர். பிற நாட்டு அரசாங்கம் தமிழுக்கு உதவி செய்யும் அளவிற்குகூடத் தமிழ் நாட்டு அரசாங்கம் தன் மொழிக்கும் அதன் வளர்ச்சிக்கும் செய்யவில்லையே என எண்ணி ஏங்குகின்றனர், ஈழத்தில் வாழும் தமிழருக்கு ஒன்றும் செய்ய இயலாத தமிழக அரசின் அவலநிலை கண்டு கண்கலங்குகின்றனர். பலர் பல தனியார் நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். அரசாங்கத்தில் சிலரே உள்ளனர். (தனியார் நிறுவனங்கள் அதிகமாகச் சம்பளம் தருகின்றன) எந்நிலையில் நின்றாலும்

எத் தொழிலைச் செய்தாலும் மன்னிய சீர்த் தமிழ்மொழியை மறவாமை பொருளன்றே என்ற உணர்ச்சியோடு இங்குள்ள தமிழர் வாழ முற்படுகின்றனர்.

இன்றையபொழுது, வெளியே தூரலும் மழையும் இருந்தமையாலும் முன் ஏற்பாட்டின்படி, தமிழ்ப்பள்ளியின் குழந்தைகளை அவர்தம் பெற்றோருடன் சுற்றுலா அழைத்துக்கொண்டு அன்பர் பலர் சென்றமையாலும் நான் வீட்டிலேயே இருந்தேன். இரண்டு வேளைகளில் இரு அன்பர்தம் இல்லத்தில் உணவு கொண்டேன். பிற்பகலில் 'வீடியோ' மூலம் எடுத்துவைத்திருந்த சிவாஜிகணேசன் நடித்த 'படிக்காத பண்ணையார்' படத்தினை 'டி. வி.'யில் இட்டுக் காட்டினர். சென்னையில் எத்தனையோ ஆண்டுகளுக்குமுன் படம் பார்த்த நான் இங்கே இலண்டனில் இப்படத்தை - நல்ல படத்தைப் பார்த்ததை நினைத்தேன்.

இந்த நாட்டில் விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர். இன்று காலை நான் பாதாள இரெயிலில் வந்தபோது, ஒரு நிலையத்தில் வண்டியில் உள்ள அனைவரும் வேகமாக இறங்கிச் சென்றனர்; நான் நண்பரை அது பற்றிக் கேட்டேன். பக்கத்தில் கால்பந்து போட்டி நடைபெறப்போவதாகவும் அதற்கென இவ்வளவு கூட்டம் என்றும் சொன்னார். மேலும் இதில் ஆடுபவர் யாவராயினும், காண்பவர் தம்முள் கட்சி பிரிந்து போட்டியிட்டு, சண்டையிட்டுத் தொல்லைப்படுவர் என்றனர். தோற்ற கட்சி வழிநெடுக மக்கள் பொருள்களுக்கும் இரெயில் நிலையம் பெட்டிகள் முதலியவற்றிற்கும் பெருஞ்சேதம் விளைப்பார்களாம். இங்கே போலீசுக்குத் துப்பாக்கி கிடையாது; வெறும் தடி மட்டும் உண்டு. அதையும் தம் விருப்பம்போல் மக்களை அடிக்கப்பயன்படுத்த முடியாதாம். எனவே மக்கள் மனம்போன போக்கில் போகின்றனர் போலும். சுட வேண்டிய நிலை நேர்ந்தால் போர்த்துறையினர் வரவேண்டுமாம்.

பொதுவாக மக்கள் அரசியல் அறிவும் தெளிவும் பெற்ற வராக உள்ளனர். பெற்ற மக்கள் 16 வயதுக்கு மேற்பட்டால் அவர்களைத் தனியே பிரித்து விடுவர். தந்தை யார்? தாய் யார்? என்று கேட்கும் அளவுக்கு வாழ்க்கை பிரிந்துவிடும். வேலை இல்லாவிட்டாலும் அரசாங்கம் பணம் உதவுகிறது; வயதானாலும் உதவுகிறது. எனவே வாழ்க்கை பற்றி யாருக் கும் கவலை இல்லை. குடும்பப் பிணைப்பு - பாசம் - பந்தம் என்பது இந்நாட்டு மக்களிடம் காண முடியாதன. ஆனால் இன உணர்வும் நாட்டு உணர்வும் உள்ளன போலும். இங்கே வேலை இல்லாத்திண்டாட்டம் பெருகி வருகின்றதெனவும், எனவே, இளைய தலைமுறையினர் வெளிநாட்டு மக்கள் இங்கே வருவதை விரும்பவில்லை எனவும் அதனால் பிற நாட்டு மக்களுக்குப் பலமுறையில் தொல்லைகள் தருகிறார்கள் எனவும் அறிந்தேன்.

மாலையில் சுற்றுலா சென்றவர் திரும்பினர். திரு வீர் சிங்கம் அவர்கள் மலேசியா நண்பர் ஒருவருடன் வந்தனர். அவரும் என்னைப் போல் இலண்டன் காணவந்தார் எனவும் நாளை பாரிஸ் செல்கிறார் என்றும் கூறினர். அனைவரும் உணவு கொண்டோம். (நான் சைவ உணவு கொள்வதால் சிலருக்கும் சற்றே தொல்லை தந்தேன்) திரு. வீரசிங்கம் ஒருவரே என்போன்ற சைவ உணர்வினர். 'பசியாறுங்கள்' என உண்வுண்ண அழைக்கும் சிறப்பினை எண்ணினேன்.

உணவு முடித்தபின் அன்பர் ஜேசுதாசு அவர்கள் இல்லம் சென்றோம். அங்கே எனக்குத் தங்க, தனி அறை ஏற்பாடு செய்திருந்தனர். நல்ல அன்பர்; நல்ல குடும்பம்; அன்புடன் ஏற்று ஆவன செய்து உதவினர். அன்பர் அவர்கள் தமிழ்ப் பள்ளிக்கும் தமிழ் முன்னேற்றக்கழகத்துக்கும் செயலாளராக உள்ளமையின் அந்த நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் விளக்கிக் கூறினார். அரசாங்கத்திடம் முறையிட்டு, டி.வி., வானொலி முதலியவற்றில் தமிழ் அதிகமாக நிலைத்த இடம் பெறவும், முயல்வதாகவும் கூறினர். நானும் அந்த விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு அவர்தம் முயற்சி 'வெல்வதாக' என

வாழ்த்தினேன். எனவே இன்று (தமிழ்ப் புத்தாண்டு) நான் முற்றிலும் தமிழரோடு, தமிழ் மரபின் வழியே கலந்து மகிழ்ந்து நின்றேன். தமிழகத்தை விட்டபின் 'இதுவும் தமிழகமே' என்ற உணர்வோடு இற்றைநாள் இவர்களுடன் மாநகரில் கழிந்தது. இன்னும் இரு நாட்களில் பல இடங்களைக் காணவும் பல அன்பரொடு கலந்துறவாடவும் ஏற்பாடுகள் செய்யப்பெற்றன. இரவு 11 மணி அளவில் உறங்கினேன். காலை 4.30 மணிக்கே கண் விழித்தேன்.

இலண்டன் 14-4-85

இன்று காலை முறைப்படி 4-30க்கே எழுந்தேன். காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு, நேற்றைய குறிப்பினை எழுதி முடித்தேன். மணி 7-30க்குப் பிறகு சிற்றுண்டி கொண்டு, 9 மணிக்கு மேல் வெஸ்டுமினிஸ்டர் ஆபெ, நூல்நிலையம், பொருட்காட்சி முதலியன கண்டுவர நினைத்தேன். எனினும் வெளியே குளிர்காற்று மிகக்கடுமையாக அடித்ததாலும், எனை அழைத்துச் செல்ல இருந்த அன்பர் உடல்நலக்குறைவாலும் பல அன்பர்கள் எனைக் காண வர ஏற்பாடு செய்திருந்தமையாலும் வெளியில் புறப்படவில்லை. நான் தங்கிய வீட்டுத் தலைவரும் துணைவரும் பிள்ளைகளும் என்னிடம் அன்பும் பரிவும் காட்டி மகிழ்ந்தனர். ஐந்து வயதுடைய குழந்தை ஆயிலின் என்னிடம் ஓட்டிக்கொண்டு அன்புகாட்டி விளையாடினாள். திருக்குறள் நாற்பது பாட்டு வரையில் மனப்பாடம் செய்திருந்தாள். வேறுபல பாடல்களையும் பாடினாள். அவளுடன் பொழுது போவதே தெரியவில்லை. அவர் தந்தையாரும் உடன் இருந்தார். டாக்டர் ஞானமூர்த்தி அவர்கள் மகன் திரு. கிருபாகரனுடனும் பிறருடனும் தொலைபேசி வழியே பேசினேன். கிருபாகரன் தம்பி லிவர்பூரிலிருந்து வந்ததாகவும் எனவே வருவது கடினம் என்றும் உதவி அவசியம் தேவையாயின் புறப்பட்டு வருவதாகவும் கூறினார். நான் இங்கே இலண்டனில் நண்பர்களுடன் தங்கிய காரணத்தால் அவர் நெடுந்தொலைவு வரத்தேவை இல்லை என்றும் கோவைக்கு நாளையே கடிதம் எழுதுவதாகவும்

சொன்னேன். அவரும் எழுதுவதாகச்சொன்னார். பின் 'BBC' தமிழோசைபற்றித் திரு. சங்கரமூர்த்தியோடு தொடர்பு கொண்டேன். அவர்கள் நாளை பகல் 1 மணி அளவில் நிலையத்துக்கு வருமாறும் பேச்சு (அ)பேட்டியினைப் பதிவு செய்து நாளை மாலை அல்லது மறுநாள் காலை) கீழைநாடுகளின் ஒலிபரப்பில் ஒலிபரப்ப ஏற்பாடு செய்வதாகவும் கூறினார். பின் அன்பர் பலர் வந்து பேசிக் கொண்டிருந்தனர். பகல்உணவுக்குள் பல அன்பர்கள்தொலை பேசியில் தொடர்பு கொண்டனர். பகல் 1 மணி அளவில் உண்வு கொண்டேன். பின் அனைவருடன் பல பொருள் கள் பற்றி - இலக்கியம், அரசியல், சமூகவியல், வாழ்வியல், பற்றிப் பேசிக்கொண்டே இருந்தேன். திரு. ஜேசுதாஸ் அவர் கள் வேறு ஒரு கூட்டத்துக்குச் செல்வதாகவும் கல்வித்துறை அதிகாரி ஒருவரை உடன் அழைத்துக்கொண்டு 4 மணிக்கு வருவதாகவும் கூறிச்சென்றார்.

திரு. கண்ணன் அவர்களுடன் (திருமதி பொன்னையன் முகவரி தந்தவர்)தொலைபேசியில் தொடர்புகொண்டேன். உடன் அவர்தம் மாமனாருடன் காரில் வந்து தம் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். இரவு உணவுண்டு செல்ல வேண்டும் என வற்புறுத்தினார். நான் வேறு சில அன்பர் களைக் காணவேண்டியிருப்பதால் உடன் திரும்ப வேண்டிய நிலையினைச் சொன்னேன். பின் சிற்றுண்டி அளித்து ஜேசுதாசு அவர்கள் வீட்டிற்குத் திரும்ப அவர்களே அழைத்து வந்துவிட்டனர்.

திரு. முருகையன் அவர்கள் அங்கேயே காத்திருந்தனர். அவருடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தேன். வேறு சில அன்பர்களும் வந்தனர். அரசாங்கத்தே கல்வித்துறையில் உயர் அதிகாரியாகப் பணியாற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. மணியம் என்பவர் 5 மணி அளவில் வந்தனர். அவரொடு கல்விநிலைபற்றியும் ஆசிரியர்கள்பற்றியும் கலந்து பேசினேன். ஆசிரியராகத் தகுதி வாய்ந்தவர் யாவர் என விளக்கினார். குறைந்தது பட்டப்படிப்பு பெற்று ஓராண்டு

ஆசிரியப் பயிற்சி பெற்றவரோ அன்றி லண்டன், கேம்பிரிட்ஜ் பள்ளி உயர்கல்வி கற்று (நம் நாட்டு XII வருடம் நான்கு ஆண்டுகள்) ஆசிரியப் பயிற்சி பெற்றவரோ ஆசிரியராகத் தகுதி உடையவர் என்றும் அதற்குக் குறைந்த நிலையரோ பயிற்சி இல்லாதவரோ ஆசிரியராக முடியாது என்றும் கூறினார். அவர்கள் சம்பளம் சுமார் 10,000 பவுண்டு (ஒரு பவுண்டு 15 ரூபாய், ஆண்டுக்கு என்றும் கூறினார். கல்லூரிகள் தனியாக இயங்கும் நிலை (affiliated) அரிது என்றும் எல்லாப் பல்கலைக்கழகங்களுமே கல்லூரிகளாக இயங்குவன என்றும் அதில் பட்டம் முதலிய தகுதிகளைக் காணாது அறிவின் திறனறிந்து, உயர் அறிவு சான்றவரையே ஆசிரியராக நியமிப்பது வழக்கம் என்றும் கூறினார். நம் நாட்டில் உயர்பட்டம் முதல் வகுப்புதான் வேண்டுமென்று விளம்பரம் செய்து, பொருளின் அடிப்படைகூடத் தெரியாதவரும் பட்டம் பெற்றவகை கொண்டு நியமிப்பதில் உள்ள குறையினையும் சுட்டிக்காட்டினார். அவர் அடிக்கடி இந்திய நாட்டில் சிறப்பாகத் தமிழ்நாட்டில் வந்து கல்விநிலைபற்றி கண்டறிந்துள்ளமையைச் சுட்டினார். தமிழ்நாட்டில் பல் வகைக்கல்வி முறையிருப்பதையும் எதிலும் வரலாறு, நிலநூல் முதலியன நன்கு (Social Studies) பயிற்றப்படுவதில்லை எனவும் சுட்டினர். அரசாங்கமே பாடநூல்களை வெளியிடுவதால் நல்ல தகுதியான நூல்களைப் பிள்ளைகள் பயில வாய்ப்பு இல்லை என்றார். தமிழ்நாட்டில் ஒரு பாடத்துக்கு ஒரே நூலை மாணவர் பயில, இங்கு ஒரு பொருளுக்குப் பத்துக்கு மேற்பட்ட நூல்களை எடுத்துப் பயிலும் வாய்ப்பு உள்ளமையைக் குறித்தார். தமிழகத்தில் பல்கலைக்கழகங்களில் ஆய்வுகள் தரமாக நடத்தப்பெறவில்லை என்பதைச் சுட்டினார். இந்தியப்பல்கலைக் கழகங்களில் இதுவரை நடைபெற்ற ஆயிரக்கணக்கான ஆய்வுகளால் - மக்களுக்கு - வரிசெலுத்தும் பொதுமக்களுக்கு ஒரு பயனும் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டினார். ஆய்வுகள் ஏதோ பட்டத்துக்கென இல்லாமல் சமுதாயத்துக்குப் பயன்படும் வகையில் அவற்றால் மக்கள் வாழ்க்கைக்குப் பயன் விளையவேண்டும்

எனவும் சுட்டினார். அறிவியலாயினும் வேறு துறையாயினும் ஆய்வாளர் காணும் முடிவுகள் நாளை வாழும் மக்களினத்துக்குப் பயன்பட வழியில்லா நிலையினைச் சுட்டினார். நாடு முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் வரிப்பணம் இந்த ஆய்வுத்துறைக்கெனச் செலவிடப்பெற்றும் அதனால் ஒரு காசுகூட அந்த வரிசெலுத்தும் சமுதாயத்துக்குப் பயன் இல்லை என்ற நிலைகூறி வருந்தினார். ஆரம்பப்பள்ளி முதல் பல்கலைக்கழகக் கல்விவரை மக்கள் வாழ்வுக்குப் பயன்படும் வகையில் அமையவேண்டும் எனவும், அதற்கென நம் இந்திய அரசாங்கமும் தமிழக அரசும் உடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் எனவும் சுட்டினர். இரண்டு ஆண்டுகளுக்கு முன் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் சார்பில் காஞ்சியில் சமய மையம் தொடங்கிய காலத்தில், தொடங்கிவைத்த மாண்புமிகு திரு. வீரப்பன் அவர்கள் கூறிய சொற்கள் என் நினைவிற்கு வந்தன.

"இதே கருத்துக்களை வலியுறுத்தி, "ஆராய்ச்சியாளர்கள் என்னென்னவோ எழுதுகிறார்கள். புரியாத மொழியிலே தெரியாத பொருளைப்பற்றியெல்லாம் ஆய்வுக்கட்டுரைகள் எழுதிப் பட்டம் வாங்குகிறார்கள். அதனாலெல்லாம் யாருக்குப் பயன்? எத்தனை கோடி ஏழைகள் வரிப்பணம் வீணாகிறது. இங்கே நீங்கள் சமயம் தத்துவம்பற்றி ஆராயப்போகிறீர்கள். அவைபற்றியெல்லாம் பலர் பல நூல்களை எழுதியுள்ளார்கள். அவற்றைப் படிப்பவர் எத்தனை பேர்? படித்துப் புரிந்துகொள்பவர் எத்தனை பேர்? ஏன் இந்த நிலை? உங்கள் ஆய்வுகளை உங்களுக்குள்ளே மட்டும் தெரியும்படி எழுதுகிறீர்கள். அதனால் என்னைப்போன்ற பாமரனுக்குப் புரிவதில்லை. இந்தச் சமய மையத்தில் எழுதப்படுவனவெல்லாம் என் போன்ற சாதாரண மனிதனும் புரிந்து கொள்ளுமாறு இருக்கவேண்டும். அப்போது நாட்டில் சமயமும் வளரும். வரிப்பணமும் வீணாயிற்று என்ற எண்ணம் இருக்காது. அந்த வகையில் உங்கள் சமய உண்மைகளை எளிய

வகையில் விளங்கவைக்க ஏற்பாடு செய்யுமாறு - எழுதுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று அன்று காஞ்சியில் பேசினார். மாண்புமிகு வீரப்பன் அவர்கள் அவர்தம் கருத்தும் இந்த ஆங்கிலநாட்டுக் கல்வி அதிகாரியின் கருத்தும் ஒத்து இருக்கும் நிலையினை உணர்ந்து 'தக்கவர் சரியே நினைப்பர்' என்ற தொடரினை நினைந்தேன் - மகிழ்ந்தேன். ஆயினும் இந்த ஆய்வாளர்கள் பெரும் சமுதாயத்தை நினைப்பார்களா என்ற ஐயம் என் மனதை விட்டு அகலவில்லை.

பயிலும் மாணவர்களும் பயிற்றும் ஆசிரியர்களும் நிலைகுலைந்துள்ள நிலைபற்றியும் கூறினார். ஏதோ தேர்வு - எப்படியோ வெற்றி என்ற இன்றுள்ள நிலை மாறவேண்டும் எனவும், பட்டங்கள்தாம் உத்தியோகங்களுக்கு அடிப்படை என்ற நிலை மாற, செயல்திறனும் உண்மை உழைப்பும் செறிந்த அறிவுமே அளவுகோலாக அமையவேண்டும் எனவும், அந்த நிலை உண்டாகும் வரையில் நாட்டிலும் எந்தப் பணித்துறையிலும் அமைதியும் பயனும் காண இயலாது எனவும் விளக்கினார். அவர்தம் சுமார் 40 ஆண்டுகளின் கல்வித்துறை அனுபவங்களையும் பல நாடுகளில் கல்வி அமைப்புகள் பற்றியும் சுட்டினார். இவ்வாறு இந்நாட்டுக் கல்விபற்றியும் நம்நாட்டுக் கல்விபற்றியும் பலப்பல விளக்கங்கள் தந்தார். பின் வேறு கூட்டத்துக்குச் செல்லவேண்டிப் புறப்பட்டார். அவருடன் இங்குள்ள பள்ளியின் நிர்வாகத் தலைவர் திரு. நாகநாதன் அவர்களும் வந்திருந்தார்.

இரவு 8-30க்கு மேல் திரு. வீரசிங்கம் அவர்கள் வந்திருந்து, அவர்கள் உடன் தாயகம் திரும்ப இருப்பதாக்வும் அங்கு வாழவேண்டிய முறைகள்பற்றியும் விளக்கி, விரைவில் புறப்படப்போவதையும் கூறினார். அவர்தம் மொழிப் பற்றும் இனப் பற்றும் விளக்கமுடியாதன. எனினும் தமிழகம் வரின் அவை தேயுமே என எண்ணினேன். நெடுநேரம் அவருடன்

பேசிக்கொண்டிருந்தேன், திரு. ஜேசுதாசு அவர்களும் உடனிருந்தார். இங்குள்ள தமிழர் வாழ்வு, வளன், பிறவற்றையெல்லாம் பேசிக்கொண்டிருந்தேன். மேலும் திரு.வீரசிங்கம் அவர்களுக்குச்சென்னையில்வேண்டிய உதவி களைச் செய்வதாகக் கூறினேன். இரவு 11 மணி அளவில் அவர் விடை பெற்றுச் சென்றார். நான் படுக்கைக்குச் சென்றேன். கடந்த நான்கு நாட்களிலும் இங்கே இலண்டன் நகரத்தில் வாழும் தமிழ் மக்களைக் கண்ட நிலையில், நான் இவர்கள் மொழி, இன்ப்பற்றினை உணரமுடிந்தது. உண்மையிலேயே இவர்கள் உணர்வும் செயல்களும் போற்று தற்குரியன. இவர்தம் உணர்வின் வழியே செயலாற்றத் தொடங்கின் தமிழ்நாடு உயர்ந்து ஓங்குவது என்பது உறுதி. 'தமிழ் தமிழ்' என்று மேடைகளில் பேசி, அத் தமிழால் தம் வாழ்வை வளப்படுத்திக் கொள்வார் தமிழ் நாட்டில் உள்ளமை போன்று, இங்கே வெறும் பேச்சினைப் பேசி, வீண்காலம் கழிக்காது, உளத்தால் செயலால் தமிழுக்குத் தொண்டாற்றுகின்ற இவர்கள் எண்ணங்களெல்லாம் நிறை வேறும் நாள்வரின் உலகெங்கனும் தமிழ் போற்றப்பெறும் என்பது உறுதி என நினைத்து உறக்கம் கொண்டேன்.

சூரிச் 15-4-85

இன்று மாலை இலண்டனை விட்டுப் புறப்பட வேண்டும். அதற்குள் சில முக்கியமான இடங்களைக் கண்டு, வானொலி சென்று பேசி, விமானத்துக்குப் புறப்பட வேண்டும். காலைக் கடன்களையெல்லாம் முடித்துக்கொண்டு, சிற்றுண்டி (இட்லி) கொண்டு தயார்ானேன். திரு. ஜேசுதாசு அவர்களும் அவர் துணைவியாரும் தத்தம் பணிநோக்கி 7 மணிக்கே புறப்பட்டனர். திரு. வீரசிங்கம் வந்தார்; சென்னைக்கு வரப்போவதைப்பற்றிப் பேசினார். பின் நாகதேவன் அவர்கள் வந்து என்னை அழைத்துக்கொண்டு புறப்பட்டார். 'வெஸ்டுமினிஸ்டர் அபே' உள்ளே சென்று அனைத்தையும் கண்டேன். பாராளுமன்றக் கட்டிடத்துக்கு முன்னே நின்று வானோங்கிச் சிறந்து நின்ற அதன் பெருமையினை உன்னினேன். பின் அங்கிருந்து பொருட்காட்சிச்சாலைக்குச் சென்றேன். உலக நாடுகள் பலவற்றுள்ளும் மிகப்பழங்காலந் தொட்டு மக்கள் பயன்படுத்திய கலன்கள், ஆபரணங்கள், கருவிகள், போர்க்கருவிகள் போன்றவை முறையாக வைக்கப் பெற்றிருந்தன. கீழைநாடுகளில் சீன நாட்டுப் பொருள்களே அதிகமாக இருந்தன. நம் இந்திய நாட்டுத் தொல் பொருள்கள் அவ்வளவு அதிகமாக இடம் பெறவில்லை. சில விடங்கள் துப்புரவு செய்வதற்கெனக் காண்பார் செல்ல முடியாது தடை செய்யப்பெற்றிருந்தன. ஒருவேளை அங்கே ஒரு சில இருக்கக்கூடும் என நினைத்தேன். மத்தியதரைக் கடல் நாடுகள், பிற ஐரோப்பிய நாடுகள் இவற்றிலிருந்தும் சிறப்பாக இங்கிலாந்து நாட்டிலிருந்தும் சேகரிக்கப்பெற்ற

தொல்பொருள்களே நிரம்பி இருந்தன. முழுவதையும் ஊன்றிக் காண வேண்டுமாயின் குறைந்தது மூன்று நாட்களாவது தேவை. நான் இரண்டொரு மணியில் எவ்வாறு காண இயலும்? இந்திய அரசாங்கம் - சிறப்பாகத் தமிழக அரசு முயன்று, நம் தொல்பொருள்களை உலகறியச் செய்ய வழிவகை காண வேண்டியது அவசியம் என்று மட்டும் எண்ணினேன்.

அடுத்து நூல்நிலையம் புகுந்தேன். எனக்கு இது நம் 'நேஷனல்' நூல் நிலையத்தைவிடப் (கல்கத்தா) பெரியதாகத் தெரியவில்லை. எனினும் ஆங்கில நாட்டின் மிகப் பழங் காலந்தொட்டு உண்டான சாசன ஏடுகள்—அச்சு வரலாற்று வளர்ச்சி நெறியில் அமைக்கப்பெற்ற ஏடுகள்—கீழைநாட்டு இலக்கியங்கள்—பல கார்ட்சிப் பொருள்களாக வைக்கப்பெற்றிருந்தன. அங்கேயும் இந்திய ஏடுகள் இருந்த பகுதி துப்புரவுக்காக வைக்கப்பெற்று யாரும் காணமுடியாத நிலையில் இருந்தது. நான் பார்த்த பகுதியில் 18ம் நூற்றாண்டின் நன்னைய பட்டருடைய தெலுங்கு ஓலைச்சுவடியும் கூர்மா அவதாரம் பற்றிய ஓலைச்சுவடியும் (மிகப்பழங்காலத்தியது) இருந்தன. கூர்மா அவதாரத்தமிழ் ஓலைச்சுவடி நன்கு சுருள் செய்யப்பெற்று ஆமை வடிவத்தாலாகிய பித்தளைச் சுருளில் அடக்கி வைக்கப்பெற்றிருந்தது; மிக அழகாக இருந்தது. வேறு தமிழ் ஏடுகள் இருப்பதாகவும் அவைகள் அத்துப்புரவு செய்யும் பகுதியில் உள்ளதாகவும் கூறினர். மற்றும் நூலைக் கட்டுசெய்யும் வகை (Binding)யினையும் அதன் வளர்ச்சியினையும் விளக்கிக் காட்டும் முறையும் ஒருபக்கம் அமைக்கப் பெற்றிருந்தது. இவற்றையெல்லாம் காண ஒரு மணிக்கு மேலாகிவிட்டது. இலண்டன் வானொலி நிலையத்தில் (BBC) என் நேர்முகச் செவ்வியினைப் பதிவு செய்ய நேரம் 1-30 எனக் குறித்திருந்தமையின், உடனே அந்த இட்த்திற்கு விரைந்து சென்றோம். அங்கே அத் துறைக்கு உரிய திரு. சங்கரமூர்த்தி அவர்கள் அன்புடன் வரவேற்று உபசரித்தார். அவரும் அவருக்குத் துணையாக நின்ற

மற்றொரு செல்வியாரும் மிக விரைவாக இயங்கிப் பணி களைச் செய்து வந்தனர். தம் பிற வேலைகளையெல்லாம் விடுத்து, நான் சென்றதும் என்னைப் பதிவு அறைக்கு அழைத்துச் சென்று, நேர்முகச் செவ்வியைத் தொடங் கினர். நான் உலகப்பயணம் மேற்கொண்டது பற்றி யும், பார்த்த நாடுகள் பற்றியும், பார்க்க இருக்கும் நாடு கள் பற்றியும் கேட்டதோடு, உலக முழுவதிலும் பரவியுள்ள தமிழ்ச் சமுதாயத்துக்கு நான் கூற வேண்டிய செய்தியினை யும் கேட்டுப் பதிவு செய்துகொண்டனர். தமிழ் உணர்வு பொதுவாக மங்கிவருவது பற்றியும் அதை வளர்க்கத் தமிழக அரசும் தமிழ்ப்பல்கலைக் கழகமும் செய்ய வேண்டிய செயல் கள் பற்றியும் பிறவகையில் தமிழ் ஆக்கம் பெற ஆற்ற வேண்டிய முறைகள் பற்றியும் ஓரளவு சுட்டிக் காட்டினேன். அன்பர் சங்கரமூர்த்தி அவர்கள் அவர்தம் மேலுள்ள ஆங்கிலேயருக்கு என்னை அறிமுகப்படுத்தினார். நானும் அவரை நம் நாட்டுக்கு வருமாறு அழைத்து விடை பெற்றேன்., திரு. சங்கரமூர்த்தி அவர்கள் தமிழ்நாட்டில் தென்காசியினைச் சேர்ந்தவர் எனவும் சென்னை வானொலி நிலையத்திலிருந்த திரு. துறைவன் அவர்கள் இளவல் எனவும் அறிந்தேன். அவர்தம் பணிவும் பரிவும் சுறுசுறுப் பான பணிநிலையும் என்னைக் கவர்ந்தன. இன்று மாலை 5 மணிக்குமேல் என் செவ்வி ஒலிபரப்பப்படும் எனவும் கீழை நாட்டுமக்கள் அனைவரும் கேட்டு, தம் கருத்துகளை எழுது வரெனவும் குறித்தார். நான் அவரிடமும் உடனிருந்த அம்மையாரிடமும் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன்.

வழியில் உணவுக்கடையில் உணவுகொண்டு நேராக விமான நிலையத்துக்குப் புறப்பட்டேன். திரு. நாகதேவன் அவர்கள் வழியனுப்பி வைத்தார். விமான நிலையத்துக்கு 4-30 மணி அளவில் வந்து என் பயணம் பற்றி உசாவினேன். (British Airlines) ஆங்கில விமான வழி நியூயார்க் நேராகச் செல்லலாம் எனவும் ஆயினும் பயணத்தொகையில் யாதொரு கழிவும் இராதெனவும் கூறினர். நான் நியூயார்க்கில் உள்ள

அன்பர்களுக்கு நாளை பிற்பகலில் வரும் சுவிஸ் விமானத்தில் வருவதாக எழுதி உள்ளமையாலும், ஒரு செலவும் நமக்கின்றி சுவிஸ் நாட்டில் - சூரிச்சில் - ஒருநாள் தங்கும் வாய்ப்பினை நழுவவிடவேண்டாம் என்று கருதியமையாலும் முதல் இட்ட திட்டபடியே மாலை 6-50க்கு சுவிஸ்வி மானத்தில் சூரிச் புறப்பட முடிவுசெய்தேன். அதற்கென என் பெட்டியினை ஒப்படைத்து, நியூயார்க்கில் தந்தால் போதுமென்று சொல்லி, விமானத்துக்குச் செல்ல வெளியில் வந்து காத்திருந்தேன்.

திரு. தமிழ்மணி அரங்கமுத்தையன் 5-30க்கு விமான நிலையத்துக்கு வந்தார். அவருடைய குடும்பச் சூழலுக்கு இடையே - பணிக்கு இடையே - தமிழ்மொழிக்கு ஆற்றும் தொண்டினை வியந்து போற்றினேன். அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்கு எழுதிய கடிதங்கள் பற்றியும் அங்கிருந்து பதில் வராத நிலையினையும் சொல்லி அவற்றின் படிகளைத் தந்து, ஊர் சென்றபின் அவைபற்றி அறிந்து ஆவன காணச் சொன்னார். மேலும் வெளிநாட்டிலுள்ள தமிழர்கள் தாய்மொழியை மெள்ள மறந்துவருகிறார் என்பதையும் அத்துடன் தமிழ்ப் பண்பாட்டினையே புறக்கணிக்கிறார்கள் என்பதையும் விளக்கி, அவற்றைக் காக்க - தமிழ் மக்களை - இளஞ்சிறுவர்களை நம்மொழி, பாண்பாட்டின் வழி திருப்ப, தமிழக அரசும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் உடனடியாகப் பல செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதையும் விளக்க உரைத்தார். மேலும் நான்பல நாடுகள் செல்வதால் உடம்பை நன்கு கவனித்துக்கொள்ள வேண்டும் என்றும் அலைச்சலைத் தவிர்க்க வேண்டும் என்றும் வற்புறுத்தினார். நெடுந்தொலைவில் — முன்பின் அறிமுகமில்லா நண்பர் தம் பண்பும் பரிவும் என்னை மகிழ்வித்தன. அவரிடம் பிரியாவிடைபெற்று, உள்விமான தளத்திற்குச் செல்ல உரிய நேரம் வந்துவிட்டமையின், செல்லப்புறப்பட்டேன். அன்பர் அவர்களும் 'உள்ளப் பிரியும்' நிலையில் மெல்லப் பிரிந்து சென்றார்.

நானும் கடந்த நான்கு நாட்கள் இந்த உலகப் பெரு நகராகிய இலண்டனில் கழிந்த விதத்தினையும் பெற்ற அன்பர்தம் கூட்டுறவினையும் பிறநலன்களையும் எண்ணிக் கொண்டே உள் விமானநிலையம் அடைந்தேன்; விமானத்தி லும் ஏறினேன். உள் அமர்ந்ததும் என் சோர்வறிந்தோ என்னவோ பணியாளர் இருமுறை நல்ல குளிர்ந்த பழரசம் தந்தார். பிறகு முறையான உணவு தரப்பெற்றது. வேர்க் கடலை, பாதம்பருப்பு போன்ற பல நன்கு வறுக்கப்பெற்றுச் சுவையூட்டப் பெற்று விமானத்தில் தரப்பெறுகின்றன. சூரிச் நோக்கிப் பறந்த விமானம் 1 1/4 மணி நேரத்தில் சூரிச் அடைந்தது. இங்கே அதிகக் கூட்டம் இல்லை. இந்த நேரத்தில் இந்த ஒரு விமானம் தான் போலும். நான் 'சுவிஸ் விமான' அலுவலர் வழியே எனக்கென ஒதுக்கிய ஒரு விடுதிக்கு, (Hotel Movenbick) சிறு உந்துவண்டி வழி அழைத்துச் செல்லப்பெற்றேன்.

விடுதி மிகப்பெரியது; உயர்ந்தது. நான் இதுவரையில் இதுபோன்ற விடுதியில் என்றும் தங்கியதில்லை. நம் சென்னைநகரில் நுங்கம்பாக்கத்திலுள்ள பெரு விடுதிகளை விஞ்சி நின்றது நான் இங்கே தங்கும் செலவு அனைத்தும் 'சுவிஸ் விமான' நிறுவனரைச் சார்ந்தது. உடன் நியூயார்க் விமானம் இல்லையாதலால் இங்கே கொண்டுவந்து தங்க வைத்தனர். பெரும் செல்வம் படைத்தவர் தங்கும் இந்த விடுதியில் பத்து அடுக்கு உள்ள கட்டிடத்தில் ஒன்பதாவது அடுக்கில் (அறை 939) தங்கினேன். அறைக்குச் செல்லுமுன் பழக் கலவையும் காப்பியும் அருந்தினேன். அறையில் தங்கி நாற்புறமும் பார்த்தேன். எங்கும் ஒளி விளக்கம்; ஊர்திகள் விரைவு.

உலகில் பல பாகங்களிலிருந்தும் இங்கும் பல மக்கள் பல வகைகளில் வந்து தங்குகின்றனர். எனவே இதுபோன்ற விடுதிகள் பல இங்கே உள்ளனவாம். ஒரு நாளைக்கு, ரூபாய் ஆயிரமும் அதற்கு மேலும் கட்டணம் இருக்கும் என்றனர்.

ஒரு புறம் ஏழை நாடு வளரும் நாடு எனவும் (Developing Country) பல்வற்றைச் சொல்லிக்கொண்டு, கோடிக் கணக்கான ஏழைகளைக் குடிசையில் வாழ வைத்து, ஒரு சிலருக்கு இத்தகைய இந்திரலோகவாழ்வை அளிக்கும் நிலையினையும் இந்த வேறுபாட்டினை வளர்க்கும் அரசுகளையும் எண்ணிப் பார்த்தேன். விடை கிடைக்கவில்லை. என் அறையில் வந்து, அமைதியாக இருந்து, கடந்த சில நாட்களையும் நாடுகளையும் எண்ணிக்கொண்டே படுக்கச் சென்றேன். மறு நாள் உலகப்பெருநாடாகிய அமெரிக்காவில் கால் வைக்கும் நிலையினையும் நினைந்தேன். இரவு மணி பதினொன்று; எனவே உறங்கினேன். காலை 5க்குக் கண் விழித்தேன்.

நியூயார்க் 11-4-85

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, 8-30 மணி அளவில் காலைச் சிற்றுண்டியினையும் முடித்துக்கொண்டேன். இந்த விடுதி முழுதும் 'குளிர்சாதனம்' செய்யப்பெற்றிருந்ததால் மிக எளிமையாக இரவு பகல் வேறுபாடுஇன்றிக் கழிக்க முடிந்தது. இரவு போர்வை இல்லாமலேயே தூங்க முடிந்தது. எனினும் சிற்றுண்டி முடித்து வெளிவந்ததும் மிகக் குளிர்ந்த காற்று வீசிற்று. அப்போதுதான் உள்ளிருந்த பலரும் மிகத் திண்ணிய கோட்டும் அதற்குமேல் ஒருமுழுக்கை சட்டையும் இட்டுக்கொண்டிருந்த காரணம் புரிந்தது. சூரிச் நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வர எண்ணிய எண்ணம் நிறைவேறவில்லை. எனினும் விடுதி உயரிய மேட்டில் இருந்ததால் ஒரு வகையில் ஊரின் பெரும்பகுதியினைக் காண முடிந்தது; மேல் தளத்திலிருந்தும் நன்கு காண முடிந்தது. விடுதியின் எதிரில் இருந்த பல பெருந்தொழிற்சாலைகளுக்குப் பணி புரிபவர்கள் காலை 7 மணியிலிருந்தே - பெரும்பாலும் கார்களில் வந்து இறங்கிக் கொண்டிருந்தனர். ஒரு தொழிற்சாலையில் கார்கள் நிறுத்தப் பெருஞ்சாலையின் ஒரு பக்கம் பரந்த வெற்றிடமும் மறுபக்கம் பெரிய தொழிற்கூடமும் இருந்தது. (அது ஒரு கார் செய்யும் தொழிற்சாலை என்றனர்). கார்களை ஒரு பக்கம் விட்டு, சாலையைக் கடக்கும் தொல்லை இல்லாவகையில் மேம்பாலம் அமைத்துச் சாலையைக் கடக்க அந் நிறுவனத்தாரே ஏற்பாடு செய்திருந்தனர். கார் நிற்குமிடத்தும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனிக் கோடிட்டு வரையறை செய்ததோடு, தேவையானபோது ஒவ்வொருவரும்

எடுக்க இடைவெளியிட்டும் இருந்தனர். எட்டுமணிக்குத் தொழிற்சாலை நேரம் போலும். 6-30 அல்லது 7க்கு வரத் தொடங்கிய கார்களின் எண்ணிக்கை 8 மணி அளவில் 1500க்கு மேலாக இருக்குமாறு பெருகிற்று. அனைவரும் இயந்திரங்கள் போன்று இயங்கிக் கொண்டிருந்தனர். கார் வருவதும் நிறுத்தப்பெறுவதும் அவர்கள் விரைந்து செல்வதும் ஒரு அழகிய காட்சியாக இருந்தது. பொதுவாக இங்கே மேலை நாட்டு மக்கள் கடமை உணர்ச்சியோடு குறித்த நேரத்தில் அலுவலகம் சென்று பணி தொடங்கு வதை முறையாகக் கொண்டுள்ளனர் என முன்னரே சுட்டி யுள்ளேன். அப்படியே உள் சென்ற பிறகும் வீண்பொழுது போக்குவதோ கதைப் புத்தகங்கள் படித்துக்கொண்டிருப் பதோ அடிக்கடி 'காண்டீன்' பக்கம் செல்லுவதோ இல்லை. இங்கே சம்பளம் மணிக்கணக்கில் தரப் பெறுகின்றது. சில விடங்களில் செய்யும் பொருள்கள் அடிப்படையில் வழங்கப் பெறுகின்றது. அனைவரும் சுறுசுறுப்பாக அந்தக் குளிரிய காலை வேளையிலும் இயங்கிக் கொண்டிருந்தனர்.

நான் 10 மணிக்கு மேல் அறையினைக் காலிசெய்து விடுதி யினை விட்டுப் புறப்பட்டேன். குறைந்தது அன்று 800 ரூபாயாவது அந்த ஓட்டலுக்கு என் கணக்கில் 'சுவிஸ்' விமான நிலயத்தார் தந்திருப்பார்கள். அவர்களுக்கு அடுத்த நியூயார்க் நீண்ட பயணத்திற்கு ரூ. 6000மாயினும் கிடைத் திருக்குமல்லவா! லண்டனிலிருந்து நியூயார்க்கிற்கு ஒரு நாளில் ஏழு பெருவிமானங்களும் சூரிச்சிலிருந்து ஐந்து விமானங்களும் புறப்படுகின்றன. எனவே போட்டி கடுமை போலும். இப்படியே பல தலைநகர்களிலிருந்து பல விமானங் கள் (நம் ஏர் இந்தியாஉட்பட நியூயார்க் நகருக்குப் பறந்து கொண்டும் வந்து கொண்டும் இருக்கின்றன. நான் விமான நிலையத்துக்குச் சற்று முன்னரே வந்துவிட்டேன். என் விமானம் 12-45க்கு புறப்பட வேண்டும். அதற்குமுன் ஒரு பிரிட்டிஷ் விமானம் 11-30க்கு நியூயார்க் நகருக்குப் புறப் பட்டது.

நான் புறப்பட வேண்டிய விமானம் சற்றே காலம் தாழ்த்து 1-15க்குப் புறப்பட்டது. 8 மணி 40 நிமிடங்கள் (சுமார் 9 மணிநேரம்) விமானப் பயணம். என் சுற்றுப் பயணத்தில் பம்பாயிலிருந்து சூரிச் நகருக்கும் இங்கிருந்து நியூயார்க் நகருக்கும் மேற்கொண்ட பயணங்களே 9 மணி நேர நீட்டிப்பிற் குரியன. பம்பாயிலிருந்து வந்தபோது இரவாகையால் உறக்கத்தில் ஒன்றும் தெரியவில்லை. பம்பாய் நகருக்கும் இதற்கும் 5 மணி நேரம் வித்தியாசம். அப்படியே சூரிச் நகருக்கும் நியூயார்க் நகருக்கும் 7 மணி நேரம் வித்தியாசம். ஆகமொத்தம் 12 மணி வித்தியாசத்தில் இந்தியாவும் நியூயார்க்கும் உள்ளன. முன்னதில் இரவு நீண்டு கொண்டே வந்தது. சூரிச்சில் 12-45க்குப் புறப்பட்டு நியூயார்க் 2-25க்குச் சேருமென்றால் (சுமார் 9000 கி. மீ—5600கல்) அதிசயமாக இல்லையா. ஆம்! ஏழுமணி இடை வெளியே இதைச் சரி செய்தது. ஐரோப்பிய நாடுகள் நான் கினைக் கண்ட மனநிறைவில்—மறு கண்டத்தில் கால் வைக்கப்போகிறோம் என்ற உணர்வில் விமானத்தில் கால் வைத்தேன். விமானமும், வேற்று விமான வரவுகளால் - வழியிடை தடைநீங்க, சரியாக 1-15க்குப் புறப்பட்டது.

விமானத்தின் உபசரிப்பு போற்றற்குரியது. எல்லா விமானங்களிலுமே உபசரிப்பு போற்றக்கூடியதாக இருக்கும். நல்ல உணவு; பழரசம்; பாதம் முதல் வேர்க்கடலை வரையில் பருப்பு வகைகள் - பலவகை மரக்கறி, மாமிச உணவுகள், தேவையானபோது காப்பி, டீ, சாக்லெட் போன்ற மிட்டாய் கள் வேறு குடிப்பொருள்கள் பயணிகளுக்குத் தரப்பெற்றன. மாமிச உணவுகொண்டு, குடிக்கும் நிலையில் உள்ளவர்கள் இந்த இடைவெளி 9 மணி நேரத்தில் சுமார் ரூபாய் 400 மதிப்புள்ள (வெளியே உள்ள விலைகளின்படி) உணவு, குடிப் பொருள்களை உட்கொள்ளுவர். என்போன்ற மரக்கறி யாளர் ரூபாய் 100 அளவிலே - அன்றிச் சற்றே அதிகமாகவே கொள்ளமுடியும். சிலமுறை அவர்கள் உபசரிப்பு அதிகமாக இருந்தது; நான் வேண்டாம் என்றே சொல்லும் நிலை

உண்டாயிற்று. உடலைத் தூய்மையாகவும் தெளிவாகவும் வைத்துக்கொள்ள, அவ்வப்போது மருந்திட்ட மெல்லிய தாள்கள், துணிகள் வழங்கப்பெற்றன. பத்திரிகைகள், இதழ்கள் போன்றவை எண்ணற்றவகையில் - படிப்போர் விருப்பத்திற்கு ஏற்ப எடுத்துக்கொள்ள நிறைய இருந்தன. இந்த விமானத்தில் மற்றொரு சிறப்பு என்னவென்றால் போர்த்திக் கொள்ள நல்ல கம்பளிப் போர்வை அளித்ததாகும். இதை இங்கேதான் பார்த்ததால் ஏனென்று கேட்டேன். குளிர் அதிகமாகும் என்றும் நெடுந்தொலைப் பயணத்தில் இதைப் போர்த்திக்கொண்டால் நன்கு உறங்கலாம் என்று கூறினர். அப்படியே பலர் நன்கு போர்வையிட்டுக்கொண்டு உறங்கினர். நான் அதைப் பயன்படுத்தவில்லை; உறக்கமும் வரவில்லை. நெடுக விமானத்தில் படக் காட்சிகளையும் காட்டிகொண்டே வந்தனர். விமானத்தில் நான் அட்லாண்டிக் பெருங்கடலைக் கடக்கும் நிலையினை எண்ணி எண்ணி நின்றேன். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடைப்பட்ட சிறு கடலை அனுமன் கடந்த நிலையினைக் 'கடல் தாவு படலத்தில்' அழகுறப் பாடிய கம்பன் இன்று இருந்தால் இந்தப் பயணத்தை எவ்வளவு அழகாகப் பாடுவன் என என் உள்ளம் நினைத்தது. மேகங்களுக்கு இடையிலும் மேகங்களுக்கு மேலும் 20,000, 25,000 அடிகளுக்கும் உயரமாக விமானம் செல்லும்போது - ஆடாமல் அசையாமல் பறக்கும்போது - நாம் தரையில் இருப்பது போலவே உணர்கின்றோம்.

விமானத்தில் அமர்ந்து 'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி ஏழை நெஞ்சம், புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே' என்ற தாயுமானவர் அடிகளை எண்ணினேன்.. உண்மையிலேயே உலக எண்ணங்களை எல்லாம் கடந்த ஒரு அமைதி என் உள்ளத்தில் குடி கொண்டது. 'புது உலகம்' என்றும் 'பொன் னுலகம்' என்றும் வரலாற்றாளர்களாலும் அரசியல்வாதிகளாலும் பேசப்பெறும் அமெரிக்க நாடு செல்லும் நிலையில் - அப் புது

இடத்தில் நாம் எப்படி ஒன்றரை மாதங்கள் கழிக்கப்போகி றோம் என்ற உணர்வும் தலைகாட்டிற்று. ஊர்தொறும் உள்ள பலருக்கு வேண்டிய அன்பர்கள் கடிதங்கள் தந்தும் எழுதியும் இருந்தார்கள். என்றாலும் அவரவர்கள் எப்படி இருப்பார்களோ - பழகுவார்களோ என்ற எண்ணமும் எழுந்தது. இத்தகைய எண்ண அலைகளுக்கிடையிலே அட்லாண்டிக் கடல் அலைகளுக்கு இடையே அமைதி நிலவியது போன்று என் உள்ளத்தும் அமைதி நிலவியது.

சரியாக 2.40க்கு விமானம் நியூயார்க் வந்து சேர்ந்தது. இங்கே நுழைவுச் சான்று, பிற சோதனைகள்-ஆய்வு கடுமை யாக இருந்தது. எனினும் - என்னிடம் யாவும் சரியாக இருந்தமையால் தொல்லை இன்றி வெளியே வந்தேன். இலண்டனில் விட்ட என் பெட்டியும் என் கைக்கு வந்தது. விமான நிலையத்தில் யாரேனும் உளரோ எனப் பார்த்தேன். யாரும் இல்லை. எனினும் 'சுவிஸ் விமான உதவிப்' பகுதியில் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் ஒரு குறிப்பு வைத்திருந் தார். அவர் வர இயலா நிலையினை விளக்கி, வந்ததும் தொலைபேசியில் பேசுமாறு குறிப்பினைத் தொலைபேசி வழியேதந்துள்ளார். உடனே பேசினேன். வாடகை வண்டியில் நேரே வீட்டுக்கு வருமாறும் அவர் அலுவலகத்தி லிருந்து பேசியதாகவும் கூறினார். உடனே வாடகை வண்டி எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். விமான நிலையத்தி லிருந்து சுமார் 15 கல் தொலைவு அவர் வீடு இருந்தது. நியூயார்க் அக நகரின் வழியின்றிப் புறநகர்ப் பாதையின் வழியே - அகன்ற நெடுஞ்சாலைகள் வழியே வண்டி சென்றது. சாலைகளில் கண்ட இடத்தில் வண்டிகளோ மக்களோ கடக்கா வகையில் சுமார் 3 அடிக்கு மேற்பட்ட சுவர் அமைந்திருந்தது. இங்கே செல்லும்வழி வலப்பக்க மாகவே (Keep to the right) பாரிஸ், ரோம், சூரிச் போன்றே இருந்தது. ஆங்கில நாட்டில் மட்டுமே நம்முறை. சரியாக ஐந்துமணி அளவில் வீடு சேர்ந்தேன். ஒரு பெரும் கட்டிடத் தில் பல பிரிவுகள் உள்ளன. அவற்றைக் குடியிருப்புப் பிரிவு (Apartments) என்கின்றனர். திரு. இராதாகிருஷ்ணன்

அவர்கள் 216ல் இருந்தார். அது இரண்டாவது மாடியில் இருந்தது. (ஒவ்வொரு கட்டிடமும் ஏழு அடுக்கு உடையனவாய், சுமார் 500 குடியிருப்புப் பகுதிகளைக் கொண்டிருக்கும் என்றனர்). அவர்தம் துணைவியாரும் இரு இளங்குழந்தைகளும் என்னை 'வருக' என வரவேற்றனர். நம் நாட்டுப் பலகாரங்களாகிய அடை, தேன்குழல் முதலியன தந்தனர். காப்பி உண்டு சற்றே இளைப்பாறினேன். 6 மணி அளவில் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் வந்தார். பிள்ளைகளும் அவரும் அவர் துணைவியாரும் அன்புடன் பழகினர். வேறு இடங்களுக்குச் செல்லவேண்டாமெனவும் தங்கும் ஐந்து நாட்களிலும் தங்கள் வீட்டிலேயே தங்கலாம் என்றும் கூறினார். பிற அன்பர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். பென்சில்வேனியாவிலிருந்து திருமதி டாக்டர் இராசம் அவர்கள் (பல்கலைக்கழகப் பேராசிரியர்) பேசினார் என்றும் என் வரும் நாளையும் பேசும் பொருளையும் பற்றி அறிய விரும்பினார் என்றும் நாளை மறுபடி தொலைபேசியில் பேச இருப்பதாகவும் கூறினார் அம்மையார் ஆர்வத்தினை அறிந்து போற்றினேன்.

பல்வேறு உலக நிலைகள், நியூயார்க்கில் ஐந்து நாட்களில் நான் செய்ய வேண்டிய வேலைகள் - பார்க்க வேண்டிய இடங்கள் அமெரிக்காவில் நான் காண வேண்டிய இடங்கள் போன்றவை பற்றித் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் விளக்கினார்கள். 9 மணி அளவில் நல்ல உணவு - நம் நாட்டு மரபின்படி உண்டேன். பிறகு நாளை செய்ய வேண்டிய பணிகள் பற்றி முடிவு செய்து அவர் அலுவலகம் செல்வதால், முன்கூட்டியே பல தகவல்களை அவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டேன். குழந்தைகளும் 'டி.வி', பார்த்துக்கொண்டும் தமிழ்நாட்டுப் பாடல்களை இசைக்கருவியில் இட்டு எனக்குக் காட்டிக் கொண்டும் இருந்தனர். பத்துமணி அளவில் நான் இங்கேயே படுத்துக் கொண்டேன். அப்போது வெம்மையாயினும் இரவில் குளிரும் என்றும் இன்னும் கோடை முற்றும் கால் கொள்ளவில்லை என்று கூறி நல்ல போர்வையினையும் தந்தனர். படுத்ததும் உடனே உறங்கிவிட்டேன்.

நியூயார்க் 17-4-85

முறைப்படி காலை 5 மணிக்கு எழுந்து காலைக்கடன் களை முடித்துக்கொண்டு, குறிப்பினை எழுதி முடித்தேன். நேற்று நெடுந்தூரம் வந்த விமானக் களைப்பினாலும் மிகுந்த பனியும் குளிரும் இங்கே இருந்தமையாலும் சற்றே உடல் தளர்ந்த நிலையிலும் நான் எங்கும் வெளியில் செல்ல வில்லை. சிகாகோ, பிளடெல்பியா ஆகிய இடங்களிலிருந்து வந்த தொலைபேசிகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டும், இங்கே உள்ள அன்பர்களுடன் தொலைபேசியில் பேசிக் கொண்டும் அறிவன் அறிய முற்பட்டேன். பென்சில்வேனியப் பல்கலைக் கழகத்தே, தமிழ்ப் பல்கலைக்கழகம் தோன்றிய சூழ்நிலை, பணி, பயன்பற்றி 24-4-85 பிற்பகலிலும் (ஆங்கிலத்தில்) மறுநாள் காலை தமிழிலும் பேச வேண்டும் எனக் கேட்டனர். அதற்கெனக் குறிப்பினைத் தயார் செய்தேன். ஊருக்கும் இலண்டன் அன்பர்களுக்கும் உள்ளூர் அன்பர்களுக்கு நான் இங்கே வந்த தகவலைக் கூறி, அவரவர் ஊர்களுக்கு வரும் நாளையும் செய்ய வேண்டிய பணியையும் பற்றித் கடிதங்கள் எழுதினேன். இலண்டன், உரோம் நண்பர்களுக்குநன்றி தெரிவித்துக் கடிதம் எழுதினேன். இன்று பெரும்பாலும் ஓய்வில் இருந்தேன் எனலாம்.

திரு. இராதாகிருஷ்ணன் துணைவியாரும் இளங் குழந்தைகளும் அன்புடன் இருந்தனர். பெரிய மகன் (வயது 5) பள்ளிக்குச் சென்றபோது அவன் தந்தையாரும் சென்றார். நானும் அவர்கள் பள்ளி வரையில் உடன் சென்றேன். இங்குள்ள பள்ளி விதிகளைப்பற்றிக் கூறிக்

கொண்டே வந்தார். குழந்தைகளைப் பெற்றோரே பள்ளிக்கு காலை 8-30க்கு அழைத்து வந்துவிட்டு, அவர்களே திரும்ப மாலை 3 மணிக்கு வந்து அழைத்துச் செல்ல வேண்டும். இல்லாவிட்டால் கடும் நடவடிக்கை எடுப்பதோடு, பள்ளியிலிருந்து பிள்ளைகளை நீக்கியும் விடுவார்களாம். வழியில் குழந்தைகளுக்கு யாதொரு தீங்கும் நேராதிருக்கவே இந்த ஏற்பாடாம். அப்படியே திரும்பிச் செல்லும்போதும் பெற்றோர் வரவில்லையானால் வீட்டிற்கு அனுப்பமாட்டார்களாம். நேரமானால் வீட்டிற்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரியவரை வரச் செய்வார்களாம். (இங்கே எல்லோருடைய வீட்டிலும் பெரும்பாலும் தொலைபேசி உண்டு).

பிள்ளைகள் காலையில் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் நல்ல உடையுடன் மேலே தோல், பிளாஸ்டிக், (f) பர், கம்பளி ஆகியவற்றால் ஆகிய புறச்சட்டையிட்டு, உடலை நன்கு மூடிக்கொண்டு உரிய நேரத்தில் பள்ளிக்கு ஓடி வருகின்றனர். காலந்தாழ்த்து வருதல் கடுந்தண்டனைக்கு உள்ளாதலாகும். சிலநாள் காலந்தாழ்ந்தால் பள்ளியிலிருந்து நீக்கிவிடுவர். அப்படியே தகவல் அறிவிக்காமல் பிள்ளைகள் சிலநாள் தொடர்ந்து வராவிட்டால் வீட்டுக்கு எழுதித் தகவல் அறிவர். பெற்றோர்கள் ஆசிரியர்களை இருமாதங்களுக்கு ஒரு முறை நேரில் கண்டு பிள்ளைகளின் வளர்ச்சிபற்றி அறியவேண்டுமாம். அரசாங்கமே நடத்தும் பள்ளிகளில் சம்பளமே இல்லை (நம் நகராண்மைக் கழகப் பள்ளிகளையும் அரசாங்க மானியம்பெறும் பள்ளிகளையும் போல). அவற்றுள்ளேயே இத்தகைய கட்டுப்பாடுகள் உள்ளன. இவற்றை நம் நாட்டு இலவசப் பள்ளிகளோடு ஒத்துநோக்கி நெடிது நினைந்தேன். நான் கண்ட நாடுகளில் எங்கும் குடிசைகள் இல்லை; இங்கும் அப்படியே. மத்திய உணவு ஏற்பாடு இல்லை; இருப்பினும் அங்கங்கே தேவையாயின் இளங்குழந்தைகளுக்கு வேண்டிய பால், பிஸ்கட் முதலியன தருகிறார்களாம்.

பள்ளியின் தோற்றமும் எடுப்பாக இந்த நாட்டுக்கு ஏற்ப இருந்தது. வீடுகளைப் பள்ளிகளாக மாற்றிக் குழந்தைகளைச் சேர்க்கும் வழக்கம் இங்கே இல்லை. அரசாங்க இலவசப் பள்ளிகளைத் தவிர்த்து, மானியம் பெறாத தனியார் பள்ளிகள் பல உள்ளனவாம். அவற்றில் மாதம் 100 டாலர் முதல் 300 டாலர் வரை (ரூ. 1200 முதல் 3600 வரை) சம்பளம் வாங்குவதாகச் சொன்னார்கள். எனினும் கல்வி முறை இரண்டிலும் பெரும்பாலும் ஒரே அளவிலும் ஒரே வகையான தேர்விற்கு அனுப்பும் நிலையில் (பள்ளிவரை) உள்ளதுவாம். இளம் பிள்ளைகளுக்கு நிறைய வீட்டுவேலைகள் (கணக்கு பாடம் எழுதுதல் - வண்ணம் தீட்டுதல் - படம் வரைதல்) தருகிறார்கள். பெரிய வகுப்புகளுக்கும் அப்படியே. அவர்கள் அவற்றை முடிக்க, வீட்டில் பெற்றோர்கள் உதவுகிறார்கள் (அநேகமாக எல்லோரும் - தாய்தந்தையர் இருவரும் நன்கு படித்தவர்களே). ஆசிரியர்களே வெளியில் நின்று பிள்ளைகளைத் தத்தம் வகுப்புகளுக்கு, பெற்றோர்களிடமிருந்து அழைத்துச் செல்லுகின்றனர். சில ஆசிரியர்கள் சாலையில் - பள்ளிக்கருகில் நின்றுகொண்டு விரைந்து போகும் வண்டிகளை நிறுத்தி, மெல்லச் செல்லுமாறு சொல்லி, பிள்ளைகள் சாலைகளைக் கடக்க மெல்ல அழைத்துச் செல்லுகின்றனர். அவரவர் வகுப்புக் குழந்தைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஒப்படைத்தால் முகஞ்சுளித்துப் புறங்கூறும் நம் நாட்டு ஆசிரியர்கள் நிலை என் கண்முன் நின்றுவிட்டது.

பள்ளிகளுக்கெனத் தனித்த உந்துவண்டிகள் (அரசாங்கப் பள்ளிகள் உட்பட) இருக்கின்றன. நெடுந் தொலைவிலிருந்துவரும் பிள்ளைகளுக்கென அவை பயன்படுகின்றன. அவற்றையும் ஆசிரியர்களே பொறுப்புடன் மேற்பார்வை செய்கின்றனர். அரசாங்கப்பள்ளிகளில் இலவசமாகவே ஏற்றி வருகின்றனர். இவ்வாறு அரசாங்கம் தன் நாட்டுப் பிள்ளைகள் கல்வியில் முற்றும் கருத்திருத்தி மக்களை அறிவறிந்தவர்களாக ஆக்கமுயல்வது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

கல்விமுறையில் பாடங்கள் குறித்த நூல்களைப் பார்த்தேன். சிறப்பாகக் கணக்கு முதலியன நம் நாட்டு நூல்களை ஒத்தே உள்ளன. ஆங்கிலம் கட்டாயம் பயில வேண்டும். (அது நாட்டு மொழி). பிற பாடங்களும் உள்ளன. மேல்வகுப்பிற்குச் செல்ல செல்லச் பாடங்கள் (நம் நாட்டினைப் போன்றே) அதிகமாகும். இளம்பிள்ளை களுக்கு வண்ணம் தீட்ட, கூட்டல் கழித்தல் போன்றவை செய்ய, நூல்கள் மட்டுமின்றி, தனித்தாள்களும் அச்சிட்டு வழங்கப்பெறுகின்றன. அவற்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று செம்மையாகச் செய்து முடிக்க வேண்டுமாம். அவற்றைத் திரும்பக் கொண்டுவர வேண்டும் என்பதுகூட இல்லை. குறிப்பேடுகளும் நூல்களும் மட்டும் கொண்டு வந்தால் போதும். ஆயினும் கற்றவர்களாகிய பெற்றோர், அவற்றை நன்கு பயன்படுத்தி, குழந்தைகள் அறிவு வளர உறுதுணையாகின்றனர். இத் தாள்களும் அரசாங்கப் பள்ளிகளில் (Public Schools) இலவசமாகவே தரப்பெறு கின்றன. மேலே குளிருக்கு பலவகைச் சட்டைகள் அணிவ தால் சீருடைபற்றிய பேச்சு இல்லை. என்றாலும் எல்லோரும் சிறந்த வகையில் சட்டைகள் அணிந்து கையுறை காலுறைகளிட்டு, 'பூட்ஸ்' என்னும் காலணி அணிந்து வருகின்றனர்.

இவ்வாறு பள்ளிகளின் தன்மைகளை அறிந்த நான் வெளியே சென்றேன். அஞ்சலகம், வங்கி முதலியவற்றிற்குச் செல்ல நேர்ந்தது. எங்கும் 'Q' தூரி வரிசை. காலை 8-30 மணிக்கே அஞ்சலகம் தொழிற்பட ஆரம்பிக்கின்றது. சில வங்கிகளும் அப்படியே. எங்கும் உடனுக்குடன் பணியா ளர்கள் வந்தவர்களுக்கு உதவி அனுப்புகின்றனர். எனவே எங்கும் நெடுநேரம் காத்திருக்க வேண்டியதில்லை.

கடைகள் பக்கம் சென்றேன். நம் நாட்டுக் காய்கறிகள், பழங்கள் அனைத்தும் இருந்தன. சில நம் நாட்டிலிருந்தும் சில தென்அமெரிக்க நாடுகளிலிருந்தும் வருகின்றனவாம். மற்றும் நல்ல அரிசி, பிற உணவுப்பொருள்கள் யாவும்

கிடைக்கின்றன. விலைகளும் லண்டன், பாரிஸ் ஆகிய நகரங்களில் இருந்தமை போன்று அவ்வளவு அதிகம் இல்லை. மக்கள்தாம் வெறும் இயந்திரங்கள் போன்று இயங்குகின்றனர். இங்கே பல பெண்கள் - சிறப்பாக வெளிநாட்டுப் பெண்கள் - வீட்டிலேயே இருந்து குடும்பத்தைப் பார்த்துக் கொள்ளுகின்றனர். இவ்வாறு நான் தங்கிய வட்டாரத்திலேயே சிலவிடங்களைக் கண்டும் 'T. V.' பார்த்துக்கொண்டும் சற்றே ஒய்வாக இன்றைய பொழுதினைக் கழித்தேன்.

நியூயார்க் 18-4-85

இன்று வேறு பணிகள் இல்லை. பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் பேசவேண்டிய இரு சொற்பொழிவுகளுக்கு உரிய குறிப்பினைத் தயார் செய்தேன். இங்கே அமெரிக்காவில் செல்லவேண்டிய பிற இடங்களில் உள்ள அன்பர்களுக்கு கடிதங்கள் எழுதினேன். இங்கே தேவைக்கான என் சென்னை வங்கியில் வாங்கிய் காசோலையினை உரிய முறையில் மாற்றினேன். கடிதங்கள் எழுதி முடித்து அஞ்சலில் இட மணி 12 ஆகிவிட்டது. பிறகு பென்சில் வேனியாவிலிருந்து தொலைபேசியில் பேசினார்கள். பேசும் பொருள் பற்றிய முடிவு, நான் சொல்லவேண்டிய நாள், தங்கும் இடம் முதலியன பற்றியும் முடிவு செய்யப்பெற்றது. இனி நாணய்மாற்றுத் தொல்லை இல்லை. ஹானலூலூ (கவாய்மடம்)விலிருந்த ஜப்பான் புறப்படும் வரையில் (1-6-85 வரை) இதே அமெரிக்க நாணயமே புழக்கத்தில் உள்ளமையின் எளிதாக மாற்றிக்கொள்ளலாம்.

பிற்பகல் சிறிது நேரம் படக்காட்சி (T. V.) கண்டேன் பிள்ளைகள் பள்ளிப்பயிற்சி பற்றிக் காலையில் காட்டினார்கள். பள்ளிகளின்முறை - குழந்தைகள் பயிற்றும் முறை - வெறும் விளையாட்டாகவே உள்ளது. அங்கே நம் நாட்டில் 'U. K. G.' என்று சொல்லும் குழந்தைகளின் மேல், வகுப்பு இங்கே இல்லை. இந்த வகையினை (Pre School Education) 'பள்ளிப்படிப்புக்கு முன்னோடி' என்ற வகையில் கூறுகின்றனர். பெரும்பாலும் பள்ளிக்கல்வி பற்றிய காலை

நிகழ்ச்சிகள், பள்ளி ஆரம்பப்பள்ளி (Up to V Grade - Class) ஆகியவைபற்றியே காட்சிகள் அமைகின்றன. அவை பெரும்பாலும் 'கார்ட்டூன்' படங்களாகவே உள்ளன. இலண்டன், பாரிஸ் ஆகியவற்றிலும், இதே நிலைதான். விளம்பரங்கள் மிக அதிகமாகக் காட்டப்பெறுகின்றன.

நம் நாட்டுக் காய்கறிகள் விற்கும் கடைக்குள் சென்று விசாரித்தேன். எல்லாக்காய்கறிகளும்-கொத்தமல்லி, இஞ்சி, கீரைவகைகள் உட்பட இங்கே மிகப் பசுமையாகக் கிடைக்கின்றன. விலைதான் அதிகம். பெரும்பாலன மெக்சிகோ, தென் அமெரிக்கப் பகுதிகளிலிருந்து விமான வழியே வருகின்றனவாம். பழங்களும் பலவகை. யாவையும் நல்ல சுவையோடு உள்ளன. எனக்குப் பிளடெல்பியா செல்வதற்கும் டிக்கெட் பதிவு செய்யப் பெற்றது (23-4-85 காலை 7 மணிக்கு); ஒரு மணி நேரம் பயணம்.

வீட்டில் உள்ள இளங்குழந்தை கண்ணனுடனும் பெரியவன் (5 வயது) சொக்கலிங்கத்துடன் தொலைக்காட்சி கண்டு கொண்டே - அவர்கள் பயிலும் நூல்களைப் பார்த்துக் கொண்டே - பள்ளி பற்றிச் சில கேட்டுக்கொண்டே மாலையிலும் இரவிலும் பொழுது போக்கினேன். நாளை நியூயார்க் நகரைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்தேன். தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்கள் பயின்ற 'கர்னல்' பல்கலைக்கழகத்தை குறித்தபடி பார்க்க போக்குவரத்து வசதி சரியில்லை. எனவே அம் முயற்சியினை விட்டு விட்டேன். உணவுக்குப் பிறகு 9 மணிக்கே உறங்கினேன்.

நியூயார்க் 19-4-85

நியூயார்க் நகரில் பொழுது 5 மணிக்கே விடிகிறது. என்றாலும் பனியும் குளிரும் இன்னும் நீங்கவில்லை. அனைவரும் கம்பளி போன்ற உடைகளுடன் மேல் பெரும் போர்வை போன்ற புறஆடையினையும் போர்த்திக்கொண்டு தான் வெளியே செல்கின்றனர். எனவே இன்று நானும் வெளியே செல்வதால் கம்பளிக்கோட்டு, கம்பளி மேலாடை இவற்றுடன் புறப்பட ஆயத்தமானேன். எனினும் இன்று குளிர் இல்லை; எனக்கு பகலில் கம்பளி உடை மிகுந்த வெப்பத்தைத் தந்தது. மாலையில் மழை. நான் எங்கே சென்றாலும் மழை என்னை விடாது பின்பற்றுகிறது. இறைவன் கருணைமழை என்னை நோக்கி வற்றாது பெய்து கொண்டே இருப்பதாக போற்றினேன். முதன் முதல் ஜினிவாவில் இறங்கும்போது சிறுதூறல்; பாரிசில் இரு நாள் வெளியே செல்ல முடியாத மழை. உரோமில் தூறல் (எனினும் நிகழ்ச்சிகளுக்கும் சுற்றுலாவுக்கும் இடையூறு இல்லை). மறுபடியும் இலண்டனில் மழையுடனே நுழைந்தேன். இருநாள் மழை. இங்கே வந்தபோது மழை இல்லையாயினும், மாலை 2 மணி அளவில் எங்கிருந்தோ பெருமேகம் சூழ்ந்து இடைவிடாது பெய்தது. நான் 6 மணிக்கு வீட்டுக்குத் திரும்பும்வரை மழைதான். நான் சுற்றிவந்த பல பகுதிகளும் (சுமார் 10 கல்) மழைபெய்துகொண்டே இருந்தது.

அன்பர் இராதாகிருஷ்ணன் அவர்கள் எனக்காகக் காலையில் புறப்பட்டு என்னைச் சுற்றுலா தொடங்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றார். பாதாள இரெயிலில்

சென்றோம். இங்கே டிக்கெட் இல்லை. பித்தளையாலான 'டோக்கன்'. முன்னரேவேண்டுமானாலும் வாங்கி வைத்துக் கொள்ளலாம். விலை 90 சென்ட் (நம் நாட்டு 11-50ரூபாய் சமமாகும்) ஒரு நிலையம் சென்றாலும் எங்கே சுற்றினாலும் இதுபோதும். இதை வாங்கி வழியிடையுள்ள ஒரு சிறுமுழையில் இட்டால் வழிவிடும். எனவே யாரும் இந்த டிக்கெட் இல்லாது போக முடியாது. மிகக் குறைந்தது 11-50ரூபாய் அளவு என்றால் நம் நாட்டில் உள்ள பயணச் சீட்டு முறை எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பது தோன்றும். குறைந்தது 50 பைசாதானே. பஸ்சில் 10 பைசா ஏற்றினால் கூடக் கூக்குரலிடும் நம்மவர் இத்தகைய நாடுகளைக் காண வேண்டும். நான் சுற்றிய எந்த நாட்டிலும் இந்நிலைதான். ஒரு தொலைபேசிக்கு 25 செண்டு (3ரூபாய்க்கு மேல்). மேலும் இங்கே மாதாமாதம் வாங்கும் பருவமுறைச் சீட்டும் (season ticket) கிடையாது. நாள்தொறும் அலுவலகம் செல்லும் அத்தனை பேரும் அன்றாடம் வாங்கத்தான் வேண்டும். பாவம் அவர்களுக்குச் சலுகை இல்லையாயினும் கவலை இல்லை. அன்றாடம் இரு பக்கமும் 'Q'வில் நின்று சீட்டு எடுக்க ஆகும் நேரத்தை எண்ணி வருந்த வேண்டியுள்ளது. (நல்ல வேளை, ஒரே சமயத்தில் எத்தனை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்)

கார் வைத்திருப்பவர் நிலை இன்னும் வருந்தத்தக்கது. இங்கே பலர் கார் வைத்திருந்தாலும் இன்னும் பலர் கார் வாங்காமலேயே இருக்கின்றனர். அலுவலகங்களுக்குக்குக் காரில் சென்று, வாசலில் நிறுத்த ஒரு நாளைக்கு (8-10 மணி நேரம்) 10 டாலர் (சுமார் 120 ரூபாய்) தரவேண்டும். அப்படியே வேறு கடைகள் பக்கம் நிறுத்தினாலும் ஒரு மணிக்கு 2 டாலர் முதல் 50 செண்டு வரை உள்ளது. (ஒரு டாலர் ரூ 12-50 மதிப்பு) எனவே சொந்தமாக ஓட்டினாலும் இதற்கெல்லாம் அஞ்ச வேண்டியுள்ளது. நல்ல வேளை பாதாள இரெயில், இந்தக் கார் நிறுத்தும் இடம் ஆகியவை அனைத்தும் பொதுநலத்துறையினைச் சேர்ந்ததாகையால் அத் துறைவளர நல்ல வருமானம் உண்டாகிறது போலும்.

எனினும் சிலர் பாதாள இரெயில் யாவும் தனியார் உடைமையே என்கின்றனர். தெருக்களில் இரவு நேரங்களில் நிறுத்துவதற்கும் கட்டணம் உண்டு. சில தெருக்கள் விதி விலக்கு. பாரிஸில் எல்லாத் தெருக்களுக்கும் (தம் வீட்டுமுன் நிறுத்தினாலும்) கட்டணம் உண்டு. இவற்றையெல்லாம் எண்ணும்போது நம் நாடு எவ்வளவு மேல் என்பது புலனாகும்.

காலை அன்பர் இராதாகிருஷ்ணன் சுற்றுலா புறப்படும் இடத்திற்கு என்னை அழைத்துச் சென்று அங்கே விட்டு, உடன் அலுவலகம் சென்றார். இங்கே கடமை உணர்ச்சி அதிகம். யாரும் அலுவலகம் காலம் தாழ்த்துச் செல்ல மாட்டார்கள். வாரத்தில் ஐந்து நாள்; சனி ஞாயிறு விடுமுறை. தேவையற்ற வகையிலோ டிசம்பரோடு விடுமுறை தீர்ந்துவிடுமென்றோ யாரும் விடுமுறை எடுப்பதில்லை. எனவே அவர்கள் உரிய வேளையில் 9 அல்லது 9-30க்கு அலுவலகம் சென்று சேர்கின்றனர்.

நான் ஏறிய உந்து வண்டி சில இடங்கள் சுற்றி, 9.15க்கு உலகிலேயே உயர்ந்த கட்டடத்தின் முன் வந்தது. (1436 அடி உயரம் என்கின்றனர்) அந்த இடத்தைச் சுற்றிக்காண்பதற்கும் (Empire State Building) மேல் ஏறி வருவதற்கும் என ஒரு மணி நேரம் ஒதுக்கியுள்ளனர். நியூயார்க் பழைய நகரம், 'யார்க்' என்று அதற்குமுன் இருந்த ஒரு சிற்றூரை நோக்க, 'நியூயார்க்' பெரிய நகரமாக இருக்கலாம். ஆனால் அமெரிக்க நாட்டு வளர்ச்சியில் இது பழையதும் தலைநகரமாகவும் இருந்திருக்கக்கூடும் (நாம் நாட்டில் சில காலம் கல்கத்தா தலைநகரமாக இல்லையா). இப்போதும் வாஷிங்டன் (D.C.) தலைநகர் என்ற பெயரைப் பெற்றாலும், பெரும்பாலும் எல்லா அலுவலகங்களும் இங்கேதான் உள்ளன என்கின்றனர். எனவே இது ஒரு காலத்தில் (Empire) 'எம்பயர்' எனவும் 'Empire State' எனவும் அழைக்கப் பெற்றதாம். ஆகவே அதற்குச் சொந்தமான இந்த கட்டிடத்திற்கு அவ்வாறு பெயரிட்டனர். இது கட்டிய

காலம் முதலியன பற்றிய குறிப்பினைக் காண முனைந்தேன். (கிடைக்கவில்லை).

இந்த மாடியின் உச்சிக்குப் போக முடியாவிடினும் 87வது மாடி வரையில் சென்றோம். இருமுறை மேல்தூக்கி (Lift) மாற வேண்டியிருந்தது. மேல் தளத்திலிருந்து பார்த்தால் கீழே பனி மூட்டம் இருந்தது, எனினும் சிறிது சிறிதாக விலக ஆரம்பித்தது. அத்தகைய மேல்தளத்துக்கு மேலும் (சுமார் 400 அடிக்கு) கூம்பு நீண்டு கட்டப்பெற்று, அலுவலர் தனியாக ஆய்வு காணும் வகையில் அமைக்கப் பெற்றிருந்தது. நாங்கள் சுமார் 1000 அடி உயரம் ஏறி இருப்போம். அங்கிருந்து நியூயார்க் நகரம், அதன் சுற்றுப்புறத்தில் உள்ள கடல்கள், கழிகள், தீவுகள் நன்கு தெரிந்தன. உலகிலேயே மிகப் பெரிய நகரிலே - உலகிலேயே மிக உயர்ந்த மாளிகையின் உச்சியிலே நிற்கின்ற பெருமிதம் எனக்கு உண்டாயிற்று. இங்கே திருச்சியின் தமிழர் இருவரும் ஆஸ்திரேலிய, ஹாலண்டு போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்களும் என்னுடன் இருந்தனர். மனிதன் கை வண்ணத்தால் அமைந்த உலகின் உயர்ந்த மாளிகையின் உச்சியில் இருக்கிறோம் என்ற உணர்வோடு தரைக்கு வந்தோம்.

பின் பலவிடங்களுக்கு அழைத்துச் சென்றனர். பல கட்டடங்கள் 100 மாடிகள் கொண்டதாகவும் பெருவாரியானவை 8(அ)10 மாடிகள் கொண்டனவாகவும் இருந்தன. அகன்ற தெருக்கள். பெரும்பாலான நிழற்சாலை (Avenue) என்ற பெயருடன் எண் அளிக்கப் பெற்றுள்ளன. (Avenue 1,7,11,25) அப்படியே குறுக்குத் தெருக்களும் தெரு என்ற பெயரில் (Street) எண்குறிக்கப் பெற்றுள்ளன. சிலவிடங்களில் சில பெருந்தெருக்கள் தலைவர்கள் பெயரிலும் இந்நாட்டுப் பிற மாநிலங்கள் பெயரிலும் (State names) இருந்தன. அகன்ற 120 அடி உடையனவும் அதற்கு அகலமானவையும்கூட ஒற்றைவழியாகவே (one way) இருந்தன. எனவே வண்டி ஓட்டுவதில் தொல்லை இல்லை. சாலைகளில் பலவிடங்களில் இருபுறங்களிலும் செல்வோருக்கு வசதியாக

நீண்ட நிழற்குடை அமைப்புக்கள் இருந்தன. நிழற்சாலை என்பதற்கேற்ப இரு பக்கங்களிலும் நிழல் தரும் மரங்கள் இருந்தன. எனினும் இன்னும் இலை உதிர்கால எல்லை நீங்க வில்லையாதலால் அவை முற்றும் தழைத்துப் பூத்துக் குலுங்கவில்லை. இரண்டொன்று நன்கு இருந்தன.

வழி நெடுகப் பல கட்டடங்களைக் கண்டேன். உலகி லேயே மிகப் பெரிய அசையும் நாடக அரங்கினைக் கண்டு வியந்தேன். 1864லிலும் அதற்கு முன்பும் கட்டிய கட்டடங் கள் பெரும்பாலும் கருங்கற்களை அடுக்கிக் கட்டியுள்ளன என்றனர். தெருக்கடைகளில் 'வீண்கூச்சல் வேண்டாம்' என எச்சரித்துப் பலகைகள் இருந்தன. சில கட்டடங்கள் 18,19ம் நூற்றாண்டில் கட்டியவை, இன்னும் பொலிவுற்று விளங்கு கின்றன. எங்கும் படக்காட்சி விளம்பரங்கள் தென்பட வில்லை. சில கட்டடங்களில் புறத்திலேயே பல தளங்களுக்கு மேலே செல்ல இரும்புப்படிகள் வைக்கப்பெற்றுள்ளன. (நம் கட்டடங்களும் அத்தகைய ஏற்பாடு செய்யலாமா என எண்ணினேன்). எங்களுக்கு வழிகாட்டியவர் பலவற்றைப் பற்றிய விளக்கங்களைச் சொல்லிக்கொண்டே வந்தார்.

நியூயார்க் பழைய நகரம் நுழைந்தோம். அங்கே ஒரு அகன்ற சாலை (Broad way) இருந்தது. அதன் அகலம் மிகக் குறைவு. பழைய நகலில் பிறவற்றை நோக்க இது அகன்றதாக இருந்தமையின் அப் பெயரிட்டனர் போலும். நம் சென்னையில், பழைய நகராகிய ஜார்ஜ் டவுனில் பிற தெருக்களெல்லாம் குறுகியிருக்க, அக் காலத்தில் அகன்ற தெருவினை, 'பிராட்வே' என அழைக்கவில்லையா! மற்றும் இங்கே 'Village Corner' என்ற ஒரு பகுதி இருந்தது. பழங் காலத்தில் கிராமமாக இருந்துபின் நகரில் சேர்க்கப் பெற்றிருக்கும். சென்னையின் நுங்கம்பாக்கம் 'Village Road 'வில்லேஜ் ரோடு' என் நினைவிற்கு வந்தது.

வழி நெடுகப்பலப்பல் கடைகள் கட்டடங்கள். 'TAMU' என்ற ஒரு கட்டடத்தைப் பார்த்த போது இது 'தமிழின்' திரிபோ என நினைத்தேன். ஏனெனில் இங்கே இதோ

னேஷியா, ரோமாபுரி, ஆகிய பெயர் தங்கிய கடைகளும் மூங்கில் முனை போன்றவையும் (Bamboo Corner) தமிழ் நாட்டுப் பித்தளைச் சாமான் கடைகளும் இருந்தன. கடைகளில் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பெற்ற இடங்களை அவ்வப்போது துடைத்துக்கொண்டே இருந்தனர். பொன் வைர நகைக்கடைத் தெருக்களும், சீனர்வாழ் தெருக்களும் பிறவும் அழகுற விளங்கின. 'Ricksha Carriage' என்ற இடம் ஒரு வேளை முன் இங்கு ரிக்ஷாக்கள் இருந்திருக்குமோ என்ற நினைவை உண்டாக்கிற்று. கடைகள் பலவற்றில் நம் நாட்டில் உள்ளமைபோன்று 50%, 40% கழிவு உண்டு என்ற விளம்பரங்களைக் கண்டேன். நாளிதழ்களிலும் இத்தகைய விளம்பரங்கள் நிறைய இருந்தன. பலவிடங்களில் 24 மணி நேரமும் இயங்கும் வங்கிகள் இருந்தன. நாம் வங்கியுள் போகாமலேயே வெளியிடத்தில் காசோலை செலுத்தின் (நம் கணக்கில் பணம் இருந்தால்) பணம் பெறும் முறை போற்றற் குரியது. காய்கறிக்கடைகள் உட்பட எல்லாக் கடைகளிலும் வாங்கும் பொருள்களின் விலைகளைக் கணக்கிட்டுக் காட்டும் கணிப்பொறிகள் இருந்தன.

சீனர்நகர் (China Town) என்ற ஒரு தனிப்பகுதியும் உண்டு. அங்கே எல்லாக்கடைகளும் சீனர்களுடையதே. பெயர்ப்பலகை யாவும் சீனமே. சீனக்கோயில் உண்டு. இங்கே சீனர்கள் அதிகமாக உள்ளனர் என்றும் நிறைய இடங்களை வாங்குகிறார்கள் என்றும் கூறினர். எனக்கு சென்னை சௌகார்பேட்டை நினைவுக்கு வந்தது. புத்தர் கோயிலுள் சென்றோம். புத்தர் வழிபாடு முதலியவற்றை விளக்கினர். இலங்கையில் பெரும் பெரும் புத்தர் கோயில் களைக் கண்ட எனக்கு இது ஒன்றும் புதியதாக இல்லை. எனினும் இங்கே புத்தர் பெருமான் முன் ஒரு பெருந்தட்டில் பல காகிதச்சுருள்கள் இருந்தன. நான் ஒன்றினை எடுத்து என்ன எனக் காண முயன்றேன். (அங்கே வருபவர்தம் வருங்கால - அதிஷ்டம் பற்றிய குறிப்பு அதில் உள்ளது எனக் காணமுடிந்தது) நான் எடுத்தத் தாளில் 'Probability





of Success : Excellent, wherever in the world you may travel, some mystery you sure will unravel. A simple mallet dug out from gravel may turn to be a President's gravel'. நான் வியந்தேன். 'முத்துத் தெரு' (Pearl St.) பக்கம் பெருங்கட்டடங்கள் இருந்தன. சிலசிலவிடங்களில் நல்ல பூங்காக்கள் - 'Red Zone' எனக் குறிக்கப்பெற்று 'fine 100 for misuse' என்றும் எழுதப்பெற்றிருந்தது பூங்காக்களைப் பாதுபடுத்துவோருக்கு அத்தகைய கடுந் தண்டனை போலும் (f 100 = 1200 ரூபாய்) வழிகாட்டிக்கோ மற்றவர்களுக்கோ அதுபற்றி விளக்கத் தெரியவில்லை. 19-ம் நூற்றாண்டில் கட்டிய பழைய பழைய கட்டடங்களை (St. Paul church உட்பட) கண்டோம். ஒரு பெரிய வாணிபக் கட்டடம் 100 அடுக்குக்கு மேல் இருக்கும்; அதில் 5000 பேருக்கு மேல் வேலை செய்கின்றனர் எனக் கூறினர்.

சாலைகளில் அதிக மக்கள் நடமாட்டம் உண்டு. இலண்டன், பாரிசில் அவ்வளவு அதிகம் இல்லை; இங்கே அதிகம். உந்துவண்டிகளும் அதிகம். நூற்றுக்கணக்கான - ஏன் ஆயிரக்கணக்கான வண்டிகள் எங்கும் நிறுத்தப் பெற்றிருந்தன. (பல 12 டயர், 10 டயர் இட்ட கன வண்டிகள்) நாள்தொறும் ஆயிரக்கணக்கான மக்கள் உலகில் பல பாகங்களிலிருந்தும் இங்கே உலாவருகின்றனர். அரசாங்கத்துக்கு நல்ல வருமானம் உண்டு, நம் இந்திய அரசாங்கமும் தமிழக அரசாங்கமும் இத்தகைய வகையில் ஏன் ருத்திருத்தக் கூடாது என எண்ணினேன்.

பகல் 1 மணி அளவில் ஒரு கழியின் அருகில் பஸ் ன்றது. நாங்கள் அனைவரும் இறங்கி மற்றொரு தீவிற்குச் சிறு கப்பலில் செல்லவேண்டும். பல உந்து வண்டிகளில் வந்தவர்கள் காத்துக் கிடந்தனர். அனைவரும் சிறு கப்பலில் ஏறினோம். சுமார் 15 நிமிட நேரத்தில் ஒரு தீவில் அது நின்றது. (நியூயார்க் நகரைச்சுற்றிலும் பல தீவுகள் உள்ளன.) நாங்கள் சென்ற தீவின் நடுப் பகுதியில் உயர்ந்த சிலை - வெற்றிச் சின்னம் (The Statue of Victory) இருந்தது.

தற்போது அதில் பலவித செப்பனீட்டு வேலைகள் நடை பெறுகின்றன. சுற்றிலும் இரும்புச்சாரங்கள் இடப்பெற்றிருந் தன. உள்ளே கட்டடத்தில் அதன் தோற்றம் - அமைப்பு - அந்த உயரத்துக்கு அது நடைபெறும் பராமரிப்புப் பணி - காலங்கள் - செயலாற்றியவர் பற்றிய குறிப்பு ஆகியவை படங்களோடும் விளக்கங்களோடும் இருந்தன - அங்கே அவற்றை விளக்கியும் உரைத்தனர். அமெரிக்க மக்கள் விடுதலைச் சின்னமாக - அவர்கள் வாழ்வின் ஒளி விளக்காக இது போற்றப்பெறுகிறது. மிக உயரமாக உயர்த்திய கையில் ஒளிப்பந்தம் தாங்கி உலகிற்கே விடுதலையின் பொருளை விளக்கும் வகையில் அச் சின்னம் இருந்தது; கண்டு மனத்தில் வாழ்த்தினேன். அச் சிறு தீவினைச் சுற்றிலும் கருடன்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவற்றுள் சில முற்றிலும் வெண்மையான நிறத்துடனே காட்சி தந்தன. தூரத்தே பல தீவுகள் இருந்தன. வானில் அடிக்கடி 'ஹெலிகாப்டர்' பறந்துகொண்டிருந்தது. நாம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு (அண்ணா நகரிலிருந்து மாம்பலம்)செல்லக்காரினை உபயோகிப்பது போன்று இங்கு இதை உபயோகிக்கிறார்கள். பலர் சொந்தமாகவே வைத் திருக்கின்றனர். தீவினைச் சுற்றிப்பார்த்து, வெற்றித் திருவினை வாழ்த்தி, மறுபடியும் கப்பல் ஏறி 2-30க்கு உந்து வண்டி உள்ள இடம் வந்தோம்.

மறுபடியும் எங்கள் பயணம் தொடர்ந்தது. 17-ம் நூற்றாண்டில் கட்டிய கோயில்கள், தொங்கு பாலங்கள் '400 500' (இடையில் ஒரு தாங்கியும் இல்லை), கடலோரக் காட்சிகள் இவற்றைக் கண்டு கொண்டே வந்தோம். 3மணி அளவில் பெருமழை தொடங்கிவிட்டது. ஒரு பகுதியில் பலர் உணவு உட்கொண்டனர். பின் 3-30க்குப் புறப்பட்டு, முக்கிய இடங்களைக் கண்டோம். ஐக்கியநாடுகள் சபை (U. N. O.) பல நாட்டுக் கொடிகள் பறக்க (நம் நாட்டுக் கொடியும் சேர்ந்து) உயர்ந்து காட்சி தந்தது. நம் நாட்டுப் பெருந்தலைவர்கள், இந்திரா காந்தி—இங்கிருந்து பேசிய

பேச்சுகள் எதிரொலித்தன. யூதர்கள் தங்கிய - தங்கும் இடங்கள் தனியாக இருந்தன. நியூயார்க் பல்கலைக்கழகம், அவற்றின் பிரிவாகிய மருத்துவக்கல்லூரி முதலியவற்றையும் கண்டோம். இங்குள்ள சாலையின் பெயர்களை பற்றி முன்னமே குறித்துள்ளேன். 'ஆம்ஸ்டர்டாம் அவின்யூ' - பல பெருங்கடைத் தெருக்கள் - பூட்டுகள் ரிப்பேர் செய்யவும் விற்கவும் 24மணி நேரமும் திறந்திருக்கும் கடைகள் இருந்தன. (Stock Exchange) என்றுள்ள பணப்புழக்கக் கட்டுப்பாட்டு இடம், 24மணி நேரமும் கார்களைக் காத்துத் தரும் இடங்கள், எல்லாச் சாமான்களும் ஒரே இடத்தில் கிடைக்கும்படியான கடைகள் பல கண்டேன். மற்றோரிடத்தில் (U. N. O.) போன்ற பல கொடிகள் பறந்த மாளிகை கண்டேன். அங்கே ஆப்ரகாம்லிங்கன் சிலையும் அவர் நினைவாலயமும் அழகுற நிமிர்ந்து நின்றன. மக்கள் இனத்தை ஒன்றுபடுத்த லிங்கன் மேற்கொண்ட செயல்கள் என்முன் நின்றன.

சிலவிடங்களில் காலம் காட்டும் கடிகாரங்கள் மட்டுமின்றித் தட்பவெப்ப நிலைக் குறியீடுகளை அறிவிக்கும் பலகைகளும் இருந்தன. நம் நாட்டில் உள்ளமை போன்று 'Super market' எனப்பெறும் பெருங்கடைகளும் அனைத்தும் கிடைக்கும் 'Departmental store' என்பவையும் பலவிடங்களில் இருந்தன. 'இந்திய மாளிகை' என்று ஒரு கட்டடத்துக்குப் பெயர் சூட்டப்பெற்றதை அறிந்தேன். ஆயினும் அதற்குரிய காரணத்தை அறியவில்லை. பரந்த காடுகள் போன்ற பூங்கா ஒன்றும் இருந்தது. அதை ஓட்டியே கழிகளும் இருந்தன. இவை நியூயார்க் இயற்கையோடுகூடிய பெருநகரம் என்பதை நினைவூட்டின. சாலைகள்தோறும் பெருமரங்கள் இன்றேனும் சிறுமரங்கள் வரிசையாக வைக்கப்பெற்றிருந்தன. அவை நான் முன்னரே கூறியபடி இலையுதிர்க்காலம் நீங்க (Autumn) வரும் வசந்தத்தை எதிர்நோக்கித் துளிர்க்கத் தொடங்கியுள்ளன. அரிய மீன்காட்சிச் சாலை ஒன்றும் இருந்தது. (நாளை

அல்லது மறுநாள் அதைச் சென்று காணவேண்டும் என்று திட்டமிட்டேன்). இவைகளுக்கிடையில் சில காலி மனைகளும் கட்டடங்கள் கட்டுவதற்கென - பல பழைய இடிந்த பகுதிகளுடன் இருந்தன. சில பழைய கட்டடங்களும் மேலே பூச்சு அற்று, உள்ளே உள்ள செங்கற்களும் நிலைகெட்டு நிற்பதனையும் அவைபற்றி யாரும் நடவடிக்கை எடுக்காது விட்டு வைத்திருப்பதையும் நினைத்தேன்.

பொருட்காட்சிச்சாலை, நூல்நிலையம் ஆகியவை உள்ள பெரிய இடங்களும், பல்கலைக்கழகங்களில் பயிலிடங்களும், 1754-56-ல் அமைத்த கொலம்பிய பல்கலைக்கழக இடங்களும், பள்ளிகள் கல்லூரிகள் ஆகிய இடங்களும் முன்வந்து சென்றன. இருநூறு ஆண்டுகளுக்குமுன் சிறு பள்ளியாகத் தொடங்கி எப்படிப் பெரிய பல்கலைக்கழகமாயிற்று என்பதை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். 1872-ல் கட்டிய பெருங்கோயில், போர்டுபவுண்டேஷன், ராக்பெல்லர் பவுண்டேஷன் போன்றவை அமைந்த இடங்கள், பெருஞ் சோலை போன்ற பூங்காக்கள், குறைந்த வருமானம் உடையவர்களுக்கென அரசாங்கம் கட்டி உதவிய வாழிடங்கள் பல கண்டேன். (நான் முன்னரே சுட்டியபடி இங்கேயும், குடிசைகள் இல்லை.) நம் ஊரில் குடிசைமாற்று வாரியம் மிகுந்த முயற்சியோடு பலருக்கு வாழிடம் கட்டித்தந்தும், மேலும் மேலும் குடிசைகள் வளர்ந்து வருவதைக் கண்ட எனக்கு, குடிசையே இல்லாத இந்த நகரின் சிறப்பினை எண்ணி மகிழ்ச்சி பிறந்தது. நம் நாடு என்று இந்த நிலைக்கு வருவது என்று ஏங்கினேன்.

பெரிய மருத்துவமனையினைக் கண்டேன். பலவிடங்களில் மருத்துவர்கள் (நம் நாட்டவர் உட்பட) வாழிடங்கள் முன் பெயர்ப்பலகை இருப்பதை இங்கே கண்ட நான் இப் பெரிய மருத்துவமனையினையும் கண்டபோது, இங்கும் நோயாளிகளுக்குக் குறைவில்லை என்பதை எண்ணத் தூண்டிற்று. மேலும் இங்கே யாரும் மருந்துகளை டாக்டர் குறிப்பு இன்றி வாங்க முடியாதாம். எவ்வளவு தெரிந்த

மருந்தாயிருந்தாலும் நேராக வாங்க முடியாது. மருத்துவர் குறிப்பு வழியே பெறவேண்டியிருந்தமையால், மருத்துவருக்கு நல்ல 'கிராக்கி' இருந்தது. மருந்தகத்தில் ஒன்று ஜர்மன் நாட்டு கவிஞர் திரு. கத்தே அவர்கள் (Guathe) பெயரில் அமைந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தேன். பலப்பல பெரிய உணவு விடுதிகள், தங்கும் இடங்கள் ஊரெங்கும் பரவி இருந்தன. சில கடைகளின் வாயிலில் வைத்துள்ள மனித அளவுள்ள பொம்மைகள் உண்மையாகவே மனிதர்களே என்று எண்ணுமாறு அமைந்துள்ளன. இவ்வாறு பலப்பல கடைகளைக் கண்டுகொண்டே மாலை 5 மணிக்கு புறப்பட்ட இடத்திற்கே உந்துவண்டி வந்தது. அப்போதும் மழை பெய்துகொண்டிருந்தது. நல்லவேளை, பாதாள ரெயிலுக்குப் புகும்வழி பக்கத்திலேயே இருந்ததால் தப்பித்தேன். உள்ளே புகுந்து உரிய டிக்கெட் எடுத்து, இரெயில் ஏறி வீடு திரும்பினேன். 'நியூயார்க்' உலக மக்களையெல்லாம் தன்னிடம் பலவகையில் ஈர்க்கும் நிலையினையும் செல்வ வளத்தினையும் இயல்புகளையும் இரவு பகல் இல்லா நிலையினையும் உயர்ந்த கட்டிடம், உயர்ந்த சிலை, உயர்ந்த வாழ்வு இவை பெற்ற தன்மையினையும் எண்ணி எண்ணி வியந்து உறக்கங்கொண்டேன்.

நியூயார்க் 20-4-85

காலை உறக்கம் விட்டு எழுந்தேன். பிளடெல்பியா விற்கு 23-4-85 விடியலில் புறப்பட வேண்டும் எனவும் அங்கே இடம் பதிவு செய்யப்பெற்றதையும் பிற தகவல் களையும் நேற்று அறிந்த நான், இன்றும் நாளையும் நியூயார்க்கில் பார்க்க வேண்டியவற்றைப் பார்க்க நினைத் தேன். இன்று அனைத்தும் விடுமுறையாயினும் கல்விபற்றிய சில குறிப்புகளை அறிய முடியும் என எண்ணினேன். என்றாலும் இவ்வூரின் பெரிய பொருட்காட்சிச் சாலையினை (Museum of Natural History)யும் நூல் நிலையத்தையும் காணவேண்டும் என்ற அவாவினால் காலை 9 மணிக்குச் சிற்றுண்டி கொண்டு புறப்பட்டேன். நேரே பாதாள இரெயில் வழியே ஒருமுறை மாறி அக் காட்சிச்சாலை உள்ள 81-வது தெரு நிலையத்தை அடைந்தேன். நிலையத்தை ஒட்டியே அது இருந்தமையின் செல்வதற்கு யாதொரு தொல்லையுமில்லை. உரிய கட்டணம் செலுத்தி உள்ளே புகுந்தேன்.

பெரிய ஐந்துமாடிக் கட்டடத்தில் அக் காட்சிச்சாலை அமைந்திருந்தது. முதல் நான்கு மாடிகளிலும் காட்சி அமைப்புக்கள். நான் நேரே நான்காவது மாடிக்குச் சென்றேன். கடல் வாழ் பொருள்கள் ஒருபக்கம் வைக்கப் பெற்றிருந்தன. 3000 மில்லியன் ஆண்டுகளிலும் அதற்கு முன்னும் கடல்வாழ் உயிர்களின் வளர்ச்சியைக் காட்டும் வகையில் முறைப்படுத்தியிருந்தனர். (வாய் உள்ளன -

வாயற்றன எனப் பல). முதலில் மரங்கள் தோன்றின என்ற குறிப்புடன் (First Dinosaurs), என்ற முதல் குடும்பம், (Mammal) மாமல் பற்றிய விளக்கங்கள், எலும்புக்கூடுகள், கங்காரு போன்றவை, (Mummy), 'மம்மி' வகை பல. அவை காலந்தொறும் வளர்ச்சி அடைந்தநிலை, ஆஸ்திரேலியாவி லிருந்து (Marsupial) என்ற பைமாவின உயிர்வகை (Coryth-osaurus) என்ற பிற்காலத்தியவை போன்றன முறையாக வைக்கப் பெற்றிருந்தன. இடையில் அவை கல்லாயிருந்த நிலை (Fossil) பற்றிய விளக்கமும் இருந்தது. பின் (Mammal) மாமல் இரண்டாம் முறை உலகில் தோன்றிய விதம், காலம் 60 மில்லியன் ஆண்டுகள் எனக் கணக்கிட்டு; அதற்கு 'Eocene' எனப் பெயரிட்டு அது உலகில் பரவிய விதத்தினை நன்கு விளக்கியுள்ளனர். பின் 6 மில்லியன் காலத்தில் உயிர்களின் நிலைமாற்றத்தினையும் பிற வளர்ச்சிகளையும் காட்டியுள்ளனர். காலக்குறிப்பினை விளக்கும்போது-ஐம்பது மில்லியன் ஆண்டுகளுக்குட்பட்ட நிலையில் ஓரிடத்தில் இமயம், ஆல்ஸ் முதலிய பெருமலைகள் வளரத் தொடங்கிய காலத்தில் என்ற குறிப்பு இருந்தது. அக்காலத்தில் விந்திய மலைக்குத் தெற்கே உயிரினம் வளர்ந்த நிலையினைக் காட்டி உள்ளனர். அப்போதுதான் நம் தமிழ் மக்கள் இமயம் கடலுள் ஆழ்ந்த காலத்தையும் தெற்கே குமரிக்கண்டம் (லெமூரியா) இருந்த நிலையினையும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிய அறிவுத்திறனைப் போற்ற முடிந்தது. மேலும் ஓரறிவுடைய உயிர் தொடங்கி (மரம்) உயிரினம் வளர்ந்த வகையினை நம் மக்கள் நேரடியாகவும் பல்வேறு கதைகள் வழியாகவும் விளக்கிய உண்மையும் எவ்வளவு சரி என்பதும் புலப்பட்டது.

பின் கடந்த 30 மில்லியன் ஆண்டுகளின் பல்வேறு உயிரினங்களின் கலப்பால் தோன்றிய விலங்குகள், பறவைகள் பற்றிய குறிப்புகளும் இருந்தன. (எல்லாக் குறிப்புகளும் 3000 மில்லியன் ஆண்டு முதல் - அதற்குரிய மூலப்பொருள்காட்சியுடனேயே இருந்தன). அவ்வாறு தோன்

றியவற்றின் - 'மாமல்' கரடி, நாய், நரி, சில பறவைகள் முதலியவற்றின் - எலும்பு - அமைப்பினையும் மாற்றத்தினையும் நன்கு விளக்கியுள்ளனர். யானைகள் போன்றவை 20 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றி பல வகையில் மாறி இன்று நாம் காணும் நிலையில் உள்ளன. மனிதனும் ஏறக்குறைய அக்கால முதலே தோன்றி அதனுடன் வாழ்ந்து, அதை உணவுக்காக வேட்டை ஆடினான் என்ற குறிப்பும் உள்ளது.

இவ்வாறு உயிரின வளர்ச்சிக் கூறுகளை நான்காவது மாடியில் ஒருபுறம் (Two ways) கண்ட நான் மறுபக்கத்தில் நுழைந்தேன். அங்கே உலகம் தோன்றிய, விதம் பற்றிய முற்றிய அறிவுடையார் ஆய்வுகள் இருந்தன. அணுவிலிருந்து (ஒலியியல்) (Electrons & Proton) மிகநுண்ணிய வெட்ட வெளியிலிருந்து-நுண்ணிய அணுக் கூறுகளின் சேர்க்கையால் உலகம் உண்டான வகையினைத் தக்க சான்றுகள் காட்டி விளக்கியுள்ளனர். முதலில் கல் தோன்றிய பின் பல உலோகங்கள் உள்ளே அமைந்தன என்கின்றனர். நம் நாட்டுக் 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றி மூத்த குடி' என்ற அடிகள் என் நினைவுக்கு வந்தன. பொழுதும் - காலமும் ஆற்றலும் (Time & Energy, என்று விளக்கங்காட்டி வானவெளியில் உயிரணுக்களின் வாழ்வுப் பேரண்டங்களையும் பின் கடல் உலகம் இவற்றின் தோற்ற விளைவு மாற்றங்களையும்(Inter Action of Forces) காட்டியுள்ளனர். இவ்வுலகில் உள்ளமைந்த கூறுகளையும் பொழுதின் மாற்றங்களையும் சுமார் 250 மில்லியன் ஆண்டுகளில் நடைபெற்ற வகையில் விளக்கியுள்ளனர். (எனினும் இவை அமெரிக்க மண் அடிப்படையில் மட்டும் அமைகின்றது. நம் தமிழகம், மத்திய தரைகடல் ஆய்வு அமையின் இன்னும் சிறக்கலாம்.) பல உயிரினங்கள் மண்ணொடு கால வெள்ளத்தில் புதைபட்டு மறைந்ததையும் அவற்றின் எலும்புக்கூடுகள் வைத்து ஆய்ந்து கண்ட முடிபுகளையும் காட்டியுள்ளனர். (Radio Activity provides Measurement in years); பின் கடல்வாழ் உயிரினம், அதன் உட்கொடிகள், அங்கே உயிர்

வாழ்வின் வளர்ச்சி. பின் தரைவாழ் உயிரினங்கள் (Plants invertebrates) அடுத்த vertebrates,(Chordates mammalien) பற்றிய ஆய்வும் உலக உயிரின வளர்ச்சி வரலாறு எனக் காட்டப்பெறுகின்றது. இந்திய ஆமை (6' நீ 6' அ 4' உயரம்) ஒன்றும் காட்சிப் பொருளாக இருந்தது. விவிலிய நூலில் காட்டிய 'Speak to the Earth and it Shall teach Thee' (Job 128)வாசகம் அழகாகப் பொறிக்கப் பெற்றுள்ளது.இவற்றை யெல்லாம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் முன்னோர் எழுதி வைத்ததை - பாவம் இவர்கள் அறியார் போலும்! எங்கும் அவை பற்றிய குறிப்பு இல்லை.

ஒருவகையாக நான்காவது மாடியினை முடித்துக் கொண்டு - சற்றே களைப்பாக இருந்தமையால், கீழே வந்து சிறிது உணவும் குளிர் நீரும் பருகினேன். பின் மற்றைய மூன்று மாடிகளில் உள்ளவற்றை காண முயன்றேன். (மேல் ஐந்தாவது மாடியிலும் அடித்தளத்திலும் காட்சிச் சாலைகள் இல்லை -வேறு இவை பற்றிய அலுவலகங்கள் கடைகள் பிற இருந்தன). மூன்றாவது மாடியில் அமெரிக்க நாட்டிலும் (U.S.A.) அதைச்சுற்றிலுமுள்ள நாடுகளிலும் உள்ள மக்களின் தொன்மை காணும் வகையில் பலப்பல பொருள்கள் வைக்கப் பெற்றிருந்தன. நியூயார்க் நகரைச் சுற்றி வாழ்ந்த மக்கள் வாழ்வு, அவர்களின் வாழ்க்கை முறை, பயன்படுத்திய பொருள்கள், ஆயுதங்கள், உடைகள், பழங்கால வாழ்விடங்கள் (குடிசைகள்) ஊதுகுழல்கள் முதலியன வைக்கப் பெற்றிருந்தன. பின் பசிபிக்கடலை ஒட்டிய மக்கள் வாழ்வு, விளையாட்டு,வினை செயல்கள், இசைக் கருவிகள்,நாற்காலி படுக்கை முதலியன காட்சிப்பொருளாக இருந்தன - காலந் தொறும் வாழ்ந்த வகையுடன், இந்நாட்டு இந்தியமக்கள் (Plain Indian of North America) வாழ்வியல்கள் பற்றிய குறிப்பும் கனடா நாட்டுப் பழங்குடிகள் வாழ்க்கைமுறை வளர்ச்சிவகை பற்றியும் உடை, பாண்டங்கள், ஓலைப்பாய்கள் முதலியன பற்றியும் குறிப்புடன் பொருள்களையும் காட்சியாக வைத்திருந்தனர். இன்னும் இந்நாட்டில் காலந்

தொறும் மக்கள் மாறிய வளர்ச்சி நிலையினையும் பிறவற்றை யும் இந்த மாடியில் காட்சிப் பொருளாக அமைத்திருந்தனர்.

அடுத்து இரண்டாவது மாடியிலும் பல நாட்டுப் பொருள்கள் இருந்தன. ஒருபுறம் தென் அமெரிக்கக் காட்சிப் பொருள்கள், மெக்சிகோ நாட்டில் மக்கள் வழிபட்ட உருவங்களில் பல நாக உருவ அடிப்படையில் உள்ளன. பெருங்கற்களில் சிலைகள் வடிக்கப் பெற்றுள்ளன. பழங் காலத்திய 'மாயா' நாகரிகத்தின் சிதைந்த சின்னங்கள் பல இருந்தன. ஆய்வாளர்களுள் சிலர் நம் தென் இந்திய - தமிழ் நாகரிகத்துடன் 'மாயா' நாகரிகம் தொடர்புடையது எனக் கூறுவர். அது எவ்வளவு உண்மை என்று இதைக் காணும்போது புலனாகின்றது. மெக்சிகோ நாட்டிலும் அமேசான் நதிக்கரையிலும் சிவலிங்கம் கண்டு பிடிக்கப் பெற்றன என்றும் அவை தமிழ்நாட்டுச் சிவலிங்கங்களை ஒத்திருக்கின்றன என்றும் சில ஆய்வாளர் கூறியுள்ளார்கள். இங்கே கல்லில் காட்டிய கலைவடிவங்கள் நம் நாட்டுப் பெருங்கோயில்களையும் கடல்மல்லை, காஞ்சி வைகுண்ட பெருமாள் கோயில் போன்றவற்றையும் என் கண் முன் காட்டுகின்றன. கல்லில் தேர்ச் சக்கரங்கள், வட்டக்கல் சிற்பங்கள், நம் ஊர் செப்புப் பாத்திரங்கள் போன்றவை, பெருங்கல்லில் மனித முகம் இவை நம் நாட்டு நாகரிகத் தொடு இந் நாட்டு நாகரிகம் தொடர்புடையதே என்பதைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. (நான் முன் உரோம் நகரைப் பற்றிக் கூறிய போதும் இத்தகைய கருத்தினைக் குறித்தேன்.) நம் நாட்டு அரசாங்கம் சிறப்பாகத் தமிழ்நாட்டு அரசாங்கம் இந்த வகையில் கருத்திருத்தி ஆய்வு மேற்கொண்டால், ஒரு காலத்தில் தமிழன் உலகெங்கணும் பரவி வாழ்ந்தான் என்ற உண்மையை நிலைநாட்டக் கூடும். செய்வார்களா?

பின் அதே இரண்டாவது மாடியில் பிற நாடுகளின் தொல்பொருள்களின் காட்சிகளைக் கண்டேன். ஆப்பிரிக்கா நாட்டு மக்களின் பல்வேறு வகை வளர்ச்சி, வாழ்வு, பயன் படுத்திய பொருள்கள், பிற வைக்கப் பெற்றிருந்தன.

அப்படியே பலவிடங்களில் அவ்வந்நாட்டில் வாழும் விலங்குகள், பறவைகள் போன்றவையும் வைக்கப்பெற்றிருந்தன. உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்த பல வன விலங்குகளும் பறவைகளும் இடம் பெற்றிருந்தன. நம் நாட்டு யானையும் ஆப்பிரிக்கா நாட்டு யானைகளுடன் போட்டியிட்டன. எனினும் நம் நாட்டு மயில், கிளி போன்றவற்றை நான் காணவில்லை. நியூயார்க் நகரைச் சுற்றியுள்ள எல்லாப் பறவைகளும் கடல்வாழினங்களும் பிற எண்ணற்ற பொருள்களும் இருந்தன. பாலைவனம், காடு, விளைநிலம் போன்று பல பிரிவுகளைச் சுட்டி, ஆங்காங்கே வாழும் மக்களினத் தன்மைகளையும் பொருட்காட்சி மூலம் விளக்கிக் காட்டியுள்ளனர். நம் சங்ககாலத்திய நானிலம் என் கண்முன் வரக் கண்டேன். அந்த மாடியில் ஓரிடத்தில் இயற்கை கல்வி பயிலும் இடம் (Natural Education Centre) இருந்தது. ஆயினும் அதில் நான் செல்ல அனுமதிக்கப்பெறவில்லை. கூட்டமாக வரும் பள்ளிப் பிள்ளைகளுக்கென அது அமைந்ததாம். நான் வெளி நாட்டுக்காரன் - இவைபற்றி அறிய ஆர்வமுடையன் என்று கூறினும் பயன் இல்லை. எனவே வேறு பக்கம் திரும்பினேன்.

நம் நாட்டுக் காட்சிப்பொருள் பக்கம் வந்தேன். (South and South East Asia). முதலில் பிள்ளையார் இடம் பெற்றிருந்தார். தமிழ்நாட்டில் (விந்தியத்திற்கு தெற்கே) 70,000-முதல் 80,000 வரையில் வாழ்ந்த மனித வாழ்வினையும் கி.மு. 9வது மில்லியனித்திலும் (10,000 ஆண்டில்) விவசாயம், அதற்குப் பயன்படுத்திய கருவிகள், விலங்குகள், கிராம அமைப்பு முதலியனபற்றியும் ஆரப்பா நாகரிகம் பற்றியும் குறிப்பு இருந்தது. பனிப்பருவகாலத்தில் (Ice Age) எழுத்து வந்தது என்ற குறிப்பும் இருந்தது. எனக்கு நம் சங்ககாலத்திய குறிப்பு நினைவுக்கு வந்தது. B.C. 2000ல் மொழி ஆய்வு செய்து நான்குவகை மொழியாகக் கண்ட நிலையில் 'Semitic' வகையொடு நம் மொழிகளைச் சார்த்தியுள்ளனர். கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே பிராமி

எழுத்து (Brahimi) உள்ளதைக் குறித்துள்ளனர். அக்காலத்தில் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியான ஏலம், இலவங்கம், மல்லி, கடுக்காய், ஜாதிக்காய் போன்றவற்றையும் காட்சிப் பொருளாக வைத்துள்ளனர். இவை நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்பெற்ற குறிப்பும் கண்டேன். தமிழ்நாட்டுக்கான உருவம் இல்லையாயினும் புத்தர் உருவம் இருந்தது - (இந்தியாவில் தோன்றியது என்ற குறிப்பும் இருந்தது.) தென் ஆசியாவில் 10,000 ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த பண்பாடு 'Pileistocene' இருந்தது என்ற குறிப்பும் இடம் பெற்றுள்ளது.

பின் முதல் தளத்துக்கு வந்தேன். இங்கே கடல்படு பொருள்கள் - பலப்பல வகை மீன்கள் - பிற இடம் பெற்றுள்ளன. குதிரை போன்ற உயிரினங்களின் வளர்ச்சி, அமைப்பு முதலியனவும் உள்ளன. கடல்படு பல்கறை, சங்கு, கிளிஞ்சல் ஓடுகள் பலவாக வைக்கப்பெற்று விளக்கமும் தரப்பெற்றுள்ளன. 'Meteorites' என்ற விண்வீழ்கற்கள் வைரங்கள் - கற்கள் - உலகில் பல பாகங்களில் உள்ளவை அழகாக அடுக்கி வைக்கப்பெற்றுள்ளன. எத்தனை விதமாக வண்ணக்கற்கள் - அவைகளுக்கேற்ற வைரங்கள் - நவரத்தினங்கள் - மரங்கள் அறுத்து வைத்த வைரம் போன்றவை - முற்றிய பெருமரங்களின் உள்ளீட்டுக்கற்கள் இவை பலப்பல வகையில் அமைக்கப் பெற்றிருந்தன. ஒளியுள்ள முற்றிய மரங்களின் வண்ணக்கற்கள் போன்ற தன்மை எனக்கு 'மூங்கிலில் முத்து விளையும்' என்று நம் நாட்டு பெரியவர் சொல்லும் சொற்களை உண்மை என்று காட்டிற்று.

இவ்வாறு எத்தனையோ வகையில் அணுவிலிருந்து - அண்ட. முகடுவரையில், கல் தோன்றி மண் தோன்றாக் கால முதல் அமைந்த உயிரின வாழ்க்கை முதல் இன்றைய வாழ்வு வரையில் பலவகையில் பொருள் காட்சியை அமைத்தவர்களைப் பாராட்டாதிருக்க முடியவில்லை. இவற்றுள் சில பகுதிகள் தனியார் சேகரித்துத் தந்தவை என்ற குறிப்

பும் பெயரும் உள்ளன. அவர்கள் அனைவரும் போற்றப் படத்தக்கவரே.

காட்சிச் சாலையின் உள்ளேயே இப் பொருள்கள் சம்பந்தப்பட்ட படக்காட்சிகள் (11½மணி 2மணி அளவில்) நடைபெறுகின்றன. வானமுகட்டின் மின் ஒளிக்காட்சியும் (Planatorium) நடைபெறுகின்றது; அவற்றைக் காண வில்லை. நான் இக் காட்சியை முற்றும் கண்டேன் என்று சொல்லமுடியாது; இன்னும் கண்டு குறிப்பெடுக்க ஆசைதான்; உடல்தான் இடம் தரவில்லை. சோர்வு அதிகமாகியது. எனவே நூல்நிலையத்தை நாளைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்ற முடிவோடு வீடுதிரும் பினேன். மணி 3க்கு மேலாகி இருந்தது. வழியில் பாதாள ரெயிலில் பழக்கமில்லையாதலால் பலரைக் கேட்டுக் கேட்டு வரவேண்டிய நிலை உண்டாயிற்று. இன்று விடுமுறையாத லால்(இங்கெல்லாம் சனி, ஞாயிறு இருநாட்களும் விடுமுறை) இரெயிலில் கூட்டமில்லை. வீட்டிற் குவந்து ஓய்வு பெற்றபின் சற்றே உடல் நலமுற்றது. பிள்ளைகள் படம் போட்டுக் கொண்டும் 'T. V.' படம் பார்த்துக் கொண்டும் இருந்தனர். நானும் அவர்களோடு படம் போட்டுக் காட்டியும் படம் பார்த்துக்கொண்டும் (ஆங்கிலம்) இருந்து, இரவு 8மணிக்குச் சாப்பிட்டு உடனே படுத்துக் கொண்டேன். அயர்ந்து உறங்கினேன்.

நியூயார்க் 21-4-85

இன்று சற்று முன்பே கண் விழித்தேன். என் காலைக் கடன்களை முடித்து, குறிப்பெழுதி முடிப்பதற்கு எப்படியும் ஏழு மணி ஆயிற்று. பிள்ளைகள் அனைவரும் எழுந்தபிறகு, காலை உணவு கொண்டோம். இன்று விடுமுறையானதால் (ஞாயிறு) அனைவரும் சற்று மெல்லவே எழுந்தனர். காலை 9-30க்குச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு, நூல் நிலையத்தைக் (பெரியது) காணப்புறப் பட்டேன். திரு. இராதாகிருஷ்ணன் அவர்களும் என்னுடன் வந்து கடைகள் பலவற்றைக் கர்ட்டினார். ஞாயிற்றுக் கிழமைகளில் அரசாங்க அலுவலகம், அஞ்சலகம் போன்றவைதான் மூடியிருக்குமே ஒழிய, கடைகள் பலவும் திறந்தே இருந்தன. பலரும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களிலேயே தங்கள் வீடுகளுக்கு உரிய சாமான்களை வாங்குவார்களாதலால், இவ்வூர் வியாபாரிகள் அந்நாட்களை வீணில் விடுவதில்லை. பல கடைகளில் நல்ல வியாபாரம் நடப்பதைக் கண்டேன். சிறப்பாக உணவுப்பொருள்கள் இந்த நாட்களில் (காய்கறிகள் உட்பட) வாங்கிவைத்து விடுவார்கள். நண்பர், நம் ஊர்க்காரர் வைத்திருந்த ஒரு கடைக்கு அழைத்துச் சென்றார். அவர் காரைக்குடியிலிருந்து வந்த திரு. அருணாசலம் செட்டியார் என்பவராவர். அங்கே நம்மூர்ப் படங்களெல்லாம் வீடியோ எடுத்து வைத்தவற்றை வாங்கிச் சென்று வாடகைக்குத் தருகிறார்களாம். ஒரு நாளைக்கு ஒரு படத்துக்கு ஒரு டாலர். அவர் கடையில் எல்லா வகையான பொருள்களும் இருந்தன. இங்கே எல்லாப்

பொருள்களும் விலை கூடியிருக்க, இரண்டொன்றின் விலை மட்டும் குறைவாக இருப்பதை அறிந்தேன். சிறப்பாக நல்ல உயர்ந்த திராட்சை பவுண்டு 1-75க்கும் (கிலோ சுமார் 40 ரூபாய்)க்கும் நல்ல உயர்ந்த பாதம் பருப்பு பவுண்டு 1-99க்கு (கிலோ சுமார் 50 ரூபாய்)க்கும் விற்கிறார். (பின் சிகாகோவில் இவையே மிகவும் குறைவாக ஒரு டாலருக்கு விற்பதறிந்தேன்.) நம் ஊரில் இவ்வளவு நல்லதாகக் கிடைக்குமா என்பது ஐயமே. கிடைத்தாலும் முந்தையது 120க்கும் பிந்தியது 150க்கும் குறைவாகக் கிடைக்காது. இவையும் இன்னும் சிலவும் குறைவாக இருப்பதற்குக் காரணம் இவர்கள் இவற்றைப் பக்கத்திலுள்ள 'கென்யா' நாட்டிலிருந்தும் பிற தென் அமெரிக்க நாடுகளிலிருந்தும் பெறுகிறார்களாம். அப்படியே பருப்பு வகைகள் அனைத்தும் வருகின்றனவாம். நான் அவரொடு சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தேன்.

திரு. இராதாகிருஷ்ணன் என்னை நூல் நிலையத்துக்கு இரெயிலேற்றி அனுப்பிவிட்டு, வேறு நண்பர் ஒருவருடன் வேறிடத்துக்குச் சென்றார். நான் இரண்டு மூன்று நாள் பழக்கத்தில் பர்தாள இரெயிலில் பலவிடங்களுக்குச் செல்ல எளிதாக இருக்கக்கண்டேன். 42வது தெரு நிலையத்தில் இறங்கினால் பக்கத்தில்தான் என்றனர். இங்கே பல இடங்களில் தெருக்களெல்லாம், எண்ணிட்டே அழைக்கப்பெறுகின்றன. நான் அந்த நிலையத்தில் இறங்கினேன். எனினும் நூல்நிலையம் விடுமுறையாதலால் காண முடியவில்லை.

நான் வெளியில் சென்றபின் நியூயார்க் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. மணி அவர்கள் தேடிவந்ததாகக் கூறினர். மற்றும் கல்வித்துறை அன்பர் ஒருவர் சில குறிப்புக்களைத் தந்துள்ளார். நியூயார்க் நகரில் இளம் பிள்ளைகள் முதல் உயர்கல்லூரிவரையில் பல வகையில் கல்விமுறைகள் இருப்பதோடு, பெரியவர்களுக்குப் பயன்படும் வகையில் - பல துறைகளில் ஓய்வு நேரங்களில் கற்றுக் கொடுப்பதாக அறிந்தேன். 'New York City Board of Education' என்ற ஒரு நிறுவனம் எல்லாவகையான பாடங்களையும் பெரியவர்களுக்குக்

கற்றுத் தர—நேர்முகமாகவும் அஞ்சல்வழியும்—ஏற்பாடு செய்துள்ளதாம். நம் ஊரில் முதியோர்கல்வி திட்டம் (Adult Education Dept.) போன்றது போலும். முதியோருக்கு அடிப்படைக்கல்வி, கலை, வாணிபம், கணிப்பொறி, சமையல், நாட்டியம், நாடகம், உந்து ஓட்டுதல், பொழுது போக்கு, விளையாட்டு, மொழி, இசை, வீட்டுப்பொருள் களைச் செப்பம் செய்தல் (Repairs), தையல், பூவேலை, முதலானவைகளில் பயிற்சி தருகின்றதாம். மேலும் கவிதை இயற்றல், நல்ல உணவு தேர்ந்தெடுத்தல், சித்திரம் வரைதல் போன்றவற்றிலும் பயிற்றி உளதாம். இவற்றிலெல்லாம் வகுப்பு நடத்திச் சான்றிதழ்களும் வழங்குவார்கள் போலும். நான் தங்கியிருக்கும் வீட்டுக்குரிய திரு. இராதாகிருஷ்ணன் அவர்களும் (வங்கியில் பணியாற்றுகின்றவர்.) கணிப்பொறி வகுப்பிற்கு மாலையில் வாரத்துக்கு இருநாட்கள் சென்று பயில்கின்றார். மே மாத இறுதியில் தேர்வு உண்டாம். இவ்வாறு பலவகையில் கற்றோருடன் கல்லாரும் ஓய்வு வேளைகளில் கற்று சரிசமமான வாய்ப்பினைப் பெற வசதி செய்துள்ளமை போற்றத்தக்கது.

தமிழ்ச் சங்கத் தலைவர் அவர்கள் மாலை 8 மணி அளவில் மறுபடியும் தொலைபேசியில் பேசிக்கொண்டிருந் தார். இங்கே தமிழ்ப்பயில்வார் அருகிய நிலையினையும் ஒரு சில குடும்பங்கள் மட்டும் விடாது தமிழ்நலம் காப்பதை யும் கூறி, அவர்கள் சங்கம் வெறும் இலக்கியத்தோடன்றி, நடனம், இசை போன்ற நம் நாட்டுக் கலைகளிலும் கருத் திருத்துவதாகக் கூறினர்.

இங்கேயே நிலைத்துத் தங்கியுள்ள நம் நாட்டுப் பத்மினி, கமலா ஆகியோர் பல மாணவர்களை நடனத்துறையில் உருவாக்கி உள்ளமையைக் குறித்தார். அமெரிக்க நாட்டில் எல்லாப் பகுதிகளிலும் தமிழர்கள் உளரேனும் தமிழ் பயிலு வது அருகிவிட்டதெனவும் வளர வழி காண முயலவேண்டும் எனவும், நாளை மாலை நேரில் வருவதாகவும் கூறினார். நான் வந்த பிற நண்பர்களுடன் பேசிக்கொண்டிருந்து 10 மணிக்கு உறங்கச் சென்றேன்.

நியூயார்க் 22-4-85

நியூயார்க்கில் இன்று கடைசிநாள். நாளை காலை விமானத்தில் பிளடெல்பியா செல்லவேண்டும். எனவே இன்று காலைக் கடன்களை முடித்துக்கொண்டு முக்கியமாக நூல்நிலையத்தையும், பிறவற்றையும் காண வேண்டும் என முடிவு செய்தேன். உடல் நிலையும் ஒத்துழைத்தது. காலை உணவுக்குப்பின் 11 மணிக்குமேல் நியூயார்க் நூல்நிலையம் சென்றேன். நான்கு மாடி கொண்ட பெரிய கட்டடம் அது. உலக மொழிகளில் வெளிவந்த பல நூல்கள் இங்கே வைக்கப் பெற்றுள்ளன. பெரும்பாலும் அமெரிக்கநாட்டு எல்லா வகையான துறைகளுக்கும் ஏற்ற - எழுதப்பெற்ற - மிகப் பழங்கால முதல் வெளியிடப்பெற்ற நூல்கள் அனைத்தும் இருந்தன. சில நல்லாசிரியர்தம் புகைப்படங்களுடன் அவர் தம் கையெழுத்து இட்ட பல ஏடுகளும் பார்வைக்கு வைத் திருந்தனர். மேலும் அமெரிக்க நாட்டுச் சட்டதிட்டங்கள். விதிகள் இன்ன பிற அனைத்தும் - நாடொறும் உண்டாகும் மாறுதல்களுடன், முறைப்படுத்தி வைக்கப்பெற்றிருந்தன. நாட்டு விடுதலைக்குப்பின் அமைத்துக் கொண்ட அரசியல் சாசனங்களும் அவற்றை அடுத்த பிற திட்டங்களும் திருத்தங் களும் நல்ல முறையில் கட்டப்பெற்று (Bind) அடுக்கி வைத் திருந்தனர். அறைகள் அனைத்தும் செம்மையாகப் பாது காக்கப் பெற்றன. ஆய்வாளர்கள் அமர்ந்து தேவையான குறிப்புகள் அனைத்தும் எடுத்துக் கொள்ளும் வகையில் நாற் காலி முன் பலகை அனைத்தும் இருந்தன. ஓர் அறையில்

கணிப்பொறி (Computer) வழியே தாம் கண்ட உண்மைகளைச் சரிபார்க்கவும் குறிக்கவும் வகை செய்யப் பெற்றுள்ளது. நான்கு கணிப் பொறிகள் இருந்தன. தவிர, ஒவ்வொரு பகுதியிலும் உள்ள நூல்களின் விளக்கங் கூறவும் தேவையானால் எடுத்துத் தரவும் கற்றறிந்த நல்லவர்கள் காத்து நின்றனர். உலகில் இன்று உள்ள எந்த வகையான பாடப் பகுதிக்கும் - ஆய்வுப் பகுதிக்கும் - மொழிப் பகுதிக்கும் - வரலாறு முதலிய அனைத்துக்கும் தனித்தனி அறைகள் ஒதுக்கப்பெற்றிருந்தன. ஒன்றிய அமெரிக்க நாட்டுப் பல மாநிலங்களுக்கும் உரிய தனிச் சட்டங்களும், பிறவும் அச்சிடப்பெற்றுத் தனித்தனிப் பகுதிகளாக வைக்கப் பெற்றிருந்தன. அமெரிக்க அரசியலை அறிய விரும்புகின்றவர்கள் உள்ளே நுழைந்து பல நாட்கள் தம்மை மறந்து நூல்களுள் புகுந்து, தாமே அதுவாய் நின்று ஆராயின் இன்றைய தலைவர்களால் உணர முடியாத பல உண்மைகளை உணர்ந்து கொள்ள இயலும்.

அப்படியே ஒவ்வொரு துறை பற்றிய எல்லா நூல்களும் அண்மையில் வெளிவந்தவை உட்பட (மிகப் பழங்காலந் தொட்டு) இருந்த காரணத்தால் பலர் உள்ளே அமைதியாக ஆராய்ச்சி செய்து குறிப்பெடுத்துக் கொண்டிருக்கின்றனர். என்னைப் போல் சுற்றி வந்தவர்கள் தவிர்த்து, உண்மையிலே உட்கார்ந்து ஆய்வு செய்தவர் ஆயிரத்துக்கு மேற்பட்டவராவர். ஆடவர் பெண்டிர் இருவரும் - பல நாட்டினரும் அங்கே ஆய்ந்துகொண்டிருந்தனர். எல்லாத் துறைகளையும் மேல் போக்காகக் கண்டு கொண்டே தமிழ் நூல்கள் இருக்கும் பகுதிக்குச் சென்றேன். 'The New York Public Library' என்பது உண்மையிலேயே மக்கள் நூல் நிலையமாகவே இருந்தது. இந் நூல் நிலையத்தின் வரைப்படத்தினை (மூன்று மாடியினை - ஒன்று நிலை அலுவலகம் போலும்) தனியாக அச்சிட்டு, தேவையானவர்களுக்கு வழி காட்டியாக இருக்க உதவுகின்றனர்.

நான் தமிழ்நூல்கள் பற்றி அறிய விரும்பி அறை 216, 217, 219 ஆகியவற்றிற்குச் சென்றேன். முந்திய இரண்டிலும்

மத்தியதரைக்கடல்ல ஒட்டிய மொழிகள் பற்றிய நூல்கள் இருந்தன. (SALVONIC-Languages-Roman and alphabet languages-Balic and Salvic) அவற்றில் 7,24,000 நூல்கள் இருந்தன எனக்காட்டி, பல பகுதிகளாக அவற்றின் அட்டவணையை அச்சிட்டு வைத்துள்ளனர் (நல்ல கட்டுடன்). அதற்கு இரண்டு மூன்று பதிப்புகள்கூட வந்துள்ளன. ஒவ்வொரு பதிப்பிலும் அதுவரை வெளியான புதிய நூல்களையும் சேர்க்கின்றனர் போலும் (அது பற்றிய தனிக்குறிப்பு ஒன்றும் இல்லை).

அவற்றையெல்லாம் கண்டு கொண்டே அறை 219க்குள் (கீழ்த்திசைமொழி நூல்கள் உள்ள அறை) புகுந்தேன். அங்கிருந்தவரைத் தமிழ் நூல் பற்றிக் கேட்டேன். அவர் எழுந்து வந்து, அவை அச்சிட்டிருந்த தொகுதியைக் காட்டி (Volume) தமிழ் பற்றிய பக்கத்தினையும் எடுத்துத் தந்தார். 'இந்தியன்' என்ற பகுதியிலே பல பெருந்தலைவர்தம் நூல்கள், இந்திய ஆட்சி, சட்டதிட்டம், பிற புதிய நிறுவனங்கள் (U.G.C. போன்றவை), பிற பெரும் அமைப்புக்கள், சங்கங்கள், ஆகியவை இவற்றின் அமைப்பு முறை முதலியன இடம் பெற்றிருந்தன. தமிழ்ப்பகுதியில் பல தமிழ்நூல்கள் இருந்தன எனக் காட்ட வந்தவர், அந்தத் தொகுதியைத் தந்து வேண்டிய நூலைக் கேட்டால் எடுத்துத் தருவதாகவும் சொன்னார். அதற்கெனத் தனி அட்டை ஒன்றையும் என்னிடம் தந்தார். பெரும்பாலும் அங்குள்ளவர்கள் நூல்களின் எண் வரிசை முதலியவற்றை அறிந்து நன்கு பழக்கப் பட்டவர்களாதலின் விரைந்து எடுத்து உதவுகிறார்கள். தமிழைப்பற்றி நான் கேட்டதும் பலநாள் கேளாத ஒன்றைக் கேட்டது போல் மகிழ்ந்து வந்து உதவினார். தமிழ் நூல்கள் பற்றி அவரிடம் வந்து கேட்பவரே இல்லையாம். நியூயார்க் தமிழர்களோ அன்றி அங்கு செல்லும் தமிழகச் செல்வர்களோ தலைவர்களோ அரசியலாளர்களோ அமைச்சர்களோ அப்பக்கம் தலை நீட்ட மாட்டார்களோ என்று கருதினேன். அவரிடம் கேட்பதும் நமக்கே இழுக்காகும் என்ற முறையில் வாளா இருந்தேன். கேட்ட இரண்டொரு

நூல்களை உடன் எடுத்தும் தந்தார். பழைய நூல்களையும் புதுப்பிக்கும் முறையில் அழகிய வகையில் செப்பம் செய்து கட்டுப்படுத்தி, அட்டைக்கு மேல் அட்டையிட்டு (எல்லாத் துறைகளின் நூல்களையும்) காப்பாறுகின்றனர். இங்கே தமிழ்நாட்டில்-ஏன் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில்-இல்லாத நூல்கள் சிலவும் இருந்தன. உதாரணமாக அகராதியில் (தமிழ் - தமிழ், தமிழ் - ஆங்கிலம், பிரஞ்சு) 27 வகை இருந்தன. எனினும் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரகராதியோ, கலைக்களஞ்சியமோ இல்லை.

பொதுவாக மேலே சொல்லியபடி இந்திய முறைப்படி எல்லா நூல்களும் இருந்தன போக, தமிழிலும் தமிழ் பற்றிய ஆங்கில நூல்களே அதிகம் இருந்தன. (அவையும் முற்றும் இருந்தன என்று கூற முடியாது) அதிலும் கிறித்துவ சமய சம்பந்தமான நூல்கள் அதிகம். 1828ல் நெல்லூரில் அச்சிட தமிழ்ப் பாடல்கள் என்ற தொகுப்பு ஒன்று. அப்படியே சென்ற நூற்றாண்டில் வெளிவந்த நூல்கள் தமிழ் பற்றி P.T சீனிவாச ஐயங்கார், சேஷ ஐயங்கார், கனகசபைப்பிள்ளை போன்றோர் எழுதிய ஆய்வு நூல்கள் இருந்தன. இலக்கணம் பற்றிய நூல்களும் இந்திய சமய நூல்களும் ஒரு சில இருந்ததே ஒழிய முற்றும் இருந்தன என்று சொல்ல முடியாது. பிற்காலத்தில் - இந்த நூற்றாண்டில் - தற்காலத்தில் வெளிவந்த நூல்களில்கூட மிகமிகச் சிலவே தான் இருந்தன. தெ. போ. யி.யின் ஒரு நூல் - இப்படி விரல்விடக்கூடிய நான்கைந்து நூல்கள், தமிழ்ப் பேரறிஞர் பலர் வெளியிட்ட நூல்களும் வேறு தனிப்பட்டார் ஆய்வு நூல்களும் வளரும் தமிழில் உள்ள பல இதழ்களின் பெயர்களும் பல்கலைக்கழக வெளியீடுகளும் (அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடுகள் சில தவிர்த்து) காண இயலவில்லை. ஏனென்று கேட்டபோது, அவைபற்றிய தகவல் அவர்களுக்கு இல்லை என்றும், முறையாக அனுப்பப்பெறின் அடுத்துவரும் தொகுதிகளில் அவற்றைச் சேர்க்க இயலும் என்றும் சொன்னார்கள். நம்நாட்டில் தமிழ் நூல்களை அச்சிடும்போது, அரசாங்கத்துக்கு நான்கைந்து படிகள் தரச் சொல்லு

கிறார்களே அவற்றை என்ன செய்கிறார்கள் என்பது தெரிய வில்லை. நியூயார்க், இலண்டன் போன்ற நகரங்களில் உள்ள உலக முக்கியத்துவம் வாய்ந்த இவற்றிற்கு அனுப்பிப் பதிய வைத்தால் தமிழ் வளரும் வரலாற்றினை உலகம் உணரு மல்லவா? செய்வார்களா?

இந்திய நூல்கள் தலைப்பிலே நான் மேலே சொல்லிய படி இராதாகிருஷ்ணன், காந்தி, நேரு போன்றார் தம் நூல் களும், அரசாங்கம் பற்றிய சட்டதிட்ட விதிகளும், நேஷனல் நூல்நிலையம் போன்றவை பற்றியும் சென்னை இந்தியன் ரிவின்யூ, பூனா மொழிஆய்வு நூல்கள், இந்திய மருத்துவக் கழக நூல்கள், இந்தியன் ஆண்டிகோரி, இந்தியக் கலை பற்றிய வெளியீடுகள், இந்திய நாட்டுப்புறப்பாடல்கள், பிற பம்பாய், தில்லியில் உள்ள பெருநிறுவனங்களின் பதிப்புகள் இடம் பெற்றுள்ளன. அங்கும் பாரதிய வித்யாபவன், தில்லிப் பதிப்பகம் ஆகியவை வெளியிடும் நூல்கள் (பல தமிழ்நூல் கள்) இல்லை. எங்கும் இந்தக் குறைதானா என்ற எண்ணத் தோடு, அதற்கும் காரணம் நம்மை நாமே அறிமுகம் செய்து கொள்ளாததே என்ற உணர்வோடு, 'தன்னுடைய ஆற்றல் உணரா ரிடையிலும் தம்மைப் புகழ்தல் தகும்' என்ற பவணந்தியார் வாக்கை இனியாவது செயல்படுத்த வேண்டும் என்ற உளத்தோடு வெளியே வந்தேன்.

வெளியே ஹரே கிருஷ்ணய இயக்கப் பிரசாரம் நடை பெற்றுக்கொண்டிருந்தது. அமெரிக்க வெள்ளையர் அமைதி யாக வருவோருக்கு அந்த இயக்கம் பற்றி விளக்கி, இலவச வெளியீடுகளையும் தந்துகொண்டு அந்த இயக்கம் பற்றியும் மரக்கறி உணவின் சிறப்பினைப் பற்றிக் கூறிக்கொண்டு, அன்றுமாலை அங்கே நடக்கும் கூட்டத்திற்கும் மரக்கறி உணவு உண்பதற்கும் அனைவரையும் அழைத்தனர். என்னை இனங்கண்டு, நூல் தந்து, சென்னை முகவரியும் தந்து (232-கீழ்ப்பாக்கம் தோட்டச்சாலை, சென்னை-10-தொலை பேசி 662286) அங்கே தொடர்பு கொள்ளச்சொன்னார்கள். நான் நன்றி கூறிப் புறப்பட்டேன்;

மாலை 5 மணி அளவிற்கு நியூயார்க் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் (மணி) இங்கு வந்தார். நேற்றே தொலைபேசியில் தகவல்கள் சொன்னமை குறித்தேன். இன்று அவர்கள் அமெரிக்காவில் உள்ள தமிழர் தம் நிலைபற்றிச் சொன்னார்கள். நெடுநேரம் பல்வேறு பொருள்கள் பற்றிப் பேசினார். அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம் கோனாபட்டினைச் சேர்ந்தவர்கள். வருபவர் அனைவருக்கும் தாமே வலிய வந்து உளமுவந்து உதவி செய்யும் பண்பினர் என்பதையும் அறிந்தேன். அவர்தம் பண்பினைப்பற்றி முன்னரே இராதாகிருட்டிணன் அவர்கள் சொல்லி இருந்தார்கள்.

நியூயார்க்கில் ஒருசில தனிப்பட்ட குடும்பங்கள் தவிர்த்து பெரும்பாலான தமிழ்க் குடும்பங்களில் தமிழ் இல்லை என வருந்தினர். ஒருசில குடும்பங்களில் இளங்குழந்தைகளிடம் வீட்டில் தமிழிலன்றி ஆங்கிலத்தில் பேசுவதே இல்லை என வும் சிலர் 4,5 வயதிலேயே தமிழ் நெடுங்கணக்கில் (எழுத்து) வல்லவராகியுள்ளார்கள் என்பதையும் குறித்தார்கள். அத்தகைய குடும்பங்களைத் தொலைபேசியில் அழைத்து வாழ்த்த நினைந்தேன். எனினும் இரவு நேரமாதலால் தொல்லை தரும் எனக் கருதி மனதார வாழ்த்தினேன்.

இங்கும் தமிழ் பயில விரும்புவோருக்கு நல்ல எளிய நூல் கள் இல்லை என்பதைக் குறிப்பிட்டார். கோடிக்கணக்கில் கல்விக்கென வாரி வழங்கும் தமிழக அரசு இத்தகைய வெளி நாட்டுத் தமிழர்களுக்கு ஒருசில லட்சங்களாவது செல விட்டால் மிக்க நன்மை விளையும் எனக் கருதினேன். சென்னை வந்த பிறகு உரியவர்களைக் கண்டு பேசலாம் என நினைத்தேன். பின் அவர்கள் எங்களுடனேயே உண்டு மகிழ்ந்து அன்பின் கையுறை தந்து என் பயணம் வெற்றியுற வாழ்த்தி, சில முக்கியமான இடங்களுக்கு அறிமுகம் செய்து, முகவரி கொடுத்து, தொலைபேசியில் ஏற்பாடுகள் செய்வ தாகவும் சொன்னார்கள்.

இவ்வாறு ஒருவாரம் நியூயார்க் நகரில் உலகப்பெருநகர் ஒன்றில் இருந்து பலப்பல கண்டும் பலப்பல கேட்டும் பல உண்மைகளை உணர்ந்தேன். எனவே மனநிறைவோடு நாளை காலை இங்கிருந்து பிளடெல்பியா புறப்பட ஆயத்த மானேன். அன்பர் இராதாகிருஷ்ணன் அவர்கள் பயணத் துக்குரிய பதிவு முதலியன செய்து கொடுத்தார். நெடுநேரம் பேசிக் கொண்டிருந்து 11மணி அளவில் உறங்கச் சென்றோம். நாளை பிளடெல்பியாவில் இருந்து எழுதுவேன்.

பிளடெல்பியா 23-4-85

இன்று காலைக் கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு, குழந்தைகளுடன் பேசிக் கொண்டிருந்தேன். நியூயார்க் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. மணி அவர்கள் எனை வழி அனுப்ப 7 மணி அளவில் வந்தார்கள். வீட்டுக் குழந்தைகளுடனும் அவருடனும் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். பிறகு அவர்கள் அலுவலகம் செல்ல, நான் 9.30க்கு மேல் ஒரு வாடகை வண்டியினை அமர்த்திக் கொண்டு 'கென்னடி' (நான் இறங்கிய) விமான நிலையத்துக்கு வந்தேன். ஆம்! மறைந்த இந் நாட்டுத் தலைவர் - இளமையிலேயே மறைக்கப்பட்ட அவர்தம் பெயரால் இந்த விமான நிலையம் இயங்குகிறது. பிளடெல்பியாவிற்குச் செல்லும் பகுதிக்குச் சென்றேன். இங்கே உள்ளூர்ச் சுற்று விமானங்கள் பல தனிப்பட்ட நிறுவனங்களாலும் முதலாளிகளாலும் நடத்தப் பெறுகின்றன. பிற விமானங்களும் அப்படியேதான். நான் 11.15க்குப் புறப்படவேண்டிய விமானம் மிகச் சிறியது. பயணிகளும் 25 பேர்தான் இருப்பர். விமானமும் நம் ஊர் பஸ் போல, நாற்பது பேர் கொள்ளக் கூடியது. எதிர்பாராதபடி மூட்டமும் குளிரும் இன்று அதிகம். எப்படியோ நிலையம் வந்து விமானத்தில் புறப்பட்டு 12 மணிக்கு (பறந்த நேரம் 35 நிமிடம் 120 மைல்) பிளடெல்பியா வந்து சேர்ந்தேன். முன்னமே பேராசிரியை இராசம் அம்மையார் நியூயார்க்கிற்குத் தொலைபேசியில் சொல்லி இருந்தமையால், அவர்கள் குறித்தபடி சிறு பஸ் பிடித்துக்கொண்டு, நேராக 'இண்டர்

நேஷனல் ஹவுஸ்' என்ற பெரிய விடுதிக்குச் சென்று சேர்ந்தேன். அது மிகப்பெரியது. 12 அடுக்கு (கீழ் உட்பட) கொண்டது. எதிரிலேயே பல்கலைக்கழகம். 'University citiy' என்றே அப் பகுதிக்குப் பெயர். எனவே யாவும் எளிதாக இருக்கும் என எண்ணினேன். உள்ளே சென்றதும் எனக்காக முன்னமே பதிவு செய்திருந்தபடியால் சுலபமாக இடம் பெற்றேன். (இன்றேல் கடிது போலும்) பல பல்கலைக்கழக மாணவர் - பல நாட்டினர் - இங்கே தங்குகின்றனர். எனக்கு 9வது மாடியில் (G. 13) அறையை ஒதுக்கிச் சாவியைத் தந்து என்னை நேரே போகுமாறு சொன்னார்கள். யாரும் உதவிக்கும் கிடையாது என்றனர். நல்ல வேளை இரான் நாட்டு மாணவர் ஒருவர் என் வருத்தத்தைக் கண்டு, பெட்டியையும் தூக்கிக்கொண்டு, எனக்குரிய இடத்தில் சேர்த்தார். அவர்கள் கொடுத்த ஒரே சாவியைக் கொண்டே வழியில் உள்ள இரு சிறு பகுதிகளின் கதவுகளைத் திறந்து கொண்டு நான் அந்த அறைக்குச் செல்லவேண்டும். அந்த மாணவர் உதவி இராவிட்டால் சற்றே சிக்கலாகத்தான் இருந்திருக்கும்.

அறையில் தங்கச் சென்றபோது மணி 1-30. எனவே ப்சி வேறு; உடனே கீழே இறங்கினேன். அந்த மாணவரே நம் இந்திய நாட்டு - தமிழ்நாட்டு உணவு இரண்டு தெரு கடந்து இருக்கும் என்றும் வேண்டுமானால் அழைத்துச் செல்வதாகவும் கூறினர். இந்த விடுதியிலே கீழே உணவுக் கூடமும் இருந்தது. அங்கே சென்று பார்க்கலாம் எனச் சென்றேன். நல்லவேளை அரிசிச் சோறும், காய்கறிகளும் குழம்பும் இருந்தன. விலைதான் அதிகம். நம் ஊர் ரூ. 70/- இருந்தாலும் இங்கே எல்லாவிடத்திலும் (நியூயார்க்கிலும் கூட) இதே உயர்மட்டத்தில்தான் உணவுப் பொருள்கள் கிடைப்பதாலும் பசியாக இருந்ததாலும் பெற்றுக்கொண்டு தனி மேசையில் அமர்ந்து மெல்லச் சாப்பிட்டேன். பக்கத்தில் இருந்த மிளகுத்தூளையும் உப்பினையும் தேவையான அளவு சேர்த்துக் கொண்டேன். (இங்கே - இந்த ஓட்டலில் - பிற பெரிய ஓட்டல்களிலும் மிளகாய் இல்லை). உணவு

நன்றாகவே இருந்தது - போதுமானதாகவும் இருந்தது. உண்ட பிறகு பல்கலைக்கழகத்துக்கு அம்மையாருக்கு நான் வந்ததைத் தெரிவித்தேன். அவர்களும் பக்கத்திலேயே அவர்கள் துறை இருந்தமையின் 10 நிமிடங்களில் வந்து விட்டார்கள். வந்ததும் மெய்கண்டான் எழுதியிருந்த கடிதத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள்.

மதுரை தியாகராஜர் கல்லூரியில் தமிழ் பயின்றவர்கள் 'B.Sc.' பட்டம் பெற்ற பிறகு தமிழ் ஆர்வத்தால் அங்கே சேர்ந்து தமிழ் பயிலத் தொடங்கினார். 1961-63-ல் முடித்து, பின் மணம் முடித்தபின், அங்கேயே ஒன்பது ஆண்டுகள் பணியாற்றி, அடுத்து இங்கே வந்து டாக்டர் பட்டத்திற்குப் பயின்று வெற்றி பெற்று இங்கேயே பணியினை ஏற்றுத் தங்கிவிட்டார்கள். தனித் தமிழில் எளிய முறையில் அனைத்தையும் விளக்கி மாணவர்களுக்குச் சொல்வார்கள் போலும். தொலைபேசியில் பேசியபோதும் இங்கும் அவர்தம் தனித்தமிழ்ப்பற்று நன்கு விளங்கிற்று. மேலும் அவருக்குத் தமிழ் ஆர்வமும் அத் தமிழை மங்காமல் எங்கும் வளர்க்கவேண்டும் என்ற உணர்வும் மிக்கிருக்கக் கண்டேன். இங்கே பல்கலைக்கழகத்தே தமிழ் முதுகலை, இளங்கலை (M.A., B.A.,) வகுப்புகள் இருப்பதாகவும் மொத்தத்தில் பத்து மாணவரே பயில்கின்றனர் என்றும் அனைவரும் தமிழ் ஆர்வம் மிக்கவர் என்றும் கூறினர். நாளை அவர்களுக்கு நான் பேசப்போகும் தமிழ்ப் பல்கலைக் கழக செயல்முறையும் பயனும் (Tamil University - its Functions & Purpose) என்ற பொருள்பற்றியும் பேசினோம். என்னுடைய நூல்களில் சில பாடமாகவும் பொதுவாகவும் அவர்கள் முன்னரே படித்துள்ளமையின் என்னைப்பற்றிக் கேட்டறிந்தார்கள். வள்ளியம்மை கல்வி அறம்பற்றி சொன்னபோது, கல்வி வளர்க்கும் நிலையினை - தமிழாசிரியர் மேற்கொண்ட பணியினைப் பாராட்டிப் போற்றினர். நாளை நிகழ்ச்சி பற்றிய சுவரொட்டிகளின் படிகளையும் தந்தனர்.

நான் தங்கியிருந்த விடுதிபற்றிச் சிறிது சொல்லத்தான் வேண்டும். சூரிச் விடுதிபற்றி முன்னரே எழுதியுள்ளேன். இன்னும் எங்கெங்கே எந்தெந்த விடுதிகளில் தங்குவேனோ தெரியாது. இது மிகப் பெரியது என்றேன். பொதுவாக இது நியூயார்க்கிலோ லண்டனிலோ இருந்தால் நாளைக்கு 80 அல்லது 100 டாலர் (சுமார் ஆயிரம் ரூபாய்) வாங்குவார்கள். இங்கே 28 டாலர்தான் வாங்கினர். எல்லா வசதிகளும் உள்ளன. நான் நியூயார்க்கில் அன்பர் வீட்டில் தங்கினமையால் பெரும் விடுதிகள் பற்றி ஒன்றும் அறியவில்லை. இவ்வூர் நியூயார்க்கை நோக்கச் சிறியதாயினும் பெரிய விமான நிலையம் - பலவகை தொழிற்சாலைகள் - பிறநாட்டு உள்நாட்டுகாரர் செயல்புரி தொழிலிட்ங்கள், பல்கலைக்கழகம், பல்வேறு தொழில் நிறுவனங்கள் இருந்தமையின் பெருத்த வியாபாரத் தலமாக உள்ளது. எனவே பலரும் வந்து தங்குவர் போலும். இங்கே பெரும்பாலும் - இது பல்கலைக்கழக நகர் (University City) எல்லையில் இருந்தமையால் அதிகமாக மாணவர்களே தங்கியிருந்தனர். உள்ளே ஒரு நகர் போன்றே எல்லாக் கடைகளும் இருந்தன. பருகு பானங்கள் - பலகாரங்கள் - நம் நாட்டு முறுக்கு சீடை உட்பட - பலகாரங்களும் இருந்தன. எதையும் யாரும் தொட்டு விற்பதில்லை. தேவையானவர்கள் அவற்றிற்குரிய காசுகளை உரிய இடத்தில் இட்டு, தேவையான பொருளுக்கு நேரே உள்ள பொத்தானை அழுத்தினால் உரியது கிடைக்கும். அப்படியே சில்லறை தேவையானாலும் ஒரு டாலரை மடிக்காது ஒரு பெட்டி வாயிலில் இட்டால் கீழே தேவையான சில்லறை 50 காசு, 25, 10, 5 அளவில் சரியாக வந்துவிழும். உணவு விடுதியிலும் அப்படியே. எல்லா வகையான உணவுகளும் நன்கு சுவையுடன் தயாரிக்கப் பெற்று வரிசையாக அடுக்கி வைக்கப்பெற்றுள்ளன. நாம் ஒரு தட்டினை எடுத்துக் கொண்டு, தேவையானவற்றை எடுத்துவைத்துச் சென்றால் உரிய தொகையினைப் பெற்றுக்கொள்வர். பின் பக்கத்திலுள்ள பரந்த அரங்கில் மேசைகளின்மேல் வைத்து உட்கார்ந்து அமைதியாகச் சாப்பிடலாம். அப்படியே

வரவேற்பு அறை, பார்க்க வருபவர்கள் அறை, பதிவு அறை போன்றவையும் பிறவும் செம்மையாக உள்ளன. அகன்ற தாழ்வாரம். அங்கே எங்கு பார்த்தாலும் பல்கலைக்கழக மாணவர் - ஆணும் பெண்ணும் - உட்கார்ந்துகொண்டு, தத்தம் பாடங்களைப் படித்துக் கொண்டும் - பட்டங்கள் வரைந்து கொண்டும் - ஆய்வுகள் செய்துகொண்டும் இருந்த காட்சி, இது விடுதியன்று பல்கலைக்கழகமே என்ற உணர்வைதான் உண்டாக்குகிறது. பல நாட்டு மாணவர் பல துறையினர் தங்கிப் பயின்றனர்.

இதன் வாயிலில் பல மொழிகளில் வரவேற்பும் வாழ்த்தும் இட்டுள்ளமை போன்றே, தமிழில் 'வணக்கம்' என்ற சொல்லும் பொறிக்கப் பெற்றிருப்பதைக் குறிக்கக் கடமை பட்டவனாவேன்.

மாலை நகரினை ஒரு பக்கம் அப்படியே சுற்றிப் பார்த்தேன். இந்நகர் நடுவே இரு ஆறுகள் செல்லுகின்றன. ஒன்று பேராறு, அதில் கலங்கள் வாணிபத்தின் பொருட்டு உலாவுகின்றன. எங்கும் இத்தகைய ஆறுகளே ஊர்களுக்கு அழகூட்டுகின்றன. 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்ற ஔவை மூதாட்டியின் அருள்வாக்கு என் நினைவிற்கு வந்தது. நான் கண்ட பெருநகரங்களின் நடுவிலெல்லாம் - ஜினிவா, பாரிஸ், உரோம், லண்டன், நியூயார்க், பிளடெல்பியா ஆகிய எல்லா ஊர்களிலும் ஆறுகள் ஊடுருவிச்செல்லுகின்றன. ஔவையின் நகரமைப்பின் அறிவுத் திறனைப் போற்றாதிருக்க முடியவில்லை. (நம் சென்னைக்கும் கூவம், அடையாறும் இல்லையா; தில்லிக்கு யமுனை; கல்கத்தாவிற்கு கங்கை இல்லையா!)

இங்கே பல்கலைக் கழகத்தின் சார்பிலே ஒரு நாளிதழும் ஒரு வார இதழும் நடைபெறுகின்றன. நாளிதழ் நம் நாட்டு 'இந்து'ப்பத்திரிகை அளவில் இருக்கிறது. வாரப்பத்திரிகையும் சற்று பெரியதே. அதில் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் மட்டுமன்றி, பிற நிகழ்ச்சிகளும் நிறைந்த விளம்பரங்களும் இடம் பெறுகின்றன. (விரசமான விளம்பரங்கள் இல்லை)

அப்படியே பல்கலைக்கழகத்தே பலப்பலவகையான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. என்னை அழைத்துச் சென்ற தமிழ்ப் பேராசிரியை இன்று கணிப்பொறி சம்பந்தமான கூட்டத்துக்குச் செல்வதாகச் சொல்லிச் சென்றார்கள்.

இரவு சரியாக 7-30 மணிக்கு அவர்கள் என்னை உணவுக்கு அழைக்க வந்தார்கள். அவர்களோடு இரு தெருக்கள் கடந்து இந்தியநாட்டு உணவு விடுதி ஒன்றில் புகுந்தோம். நம் நாட்டு சோமாசு, பூரி, சப்பாத்தி, அரிசிச் சோறு அத்தனையும் இருந்தன. நல்ல தயிறும் மோரும்கூடத் தருகிறார்களாம். காலையில் இட்டலி இல்லை. மாலையில் மசாலா தோசை, வடை உண்டு. நாங்கள் அங்கே சிறக்க உணவு கொண்டோம். சற்றே குளிர் அதிகமாக இருந்தது. இதுவரை இத்தகைய குளிரில் நான் சென்றதில்லை. ஒரு வேளை என்றும் நான் 8மணிக்கு மேல் வெளியே செல்லாத காரணத்தால் நான் அதை உணர முடியவில்லையோ என நினைத்தேன். அவர்கள் உண்மையிலேயே இன்று குளிர் அதிகமாக இருப்பதாகக் கூறினர். உணவுக்குப் பிறகு என்னை விடுதிக்கு அழைத்து வந்துவிட்டு, அங்குள்ள வடமொழி பயிலும் மாணவர் ஒருவரை எனக்கு அறிமுகப் படுத்தி, அவரை என்னை அழைத்துக்கொண்டு அவர்தம் துறைக்குக் காலை 11 மணி அளவில் வரச்சொன்னார்கள். அமெரிக்கர் - தெலுங்கு பயின்று பின் வடமொழி பயிலுபவர் - அத்துடன் தமிழும் பயில்பவர் - அவ்வாறு செய்வதாகக் கூறினார். அவர்கள் விடைபெற்றுச்சென்ற பின் உறங்னேன்.

பிளடெல்பியா 24-4-85

இன்று காலை முறைப்படி எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, பத்துமணி வரை குறிப்பு எழுதியும் பிற பணிகள் செய்தும் இருந்து, 10 மணிக்குப் பல்கலைக்கழகத்துக்குப் புறப்பட்டேன். இங்கே, வடமொழிபயிலும் இந்நாட்டு மாணவர், முந்நாள் மாலை கண்டவர் விடுதியில் இருந்து பல்கலைக்கழக அறைக்கு அழைத்துச் சென்றார். நான் முன்னரே குறித்தபடி இந்த இடமே - 'யூனிவர்சிடி சிட்டி' என்ற பகுதியே பெரும்பாலும் பல்கலைக்கழகத்துக்கே உரிய இடம். தமிழ் பயிற்றும் அறையும் அருகில் இருந்தது. பல்கலைக்கழக முழுவதும் மாணவர் கூட்டம். எம். ஏ. படிப்பவர் மட்டும் நாலாயிரம் பேர் இருப்பார்கள் என்றனர். பின் கீழ் பி. ஏ. மேல் ஆய்வுப்பட்டங்கள் பயில்பவர் பலர். எனவே நான் சென்ற அந்த நேரத்தில் 10.30க்கு எங்கும் மாணவர் கூட்டம் விரைந்து வகுப்பறைகளுக்குச் சென்று கொண்டிருந்தனர். இன்று காலை 11 மணி அளவில் 'எம். ஏ.' மாணவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் மதிப்பீட்டு நேர்முக ஆய்வு உள்ளதெனவும் அதில் என்னையும் கலந்து கொள்ளுமாறும் அழைத்திருந்தனர். 'South East Asian Studies' தென் கிழக்கு ஆசிய ஆய்வுப்பகுதி, ஆதலின், அதில் தமிழ்மட்டுமன்றி பலதுறையினரும் - மொழியினர் மட்டுமன்றி, இந்த நாடுகளில் வரலாறு, அகழாய்வு, பொருளியல், வாழ்வியல் ஆகியவை பற்றிய துறையினரும் கலந்து கொண்டனர். சுமார் அறுபது பேர் (பலர் பேராசிரியர்கள்) கலந்து கொண்டனர். நானும் அவர்களுடன் சென்று அமர்ந்தேன். அதற்கு முன்பே அத்துறையின் தலைவராக உள்ளவரும் என்னை இங்கு வருமாறு பலமுறை

கடிதம் எழுதியவரும் திருமதி ரோசனே ரோச்சர் (Dr. Rosane Rocher) என்னை வரவேற்று உபசரித்தார். இவர் கணவரும் இப்பல்கலைக்கழகத்திலேயே வேலை செய்பவர். இவரிடம் பயின்றவர், இன்று சென்னை தூதரகத்துத் துணைத் தூதுவராகப் பணியாற்றுகின்ற திரு. சன்ஸ்டெட் (Dr. Joffroy I. Sunstead) அவர்கள், எனக்கு விசா வழங்கும்போது அதுபற்றிச்சென்னையில் சொன்னார்கள். நான் இவர்களைக் கண்டதும் தூதுவர் பற்றிக் கூறி, அவர் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளச் சொன்னதையும் கூறினேன். அவர் களும் மகிழ்ச்சியோடு, அவரை நன்கு அறிவதாகவும் நன் மாணவராக அவர் இருந்து சென்றதையும் கூறினார்கள். 'வணக்கம்' என்ற சொல்லை இங்கே பயில்கின்ற மாணவர் கூறி வரவேற்கின்றனர். நான் தங்கியுள்ள விடுதியின் முகப்பிலே - வரவேற்பறையிலே 'வணக்கம்' என்ற சொல் தமிழிலேயே எழுதப் பெற்றிருப்பதை முன்னரே குறிப்பிட் டேன். தலைவருடன் குறிப்பிட்ட ஆய்வு அறையை அடைந்தேன்.

இன்று ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற கட்டுரை கள் மூன்று. மூன்றும் வெவ்வேறு துறைகளைச் சார்ந்தவை ஒன்று 'Balias A Biographer 'என்ற பஞ்சாப் ஆசிரியர் (முகமதியர்) வாழ்க்கைக் குறிப்புப் பற்றியது (19-ம் நூற்றாண்டு). மற்றது தமிழகத்தின் 9-12 நூற்றாண்டுகளில் சூரிய வழிபாட்டு வளர்ச்சி (புகைப்படங்களுடன்), மூன்றாவது, பூட்டோ ஆட்சியில் பாகிஸ்தான் என்பது. ஒவ்வொன்றின் கருத்து அமைப்புகளையும் (தலைவர் முதலில் அறிமுகப்படுத்தி) எழுதிய 'எம். ஏ.' 'மாணவர் விளக்கி உரைக்க, அங்கே அமர்ந்த பேராசிரியர் பலர் உள் படப் பலரும் பலப்பல வகையான கேள்விகளைக் கேட்டனர். அவற்றிற்கெல்லாம் தக்க விடைகளைக் கூறி, விளக்கம் தந்து, தாம் நிறுவிய கருத்துக்களுக்குச் சான்று காட்டி விளக்கம் தந்தனர். முடிவுரை கூறியபின், அனைவர் இசை வின் பேரிலும் அவர்தம் கட்டுரை ஏற்றுக் கொண்டதாக முடிவு செய்யப் பெற்ற பின்பு அடுத்த மாதத்தில் இவர்கள்

தேர்வு எழுதி, தம் படிப்பின் எல்லையில் நிற்பர். தமிழ்த் துறையின் ஆய்வுக்கட்டுரை 116 பக்கங்கள் (பிற்சேர்க்கை நீங்க) கொண்டது. இதை எழுதிய 'எம். ஏ.' மாணவி அமெரிக்கப்பெண்; ஒரு தமிழ் மகனை மணந்து கொண்டவர். கருமுத்து மாணிக்கவாசகம் செட்டியார் மகனார் தியாக ராசன் மனைவியாவர். இவர் தற்போது 'எம். ஏ.' பயிலுவதற் காகவே. இங்கே வந்து தங்கியுள்ளார். சொந்த ஊரும் இதுவே தேர்வு முடிந்ததும் சூன் மாதத்தில் ஊர் திரும்புவார் சென்னையில் கணவருடன் அடையாற்றில் தங்கியுள்ளார். கருமுத்து தியாகராஜர் வழித்தோன்றல்கள் தமிழைப் பயின்று வளர்க்கும் நிலை கண்டு மகிழ்ந்தேன். நான் மதுரைத் தியாகராஜர் கல்லூரியில் ஓராண்டு பணியாற்றிய போது (1958 - 59) இவர் மாணவராக இருந்தார். என்னுடன் நெருங்கிப் பழகி, சுருளி நீர்வீழ்ச்சி முதலிய இடங்களுக்கு வந்து மகிழ்ந்தவர். ஆனால் கண்டு நெடுநாளாயிற்று. சென்னை வந்தால் காணலாம் என எண்ணுகிறேன்.

நம் நாட்டில் 'எம்.ஏ' நடைபெறுவதற்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டினைக் கண்டேன். எதையோ எப்படி யோ படித்து உருப்போட்டு தேர்வு எழுதி வெற்றி பெறும் நம் நாட்டு மாணவர் அறிவு, இவ்வாறு பல பேராசிரியர் தம் கேள்விகளுக்கும் விடை அளிக்கும் வகையில் ஆய்வுக்கட்டுரை தயாரித்து, புதியன கண்டு காட்டும் திறன் மிக்க மாணவர் தம் அறிவுடன் ஒத்துக் காண இயலவில்லை. தமிழ்நாட்டில் ஒரு முறை 'எம். ஏ.' மாணவருக்கு இத்தகைய கட்டுரை எழுதும் முறை இருந்தது. எனினும் அதில் பலர் மற்றவரிடம் எழுதி வாங்கியவற்றையே தம்முடையன எனக்காட்டிப் பட்டம் பெற நினைத்ததை அறிந்து, பின் நீக்கிவிட்டனர். ஏன்? நம் நாட்டில் டாக்டர் பட்டம் பெறவே பலர் சில ஆயிரங்களுக்கு கட்டுரை எழுதித்தர, அதைத் தம்மதாகக் காட்டி, பின் தேர்வாளர்களையும் கண்டு தம் பட்டத்தைப் பெறுவதாக ஒரு வதந்தி உலவுவதைப் பலரும் அறிவர். அது ஒருவேளை உண்மையாக இருப்பின் மிகமிக வருந்த வேண்டி

வரும். அந்நிலையினை எண்ணிப்பார்க்கக்கூட இங்கே இட மில்லை. பிற்பகல் 1 மணி அளவில் இக்கூட்டம் முடிவுற்றது. இக்கூட்டம் தனியாக, பெரும்காட்சிச் சாலையினை ஒட்டிய மண்டபத்தே நடைபெற்றது.

கூட்டம் முடிந்தவுடன் தமிழ்த்துறையினைச் சேர்ந்த திருமதி இராஜம் அவர்கள் ஆற்றுப்படுத்த, திரு. நெடுமாறன் என்பவர் (ஆசிரியராகவும் அதே வேளையில் 'எம். ஏ.' மாணவராகவும் உள்ளவர்) அங்கிருந்த உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று உணவளித்தார். அவர் மதுரையில் அமெரிக்கன் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்து பின் இங்கே வந்து தமிழ் 'எம்.ஏ.' பயிலுகிறார். ஆரம்பத் தில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு முதலில் தமிழில் பேசக் கற்றுக்கொடுக்கிறார்; நல்ல அன்பர். அவர்தம் துறைத் தலைவராகிய திருமதி. இராஜம் அவக்களுடன் நன்கு ஒத்துழைத்துத் தமிழ் நலம் காணப் பாடுபடுகிறார்.

உணவுக்குப்பின் பேராசிரியர் அறைக்குச் சென்று சிறிது நேரம் தங்கினேன். சரியாக 2.30க்குக் கூட்டம். கூட்டத் திற்கு இப்பகுதித் தலைவர் திருமதி. ரோசனே ரோச்சர் உட் பட சில ஆசிரியர்களும் சில மாணவர்களும் வந்திருந்தனர். தலைப்பு 'தமிழ்ப்பல்கலைக்கழகம் அதன் செயல்முறையும் பயனும்' 'என்பது. நான் தமிழ்ப்பல்கலைக் கழக அமைப்பு, துறைகள், தஞ்சை, காஞ்சி, உதகை, மண்டபம் ஆகிய இடங் களில் உள்ள பலவகைப் பணிநிலைகள் ஆகியவற்றை விளக்கி, அதன்வழியே தமிழ்நாட்டுப் பழம்பெறும் இலக்கிய இலக்கணங்கள் மட்டுமின்றி தமிழர்தம் கலை, பண்பாடு, நாகரிகம் முதலியனவும் உலகுக்கு உணர்த்தப்பெறுவதோடு எங்குமுள்ள தமிழர்களையும் இணைத்துத் தமிழ் நலம் காணும் பாலமாகவும் அமையும் தன்மைகளை விளக்கி 40 (நாற்பது) நிமிடங்கள் பேசினேன். பின் இருந்தவர்கள் சில கேள்விகள் கேட்கப் பதில் உரைத்தேன். கூட்டம் 3.30க்கு (ஒரு மணி நேரம்) முடிந்தது. பிறகு பேராசிரியர் அறைக்கு வந்திருந்து, சிலரது அறிமுகம் பெற்றதோடு, அவர்களிட

மிருந்து விடைபெற்றுக்கொண்டு அறைக்குப் புறப்பட்டேன். அவர்கள் நாளை கடைசிநாள் எனவும், அன்று நடைபெறும் விருந்திற்கு (மாலை 6.30க்கு) நானும் வரவேண்டும் எனவும் கூறி, திரு. நெடுமாறன் அவர்களை உடன் அனுப்பி இன்றும் நாளையும் காணவேண்டியவற்றை அவருடன் காணுமாறு வழி அனுப்பினர். பின்னர் நெடுமாறன் அவர்கள் என்னுடன் விடுதிக்கு வந்திருந்து மாலை ஆறுமணி வரையில் உரை யாடிக்கொண்டிருந்து, பின் புறப்பட்டுச் சென்றார்.

நான் பல்கலைக்கழக அமைப்பு, நடைமுறை முதலியவை களை எண்ணிக்கொண்டே வியந்தேன். மிகப்பெரிய எல்லை யில் எத்தனை எத்தனை விதமான கட்டடங்கள்; எத்தனை நாட்டு மாணவர்கள்-எத்தனை வகையான துறைகள் - உலக மொழிகள் அனைத்துக்கும் இடம், ஆய்வுப்பட்டம் பெற அமைந்த இயல்புகள் அனைத்தும் என் உள்ளத்தைத் தொட்டன. ஆசிரியர் கடமை தவறாது உரிய வேளைக்கு வகுப்பிற்குச் சென்று கடமை உணர்வோடு சொல்லித்தரு வதையும் கண்டேன். ஒவ்வொரு ஆசிரியரும் தாம் சொல்லித் தரும் பாடங்களை முன் சில மணி நேரமாவது ஆய்ந்து கண்டுதான் வகுப்புகளுக்குச் செல்வர் என அறிந்தேன். அப்படியே பலப்பல நாடுகளிலிருந்தும் இந்நாட்டுப் பலபகுதி களிலிருந்தும் வந்து பயிலும் மாணவர்கள் கருத்தொடு கற்கும் நிலை கண்டு வியந்தேன். ஒரு மாணவர் 'எம். ஏ.' பட்டம் அல்லது ஆய்வுப் பட்டம் பெறக் குறைந்தது ஒன்பது ஆயிரம் அல்லது பத்தாயிரம் டாலர் (சுமார் 1,00,000 ரூபாய்) செலவாகுமாம். அவ்வளவு செலவு செய்து யாரே வீணே காலம் கழிப்பர். தமிழ்நாட்டில் உள்ள 'எம்.ஏ.' படிப்பதை விட்டு இங்கே வந்து பயில்வானேன் என்று நான் கேட்டேன். பயில்கின்றவர்கள் இரண்டிற்கும் உண்டான வேறுபாட்டினை விளக்கியபோது வியந்தேன். தமிழ் மொழி மட்டுமின்றி, தமிழ்நாடு பற்றிய அனைத்தையும் - தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத இந்நாட்டவரும் பிறரும் - கற்றும் - கேட்டும் சொல்லித்தந்தும் தமிழ்நாட்டின் தொன்

மையினையும் சிறப்பையும் போற்றிக் காக்கும் நிலையினைக் கண்டேன். சங்க இலக்கியம் கற்கும் மாணவரும் வெறும் பேச்சுத் தமிழைப் பழகிக்கற்கும் மாணவரும் கலந்து உறவாடி (தேவையாயின் தமிழகம் வந்து ஆய்வு செய்து) நம் நாட்டுப் பண்பினைப் போற்றி வளர்க்கும் நிலை அறிந்து மகிழ்ந்தேன். தமிழ்நாட்டில் உள்ள கோடரிக்காம்புகளால் ஒரு வேளை தமிழ் நிலைக்குமோ என அஞ்சிய என் உள்ளத்துக்கு இவர்தம் உழைப்பும் ஊக்கமும் உணர்வும் தமிழ் நலம் பேணும் தகைமையும் தமிழ் என்றென்றும் வாழும் என்ற உளநிறைவைத் தந்தன. இவ்வாறே வெளிநாடுகளில் தமிழ் போற்றப்படும் நிலை எண்ணி மகிழ்ந்து இவர்களுக்குத் தமிழக அரசு உதவக் கடமைப்பட்டுள்ளது என்ற கருத்தில் என்னை மறந்து அப்படியே உறங்கினேன்.

பிளடெல்பியா 25-4-85

இன்று காலை மறுபடியும் மழைபெய்ய ஆரம்பித்து விட்டது. ஏனோ நான் எங்கே சென்றாலும், பயணம் தொடங்கிய நாள் முதல் மழை என்னுடனேயே வருகின்றது. ஆயினும் இங்கே இது வரவேற்கத்தக்கது என்றனர். காலையில் பல்கலைக்கழகத்தின் பல இடங்களைத். தனியாகச் சுற்றிப் பார்த்தேன். மாணவர்தம் சலியா உழைப்பும் எப்போதும் விரைந்து சென்று செயல் புரியும் தன்மையும் கண்டு வியந்தேன். தபால்கள் எழுதவேண்டுவனவற்றை எழுதி அருகில் இருந்த அஞ்சல் நிலையத்தில் சேர்த்து வந்தேன். இன்று தமிழ்ப்பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதினேன். பிறகு காலையில் நல்ல உணவு கிடைக்கவில்லை யாதலால், பால் மட்டும் உண்டேன்.உடன் 11.30க்கே நான் தங்கிய விடுதியிலேயே சோறும் தக்காளிப் பச்சடியும் கிடைத்தன. உண்டு முடித்ததும் பல்கலைக் கழகத்தே பணியாற்றும் திரு. நெடுமாறன் அவர்கள் நேற்றே சொல்லியபடி வந்து சேர்ந்தார். இருவரும் வெளியே புறப்பட்டோம்.

உந்து வண்டியில் உரிய காசு இட்டு இருவரும் அமர்ந்தோம். பல முதியவர்கள் காசு இடாமலேயே - ஏதோ ஒரு அட்டையைக் காட்டி ஏறினர். சிலர் மொத்தமாக (Season Ticket) வாங்கிய அட்டைகளைக் காட்டினர். நடத்துநர் இங்கே இல்லை. ஓட்டுநர் பக்கத்திலேதான் ஏற வேண்டும். அவரும் கண்காணிக்கிறார். எனவே தப்பமுடியாது. வயதானவர்களைப்பற்றிக் கேட்டேன். இந்நாட்டில் 12

வயதுக்குட்பட்டவருக்கும் (6 வயதுக்குமேல்) 60க்கு மேல் வயதானவர்க்கும் பாதிக் கட்டணம் தானாம். பிள்ளைகள் பெண்கள் இருந்தாலும் பதினெட்டு வயதானவுடன் அவர் கள் தனியே சென்று விடுவார்களாம். மூத்த பெற்றோர் - வசதியுள்ள சிலர் தவிர - பலரும் வாடுவார்களாம். அவர் களுக்கெனத் தனியாக அரசாங்கம் இலவச விடுதிகள் அமைத்துள்ளனவாம். அங்கும் அவர்தம் நிலை அவலமாக உள்ளது என்றனர். எனவே இரெயில், பஸ் எல்லாவற்றிலும் பாதிக் கட்டணத்துடனேயோ அன்றிக் கட்டண மின்றியோ அவர்கள் பயணம் செய்ய அனுமதித்துள்ளார்கள். இங்குள்ள மக்கள் வாழ்விலே பிணைப்பு இல்லை; பற்று இல்லை; பாசம் இல்லை; ஏதோ நாகரிகம் என்ற பெயரிலே எங்கோ வேற்று உலகுக்குச் சென்று கொண்டிருப்பதாக நான் நினைத்தேன். என் நினைப்புக்கு இடையில் நாங்கள் இறங்க வேண்டிய இடம் வந்தது. அது அமெரிக்க நாட்டிற்கு உரிமை வாங்கிச் சாசனம் செய்த இடம் (1775) என்றனர். அங்கேதான் உரிமைச் சாசனம் கை எழுத்தாயிற்றாம். அதற்கு முன் கிளர்ச்சியும் அங்கே நடைபெற்றதாம். கட்டடத்தின் உள்ளே கீழும் மேலும் இருபெரு அறைகள் இருந்தன. ஒன்று இருந்து பேசிக் கையொப்பமிட்ட அறை. அன்று பயன்படுத்தப் பெற்ற பொருள்கள் அப்படியே காட்சிப் பொருள்களாக வைக்கப்பெற்றுள்ளன. அன்று கிளர்ச்சிக்குப் பின் பயன்படுத்தப்பெற்ற பிற அறைகளிலும் மேசை நாற்காலிகள் அப்படியே இருந்தன. அமெரிக்க மக்கள் அந்த இடத்தைக் கண் எனக் காத்து வருகின்றனர். பின் வாஷிங்டனும் நியூயார்க்கும் பெருநகரங்களாக மாறிய போதிலும், இதில் (இந்நகரம் 5வது பெருநகரம் என்றனர்) அந்த உரிமைச் சாசனம் செய்யப்பெற்ற இடம் தூய்மையா கக் காக்கப்பெறுகின்றது. பின் அந்த உரிமைநாளில் உரிமை உணர்த்திய பேரொலி எழுப்பிய மணியிருந்த மணி மண்ட பத்துக்குச் சென்றோம். அது சற்றே புதிய கட்டடம். (மூந்தியவை) இரண்டு நூற்றாண்டுகளுக்கு முந்திய - நம் சென்னை சேப்பாக்கம் கட்டடங்களைப் போன்று, பழைமை

வாய்ந்தவை) மணி ஒரு பக்கம் விரிசல் கண்டிருந்தது. அதைச் சுற்றிலும் காவல் இருந்ததோடு, அதன் சிறப்பையும் விளக்கினர். இந்நாட்டு மக்கள் உரிமை வாங்கித் தந்த பொருள்களைப் போற்றும் முறைகண்டு வியந்தேன்.

பின் பல்கலைக்கழகத் தொடர்பான பொருட்காட்சிச் சாலையினைக் கண்டேன். அங்கு, நான் நியூயார்க்கில் கண்டது போன்ற, பொருள்கள் இல்லை. எனினும் பல நாட்டு பழம்பொருள்கள் படங்களாகவும் சிலைகளாகவும் பிறவாகவும் காக்கப்பெறுகின்றன. நம் நாட்டுத் தஞ்சைப் பெரிய கோயிலும், காஞ்சிக் கயிலாசநாதர் கோயிலும் மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலும் காட்சிப் பொருளாக நல்ல வகையில் படமாக்கி வைக்கப்பெற்றுள்ளன. இந்த ஊரில் பிற ஊர்களில் காணாத நிலையில் தமிழ் மணம் வீசுகிறது. பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் படிப்பு - விடுதியில் 'வணக்கம்'. இங்கே பழங்கோயில்கள். மற்றொரு பக்கத்தில் எகிப்து நாட்டில் 3500 ஆண்டுகளாகச் சமய அடிப்படையிலும் சமுதாய அடிப்படையிலும் உண்டான மாறுதல்களை நன்கு விளக்கும் படங்களும் பிற பொருள்களும் இருந்தன. இந்திய வரலாற்றுக்கு முற்பட்ட ஹாரப்பா, மோகன் - சோதரோ போன்றவற்றின் குறிப்பும் விளக்கமும் இருந்தன. இவற்றுள் பல பிற இடங்களில் காணாதவை. எனவே அப் பொருட்காட்சி அமைப்பாளரைப் போற்றி அறைக்கு வந்தேன்.

இரவு பல்கலைக்கழகத்தே பயிலும் தமிழ் மாணவர்களுக்குப் பேராசிரியர் வைத்துள்ள விருந்துக்கு வரச் சொன்னபடி, மாலை 6-30க்கு அந்த இந்திய உணவுச் சாலையைச் சென்றடைந்தேன். பத்து மாணவர், இரு ஆசிரியர், நான், அலுவலகச் செயலர் ஆகியோர் கலந்து கொண்டோம். சிறந்த முறையில் உணவு பரிமாறப்பட்டது. அதில் வடமொழி, மலையாளம், தெலுங்கு, தொல்லியல் (Anthropology) ஆகியவை பயில்கின்ற மாணவர்கள், கூடவே தமிழும் பயில்வதால், உடன் வந்திருந்தனர். சங்க இலக்கி

யத்தை விரும்பிப் படிக்கும் மேநாட்டு மாணவரும் இருந்தனர். அவருள் இருவர் அண்மையில் தமிழகம் வந்து நேரில் பல கற்க இருக்கின்றனர். எனினும் விருந்தில் பாடங்களைப் பற்றிப் பேசாது, பொதுவாக மகிழ்ச்சி கலந்த உரையாடல்களையே கையாண்டனர். சுமார் இரண்டு மணி நேரம் அமைதியாக மெல்ல நம் நாட்டு முறையில் விருந்து உண்டோம். (பக்கடா, இரசவடை, பிரிஞ்சுசாதம், புளிசாதம், தயிர்ச்சாதம், உருளைப் பொரியல், காராமணி மொச்சை கோசுக்கூட்டு, மோர்க்குழம்புவடை, அப்பளம், ஊறுகாய் இவைகள் பரிமாறப்பெற்றன). கடைசியில் இனிப்பும் (இரசகுல்லா) வழங்கப்பெற்றது. அனைவரும் மகிழ்ச்சியாக உண்டு புகைப்படமும் எடுத்துக் கொண்டனர்.

விருந்து முடிந்ததும் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். தமிழ்ப் பேராசிரியை திருமதி. இராசம் அவர்கள் அன்புடன் வழியனுப்பினார்கள். அவர்களுக்கு எங்கள் பள்ளிப் பிள்ளைகள் செய்த பூவேலை நிறைந்த மேசை விரிப்பையும் கைகுட்டையையும் அன்பளிப்பாகத் தந்து வந்தேன். அத் துறைத் தலைவராக உள்ள அன்னையார் அவர்களுக்கு சந்தனக் கட்டையால் ஆன பேனாவினைத் தந்து வந்தேன். இவ்வளவு தமிழ் நலம் பேணும் இந்த இடத்திற்கு இதுவரை எந்தத் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகத்திலிருந்தும் பிறவிடங்களிலிருந்தும் பேராசிரியர்களோ, தமிழ்நாட்டுத் தலைவர்களோ வந்ததில்லையாம். எனவே என் வரவு அவர்களுக்கு உணர்வு ஊட்டி மேலும் தொடர்ந்து பணி செய்யத் துணை நின்றது எனக் கூறிப் பிரியாவிடை தந்து அனுப்பினர். நானும் அவர்களிடம் விடைபெற்று நாளைக்காலை 'பால்டிமோர்' செல்லவேண்டி இருப்பதால் அறைக்கு வந்து ஓய்வுபெற்றேன்.

பால்டிமோர் 26-4-85

இன்று விடியற்காலை எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, 8 மணிக்குப் புறப்படும் விமானத்துக் கெனத் தயாரானேன். நான் தங்கிய விடுதியில் உள்ள வட மொழி, தமிழ் பயிலும் அமெரிக்க மாணவர் ஒருவர் உடனி ருந்து விமானநிலையம் செல்லும் உந்து வண்டியில் ஏற்றி அனுப்பினார். விமானநிலையம் வந்து 8-24க்குப் புறப்படும் விமானத்தில் ஏறி அமர்ந்தேன். விமானம் மிக மிகச் சிறியது. 24 பேர் உட்கார கூடியது. ஆயினும் நாங்கள் ஐந்து பேர்தான் அதில் பயணம் செய்தோம். விமானம் அதிக உயரத்திலும் பறக்கவில்லை. குறித்த நேரத்தில் 9-04க்கு விமானம் பால்டிமோர் நிலையத்தில் இறங்கியது. இந்த விமான நிலையமும் மிகப் பெரியதாகவே இருந்தது. இந்த ஊர் இந்நாட்டுப் பத்தாவது பெருநகரமாம். இங்கும் பல வெளிநாட்டு விமானங்களும் இருந்தன. இங்கே பலரும் நாம் பஸ்சில் ஊருக்குஊர் பிரயாணம் செய்வதுபோல, விமானத் தில் பிரயாணம் செய்கின்றனர். கட்டணமும் இரயில்வே (முதல் வகுப்பு) அல்லது பஸ் கட்டணத்தைக் காட்டிலும் குறைவாகவே உள்ளதாம். எனவே எந்த விமான நிலையத் திலும் கூட்டம் இருந்தது.

விமான நிலையத்தில் இறங்கி, என் பெட்டியுடன் வெளி யே வந்தேன். வந்து தி ந. டாக்டர் பெரியசாமி அவர்கள் வீட்டிற்குத் தொலைபேசியில் பேசினேன். வீட்டரசியார் அவர்கள் பேசினார்கள். 'வணக்கம்' சொல்ல, ஐயா 8-45 க்குப் புறப்பட்டதாயும் விரைவில் வந்து விடுவார்களென்றும்

அங்கேயே இருக்குமாறும் சொன்னார்கள். அப்படியே இரண்டொரு நிமிடத்தில் திரு. பெரியசாமி அவர்கள் தம் பெருங்காரில் வந்து இறங்கினார்கள். நான் அவர்களே நேரில்வருவார்களென எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்கு உள்ள பலவேளைகளில்—ஊரில் இல்லையோ எனவும் நினைத்தேன். அவர்களே வந்தமை கண்டு அவர்தம் அன்பினை உளமாரப் போற்றினேன். என் சாமான்களை அவர்களே எடுத்து வண்டியில் வைத்துக்கொண்டு என்னையும் உட்காரவைத்து நெடுந்தெரு வழியாக விரைந்து சென்றனர். செல்லும்போது இந்நகர் அமைப்பினைப் பற்றியும் ஊருக்குள் செல்லாது, புற நகர்ப்பாதை வழியாகச் செல்வதாகவும், அவர்கள் தங்கும் இடம் (Mary Land) புறநகர்ப்பகுதியாக உள்ளமையின் நகர நெருக்கடியின்றி எளிதாகச் செல்ல முடியும் என்றும் கூறினர். இங்கே எல்லா நகரங்களிலுமே நெடுஞ்சாலைகள் ஊருக்குச் செல்லா வகையில் புற நகர்ச் சாலைகள் இடப் பெற்று, ஊரில் செல்லத் தேவையற்றவர்கள் நேராகவே விரைந்து செல்ல வழி செய்துள்ளனர். வீடு செல்லுமுன் பல்வேறு (வழியிலுள்ள) நிலையங்களையெல்லாம் விளக்கிச் சென்றனர். அவர்தம் தமிழ்ப்பணி பற்றியும் இனிச் செய்யவேண்டிய பணிகள்பற்றியும் தாம் புதிதாக வாங்கியுள்ள வீட்டிற்குப் பெயர்வைப்பது பற்றியும் பேசிக் கொண்டு வந்தார்கள். இதுவரையில் நான் நகர்களின் நடுவிலேயே தங்கியிருந்த நிலைமாறி, இன்று புற நகரிலே—அழகான இயற்கைச் சூழலில் தங்கியிருக்கும் நிலை கண்டு மகிழ்ந்தேன். தம் பக்கத்திலே உள்ளவர்களும் தமிழர்களே என்றனர். மகிழ்ந்தேன். வெளிநாடுகளில் தமிழர்கள்—நம்மவர் இவ்வாறு புறநகர்ப் பகுதிகளில் சொந்த மாளிகைகள் அமைத்துச் சிறக்க வாழ்வது மகிழ்ச்சிக்குரியதல்லவா! எனவே இவர்தம் வாழ்வும் வளமும் மேலும் சிறக்கவேண்டுமென்ற உள்ளத்து நல்வாழ்த்தோடு அவர்தம் மனை புகுந்தேன்.

மனை தூயதாகவும் தேவையான வசதிகளோடும் இருந்தது. அம்மையார் குழந்தையைப் பள்ளியிலிருந்து

அழைத்துவரச் சென்றிருந்தனர். நான் தனி அறையில் இருந்தேன். அவர்கள் தம் அலுவல்களைக் கவனிக்கச் சென்றனர். அதற்குள் அம்மையார் குழந்தையை அழைத்து வந்தனர். மூன்று வயது நிரம்பாத இளங்குழந்தை— குழந்தைப் பள்ளியில் விளையாடி வந்தது. என்னிடம் அன்புடன் பழகிற்று. அம்மையாரும் அவருக்கு ஏற்ற மனைக் கிழத்தியாக இருந்து, அவருடைய பணிகளுக்கு உதவியாக இருந்தார்கள். (அவர்களும் பணி செயகிறார் கள்; இன்று விடுமுறையாதலால் வீட்டில் இருந்தனர்). பின் 1 மணி அளவில் மற்றொரு பள்ளியில் (Montisori) பயிலும் குழந்தையை அழைத்துவர அவர் காரில் புறப்பட்டார்; என்னையும் அழைத்துச் சென்றார். பள்ளி ஒரு மலைச் சரிவில் கிறித்தவர்களால் நடத்தப் பெறுவதாகும். இங்கும் பெற்றோர்களே குழந்தைகளை அழைத்துவந்து அழைத்துச் செல்லவேண்டும். அந்த வகுப்பிற்குரிய ஆசிரியர்கள் (பெண் களே ஆசிரியர்கள்) அவரவர் குழந்தைகளுடன் இருந்து, பெற்றோர்கள் வந்தவுடன் ஒப்படைத்த பிறகே செல்ல வேண்டும். நாங்கள் சென்றவுடன் அந்தக் குழந்தைக்குரிய ஆசிரியை வந்து குழந்தையின் பெயரைச் சொல்ல, உடன் அழைத்துவந்தார். புறநகர்ப் பள்ளியாதலின் பெரும்பாலும் கார் உடையவர்களே இங்கே பிள்ளைகளைச் சேர்த்துள் ளனர். எனவே நிறைய வண்டிகள் நின்றிருந்தன. பிள்ளை கள் விளையாடு மிடமும் தூய்மையாகவும் செம்மையாகவும் இருந்தது. சில வகுப்புகள் மரத்தடியிலும் இருந்தன. இன்று நல்ல வெய்யில் இருந்தமையின் பிள்ளைகளை வெளியில் ஓடியாடி விளையாடவிட்டிருந்தனர். அப் பள்ளியில் பயில ஓராண்டுக்குக் குறைந்தது 3000 டாலர் (சுமார் 40,000 ரூபாய்) செலவாகும் என்றனர். இங்கே எல்லோருமே உயர் நிலையில் உளமையின், இது பலருக்குப் பெருந்தொகை யாகத் தெரியாது. பள்ளி மலைச்சரிவில் இருந்தமை போன்றே, இப்புறநகரே பெருமலை இன்றேனும்—சிறு உயர முள்ள சரிவுகளிலே இருப்ப தறிந்தேன்.

வீட்டிற்கு வந்து உணவு கொண்டோம். அவர்கள் வேலையில் மூழ்கினார்கள். அவர்தம் செயலர் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வர்மாட்டார்களாகையாலும் மாதக்கடைசியாக உள்ளமையலும் நிறையமுடிக்கவேண்டிய வேலைகள் இருந்தன. நான் சற்றே படுத்து உறங்கி, பிறகு 'T.V.' பார்த்துக்கொண்டும் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டும் இருந்தேன். திரு. பெரியசாமி அவர்கள் தம் பிள்ளைகளுடன் (3 பெண்கள் ஒருவர் சென்னையில் மருத்துவக் கல்லூரியில் பயல்கிறார்.) வேறு இரண்டு பையன்களை வளர்த்து, கல்வி அளித்துப் பாதுகாக்கிறார். அவர்களும் மாலை வீட்டுக்கு வந்து சொந்தப் பிள்ளைகள் போலவே கலந்து பழகிய காட்சி என்னை மகிழ்வித்தது. இத்தகைய நிலையில் நம் நாட்டில் உள்ள பெருஞ் செல்வர்கள் மற்ற வரை அணைத்துப் போற்றினால் நாட்டில் ஓரளவு வறுமை குறைந்து வாழ்வு சிறக்குமே என எண்ணினேன்.

பின் மாளிகையைச் சுற்றியுள்ள புல்வெளிப்பக்கம் சென்றேன். அங்கே பள்ளியில் ஐந்தாம் வகுப்புப் பயிலும் மாணவன் ஒருவன் மின்வெட்டியினால் புல் செதுக்கிக்கொண்டிருந்தான். நேற்றுப் பல்கலைக் கழகத்திலே பல மாணவர்கள் உழைத்துச் சம்பாதித்துப் பயில்வதைக் கண்ட நான் இங்கே பள்ளிப் பிள்ளைகளும் அவ்வாறு செயல்படுவதை அறிந்து மகிழ்ந்தேன். இளமையிலேயே இவ்வாறு பழக்க முற்படுவதாலேயே பின் அவர்கள் தம் காலில் நிற்கப் பழகிக் கொள்கிறார்கள்.

சுற்றுச் சார்புகள் இயற்கைவளத்தோடு அமைந்த நிலையில் என்னை மறந்திருந்தேன். ஆறு மணி அளவில் திரு. பெரியசாமி அவர்கள் நகர்நலம் காணப் புறப்படலாம் என்று காரில் அழைத்துச் சென்றார். ஊர் நடு சுமார் 15 கல் தொலைவு இருக்கும். சாலைகளில் விரைந்து வண்டிகள் பறந்தன. விதிகளை மீறியவர்களையும் மெதுவாகவோ வேகமாவோ செல்பவர்களையும் (45க்குக் குறைந்து 70க்கு மேலாக) அங்கங்கே காவல் துறையினர் நிறுத்தி, அங்கேயே

தண்டம் இட்டு (40 அ 50 டாலர்) அனுப்புகின்றனர். நம்ஊர் போல, பின் அதற்காகச் சில நாட்கள் நீதிமன்றம் சென்று பொழுதினைப் போக்கும் வழக்கம் இங்கே இல்லை.

நகரின் பல பாகங்களையும் காட்டிக்கொண்டே நடுமத்தியில் முக்கியமான இடத்தில் காரை நிறுத்தி, என்னைச் சுற்றிக் காண அழைத்துச் சென்றார். வழியில் ஒரு மருந்தகத்தை காட்டினர். உலகிலேயே மிகப் பெரிய தாகவும், எங்கும் நீக்க முடியாத வியாதிகளையெல்லாம் நீக்கும் நிலையில் செயலாற்றுவதாகவும் உள்ள இந்த மருந்தகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், திரு. மு. கருணாநிதி வைத்தியம் செய்து கொண்டாராம். நம் முதல்வர் அவர்கள் நியூயார்க் நகரில் தங்கி மருத்துவம் பெற்ற மருந்தகத்தை அங்கே கண்டேன். உலகிலேயே உயர்ந்த இந்த மருந்தகத்தே 30,000 பேர் பணிபுரிகிறார்கள் என அறிய அதன் நிலை உணர்ந்தேன். பின் அங்கே கப்பல்கள் தங்கும் இடம் சென்றோம். அதுவே நகரின் முக்கிய பகுதியாம். இன்று பதவியிலுள்ள நகரத்தந்தை அவர்கள் கடந்த பதினைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து இருந்து இந்த ஊரையே வளப்படுத்தினாராம்—வளப்படுத்தி வருகிறாராம். நாங்கள் நின்ற அந்த இடம் காடாக இருந்த நிலையை மாற்றி, இந்த நகரத் தந்தையே அவர் பதவியேற்றதும் வெளிநாட்டு உள் நாட்டுச் செல்வர்களையும் பிறரையும் வரவழைத்து, எல்லா உதவிகளையும் செய்து, இங்கே பல அடுக்குகள் கொண்ட பல கட்டிடங்களை அமைத்து, சிறந்த வணிக நிலைக்களனாகச் செய்ததோடு, ஆழ்கடலிலிருந்து கப்பல்கள் வந்து தங்க வேண்டிய துறைமுக வசதியும் செய்து, நாட்டுப் பொருளாதாரத்தை வளர்த்து வருகிறாராம். எனவே அவர் தொடர்ந்து பதவி வகிக்கிறார் போலும். அங்கே ஒரு பக்கத்தில் ஒரு பழைய கப்பல் நிறுத்தப் பெற்றிருந்தது. அதுவே அமெரிக்க சுதந்திரப் போரில் உபயோகிக்கப்பெற்ற முதல் கப்பல் எனவும் அதை எங்கோ கடல் அலைகள் இடையிலிருந்து இங்கே கொண்டு வந்து செப்பனிட்டு, காட்சிப் பொருளாக வைத்து, அதன்

மூலம் வரும் வருவாயினைக் கொண்டே அதை மேலும் மேலும் செப்பனிடுகிறார்களாம். அங்கே சுற்றியுள்ள ஓட்டல்களில் கூட்டம் மிகுதியாக இருந்தது. வரும் கோடையில் இங்கே நிற்கக்கூட இடம் இல்லா அளவில் பெருங் கூட்டம் மாலை வேளைகளில் கூடும் என்றனர்.

பின் பக்கத்தில் ஒரு பெருமாளிகைக்குக் கடைக்கால் இடும் முறையினை நின்று கண்டேன். எங்கும் தெருவிலோ - நடைபாதையிலோ கடைகள் வைக்கப்பெறவில்லை. ஆனால் நம்நாட்டில் அரசாங்கமே மக்கள் நடைபாதையினைக் கடை பாதை யாக்கி வளர்த்துவரும் அவலச் செயலை எண்ணினேன். சென்னை நகராட்சியாளரும் சமூக, நலத்துறையினரும், அரசாங்கப் பால்வள நிறுவனத்தாரும் நம் பள்ளியின் முன்பே கடை அமைத்து, எவ்வளவு வேண்டியும் அப்புறப்படுத்தாத அரசாங்கத்தின் 'கல்வி வளர்க்கும்' - 'நகர்நலம் காக்கும்' நிலையினை இதனுடன் ஒப்பிட்டுப் பார்த்தேன். ஏன் இங்கேயே என் பணியினை - பள்ளியினைத் தொடங்கக் கூடாது என்றுகூட நினைத்தேன். ..ஆயினும் இந்த நாட்டுச் சட்டம் நான் தொடர்ந்து இருக்க இடம் தராது அல்லவா!

பலவற்றைக் காட்டிக்கொண்டே அன்பர் அவர்கள் கார் நின்ற இடத்துக்கு அழைத்து வந்தார். பின் 8 மணி அளவில் வீட்டிற்கு வந்து உணவு கொண்டோம். நாளை வாஷிங்டனில் என்னை வரவேற்கும் அன்பர் திரு. சதானந்தம் அவர்கள் தொலைபேசியில் பேசினார்கள். நான் அடுத்த இரண்டு மூன்று நாட்களில் அங்கே என்னென்ன செய்ய வேண்டும் எனக் கேட்டறிந்தார்கள். நாளை பிற்பகல் 1 மணி அளவில் திரு. பெரியசாமி அவர்கள் தம் காரிலேயே அங்கே அவர் இல்லத்துக்கு அழைத்துச்சென்று விடுவதாக ஏற்பாடு செய்தார்.

பின் முன் அறையில் சற்று அமர்ந்திருந்தேன். அன்னையார் நம் நாட்டுப் பழக்கவழக்கங்கள் பற்றியும் விழாக்கள் முதலியவைபற்றியும் காரணங்கள் கேட்டனர். இங்கே சிலர்

பொட்டிடுவது ஏன்? மஞ்சள் பூசுவது ஏன்? பொங்கல் ஏன்? என்பன போன்ற பல வினாக்களை - அதிலும் கிறிஸ்தவ அன்பர்கள் - கேட்கிறார்களாம். அதற்கு என்ன பதில் சொல்வது என்று கேட்டார்கள். நான் எனக்கு அறிந்தவரையில் விழாக்கள் கொண்டாடும் காரணங்களையும் பொட்டிடுதல், சாணம் இடுதல், மஞ்சள் பூசுதல் போன்றவற்றிற்கு அமைந்த காரணங்களையும் ஒருவாறு விளக்கினேன். இளம் பிள்ளைகள் உளங்கொள்ளும் வகையில், இக் காரணங்கள் பற்றியும் இன்னும் நம் நாட்டுப் பிறவழக்கங்கள் வேடிக்கை விளையாட்டு ஆகியவை பற்றியும் சிறு சிறு அளவில் இவர்கள் நடத்துகின்ற 'தமிழ் உலகம்' என்ற பத்திரிகையில் ஆங்கிலத்தில் எழுதுமாறு கேட்டுக் கொண்டார்கள். நானும் தாயகம் சென்றதும் எழுதுவதாகச் சொன்னேன். அப் பத்திரிகை சென்னையில் அச்சாவது ஆகையால் எழுதித் தருவது எளிதாகும்.

பின் அவர்கள் நடத்துகின்ற தமிழ்நாடு நிலைக்களன் (Tamilnadu Foundation மாநாட்டிற்கு) (அடுத்தமாதம் 25,26) பயணத்தைச் சற்றுமாற்றி அமைத்துக் கொண்டு, வரவேண்டு மென திரு. பெரியசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். வாஷிங்டன் சென்றதும் அங்குள்ள 'சுவிஸ், விமானப் போக்கு வரத்து நிறுவனத்துடன் (எனக்குப் பயணச் சீட்டு வழங்கியது) கலந்து முடிவு செய்யலாம் என்றேன். பின் பல பொதுவான பொருள்கள் பற்றிப் பேசிக் கொண்டிருந்து 11 மணிக்கு உறங்கச் சென்றேன்.

வாஷிங்டன் (D.C) 27-4-85.

இன்று காலை முறைப்படி எழுந்து, கடன்களை முடித்துக் கொண்டு குறிப்பினை எழுதி முடித்தேன். இங்கே எல்லாவிடத்திலும் எல்லோரும் காலை 7 மணிக்கு முன் எழுந்திருப்பதில்லையாதலால், என் கடன்களை முடித்துக் கொண்டு, குறிப்பு எழுதி முடிக்க வசதியாக உள்ளது. இன்று காலை திரு. பெரியசாமி அவர்கள் தம் மாளிகையின் பின்புறம் உள்ள தோட்டத்தில் சற்றே உலாவினேன். தோட்டங்களுக்குத் தண்ணீர் சுற்றிப் பாய்ச்சி, புல்வளர்க்கச் சுழல்குழாய் பயன்படுத்துகின்றனர். தோட்டத்தின் நடு வரையில் தண்ணீர்க் குழாய் வருகிறது. அங்கே சுழல்மேல் குழாயைப் பொருத்திவிட்டால், அது சுற்றிக்கொண்டே சுமார் முப்பது அடி சுற்றி, தண்ணீர் தெளிக்கிறது. அழகாக வும் உள்ளது; பணியும் சுலபமாக முடிகிறது. நம் பள்ளியின் முன்பக்கத்தே (இரு இடங்களிலும்) இவ்வாறு அமைத்தல் நலமாகுமே என எண்ணினேன்) தோட்டத்தில் ஓர் அணில் ஓடி ஆடித் தீரிந்தது. சற்று பெரியதாக (பெருச்சாளி அளவு) இருந்தது. வாலைத் தூக்கித் தத்தித்தத்தி தோட்டம் முழுதும் சுற்றி இரை தேடித் தின்றது. அதை உற்று நோக்கி னேன். அதன் முதுகில் மூன்று வெள்ளைக் கோடுகள் இல்லை. அத்தகைய அணிலை நான் இதுவரையில் கண்ட தில்லை; எனவே அது அணில்தானா எனக் கேட்டுத் தெரிந்துகொண்டேன். அணில் என்று திட்டமாக அறிந்த பின் சிந்திக்கத் தொடங்கினேன். நம் நாட்டில் உள்ள ணில்களின் முதுகில் மூன்று வெள்ளைக் கோடுகள்

இருக்கும். அதுபற்றி என் இளம் வயதில் என் பாட்டி காமாட்சி அம்மாள் சொன்ன கதை நினைவுக்கு வந்தது. இராமர் அணைகட்டும்போது, குரங்குகள் பெரிய மலைகளையெல்லாம் கொண்டுவந்து இட்டு கடலைத் தூர்த்தன. அவற்றைக் கண்ட அணில் தானும் ஏதேனும் தொண்டு செய்யவேண்டும் எனக் கருதிற்றாம், உடனே நீரில் தன் உடலை நனைத்து, பின் மணலில் புரண்டு, மறுபடியும் ஒட்டிய மணலைக் கடலில் கரைத்து மறுபடி மறுபடி வந்து மணலில் புரண்டு செல்லுமாம். இதன் அன்பினைக் கண்ட இராமர் அதை அழைத்து அதன் முதுகைத் தன் கையால்—விரல்களால் தடவிப் போற்றினாராம். அவர்கள் மூன்று விரல்படிந்த இடங்களே பின் வெள்ளைக் கோடுகளாயின என்று என் பாட்டி சொல்லி, அந்தக் கோடுகள் வழிவழியாக அணில் வருக்கத்துக்கே அமைந்து விட்டன என்றனர். நான் அதுபற்றி அப்போது அதிகம் சிந்திக்கவில்லை. எனினும் பின் ஆழ்வார் பாசுரங்களைப் படிக்கும்போது—தொண்டரடிப் பொடியாழ்வார் அவர்கள் திருமாலையில் 'குரங்குகள் மலையை தூக்கக் குளித்துத் தாம் புரண்டிட்டோடித் தரங்க நீர் அடைக்கலுற்ற சலமிலா அணிலும் போலேன், என்று பாடிய அடிகளைப் படிக்கும்போது, அது வெறும் கதையாயினும், ஏன் அப்படி நடக்கக் கூடாது என்று நினைக்கத் தோன்றிற்று. ஒரு வேளை அமெரிக்க அணில்கள் இராமர் நாட்டைவிட்டு நெடுந்தூரம் அப்பால் இருக்கின்றமையின் அவைகள் அப்பேறு பெறவில்லையோ என எண்ணினேன். அன்றி, காட்டுப்பன்றி, காட்டு எருமை, காட்டுநாய் (ஓநாய்) காட்டுஎலி போன்று இதுவும் காட்டு அணிலாக அவ்வாறு இருக்கிறதோ என எண்ணினேன். மேலும் கடல்தூர்க்க உழைக்காது நின்ற காரணத்தாலே நம்நாட்டு அணிலைப் போன்று இளைக்காது, சற்று பெரிதாகவே உள்ளதுவோ எனவும் நினைத்தேன். எப்படியாயினும் ஆழ்வாரின் பாசுரத்தை இந்த அமெரிக்க மண்ணில் நினைக்க வைத்த அந்த அணிலுக்கு என் நன்றியைச் செலுத்தி உள்ளே வந்தேன்.

திரு. பெரியசாமியின் வீட்டரசியார் அவர்கள், இன்று விடுமுறையாதலால், வீட்டுக்குத் தேவையான வாரப் பொருள்களை வாங்கிவரக் கடைக்குப் புறப்பட்டனர். அவர்கள் இருப்பது புறநகர்ப் பகுதியாகையால் குறைந்தது மூன்று கல் தள்ளியுள்ள கடைப்பகுதிக்குச் செல்லவேண்டுமாம். நம் நாட்டைப்போல கண்ட இடத்தில் கடைகளும்—சாக்கடையின் பக்கத்தில் பலகாரக் கடைகளும்—சாலைகளையும் பள்ளியின் வாயில்களையும் அடைக்கும் கடைகளும், தெருக்கடைகளும் இங்கே கிடையா. திருமதி. பெரியசாமி அவர்களும் பணிபுரிவதால், தனியாகக் கார் ஓட்டும் திறம் பெற்றிருக்கிறார்கள். எனவே அவர்களுடன் கடைக்குக் காரிலேயே சென்றேன்.

ஒரு பெரிய கடையுள் புகுந்தனர். அதில் தேவையான எல்லாப் பொருள்களும் (புறஉடை தவிர்த்து) முறையாக வரிசைப்படுத்தி வைக்கப்பெற்றிருந்தன. இங்கே எங்கேயும் அங்கங்கே சாமான்களை நிறுத்தோ அளவிட்டோ தந்து பின் 'பில்' போடும் வழக்கம் இல்லை. தள்ளுவண்டிகள் நிறைய வாயிலில் இருக்கும். வருபவர்கள் அவற்றுள் ஒன்றை எடுத்துக்கொண்டு, தமக்கு வேண்டிய பொருள்களை—பழம் காய்கறி முதல்—பருப்பு, சோப்பு, பதப்படுத்திய உணவுகள் ரொட்டி முதலியன யாவையும், வேறு சமையல் பொருள் வாசனை, பூசுப்பொருள்கள் பிற அனைத்தும் எடுத்து அதில் வைத்துக்கொண்டு, மறுபடியும் வாயிலுக்கு வரவேண்டும். அங்கே 'கியூ' வரிசைப்படி நிற்க, ஒருவர் மிக விரைவில் கணிப்பொறி வழியே (computer) 'பில்' தாயாரித்துத் தொகையைப் பெற்றுக்கொண்டு வெளியே அனுப்புவார். அம்மையார் அவர்கள் சுமார் ஒருமணி நேரம் சுற்றி உழன்று (கடைபெரிய மண்டப அளவில் சுமார் 120'—80' பரப்பில் இருந்தது) வேண்டியவற்றை எடுத்துக்கொண்டு, வாயில் வந்து 'பில்' இட்டுப் பணம் தந்ததைக் கண்டு வந்தேன். சாமான்களை ஒரு சிறு இயந்திரத்தின்மேல் ஒன்றன்பின் ஒன்றாக வைக்க, பக்கத்தில் கணிப்பொறி அதற்குரிய

விலையினைப் பட்டியலில் இட்டு, மொத்தமாக்கித் தருகிறது. விலையில் குறைத்தலோ ஏமாற்றலோ இல்லை. எனவே இந்த முறை நல்லதாகவும் தெளிவாயும் உள்ளது.

வீட்டுக்கு வந்து சுமார் 10 மணி அளவில் காலைச் சிற்றுண்டி (நல்ல இட்டலி) உட்கொண்டு வாஷிங்டனுக்குப் புறப்பட்டோம். திரு. பெரியசாமிக்கு வேண்டிய அன்பர் குடும்பத்துடன் அங்கே (வெளியூரிலிருந்து) வருவதாகவும் அவரை அழைத்து வருமுன் என்னை அங்கே திரு. சதானந்தம் அவர்களிடம் ஒப்படைப்பதாகவும் கூறினார். திரு. சதானந்தம் அவர்களிடம் நேற்று மாலையே பேசி, குறிப்பிட்ட இடத்தில் ஒருமணிக்கு வந்து இருக்குமாறு சொல்லியுள்ளார். எனவே, நானும் பால்டிமோரிலிருந்து பிள்ளைகளிடம் விடைபெற்றுக்கொண்டு, திரு. பெரியசாமி அவர்தம் காரில் புறப்பட்டேன். துணைவியாரும் மற்றொரு வரும் உடன் வந்தனர். வழி நெடுகத் தமிழ் பற்றியும் சமயம் பற்றியும் அம்மையார் பல கேள்விகள் கேட்டுக்கொண்டே வந்தனர். கார்களில் பாட்டுகள் பாடும் வகையில் 'ரேடியோ' 'கேஸெட்' அமைப்பு இருந்ததால்—வழி நெடுகச் சீர்காழி கோவிந்தராசன் பாடிய பாடல்களைப் போட்டுக் கேட்டுக் கொண்டே செல்லவும் முடிந்தது. சுமார் 1மணி அளவில் அமரிக்கத் தலைநகராகிய வாஷிங்டன் அடைந்தோம்.

இந்த நாட்டில் சாலைப் பயணம் இதுவே முதல் தடவை. எனவே அதில் செல்லும் வழியில் எப்படி இந்நாட்டு மக்கள் விரைகிறார்கள் என்பதைக் காண முடிந்தது. சுமார் 50 கல் தொலை இடைவெளி யிருந்தது, சாலைகள் அழகுற இருபகுதிகளாக, இரு புறங்கள் செல்ல அமைந்திருந்தன. குறுக்கே யாரும் புகுந்து கடக்க முடியாது. குறிப்பிட்ட ஒருசில இடங்களில்தான் - அதிலும் வேறு பக்கமாகப் புறத்திலே சென்றுதான் வரமுடியும். டிரக் வண்டிகள் - கார்கள் - விரைந்து ஓடிக்கொண்டிருந்தன. ஒரு கல் தொலைவில் சுமார் 500 வண்டிகளைக் கடந்திருப்போம். இன்று விடுமுறை - இல்லையானால் இன்னும் அதிகம் இருந்

திருக்கும் போலும். இங்கே அனைவரும் காரில் விரைந்து பயணம் செய்கின்றனர். 'பஸ்' போக்குவரத்து, நகர எல்லைக்குளன்றி வெளியே ஊருக்கு ஊர் பெரும்பாலும் இருக்காது. இரெயில்கள் ஓடுகின்றன.

சாலையின் விதிகளை ஒழுங்காக அனைவரும் பின்பற்று கின்றனர். சாலையின் ஒரு பக்கத்தில் நான்கு வரிசைகளில் ஒருசேர வண்டிகள் செல்லலாம். வேறு மெதுவாகச் செல்லும் மாட்டு வண்டிகளோ பிறவோ எங்கும் கிடையாது. அங்கங்கே ஒளி விளக்குகள் (பச்சை-சிகப்பு) தடை இன்றிச் செல்லக் குறியிட்டுக் காட்டுகின்றன. பெரும் பலகைகள், வழிகளின் போக்கு - பக்கத்தில் உள்ள பகுதி முதலியனவற்றை நன்கு விளக்குகின்றன; சாலையின் நடுவி லேயே - உயரத்தில் - ஓட்டுபவர் கண்முன் காணும் வகை யில் பெரிய எழுத்தில் பலகைகள் இடப்பெற்றுள்ளன. எனவே போக்குவரத்து எளிமையாகின்றது. இத்துடன் இருபுறமும் இயற்கைக் காட்சிகள் - அடுக்கடுக்கான உயரிய மரங்கள் கண்ணுக்குப் பசுமை தருகின்றன. எங்கும் விளம்பரப் பலகைகளைக் காணமுடியவில்லை. இவற்றை யெல்லாம் கண்டு கொண்டே - இடையிலுள்ள ஒரு பல்கலைக்கழகத்தையும் (Mary Land University) கண்டு கொண்டே - வாஷிங்டனில் குறித்த இடத்துக்கு வந்து சேர்ந்தோம். அங்கே திரு. சதானந்தம் அவர்களும் திரு. பெரியசாமி அவர்கள் அழைத்துச் செல்ல வேண்டியவர்களும் வந்திருந்தனர். என் பெட்டி, பையை இடமாற்றி, அனைவரிடமும் பிரியா விடை பெற்று, திரு. சதானந்தம் அவர்கள் காரில் (Van) ஏறி அவர் இல்லத்துக்குப் புறப் பட்டோம்.

இது தலைநகர். சில முக்கியமான இடங்களை பாராளுமன்றம் கூடும் இடம், பிற தூதுவர் தங்குமிடம் ஆகியவற்றை முன்பே திரு. பெரியசாமி அவர்கள் காட்டிக் கொண்டே வந்தார்கள். கடைசியில் பிரியும்போதும், இந்நாட்டில் எங்கிருந்தாலும் - எது தேவையானாலும்

தயங்காது தொலைபேசியில் சொல்லுமாறும் வேண்டிய இடத்தே வேண்டியது பெற ஏற்பாடு செய்வதாகவும் கூறி அன்புடன் பிரிந்தார். பின் சதானந்தம் அவர்களும் நகரின் வேறு சில பகுதிகளைக் காட்டிக் கொண்டே, மற்றொரு பக்கத்தே உள்ள புறநகர்ப் பகுதியில் இருக்கும் தன் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றார். இவர்தம் தந்தையார் - ஆந்திர நாட்டில் அனந்தப்பூரில் இப்போது இருப்பவர் - வடமொழி தெலுங்கு இரண்டிலும் வல்லவர் என்றும், அவர் பல பாடியுள்ளார் என்றும் கூறி, ஒரு வட மொழிச் சுலோகம் அடங்கிய 'கெஸ்கேட்' இட்டு, வழிநெடுக இறையருள் பரப்பும் இன்ப ஒலியைக் கேட்டு மகிழும் பேற்றினை அளித்தனர்.

திரு. சதானந்தம் அவர்கள் ஆந்திரர்; அனந்தபூரைச் சேர்ந்தவர். எனவே தமிழ் அதிகம் தெரியவில்லை. அவர்கள் வீட்டிற்குச் சென்றோம். அவர்தம் துணைவியார் அவர் தம் தாய் தந்தையர், தம்பி அவர் மனைவி ஆகியோர் இருந்தனர். அனைவரும் சென்னையைச் சேர்ந்தவர்கள்; எனவே நல்ல தமிழில் பேசினார்கள். அனைவரும் அன்போடு பழகினார்கள். டாக்டர் பட்டம் பெற்று, மேல்படிப்பிற்காக இங்கே வந்திருக்கும் திரு. சதானந்தம் தம்பியும், நம் சென்னை சின்மயா பள்ளியில் பயின்ற மகளும் இருந்தனர். அவர்களுக்குத் தமிழ் அதிகம் வரவில்லை. மாமனார் அவர்கள் 1922ல் சென்னை மாநிலக் கல்லூரியில் பயின்றவர்; விசிட்டாத்வைதி - நல்ல படிப்பாளி. வயது 81. அனைவரும் என்னிடம் அன்பும் பரிவும் காட்டிப் பழகினர். பகல் உணவு கொண்டு ஓய்வு பெற்றேன். பின் பெரியவர் என்னுடன் சமயம் பற்றிய ஆய்வுகளைச் செய்து கொண்டிருந்தார். இன்று மாலை ஆறு மணி அளவில் பக்கத்தில் மற்றொருவர் வீட்டில் பஜனை நடக்கிறதெனவும் அனைவரும் செல்ல வேண்டும் எனவும் நானும் வரவேண்டும் எனவும் கூறினர். அமெரிக்க நாட்டில் நம் சமய மரபுப்படி நடைபெறும் பஜனையை விடுவதா? உடன் புறப்பட இசைந்

தேன். மாலை 5-30க்கு அனைவரும் புறப்பட்டோம். திரு. சதானந்தம் அவர்கள் மைத்துனர் 'வயலின்' வாசிக்கிறார்; அவர் தம் மனைவியுடன் முன்னே சென்றார்.

பக்கத்தில் என்ற உடனே நான் அடுத்து எங்கேனும் இருக்கும் என நினைத்தேன். ஆனால் நாங்கள் புறப்பட்டு நெடுநேரம் பயணம் செய்தோம். எவ்வளவு தூரம் என்று தெரியவில்லை. சுமார் ¾ மணிநேரம் பயணம் - விரைந்த காரில் அமைந்தது. நான் மெல்ல எவ்வளவு தூரம் இருக்கும் என்றேன். 40 கல் தொலைவு என்றனர். நாம் சென்னையிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் அளவு. அத்தகைய தூரம் இங்கே அதிகமாகத் தெரிவதில்லை. நல்ல கார் - சிறந்த சாலை - முறையான ஓட்டும் நிலை - நம் ஊர்க்காரர் பல விடங்களில் சிதறியுள்ளனர். எனவே எப்போதாவது - வாரத்துக்கு ஒரு முறை - மாதத்துக்கு ஒரு முறை - இவ்வாறு கூடுதல் மரபு என்றனர். இந்த ஊரிலே நம் சமயத்துக்கு எனப் பெரிய கோயில் ஒன்றும் இல்லை. என்றாலும் இவ்வாறு அன்பர்கள் அடிக்கடி கூடி, தெய்வ இசை பாடி மகிழ்கின்றனர். இங்கே உள்ள தெலுங்கர்கள் பலரும் தமிழர் சிலரும் கன்னடவர் சிலரும் - வடநாட்டவர் ஓரிருவரும் அந்தப் பஜனைக்கு வந்திருந்தனர். அனைவரும் காராளரே! எனவே வந்து போவது எளிது. அந்த வீட்டின் அடித்தளத்தில் அழகிய அகன்ற அறையில் வெங்கடேசனின் பெரிய படத்துக்கு எதிரே பூசனைப் பொருள்கள் பல வைக்கப் பெற்றிருந்தன. 'ஸ்ரீராம்' என்ற அவ்வீட்டுத் தலைவர் தமது துணைவியாருடன் அனைவரையும் வரவேற்றார். எல்லோரும் பணி புரிபவர்கள், மாதம் 3, 4, ஆயிரம் டாலர் (50,000 ரூபாய்) சம்பளம் பெறும் உயர் உத்தியோகத்தர். எனினும் இறைவழிபாட்டில் ஒன்றுகூடித் தம்மை மறந்து நிற்கின்றனர்.

திரு. சதானந்தம் அவர்கள் மைத்துனர் அழகாக வயலின் வாசித்தார். முதலில் அனைவரையும் வரவேற்று, பாடுபவர் யார் யார் என்று கூறி, முறையாகப் பஜனையைத்

தொடங்கினார். பக்கவாத்தியம் 'தபலா,' இருந்தது. கைத் தாளம் முதலியனவும் இருந்தன. முதலில் இரு ஆடவர் அழகாக - உருக்கமாகப் பாடினர். நான் இந்த அமெரிக்க நாட்டில் இத்தகைய தெய்வநலம் சான்ற நிகழ்ச்சியில் கலந்து கொள்வேன் என எண்ணவேயில்லை. 'பிட்ஸ்பர்க்கில்' வேங்கடவன் கோயிலில் அத்தகைய தெய்வநலம் கூட்டும் என நம்பினேன். ஆயினும் இத் தலைநகரிலேயே அன்பர் சதானந்தம் அவர்களால் இந்த நல்ல வாய்ப்பு எனக்குக் கிட்டிற்று.

பாடல்கள் பெரும்பாலும் தெலுங்கில் இருந்தன. இரண்டொரு வடமொழிச் சுலோகங்கள். ஒரு கன்னடப் பாட்டு. மொழிகளை ஓரளவுதான் நான் புரிந்துகொண்டேன். எனினும், அவர்கள் உணர்வோடு பாடிய காரணத்தால் நான் உண்மையிலேயே உணர்வழிந்து நின்றேன். அன்னை பராசக்தியைப்பற்றி அனைவரும் பாடினர். பின் ஒரு அம்மையார் மிக உருக்கமாக நான்கைந்து பாடல்கள் பாடினர். பொருள் பொதிந்த உருக்கமான பாடல்கள். அவர் பாடுமுன் பாட்டினைப் படித்து, அதற்குரிய விளக்கத்தினை ஆங்கிலத்தில் தந்து பின் இசையொடு பாடியதால் மிக எளிமையாகப் புரிந்து கொள்ள முடிந்தது. அனைவரும் 'ஹார்மோனியம்' வைத்துக்கொண்டே பாடினர். நம் ஊரில் இந்த முறை அருகி வருவதைக் கண்ட எனக்கு, என் இளமையில் 'ஹார்மோனிய'த் துடன் பாடிக் கேட்ட மரபு நினைவுக்கு வந்தது. தனிக் கச்சேரிகளிலும் நாடகத்திலும் இதுவே முக்கிய இடம் வகிக்கும். வெறும் சுருதிக்காக மட்டுமன்றி, அதிலேயே 'சுர' மீட்டிப் பாடிக் காட்டும் மரபும் உண்டு. அதை இன்று இங்கே கண்டேன். திரு. சதானந்தம் அவர்கள் மைத்துனர் தனியாக தியாகராஜர் கீர்த்தனங்களையும் பிறவற்றையும் தம் 'வயலினில்' குழைத்துப் பாடி அனைவரையும் பதுமை களாக்கிவிட்டார். அவர்தம் வயலின் இசை மிகவும் பாராட்டத்தக்கதாக இருந்தது. கடைசியாக ஓர் அன்பர்

திரு. தியாகராஜர் கீர்த்தனையைப் பாடினார். முதலில் அவரிடம் பேசியபோது அவர் தஞ்சாவூர்காரர் என்றும் தமிழர் என்றும் திருவையாறு சென்றுள்ளார் என்றும் அறிந்தேன். பெயர் 'ராஜி' என்றும் தமக்கு அறிமுகமான நம் பேட்டையிலுள்ள (அமைந்தகரை) 'சாவி'க்கு வேண்டியவர் என்றும் திருப்பி நாடு செல்லும்போது அவரிடம் தன்னைப் பற்றிச் சொல்லுமாறும் கூறினார். இரவு உணவுக்குப்பின் திரும்பினோம். வழி நெடுக அந்த வேளையிலும் காரோட்டம் குறையவில்லை. ஒரு கல்லுக்குக் குறைந்தது 300 கார்களைக் கடந்திருப்போம். இராப் பகலற்ற நாடாக இது விளங்குகிறது போலும். இதைத்தான் தேவேந்திர லோகம் என்பர்களோ!

வரும் வழியில் திருமதி. மிருணாளினி சதானந்தம் அவர்கள் இனிமையாகப் பாடிக்கொண்டே வந்தனர். இரவு 12 மணிக்கு வீடுவந்து படுத்து உறங்க ஆரம்பித்தேன்.

வாஷிங்டன் (D.C) 28-4-85

இன்று காலை கண் விழித்து, கடன்முடித்து, குறிப்பு எழுதினேன். இன்றிலிருந்து (ஏப்பிரல் கடைசி ஞாயிறு தொடங்கி) அமெரிக்காவில் ஒருமணி நேரம் முந்தி செல்லுமாம். காலை 6 மணியினை 7 மணியாக மாற்றி வைத்தனர். (பின் அக்டோபர் கடைசி ஞாயிற்றுக்கிழமை யில் இது திருப்பப் பெறுமாம்.) இந்த மணி அடிப்படை யிலேயே பணிமனைகள் இயங்குமாம். பகல் காலம் நீண்டுள்ள காலமாதலால் (உதயாதி நாழிகையில் நாம் பல செயல்கள் செய்வது போல) அந்த உதயகாலத்தை ஒட்டியே எல்லாப் பணிகளும் நிகழும் போலும். மாலை அதிகநேரம் ஒய்வு; இருப்பினும் பின் பகுதியைப்பற்றி அரசாங்கம் கவலைப்படுவதில்லை. அவரவர் சொந்த வேலைகளைக் கவனிக்கலாம்.

இன்று இந்திய வழிபாட்டு கூடத் (Indian House of Worship) தில் ஒரு கூட்டம் உண்டென்றும் 'அத்வைதம்', 'துவைதம்' 'விசிட்டாத்வைதம்' எனும் பொருள்கள் பற்றிப் பேசுவார்களென்றும் திரு. சதானந்தம் அவர்கள் மாமனார் விசிட்டாத்வைதம் பற்றிப் பேசுவார் என்றும், நானும் அதில் கலந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். நானும் மகிழ்வுடன் இசைந்தேன். விசிட்டாத்வைதத்தை உலகுக்கு அளித்த இராமானுஜர் என் ஊர்க்காரர் அல்லவா! உடையவராகிய அவர் நம் ஸ்ரீபெரும்புதூரில் ஞாயிறாகப் பிறந்து உலகுக்கு ஒளிதந்தவ ரல்லவா! 'எல்லோரும் வாருங்

கள்' எனஅழைத்து, வைணவத்தை அனைவருக்கும் உரிமை யாக்கியவ ரல்லவா! எனவே அனைவருடன் நானும் செல்ல இசைந்தேன்.

நேற்று மாலையைப் போலவே இன்றும் சுமார் 45 கல் காரில் செல்ல வேண்டியிருந்தது. காலை 11 மணிக்கு நிசழ்ச்சி. எனவே நாங்கள் 10 மணிக்கே புறப்பட்டோம். அங்கே பெரும்பாலும் குஜாரத்தி மக்கள் - பெண்கள் பெரும் பாலோர் - கூடியிருந்தனர். மொத்தத்தில் சுமார் 200 பேர் இருப்பர். முதலில் பஜனைகள் நடைபெற்றன. பின் மேலே நான் கூறியபடி ஒவ்வொரு ஆச்சாரியாரைப் பற்றியும் அவரவர் கொள்கைகளைப் பற்றியும் ஒவ்வொரு அன்பர் விளக்கிப் பேசினார். திரு. சதானந்தம் அவர்கள் மாமனார் (வயது 81) விஞ்சமூரி பார்த்தசாரதி ஐயங்கார் அவர்கள் இராமாநுஜரைப் பற்றியும் அவர் விசிட்டாத்வைதம் பற்றியும் விளக்கிப் பேசினார். (சங்கரரைப்பற்றிப் பேசியவர்மட்டும் குஜராத்தியில் பேசினார், மற்ற நிகழ்ச்சிகள் அனைத்தும் ஆங்கிலத்தில் நடைபெற்றன.) அவர் இராமாநுஜர் செயல் களுக்கெல்லாம் மூலமாக இருந்த தமிழ் நாலாயிரம் பற்றியும் அவற்றைப் பாடிய ஆழ்வார் பன்னிருவரையும் பற்றி விளக்கி, இராமாநுஜர் தந்த தத்துவத்தை நன்கு விளக்கினார். பேசிய மற்றவர்களும் ஆழ்வார்களைப் பற்றியும் அவர்தம் பாடிய பாடல்கள் பற்றியும் தொட்டுக் காட்டியதொடு காஞ்சிபுரம், பெரும்பூதூர் பற்றியும் குறித்தனர். பேச்சுகளுக்கு இடை யிடை குஜராத்தியில் பாட்டுகள் சில பெண்கள் பாடினர். கூட்டமுடிவில் வழிபாடு நடைபெற்றது. அனைவருக்கும் நல்ல உணவும் தரப்பெற்றது. (இங்கே உணவு இல்லாமல் கூட்டம் இருக்காது போலும்) கூட்டமுடிவில் அந்தக் கூட்டத்தை நடத்தியவரான திரு 'ஷா' என்பவரை அணுகி இத்தனை ஆச்சாரியர்களுக்கும் கொள்கைகளுக்கும் விழா எடுக்கும் நீங்கள் ஏன் எங்கள் சைவ சித்தாந்தக் கொள்கை பற்றியும் அதன் ஆச்சாரியர்கள் பற்றியும் ஒன்றும் சொல்லவில்லை என்று கேட்டேன். அவர் உடனே, அது

பற்றித் தங்களுக்கு ஒன்றுமே யாரும் சொல்லவில்லையே. முன்னேயே சொல்லியிருந்தால் உங்களையே பேசச்சொல்லி இருப்பேனே என்று கூறியதோடு, அதுபற்றிச் சுருக்கமாறு எழுதித் தந்தால், திங்கள்தொறும் வெளியிடும் அவர்கள் இதழில் சேர்த்து வெளியிடுவதாகவும் கூறினார். நானும் நன்றிகூறி, திரு. சதானந்தம் அவர்கள் வழி இரண்டொரு நாளில் அனுப்புவதாகக் கூறினேன். அவர் குஜராத் மாநிலத்தை சேர்ந்தவர் என்றும் எஞ்சினியர் பயிற்சி பெற்று, இங்கே பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிசெய்வதாகவும் கூறினார். அவர்களிடமும் மற்றவர்களிடமும் விடைபெற்றுக்கொண்டு 2-30 மணி அளவில் புறப்பட்டோம்.

இந்த இரு நாள் சமய நிகழ்ச்சிகளிலும் ஆண்கள் கால் சட்டையும் மேல் சட்டையும் இட்டிருந்தாலும், பெண்கள் மட்டும் (அனைவரும்) நம்நாட்டு மரபுப்படி புடவை உடுத்து, முறைப்படி பொட்டும் பூவுமிட்டு வந்திருந்தனர். ஒருசில காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளும் தென்பட்டன.

திரு. சதானந்தம் அவர்கள் என்னை வேறு ஓரிடத்துக்கு அழைத்துச் சென்றனர். அது ஒரு சிறிய கோவில்; வீட்டினையே கோயிலாக மாற்றியுள்ளனர். திரு. சதானந்தம் போன்றார் முயற்சியால் இந்த இடம் (சுமார் 1 ஏக்கர் - வீடுடன்) வாங்கப்பெற்று, கோயிலாக அமைக்கப் பெற்றதென அறிந்தேன். உள்ளே சிவன், பார்வதி, விநாயகர், முருகன், திருமால், இலக்குமி சரஸ்வதி முதலிய தெய்வங்களின் உலோகச் சிலைகளுடன், நவக்கிரகங்களின் செப்புச்சிலைகளும் இருந்தன. நவக்கிரகங்களுக்குச் செப்புச் சிலை இருப்பதை இங்கேதான் கண்டேன். கோயிலுக்கு வழிபாடியற்றும் அந்தணர் (ஐயங்கார்) காஞ்சியைச் சேர்ந்த (வ.ஆ) திருவத்திபுரம் பக்கத்தைச் சேர்ந்தவர். பல ஆண்டுகள் ஐதராபாத்தில் இருந்துவிட்டு, இங்கே பிட்ஸ்பர்க் வெங்கடேசர் கோயிலில் சில ஆண்டுகள் இருந்து, தற்போது

இங்கே பணியாற்றுகிறார். இவருக்கும் அங்கேயே இருக்க இடம் தந்துள்ளனர்.

சரியாக 3 மணிக்கு இரு அமரிக்கப் பெண்மணிகளும் வேறு சிலரும் வந்தனர். மேல் அறையில் 'டி-வி'யில் சுவாமி சின்மயானந்தா கர்ம யோகத்தைப் பற்றிப் பேசியதை அப்படியே (வீடியோ வழி) கொண்டுவந்தனர். இயல்பாகவே அமைந்த அந்தச் சொற்பொழிவை நேரில் கேட்பது போலவே அனைவரும் அமைதியாகவும் உணர்வோடும் கேட்டு மகிழ்ந்தனர். 4-30 வரை அந்தச் சொற்பொழிவைக் கேட்டு மகிழ்ந்தோம். பிறகு அங்கே வழிபாடு ஆற்றிய அந்த அந்தணர் கொடுத்த 'டி' குடித்து, நகர் நலம் காணப் புறப்பட்டோம். இலர் வழி முன்னரே பலவிடங்களைக் கண்டிருந்த போதிலும் மறுபடியும் அனைத்தையும் காட்ட அழைத்துச் சென்றார் அன்பர் சதானந்தர்.

வாஷிங்டன் எல்லையில் ஆறு பல்கலைக் கழகங்கள் உள்ளன என்றும் சில தனியார் நடத்துவது என்றும் அதற்கென மத்திய அரசோ (Federal Govt) மாநில அரசோ (State Govt) எந்தவிதமான சட்டமும் இயற்றுவதில்லை எனவும் தனித்தனியாக அவை ஒவ்வொன்றும் பாடத் திட்டம் முதலியவை அமைத்துத் தேர்வு நடத்திப் பட்டங்கள் வழங்குகின்றன என்றும், அவற்றை அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளுகிறதென்றும் எனவே மாணவர் பலர் வந்து சேருகிறார்கள் என்றும் கூறினர். ஆயினும் நான் முன்னமே சொல்லியபடி, படிப்புச் செலவுதான் மிக அதிகம். அவற்றுள் ஒன்றாகிய 'John's Hopkins University'யினைக் கண்டேன். பிற பல்கலைக் கழகங்களையும் ஒரு முறை சுற்றிப் பார்த்தேன்.

வாஷிங்டன் அமரிக்க நாட்டுத் தலைநகர் அல்லவா! எனினும் நம் நாட்டைப்போல், அரசாங்க அலுவலகங்கள் வியாபார நிலையங்கள், நீதிமன்றங்கள், பிற முக்கிய நிலையங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் அமைத்துக்

கொண்டு திண்டாடும் நிலை இங்கே இல்லை. இது தலை நகராயினும் நாட்டின் 9 (அ) 10வது பெருநகராகத்தான் உள்ளது. இங்கே உயரிய 20, 30 அடுக்கு மாளிகைகளும் கிடையா. அரசாங்கமே உயரத்தை வரையறுத்துள்ளது. நகர்ப்புற எல்லையில் ஓரிரண்டு தவிர்த்து, நகர எல்லையில் அனைத்துமே எட்டு மாடிகளுக்கு உள்ளாகவே உள்ளன. எல்லா நாட்டுத் தூதரகங்களும் இங்கே உள்ளன. இந்திய நாட்டுத் தூதரகத்தைக் கண்டேன். பல்வேறு நினைவுச் சின்னங்கள் ஆங்காங்கே எழுப்பியுள்ளனர். உயரிய வெற்றித் தூண் ஒன்றும் நகர் நடுவே அமைக்கப்பெற்றிருந்தது மறைக் கப்பெற்ற கென்னடியின் பெயரால் விமானநிலையம் நியூயார்க்கில் அமைந்ததை மேலே காட்டினேன். இங்கே மிகப் பெரியதாகிய ஒரு கலை அரங்கம் அவர் நினைவாகக் கட்டியுள்ளனர். மூவாயிரம் பேர் இருந்து கேட்கக் கூடிய வகையில் அது அமைக்கப்பெற்றுள்ளது. இன்று ஞாயிறு ஆனமையாலும் நிகழ்ச்சிகள் ஒன்றும் இல்லையாதலாலும் அது மூடியிருந்தது. எனினும் புறத்தோற்றத்தையும் அதன் அழகிய வாயில் முகப்பையும் கண்டு மகிழ்ந்தேன்.

நாட்டுத் தலைவர் அலுவலகமாகிய 'வெள்ளை மாளிகை' (White House) யினைக் கண்டேன்- இருபுறத்தும் உயரிய பெருங்கட்டடங்கள் அரசாங்க அலுவலகங்களாக அமைய, இடையில் இந்த வெள்ளை மாளிகை இருந்தது. இதன் எதிரில் சாலைக்கு மறுபக்கத்தில் யார்வேண்டுமானா லும் எந்தவகையாலும் அரசாங்கக் கொள்கை, செயல் முதலியவற்றிற்கு மாறுபாடு தெரிவிக்க வசதி செய்திருந்த னர். 'கோஷங்கள்' இடலாம்; பெரும் சுவரோட்டிகள், அட்டைகளில் ஒட்டிப் பிடிக்கலாம், வேறு வகையிலும் மாறுபாட்டினைக் காட்டலாம். ஆனால் அந்தச் சாலைக்கு மறுபக்கம் வரக்கூடாது. இந்த வகையில் இன்றும் பலர்நின்று கொண்டு, ஏதோ எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருந்த னர். இது தவிர வேறு இடங்களில் மாறுபாட்டு ஆர்ப்பாட் டங்களும் ஊர்வலங்களும் கூடாது என்பதையும் கூறினர்.

அமரிக்கநாடு விடுதலை பெற்ற காலத்தில் சாசனக் கையொப்பமிட்டமை பற்றி, பிலடெல்பியா நகர் பற்றிக் கூறும்போது குறித்தேன். இது தலைநகர் அல்லவா! அதிலும் ஒரு தக்க தலைவரின் பெயரில் அமைந்த ஒன்றல்லவா, எனவே இங்கும் வெற்றிச்சின்னம் (1775) ஒன்று நாட்டியுள்ளனர். ஓரிடத்தில் 'WATER GATE' 'நீர்க்கதவு' என்றிருந்தது. அதை என்னவென்று கேட்டேன். அங்கே நிக்சன் என்பர் பெருந்தவறு இழைத்ததாகவும் அதைக் கொடுமை நிகழிடமாக மக்கள் வெறுத்து ஒதுக்குவதாகவும், அந்த பெயரைச் சொன்னாலே அதற்குரியவர் மிகக் கொடிய வராகக் கருதப் பெறுவர் என்றும் கூறினர். வெற்றிக்கு மட்டுமன்றி வேதனைக்கும் இங்கே ஒரு சின்னம் இருப்பதறிந்து அதைக்கண்டு வாழும் மக்கள் அத்தகைய கொடுமைகளைச் செய்யாது சமுதாயத்தை வாழவிடுவார்களா என நினைத்தேன் - ஆம்! வருங்கால மக்களுக்கு அச் சின்னம் நல்வழி காட்டுமாக!

நான் முன் பலமுறை சுட்டியவாறு இங்கும் ஒரு பேராறு ஊரின் இடையில் ஓடுகிறது. தண்ணீர் வற்றாது, விரைந்து செல்லுகிறது. அதன் தேக்கம் ஒரு பேரேரியாகக் காட்சி தருகிறது. அதை அடுத்துப் பல படகுத்துறைகள் உள்ளன. இன்று விடுமுறை யாதலால் அங்கே உண்மையில் 'கால் வைக்க இடமில்லை'; கார் நிறுத்தவும் இடமில்லை. பக்கத்திலேயே மற்றொரு பெருவெளியில் 'கிரிக்கெட் மாட்சு' நடைபெற்றது. கூட்டத்திற்கும் கார்களுக்கும் கேட்க வேண்டுமா? சுமார் ½ கல் தொலைவு கடப்பதற்கு 20 நிமிடங்களாயின. கார் அசைந்தது; மக்கள் கூட்டம் திரண்டுநின்றது.

இவை தவிர்த்து வேறு சில முக்கியமான இடங்களையும் கண்டோம். நாட்டுக்கு உழைத்த நல்லவர்தம் சிலைகளையும் நினைவுச் சின்னங்களையும் எழுப்பி, இந்நாட்டு மக்கள் போற்றுகிறார்கள் என்பதை முன் காட்டினேன். அந்த வகையில் இலிங்கன் நினைவிடமும் (Lincoln Memorial) ஜாப்பர்சன் நினைவிடமும் (Jefferson Memorial) முக்கிய

மானவை. இத்தகைய பல நிலையங்களைக் கண்டு கொண்டே, வாஷிங்டன் பல்கலைக் கழகப் பக்கம் வந்தோம். நான் மேலே சொல்லியபடி இதுவும், தனியார் பல்கலைக் கழகம்; நல்ல தரமானதாம். மேல் சியேட்டல் (SEATTLE) வாஷிங்டன் பல்கலைக்கழகத்துக்கு நான் செல்ல இருக்கிறேன். அங்கே கணிப்பொறிவழித் தமிழ் ஆங்கில அகராதி தயாராகிறது. ஆயினும் அதற்கும் இதற்கும் எத்தொடர்புப் இல்லை. இத்தகைய இடங்களைக் கண்டு கொண்டே இரவு 7.30 மணி அளவில் வீடு சேர்ந்தோம். முன்பின் அறியாத திரு. சதானந்தம் அவர்களும் அவர்தம் துணைவியாரும் என்னைப் பரிந்தேற்றுப் புரந்தோம்பும் நிலையினை எண்ணி எண்ணி வியந்து போற்றினேன். இரவிற்கு நல்ல மைசூர்க்கலவைச் சாதமும் (சாம்பார்) நல்ல தயிர்ச் சாதமும், ஊறுகாய், தேங்காய்த் துவையல், மற்றொரு துவையல் ஆகியவற்றொடு அளித்தனர். அனைவரும் ஒருங்கிருந்து உண்டோம்.

அவர்தம் மாமனார் தென்கலையார்; விசிட்டத்வைதி; சாதனந்தம் வேதாந்தி, நானோ சைவ சித்தாந்தி. எங்கள் உணவுக்கிடையில் சமயம் பற்றிய வாதம் எழுந்தது. பேசிக் கொண்டே கையைக் கழுவாமலேயே அவரவர் கொள்கையின் சிறப்பை ஆராய்ந்தோம். (நாள் தோறும் அவர்கள் இருவரும் இவ்வாறு தர்க்கம் செய்வது உண்டாம்). பேச்சு பலவகையில் சென்றது. நான் முடிவாக எல்லாக் கொள்கைகளும் மக்கள் வாழ்வை வளம் படுத்தி, சமுதாயத்தை நேரிய வழியில் நடத்தி, தெய்வ நெறியை மலர வைக்கப் பயன் படுவனவே எனவும், பின்பற்றுவோர் வேகத்தால் சில வேளைகளில் தடுமாற்றம் உண்டாகிறதேனும் அனைத்தும் இணைந்து செல்லும் நெறியே தேவையான தென்றும் கூறினேன். 'உலகம், உயிர், உடையவன்' என்ற முப்பொருளின் உண்மை நிலையை உணர்ந்து, 'எல்லாரும், இன்புற்றிருக்க நினைக்கும்' தெய்வநெறியே இன்று உலகுக்குத் தேவை என்ற உணர்வோடு சுமார் 11 மணி வரை பேசிக்கொண்டிருந்து பின் படுக்கச் சென்றோம்.

வாஷிங்டன் (D.C) 29-4-85

இன்று அதிகாலையிலேயே எழுந்துவிட்டேன். வீட்டில் உள்ளவர் அனைவரும் அவரவர் பணிக்கெனக் காலை 7 மணிக்கே புறப்பட்ட வேண்டியவர்கள். எனவே நானும் திரு. சதானந்தம் அவர்களுடன் சென்று, கனடா செல்ல (நயாகரா நீர்வீழ்ச்சி) அந்த நாட்டு இசைவு வாங்குவதற்கும் திரு. பெரியசாமி அவர்கள் கேட்டுக் கொண்டபடி 'கிளைவ் லேண்டு'க்குத் திரும்பி வந்து மாநாட்டில் கலந்து கொள்வ தற்கு 'சுவிஸ் ஏர்லைன்ஸ்' இசைவு பெறுவதற்கும், ஆவன காணவேண்டும் எனப் புறப்பட்டேன். காலை ஓட்ஸ்கஞ்சி, காப்பி உண்டு புறப்பட்டேன். அங்கே அவருடனேயே அலுவலகம் சென்று பிறகு இந்த இடங்களையெல்லாம் கண்டு திரும்ப மாலையாகும் என்றதால் திருமதி சாதானந் தம் அவர்கள் பகலுக்கெனத் தனியாக உணவுப் பொட் டலங்கள் கட்டித் தந்தனர். அவர்கள் அன்பின் பண்பை அறிந்து வியந்து போற்றினேன். பின் அவருடன் அலுவலகம் சென்று, சிறிது நேரம் வெளியே வரவேற்பு அறையில் தங்கியிருந்தேன். அவர்கள் தம் அலுவலகம் சென்று முக்கிய பணிகளை முடித்து வந்தனர். அவர் தம் வீட்டிலிருந்து சுமார் 15கல் தொலைவில் அலுவகம் இருந்தது. அதே அலுவலகத்தில் பணிபுரியும் மற்ற மூவரும் இவரும் சேர்ந்து, ஒரே காரில் வந்து பணி முடித்து ஒரே காரில் திரும்பும் ஏற்பாடு இருந்தது. இன்று இவர் முறை; எனவே இவர் காரில் அவர்கள் வீடுகளுக்குச் சென்று, அவர்களையும் ஏற்றிக்கொண்டு வந்தார். இது

காரின் செலவைக் குறைப்பது மட்டுமின்றி, நெடுந்தொலைவு ஓட்டும் வேலையினையும் நான்கு நாளுக்கு ஒருமுறையாகத் தருவதனால் உடலுக்கு ஓய்வும் அமைகிறது. காலை 7.15க்குப் புறப்பட்ட (புதியநேரம் - முந்நாள் வரை 6.15) நாங்கள் - வேலை நேரமாதலால் - நீண்ட கார் வரிசையின் இடையே மெல்ல ஊர்ந்து ஊர்ந்து 8 மணி அளவில் தான் அவர் அலுவலகம் சேரமுடிந்தது.

நானும் அவரும் மறுபடியும் கனடா தூதுவரகம் சென்றோம். அவர்கள் உடனிருந்து உதவி, வேறுபணி பொருட்டு வெளியே சென்று வருவதாகக் கூறிப் புறப் பட்டார். (நடந்ததேதான்) இங்கே காரினைச் சாலைகளில் நிறுத்திவைப்பதில் இடர்ப்பாடு உண்டு; இடம் கிடையாது. ஒருமணி நேரம், அரைமணி நேரம் தான் நிற்கவேண்டும் என்ற கட்டுப்பாடும் சில இடங்களில் உண்டு. எப்படியோ ஓரிடம் பிடித்து நிறுத்தினர்; எனவே மறுபடியும் எடுத்துச் சென்றால் அங்கே நிறுத்தவும் திரும்பவும் இங்கே வந்து நிறுத்தவும் பெரும்பாடு ஆகும் என அங்கு நடந்து சென்றார். நான் உரிய விண்ணப்பத்தைக் கொடுத்து, அவர்கள் முத்திரையும் பெற்றேன். எனினும் மறுபடி 'பப்பலோ' நகரில் சென்று, அங்குள்ள கனடா தூதரகத்தைக் கண்டால் வேறுசில குறிப்புக்களும் தேவையானால் நீர் வீழ்ச்சிக்குச் செல்ல, அங்கே தங்க ஏற்பாடும் செய்து தருவார்கள் என்றும் சொன்னார்கள். பிறகு நாங்கள் இருவரும் (அவர் பணி முடித்துத் திரும்பி வந்தார்) 'சுவிஸ் ஏர்லைன்ஸ், சென்றோம். அவர்கள் முன் கொடுத்த பயணச் சீட்டின் வழியினை மாற்ற இயலாதெனவும், வேண்டுமாயின் தனிச் சீட்டு எடுத்துக் கொள்ளலாம் எனவும் குறைந்தது ரூ. 2500 (200 டாலர்) ஆகும் எனவும் கூறினர். எனவே அந்த எண்ணத்தை விட்டு விட்டேன். இரவு திரு. பெரியசாமி அவர்களுக்குக்குத் தொலைபேசியில் சொல்லிவிட முடிவு செய்தேன்.

பணிமுடிந்ததும் அவர் அலுவலகம் சென்றிருந்து, பின் மாலை 4 மணிக்கு அவருடன் வீடு திரும்புவ தென்பதே முன்

ஏற்பாடு. எனினும் அவர் என்னை வீட்டில் கொண்டு விட்டு, பிறகு அலுவலகம் செல்வதாகச் சொல்லி வந்தார். எடுத்துச் சென்ற உணவுப் பொட்டலத்துடன் நான் வீடு திரும்பினேன். அவர்தம் துணைவியார் அந்த உணவுடன் வேறு சிலவற்றை யும் இட்டு உண்பித்தார்கள். அவர்கள் உணவு கொண்ட பிறகு அலுவலகம் புறப்பட்டார். அவர்தம் மாமனாரும் மாமியாரும் இங்கே இருந்தனர். துணைவியாரும் வேறு இடத்தில் (பள்ளியில்) பணி செய்கின்றவர்; எனினும் இன்று விடுமுறை பெற்று இருந்தார்.

உணவுக்குப்பின் அவர்கள் மூவருடன் பல்வேறு பொருள் களைப் பற்றி - சிறப்பாகச் சமயம், சமுதாய வாழ்வு இவை பற்றிப் பேசிக் கொண்டே இருந்தேன். பல நல்ல குடும்பங் களுக்கு அமைந்த சில பெரும் கருத்துக்களை அலசினோம். நன்கு பொழுது கழிந்தது; போனதே தெரியவில்லை. மாலைச் சிற்றுண்டி முடிக்கவும் திரு. சதானந்தர் வரவும் சரியாக இருந்தது. பிறகு அவர்தம் மகளாரை அழைத்துக் கொண்டு மருத்துவரிடம் (பல்) சென்றார்கள்.

வீட்டில் கீழே தளம் செப்பனிடும் பணி நடைபெறுகிறது. அதைச் செய்பவர் ஆப்கானிஸ்தானத்தைச் சேர்ந்தவர் அந்நாடு அந்நியரிடமிருந்து விடுதலை பெற விழைபவர். அவர் காரில் 'Free Afganistan' என்று பொறித்திருந்தார். எனவே கீழே சென்று பணிகளையெல்லாம் கண்டேன். ஒவ்வொன்றையும் - இங்கே வீடுகளெல்லாம் வெறும் மரத்தா லாகியது என முன்னரே குறித்துள்ளேன்—எவ்வாறு செய்கின்றனர் எனக் கேட்டறிந்தேன். பல விருந்தினர் இங்கே வந்து இவர் வீட்டில் தங்குகின்றனர். மே மாதத்தில் ஒரு பெரு நாட்டியக் குழு தங்க இருக்கிறது; சின்மயானந்தர் வந்து தங்குகிறார். பிறகு இவர்தம் பெற்றோர் (தற்போது அனந்தப்பூரில் உள்ளவர்) வந்து தங்குவர். அனைத்துக்கும் பயன்படும் வகையில் அதைச் சரிசெய்து - எல்லா வசதிகளும் பொருந்தச் செப்பனிடுகின்றனர். கூலி மிக அதிகம், சாமான் களும் அப்படியே. செப்பம் எல்லாம் செய்ய அதற்கு மட்டும்

8000 டாலர் (சுமார் 1 இலட்சம்) செலவாகும். அவர் தம் வேலைகள் சிலவற்றைக் கண்டு, பிறகு இரவில் உணவு கொண்ட பின் திரு. பெரியசாமி அவர்களுக்குத் தொலை பேசியில் தகவல் சொன்னேன். பாஸ்டனில் உள்ள சின்மயாவின் அன்னை புவுத்திராஜிக்கும் நான் வரும் நேரம் சொல்லி, அவர்கள் பள்ளிக்கு வந்து சிறப்பித்தமையெல்லாம் நினைவூட்டினேன். இரவு 10 மணிக்கு (புது நேரம்) உறங்கச் சென்றேன்.

வாஷிங்டன் (D.C) 30-4-85

இன்றைக்கு நான் எங்கும் வெளியில் செல்லவில்லை. ஓய்வாக வீட்டிலேயே இருந்தேன். எனது ஆடைகளை யெல்லாம் இயந்திரச் சலவையில் தூய்மை செய்து கொண்டேன். அம்மையார் அவர்கள் உடனிருந்து செய்து தந்தார்கள். (முன் ஒரு முறை இலண்டனில் தூய்மைசெய்யப் பெற்றன) பின் இங்குள்ள கல்வி நிலைபற்றியெல்லாம் எண்ண ஆரம்பித்தேன். திரு. சதானந்தம் அவர்தம் மகளார் இங்கே 5-ம் வகுப்பில் பயில்கின்றார் (V Grade). அவர் கள் பள்ளியில் நடைபெறும் பாடங்கள், முறைகள் பற்றிக் கேட்டறிந்தேன். (பள்ளியினை வெளியிலிருந்து கண்டேன்.) பள்ளியின் பஸ் வந்து அழைத்துச் செல்லுகிறது. அது தனியார் நடத்தும் பள்ளியன்று; அரசாங்கப் பொதுப்பள்ளி. எனினும் அதில் பயிலும் மாணவர் நன்கு பயிற்சி அளிக்கப் பெறுகின்றனர் (இம்மாணவி ஓராண்டு தமிழ் நாட்டில் ஒரு சிறந்த பள்ளியாகக் கருதப்பெறும் ஒன்றில் பயின்றவர்; எனினும் இரு நிலைகளின் வேறுபாடுகளைக் கண்டதால் மறுபடியும் இங்கேயே அழைத்துக் கொள்ளப் பெற்றார் போலும்.)

பள்ளியில் ஆங்கிலம், கணக்கு, சமுதாய இயல் (Social Studies) அறிவியல் (Science) இவை கற்றுத் தருகிறார்கள். சிறு பள்ளியாதலால் (5 வது வரை) வேறு கைத்தொழில் முதலியன இல்லையாம். பெரிய பள்ளியில் சில விடங்களில் தொழில் சம்பந்தமான கல்வி இயல் இருக்கும் என்றனர். பள்ளியிலேயே பொறியியல் (Engineering), கணிப்பு நெறி

(Computer) போன்றவை பற்றிய அடிப்படைக் கல்விகளைக் கற்க வாய்ப்பு உண்டு. இந்தப் பிள்ளை பயிலும் பள்ளி மட்டுமன்றி எல்லாப் பள்ளிகளிலும், ஒவ்வொரு குழந்தைக்கும் தனிச் செயல்முறை (Project) உண்டாம், ஆண்டுக்கு நான்கு முறை பருவத் தேர்வு (Semester System Examination) உண்டு. ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஒரு பொருள் பற்றிக் குழந்தைகள் சிறந்த முறையில் ஆய்வு நடத்துதல் வேண்டும். குழந்தைகள் வகுப்பிலேயே (L.K.G., U.K.G.) (சிலவிடங்களில் ஒரே குழந்தைகள் வகுப்பு உள்ளது என்கின்றனர்) இந்த முறை கையாளப் பெறுகின்றது. இக் குழந்தை 'U.K.G.' வகுப்பில் படிக்கும்போது 'உருளைக் கிழங்கிற்கு உயிர் உண்டா?' என்று ஆய்வு செய்த தன்மை அறிந்தேன். அதை வெட்டி ஒரு பகுதியினை வேகவைத்து, மறுபகுதியினை அப்படியே வைத்து, இரண்டிலும் தண்ணீர் ஊற்றினால் வேகவைத்த பகுதி நீரை உட்கொள்ளாது நிற்க, முதல் பகுதி நீரை உட்கொண்டதைக் கண்டு, அதனால் வெந்தபின் அதன் உயிர்ச்சத்து நீங்கியது அறிந்து உருளைக்கு உயிர் உண்டு என்று நிரூபித்த தன்மை அறிந்து வியந்தேன். பெரிய விஞ்ஞானிகளும் காணமுடியாத இந்த நுண்ணிய கருத்தினை நான்கு வயதுக் குழந்தையை அறிய வைத்த திறன் நினைந்து மகிழ்ந்தேன். (பெற்றோர் இந்த ஆய்வுகளில் உதவுகின்றனர்; ஆனால் தாங்களே எல்லாவற்றையும் செய்து கொடுத்துவிடுவதில்லை, நம் நாட்டில் சில பெற்றோர் செய்வது போல). எனவே இங்கே பயிலும் குழந்தைகள் - அரசாங்கப் பள்ளியாயினும் தனியார் பள்ளியாயினும் இளமையிலேயே அறிவுத் திறன் பெறுகின்றனர். பின் வாழ்வில் சிறக்க இது வழி செய்கின்றது. இவ்வாறே பிற வகுப்புகளில் செய்த ஆய்வுகள் சிலவற்றைக் குறித்துத் தந்தனர். இதோ அவர்கள் தந்தவை.

1. How fast do you fall in air and liquid?
2. How do you stop pollution.
3. The origin of the bicicle

4. Carbon 14 or Radiocarbon
5. Madam Curie
6. A Doctor of Medieval Times
7. The Contribution of ancient Greece and Rome
8. NEANDERTHAL MAN :- an ancient type of man, (She tried to find out it how it lived; where it lived, what it ate and why it disappeared.)
9. Do objects weigh the same in air, water and milk.

இவை போன்ற பல பொருள்களைப் பற்றிய ஆய்வுகள் ஐந்தாம் வகுப்பிற்குள்ளேயே செய்கிற திறன் போற்றக் கூடியது. இதில் அறிவியல், நிலவியல், வணிகவியல், வரலாறு, வருங்கால அமைப்பு பற்றி எண்ணல், இலக்கியம் - சமுதாய அமைப்பின் தேவை போன்ற பல அரிய பொருள்கள் உள்ளனவன்றோ! இதில் முதல் ஆய்வுக்கும் 9ம் ஆய்வுக்கும் அவர்கள் செய்த படங்கள் (graph), தராசு முதலியனவற்றைக் கண்டேன். சாதாரண அங்கி மாட்டியில் (coat hanger) இடையில் நீர் நிலை கருவி (Level)யை அமைத்து அதைத் தராசு ஆக்கி ஒரு மில்லி கிராம் வித்தியாசத்தையும் காட்டும் வகையில் அதை அமைத்துப் பயன் படுத்திய விதத்தையும், அப்படியே ஆழும் பொருள் அழுத்தம் பற்றி அறியக் காட்டும் கருவி அமைத்த விதத்தையும் கண்டேன். பிற ஆய்வுகள் பற்றிய குறிப்புகளையெல்லாம் தனித் தனியாக எழுதி கொண்டேன். (இத்தகைய ஆய்வு முறைகளையெல்லாம் நம் பள்ளியில் புகுத்தினால் பிள்ளைகள் பயன் பெறுவார்களே என்ற உணர்வில் அவை அனைத்தையும் தேர்ந்து எடுத்துக் கொண்டேன்) பள்ளி முதல்வர் இத்தகையவற்றில் ஆர்வம் கொண்டவர்; எனவே, பயன் படுத்தலாம் என்ற துணிவுடன் இன்னும் பல அறிய முற்பட்டேன். இதில் 6 வது உள்ள 'என் எதிர் காலத்தில் டாக்டர் ஆக வேண்டும்' என்ற உணர்வில், இடைக்

காலத்தில் இருந்த 'டாக்டர்'கள் எப்படிப் பட்டவர்கள் என்ற ஆய்வின் முடிவில் இக் குழந்தை (5ம் வகுப்பு) எழுதிய நான்கு அடிகள் கொண்ட ஐந்து பாடல்களை அப்படியே எழுதி வாங்கிக் கொண்டேன். அதில் எதுகை, மோனை, இயைபு போன்ற கவிதைத் தொகையின் அமைப்பு உள்ளமை யோடு நல்ல பொருள் பொதிந்ததாகவும் இருந்தது. மற்றைய ஆய்வுகளின் முறைபற்றியும் (Introduction, experimental, procedure, results and discussion, observation, conclution and acknowledgements) குறித்து வாங்கிக் கொண்டேன். இந்த வகையில் எல்லாப் பிள்ளைகளும் ஆய்வு நடத்த வேண்டுமாம். (ஆண்டுக்கு நான்கு முறை ஆய்வுகள்) ஆய்வுகளின் முடிவிலே சிறந்ததென அறிந்த நல்ல ஆய்வுக்கு, பள்ளியினர் நல்ல பரிசும் வழங்குகிறார்கள்.

இந்நாட்டுக் கல்வி முறைபற்றியும் அதன் தேவைகள் பற்றியும் பயிலும் மாணவர் செல்லும் நெறிபற்றியும் திருந்தக் காணும் முறைகள் பற்றியும் இத் துறையில் அமைப்பு, வளர்ச்சி, வாழ்வுக்கென அமைக்கும் முறை இவைகள் பற்றியும் இங்கு வெளியாகும் நாளிதழ், வார இதழ் போன்ற அனைத்து இதழ்களும் அலசி ஆராய்ந்து பலப்பல எழுதுகின்றன. (Washington post) போன்றவற்றி லிருந்து இரண்டொரு கட்டுரைகள் உடன் எடுத்துக் கொண்டேன். இங்கே கல்வி முறையில் மத்திய அரசாங்கம் தலையிடுவதே இல்லை; மாநில அரசும் தனியார் நடத்தும் பள்ளிகளில் ஆணை செலுத்தி ஆதிக்கம் காட்டுவ தில்லை. எங்கே எப்படிப் பயின்றாலும் யார் வேண்டு மானாலும் நாட்டுத் தேர்வு (National Examination - நம் நாட்டு 12ம் வகுப்பினை - +2 - ஒத்த தேர்வு) எழுதலாம். எழுதாமலேயும் பல்கலைக்கழக வகுப்பில் சேரலாம் என்றனர். தொழில் துறைக் கல்லூரிகளுக்கோ, மருத்துவம், பொறியியல் போன்றவற்றிற்கோ, பிற அரசாங்க அலுவலகங் களுக்கோ, தனித்தனித் தேர்வுகள் நடத்துகிறார்கள். அதற்குரிய பாடங்களை அவரவர் விரும்பிய வகையில் கற்று

எழுதலாம் என்ற நியதி உண்டு. தேர்வு எழுதுவதற்கு (பள்ளித் தேர்வாயினும் பிறவாயினும்) மேல் வகுப்புகளில் இத்தனை நாள் பள்ளிக்கூடம் வரவேண்டும் என்ற கட்டாயம் (Compulsory Attendance) கிடையாது. பலவகையிலும் சுதந்திரம் வழங்கும் இந்த நாட்டு அரசு, கல்வித்துறையிலும் இவ்வாறு பலவகையில் உரிமை வழங்கியிருத்தல் பாராட்டுதற் குரியது.

திரு. சதானந்தம் அவர்தம் மாமனார் மாமியார் இருவரும் வீட்டிலே இருந்தனர். மற்றவர் அனைவரும் அலுவலகம் சென்றனர். எனவே என் எழுத்து வேலைக்கும் உணவுக்கும் இடையிலே, அவர்கள் இருவரும் பலப்பல பொருள்களைப் பற்றி பேசினர். இங்கே உள்ள 'ஹரே கிருஷ்ணா' இயக்கத் தினைப் பற்றிக் கூறினர். இங்கே அந்த இயக்கம் இரு பெரு வகையில் இயங்குகிறதென்றும் ஒன்று நான் நாளை செல்ல இருக்கும் 'பிட்ஸ்பர்க்' அருகில் உள்ள 'புதுப் பிருந்தாவனம்' என்றும் கூறி அதுபற்றி விளக்கினர். அங்கே 3000 ஏக்கர் நிலத்தில் (ஒரு சிற்றூராக) சுமார் 300 அமெரிக்க குடும்பங் கள் இந்த இயக்கத்தில் தம்மை மறந்து பணியாற்றுகின்ற னர் என்றனர். அவருள் பல சிறந்த பொறியாளர், உயர்ந்த மருத்துவர், பிற துறை நிபுணர்கள், பேராசிரியர்கள் உள்ள னர் என்றும் அந்த ஊர் எல்லையில் அனைவரும் நம் ஊர் போன்றே, ஆடவர் 'வேட்டி' அணிந்தும் மகளிர் புடவை கட்டியும் பிள்ளைகளில் ஆண்கள் வேட்டியும் பெண்கள் பாவாடை கட்டியும் மாத்திரம் உள்ளனர் என்றும், அவர்கள் நெற்றியில் கோபி சந்தணமும் குங்குமப் பொட்டும் உள்ள தோடு, நாவில் கிருஷ்ண இராம மந்திரங்கள் எப்போதும் 'நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்று சுந்தரர் பாடியபடி இருக்கும் என்றும் இளம்பிள்ளை களும் அதற்கு விலக்கு இல்லை என்றும் சொல்லி, அந்தப் பிருந்தாவனம் உண்மையிலேயே பழைய பிருந்தாவனத் தையும் மக்கள் கோபிகளையும் ராதை ருக்குமணி களையும் கிருஷ்ணர்களையும் நினைவூட்டும் வகையில்

உள்ளனர் என்றும் கூறினர். இறைவனுக்கு நாள்தோறும் விழா ஆற்றி முடிவில் வழங்கும் பலவகைப் 'பிரசாதங்கள்' நம் ஊர்க் கோயில்கள் உள்ளதைக்காட்டிலும் மிகவும் சிறந்தவையாகவும் சுவையாகவும் இருக்கும் என்றனர். இளம் பிள்ளைகள் தோற்றம் அக்கோலத்தில் நெஞ்சங்கவர் வகையில் அமைந்துள்ளது என்று கூறி. என்னை எப்படியும் அந்த நகரைச் சென்று காணுமாறு கூறினர். நானும் நான்கு நாள் 'பிட்ஸ்பர்க்'கில் தங்குவதால் ஒருநாள் அங்கே சென்று வர நினைத்தேன். (பிட்ஸ்பர்க்கில் பெருமழை காரணமாக அங்கே செல்லமுடியவில்லை.)

மாலையில் திரு. பார்த்தசாரதி (மாமனார்) அவர்களுடன் சுற்றி உலாவரப் புறப்பட்டேன். தங்கியிருந்த இடத்தினைச் சுற்றி நான்கைந்து தெருக்கள் நடந்தோம். பல சமய விடயங்கள் மட்டுமன்றிச் சமுதாய விடயங்களையும் அலசிப் பார்த்தோம். அவர் பதின்மூன்று வருடங்களாக இங்கே வந்துகொண்டிருப்பவராதலால் பலவிடங்களை விளக்கினார். தெருவுதொறும் வீட்டுக்கு வீடு வீதியை ஒட்டித் தபால் பெட்டிகள் (பூட்டுடன்) வைக்கப்பெற்றிருந்தன. அஞ்சல் தருபவர் (Post man) காரிலேயே வருவாராம். அப்படியே அந்தப் பெட்டிகளைத் திறந்து அவரவர்க்குரிய அஞ்சல்களைப் போட்டுச் செல்வாராம். பின் வீட்டுக்குரியவர் திறந்து, உள்ளதை எடுத்துக் கொள்வாராம். பதிவு போன்றவற்றைத்தான் நேரில் தருவாராம். சிலவிடங்கள் பதிவு வந்துள்ளது என்ற குறிப்பு பெட்டியில் இருக்கும். அவர்களே அஞ்சலகம் சென்று வாங்கிக் கொள்ளவேண்டும். அஞ்சல்துறை கடைநிலை ஊழியர் மட்டுமன்றி, வீட்டு வேலைகளைச் செய்யும் மகளிரும் காரிலேயே வருகின்றனர். வீடு சாமான்கள் துப்புரவு செய்தல் (பெரும்பாலும் மின் உதவியினாலேயே) போன்ற நாளைக்கு ஒருமணி நேர வேலைக்கு 40 (அ) 50 டாலர் கூலி கேட்கின்றனர். (சுமார் 500 ரூபாய் ஒரு நாளைக்கு) இதையெல்லாம் நம் நாட்டில் எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை. அதனாலேயே எல்லா வேலைகளையும் இங்கே அவரவர்களே செய்து கொள்ளுகின்றனர்.

நகரத் துப்புரவும் உண்டாம். வாரத்துக்கு இருமுறை மோட்டார் லாரி வருமாம். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குப்பைக் கூளங்களை கரிய பெரிய பைகளில் இட்டுத் தத்தம் வாசலில் வைத்திருப்பர். (நான் இதை முதலில் பாரிசில் கண்டபோது ஏதோ சாமான் மூட்டைகள் என நினைத் தேன்). வரும் லாரியில் அவற்றை எடுத்துப்போட்டுக் கொண்டு செல்வர். தெருக்கள் புழுதி இல்லாததாலும் வீட்டு எல்லைகள் பெரும்பாலும் புல் பரப்பாக உள்ளமையா லும் இவற்றில் குப்பை சேர்ந்தால் அந்தந்த வீட்டில் உள்ள வர்களே துப்புரவு செய்வதாலும் தெருக்களில் அதிக குப்பை கள் சேருவதில்லை. இவ்வாறு நகர ஆட்சியர் தூய்மை யினைப் பாதுகாக்கின்றனர். அவர்களிடமே கல்வி, நலத் துறை, சிறு சாலைகள், மக்கள் பிற தேவைகள் அனைத்தும் ஒப்படைக்கப் பெற்றுள்ளனவாம். அப்படியே ஒவ்வொரு மாவட்ட ஆட்சியிடமே அனைத்தும் உள்ளன. நம் நாட்டி லும் அவ்வாறு அனைத்தும் மாவட்ட ஆட்சியிடம் (District Boards) ஒப்படைக்கப்பட்டிருந்த காலம் உண்டு. நான் அப்போது அரசியலில் ஈடுபட்டவனாதலால் அத்தகை ஆட்சிக் குழுவில் உறுப்பினனாக மக்களால் தேர்ந் தெடுக்கப் பெற்றுப் பணியாற்றினேன். (1938-1944) ஆயினும் இன்று தமிழகத்தில் அந்த நிலையில்லை. பஞ்சாயத்து ஒன்றியங்கள் இருப்பினும் எல்லா அதிகாரங் களையும் அவர்களிடம் ஒப்படைக்கப்பெறவில்லை யல்லவா! இத்தகைய மாற்றங்கள் பற்றியும் பிற நிருவாகங்கள் பற்றி யும் பேசிக்கொண்டே ஒரு மணி நேரம் உலவிவிட்டு 8 மணி அளவில் வீடு திரும்பினோம்.

இந்நாட்டு நீதி பற்றியும் சிறிது நினைக்கத் தோன்று கிறது. யார் வேண்டுமானாலும் எதற்கு வேண்டுமானா லும் வழக்குத் தொடுக்கலாம். ஒரு பெண் தலையில் சில விரும்பத்தகாத வடுக்கள் (சிறுபுண்கள்) தோன்றியபோது, பல நாள்களுக்கு முன் ஒரு முடிவெட்டகத்தில் (Saloon) வெட்டிக்கொண்டமையே காரணம் என அதன் மேல்

வழக்குத் தொடுத்துள்ளார். பிள்ளைகள் பெற்றோர் வழக்கு - கணவன் மனைவி வழக்கு - ஆசிரியர் மாணவர் வழக்கு பயனற்ற வெற்று வழக்குகள் என இங்கே இல்லாத வழக்குகளே இல்லை எனலாம். அதற்கென அரசாங்கத்தார் அமைத்த நீதிபதிகள் தவிர்த்து, பொதுமக்களிடையிலேயே சில நீதிமன்றங்கள் (Public Court and Peoples Court) அமைத்து, பல சிறு வழக்குகளை அம் மன்றங்கள் வழியே தீர்க்க ஏற்பாடு செய்துள்ளனர். நம் நாட்டிலும் சில ஆண்டுகளுக்கு முன் கௌரவ நீதிபதிகள் (Honarary Magistrates) பொதுமக்களிடையிருந்து நியமனம் செய்யப்பெற்று பல வழக்குகள் அம் மன்றங்களால் தீர்க்கப்பெற்றன. ஏனோ அவற்றை அரசாங்கத்தார் நீக்கி விட்டனர். இங்கே உள்ள நாளிதழ்களில் நீதிமன்றங்கள் பற்றியே தனிப்பகுதிகள் ஒதுக்கப்பெறுகின்றன. பள்ளிப்பிள்ளைகள் காணாமற் போவது, கொலை, கொள்ளை முதலியன பற்றிய செய்திகளைக் காணும்போது நம் நாடு எவ்வளவோ மேல் என்ற உணர்வு உண்டாகிறது. காரும் பணப் புழக்கமும்தான் வாழ்வு என்று எண்ணுபவருக்கே இங்கே வாழ்வு இனிக்கலாம். அளவுக்குமீறிக் குடித்தல், மாத்திரைகள் உண்ணல் இவை பெரும்பாலும் சாதாரணமாக உள்ளமையின் 'என்ன செய்கிறோம்' என்று தெரியாமலேயே சிலர் தவறுகள் செய்கின்றனர். இறைவன்தான் இவர்களையும் இவர்தம் நாட்டையும் அதன்வழி உலகத்தையும் காத்தல் வேண்டும் என்று அவனடி வணங்கினேன்.

முன்பு பள்ளிகளின் ஆரம்பக்கல்வி பற்றிய சில விளக்கங்களைத் தந்தேன். மேலே உயர் நிலைக்கல்வி பற்றியும் சில நினைக்க வேண்டியுள்ளது. திருமதி. சதானந்தம் அவர்கள் அந்த வட்டத்தில் அத்தகைய உயர்பள்ளி ஒன்றில் பணியாற்றுகின்றனர். நான் கடந்த இரு வாரங்களில் கண்ட பல பள்ளிகளின் நிகழ்ச்சிகளும் பிறவும் பல உண்மைகளை எனக்கு விளக்கின.

கல்வியின் அமைப்பு முறையே தனியானது. நம் நாட்டில் எதற்கும் பட்டம் தேவை என்ற நிலை; அது இங்கே இல்லை. நான் முன்னரே சொன்னபடி, பள்ளிப்படிப்பு இல்லாமலேயே கல்லூரியில் சேரலாம். பள்ளியில் படிப்பதிலும் மாணவரிடம் ஒழுங்கு இல்லை. பெற்றோர்களும் தலையிட்டு,தகுதி இன்றேனும் தம் பிள்ளைகளை மேல் வகுப்பிற்கு மாற்ற வேண்டுவர் இல்லை. எனவே இங்கே ஆண்டு இறுதித் தேர்வும் இல்லை; நிறுத்துவதும் இல்லை. பருவங்களில் நடைபெறும் தேர்வுகளை அடிப்படையாகக் கொண்டு ஆண்டு முடிவினைக் காண்கின்றனர். மேலும் மாணவர் சிலர் தம்மை மறக்கும் நிலையில் குடித்தும் பல மருந்துகளை உண்டும் நிலைகெடுகின்றனர். ஒழுக்கக் கேட்டுக்கும் குறைவில்லை. பள்ளிநிலையில் நம் நாட்டைப்போல முறையான பாடங்களைப் பயிலல் என்ற முறையில்லை. ஒரே வகுப்பில் நான்கு பிரிவுகள் (Sections) இருப்பின், அனைத்துக்கும் பாட நூல் ஒன்றாயினும், ஒவ்வொரு வகுப்பிலும் ஆசிரியர்கள் தம் விரும்பம்போல் பாடம் நடத்தி, பருவத் தேர்வும் கொள்வர். ஒரு வகுப்பில் பாட நூலில் முற்றும் முடிந்திருக்கும்; ஒன்றில் பாதி, ஒன்றில் மூன்றில் ஒரு பகுதி, ஒன்றில் கால் என இப்படி இருப்பினும் ஆண்டுப் பொதுத் தேர்வு இன்மையின் யாரும் கவலைப்படுவதில்லை. மேலும் திங்கள் தொறும் பருவந்தொறும் நடத்த வேண்டிய பாட எல்லைகள் அமைத்து, திட்டம் தீட்டி அதை முடிக்க வேண்டும் என்ற நியதியில்லை இங்கே மாணவர் மனம் போல ஆசிரியர் நடக்க வேண்டும். மாணவனைக் குறை சொல்லவோ அடிக்கவோ கூடாது. எனவே கல்விமுறை நன்றாக இருந்தும் நடைமுறை ஒழுங்காக இல்லாமையின் பல மாணவர் பாழ்படுகின்றனர். பொதுவாக மாணவர் தரமும் நடுத்தரமாகவே உள்ளது. ஆனால் அதே வேளையில் முயன்று முன்னுக்கு வரவேண்டும் என்று உழைக்கும் ஒரு சில்ர் தக்கவகையில் உயர வழி உண்டு என்பதையும் மறக்க முடியாது. நான் மேலே ஆரம்பப்பள்ளியில் காட்டியபடி இங்கேயும் தனித்தனி செயல்முறை (Projects) வகுப்பின் தரத்துக்கு ஏற்ப உள்ளது. அவற்றைச்

செம்மையாகச் செய்தும், பிற பாடங்களை முற்றும் (ஆசிரியர் சொல்லித் தந்தோ. அன்றியோ) செம்மையாக அறிந்தும் சிறக்க வரும் ஒரு சில பிள்ளைகளை - பல்வேறு சூழல்களுக்கிடையே தக்கவாறு பயன்பெறும் பிள்ளைகளைப் போற்றாதிருக்கமுடியவில்லை. ஆரம்பப்பள்ளியில் காட்டும் அதே ஆர்வம்—மாணவர் ஆசிரியர் தொடர்பு—ஆய்ந்து உணரும் நிலை—உயர்நிலைப்பள்ளியிலும் அமையுமாயின் நாட்டின் கல்வி சிறக்கும் என்பது துணிபு.

கல்லூரி, பல்கலைக்கழகங்களைப் பற்றி முன்னரே பிளடல்பியாவில் உள்ள நிலையினை ஒருவாறு காட்டினேன். பல்வேறு துறைகளில் பாடப் பிரிவுகள் அமையினும், மாணவர் தாமே முயன்று சம்பாதித்துப் படிப்பதால் சிலர் முயன்று தெளிந்த அறிவு பெறுகிறார்கள் என்றாலும், சிலர் எங்கோ சென்று கொண்டிருக்கிறார்கள் என எண்ண வேண்டியுள்ளது. ஆனால் அதே வேளையில் ஒரு சிலர் - சில நல்ல ஆய்வு அரங்கங்களில் பங்குகொண்டு பயன்பெற்று, சிறக்க வருங்காலத்தில் நாட்டு நலனின் அக்கரை காட்டி உழைக்கிறார்கள் என்பதையும் எண்ண வேண்டியுள்ளது.

இந்திய நாட்டுப் பிள்ளைகளுக்கு, அந் நாட்டு மொழி, கலை, பண்பாடு முதலியவற்றைப் பயில்வதற்கு, இந்நாட்டுக் கல்வி முறையில் இடமின்றேனும் சிலர் தனித்த முறையில் அவற்றைப் போற்றி வளர்க்க - ஆம் - நிறையச் சம்பளம் வாங்கிக்கொண்டாயினும் - முயன்று வாரந்தொறும் வகுப்பு கள் நடத்துகிறார்கள். இந்தியர் வீடுதோறும் கலையரங்கம் உண்டு. இங்கேயும் அத்தகைய கலைப்பள்ளி ஒன்றினை ஒரு வடநாட்டுப் பெண்மணி சிறக்க நடத்துகிறார்கள் என அறிந்தேன். அது விடுமுறை நாட்களில் - சனி ஞாயிறுகளில் நடைபெறுவதால் - நான் நாளை மாலையே 'பிஸ்ட்பர்க்' செல்வ தால் அதைக் காணமுடியவில்லை. பிற இருப்பின் நானை 'பிட்ஸ்பர்க்' எழுதுவேன். மே மாதம் பிறக்கிறது.

பிட்ஸ்பர்க் 1-5-85

இன்று மாலை 5.50 விமானம்; வீட்டில் 4 மணிக்கே புறப்பட வேண்டும். தூரம் பத்து கல்லாயினும் கார் நெருக்கடியில் குறைந்தது ஒரு மணி நேரமாவது ஆகும். எனவே திரு. சதானத்தம் அவர்கள் முன்கூட்டியே 3.30க்கு வருவதாகக் கூறிச் சென்றனர். அவர்தம் துணைவியாரும் மூன்று மணிக்கே வருவதாகக் தம் பள்ளிக்குச் சென்றனர். மற்றவர் மாலை திரும்புவர். காலை முறைப்படி ஓட்ஸ் கஞ்சியும் காப்பியும் அருந்தி எழுதுவன எழுதி முடித்தேன். 'With God All things are passible 'கடவுளுடன் இருந்தால் அனைத்தும் இயலும்' என்ற (Nofotonconnecticut) நூலைப் பயின்றேன். எல்லாக் காலங்களிலும் இறைவன், 'நினைப்பவர் மனம் கோயிலாக்க' கொண்டு வந்து வேண்டிய வேண்டியாங்கு உதவும் அருள் நிலையை அதில் விளக்கியிருந்தனர். அது கிறித்தவ நெறி அடிப்படையில் எழுதியிருந்த போதிலும் நான் மறவாத என் இறையருள் வழியே அதை நோக்கினேன். 'Nothing Is Impossible With God' என்று என் வீட்டு அறையில் மாட்டியிருக்கும் படம் நினைவுக்கு வந்தது. என்றும் யாண்டும் மறவாது 'நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்ற சுந்தரர் வாய்மொழிப்படி அவனை நினைக்கும் யார்க்கும் அவலம் நேராது என்பது துணிபு. என் வாழ்விலும் இதைக் கண்டவன் நான். இதோ இன்று மே முதல் தேதி, ஏப்பிரல் 3ம் தேதி தமிழக மண்ணிலிருந்து புறப்பட்டு ஒரு மாதம் முடியப்போகிறது. 3-4-85 புதன்கிழமை புறப்

பட்டேன்; இன்று 1-5-85 புதன் கிழமை. தனிமையாகப் புறப்பட்ட என்னுடன் நான் செல்லும் நாடுகள் தோறும் - முன்பின் கண்டறியாத கேட்டறியாத ஊர் தோறும், நான் எந்தவித இன்னலும் ஏக்கமும் அடையாதபடி ஆண்டவன் உடனிருந்தே என்னை இயக்கிக்கொண்டு, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வகையில் காண்பவரை எல்லாம் உற்றவராக - கேளிராக - சுற்றமாகக் காட்டி என்னை அணைத்து அழைத்துச் செல்லும் நிலையை எண்ணி அவனடி வணங்கிப் போற்றினேன். மேசைமேல் திரு. சதானந்தம் அவர்கள் பயிலும் இந்த நூலை என் கண்ணில் படவைத்து, படிக்கவைத்து, உணரவைத்து, தான் உடன் இருப்பதைத் தெளியவைத்து, இனியும் என்றென்றும் என் உற்றதுணை வனாய் - தலைவனாய் - அன்பனாய் - அனைத்துமாய் என்னுடன் இருக்கப்போகும் பெருநிலையும் புரிய வைத்து எனை ஆட்கொண்ட அந்த இறைவனை - முருகனை - முழு முதலை நினைந்து நினைந்து போற்றி வணங்கினேன். பொழுது கழிந்து கொண்டே இருந்தது.

இந்த ஊரைவிட்டுக் கிளம்புமுன் திரு சதானந்தம் அவர்கள் குடும்பத்தைப்பற்றியும் ஒரு சில சொல்லத்தான் வேண்டும். அமெரிக்காவில் நான் தங்கிய இடங்களில் திரு. இராதாகிருஷ்ணன், திரு. பெரியசாமி ஆகியோர் செய்யும் தொண்டுகளையும் பொதுநலப்பணிகளையும் அங்கங்கே குறித்துள்ளேன். இங்கே இவர்தம் குடும்பம் - உயர்ந்த அந்தணர் குடும்பம் - வைணவக் குடும்பம், நம் ஊர் போன்றே ஒன்றிய குடும்பமாக இருக்கக்கண்டேன். திரு. சதானந்தம் அவர்கள் நல்ல தன்மையைத் திரு. பெரியசாமி அவர்கள் பால்டிமோரிலே கூறிப் பாராட்டினார்கள். இங்கே வந்த பின் அவர்கள் பாராட்டு எவ்வளவு பொருத்தம் என்பது உணர்ந்தேன். பெற்ற தாய் தந்தையும் உற்ற மனைவியின் பெற்றோர், உடன் பிறந்தார், மனைவியின் உடன் பிறந்தார் அனைவரையும் அணைத்துக் காக்கும் இவர் தன்மை எனக்குப் பழங்காலத்திய நம் நாட்டுக் குடும்ப

வாழ்வை நினைவுறுத்தியது. அவர்தம் பெற்றோர் வயதானவர்கள் - 80க்கு மேல் இருக்கலாம் - வருவதற்கென, அதிக நடமாட்டமும் ஏறி இறங்கும் தொல்லையும் இல்லாமலும் இருக்க, அடித்தளத்தை முற்றும் மாற்றி அனைத்து வசதிகளையும் செய்து வைக்கின்றார். அதற்கென சுமார் 10,000 டாலர் செலவு என எண்ணுகிறேன். அவர்கள் வைதிக நெறியும் வழிபடு முறையும் குறைவுறா வகையில் இறைவழிபாட்டுக் கூடம் முதல், தனியாகச் சமைக்குமிடம், குளியலறை முதலிய எல்லா ஏற்பாடுகளையும் செய்கின்றனர். அவர்தம் மாமன், மாமி இருவரும் தற்போது இங்கே உள்ளனர். மாமனாரும் சிறந்த வக்கீலாக இருந்ததோடு, சமய சாத்திரங்களையும் (விசிட்டாத்வைதி - தென்கலை) நன்கு பயின்று உள்ளனர். நான் இருந்த நான்கு நாட்களிலும் அவர் என்னிடம் பலபல உண்மைகளை விளக்கிப் பேசிய நிலை என்றும் மறக்க முடியாதது. திரு. சதானந்தம் அவர்கள் தந்தையாரும் வடமொழியிலும், தெலுங்கிலும் புலமை பெற்றவர். அவர் பாடிய இருமொழிப் பாடல்களையும் காரில் செல்லும் போதெல்லாம் போட்டுக்காட்டுவர். எனவே மொழி தெரியாவிட்டாலும் அவற்றின் இனிமையும் உணர்வும் நன்கு புரிந்தன. இவரும் சிறந்த சமயத் தொண்டர். எல்லா அறைகளிலும் வேங்கடவர் அலர்மேலு மங்கையின் படம் இருக்கும். காலையில் எழுந்து குளித்த பிறகே 'காப்பி' குடிப்பர். குளித்ததும் இறைமுன் நின்று பாடுவர். பின் காப்பி, உணவு; 7.15மணிக்கு அலுவலகம். இடையில் விடுமுறை நாட்களில் சமயத் தொண்டு, என்னைப் போல் வருவார் போவாருக்கெல்லாம் வழித்துணை. பலசமயத் தலைவர், இசைக் கலைஞர், நடனக் குழுவினர், பிறர் இவர்கள் வீட்டில் வந்து தங்கிய படியே இருப்பார்களாம். சென்ற ஆண்டு சேலம் ஜெயலட்சுமி குழுவும் இங்கே தங்கினர். சின்மயானந்தர் வந்து தங்குவாராம். இடையில் குச்சிப்புடி நடனக் குழுவினர் (17 பேர்) சிலநாள் தங்குவராம். எனவே இந்திய நாட்டிலிருந்து— தெலுங்கு தமிழ் பகுதியிலிருந்து—வருபவருக்குச்

சொந்த வீடு என எண்ணும் இடம் இவருடைய வீடு. என்னை முதலில் காரில் வீட்டிற்கு அழைத்து வந்தவுடன், உள்ளே புகுந்ததும் 'இது உங்கள் வீடு' என்றனர். எனக்குப் பாரதக் கதை நினைவுக்கு வந்தது. கண்ணன் தூது நடந்து அத்தினாபுரம் வந்தபோது ஒவ்வொரு வீடாகக் கண்டு, இது யாருடையது?, இது யாருடையது? என்று கேட்க, ஒவ்வொருவர் பெயர் சொல்ல விதுரன் மனைக்கு வந்தபோது அதே கேள்விக்கு விதுரன் 'இது தங்களுடைய வீடு-கண்ணன் வீடு' என்று கூற, 'அப்படியா; எனக்கும் இங்கே ஒரு வீடு இருக்கிறதா?' என்று கூறி அங்கே தங்கினார் என்பது கதை. கதை இன்று வாழ்வில் கண்ட ஒன்றாகியது. மற்றும் அவர்கள் என்பால் காட்டிய அன்பு 'தலைநாள் போன்ற தனியன்பு'; என்றும் மறக்கக் கூடியதன்று.'

திரு. சதானந்தம் அவர்கள் தம் தம்பியார் ஒருவரையும், மனைவியின் தம்பி, அவர் மனைவி, ஆகியோரையும் உடன் வைத்து ஆதரிக்கின்ற நிலை கண்டு அவர்தம் 'சுற்றம் தழுவும்' திறன் அறிந்து மகிழ்ந்தேன். அவர்களில் பலரும் பணிசெய்யப் பெறுகின்றவர்களாயினும், அவர்களிடமிருந்து செலவுக்கு எந்தத் தொகையும் பெறுமலேயே, தம் செலவிலே அனைவரையும் புரக்கின்றார் என்பதறிந்தேன். இத்தகைய ஒரு நல்ல குடும்பத்துடன் பழகிய தன்மையினை எண்ணிக் கொண்டே, இன்று பிற்பகல் 4 மணிக்கு விடைபெற்றுக் கொண்டு விமான நிலையத்துக்கு, 'பிட்ஸ்பர்க்' செல்வதற்காகப் புறப்பட்டேன். திரு. சதானந்தம் அவர்கள் என்னைத் தம்காரில் விமான நிலையம் அழைத்து வந்து வழியனுப்பினார். அவர்தம் மாமனாரும் உடன் வந்து வழி அனுப்பி வைத்து வாழ்த்து கூறினார்.

பிட்ஸ்பர்க் வந்து விமான நிலையத்தில் இறங்கியதும் திரு. டாக்டர். வள்ளியப்பன் அவர்கள் வந்து காத்திருந்து என்னை அழைத்துச் சென்றார். விமான நிலையத்திலிருந்து அவர் வீடு 40 கல். எனினும் உரிய வேளையில் வந்து அழைத்துச் சென்றமை அவர்தம் அன்பினைக் காட்டுகிறது.

விமான நிலையத்தில் இறங்கியதும் மழை என்னை வர வேற்றது. வழி நெடுகத் தூறல் இருந்தது. பல மலைகளுக் கிடையில்—குன்றுகளில்மேல் இந்நகர் இருந்தது. நம் நாட்டுத் திருப்பதி போன்றே மலைச்சரிவுகள் காட்சி தந்தன. திரு. வள்ளியப்பன் நம் செட்டிநாட்டுக் கோனாப்பட்டியைச் சேர்ந்தவர். இங்குத் தனிப்பட்ட முறையில் மருத்துவராகப் பணியாற்றுகின்றார். இந்த நகரமே இரும்பு நகரம் எனப்பட்டு சென்ற பெரும்போரில் போர்த் தளவாடங்கள் அனைத்தை யும் செய்து தந்ததாம். இங்கும் இடையில் ஒரு பேராறு ஓடு கிறது; கப்பல் போக்குவரத்தும் உண்டு; நிலக்கரி, இரும்பின் மூலப்பொருள்களை அவை ஏற்றி வருகின்றன. இடையில் மலையைக் குடைந்து ஒரு கல்லுக்கு மேலாகச் சாலை அமைத்து, நகரின் இரு பக்கங்களை இணைத்துள்ளனர். காடுகள் இடையிட்ட மரங்களை அரசாங்கத்தார் யாரும் வெட்டாமல் பாதுகாக்கின்றனர். இங்கே விறகு பயன்பட வில்லையாதலால் அதை யாரும் தொடுவது இல்லைபோலும். நகரின் பல தெருக்களையும் அவற்றின் அமைப்புக்களையும் காட்டிக் கொண்டே, அன்பர் வள்ளியப்பன் அவர்கள் மலை களுக்கு நடுவில் அமைந்த அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

அவர்தம் துணைவியாரும் பிள்ளைகளும் அன்புடன் வரவேற்றனர். அவர்தம் மனைவியாரின் பாட்டனார் எனக்கு அரை நூற்றாண்டு முன் அறிமுகமானவர். அவர்கள் நடத்திய 'சிவநேசன்' என்ற இதழில் அப்போது (1931 – 33) நான் சில பாடல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளேன். எல்லாத் தகவல்களையும் நியூயார்க் திரு. மணி அவர்கள் தொலைபேசிவழி இவர்களுக்குச் சொல்லியுள்ளார்கள். அவர்கள் 'ஐயா'வுடன் (பாட்டனாரை 'ஐயா' என அழைத் தல் செட்டி நாட்டு மரபு) பழகிய காரணத்தால் என்னிடம் அவர்கள் மிக அதிகமான அன்பு காட்டி உபசரித்தார்கள். உணவுக்குப் பின் இவ்வூர்க் கல்வியைப் பற்றிக் கேட்டேன். அவர்களே குடும்பமாகவே—ஒரு கல்விச்சாலையில் தொடர்பு

கொண்டுள்ளவர்களென்று கூறி, கல்வி முறைகள் பற்றி விளக்கங்கள் கூறினார்கள்.

நான் முன்னரே குறித்தபடி மத்திய மாநில அரசுகள் கல்விப் பொறுப்பை ஏற்கவில்லை; அந்தந்த ஊர்ச் சபைகளே அப் பொறுப்பை ஏற்று நடத்துகின்றன. பொதுப் பள்ளிகள் (Public School) இவர்கள் வரிப்பணத்தால் நடப்பதால், இவர்களே பள்ளியின் ஆட்சிக் குழுவினை ஆண்டு தோறும் தேர்ந்தெடுப்பர். அக் குழுவின் தலைவர், தலைமை ஆசிரியரையும், பிற ஆசிரியர்களையும் தேர்ந்தெடுப்பர். இவரும் பிறரும் ஒழுங்காகப் பணி செய்யவில்லையானால் அடுத்த ஆண்டில் நீக்கப் பெறுவர். (நம் நாட்டினைப் போல் உரிமை கோரி நீதி மன்றம் செல்லும் நிலை இங்கே கிடையாது.) எனவே ஒவ்வொருவரும் நன்கு தத்தம் கடமைகளைச் செய்கின்றனர். எனவே ஆரம்பக் கல்வி இங்கே சிறந்து நிற்கின்றது.

பெற்றோர் அடிக்கடி ஆசிரியர்களைக் கண்டு தத்தம் குழந்தைகளின் கல்வி வளர்ச்சி பற்றிப் பேச வாய்ப்பு உண்டு. மூன்று திங்களுக்கு ஒருமுறை பெற்றோர் ஆசிரியர் கூட்டம் உண்டாம்; எல்லாப் பெற்றோர்களும் தவறாது வர வேண்டுமாம். ஆசிரியர்களுக்குள்ளே, பள்ளிக்கு ஏற்றபடி பதின்மரோ அன்றிக் குறைவாகவோ, ஒரு தனி மேற்பார்வைக் குழுவினை அமைப்பார்களாம். அவர்களிடம் பள்ளி மாணவர்கள் (ஒவ்வொருவருக்கு சிலவகுப்புகள்—சில பிரிவுகள்)ஒப்படைக்கப் பெறுவர்; அவர்களிடம் பள்ளிக்கு வந்ததும் தம் வரவு கூறி (Attendance) பின் வகுப்பிற்குச் செல்வர். வகுப்பு ஆசிரியர்களும் அப்பிள்ளைகள் பற்றிய எல்லாத் தகவல்களையும் அக் குழு உறுப்பினரிடம் தர, அவர் தேவையாயின் பெற்றோர்களுடன் தொடர்புகொண்டு ஆவன காண்பர். அக் குழுவும் ஆண்டுதொறும் மாற்றி அமைக்கப்பெறுமாம். இவ்வாறு ஆண்டுதொறும் தேர்தல் போன்று அனைவரும் தேர்ந்தெடுக்கப்படுவதால், எல்லோருமே கடமையில் கருத்தாக உள்ளனர். பணி ஏற்கும் ஆசிரியர்களுள் பலரும் 'ஏதோ

வேறு வேலை கிடைக்கவில்லை; அதுவரை இங்கே இருப்போமே' என்று வருவதில்லையாம். உண்மையில் இத் துறையில் உள்ளப் பற்றோடு பணியாற்றுபவரே பலராவர். பாடங்கள் பற்றி முன்னேரே கூறியுள்ளேன். கல்வி - ஆரம்ப கல்வி அந்தந்த நகர நிர்வாகத்தில் - வரி செலுத்தவோர் வழியே அமைந்துள்ளமையின் நன்கு சிறக்க இருக்கின்றது; என்றாலும் மேல்நிலைக் கல்வி (9ம் வகுப்புக்கு மேல்) அவ்வளவு தரமாக அமையாததோடு மாணவர் செயல்முறை யும் சிதறும் வகையில் அமைகின்றது. இவை பற்றிப் பேசிக் கொண்டிருந்து இரவு பத்து மணிக்கு உறங்கச் சென்றேன்.

பிட்ஸ்பர்க் 2-5-85

காலை முறைப்படி கடன்களை முடித்துக் கொண்டேன். காலைச் சிற்றுண்டிக்குப் பின் என்னை வேங்கடவர் திருக் கோயிலுக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினர். திரு. வள்ளி யப்பன் அவர்கள் அவர் பணியின் பொருட்டு காலை 7-30க் குள் புறப்பட்டுச் சென்றார். அவர் தனியாக மருத்துவம் பார்க் கின்ற போதிலும் ஒன்றுக்கு மேலான இடங்களில் நோயாளி களைப் பார்க்க வேண்டி இருந்ததால் ஒவ்வொரு இடத்திலும் குறித்த நேரத்தில் இருக்கக் கடமைப்பட்டவராவர். பிள்ளைகள் மூவரும் பள்ளிக்குச் சென்றனர். மூத்த மகள் கல்லூரி விடுமுறையாதலால் வீட்டிலேயே படித்துக் கொண் டிருந்தனர். பின் திருமதி வள்ளியப்பன் அவர்கள் தம் காரிலேயே காலை 10 மணி அளவில் என்னை வேங்கடவர் கோயிலுக்கு அழைத்துச் சென்று, தாமும் வழிபட்டு, என்னை அங்கேயே இருத்தி, தம் பணி மேற்சென்றனர். மாலை வரையில் வேங்கடவன் திருமுன்பே நான் இருக்க வேண்டிய நிலை எண்ணி மகிழ்ந்தேன். மழையும் விடாது பெய்து கொண்டிருந்தது. உள்ளே கருணை மழை -- வெளியே விண்ணின் மழை.

திருப்பதியைப் போன்றே இத் திருவேங்கடமும் பல மலைகளுக்கு அப்பால், 'பெண்' எனும் குன்றின் மேல் அழகுற அமைக்கப்பெற்றிருக்கிறது. திருப்பதியின் தோற்றத்திற்கு முற்றும் ஒத்தவகையில் வேங்கடவன் நின்ற திருக்கோலத்தில் காட்சி தருகிறான். அம்மை அலர்மேல் மங்கையின் சன்னதி இறைவன் வலப்பக்கத்திலும், ஆண்டாள் சன்னதி இட

பக்கத்திலும் அமைந்துள்ளன. இறைவனுக்கு நேர் எதிரில் கருடாழ்வாரும் அனுமனும் அமைந்துள்ளனர். இடையில் பெரிய மண்டபம், கீழே குளிர் தெரியாதவகையில் திண்ணிய விரிப்புடன் உள்ளது. வெளியே கொடிமரமும் பிறவும் உள்ளன. முகப்பில் விநாயகர் காட்சி தருகின்றார். பின் பக்கம் சொற்பொழிவுகளுக்கும் கலைநிகழ்ச்சிகளுக்கும் ஏற்ற வகையில் அழகிய கலைஅரங்கம் உள்ளது. அடுத்து அட்டிற் சாலையும் பூசிப்பவர் தங்கும் இடமும் உள்ளன. இறைவன் படையல் முடிந்ததும் புளி சாதம், தயிர்ச் சாதம், லட்டு முதலியன அன்பர்களுக்கு தரப்பெறுகின்றன. நடுவில் ஒரு சிறு நூல் நிலையமும் வேறு சிறு அறைகளும் அலுவலக அறைகளும் உள்ளன. வெளியே நீண்ட தாழ்வாரமும் உள்ளது. எனவே எல்லா வசதிகளும் பொருந்திய இத் திருவேங்கடம் அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொள்வதில் வியப்பில்லை.

அமெரிக்க நாட்டு மக்களும் இந்தியரும் சனி, ஞாயிறு, பிற விடுமுறைகளில் கூட்டம் கூட்டமாக வருவராம். இங்கே இறைவனுக்கு ஊஞ்சல், திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தத் தனிக் கட்டணங்கள் உள்ளன. நாடொறும் மூன்று வேளை பூசனை நடைபெறுகின்றது. தமிழ்நாட்டிலிருந்தும் கன்னட நாட்டிலிருந்தும் அந்தணர்கள் பூசைக்கென வந்துள்ளார். கம்பன் பிறந்த தேரழுந்தூரில் பிறந்த ஒருவர் இறைபணியாற்றுகின்றார். அலுவலகத்திலேயே தேங்காய், பழம், கற்பூரம் முதலியன தருகின்றமையின் வருபவர் அவற்றை வெளியே தேட வேண்டியதில்லை. அருச்சனை முதலியவற்றிற்கும் தனிக்கட்டணம் உண்டு. முற்றும் வேங்கடமாகவே இருக்கும் இக் கோயிலுள் என்னை மறந்து இறைவன் முன் அமர்ந்தேன்.

வேங்கடவன் திருமுன் கருடன் சன்னதிக்கருகில் எல்லாச் சந்நிதிகளையும் ஒரு சேரக்காணும் வகையில் சுமார் 11மணி அளவில் உட்கார்ந்தேன். என்னை மறந்து அவனடி நினைந்து உணர்விழந்தேன். பகல் 1மணி அளவில் அங்குள்ள

அன்பர் உண்ண அழைக்கும்போதுதான் வெளிவந்தேன். நெடுந்தூரம் வரிசையில் நின்று உள்ளே சென்றால் ஒரு நொடியும் அவன்முன் நிற்கவைக்காது, 'சருகு, சருகு, சருகு' என்று ஒலி எழுப்பி 'விரைக விரைக' என வெளியனுப்பும் - சில சமயம் தள்ளும் அந்த வேங்கடத்தையும் இங்கே மணிக் கணக்கில் முந்நின்று பாடிப் பரவி மகிழும் வேங்கடத்தையும் நெடிது நினைந்தேன். எந்தவித வேறுபாடும் தோன்றா வகையில் உலகு புரக்கும் உத்தமனும் அன்னையும் ஒருசேரக் காட்சியளிக்கும் நிலையினையும் நினைந்தேன். அங்கே வேங்கடவனைக் கண்டு, கீழிறங்கி சில கல் தாண்டினால் தான் அலர்மேல் அன்னையைக் காண இயலும். இங்கே இருவரையும் இணைத்துக் கண்டு மகிழ்கின்றனர்.

பகல் உணவுக்குப்பின் நான் அருகிருந்த நூல் நிலையத்தில் சென்று சிலவற்றைப் படித்தேன். இந்துக்கள் மட்டுமின்றிச் சில வெள்ளையர்களும் உள் வந்து கண்டு செல்கின்றனர். ஒரு சிலர் வழிபாடும் ஆற்றுகின்றனர். இந்த நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இந்திய மக்களும் பிறரும் இங்கே நாள் தோறும் வந்து கொண்டிருக்கின்றனர். சனி ஞாயிறு இரு நாட்களிலும் நிரம்பக் கூட்டம் இருக்கும் என்றனர். ஞாயிறு தோறும் வேங்கடவனுக்கு அபிடேகம் உண்டு. அங்கே தமிழகத்தில் திருமால் கோயில்களில் பெரும்பாலும் மூலவருக்கும் அபிடேகம் செய்வது இல்லை. பாதத்தில் நீர் வார்த்து வழிபடுவர். அபிடேகமெல்லாம் உலாப்போகும் உற்சவ மூர்த்திக்கே. ஆனால் இங்கே வேங்கடவனுக்கே (மூலவர்) ஞாயிறுதோறும் காலை 11மணி அளவில் எல்லா வகையான அபிடேகங்களும் நடைபெறும் என்றனர். அப்படியே ஒவ்வொரு சனிக்கிழமையும் ஒவ்வொரு மூர்த்திக்கும் தனி அபிடேகம் உண்டாம்.

தெளிந்த உளத்தோடு, தெய்வ அருள்பெற்ற நிறை வோடு, மாலை திரு. வள்ளியப்பருடன் வீடு திரும்பினேன். வீட்டிற்குச் சுவரெல்லாம் வெறும் மரத்தினால் இருப்பதற்கு இதுவரை யாரும் காரணம் கூறவில்லை. (ஒரு வேளை கல்

சிமிட்டி இராது; மரம் அதிகம் உண்டு. அல்லது இதுதான் முறை என்றனர் சிலர்). ஆனால் திரு. வள்ளியப்பன் அவர்கள் தக்க காரணம் கூறினர். மரத்தால் சட்டமிட்டு, இடையில் 4 அல்லது 5 அங்குல இடைவெளியிட்டு, அதில் பஞ்சு - அதன் சார்புடைப் பொருள்கள் இட்டு, இருபக்கமும் ஒட்டுப் பலகையால் மூடிச் சுவர் அமைப்பர். அப்படி அமைப்பதால் புறத்தில் உள்ள குளிர் அவ்வளவாக உள்ளே புகுவதில்லை; எனவே குளிர்காலத்தில் அகத்தைச் சூடாக வைத்திருக்கவே இந்த ஏற்பாடு என்றனர். மிகப்பொருத்தமாக இருந்தது. மேலும் இங்கே நடைபெறும் பல தனியார் பாடவகுப்புகள் பற்றிப் பேசிக்கொண்டிருந்து, இரவு பத்துமணி அளவில் படுக்கச் சென்றேன்.

பிட்ஸ்பர்க் 3-5-85

ஊரிலிருந்து புறப்பட்டுச் சரியாக ஒரு மாதம் கழிந்து விட்டது. கண்ட இடங்கள் பல; உதவிய அன்பர் அநேகர். அங்கே வள்ளியம்மாள் பள்ளியில் 3-4-85ல் அனைவரும் விடை தந்து அனுப்ப, கடந்த ஒருமாதம் ஐரோப்பிய நாடு கண்டு, அமெரிக்காவிலும் பலவிடங்கள் கண்டு இன்று 3-5-85ல் வள்ளியப்பர் இல்லத்தில் - பிட்ஸ்பர்க்-வேங்கடவன் வாழிடத்தில் இருப்பதை எண்ணினேன். இன்று வானம் தெளிவுற்றிருந்தது; கதிரவன் கிரணங்களைக் காலையி லேயே பரப்பி மேலேறினார். நான் இந்த ஊர் எல்லையைத் தொடுமுன் தொடங்கிய மழை நேற்று முழுதும் விடாது பெய்துகொண்டிருந்தது. நம் ஊரில் சில ஆண்டுகளில் ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் விடாது பெய்யும் நிலையில் அது இருந்தது. ஆறு, வழிநடைக் கால்வாய்கள், பிற அனைத்திலும் வெள்ளம் புரண்டோடிற்று. இது மலைப் பகுதியாக இருந்தமையால் அதிகமான நீர்த்தேக்கம் எங்கும் இல்லை. நான் தொடர்ந்து இருப்பின் என் செய்வதென எண்ணினேன். எனினும், நேற்றே திரு. வள்ளியப்பன் அவர் கள் இந்த் நாட்டில் இப்படித்தான் இருநாள் மழை, இருநாள் வெய்யில் இருக்கும்; நாளை மறுநாள் நல்ல சூரிய ஒளி இருக்கும் என வானிலையாளர் கூறினர் எனச் சொன்னார்.

காலை எழுந்தவுடன் கடன்களை முடித்துக்கொண்டு எனது இந்த மாத நிகழ்ச்சிகளில் சில மாற்றங்களைச் செய்து கொண்டேன். இரண்டு நாட்கள் சிகாகோவிற்கு முன்பாகச்

சென்றால் பயன் விளையும் என எண்ணினேன். 16-5-85ல் செல்ல இருந்ததை 14-5-85 என மாற்றி, அங்கங்கே செல்ல வேண்டிய வான்வழிப் பயணங்களையும் திருத்திக்கொண் டேன். எனவே நான் இங்கிருந்து திங்கள் (6-5-85) காலை புறப்படுவதற்குப் பதிலாக, ஞாயிறு (5-5-85) காலையே புறப்படத் திட்டமிட்டு அதற்கெனப் பயணச் சீட்டினையும் பதிவு செய்து கொண்டேன்.

இன்று எதிர்பாராத வகையில் குளிர் இருந்தது. 40 (40) வரையில் அளவு குறைந்தது. நான் புனாவிலும் நம் நாட்டில் உதகை, ஏர்க்காடு, ஸ்ரீநகர், கோடைக்கானல் முதலிய இடங்களிலும் 5 அல்லது 6 வரை தங்கியிருக்கிறேன். இரவுகளில் அங்கே நன்கு போர்த்தித் தூங்குவதால் மிகக் குளிரும் தெரிவதில்லை. இங்கே பகலில் இந்த குறைந்த நிலையிருந்ததால், மிகக் குளிர்ந்த தன்மையை உணர்ந்தேன். வெளியில் எங்கும் செல்லவில்லை. உடல்நலம் காக்கக் கடமைப்பட்டவனாதலால் - நெடுந்தொலைவில் இங்கிருந்து கொண்டு இன்னும் ஒரு மாதம் செயல்பெற வேண்டியவ னாதலால் - ஓய்வாகவே இருந்தேன். நாளிதழை நன்கு படித்தேன். நாளிதழ்களில் இந்த அமெரிக்க (U. S.) எல்லைப் பகுதி அத்தனை இடங்களிலும் உள்ள பருவநிலை களைப்பற்றி நல்ல விளக்கம், வண்ணப் படங்களுடன் வெளியிட்டிருந்தனர். அத்துடன் நாளை, மறுநாள் (இருநாளைக்கும்) இருக்கப்போகும் நி லை யி னை யும் தெளிவாகக் குறித்திருந்தனர். தட்பவெப்பநிலை, மழை, தூரல், வெய்யில், கோடை முதலியனவும் இடம்தொறும் குறிக்கப் பெற்றிருந்தன. இந்த நாட்டு இதழ்கள்பற்றி எண்ணும்போது அவை வெளியிடும் பலவகை நிலைகளை எண்ணத் தோன்றுகிறது. ஏறக்குறைய நம் இந்துப் பத்திரிகை அளவில் சுமார் நூறு பக்கங்களுக்குக் குறையாமல் அவை வருகின்றன. நாளிதழ் ஒவ்வொன்றும் தனித்தனித் தொகுப்பாக Newsline, Business, Sports, Moneyline, Lifeline என்பப் பலவகையில் பிரிந்து, ஒவ்வொன்றும் பத்து

முதல் இருபது பக்கம் அளவையில் அமைத்து வெளியிடு கிறார்கள். நம் நாட்டு நிறுத்தல் அளவில் சுமார் அரை கிலோ இருக்கலாம். விலை 30, 35, 40 செண்ட் எனப் பல வகையில் உள்ளன. அதாவது ரூ. 3.50, 4, 5 ரூபாய்வரையாகும். ஆயினும் அதுபற்றி யாரும் கவலைப்படுவதில்லை. மற்றும் நம் ஊர் போல இந்தப் படித்த பத்திரிகைகளை கிலோ ரூ. 3/-என விற்கவும் முடியாது; எதையும் (பழையன) யாரும் வாங்குவது இல்லை. இத்தனைப் பத்திரிகைகளை யும் குப்பையில்தான் போடவேண்டும். அவர்கள் கூட்டிப் போய்விடுவார்கள். இதை மட்டுமன்றி வீட்டில் பயன் படுத்தும் அனைத்தையுமே தூக்கி எறிய வேண்டியதே. பால் 5 லிட்டர் ($\frac{1}{2}$ காலன், 1 காலன்) என நல்ல அழகான பிளாஸ்டிக் பெட்டிகளில் நல்ல மூடிகளுடன் வாங்குவர். பால் தீர்ந்ததும் அவற்றையும் குப்பையில் போட வேண்டுவதே. நம் ஊரில் அப் பெட்டி ஒன்று 5 அல்லது 6, 7 ரூபாய் விற்கும். அப்படியே சாப்பிடும் பிளாஸ்டிக் தட்டு, நீர் குடிக்கும் பிளாஸ்டிக் அல்லது காகித டம்ளர் இவை அனைத்தும் வீசி விலக்கப்பட வேண்டியவையே. அதற்கென வீடுதொறும் தெருவில் பெரிய மூடியுடன் கூடிய பெட்டிகள் இருக்கும். அவற்றில் இக் குப்பைகளைக் கொட்டி மூடிவிட வேண்டும். நகர அலுவலர் லாரிகளில் வாரத்துக்கு ஒருமுறை அல்லது இருமுறை அவற்றை அப்புறப்படுத்துவர். எனவே இங்கே எதையும் இரண்டாவது திருப்பி விற்பதோ வாங்குவதோ கிடையாது. நம் தெருவில் கேட்கும் பழைய பாட்டல் வாங்குவது, டப்பி வாங்குவது, இரும்பு சாமான் வாங்குவது போன்ற ஒலியே கேட்க முடியாது.

எல்லா வீட்டு வேலைகளையும் நாமே செய்யவேண்டிய நிலைபற்றி மேலே சொல்லியுள்ளேன். கடையில் சாமான்கள் எடுத்துவந்து விலையிட்டு வாங்குதல் முதல், பெட்ரோல் பங்கில் உரிய குழாயை எடுத்து நாமே அதைப் பிடித்து உரிய தொகை கட்டிவருவது முதல் வீட்டில் உணவு சமைப்பது,

துப்புரவு செய்வது ஆகிய செயல்கள், அவற்றை அப்புறப் படுத்துவதுவரை நாமே செய்யவேண்டும். இது சிக்கனம் என்பதல்ல. ஆள் கிடைக்காததே. ஓட்டலில் நாமே பலகாரங்கள் காப்பி எடுத்து உண்டால் தரவேண்டியது 2 டாலராக இருந்தால், நாற்காலியில் இருந்துகொண்டு அதே பொருளைக் கொண்டு வரச்செய்து உண்டால் 5 டாலராக உயரும். 'கார்களுக்கு எரிபொருளும் நாமே போட்டுக்கொண்டால் 2 டாலரானால் அவர்களே போட்டால் 3 அல்லது 4 டாலராகும். அதிலும் பல இடங் களில் ஆளும் கிடையாது. 'Self Service' என்ற பலகையே தொங்கும். என்னைப் போன்ற முழுச் சோம்பேறிகளுக்கு இது கடினமாயினும் இங்கே பிறந்தவரும் வந்து வாழ்பவரும் தத்தம் வீட்டுக்குரிய எல்லாப் பணிகளையும் தாங்களே செய்து கொள்வதில் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைவதைக் கண்டேன்.

நான் ஒருநாள் முன்னரே புறப்படுவதால் இன்று பிற்பகல் 2-30க்கு மறுபடியும் வேங்கடவன் கோயில் செல்கின்றேன். இங்கே வேறு முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்கள் இல்லையாதலாலும் சில பெருந் தெருக்களையும் அவற்றில் அமைந்த கட்டடங்களையும் முன்னரே கண்டேனாதலாலும் குளிர் அதிகமாக இருந்த தாலும் நான் அதிகம் வெளியே செல்லவில்லை. இங்கே ஓடும் ஆற்றினுக்கும் பெரும் கால்வாய்களுக்கும் கீழ் அடித் தளம் இல்லாவகையில் மேலே அதன் பளுமாற்றும் வகையில் (நம் கல்கத்தா 'ஹவுரா' பாலம் போல) கட்டியுள்ளமை கண்டு மகிழத்தக்கது. அண்மையில் கட்டிய சில பாலங்கள் புதுமுறையிலும் அமைகின்றன. பல தொழிற்சாலைகள் இரும்புத் தொழிற்சாலைகள் - போர்க்கருவிச் சாலைகள் இருந்தும் அவற்றைக் காண இசைவு பெறுவது கடினம் என்றனர்.

இந்நகரம் அளவில் சிறியதாயினும் பலப்பல முக்கிய தொழிற்சாலைகளின் நிலைக்களனாக அமைகின்றது

நிலக்கரி அதிகமாக உள்ளமையின் இரும்புத் தொழிற்சாலைகள் - உருக்கு, தளவாடங்கள், போர்க்கருவிகள் முதலியன செய்யும் தொழிற்சாலைகள் இங்கே அதிகமாக உள்ளன என முன்னரே சுட்டியுள்ளேன். அவற்றின் உள்புகுந்து ஒவ்வொன்றையும் நுணுகி ஆராயும் திறன் எனக்கு இல்லையாதலாலும் நேற்றெல்லாம் மழையாகவும் இன்று மிக குளிராகவும் உள்ளமையாலும் அவற்றைச் சென்று உட்புகுந்து காணமுடியவில்லை. எனினும் காரிலேயே இருந்து அவை இயங்கும் இடங்கள், சுற்றுச்சார்புகள், செயல்முறைகள் முதலியனபற்றி ஒருவாறு அறிந்தேன். இங்கே கண்ணாடித் தொழிற்சாலைகளை - நாட்டில் மட்டுமன்றி உலகில் இயங்கும் சாதாரணக் கண்ணாடி முதல் உயர்ந்த தொலைநோக்குக் கண்ணாடி (lence) வரையில் செய்யும் தொழிற்சாலைகளை இயக்கும் அலுவலகங்களும் நுண் ஆய்வு கண்டு பல புதிய புகுத்த முயலும் ஆய்வுக் களங்களும் உள்ளன. மேலும் 'ராக்கெட்' என்னும் விண்வெளிக் கப்பல்கள் போன்ற அனைத்தையும் செய்ய உதவும் அலுவலகமும் இங்கேயே உள்ளது. எலெக்ட்ரானிக் சம்பந்தமான பல தொழிற்சாலைகள் - நம் சதுரங்கப்பட்டினத்து அருகிலிருக்கும் கல்பாக்கம் நிறுவனத்தைக் காட்டிலும் நூறு மடங்குக்கும் மேற்பட்ட நுண் தொழிற் சாலைகளும் இங்கே உள்ளன. இவை அனைத்தும் தனியார் நிறுவனங்களே; அரசுக்குத் தேவையானவற்றை உடனுக்குடன் தவறாது செய்து தருகின்றன. அரசு வேறு தாம் வேறு என்ற உணர்வு இவர்களுக்கு என்றும் இருந்ததில்லை. 'இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன? நாம் வாழ்ந்தால் போதும்' என்று ஆளுபவரைக் கைகட்டிப் போற்றும் வழக்கமும் இங்கில்லை. யார் ஆண்டாலும் நாடு நம்மது என்ற உணர்வில் அனைவரும் செயலாற்றுகின்றமையின், நாட்டில் எந்தக் கட்சி ஆட்சியிலிருப்பினும், நாட்டின் தேவையை அறிந்து ஒவ்வொருவரும் தொழிற்படுகின்றனர். எனவே பல தனியார் நிறுவனங்கள் தழைக்கின்றன. அஞ்சல்துறை ஒன்றைத்தவிர, தொலைபேசி, விமானம்,

போக்குவரத்து, தனிப்போக்குவரத்தாகிய இரெயில் முதலிய அனைத்தும் தனியார் கையில் உள்ளமையின் நாட்டுத் தொழில்வளம் நன்கு சிறக்கிறது. அப்படியே நூல்களைப் பலர் அச்சிடுவதால் பள்ளிகளில் நல்லன தேர்ந்தெடுத்துப் பிள்ளைகளுக்கு அறிவூட்டும் நிலையும் அமைகின்றது. இத்தகைய பல்வகைத் தொழில்வளம் அமைந்த நகரின் நடுவில் பேராறும் வற்றாது - கப்பல் செல்லும் வகையில் ஓடுகின்றமையின் மூலப்பொருள்களும் எளிதில் வந்து சேருகின்றன. ரெயில்களும் கொண்டு வருகின்றன. ஒரு ரெயில் சுமார் 60 (அ) 70 பெட்டிகளில் நிலக்கரி தாங்கி நகர முடியாது நகர்ந்து - ஊர்ந்து செல்லும் காட்சியினைக் கண்டேன். இத்தகைய தொழிற்சாலைகளில் நம் நாட்டவர், தமிழர், தெலுங்கர், கன்னடத்தார் பலர் இடம்பெற்று நல்ல பதவிகளில் உள்ளனர்.

இந்தத் தொழிற்சாலைகளையெல்லாம் கண்டுகொண்டு மெல்ல மாலை 6-30 மணிக்கு வேங்கடவன் கோயிலை அடைந்தேன். வானத்தில் நேற்று குமுறிக்கொண்டிருந்த மேகத்தின் சாயல் துளியும் இல்லை. ஒருபுறம் சந்திரன் - குன்றுகளுக்கிடையில் கோவர்த்தனனாகிய திருமால் கோயில் வெளியிலிருந்து நாற்புறமும் சுற்றி நோக்கினேன். குளிர் சற்றே அதிகமாக இருந்தபோதிலும், அந்த இயற்கைச் சூழல் என்னை மறக்க வைத்தது. திருப்பதியை ஒட்டிய அத்திருமாலின் உருவம் - தோற்றம் - வண்ணம் இதுதான் என உணர்த்தி நின்றது. மெல்ல 7 மணிக்குக் கோயிலுள் புகுந்தேன்.

இன்று 'நரசிம்ம ஜயந்தி'. எனவே சிறப்பு விழா இருந்தது. இறைவனையும் அம்மையையும் ஊஞ்சலில் அமர்த்தி, பக்கத்தில் நரசிங்கப்பெருமானையும் இருத்தி வழிபாடாற்றினர். முறையான பூசையினை அமைதியாக இருவர் செய்து முடித்தனர். மந்திரங்கள் முறையாகத் தவறு இன்றிச் சொல்லப் பெற்றன. இறுதியில் நம்மாழ்வார் திருப்பதிகம் ஒன்றையும் (பத்துப்பாடல்களும்)

பெரியாழ்வார் பல்லாண்டினையும் பாடி முடித்தனர். நம் நாட்டில்கூடக் கேட்டறியாத - கண்டறியாத காட்சியும் பாட்டும் என்னை உருக்கின. தமிழ்நாட்டில் இறைவனைத் தமிழில் பாடித் துதிக்கும் பட்டர் உளரா? தமிழ் காக்கும் அரசாங்கம் வற்புறுத்துகிறதா? இங்கே வெள்ளையர் ஆட்சியில் நம்மாழ்வார் நடமிடுகிறார்; ஆண்டாள் சன்னதி அழகுற உள்ளது; பெரியாழ்வார் வாய் திறந்து பாடுகிறார். இது வியப்பல்லவா! அத்துடன் ஒரு வெள்ளையர் குடும்பம் பூசைக்கு முன் வந்து முடியுமட்டும் இருந்து, வணங்கி, அருச்சனை செய்து, பிரசாதமும் பெற்றுச் சென்றனர். நாளை அவர்கள் செலவில் கோயிலில் ஓமம் உண்டாம். அவர்களைப் பூஜனை முடிந்தபின் கண்டு பேசினேன். பதினைந்து ஆண்டுகளாக அவர்கள் (அந்த அம்மையார் புடவை அணிந்திருந்தார்) இந்துக்களாக உள்ளனர் என்றும் அவ்வாறு இன்னும் பலர் இந்த நாட்டில் உள்ளனர் என்றும் அறிந்தேன்; மகிழ்ந்தேன். சுமார் 50 பேருக்கு மேல் அந்த மலை உச்சியில் குளிரையும் பொருட்படுத்தாது குழந்தைகளுடன் குடும்பம் குடும்பமாக வந்து வழிபட்ட காட்சி சிறந்தது. அனைவருக்கும் எல்லாவகையான நிவேதனங்களும் (ஆறுவகை) வழங்கப்பெற்றன. பத்துமணிக்கு வீடு வந்து, கழிந்த ஒரு திங்களையும் வேங்கடவனையும் நினைந்து எதிர்காலத்தும் அவனருள் இயைவது உணர்ந்து உறங்கினேன்.

பிட்ஸ்பர்க் 4-5-85

இன்று காலையில் முறைப்படி எல்லாக் கடன்களையும் முடித்துக்கொண்டேன். இன்று சித்திரை நிறைமதி நாளல்லவா! தமிழ் நாடெங்கும் விழாக்கோலம் பூண்டிருக்கும். மதுரைச் சொக்கர் மணவழகராகக் காட்சி தருவரன்றோ! கழுக்குன்றம் போன்ற இடங்களில் பெரு விழா அல்லவா! இங்கும் இன்று பெருவிழா திருக்கோயிலில் நடைபெறவுள்ளது. நான் மாலை சென்று வழிபட வுள்ளேன். இடையில் கூடுமாயின் வேறு சில இடங்களைக் காண நினைக்கிறேன். இன்றும் கதிரொளி நன்கு வீசுகிறது. இன்று நியூயார்க்கிலிருந்து நியூயார்க் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. மணி அவர்கள் அவர்தம் நண்பர் ஒருவருடன் இங்கே வர இருக்கின்றார். எனவே திரு. வள்ளியப்பன் அவர்கள் விமான நிலையத்துக்குக் காரொடு சென்றார். நான் காலைக்கடன்களை முடித்து நாளிதழ்களைப் படித்து, சற்றே ஓய்வு கொண்டிருந்தேன். அவர்கள் 10மணி அளவில் வந்து சேர்ந்தனர். பல்வேறு பொருள்களைப்பற்றி - இன்றைய இந்திய அமெரிக்க வாழ்க்கை முறை, தமிழகத் தெய்வநெறி, வரலாறு போன்றவைகளைப்பற்றி அனைவரும் அமர்ந்து நெடிது பேசிக் கொண்டிருந்தோம். பகலில் சிறிது ஓய்வுக்குப் பிறகு, இன்று சித்திரா பௌர்ணமியாதலால், சத்தியநாராயண பூசை கோயிலில் உண்டாம். அதில் வள்ளியப்பன் மாதந்தொறும் குடும்பத்துடன் பங்கு கொள் வாராம். எனவே இன்று மாலை கோயில் செல்ல முடிவு செய்தோம். சத்தியநாராயண பூசை தமிழ் நாட்டில்

வழக்கத்தில் இலாதது. வடநாட்டில் பலரும் மேற் கொள்ளுவது. இங்கே வடநாட்டவரும் கன்னட நாட்ட வரும் அதிகமாக வருவதால் நிறைமதிதோறும் இக் கோயிலில் அந்த வழிபாடு நடைபெறுகிறதாம். நாங்கள் கோயிலுக்கு ஏழு மணி அளவில் சென்று சேர்ந்தோம்.

வழியில் உள்ள பல தொழிற்சாலைகளைப் பற்றிப் பழநியப்பன் அவர்கள் விளக்கிக் கொண்டே வந்தனர். கண்ணாடித்தொழிற்சாலை, இரும்புத்தொழிற்சாலை இவை இயங்கும் நிலைபற்றியும் பிற முறைகள் பற்றியும் கூறிக் கொண்டே வந்தனர். கோயிலுக்கு 25 ஏக்கர் நிலம் ஒதுக்கப் பெற்றதெனவும் மேலும் பல விரிவாக்கத் திட்டங் கள் உள்ளன எனவும் அறிந்தேன். இத் திருக்கோயில் கட்டிய பணியில் இவருக்கே பெரும் பங்கு உண்டு என்பதைக் கோயிலில் அறிந்தேன். கோயில் வெளியில் நின்று இயற்கைக் காட்சிகளைத் துய்த்து, பிறகு உள் சென்றேன்.

சரியாக ஏழுமணிக்குப் பூசை தொடங்கியது. அதில் பங்கு கொள்வோர் 35 டாலர் கட்டவேண்டுமாம். எத்தனை பேர் வேண்டுமானாலும் கட்டிப் பங்கு கொள்ளலாமாம். இன்று பதினைந்து பேரளவில் பங்கு கொண்டிருப்பர். பெரும்பாலும் குடும்பம் குடும்பமாக இருந்தனர். இளங் குழந்தை தொட்டிலுடனும் ஒரு குடும்பம் இருந்தது. அனைவரும் அன்புடன் பக்தி கலந்த நிலையில் பூசையில் பங்கு கொண்டனர். சிறு விக்கிரகத்துக்கு அபிடேகம். பின் அதற்கும் பெரிய படத்துக்கும் ஆராதனை. அனைத்தும் முடிய 8.30 ஆயிற்று. இங்கே, தாம் தம் வீட்டில் செய்து வந்த இனிப்புப் பலகாரங்களை இறைவனுக்குப் படைத்து அனைவருக்கும் வழங்குகின்றனர். மேலும் 'தூப தீப' ஆராதனை அனைவரும் தத்தம் கைகளாலேயே (கணவன் மனைவியர் இணைந்து பிடித்துக் கொண்டு) செய்கின்றனர். ஆடவர் கால் உறையுடன் காணப்படினும் பெண்கள் நம் நாட்டுமுறைப்படி புடவை கட்டியே வழிபாடாற்றுகின்றனர். (காஞ்சிபுரம் புடைவையும் இரண்டொன்று காணப்பட்டது)

இறைவனுக்குத் திங்கள் தொறும் பல விலை உயர்ந்த புடவைகள் காணிக்கையாக வரும் எனவும் அவற்றில் தேவைபோக மற்றவற்றை இரண்டாண்டுக்கு ஒரு முறை 'ஏலத்'தில் விற்பார்களென்றும் நல்ல விலைக்குப் போகும் என்றும் சொன்னார்கள்.

பூசைமுடியும் தருவாயில் நான் ஒதுங்கி நின்றேன். பக்கத்தில் ஒரு அன்பர் (K.S. வெங்கடராமன் Ph.D.) இங்கே பொறியாளராகப் பணியாற்றுகின்றவர். (Engineer, Alumia Chemicals & Ceramic Division, Acco Laboratories Pensilvania- 15069) 'நீங்கள் சென்னை அண்ணாநகர் வள்ளியம்மாள் பள்ளியைச் சேர்ந்தவர்தானே' என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. 'ஆம்' என்றேன். '1977-78ல் நான் அண்ணாநகரில் குடியிருந்தபோது, பல முறை அந்தப் பள்ளி வழியே (என் வீடு பக்கத்தில் இருந்ததால்) சென்றிருக்கிறேன். நீங்கள் அங்கேயே இருந்து கட்டடங்கள் கட்டுவதை மேற்பார்வையிட்டதைக் கண்டுள்ளேன். 'பாவம்! இப்படி உழைக்கிறாரே' என்று நினைத்ததுண்டு. ஆயினும் அப்போது எனக்கு ஒன்றும் உதவ முடியவில்லை. இன்று இங்கே பொறியாளராகப் பணியாற்றுகின்றேன். என் காணிக்கையாகப் பள்ளிக்கு நான் தரும் நன்கொடையைப் பெற்றுக்கொள்ளுங்கள். உங்கள் பெரும் கட்டடத்தில் இது ஒரு செங்கல்லாக இருக்கட்டும் என்று 201 டாலருக்கு (சுமார் 2500 ரூபாய்) ஒரு செக் எழுதி இறைவன் முன்னே தந்தார். நான் என்னை மறந்தேன். சென்னையிலே என்னிடம் நேரில் பேசி அறியாத அன்பர் - இங்கே அமெரிக்காவில் - பிட்ஸ்பர்கில் - வேங்கடவன் முன் நின்று இப்படித் தாமே வலிய வந்து உதவுகிறாரே என எண்ணி அவரை வணங்கிப் போற்றினேன். அவர்தம் பெயரில் நிரந்தரமாக வங்கியில் இட்டு வரும் வட்டியினை ஏழை மாணவனுக்குச் சம்பளமாகப் பயன்படுத்தச் சொன்னார். இன்னும் ஆண்டுதொறும் இயலுவதை அனுப்புவதாகவும் கூறினார். அவர் அண்ணார் அங்கே இருப்பதாகவும் கூறினார். நான் அனைத்தையும்

செய்து, ஊர் சென்றதும் அண்ணாவையும் கண்டு, பிறகு இவருக்கும் கடிதம் எழுதுவதாகச் சொன்னேன். உடனிருந்த அவர்தம் துணைவியாரும் இப்பணியில் ஆர்வம் காட்டினார். எங்கோ, எதற்கோ வந்த விடத்தில், இறைவன் திருமுன்பு, இந்த வகையில் வள்ளியம்மாள் கல்வி அறத்துக்கு வளம் சேரும் நிலையினை எண்ணி நெடிது நின்றேன். அன்பர் குடும்பத்துடன் விடைபெற்றுச்சென்றார். (திரு. வள்ளிப்பன் அவர்களுக்கும் அறிமுகப்படுத்தினேன்.) பிறகு என்னைப் பிரியாது உடனுறையும் இறைவன் அருட்பெருக்கையும் என்னைப் பணியில் ஆட்கொண்டருளும் பொருட்கருணையையும் எண்ணி, அருட் பெரும் செல்வனாகிய வேங்கடவன், பத்மாவதி (அலர்மேல்மங்கை) ஆகியோரிடம் பிரியா விடை பெற்றுக்கொண்டு நான் திரும்பினேன்; நாளை 'பாஸ்டன்' செல்கிறேன். இறை உணர்வோடு இரவு 11மணி அளவில் உறங்கச் சென்றேன்.

பாஸ்டன் 5-5-85

இன்று விடியற்காலை எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு 6.30க்குப் பயணத்துக்குத் தயாரானேன். திரு. பழநியப்பன் அவர்களும் காலையிலே எழுந்து, எனக்கெனக் காலைச் சிற்றுண்டி (இட்லி) காப்பி முதலியன தயார் செய்யச்சொல்லி, தந்து உதவினர். அவர்தம் துணைவி யாரும் உடனிருந்து உதவி வழியனுப்பி வைத்தனர். 6.50க்குப் புறப்பட்டோம். கிட்டத்தட்ட 40கல் தொலைவு விமான நிலையம் செல்லவேண்டும். திரு. வள்ளியப்பன் அவர்கள் வண்டி எடுத்துக்கொண்டு உடன் வந்தார்கள். (இந்த ஊரில் எதற்கும் ஆள் இல்லாமை போன்றே கார் ஓட்டுநரும் கிடைக்க மாட்டார்கள்) இவர்கள் வீட்டில் மூன்று கார்கள் இருப்பினும் (ஒவ்வொருவர் வீட்டிலும் குறைந்தது 2 அ 3 கார் இருக்கும் கார் இல்லையானால் இந்த ஊரில் ஒன்றும் செய்ய இயலாது) ஒன்றுக்கும் ஓட்டுநர் இல்லை. எனவே அவர் களே வந்து விமான நிலையத்தில் உடனிருந்து 'டிக்கெட்' எடுத்து உள்ளே செல்லும் வரையில் உதவிப் புறப்பட்டனர். அவருக்கு இன்று வேறு பணிகள் இருப்பினும் எனக்கு உதவு வதையே தலையாகக் கொண்டார்கள்.

விமானம் சரியாக 8-30க்குப் புறப்பட்டது. 10 மணிக்குச் சரியாகப் பாஸ்டன் விமானநிலையத்தில் இறங்கியது. விமானத்திலிருந்து வெளியே வந்ததும் அருளுடை பவுத்ராஜி அவர்தம் தமையனார் திரு. கோபால் சர்மா அவர்கள் தம் மைந்தருடன் (அஸ்வின்) காத்திருந்து என்னைக் கண்டு

கொண்டனர். என் பெட்டிகளை எடுத்துக் கொண்டு அவர்களுடன் காரில் அவர்தம் இல்லம் சென்றோம். இருவரும் நல்ல தமிழில் பேசினர். திரு. கோபால் சர்மா அவர்கள் சென்னையில் பயின்றவர். கிறித்தவ உயர்நிலைப்பள்ளி, கல்லூரியில் பயின்று முதல்நிலையில் சிறக்கத் தேர்ச்சி பெற்றவர். அதே போல் தற்போது அவர்தம் மகனாரும் (9வது பயில்கிறார்) முதல் நிலையில் இடம் பெறுகிறாராம். அவர்கள் பாஸ்டன் நகரைப்பற்றியும், அதன் அமைப்பு வளர்ச்சி முதலியன பற்றியும் கூறிக்கொண்டே 30கல் தொலைவிலுள்ள தம் வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அவர்தம் வீட்டிற்குச் 'சின்மையா' என்றே பெயரிட்டிருந்தனர். வீட்டில் அவர் தாய் தந்தையர் இருவரும் இருந்தனர்; என்னை அன்போடு வரவேற்றனர். அவர் தம் அன்னையாருக்கு என் வயது (1914லில் பிறந்தவர்) தந்தையார் மூத்தவர். எனினும் அனைத்து வேலைகளையும் செய்கிறதோடு, சமய ஆராய்ச்சிகளிலும் கலந்து கொண்டு மகிழ்கின்றனர். அவர்களும் அவர்தம் மக்கள் மூவரும் சின்மயானந்தர் அவர்கள் வழி, தீக்கை பெற்றுத் தொண்டு செய்கின்றவர் என அறிந்தேன். அவர்தம் குடும்பம் முற்றுமே சின்மையா திருமடத்தின் தொண்டாற்றும் நிலை அறிந்தேன். திரு. சர்மாவின் மகனாரும் இங்கே உள்ள தற்கால மாணவர் போன்று இன்றி, தெய்வபக்தி சான்றவராக இருந்ததை கண்டேன். நம் நாட்டிலிருந்து வந்துள்ளவர் தம் பிள்ளைகள் நம் மரபு நெறி மாறி மாற்று வழியில் செல்வதால் ஊர் திரும்புவோமோ என எண்ணும் பல குடும்பங்களை கண்ட எனக்கு இவர்தம் குடும்பம் நம் பண்பாட்டில் நிலைத்துள்ளமை மகிழ்வைத் தந்தது. பெரும்பாலும் நான் தங்கிய வீடுகள் இதே நிலையில்-நம் மரபு காக்கும் நிலையில் உள்ளமை எண்ணி மகிழ்ந்தேன்.

வீட்டில் எல்லாப் பக்கங்களையும் காட்டினர். எங்கும் தெய்வமணம் கமழ்ந்தது. பகல் உணவுக்குப் பிறகு சிறிது ஓய்வு கொண்டோம். அதற்குள் வெளியே (இன்று ஞாயிறு)

காலை வகுப்பு நடத்தச் சென்றிருந்த திரு. பவுத்ராஜி அவர்கள் வந்து, உணவில் எங்களுடன் கலந்துகொண்டனர். பின் 2 மணி அளவில் அனைவரும் (அவர்கள் அன்னையாருடன்) ஒரு நூல் நிலையம் சென்றோம். அங்கே கீழ் உள்ள தனிமையான—அமைதியான அறையில் வேறு சில அன்பர்களும் இருந்தனர். அங்கே உபநிடத வகுப்பு நடைபெற்றது. திரு. சர்மா அவர்களும் அவர்தம் தங்கையைப் போன்றே சமய இலக்கியங்களின் சிறந்த அறிவு பெற்றிருந்தமை அறிந்தேன். 2-45க்கு ஆரம்பித்த வகுப்பு 4-15க்குத்தான் முடிவுற்றது. ஒரு சிலரே வந்திருந்தாலும் அனைவரும் ஆழ்ந்த பக்தியும் அறியவேண்டும் என்ற அவாவும் கொண்டவர். எது அறம் (தர்மம்) என்ற ஆராய்ச்சியில் அனைவரும் பங்கு கொண்டு விவாதித்தனர். சமுதாய பழக்கவழக்கங்கள் நாடுதோறும் மாறினாலும் அடிப்படை அறமாகிய 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது' என்ற உண்மையினைப் போற்றி வழக்கத்தில் கொள்ளவேண்டிய முடிவினைக் கண்டனர். அமைதியான வழிபாடு என் உள்ளம் கவர்ந்தது.

கூட்ட முடிவிற்குப்பின் காரிலேயே என்னை அழைத்துக் கொண்டு பாஸ்டன் நகர் முழுவதையும் சுற்றிக் காட்டினர். இந்நாட்டு மக்கள் எங்கும் இருப்பது போன்று இங்கும் தம் மனம் போன வாழ்வில் மகிழ்வதைக் கண்டேன். அது அவர்தம் நாகரிகம்; எனவே அதுபற்றி நான் என்ன கூற முடியும்? இங்கே உள்ள மிகப் பழைய 'ஹார்டுவோர்டு' பல்கலைக்கழகத்தினையும் 'கேம்பிரிட்ஜ்' பல்கலைக்கழகத்தினையும் கண்டேன். எங்கும் கண்டமை போன்று இங்கும் பேராறு ஊரின் இடையே ஓடுகிறது. அதில் கப்பல் போக்குவரத்தும் உண்டு. இது ஒரு துறைமுக நகரமாதலால் நிறைய வணிக வளம் உண்டு போலும். பேராற்றின் இரு பக்கங்களிலும் இரண்டு பல்கலைக் கழகங்களும் ஓங்கி உயர்ந்து நிற்கின்றன. அவற்றொடு தொடர்புடைய விடுதிகளையும் கண்டேன். இங்கே ஒரு புதுமை இருந்தது.

தனியாக வந்து பயில்பவருக்கே எங்கும் விடுதிகள் இருப்பதைக் காண்கிறோம். இங்கே பல்கலைக்கழகங்களை ஒட்டி அத்தகைய விடுதிகள் பல உள்ளன. அவற்றுடன் மணமானவர்கள் தங்கிப் படிக்க, குடும்பத்தோடு தங்குவதற்கென ஒரு தனி விடுதி (பத்தடுக்கு மாளிகை) இருப்பதைக் கண்டேன். இது எவ்வளவு போற்றுதற்குரியது. இத்தகைய விடுதி உள்ளதால், பல நாடுகளிலிருந்து மணமானவர்கள் இங்கே குடும்பத்தோடு வந்து, தங்கிப் பயில்கின்றனர். கணவன், மனைவி இருவரும் பயில்கின்ற குடும்பங்களும் உண்டு போலும். மேநிலைக் கல்விக்கு இத்துணை ஆக்கம் அளித்துள்ள தன்மையைப் போற்றினேன்.

இப் பல்கலைக் கழகங்கள் தொன்மை வாய்ந்தவை. ஹார்டுவேர்டு பல்கலைக்கழகம்பற்றி நம் நாட்டு மக்கள் நன்கு அறிவர். இதில் நோபல் பரிசு பெற்றவர் பலரும் ஆய்வு காண்கின்றனர். இப் பல்கலைக்கழகங்களிலும் இங்குள்ள நம் I. I. T. போன்ற 'M. I. T.' எனும் பொறியியல்துறை, மின் அணுத்துறை முதலியன போன்ற வைகளிலும் ஆய்வு நடத்தும் - கல்வி கற்பிக்கும் - பெரு நிலையங்களும் உள்ளன. இவற்றொடு இணைந்த நூல் நிலையங்கள் இருபத்து நான்கு மணி நேரமும் திறந்திருக்கு மாம். மாணவர் எப்பொழுது வேண்டுமாயினும் அங்கே சென்று பயில நல்ல வாய்ப்பும் உண்டல்லவா!

நம் நாட்டில் கற்பன கற்று, சிறந்த ஆய்வு நடத்தும் விற்பனர் பலருக்கு அவர் விரும்பிய வகையில் பணி கொடுப்பதில்லை; மாறாக ஏதோ இயந்திர வகையில் செயலாற்ற ஆணைத் தரப்படுகிறது. எனவே நம் நாட்டுப் பல நல்ல அறிஞர்கள் வெளிநாடு செல்ல வேண்டியுள்ளது. படிக்கும் படிப்பிற்கும் செய்யும் வேலைக்கும் நம் நாட்டில் யாதொரு தொடர்பும் இல்லையல்லவா! உதாரணமாக 'M.Sc.' பௌதீகம் அல்லது வேதியல் படிக்கின்ற மாணவர்-முதல் நிலை பெறும் மாணவர் - வங்கியில் வேறு எழுத்தர் அல்லது கணக்கர் வேலைக்கு செல்லுவதைக் காண்கிறோம்.

அதே வேளையில் அந்தத் துறைகளில் வல்லவர் பள்ளி களுக்கோ கல்லூரிக்கோ வேறு ஆய்வுகாணும் களங்களுக்கோ கிடைப்பதில்லையே. இது அரசாங்கத்துக்கும் சமுதாயத் துக்கும் எவ்வளவு இழப்பு. இந்த நிலை மாறவேண்டும் என்று நான் முன் என் நூல்கள் இரண்டொன்றில் குறித் துள்ளேன். இங்கும் அதையே எண்ணினேன். இங்கே ஒரு துறையில் சிறக்கப் பயின்று தெளிவு காணும் மாணவர் அதே துறையில் மேலும் மேலும் ஆய்வு காண நிறைய வாய்ப்பு கள் உள்ளன. எனவே நம் நாட்டிலிருந்தும் பலர் இங்கே மேல்நிலைக் கல்வி பயில வந்துள்ளனர். பயின்றபின் பலர் இங்கேயே பணியேற்றுச் செயல்புரியத் தொடங்குகின்றனர். இது நம் நாட்டுக்கு எவ்வளவு இழப்பு என்பதை நம் அரசாங்கம் எண்ணிப் பார்த்ததுண்டா?

இத்தகைய சிந்தனைகளுக்கிடையே இப் பல்கலைக் கழகங்களையும் தொழில் வளர்க்கும் பெருநிலையங்களை யும் (M.I.T.) கண்டுகொண்டே வந்தேன். 'M.I.T.' என்பது நம் சென்னையிலும் உண்டு. அது Madras Institute of Technology என்பதாகும். அதற்கும் இதற்கும் தொடர் பில்லை. இது MASSACHUSETTS Institute of Technology யாகும். எனவே இதில் சிறக்கப் பயிலும் மாணவர்கள் வருங்காலத்தில் நல்ல வாழ்வினை உடையவர்களாகத் திகழ் கின்றனர். இந்த ஊரிலேயே இன்னும் பாஸ்டன் பல்கலைக் கழகம் என்ற ஒன்றும் மற்றொன்றுமாக இருவேறு பல்கலைக் கழகங்களும் உள்ளனவாம். பொதுவாக இங்குள்ள மாணவர்கள், (பிற பல்கலைக்கழகங்களை நோக்க) தத்தம் கல்வியில் கண்ணும் கருத்துமாயிருந்து, கற்பன கற்று, சிறக்க உயர்கின்றனர் என்றும் எனவே இந்நகரின் பழைய பல்கலைக்கழகங்களுக்கு உலகிலேயே ஒரு தனிமதிப்பு உண்டென்றும் இங்குள்ளவர்கள் பெருமையோடு சொல்லிக் கொள்வதில் பொருள் உண்டு என உணர்ந்தேன்.

விரைந்தோடும் பேராற்றங் கரையில், 'காரை' விட்டு இறங்கிச் சிறிது உலாவினோம். இடையிலே ஒரு ஓட்டப்

பந்தயப் போட்டியினைக் கண்டோம். 20கல் தொலைவு ஓடும் (Marattan Race) பெரும் போட்டி இதுவாகும். சாலை ஓரங்களிலேயே இவர்கள் ஓடுகின்றனர். சாலை ஓரங்களில் பல பொதுமக்கள் சிறியரும் பெரியரும் - நின்றுகொண்டு, ஓடுபவர்களை ஊக்கிக்கொண்டும், அவர்களுக்குப் பருகுநீர் அளித்துக்கொண்டும் நின்றதைக் கண்டேன். இந்த நாட்டிலே இத்தகைய விளையாட்டுப் போட்டிகளுக்கும் பிற பந்து விளையாடல்களுக்கும் பெரும் சிறப்பு அளிக்கின்றனர். உலகெங்கணும் இந்த நிலை உண்டு எனினும், இங்கே அது மிகச் சிறப்பாகப் போற்றப் பெறுகின்றது. வீட்டில் உள்ள செல்வன் அஜின் அத்தகைய ஆர்வம் கொண்ட இளைஞர். வகுப்பில் முதலிடம் பெறுவது போன்று, விளையாட்டிலும் பங்குபெற்று முதலிடம் பெறுவர் என அறிந்தேன். இன்று நடைபெற்ற, ஏதோ கூடைப்பந்து போட்டியில் (Basket Ball) தனக்கு உற்றவர் வெற்றி பெறவில்லை என வருந்தினான். பொதுவாக இங்கே - இந்த ஊரில் மனநிலை போற்றலும் அறிவு வளர்த்தலும் உடலோம்பலும் இணைந்த வகையில் கல்வியும் பிறவும் அமைந்திருப்பன கண்டு மகிழ்ந்தேன்.

இந்த ஊர் மிகத் தொன்மை வாய்ந்ததாம் (இந்த நாட்டிலேயே). ஆங்கிலேயர் இந்த நாட்டுக்கு வந்தபோது இங்கேதான் முதன் முதல் இறங்கினார்களாம். இந் நாட்டுப் பழங்குடிகளுக்கும் அவர்களுக்கும் இங்கேதான் மாறுபாட்டுச் சண்டைகளும் பிறவும் நிகழ்ந்தனவாம். வாஷிங்டன் தலைநகராவதற்குமுன் இதுவே ஆங்கிலேயர் தம் தலைநகராக அமைந்ததாம். நம் நாட்டில் அதே ஆங்கிலேயர் தில்லிக்கு முன் கல்கத்தாவைத் தலைநகராகக் கொண்டார்களல்லவா!

இங்கே உரிமை பெற்றபின் ஐரிஷ்காரர்கள் அதிகமாக இருக்கிறார்களாம். உள்நாட்டு மக்களும் அதிகமாக இல்லையாயினும் விரவி உள்ளனர் என அறிந்தேன். நியூயார்க், வாஷிங்டன் போன்று, அதிகமாக இங்கே அவர்

களைக் காணமுடியவில்லை. இந்தப் பகுதிக்கே ஆங்கிலேயர் முதன் முதல் வந்ததால் இதற்கு 'New England' என்றே பெயராம். இந்த மாநிலம் அதே பெயரில் 'புதிய இங்கிலாந்து' என இன்றும் வழங்கப்பெறுகிறது. இங்கும் சீனர் தனியாக வாழும் பகுதி உண்டு. முன்னும் நியூயார்க் முதலிய இடங்களிலும் கண்டிருக்கிறேன்; இங்கும் அந்த நிலை; ஏன் என்று தெரிவில்லை? திரு. சர்மா அவர்கள் அதற்குரிய காரணத்தை விளக்கினார். சீனாவில் சில ஆண்டுகளுக்கு முன் உள்நாட்டுப்போர் நிகழ, அது பொது உடமை நாடாக ஆவதற்கு முன் அரசும் அதன் தலைவரும் அண்மையிலுள்ள பெருந்தீவில் (தைவான்) ஆட்சி அமைத்த காலத்தில் பல சீனர்கள் தாய் நாட்டை விட்டு வெளியேறினார்கள் அல்லவா! அமெரிக்க நாடு அவர்களுடன் கூட்டாக இருந்தமையின், அவ்வாறு வெளியேறிய பலரை இந்த நாட்டுக்கு வரச்செய்து, குடியமர்த்தி வாழ்வளித்த தன்மையை நன்கு விளக்கினார். எனவே, அதன் காரணம் விளங்க எனக்கு மனநிறைவு உண்டாயிற்று.

வரும்வழியில் அவர் பணியாற்றும் தொலைபேசிக் கருவிகள் செய்து அமைத்து, அதை இயக்கும் ஒரு பெரு நிறுவனத்தைக் காட்டினார்கள். இங்கே எங்கும் தனியார் தொழில் நிறுவனங்களே உள்ளமையின் நாடு சிறப்பதை முன் சில முறை சுட்டியுள்ளேன். இப்போதும் அதையே நினைத்தேன். சென்னையில் தொலைபேசியோடு நாள் தோறும் தொல்லைப்படுவதை இங்கே நினைத்தாலும் வேதனை விளைகிறது. இந்த நாட்டில் அதுவும் தனியார் நிறுவனங்களிடம் தொலைபேசி உள்ளமையின் குறைபாடு இன்றிச் சிறக்க நடைபெறுகின்றது. எல்லாத் துறைகளும் தவறு நேருமாயின், உடனே பொதுமக்களும் அரசும் தலையிட்டுக் கேட்பார்களே என்று அஞ்சுவதால், பெரும்பாலும் தவறு நேரா வகையில் முன் எச்சரிக்கை யாகவே உள்ளன. நம் ஊரைப்போல, தொலைபேசியோ மின்சாரமோ ஒரு நிமிடம் இங்கே தடைப்படுமாயினும்,

நாடே நிலைகுலையும். எனவே எவ்விதத் தடங்கலும் இல்லாமல் பார்த்துக் கொள்ளுகின்றனர். அங்கே தவறு நடந்தால் யாரைக் கேட்பது? அரசாங்கமே அனைத்தையும் நடத்துவதால், தவறுக்கு அரசாங்கமே பதில் சொல்ல வேண்டும். ஆனால்?

இவ்வாறு பலப்பல சிந்தனைகளுக்கிடையே அக நகராகிய கடைத்தெரு முதலியன உள்ள இடத்தினைத் தவிர்த்து, பிற இடங்களையெல்லாம் ஓரளவு சுற்றிக்கொண்டு, மாலை 8 மணி அளவில் வீடு திரும்பினோம். இங்கே முன்னரே குறித்தபடி, ஒரு மணி நேரம் தள்ளி வைத்தமையின் 8 மணிக்கு நன்கு இருட்டவில்லை; எனவே மாலை எனக் குறித்தேன். வீட்டிற்கு வந்து அனைவருடனும் கலந்து பேசிக் கொண்டிருந்தோம். திரு. சர்மா அவர்கள் சொற்களினால் - இருபொருள் காட்டி - அனைவரையும் சிரிக்க வைப்பதில் வல்லவர் என அறிந்தேன். ஒன்று காட்டினால் போதும். சென்னையில் ஆந்திர கேசரி என ஒருவர் இணைந்த சென்னை மாநிலத்தில் அமைச்சராகவும் இருந்தார். 'ஆந்திராகேசரி' என்பதைச் சர்மா 'ஆந்திராகேசரி' எனப் பிரித்து, அவரைத் தமிழகம் ஆந்திராவிற்கே அனுப்பி விட்டது என்றார். இவ்வாறு பலவகையில் சொல்லாடல்களால் அனைவரையும் சிரிக்கவைத்தார். நாள்தொறும் இக் குடும்பம் அவர்தம் சொல்லாட்சியாலும் நல்ல செயல்களாலும் 'சிரித்தே வாழ்கின்றோம்' எனப் பெருமைப்பட்டுக்கொண்டது கண்டு மகிழ்ந்தேன். பின் பொதுவாக நாட்டில் உள்ள சமய நெறி, சமுதாய வாழ்வு இன்ன பிறவற்றைப் பேசிக்கொண்டே இருந்தோம். அஸ்வனிடம் (9 வகுப்பு) அவர்தம் பாடமுறைகள் பற்றியும் தேர்வு முதலியனபற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். பருவத் தேர்வு முதலியனபற்றி விளக்கினார். இவைபற்றியெல்லாம் முன்னரே குறித்துள்ளேன். இரவு உணவுக்குப் பின் சற்றே பேசி இருந்து 10மணி அளவில் உறங்கச் சென்றேன்.

பாஸ்டன் 6-5-85

சிறிது நேரம் கழிந்ததால் நேற்றைய குறிப்பினை இன்று காலையே எழுதி முடித்தேன். திரு. சர்மா காலை 7-15க்கே அவர்தம் பணிமேற் சென்றார். இந்த ஊர் வரலாற்று முக்கியம் படைத்ததென்றும், அமெரிக்கா உரிமைப் பெறப் போர்தொடுத்த இடமென்றும்கூறி அவற்றுள் ஓரிரு இடங்களைக் காணவேண்டும் எனவும் பவுத்ராஜி அவர்கள் சொன்னார்கள். அவர்களே தம் காரில் அழைத்துக் காட்டுவதாகவும் கூறினார்கள். அவர்கள் சன்மார்க்க விடயமாகப் பலவிடங்களுக்கு அடிக்கடி செல்வதால், அமெரிக்க அன்பர்கள் அவருக்கு ஒரு 'கார்' வாங்கித் தந்திருந்தனர். ஓய்வு இன்றி அவர்கள் வாரந்தொறும் பல இடங்களுக்குச் செல்லுகின்றனர். காலை சற்றே குளிராக இருந்ததோடு மழையும் பெய்ய ஆரம்பித்தது. ஏனோ நான் செல்லுமிடமெல்லாம் இவ்வாறு மழை என்னை விடாது பின்பற்றுகிறது. இங்குள்ளவர்கள் இந்த ஆண்டு இங்கே மழை மிகக்குறைவு என்றும் நான் வந்ததால்தான் மழை பெய்தது என்றும் கூறினார்கள்.

காலைச் சிற்றுண்டிக்குப் பின் அருள் திரு. பவுத்ராஜி அவர்கள் அவர்தம் அன்னையார் நான் ஆகிய மூவரும் 40 கல் தொலைவிலுள்ள ஓரிடத்துக்குப் புறப்பட்டோம். அங்கே அவர்தம் சீடர் ஒருவர் உளர் என்றும் அவர் வழி சில இடங்களைக் காண இயலும் என்றும் கூறினர். அந்த இடத்துக்கும் இவர்களும் புதியர். எனினும் அங்கே செல்வ

தற்குச் சாலை எண்களையும், வலது, இடது என்று குறித்து வைத்திருந்த குறிப்பின்படியும், உரிய இடத்தினை எளிதில் சேர முடிந்தது. இந்த நாட்டில் எங்கும் சாலைப் போக்குவரத்து செம்மையாக அமைந்துள்ளது. ஒவ்வொரு சாலைக்கும் எண் உண்டு. நல்ல பெரிய எழுத்தில் சாலை எண்கள், இடம், வலம் போன்ற குறிப்புகளை சாலை நடுவிலே உயர ஆங்காங்கே தொங்கவிட்டிருக்கிறார்கள். புதிதாக வருபவருக்கும்கூட, இந்தக் குறிப்புகள் மிக எளிதாக வழிகாட்டி உதவுகின்றன. சாலைகளும் நன்கு செப்பம் செய்யப்பெற்றவை. 45 கல்லுக்கு குறைவாகவோ 75க்கு அதிகமாகவோ ஓட்டினால் தண்டனை உண்டு. இங்கே மெதுவாகச் செல்லும் வேறு போக்குவரத்து எதுவும் இன்மையால், நான் முன்னரே சுட்டியபடி எங்கும் 'கார்'கள் விரைந்து பறந்து கொண்டிருக்கின்றன. நாங்கள் குறித்த இடத்துக்குப் பத்து மணி அளவில் சென்று சேர்ந்தோம்.

அவர்தம் சீடராகிய அவ் வீட்டுத் தலைவியார் அன்புடன் வரவேற்றனர். அவர்கள் கோவை திருப்பூரைச் சேர்ந்தவர்கள் என்றும் சென்னை அண்ணா பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. டாக்டர் குழந்தைசாமி அவர் தம் நெருங்கிய உறவினர் என்றும் கூறினர். அவர்தம் தந்தையார் ஊரிலே உள்ளனர் என்றும் அவ்வூர்க் கல்லூரியின் ஆட்சிக்குழுவில் பொறுப்பேற்றுத் தொடங்கினர் என்றும் கூறினர். பல ஆண்டுகளுக்குமுன் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்க அக் கல்லூரி விண்ணப்பித்தபோது, நான் அந்த இணைப்புக் குழுவில் உறுப்பினனாகச் சென்றது நினைவுக்கு வந்தது. அப்போது அவர்தம் தந்தையாரையும் கண்டுள்ளேன். அந்த நினைவுகளுக்கு இடையே, அவர்தம் காரிலேயே மற்றவர்களுடன் வெளியே புறப்பட்டோம். சிறு தூறலாக இருப்பினும் காண வேண்டியவற்றைக் காண வேண்டுமல்லவா!

அவர்கள் (Concoard) கண்காரட்டு என்னுமிடத்துக்கு அழைத்துச் சென்றனர். இங்கேதான் 1775ல் அமெரிக்கப்

படைவீரர் முதல் முதல் உரிமை வேட்கையால் (19-4-75) போரிடத் தொடங்கினராம். ஒரு சிற்றாறு ஓடுகிறது. அதன் இருபுறத்திலும் இருவர்தம் படைகளும் இருந்து போரிட்டன வாம். அங்கே மடிந்தவர்களைப் பற்றிய குறிப்புகளும் இரங் கல் உரைகளும் கற்களில் செதுக்கி வைக்கப்பெற்றுள்ளன. ஆற்றினைக் கடக்கும் சிறு மரப்பாலம் ஒன்றும் இன்னும் உள்ளது. அதன் இருபுறமும் அவர்கள் நின்று போர் செய் தனர். இந்தப் புது இங்கிலாந்துக்கும் பழைய இங்கிலாந்துக் கும் இடையில் நடைபெற்ற போரினைப் பற்றி - முதல் போரினைப்பற்றி - பலப்பல குறிப்புகள் இங்கே வைக்கப் பெற்றுள்ளன. அந்த இடங்களையெல்லாம் படம் பிடித்து நன்கு காட்டியுள்ளனர். அவர்கள் பயன்படுத்திய துப்பாக்கி, ஆடை, பிற பொருள்கள் அனைத்தும் காட்சிப் பொருளாக வைக்கப் பெற்றுள்ளன. இந்த நாட்டுக் கிராம மக்கள்கூட தம் அரசினைத் தாமே அமைத்துக் கொள்ளும் ஆர்வத்தில் அன்று ஆங்கிலேயரை எதிர்த்தனர்; வெற்றியும் கண்டனர். இன்றும் அனைத்தையும் பிணைக்கும் நடுவன் அரச வாஷிங் டனில் இயங்கியபோதிலும், ஒவ்வொரு நகரும், கிராமமும் தனித்தனியாக, தத்தம் வரிப்பணங்களைக் கொண்டு, தமக்கு வேண்டிய கல்வி, காவல், பிற தேவைகளை நிறை வேற்றிக் கொள்ளுகின்றனர். தேவையறிந்து அவர்கள் அவ் வப்போது ஒன்று கூடி, தேவையாயின் வரியினையும் உயர்த்தி கொண்டு, சமூக நலனையே கருத்தில்கொண்டு செயலாற்று கின்றனர். எனவே அன்றும் கிராம மக்கள் அந்நியரால் ஆளப்படுவதை அறவே வெறுத்தனர். அமெரிக்க நாட்டில் அங்கிருந்து வந்து குடியேறியவர்களும் தனிச் சமுதாயமாக அமைந்துவிட்ட காரணத்தால் தனியாட்சி விரும்பியதில் வியப்பில்லை அல்லவா! இங்கிலாந்திலுள்ள ஆங்கில நாட்டு அரசு, இவர்களுடன் அன்று நடந்த பெரும் போரின் காரண மாக (Seven Years War) கிராமங்களின் தனி உரிமைகளைத் தடுத்து, தாமே வரி விதித்து ஆதிக்கம் செலுத்த நினைத் தமையே உரிமைப்போருக்கு அடிப்படையாக அமைந்தது எனலாம். 1770ல் கிளர்ச்சி அறிந்து அத்தகைய வரியினை

மிகச் சிறிய அளவில் அமைத்த போதிலும், நாட்டு மக்கள் ஏற்காது, எதிர்க்க, ஆங்கிலப் படை இங்கே வர, போரும் தொடங்கியது. பின் அது வளர்ந்த வகையினையும் பிற வற்றையும் நன்கு சித்தரித்துக் காட்டும் பல பொருள்களும் படங்களும் காணும் யாரும், இந்நாட்டு மக்களின் உரிமை வேட்கையினைப் போற்றக் கடமைப்பட்டவராவர். இத் துடன் பல பொருள்கள் அமைந்த பொருட்காட்சிச்சாலையும், போர்க் கருவிகள் மட்டுமன்றி, சிறத்த ஒரு நூல் நிலையமும் இங்கே வைக்கப் பெற்றுள்ளன. அனைத்தையும் சுற்றிக் கண்டு பின் சற்றே தொலைவிலுள்ள மற்றொரு காட்சிச் சாலைக்குச் சென்றோம். அங்கே கடந்த மூன்று நூற்றாண்டு களாக இந்நாட்டு மக்கள் பயன்படுத்திய பல்வேறு வகை யான வீட்டுப்பொருள்கள் - உடை, உணவு, உட்காருமிடங் கள், படுக்கை, படிப்பு, ஆயுதங்கள், கடிகாரம் போன்ற சாதனங்கள் அனைத்தும் வைக்கப்பெற்று, அவை எவ்வெவ் வாறு காலந்தொறும் வளர்ச்சி பெற்று, மாற்றமுற்று இன்றைய நிலைக்குவந்துள்ளன என்பதைக்காட்டுகின்றனர். தனியாக இதை விளக்க வழிகாட்டிகள் நியமித்துள்ளனர். வளமுற்ற மூன்று நூற்றாண்டின் நாகரிக வளர்ச்சியினை இங்கே ஓரளவு நன்கு புரிந்து கொள்ள இயலும். இவற்றை யெல்லாம் கண்டு, இம்மக்கள் தம் வரலாற்றினைப் போற்றும் நெறியினை எண்ணி உளம் நெகிழ்ந்து நின்றேன். முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன் உரிமை பெற்ற நாடுகள் அந்த உரிமை பெற்ற நிலையினை வருங்காலச் சமுதாயத்துக்குக் காட்டி, என்றும் அந்த உரிமைத் திருநாளை மக்கள் நினை வில் வைத்துக் கொள்ளச் செய்யாது தத்தம் வாழ்வும் வளமும்- தம் கட்சியின் பலமும் ஓங்க வேண்டும்-தன் தனியா ஆட்சி நிலைக்க வேண்டும் என்ற கருத்தில் பாடுபடும் உலக நிலையில், இந்நாட்டு மக்கள் உரிமை பெற்ற சிறப்பினைப் போற்றும் நிலை எண்ண வேண்டியதுதானே! நான் முன்னரே வாஷிங்டன், பிலடெல்பியா ஆகிய இடங்களில் இவர்கள் பழமையைப் போற்றும் பல செயல்களை விளக்கியுள்ளேன்.

கடுங்குளிரிலும் பெய்யும் மழையிலும் எனக்கு உதவ நினைத்த அன்பர்கள் என் பொருட்டு வெளியில் வந்து, இவ் வாறு உதவுவதை எண்ணி அவர்களை வாயாரப் போற்றி னேன். (எனக்கும் அவர்களுடைய மேல்அங்கி ஒன்றை மழைக்கும், குளிருக்கும் பாதுகாவலாகத் தந்தனர்) இவ் வாறு பல பொருள்களைக் கண்டு அவர்கள் வீட்டிற்கு ஒரு மணிக்கு மேல் திரும்பினோம். அந்த அம்மையார்—திருமதி விசாலாட்சி ஆறுமுகம் அவர்கள் அவர்தம் குரு அருட் செல்வியார் முதல் முதல் அவர்கள் மனைக்கு எழுந்தருளுவ தால் காலையிலேயே (பகல் வெளியே செல்வதால்) நல்ல உணவினைத் தயாரித்து வைத்திருந்தார்கள். அவர்தம் கணவர் பொறியாளர் பணிமேற் சென்றிருந்தார்; இரு பிள்ளைகளும் பள்ளிக்குச் சென்றிருந்தனர். இவரும் தம் பிள்ளைகள் பயிலும் பள்ளியில் தாமே சென்று ஊதியமின்றி ஆசிரியப் பணியாற்றுவதாகச் சொன்னார்கள். அங்கே நம் பள்ளியிலும் ஒருசில நல்ல பெற்றோர்கள் இவ்வாறு முன்வந்து உதவும் நெறியினை எண்ணினேன். திருமதி விசாலாட்சி - அன்னபூரணி - அளித்த 'சித்ரான்னங்களை' உண்டு, இரண்டு மணி அளவில் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினோம்.

சிறிது நேர ஓய்வுக்குப்பின் மாலை மற்றொரு பக்கம் செல்ல ஏற்பாடாகியிருந்தது. அதற்கிடையில் அன்னையாரும் திரு. சர்மா அவர்களும் நான் 8-5-85ல் நியாகரா செல்லப் பயணப் பதிவு செய்தும், அங்கே தங்குவதற்காக ஏற்பாடுகளை உறுதிப்படுத்தியும் வந்து உதவினர். மாலை 6 மணி அளவில் பெங்களூர் நண்பர் ஒருவருடைய வீட்டிற்குப் புறப்பட்டோம். அவர் பெயரும் 'கோபால்' என்பதே. இரு குடும்பங்களும் இளமை முதலே இணைந்து வாழ்ந்தனவாம். அவர்கள் இங்கே உடல் நலமில்லாதிருந்து தெளிவு பெற்று அடுத்த வாரம் ஊருக்குச் செல்வதால் கண்டு வரப்புறப் பட்டனர். நானும் உடன் சென்றேன். அவர்கள் அனை வரும் - குடும்பத்தினர் - எங்களை ஏற்றுப் புரந்தனர்.

போகும் வழியிலும் வரும்போதும் திரு. சர்மா அவர் களும் அவர்தம் மகன் அஸ்வின் அவர்களும் வேடிக்கையாகச்

சொற்களைக் கொண்டு, பல்வேறு வகையில் சிரிப்பூட்டும் விளக்கங்களை தந்தும், மகிழ்வித்தனர். இத்தகைய கலை மற்றவர்களைச் சிரிப்பூட்டும் கலை யாருக்கும் எளிதாக அமைவதில்லை. அந்தச் சொல்லாடல்களும் வெறும் வெற்று வேடிக்கைகளாக இல்லாது, பொருள் பொதிந்தவையாக இருப்பது இன்னும் சிறந்ததாகும். பழங்காலத்தில் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் நகைப்பூட்டும் சொல் லாடல்களைத் திரைப்படங்களில் கண்டவர் அறிவர். அவ் விடத்தை நிரப்ப இன்னும் தமிழ் பட உலகில் யாரும் வர வில்லையே. மாலையிலும் மழை இருந்து கொண்டே இருந்தது. எனினும் நாங்கள் குறித்தபடியே மாலை 6-30க்கு அவர்கள் வீடு சென்று சேர்ந்தோம். (வீடும் மிக அண்மை யில் இருந்தது - 4 அல்லது 5 கல் தொலைவு இருக்கும்).

அனைவரும் ஒருமணி நேரத்துக்கு மேல் உட்கார்ந்து பல பொருள்களைப் பற்றிப் பேசினார்கள். என்னை அறிமுகப் படுத்தினார்கள். அவர்களும் என்னை விருந்தினராக ஏற்பதில் மகிழ்ந்தார்கள். பின் நல்ல உணவு பரிமாறப் பெற்றது. உணவு உண்டு கொண்டே, நல்லுணவு எது, எப்படி உண்ண வேண்டும் என்பன பற்றியெல்லாம் பேசினோம். இங்கே இந்த நாட்டில் அனைவரும் ஆண் பெண் இருபாலரும் - விருந்தினர் - ஏற்பவர் அனைவரும் ஒருசேர ஒரே மேசையினைச் சுற்றி உட்கார்ந்து - உணவுப் பொருள்களை நடுவில் வைத்து - அவரவர் விருப்பப்படி எடுத்து உண்ணும் முறை உள்ளது - ஏற்பவர் (எடுத்தெடுத்து அப்படியே தேவை அறிந்து பரிமாறவும் செய்வர்). உணவு உண்ட பின்னும் சிறிது நேரம் அமர்ந்து பேசிக்கொண்டிருந் தோம். நம்நாட்டு முறையற்றிருக்கும் விமானப் போக்கு வரத்தினைப்பற்றிய பேச்சு வந்தது. அவர்கள் பயணம் அதனால் தனிப்பட்டமை வருந்துதற் குரியது. பின் பத்து மணி வரையில் இருந்து, அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வீடு திரும்பினோம். இந் நாளின் நிகழ்ச்சிகளை எண்ணி மகிழ்ந்து கொண்டே, உறங்கச் சென்றேன்.

பாஸ்டன் 7-5-85

இன்று காலை சற்றே காலம் தாழ்ந்தே கண் விழித்தேன். இரண்டு நாட்களின் சுற்றும் மழைக்கிடை உழன்றதும் மிகுகுளிரும் சற்றே அயர்ச்சியைத் தந்தன. எனினும் காலையில் எழுந்து கடன்களை முடித்துக்கொண்டு குறிப்பினையும் எழுதி முடித்தேன். சிற்றுண்டிக்குப் பிறகு வெளியே அஞ்சலகம் சென்றேன். ஊருக்கும் பிறவிடங் களுக்கும் அஞ்சல் அனுப்பி,பக்கத்திலுள்ள பயணமுகவரிடம் சென்று, "பப்பலோ" விலிருந்து 'கிளைவ் லேண்டு' 10.5.'85 பிற்பகல் செல்ல விமானப் பயணப் பதிவு செய்து கொண்டேன். பிறகு வீட்டிற்கு வந்து ஓய்வு பெற்றேன். பெரியவரோடு பல நல்ல பொருள்களைப் பற்றி - தெய்வ நெறி வாழ்வினைப் பற்றிப் பேசிக் கொண்டே இருந்தேன். பகல் 1 மணி அளவில் உணவு கொண்டேன். பிறகு 3 மணி வரையில் ஓய்வு. நான் நாளை செல்வது பற்றிப் பல விடங் களுக்குத் தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு, எனக்கு உதவ அருட்திரு. பவுத்ராஜி அவர்கள் முயன்றார் கள். என்றாலும் தக்க உதவி கிடைக்கவில்லை. மாலையில் ஓரிரு இடங்களுக்குச் சென்று எப்படியும் தக்க வசதி செய்வ தாகக் கூறினார்கள்.

இன்று பெரும்பாலும் ஓய்வாகவே இருந்தேன்; நான் கொண்டு வந்த சில கட்டுரைகளைப் படித்துக் காட்டினேன். சிலவற்றை வேண்டுமென வைத்துக் கொண்டனர். பின் படி எடுத்து அனுப்புவர். பல பாடல்களைப் பாடினேன். சில வேளைகளில் நல்ல தமிழ் - கர்னாடக இசைத் தட்டுகளைப்

போட்டுக்காட்டினர். மறுபடியும் வெளியில் சென்று, நாளை நியாகராவில் தங்குவதற்கு வேண்டிய வசதிகளை அறிந்து, ஒரு நூலும் செல்வியார் வாங்கிவந்தனர். திரு. கோபால் அவர்கள் வந்ததும் தொலைபேசியில் பேசி எல்லா ஏற்பாடு களையும் செய்து முடிக்கலாம் என்றனர்.

மாலை 4.30க்கு திரு. கோபால் வந்தார். உணவுக்குப் பின் உட்கார்ந்து எல்லாவற்றையும் அலசிப்பார்த்து உடன் நீர்வீழ்ச்சி நகருக்குத் தொலைபேசியில் பேசினார். தங்க ஒரு விடுதியும் அதற்குச் செல்ல வசதியான பஸ் முதலியனவும் அங்கே சுற்றிக் காண்பதற்கான ஏற்பாடும் அனைத்தையும் தொலைபேசியிலேயே முடித்து, எல்லாவற்றையும் குறித்துத் தந்தனர். மேலும் மறுநாள் 'கிளைவ் லேண்டு' செல்வ தற்கென, விமானப் பயணச்சிட்டினையும் பதிவு செய்து வைத்தார். எனவே,நாளை காலையிலே "பப்பலோ"சென்று நியாகரா வீழ்ச்சிக்கு அருகில் வீடுதியில் தங்கி எல்லாவற்றை யும் கண்டு, மறுநாள் 12மணி அளவில் அங்கிருந்து புறப்பட்டு விமான நிலையம் வந்து மாலை 6.30க்குப் புறப்பட்டு அன்று (வியாழன்) மாலை 7.30 அளவில் கிளைவ்லேண்டு சேர முடிவு செய்தோம். நாளை அங்குள்ள விஜயா கந்தசாமி அவர்களுக்கும் தொலைபேசியில் பேசிச் சொல்லிவிட வேண்டும். மூன்று நாட்களிலும் பெற்றோர் இருவரும் அன்புடன் என்னை ஏற்று வேண்டுவ கொடுத்து உதவி யதையும் அஸ்வின் உட்பட அனைவரும் காட்டிய அன்பினையும் என்றும் மறக்கமுடியாது.

இன்று இங்கே பலரோடு பேசியநிலையிலும் இங்குள்ள நூல்களைப் பயின்ற வகையிலும் பல உண்மைகளை உணர்ந்து கொண்டேன். திரு. கோபால் அவர்களும் அவர் தம் சகோதரியாரும் மகனும் - ஏன்- அவர்கள் பெற்றோரும் தாய் (72) தந்தை (83) இருவரும் விடாது பல நூல்களைப் பயின்று கொண்டே இருக்கின்றனர். எனவே சிலவற்றை நானும், ஓய்வாக இருந்தமையின் படித்தேன். அவற்றுள் நான் அறிந்தவை சிலவற்றை இங்கே தருகிறேன்.

இந் நாட்டில் மக்களுக்கு முழு உரிமை தந்துள்ளனர். பேச்சுரிமை, எழுத்துரிமை செயல் உரிமையாகிய பலவற்றில் மக்கள் உரிமை பெற்று வாழிகின்றனர். ஆயினும் அவ் வுரிமை சமுதாய நலத்தை - அரசாங்கத்தை பாதிக்கு மானால் அரசு பார்த்துக் கொண்டிராது. தொழில் துறை அதனால் வேகமாக முன்னேறுகிறது. பல தனியார் நிறுவனங்கள் பெரும்பெரும் தொழிற்சாலைகளை நிறுவி நாட்டுக்கு நலம் செய்கின்றன. உலகில் ஐந்தில் இரண்டு பங்கு (2/5) தொழில் வளம் இங்கேயே உள்ளது. உணவுப் பொருள் தயாரிப்பதில் இந்நாடு - சிறப்பாக நியுயார்க் மாநிலம் - முன்னிற்கின்றது. மகளிர் எல்லாத் தொழில் நிலையங்களிலும் பங்கு பெறுகின்றனர். தொலைக்காட்சி, தானியங்கி இயந்திரங்கள் - எலேக்ட்ரானிக் இயந்திரங்கள், பால் பண்ணை முதலிய அனைத்திலும் பெண்கள் பெரும் பங்கு கொள்ளுகின்றனர். ஒலி அளவில் தொலைபேசி (தொடாமல்) இயங்குகிறது. உலகின் பயன்பெறும் அழுத்தக் காற்று (gas) வகையில் 60% இங்கேதான் உள்ளது. 20% நிலக்கரி 16% பெட்ரோலியம் இந்நாட்டில் உள்ளன. உலக ஆய்வு நிலையங்களில் பல இங்கேதான் உள்ளன. பல்கலைக் கழகங்களிலும் சிறந்தவகையில் ஆய்வு நடைபெறுகின்றது. ஹாஸ் ஏஞ்சல்ஸ் (Hos Angiles)ல் உலகெங்கும் காணாவகை யில் மாற்றுச் சுரங்கப் பாதை உள்ளது என்றனர் - பல வளைவுகள் பலபடிகள் அதில் உள்ளனவாம். இந்நாடு ஆண்டுதோறும் 365 மில்லியன் உலகவாணிப வளனும் 500 கோடி டாலர் உள்நாட்டு வாணிப வளரும் பெற்றது. இங்கே 12.5 கோடி தொலை பேசிகள் உள்ளவாம். ஒரு நாளில் 4.70 கோடி முறை பேசுகிறார்களாம். 7500 வானெலி நிலையங்களும் 900 தொலைகாட்சி நிலையங் களும் உண்டாம். (அனைத்தும் தனியார் உடைமை) உரிமை பெற்ற நாளில் (1766) 30 லட்சமாக இருந்த மக்கள் தொகை தற்போது 20 கோடியாக உயர்ந்துள்ளது.

இந்தப் பாஸ்டன் நகரில்தான் உரிமைப் போராட்டம் நடைபெற்றதெனக் குறித்தேன். 4.7.1776ல் உரிமை

பெற்றதெனவும், புது அரசியல் சாசனம் பிளடெல்பியாவில் 1786ல் கையொப்பமிடப் பெற்றதெனவும் முன்னரே குறித்துள்ளேன். இந்த நாட்டில் முதலில் ஒரே இணைப்பில் 48 மாநிலங்கள் இருந்தன. பின் 1898ல் அலாஸ்கா மாநிலம் வந்ததாம். (49). கடைசியாக ஹாவாய்த் தீவுகள் 1959ல் 50வது மாநிலமாக அமைக்கப் பெற்றதாம். மக்கள் தனி வாழ்வு போற்றக் கூடிய நிலையில் இன்றேனும், சமுதாய அமைப்பும் சமுதாய நலம் காக்கும் ஊராட்சி முறையும் அதைப் பேணும் அரசியல் சாசனமும் ஆட்சி முறையும் நன்கு அமைந்துள்ளமையே இந்த நாடு எல்லாத் துறைகளிலும் முன்னணியில் இருப்பதற்குக் காரணம் என்ற நிலையிலே என்னை மறந்து இரவு 10மணிக்கு உறங்கச் சென்றேன்.

நியாகாரா 8-5-1985

காலை விடியலில் எழுந்து கடன்களை முடித்துக் கொண்டு 6-30க்கு விமான நிலையத்துக்குப் புறப்பட்டேன். அன்னையார் அதற்குள் பொங்கல், காப்பி செய்து தந்து வழி அனுப்பினார்கள். அனைவரும் விடைதர, திரு. கோபால் அவர்கள் காரிலேயே கொண்டு வந்து, விமான நிலையம் செல்லும் ஊர்தியில் ஏற்றி அனுப்பினார். விமான நிலையத்தே வந்து, பயணத்தைப் பதிவு செய்துகொண்டு, சிகாகோ செல்வதற்கும் பயண ஏற்பாடுகளை முடித்துக் கொண்டேன். 9 மணிக்குப் புறப்பட வேண்டிய விமானம் 9-45க்குத்தான் புறப்பட்டது. இதுவரையில் எந்த இடத்திலும் இவ்வாறு காலம் தாழ்த்துப் புறப்பட்டதில்லை. இங்கே பெரும்பாலும் குறித்த நேரத்தில் அனைத்தும் நடை பெறுகின்றன. 8-50க்கு விமானத்தில் உட்கார்ந்தோம். எனினும் 9-45க்கு புறப்பட்டது. மற்றும் இன்னும் தாமதாமாக 11-15க்குத்தான் (பறக்கும் நேரம் 1 மணி 10 நிமிடம்) சென்று சேர்ந்தது. இது எனக்கு வியப்பைத் தந்தது; மற்றவர்களுக்கும்தான். எனவே நான் நியாகாரா செல்லவேண்டிய உந்துவண்டி 11-15க்கு புறப்பட்டதை விட்டேன். பின் ஒரு மணி நேரம் காத்திருந்து 12-15க்குப் புறப்பட்டு பகல் 1 மணிக்கு எனக்கென முன்னரே ஏற்பாடு செய்த விடுதிக்கு வந்து சேர்ந்தேன் (ஊர்தியே அங்கு நின்றது.)

விடுதியில் செயல்புரியும் செல்வியாரும் மற்றவரும் அன்புடன் ஏற்று நல்ல அறை ஒன்றினைத் தந்து பிற வசதிகளையும் செய்து தந்தனர். எதிரில் உள்ள சிறு

உணவுச் சாலையில் ரொட்டி வெண்ணெய் காப்பி உண்டேன். அமெரிக்க மண்ணில் கால் வைத்த பிறகு இங்கேதான் எனக்குத் தெரிந்தவர்கள் இல்லை என்ற உணர்வில் நின்றேன். முன் இலண்டனிலேயும் இங்கே நியூயார்க், பிலடெல்பியா, பாட்லிமோர், வாஷிங்டன், பிட்ஸ்பர்க் பாஸ்டன் ஆகிய இடங்களிலும் நம் சொந்த வீடு என்னுமாறு இருந்த நான், இங்கேதான் புதிய சுழலின் இடையில் இருப்பதை உணர்ந்தேன். எனினும் விடுதியினர் அந்த நினைவு மாற்றும் வகையில் வேண்டியவற்றைச் செய்து தந்தனர். வெளியே அதிகக் குளிர். நாற்சத்தைந்து எல்லே என்பது நான் இதுவரை காணாதது. (இருநாட்களுக்கு முன் பாஸ்டனில் 50 இருந்தது) எனினும் அறையினை வெம்மைப் படுத்தித் தந்தனர். சிறிது நேரம் ஓய்வு கொண்டால் 3 மணி அளவில் சுற்றிக் காணச் செல்லலாம் என்றனர். நானும் ஓய்வு கொண்டேன்.

குளிர் அதிகமாக இருந்தபோதிலும், சூரியன் நன்கு ஒளி விசினான். இந்த நிலை இல்லையானால் இங்கே வரவும் தங்கவும், காணவும் இயலாது. எனவே கதிரவனுக்கு வணக்கம் செலுத்தினேன். இன்று இங்கே கூட்டம் அதிகமாக இல்லை. ஆதனால் அமைதியாக அனைத்தையும் காண முடிந்தது. சரியாக மூன்று மணிக்கு புறப்படுவோர் வந்தார். யாரும் இல்லை; நான் ஒருவனே பெருங்காரில் புறப்பட்டேன். டிரைவருக்கு வயது 80. அவர் 13 வயதில் தந்தையுடன் இத்தாலியிலிருந்தது இங்கே வந்தவராம். அவர் ஒரே மகன் இந்நாட்டில் தென்கோடி மாநிலத்தில் (Florida) பேராசிரியராகப் பணிபுரிகிறாராம். இவர் தம் துணைவியாருடன் தனியாக இங்கே உழைத்து உண்கிறாராம். வயதானவர்களுக்கு ஊர்தோறும் அமைந்த இலவச விடுதி, இங்கேயும் உண்டு. எனினும் அதில் செல்ல விரும்பாமல் இந்த வயதிலும் உழைத்து உண்ணவே விரும்புகிறார்.

முதலில் மீன்காட்சிச் சாலைக்குச் சென்றோம். அங்கேதான் இது வரையில் காணாத வகையில் பலப்பல மீன்

களைக் கண்டேன். நீர் மட்டத்துக்கு 18000 அடி கீழிருந்து மேல்தளம் வரையில் பலவகை நிலைகளில் பலவகை முறைகளில் வாழும் மீன்கள் இங்கே வைக்கப்பெற்றிருந்தன. (இதைப் போன்று இந்த நாட்டிலும் வேறிடங்களில் இல்லையாம்) பவளம், ஒளிவிடு பவளம், முத்து, முத்துச்சிப்பி, பல வண்ண மணிகள் இவைகள் தோன்றுவதற்கு நிலைக்களனாக உள்ள பலவகை உயிர்ப் பொருள்கள் காட்சிக்கு வைக்கப் பெற்றிருந்தன. 'Stinging Cell' என்னும் பவளம் தரும் உயிரினம் மிக்க கொடியதாகவும் தொட்டாலும் தொடுபவர் உடனே இறக்கும் வகையிலும் அதன் தன்மையுள்ளதாம். எத்தனையோ வகையான விளக்கமுடியாத வகையில் பல மீனினங்கள் இருந்தன. ஒரு சிலவற்றின் பெயர்களை மட்டும் தருகிறேன்.

Powderpuff — Anemone
Plumose Anemone
Dahlia Anemone
Lobster—Homorus Amenicnus
Sea Raven
Perivinkle
Vanishing Fish—என்று மறைந்து வரும் இனவகை.
Butterfly Fish
Sunflower Star (2 அடி அகலம்)
School Fish (கூட்டமாக அமைந்து எதையோ கற்கின்றனவாம், முறையான வழியில் ஒழுகுபவையாம்)
Survival
Sea lily
Daplin
Ornamental Gold Fish
Horse shoe (Rale—தரையிலும் தங்கும்)
Tiger Barbe
Yellow Headjaco Fish
Sea Lion
Mud Skipper—நீந்த முடியாது—ஊரும்.

இவ்வாறு பலவகை - இன்றும் பல வகைகள் உள்ளன. உட்காரும் மீன்களும் நிற்கும் மீன்களும் ஒளிகாலும் மீன்களும், பலநிறக் கடல் நண்டுகளும் உயிருடன் நீர்க் கூண்டுகளில் வைக்கப் பெற்றுள்ளன. அவற்றின் படங்களும் தனியாக உள்ளன. அவற்றின் பிரிவுகளை என்னால் விளக்க முடியாது —விளக்கவும் இயலாது.

இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு அகன்ற நீர் தேங்கும் ஒரு சுற்றுமாடம் வந்தோம். அங்கே நான்கு மணிக்கு ஒருதரம் சில மீன்களுடன் வேடிக்கை (சர்க்கஸ்) காட்டுகிறார்கள். நாளைக்கு நான்கு முறைபோலும். நல்ல வேளை நான் சென்ற அதே வைளையில் (4 மணி) அந்த முறை வந்தது. டிரைவர் அதைக் கட்டாயம் காணவேண்டும் என்று என்னை அந்தவிடம் அழைத்துச் சென்றார். வேறு சிலரும் இருந்தனர். சர்க்கஸ் மானேஜர் என்பவரைபோன்ற ஒருவர் ஒரு பெருமீனை (தரையிலும் நிற்கும் Sea lion) நடத்திவந்தார். அது குதிக்கிறது; நிற்கிறது, இசைபாடுகிறது, தாளம் போடுகிறது, மேளம் அடிக்கிறது, பந்தைத் தலையில் - மூக்கு நுணியில் வைத்து விழாவகையில் குதித்து விளையாடுகிறது; வளையத்துள் புகுகின்றது; கம்பைத் தாண்டுகிறது. சற்று நேரத்தில் அதனோடு அதன் இனமான பெண்மீனை விடுகிறார். இரண்டும் கட்டிப்பிடிக்கின்றன. முத்தமிடுகின்றன; கொஞ்சிக் குலாவுகின்றன. மேளம் அடிக்கின்றன. ஒன்றைக் காலால் (பின் இருகால்களே உண்டு) நிற்கின்றன. இவ்வாறு அவைகள் அமைய, அகன்ற, நீர்த்தொட்டியில் உள்ள மூன்று பெரிய மீன்கள் (சுமார் 8') பல விளையாடல்களைச் செய்கின்றன. கிளியைப் போன்று, வெளியில் நின்று கிரீச்சிடுகின்றன. இடும் உணவுகளை எட்டிப் பிடிக்கின்றன. 20 அடி 15 அடி உயரம் எழும்பி, அவர் பிடிக்கும் வளையத்துள் புகுந்து செல்லுகின்றன. கம்பைத் தாண்டுகின்றன. பீரிட்டு வரும் 20' உயரத்தில் உள்ள நீர்ப் பெருக்கைத் தாண்டுகின்றன. புரள்

கின்றன; நிமிர்ந்து உயரமாக நிற்கின்றன; அப்படியே பின்னால் செல்லுகின்றன. 'Hand Up' 'என்றால் பின் வாலைத் தூக்கி (4' வரை) அசைகின்றன. அந்தப் பின் வாலால் வீசிறுகின்றன. இவ்வாறு பல வகையில் சுமார் 3/4 மணி நேரம் அவற்றை ஆடிட்ப்படைகிறார் அந்தப் பொறுப்பாளர். இடையிடை அவற்றிக்கு உணவை வீசி எறி கிறார். அவை அவற்றைத் தாவிப் படிக்கின்றன. கடல் வாழ் உயிர்கள் என்னென்ன வகையில் பயன்படுகின்றன என்பதை எண்ணி, அவற்றை விட்டு மெல்லப் பிரிந்து, நீர் வீழ்ச்சி காணச் சென்றேன்.

இருபக்கங்களில் நயாகாரா இரண்டாகப் பிரிந்து விழுந்தோடும் காட்சி மறக்க முடியாதது. இப்பேராறு ஐக்கிய நாடுகளையும் கனடாவையும் பிரிக்கிறது. பல நாடு களில் - மாநிலங்களில் ஆறு எல்லையாக அமைவதை நாமறிவோம். இங்கே இருபுறமும் மனிதனால் பிரிக்கப் பெற்ற நாட்டு எல்லையில், இடையில் சலிக்காது, இடை யறாது விழுந்தோடும் 'நியாகாரா' அன்னை பாராட்டுதற் குரியவள். மிக அகலமாக - சுமார் 2000 அடி இருக்கும். ஆழமாக (சுமார் 200 இருக்கும்) விழும் அந்த பெருநீர் வானத்தை மறைக்கும் நுண்துளி எழுப்பி, கரையை மறைக் கின்றது. எத்தனை நாள் வேண்டுமாயினும் நின்று காண லாம். 'தேனருவித் திரை எழும்பி வானின் வழி ஒழுகும், செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுக்கும்' என்று குற்றால அருவியினைப் பாடிய திரிகூடராசப்பர் இதைக் கண்டால் எப்படிப் பாடுவர் என்று எண்ணினேன். இரு பிரிவாகப் பிரிந்து சில தீவுகளை உண்டாக்கி, பின் இணைந்து ஓடும் இப்பேராற்றின் இடைப்பட்ட சில தீவு களிடையிலும் சென்று கண்டேன். பெரும் பகுதியாக விழும் இடம் பார்வைக்கு குதிரைக் குளம்புபோல் உள்ளமையின் அதை 'Horseshoe falls' என அழைக்கின்றனர். நிலவொளித் தீவில் (Moon island) விழும் அருவியினை அமெரிக்கன் நீர்வீழ்ச்சி என்றே அழைக்கின்றனர். இவை

பிரியுமுன் உள்ள அந்த ஆற்றங்கரை ஓரமே சென்று பார்த்தேன்.

மிக அகன்று, கொள்ளிடம் பிரியுமுன் உள்ள நம அகன்ற காவிரி போன்று உள்ளது. பின் பிரிந்து, வீழ்ந்து ஒன்றி, மிக ஆழத்தில் செல்லும்போதும் அதன் கரையை ஒட்டியே மின்படு பெருநிலையம் (Newyork state power generating unit) வரைசென்றேன், சுமார், 305 உயரத்திற்கு நீரைச் செலுத்தி மின்சாரம் எடுக்கின்றனர். அங்கே ஆறு குறுகலாக, 80' அல்லது 100'க்கு மேற் போகாமல் உள்ளது. அங்குள்ள மின் நிலையத்தினைக் கண்டேன். மறுபுறம் கனடா நாட்டினர் உள்ளனரே! அவர்கள் இதில் பங்கு கேட்கவில்லையா? என வினவினேன். அவர்களிடம் மின்விசை அதிசமாக உள்ளது; தேவை இல்லை; இந்நாட்டு மக்கள் தேவைக்குக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டனர் என்றார் டிரைவர். நான் நம் நாட்டில் ஒக்கனகல் மின் நிலையம் அமைக்கத் தமிழ்நாடு அரசாங்கம் மேற் கொண்ட முயற்சியினையும் அதற்கு அதே தாயகத்தைச் சேர்ந்த மற்றொரு மாநிலம் முட்டுக் கட்டையாக நின்று முடியாமற் போனதையும் சிந்தித்தேன். இங்கே வேற்று நாடே விட்டுக் கொடுக்கிறது. அங்கே ஒரே நாட்டின் ஒருபகுதி வளர்ச்சியை மற்றொரு பகுதி தடுக்கிறது. ஆம்! கண் நன்றாக வாழக் கை தடுக்கிறது. எந்த நாடு வளரும்? எண்ணிப் பாருங்கள்! உலகிலேயே மிகச் சிறந்த நீர் வீழ்ச்சி என யாவராலும் போற்றப் பெறும் இதன் அருகில் நின்ற நிலை எண்ணி மகிழ்ந்தேன்.

வழியில் 'Devil's Hole' என்ற பகுதியினைக் கண்டு அது பற்றிக் கேட்டேன். அந்த ஆற்றங்கரையின் ஒரு பகுதியில்- முழையில் - ஆங்கிலேயர் தங்கிப் போர் புரிந்தனராம். அவர்களை அப்போது விரட்டியடித்து, அதற்கு அப்பெயரிட் டனராம். அடுத்து மின் நிலையம், நயாகாரா பல்கலைக் கழகம், 100 ஆண்டுகளாகிய பாலங்கள் முதலியன கண்டேன். ஓரிடம் 'வெள்ளாடுத் தீவு' (Goat island) எனவே

இருந்தது. அதன் பெயர்க் காரணம் அறிய முடியவில்லை. நம் ஆறுதாண்டும் காவிரி போல் அமைந்தாகலாம் என முடிவு செய்தேன். Three Sister island, Luna laland போன்ற பல தீவுகளையும் அகன்ற பூஞ்சோலையை (Park)யும் பார்த்துக் கொண்டே மாலை 6. 30மணிக்கு வீடுதிக்கு வந்தேன். பின் சிறிது காப்பி அருந்தி ஓய்வு பெற்றேன்.

இரவு 9மணிக்குச் சென்றால், மின்னியல் வீழ்ச்சியைக் காண முடியும் என்றனர். எனினும் பொங்கி மேலெழும் துளிகள் மறைக்கினும் மறைக்கலாம் என்று, விடுதி முகப்பில் இருந்த ஒளி வண்ணப் படத்தினைக் காட்டினர். இரவில் அங்கே செல்வது எப்படி என்ற உள்ளத்தாலும் சோர்வின் காரணத்தாலும் அங்கே செல்லவில்லை. (படத்தில் மிக நன்றாக அந்த வண்ணங்கள் தெரிந்தன.) பின் பால்டன் திரு. சர்மா அவர்களுக்கு, அவர்கள் ஏற்பாடு செய்தபடியே யாயும் நலமே உள்ளன என்று தொலைபேசியில் சொன்னேன். பின் எழுத வேண்டிய சில கடிதங்கள் எழுதி முடித்தேன். புறப்பட்டு சரியாக 35 நாட்களில் கண்ட வற்றை யெல்லாம் கருதினேன். அடுத்த 35 நாட்களில் (மொத்தம் 70 நாட்கள்) காணப் போகின்றவற்றை யெல்லாம் கனவு கண்டேன். பல எண்ணங்களுக்கிடையில் இரவு 10 மணி அளவில் உறங்கச் சென்றேன்.

(நயாகாரா) - கிளைவ்லேண்டு 9-5-85

இன்று காலை சற்று தாமதமாகவே எழுந்தேன். அதிகமாக வெளியே செல்ல வேண்டியதில்லை, ஓய்வாக மெல்லக் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குறிப்பனைத்தையும் எழுதி முடித்தேன். பின் பக்கத்தில் உள்ள ஒருவிடுதியில் சிறு பிஸ்கட், பால் அருந்தினேன். மறு படி நீர் வீழ்ச்சியினைக் காண விரும்பினேன். நான் தங்கிய இடத்திலிருந்து 15 நிமிட நடை தூரத்தில்தான் அது இருந் தமையின் நடப்பது எளிதாக அமைந்தது. அங்கே அதிகக் கூட்டமில்லை. ஒரே இடத்திலிருந்து இரு வீழ்ச்சிகளையும் காண முடிந்தது. அலைகொழித்து, புகை எழுப்பி, திளைத்து விழும் அலை இரண்டும் பின்இணைந்துசென்று,மின்னளித்து, பின் பரவும் நிலை அனைத்தையும் உயர் நிலையிலிருந்து கண்டேன். மிக உயரமான ஆய்வு நிலையத்தின் மேலே ஏறி நாற்புறமும் நோக்கினேன். நெடுந்தொலைவு தெரிந்தது. கனடா நாட்டின் உள்பகுதியும் பல தொழிற் கூடங்களும் தங்குமிடங்களும் தெரிந்தன. பேராறு ஒன்றியும் பின் பிரிந்தும் பிறகு காட்டிடை செல்லும் சுாட்சியும் அழகிது. கதிரவன் ஒளி அந்த நீர்த்திவலைகளின் இடைப்பட்டுத் தண்ணீரில் விழ, வானவில் - வையவில்லாக நீரில் மிதக்கும் வில்லாக - எழுநிறமும் காட்டி கண்ணுக்கு இனிய விருந்தாக அமைந்தது. சில சமயங்களில் வானத்தில் இருவில் தோற்றம் காண்பது போன்றே பரந்தாடும் தண்ணீரிலும் இருவானவில் கள் - வையத்துவில்லாகக் காட்சி தந்தன. எதிரிலே உள்ள சிறுசிறு தீவுகளிலும் மக்கள் குழுமியிருந்தனர். எனினும்

ஆற்றில் படகுவிடும் காலம் இன்னும் தொடங்கவில்லையாம். அதில் அமர்ந்து வீழ்ச்சிவரையிலும் செல்லும் காட்சி இனிமை யாகவும் - அதே வேளையில் அச்சமாகவும் இருக்குமாம். நான் அத்தகைய அனுபவத்தை காவிரியின் ஒக்கனகல் வீழ்ச்சியில் பெற்றிருக்கிறேன். (காண்க - மலைவாழ் மக்கள் மாண்பு) அங்கேயே சிறிது நேரம் இருந்து இறங்கி, பக்கத்தி லுள்ள கடைகளில் நுழைந்தேன். இந்நாட்டின் பிறபகுதி களைக் காட்டிலும் இங்கே உணவுப் பொருள்களும் பிற உணவுக்கு வேண்டியவையும் உடை, பிற சாமான்கள், வீட்டிற்கு வேண்டிய உட்கார வேண்டியவை அனைத்தும் விலை குறையாகவே உள்ளன. ஒரு வேளை நாட்டின் கடைசியாக உள்ளமையும், கனடாவில் உள்ள விலைகளை ஒட்டியும் இவை அமையலாம் என எண்ணினேன். எனினும் கோடையில் (ஜூலை, ஆகஸ்டு) தேவை கருதி உணவுப் பொருள்களின் விலைகள் கூடும் என்றனர்.

பின் நான் தங்கிய விடுதிக்கு வந்தேன். (Coachman Model) மோடல் என்பது தங்க எல்லா வசதிகளும் விடுதி களைப் போன்று உடையது; ஆனால் உண்பதற்கு ஒன்றும் கிடைக்காது. வாடகையும் சற்றே குறைவாக இருக்கும் போலும். என் விடுதிக்கு எதிலேயே உணவுக்கூடம் இருந்த தால் தொல்லை இல்லை. நான் நேற்று இவ்வூரைச் சார்ந்த வரலாற்று இடங்களையும் (Village of lewiston and Artpark Village of youngstown,Old fort,Niyagava)பிற முக்கியமான இடங்களையும் கண்டு விட்டேனாதலால் மறுபடியும் சுற்றச் செல்லவில்லை. நுரை கொழித்து விரைந்தோடும் பெரு வெள்ளம் குளிர்காலத்தில் அப்படியே உறைந்து கல்லாகிக் காட்சிதரும் நிலையை இப்போது என்னால் காண முடிய வில்லை. மேலும் இந்த இடத்தை விட்டும் பிரியவும் மன மில்லை, எனினும் முறைப்படியும் விதிப்படியும் நான் இந்த நாட்டை விட்டுச் செல்ல வேண்டியதை எண்ணினேன். எனக்காகச் சொல்லி வைத்த ஊர்தியும் 2 மணிக்கு வந்தது. இருபத்து நான்கு மணி நேரம் இங்கே கழிந்ததை எண்ணி

விடுதி அலுவலர்களிடம் (அவர்கள் அன்புடன் ஓம்பியதால்) விடைபெற்றுப் புறப்பட்டேன்.

வழியில் இந்த நயாகாரா போராறு எத்தனை விதங்களில் வளைந்தும் பிரிந்தும் இணைந்தும் வருகின்றது என்பதைக் கண்டேன். பரந்த அமெரிக்க எல்லையில்-இரு பெரு நாடுகளின் எல்லையாக நின்று வற்றாவளம் பெருக்கும் இப்பேராறு 'வாழ்க' என வாழ்த்தினேன், உந்து வண்டியினை ஓட்டிய செல்வியார் அது நாட்டிற்குப் பலவகையில் பயன்படுவதைக் கூறிக்கொண்டே வந்தார். 'யாருமில்லை; என் செய்வது' என்று எண்ணிக் கொண்டே இவ்வூருக்கு வந்த என்னை எனை ஆண்ட இறைவனுடன் என்னையும் வரவேற்று, இந்த ஊரின் இயற்கைச் செல்வம், அணைத்து இன்பூட்டி, இன்முகம்காட்டி, வாழ்த்தி வழியனுப்பிய உயர் நிலையை எண்ணிக் கொண்டே 'பப்பலோ' விமான நிலையத்திற்கு 3மணிக்கு வந்து சேர்ந்தேன்.

'பப்பலோ' என்று ஏன் பெயர் வந்தது என யாராலும் சொல்ல முடியவில்லை, நம் நாட்டிலும் ஒரு 'பப்பலோ' நாடு உண்டல்லாவா! ஆம் 'எருமை நாட்டைத்' தான் சொல்லுகிறேன். மைசூர் பகுதியை 'எருமை நாடு' என முற்கால இலக்கியங்கள் எல்லாம் புகழ்கின்றன. நம் நாட்டுச் 'சேலத்'தைப் போன்று இங்கே ஒரு ஊர் உண்டு; அப்படியே இந்த ஊரும் அமைகின்றது. வேங்கடவன் திருப்பதியும் (பிட்ஸ்பர்க்கில்) அமைந்து விட்டதல்லவா! விமான நிலையத்துக்குச் சற்று முன்பாகவே வந்து விட்டமையால் இவைபற்றி யெல்லாம் எண்ணிக் கொண்டே கண் மூடி மௌனியாகி உட்கார்ந்திருந்தேன். மாலை 6-50க்குத் தான் கிளைவ்லேண்டு விமானம். எனவே நான் அதுவரையில் காத்திருந்தேன். (ஊரில் காணவேண்டியுள்ள முக்கிய இடங்கள் ஒன்றுமில்லையாதலாலும் புது இடம், சென்றால் திரும்பி வரமுடியாத நிலையிலும் எங்கும் செல்லவில்லை)

கிளைவ்லேண்டில் மாலை 8 மணி அளவில் இறங்க வேண்டிய விமானம் காலம் தாழ்ந்து 8 மணிக்குத்தான்

புறப்பட்டது. சரியாக 9மணிக்குக் கிளைவ்லேண்டு சென்றது. அன்பர் கந்தசாமி அவர்கள் நுழைவாயிலேயே காத்திருந்தார். அவருடைய வீடு அருகிலேயே இருந்தது. (சுமார் 10 கல். சில இடங்களில் 35, 40, 45 கல்வரை சென்றிருக்கிறேன்.) வீட்டிற்குச் சென்றதும் திருமதி. விஜயா (திரு. கிருட்டினசாமிப் பிள்ளை அவர்கள் மகள்) அவர்கள் வரவேற்றார்கள். அவர்தம் தந்தையார் முன்னரே நான் வருவது பற்றி எழுதி இருந்தார்கள்.

கணவன் மனைவி இருவரும் அன்புடன் ஏற்றுப் புரந்தார்கள், நல்ல உணவு உண்டேன், பின் அவர்கள் பணி பற்றிக் கேட்டறிந்தேன். பெரிய மகன் இங்கேயே பொறியியல் படிப்பதாகவும் (சென்னையில் படித்தவர்) இளைய மகள் (9 வயது) 4வது படிப்பதாகவும் சொன்னார்கள். நான் இங்கே அமெரிக்க நாட்டுக்கு வரவேண்டிய காரணத்தையும் பிறவற்றையும் விளக்கிக் கூறினேன். இங்கே குளிர் மிக அதிகமாகவுள்ளது. பக்கத்தில் உள்ள பேரேரியின் வடகாற்றே இதற்குக் காரணம் என்றனர். சிகாகோவும் இப்படித்தான் இருக்குமாம். எனவே இன்னும் 10 நாட்கள் கடுங்குளிரில்தான் இருக்க வேண்டிருக்கும் போலும். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து இரவு 11 மணிக்கு உறங்கச் சென்றேன்.

கிளைவ்லேண்டு - 10-5-85

விடியற்காலை 5 மணி அளவில் கண் விழித்தேன். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, அடுத்த ஒரு மாதத்திற்கு அமைந்த பயணம் பற்றி எண்ணி முடிவு செய்தேன். இந் நாட்டில் இன்னும் செல்லவேண்டிய இடங் களுக்கு உடனே பயணப் பதிவு செய்துவிடல் நல்லது என்றனர். 1-6-85ல் ஹானலூலு விலிருந்து டோக்கியோ செல்லவும் பின் இந்தியா வரைக்குரிய பயணங்களும் பதிவு செய்யப்பெற்றன. எனவே அமெரிக்க நாட்டில் உள்ள பிற பயணங்கள் பற்றியும் தங்க வேண்டிய நாட்கள் பற்றியும் முடிவு செய்தேன். இந்த ஊரில் வரலாறு பற்றியோ வேறு வகையிலோ முக்கியமான இடங்கள் இன்மையாதலாலும் மிகவும் குளிராக இருந்தமையானும் எங்கும் வெளியில் செல்லவில்லை. இருவரும் பணி மேற்சென்றமையின் நான் தனிமையில் வீட்டில் ஓய்வு கொண்டேன். இவர்கள் 'Electronic' சம்பந்தமான பணியில் உள்ளமையின், மாலையி லும் நாளை மறுநாளிலும் அதுபற்றிச் சில கேட்டறிய விரும்பினேன்.

வீட்டிலேயே இருந்தேன். யாருமில்லை. தொலைக் காட்சியினைப் பார்த்துக் கொண்டும் படித்துக் கொண்டும் இருந்தேன். இதுவரை நீதி மன்றங்களைப் பற்றி அறியாத எனக்கு, தொலைக்காட்சியில் ஒரு விசித்திர வழக்கு பற்றிய விசாரணை கிடைத்தது. ஒரு பெண் தனக்கு உற்றவர் ஒருவரைக் கொலை செய்ததாக வழக்கு (உண்மையில் அவள்

கொலை செய்யவில்லை). அவள் கைது செய்யப் பெறுவதும், காவல் துறையினர் எவ்வளவு பொறுப்பாகப் பணி செய்கிறார்கள் என்பதும் காட்டப்பெற்றன. நம் நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன் இருந்த (Jury) சூரிகள் முன்னிலையில் நீதிபதி வழக்கினை விசாரிப்பது நன்குகாட்டப்பெற்றது. ஒரு பெண் நீதிபதியாக இருந்தார். குற்றவாளிக் கூண்டில் குற்றவாளி உட்காரவும் கூடும். இருதரத்து வக்கீல்களும் அவளைப் பல வகையில் கேள்விகள் கேட்கின்றனர். எதிரி (பிராசிகுஷன்) வக்கீல் சில தேவையில்லாத தனிப்பட்ட சில கேள்விகளைக் கேட்டபோது வாதியின் வக்கீல் அக்குறையச் சுட்டிக் காட்டுவதும், அதைக் கேட்டறிந்த நீதிபதி எதிர் வக்கீல்விடம் அத்தகைய கேள்விகள் கேட்கப் பெற வேண்டுவதில்லை எனச் சுட்டிக் காட்டுவதும் அவர் அதன்வழி அடங்கி நிற்பதும் நன்கு காட்டப் பெற்றன. விசாரணைக்கு முடிவில் - சிலநாள் கழித்து - இரு வக்கீல்களும் தத்தம் சார்பில் கொள்கைகளை (orguments) விளக்கிப் பேசுவதும், முடிவில் நீதிபதி, சூரிகளைப் பார்த்து அனைத்தையும் நன்கு ஆராய்ந்து முடிவு காணுமாறு வேண்டுவதும் நன்கு அமைந்தன. பின் சூரிகள் முடிவினையும் வாதப் பிரதிவாதங்களின் அடிப்படையினையும் ஆராய்ந்து, உண்மையினை உற்றறிந்து, நீதிபதி முடிவில் தன் தீர்ப்பை வழங்குவதும், நீதிமன்றத்துப் பிற அலுவலர் செயல்கள், நடைமுறை முதலியனவும் நன்கு காட்டப் பெற்றன. சட்டம் பற்றியும் நீதிமன்றம் பற்றியும் ஒன்றும் அறியாத எனக்கு இந்தக் காட்சி இந்நாட்டின் காவல்துறை, அறங்கூறு அவையம் பற்றி நன்கு விளக்கிற்று.

பிற்பகல் 2 மணி அளவில் உணவு கொண்டு (எனக்கெனத் தயாரித்து, திருமதி. விஜயா அவர்கள் வைத்துச் சென்றிருந்தார்கள்) சிறிது நேரம் ஓய்வு கொண்டு, பின்னும் பல நூல்களைப் புரட்டினேன். இவர்கள் வீட்டில் மட்டுமன்றி, நான், சென்ற ஒவ்வொரு வீட்டிலும் கலைக்களஞ்சியங்களும் பிற பொது நூல்களும் வாங்கிவைக்கப்

பெற்றிருந்தன. இங்கே இருவரும் அறிவியல் - மருத்துவத் துறை பயின்று பணியாற்றுவதாலும், மகன் மின் அணுத் துறை (Electronic) பொறியியல் பயில்வதாலும் அத்துறை கள் சார்பான நூல்கள் பல இருந்தன. நான் நம் பள்ளிக்குத் தெவையான 'கணிப்பொறி' பற்றிய குறிப்புகளோ நூல் களோ கிடைக்குமா என பலவற்றைப் புரட்டிப் பார்த்துக் கொண்டே இருந்தேன். நேரம் செல்வதே தெரியவில்லை.

மாலையில் மற்றொரு தொலைக்காட்சிப் படம் பார்த்தேன். அதில் வெள்ளையர் குடும்பம் ஒன்று கறுப்பர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு சிறுவனைத் தமக்கு உரியவ னாக்கிக் கொள்ளுகின்றது; சுவிகாரம் எடுத்துக்கொள்ளு கின்றனர். தாயை இழந்த அந்தப் பையனை அவன் தந்தையார் எவ்வளவு பற்றோடும், பாசத்தோடும் போற்றி னர் என்பதும், அதே வேளையில் வெள்ளையர் தம்பதிகள் இருவரும் அவனிடம் எவ்வாறு அன்பினைப் பொழிந்தார்கள் என்பதும் நன்கு விளக்கிக் காட்டப்பெறுகின்றன. நான்கு அல்லது ஐந்து வயது நிரம்பாத அந்தக் குழந்தை அழகாக, மு்கபாவத்தோடு, மணிமணியாக ஆங்கிலத்தில் பேசுவதும் மற்றவரிடம் பழகுவதும் பார்த்தும் கேட்டும் மகிழ்தற் குரியன. (படத்தில் சிறியவனாயினும் சற்றே வயது அதிக மானவனாகத்தான் இருப்பான்). தந்தைப் பாசம் பெற்ற குழந்தையை விட மனமில்லா நிலையில் நெகிழ்ந்து நின்றதை யும் கடைசியில் இளங்குழந்தை எதிர்கால வாழ்வையும் அதன் உளநிலையினையும் அறிந்து வெள்ளையரிடம் விட இசைந்த தன்மையையும் அக் குழந்தையை அணைத்துத் தம்மை மறந்து நின்ற வெள்ளையர் தம்பதியின் நிலையினை யும் நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளனர். தொலைக் காட்சிகளில் பலப்பல பயனற்ற விளம்பரங்களையும் வேடிக்கைகளையும் இதுவரையில் கண்ட எனக்கு இன்று இந்த இருவகைக் காட்சிகளும் சிறந்ததாகப்பட்டன. தொலைக்காட்சிகள் நல்லதும் செய்யக்கூடும் என்ற உண்மையினையும் உணர்ந்தேன். இவற்றுள் முன்னது

நாட்டு அறமன்றச் செயல்முறையினையும் பின்னது நிறவேறுபாடற்ற உள்ளம் ஒன்றுபட்டு உருவாகும் சமுதாய இணைப்பினையும் காட்டிய தன்மை என்றும் போற்றக் கூடியது.

நான் எனக்கென ஒதுக்கிய கீழ் அறையிலே (சுரங்கம் போன்றது) இருந்தேன். குளிர்மிக அதிகமாக இருந்தது. இது வரை இவ்வளவு குளிர் கண்டதில்லையென எண்ணினேன். வெளியிலே நல்ல வெயில்; எனவே காரணமறியாது திகைத்தேன். மாலை 5 மணி அளவில் திருமதி. விஜயா அவர்கள் வீடு திரும்பியதும் இது பற்றிக் கேட்டேன். அவர்கள் கீழிடம் எப்போதும் கதிரவன் ஒளிபரவாமையால் மிகக் குளிர்ச்சியாக இருக்கும் என்றும் மேல் தரைமட்டத் துக்கு வருமாறும் சொன்னார்கள். வெளியிலும் நல்ல கதிரொளியும் வெப்பநிலையும் உள்ளது என்றனர். எனவே மேலே வந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் குளிர் பறந்தது. 6 மணி அளவில் சற்றே தெருவில் குழந்தை பிரியாவுடன் சிறிது தூரம் நடந்தேன். நல்ல வெய்யில் 85 சூட்டுநிலை. எனவே வெளியிலேயே ஒருமணி நேரம் உட்கார்ந்து திரு. கந்தசாமி அவர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். இங்கும் இராமனால் தடவப்பெறாத அணில் பேருருவில் எங்கள் முன்வந்து நடனமாடி உணவு தேடி விளையாடிச் சென்றது.

மாலை 8 மணிக்கு, உணவுக்குப் பிறகு பிரியா படிக்கும் பாடங்களைப் பற்றிக் கேட்டேன். அவர்கள் மாண்டிசோரி பள்ளியில் படிப்பதால் - அதுவும் தனியார் நடத்துவதால் - மிகச் சிறந்த நிலையில் அமைந்துள்ளது என்றனர். இங்கும் 4வது வகுப்பில் பயிலும் அக் குழந்தை அழகாக ஆங்கிலத் தில் பாட்டும் கட்டுரையும் எழுதியுள்ளது. செய்முறை (Project) என்ற அடிப்படையில் இந்த ஆண்டு இந்து சமயத்தைப்பற்றி (Hinduism) ஒரு சிறந்த கட்டுரை எழுதி ஆசிரியர்தம் பாராட்டினைப்பெற்ற அக் குழந்தையை தான் பாராட்டினேன். அவர்தம் ஆசிரியர் இக் கட்டுரை

யால் தாம் பல புதிய உண்மைகளை உணர்ந்ததாகக் குறிப்பு எழுதியுள்ளார். (You did a fine job and I also learn many new things. Your report was well orgainzed).

இந்து சமய உண்மைகளையெல்லாம் அறியச் சில நூல் நிலையங்களுக்குச் சென்று, சில அறிஞர் எழுதிய புத்தகங் களையெல்லாம் படித்து, குறிப்பெடுத்து, தெளிவாக - ஆனால் சுருக்கமாகத் தந்துள்ளமையும், இந்த நாட்டில் பிறந்து, எத்தனையோ பொருள்கள் இருக்க, இதை ஆய்வுக்குத் தேர்ந்தெடுத்தமையும் அக் குழந்தையின் உள்ளத்தையும் உழைப்பையும் உணர்த்தின. இந்து சமயக் கடவுளர் - பிரம்மா - விஷ்ணு - ருத்திரன் (சிவன்) பற்றியும் அவர்தம் முத்தொழில் பற்றியும் வேதம், ஆகமம், உபநிடதம், கீதை, இராமாயணம், பாரதம் முதலியன பற்றியும், நான்கு யுகங்கள் பற்றியும் அந்த யுகங்களால் ஆகிய பல்வேறு கல்பங்கள் பற்றியும் விளக்கி, மும்மூர்த்தியர் தம் துணைவியர் அவர்தம் தொழில்கள் பற்றியும்கூறி, நடராசர் உருவம் பற்றியும் பிற உருவங்கள் பற்றியும் விளக்கி, கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் பற்றியும் ஆச்சிரமங்கள் பற்றியும் எடுத்துக் காட்டி, மோட்ச நகரங்களையும் அவற்றில் உயிர் பெறுநிலையினை யும் காட்டி, கோயில்களிலும் வீடுகளிலும் வழிபடும் முறை களையும் இன்னும் பலவற்றை விளக்கிக் காட்டியுள்ளமை சிறந்தது. இந்த நாட்டில் இத்தகைய உணர்வுடன் எல்லாக் குழந்தைகளும் இருந்தால், விரைவில் இந்த நாடே இந்து சமய நாடாகி விடுமே என நினைத்தேன். தற்போது ஓரளவு நம் சமயக் கொள்கைகள் இங்கே பரவி ஏற்றுக் கொள்ளப் பெறுகின்றன.

இத்தகைய பள்ளி (மாண்டிசோரி)யினை நாளை இங்கு விடுமுறையாதலால், சிகாகோவிலாயினும் காண முடிவு செய்தேன். குழந்தைகளின் வளர்ச்சியினைப் பற்றி பள்ளி மேற்கொள்ளும் பலவகை நிலைகளைப் பற்றி காட்டினர். சிலவற்றை உடன்கொண்டு செல்வேன். இ

குழந்தை வகுப்பில் எட்டே மாணவர்தாம். ஆனால் இவர்கள் கட்டும் சம்பளமோ ஆண்டுக்கு 2000 டாலர் (சுமார் 25,000 ரூபாய்). எனவே தனித்தனியாகப் பலவகையில் பிள்ளைகள் பயிற்றப்பெறுகின்றனர். நம் நாட்டிலும் ஓரளவாவது இதைப் போன்று செய்ய முயலலாம். ஆம்! இவ்வாறு மாதம் 2000 டாலர் அன்று, 2000 ரூபாய் சம்பளம் கொடுத்தால் - இடம் இருந்தால் - ஒரு குழந்தைக்கு ஒரு ஆசிரியர் தனியாகவே நாள் முழுதும் பாடம் சொல்லித்தர ஏற்பாடு செய்யாமே! (எனினும் நம் நாட்டு ஆசிரியர் மாணவர் இயைபு! 1 : 20 எனவாவது குறைத்தல் வேண்டும்) 'ஆம்'. அந்த எண்ணத்தோடு, இன்றைய பணியினை முடித்து உறங்கச் சென்றேன்.

கிளைவ்லேண்டு 11-8-85

நேற்று மாலை படுக்கப் போகுமுன் திரு. கந்தசாமி அவர்கள் வந்து, இங்குள்ள இருபெரு மருந்தகங்களில், நம் பள்ளியின் ஆய்வுகளத்துக்குத் தேவையான (Biology, Chemistry and Physics) துணைக் கருவிகள், நூல்கள் பிறவற்றை நன்கொடையாகத் தருவார்களென்றும் தேவையைச் சொன்னால் வாங்கிக் கப்பல்வழி அனுப்ப இயலும் என்றும் சொன்னார்கள். நான் ஊர் சென்றதும் முதல்வரைக் கலந்துக்கொண்டு தேவைக்கு எழுதுவதாகக் கூறினேன். மின்சாரம், மின்அணு முதலியனபற்றிப் பல பல கருத்துக்களைச் சொன்னார்கள். அப்போது எனக்கு, நயாகரா வீழ்ச்சிப் பக்கத்தில் 'DC' மின்விசையிலிருந்து 'AC' விசையினைக் கண்டுபிடித்த அறிஞரின் சிலை வைக்கப் பெற்றிருந்தது நினைவுக்கு வந்தது (அங்கே குறிக்கவில்லை).

காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு, குழந்தை 'நடனம்' கற்கும் இடத்திற்கு என்னையும் வரச் சொன்னார்கள். நானும் விருப்பமுடன் சென்றேன். இந்த நாட்டிலும் சரி, இங்கிலாந்து, பிராஞ்சு முதலிய நாடுகளிலும் சரி, நம் பாரத நாட்டிலிருந்து - சிறப்பாகத் தமிழகத்திலிருந்து குடியேறி வாழ்கின்றவருள் பெரும்பாலோர் தத்தம் பெண்களுக்கு நடனம் கற்றுக் கொடுக்கின்றனர். பல்கலைக் கழகங்களில் அது பாடமாக இன்றேனும் வீடுகளில் பள்ளிப் பாடத்தைவிட நன்கு போற்றப்பெறுகின்றது. நான் தங்கிய ஒரு வீட்டில் (திரு. வள்ளியப்பன்) அக்குழந்தை (2வது

பயில்வது 7 வயது இருக்கும்) நாள்தோறும் காலையில் பதிவு நாடாவை எடுத்து வைத்து அது பாட, அதன்படி தானே பயிற்சி செய்வதைக் கண்டேன். அப்படியே திருமதி. சதானந்தம் அவர்கள் தம் வீட்டிற்கே இளம் பெண்களை வரவழைத்து நாட்டியம் கற்றுக் கொடுக்கின்றனர். வேறு சில வீடுகளிலும் வந்து கண்ட பல அன்பர்தம் வீடுகளிலும் நடனம் பயிலும் பெண்கள் உள்ளனர். பிர்ட்ஸ்பர்க் வேங்கடவன் கோயிலில் வாரந்தோறும் நடனம், இசை வகுப்புகள் நடைபெறுவ தறிந்தேன்.

• நடனங்கள் பெரும்பாலும் நம்நாட்டுப் பண்டைய மரபினை ஒட்டியே கற்பிக்கப் பெறுகின்றன. எனினும் அபிநயத்துக்குரிய பாடல்களின் பொருள்களையும் விளக்கங்களையும் பிறவற்றையும் ஆங்கிலத்திலேயே சொல்லிக் கொடுக்கின்றனர். தமிழரல்லாத கன்னட தெலுங்குநாட்டுக் குழந்தைகளும் பயில்கின்றனர். மேலும் நம் தமிழ் நாட்டுக் குழந்தைகள் பலருக்குத் தமிழே தெரியாதே! ஆங்கிலத்தில் மிகச் சரளமாகப் பேசும் குழந்தைகள் தமிழில் தடுமாறிப் பேசுகின்றனர்; எழுத்தே தெரியாது. விட்டில் தாய், தந்தை இருவரும் பணிமேற் செல்வதாலும் உதவிக்கு யாரும் இல்லையாதலாலும் அலுவலகப்பணி, வீட்டுப் பணி இவற்றைக் கவனிக்கவே நேரம் போதவில்லை, பாவம் இயந்திரங்களாகவே இயங்குகின்றனர். இரவில் ஒரு வேளை தான் நல்ல சமையலும் உணவும். இந்த நிலையில் அவர்களுக்கு, தம் பிள்ளைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க நேரம் எங்கே? சில பிள்ளைகள் கற்கவும் விரும்புவதில்லை இந்நாட்டுப் பழக்க வழக்கங்களில் மூழ்க நினைக்கின்றனர். எனவேதான் பல பெற்றோர்கள், முன்னரே நான் குறித்த படி, குழந்தைகள் பொருட்டுத் தாயகம் திரும்பத் திட்டமிடுகின்றனர். ஆயினும் எத்தனைபேர் திட்டத்தை நிறை வேற்றுவார்களோ?

நடனத்தில் அபிநயம் பிடிக்கும் பாடல்களுக்குச் சரியாகப் பொருள் தெரியாததால், பிள்ளைகள் கற்கச் சிறிது

கடினமாகின்றது. இன்று நான் சென்றவிடத்தில், 'கற்பக வல்லி நின் பொற்பதகங்கள் பணிந்தேன்' என்ற பாடலும் 'வானரங்கள் கனி கொடுத்து' என்ற குற்றாலக் குறவஞ்சியும் வேறுசில பாடல்களும் நடனத்துக்கு ஏற்ற பாடல்களாகக் கொள்ளப்பெற்றன. எல்லாப் பாடல்களையும் ஜதி, சுரம் முதலியவற்றையும், ஆரம்பப் பாடங்களையும் நாடாக்களில் பதிவு செய்து நன்கு பயன்படுத்துகின்றனர். பயில்கின்றவர்கள் தத்தமக்குரிய நாடாக்களைத் தாமே எடுத்துச் செல்லுகின்றனர். அதை இயக்கும் பெட்டியினை ஆசிரியர் கொண்டு வருகிறார்.

இன்றைய வகுப்பு ஒரு ஆரம்பப் பள்ளியில் (4-ம் வகுப்பு வரை) நடை பெற்றது. பள்ளி, பரந்த நிலப்பரப்பில் (சுமார் 4 ஏக்கர் இருக்கும்) ஒரே அடுக்கில் அழகுறக் கட்டப் பெற்றுள்ளது. இங்கேயும் அரசாங்கம், வீடுகள் மரங்களால் இருப்பினும், பள்ளிகள் திண்ணிய சிமிட்டி, சுண்ணாம்பு, இரும்பு கலந்த நல்ல உரமுள்ள வகையில் இருப்புக் கர்டர்கள் இட்டுச் செம்மையாகக் கட்டவேண்டும் என உத்தரவிட்டுள்ளது. எனவேதான் மக்கள் வாழிடங்கள் எப்படி இருப்பினும் (அவையும் ஒழுங்காக வரிசையாக முறைப்படியே கட்டப்பெற்றுள்ளன; நம் நாடுபோலக் கண்டபடி கட்ட இயலாது) பொது இடங்கள் அனைத்தும் வலுவுடன் நூறாண்டுகள் நிலைக்கும் வகையில் இரும்பு, சிமிட்டி, கருங்கல்ஜல்லி கலவையாகிய 'காங்கிரிட்' கொண்டே கட்டப் பெற்றுள்ளன; பெறுகின்றன. நயாகராவில் ஒரு பாலம் கட்டும் பணியினையும் புதிய சாலையிடும் பணியினையும் கண்டு, அவர்தம் வேலைப்பாடுகளையும் அவற்றிற்குப் பயன்படும் கருவிகளையும் கண்டு வியந்தேன். இங்கே இத்தகைய பொதுப் பணிகளுக்கு ஒதுக்கப் பெறும் தொகை அனைத்தும் அதற்காகவே செலவிடப் பெறும். ஏதோ ஒரு அளவில் செலவிட்டு மிகுதியை எங்கேயோ போக்கும் நாகரிகம் இங்கே இல்லை. ஏனவே பொது இடங்கள் நன்கு திண்மையாகவும் செம்மையாகவும் உள்ளன.

இன்றைய வகுப்பு நடந்த ஆரம்பப்பள்ளியில், ஆசிரியர் வகுப்பு நடத்த ஒரு நாலைக்கு 5 டாலர் வாடகை தருகிறார் களாம். வேறு இடமாயின் ஒரு மணிக்கு 20 டாலர் வாடகை யாம் (இங்கே எல்லாம் - தெருவில் கார் நிறுத்துவது முதல் எல்லாம் - மணிக்கணக்கே; சம்பளமும் அப்படித்தான்). பெரும்பாலும் பள்ளிகளே இத்தகைய, கலை, கலாசாரச் சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கு மிகக் குறைந்த வாடைக்கு விட்டு உதவுகிறார்களாம்; ஆயினும் வாடகை தருவதாகச் சொல்லி முடிந்த பின் ஏமாற்றும் 'தனவந்தர்' இங்கே கிடையாது. (அங்கே நம் பள்ளியில் ஒரு நிகழ்ச்சிக்குப் பள்ளியின் நாற்காலிகள், இடங்கள், மின்சாரம் அனைத்தை யும் பயன்படுத்தி, இவ்வளவு தருகிறேன் என்றும் சொல்லி, அறிந்தவராதலின் முன்பணம் கேட்க வேண்டாம் என விட்டமையின், நிகழ்ச்சி முடிந்தபின் அத்தனை வேலை களையும் செய்த பணியாளர்களுக்கும் பள்ளிக்கும் ஒன்றும் தராத திரும்பிப்பார்க்காத பெரிய மருத்துவர் என் கண்முன் நின்றார்.)

இந்த நடன வகுப்பை நடத்திய பெண் இளையவர். மருத்துவம் பயின்று அதில் உயர்பட்டம் பெற்று மருத்துவ மனையில் பணியாற்றுகின்றார். இனிய 'நச்சினார்கினியர்' என்ற பெயரை உடையவர். காரில் போகும்போதே, திருமதி விஜயா அவர்கள் பெயரைக் கூறியவுடன். ஏதோ தெரிந்த குடும்பத்துக்குப் பெண் என எண்ணினேன். என் எண்ணம் சரியே. அங்கே ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியையாகப் பணிபுரியும் திருமதி சந்திரா பார்த்தசாரதியின் நெருங்கிய உறவினர். நான் சென்றதும் என்னை அன்புடன் ஏற்று இருக்கை தந்து, தம் பணிவழியே தலை நின்றார். ஒருபுறம் அறையில் 4' உயரத்துக்கு முற்றும் கண்ணாடி புதைத்திருந்தது. இந்த நடன நிகழ்ச்சிக்கு எனவே அமைத்ததோ என ஐயுற்றேன். பள்ளியில் 'பாலே நடனம் பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்கிறார்கள் எனவும் அதற்கெனவே அவ்வாறு அமைக்கப் பெற்றதெனவும்

அதையே நம் நடன வகுப்பு நடத்தக் கொடுத்துள்ளார்கள் எனவும் கூறினர். நம்பள்ளியிலும் அத்தகைய அறை அமைத்து நடனம் கற்றுக் கொடுத்தால் நல்லதாயிற்றே என எண்ணினேன்.

இரண்டு மணி நேரம் அந்த நிகழ்ச்சிகளைக் கண்டேன். பிற்பகல் 1 மணிக்கு நச்சினார்கினியையிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டேன். நடனத்துக்குரிய பாடல்களின் பொருள்கள் எளிதாகத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் விளக்கி எழுதிக் கொடுத்தும் சொல்லியும் வைத்தால் பொருளை உணர்ந்து பிள்ளைகள் எளிதில் நடனம் பயில முடியும் என்றேன். எங்கோ, ஏதோ, பணியின் பொருட்டு, பெரிய மருந்தகத்தில் பணிபுரிந்து, தனியாக வாழ்கின்ற இந்த இடத்திலும், நம் நாட்டுக் கலையை வேறு எங்கும் காண முடியாத ஆண்டவனையே நடன நாயகனாக - நடராசனாகக் காட்டிப் போற்றும் கலைமை ஓம்பி, மற்றவர்களுக்குக் கற்றுத் தரும் சிறப்பினை எண்ணி அவர்களைப் பாராட்டி அவர்கள் 'வாழ்வு வளமுற்றுச் சிறக்க' என வாழ்த்தி விடைபெற்றேன், வீட்டில் உணவு கொண்டு ஓய்வு பெற்றேன். திரு. கந்தசாமி அவர்கள் மேலும் பயில்கின்ற ராதலின் (M.B.A.) அதன் வகுப்பு சனிக்கிழமை தோறும் நடைபெறும். காலை 7 மணிக்கு சென்றவர் மாலை 5 மணிக்குத் தான் வீடு திரும்புவாராம். வந்தபின் வெளியே ஒரு அன்பர் வீட்டிற்கு விருந்திற்குச் செல்வோம் என்று கூறிச் சென்றார். வாரத்தின் நாட்களெல்லாம் இயந்திரமாக உழைத்து, ஓய்வுநாளிலேயும் மேலும் மேலும் கற்கும் அவர் ஆர்வம் போற்றுதற்குரியது.

வெளியே கதிரவன் நல்ல ஒளி வீசிக் கொண்டிருந்தான். எனவே சற்றே வெளியில் உலாவிவந்தேன். திரு, கந்தசாமி அவர்கள் தம் மகன் சீதரை (பொறியிற்கல்லூரி விடுமுறை) அழைத்துவரச் சென்றனர். மாலை 6.30க்குத் திரும்பும் போது அவர் இருந்தார். அவருடன் கல்லூரி வாழ்வைப் பற்றிப் பேசிக் கொண்டேன். (அவர் சென்னையில் D.A.V ல்

XII பன்னிரண்டு வரை பயின்றவர்.) பொறியிற் கல்லூரியின் பல்வேறு பிரிவுகள் பற்றியும் அவர் பயிலும் மின் அணுத் துறை (Electronic) பற்றியும் விளக்கி உரைத்தார்.

மாலை 7-30க்கு மற்றெரு அன்பர் வீட்டில் குழந்தைகள் தம் பிறந்தநாள் விழாவிற்கு அனைவரும் சென்றபோது நானும் சென்றேன், சூரியன் 8-30 வரை இருப்பதால் பகலாகவே இருந்தது. பல நகர்ப்புறக் குடியிருப்புகளைக் கண்டு கொண்டே நண்பர் வீட்டிற்குச் சென்றேன், எல்லா இடங்களைப் போன்றும் இங்கும் பலப்பல தொழிற்கூடங்கள் பள்ளிகள் பிற வழி நெடுக இருந்தன. சென்ற வீட்டில் வேறுபல அன்பர்களும் இருந்தனர். பிறந்ததாள் விழாவிற்கு உரிய குழந்தைகளைக் காலையில் நடன அரங்கில் கண்டுள் ளேன். அவர்கள் வீட்டில் உள்ள மற்றொரு சிறு குழந்தை யும் என்னைக் கட்டி அணைத்து வரவேற்றது. அவ்வீட் டிற்கு உரிய சிவானந்தம் அவர்களும் வந்திருந்த அவர் நண்பர்கள் சுப்பிரமணியம், பரமசிவம் ஆகியோரும் கோவை யில் மருகர் வேதபுரியிடம் பயின்றவர்கள். நான் இன்னார் என்று சொன்னதும் இரட்டை மகிழ்ச்சி அடைந்தனர். அவர் தம் குழந்தைகள் இரண்டினையும் சென்னையில் 4, 5ம் வகுப்புகளில் படிக்கவிடுவதற்கு அடுத்த மாதம் 15ம் தேதி அங்கே வருவதாக கூறினர். யாழ்ப்பாணத்து அன்பர் ஒருவர் திரு. பாலசுப்பரமணியம் அவர்கள் வந்திருந்தார். இலங்கை யின் இன்றைய கொடுமைகளையும் விடிவு இல்லாத நிலை யினையும் சொல்லி வருந்தினார். மக்கள் - தமிழ் மக்கள் இவ்வளவு கொடுமைக்கு உள்ளாகியும் நாகரிக உலகம் பார்த்துக் கொண்டிருப்பதை நோக்கின் 'கடும்புலி வாழும் காடு நன்றே' என்ற சொல் சரியாகவே இருக்கும் என எண்ணினேன். அங்கே வந்திருந்த அன்பர்கள் பலருடன் பேசிக்கொண்டே இருந்தேன். நல்ல உணவு கொண்டேன். பலரும் முன் அறிமுகமில்லாரேனும் நன்கு பழகினர். இந் நாட்டில் அமெரிக்கரும் கூட, தெருவில் சென்றால், அறிந் தவர் போல 'ஹாய்' என்று கூறி வணக்கம் செலுத்திச்

செல்லுகின்றனர். அந்த நிலையிலன்றி உண்மையிலேயே அங்குவந்த அன்பர்கள் உளத்தால் அளவளாவிப் பேசினர். அனைவருடன் இரவு 11-30 வரை இருந்தோம். இந்நாட்டு முறைப்படி 'கேக்வெட்டல்' பங்கீடு அனைந்தும் முடிந்தபின் வீடு நோக்கிப் புறப்பட்டோம். சரியாக 12 மணி அளவில் வீடுதிரும்பினோம். நாளை சிக்காகோ செல்வது பற்றி எண்ணி உறங்கச் சென்றேன்.

(கிளைவ் லேண்டு)—சிகாகோ 12-5-85

நாடோடி மன்னனாக நாற்பது நாட்களாக பல ஊர்களைச் சுற்றி வந்த நான் அடுத்த 30 நாளைக் கணக்கிடத் தொடங்கினேன். 12-6-85ல் நான் சென்னையில் இருக்க வேண்டுமல்லவா! எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குறிப்பினை எழுதி முடித்தேன். காலை நாளிதழைப் புரட்டினேன். (நியுயார்க் டைம்ஸ் - Newyork Times) அங்கே தாயகத்தில் தில்லியில் நடந்த கொடுமையைப் படித்து வருந்தினேன். உயிர்களிடத்து அன்பு காட்ட வேண்டிய சமய நெறி வெறியாக அழிவினைத் தூண்டுவதை நினைந்து 'உலகம் எங்கே செல்கிறது?' என நானே கேட்டுக் கொண்டேன். உள்ளம் வேதனையால் வெந்தது.

காலைச் சிற்றுண்டிக்குப்பின் திரு. கந்தசாமி அவர்கள் நகர் நலம் காட்டத் தம் காரிலேயே அழைத்துச் சென்றனர். 10 மணிக்குப் புறப்பட்ட நாங்கள் ஒரு மணி அளவில் திரும்பினோம். 'கிளைவ் லேண்டு' நகரம் அழகியது. ஒரு சில உயர்மாடிக் கட்டடங்கள் இருப்பினும், பெரும்பாலும் ஓரளவில் நின்றன. பல அலுவலகங்கள் - மத்திய - மாநில - நகர அலுவலகங்கள் தனித்தனி அமைந்து ஓங்கி நின்றன. போகும் வழியில் 'கார்' தூய்மை செய்யவேண்டும் என்றார் (நம் நாட்டில் 'சர்வீஸ்' செய்தல் என்பர்) அதற்குக் குறைந்தது மூன்று மணி நேரமாகுமே என்றேன். 'இரண்டு நிமிடங்களில் எல்லாம் முடியும்; நீங்களும் நானும் வண்டியிலே இருக்கலாம்' என்றார். காருக்குத் தேவையான 'கேஸ்'

(Gas - இங்கே 'Petrol' ஐ அவ்வாறு அழைக்கின்றனர்) போட்டுக்கொண்டு தூய்மைப்படுத்துவதற்கு இரண்டு டாலர் (சுமார் 25 ரூபாய்) கட்டினார். நாங்கள் உள்ளே உட்கார்ந்தே இருந்தோம். சுமார் 30' 40' அடியுள்ள ஒரு பெருமுழையுள் கார் சென்றது. நாற்புறமும் தண்ணீர் கொட்டிற்று. பல விதிறிகள் கீழும் மேலும் சுற்றிலும் தூய்மைப்படுத்தின. நல்ல நுரை (சோப்) கலந்த நீர் மேலும் பொழிந்தது. பின் மற்றொரு துடைக்கருவி அனைத்தையும் தூய்மைசெய்தது. எல்லாம் இரு நிமிடங்களே; கார் வெளியே புறப்பட்டது. குறைந்த நேரத்தில் - குறைந்த செலவில் - இவ்வளவு தூய்மையாகக் காரைத் துப்புரவு செய்யும் வழக்கம் நம் நாட்டில் இல்லையே என வருந்தினேன் (முன் பதிவு செய்து, மூன்று மணி நேரம் காத்திருந்து 50, 60 ரூபாய் கொடுத்து எப்படியோ தூய்மை செய்து - ஆளுக்கும் கைக்காசு கொடுத்து அங்கே நாம் படும் அவதியை நினைந்தேன்) பின் 'கார்' நேராக நகர் நோக்கிச் சென்றது.

நகரின் பெருந்தெருக்கள் வழியே செல்லும் போது, எல்லாக் கட்டடங்கள் பற்றியும் அவற்றில் உள்ள பணியகங்கள் பற்றியும் பிற பற்றியும் விளக்கிக் கொண்டே வந்தார். சாலை அமைப்பு, அவற்றின் எண்கள் - தெற்கு வடக்காகச் செல்வன ஒற்றை எண்பெற்றன - மேற்குக் கிழக்காகச் செல்வன இரட்டை எண் பெற்றன. இணைக்கும் சாலைகள் எந்த எண் பெற்றன என்பவற்றையெல்லாம் விளக்கி, புதிதாக வருபவரும் எளிமையாகப் பயணம் செய்யும் வகையில் அவை அமைந்த சிறப்பினைச் சொன்னார்.

நேராக நாங்கள் இந்நகர் எல்லையில் அமைந்த ஒரு பெரிய ஏரிக்கரையை அடைந்தோம். இடையில் ஒரு ஆற்றினைக் கடந்தோம். இந்த நாட்டினையும் வடக்கே உள்ள கனடாவையும் ஐந்து பேரேரிகள் பிரிக்கின்றன என்றும், சிகாகோவிற்கு மேற்கே உள்ள இரண்டு பேரேரிகளும், சிகாகோ ஏரியும் இந்த ஹூர் ஏரியும் இதற்குக் கீழ்

உள்ள நியூயார்க் - பாஸ்டன் இவை ஒட்டிய பேரேரியும் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாக உள்நாட்டு வாணிப வளனை அட்லாண்டிக் சமுத்திரத்துக்குக் கொண்டு வருகின்றனவாம், இவையாவும் தான் நியாகார வீழ்ச்சியாகி, அடுத்துள்ள பேரேரிக்குச் செல்கின்றனவாம். (அங்கே கப்பல்கள் போக வேறு ஆற்றின் வழி பயன்படுத்தப்படுகின்ற தாம்) இவை அனைத்தும் மாரிக்காலத்தில் - குளிர்காலத் தில் உறைந்து பனிக் கட்டியாகி விடுமாம்; ஒரு போக்கு வரத்தும் இருக்காதாம். அங்கே கரையில் ஆயிரக்கணக்கான சிறுபடகுகள் இருந்தன. கோடை நாட்களில் (ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர்) இங்கே பெரும் கூட்டம் இருக்குமாம். பொழுது போக்குக்காக வந்து, படகில் உல்லாசப் பயணம் செய்வார்களாம். அதன் பரந்த நீர்ப்பரப்பை நோக்கினேன். மறு கரை தெரியவில்லை. எனவே இதைக் கடல் எனலாம் என்றேன். இந்தக் கரையை ஒட்டி, கப்பல்கள் காற்றில் அசையாவண்ணம் சுற்றிலும் தொலைவில் (நம் சென்னைத் துறைமுகம்போல) சுவர் எழுப்பி உள்ளனர். உள்ளே சில சாமான்கள் ஏற்றிய கப்பல்களும் இருந்தன. இயற்கை அமெரிக்காவுக்கு வாரி வழங்கும் பெருஞ்செல்வ நிலையை எண்ணினேன். நம் நாட்டில் மூவாயிரம் கல் கடற்கரை இருந்தும், பம்பாய் தவிர்த்து, மற்ற இடங்களில் இத்தகைய இயற்கை நலம் இல்லையே என எண்ணினேன். நெடிது நின்று நினைந்து, பின் ஊருக்குள் புகுந்து பல காணத் தொடங்கினேன்.

இந்த ஊரிலும் இரு பெரும் பல்கலைக் கழகங்களும் வேறு பல கல்வி நிலையங்களும் உள்ளன. ஒரு பல்கலைக் கழகத்தே பெரும்பாலும் ஆய்வு செய்பவர்களே மிகப் பெரும் பான்மையாக உள்ளனர் என்றும் வேளாண்மை, மின்துறை முதலிய இங்கே சிறப்பிடம் பெறுகின்ற தென்றும் கூறினார். இன்று விடுமுறையானதால் உள்ளே சென்று காண முடிய வில்லை, நல்ல நூல்நிலையமும் தெளிவான ஆய்வு அரங்கங் களும் கலைநலம் போற்றும் பேரரங்கமும் உள்ளனவாம்.

ஒரு பக்கத்தே ஒரு உயர்ந்த விளையாட்டரங்கம் கண்டேன். அதில் சுமார் இரண்டு லட்சம் மக்கள் உட்கார்ந்து பார்க்கக் கூடிய சுற்றிய அடுக்கிருக்கைகளும் மூடிய இருக்கையிடங்களும் உள்ளனவாம். மிக உயர்ந்து காணப்பெற்றது. வாயில் அழகியது. அடிக்கடி கோடைக் காலத்தில் இங்கே பல விளையாட்டுகள் நடைபெறுமாம். சிலவற்றிக்கு செல வெல்லாம் போகப் பத்து இலட்சம் டாலர் நிச்சயமாக மிகுதியாக வருமாம். எங்கேயும் இந்த விளையாட்டு அரங்கங்கள் வேடிக்கை அரங்கங்களாக நின்று நல்ல வருவாயினைத் தருகின்றனவன்றோ? நம் நாட்டிலும்தான்.

பின் நகருக்குள் புகுந்து பல்கலைக்கழகங்களை அடுத்து இரு பெரு மருந்தகங்களைக் கண்டேன். பல நாடுகளிலிருந்தும் இந் நாட்டில் பல மாநிலங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் இங்கே வைத்தியம் செய்து கொள்ள வருகின்றார்களாம். இங்கே பலதுறைகள் சிறந்துள்ளன; மிகச் சிறந்ததாக திறந்த இதயச் சிகிச்சை (Open heart) செய்யப் பெறுகிறதாம். நாம் நாட்டிலிருந்தும் சிலர் இங்கே வந்து அந்தச் சிகிச்சை செய்து கொண்டு திரும்பியுள்ளனராம். ஒரு வாரத்தில் முடிந்து திருபிவிடலாம். இந்த நாட்டிலேயே இது மிகச் சிறந்த ஒன்றாகப் போற்றப் பெறுகின்றதாம். இந்திய நாடு உட்பட பல நாட்டுப் பேரறிஞர்கள் இங்கே பணியாற்றுகின்றனர். வெளிநாடுகளிலிருந்து வரும் நோயாளிகளும் அவர் உடன்வருபவரும் தங்குவதற்கெனத் தனித்தனி அறைகள், தக்க வசதிகளுடன், அமைந்த பெரிய பல மாடிக் கட்டடமும் ஒன்று உள்ளது. நோய் பெற்றோர் நோய் நீங்கத் தக்க நல்வழிகளில் சிகிச்சை செய்வதோடு, மேலும் அத்துறை பற்றிய ஆராய்ச்சிகளும் நடைபெறுகின்றனவாம். இந்தச் சிற்றூரின் பரந்த மருந்தகத்தின் எல்லையில் பத்தில் ஒரு பகுதிகூட நம் சென்னை மருந்தகம் இராது. (இதனால் அதை நான் குறை கூறவில்லை; இப்படியெல்லாம் நம் நாடு என்று வளருமோ என்ற ஏக்கத்திலேயே எழுதுகிறேன்). சென்னைக்கு வெளியில் உள்ள எத்தனையோ பரந்த இடங்

களில் நம் அரசு, இதுபோன்று எல்லா வசதிகளும் கொண்ட மருந்தகம் நிறுவி, நம் நாட்டுச் சிறந்த மருத்துவர்களை யெல்லாம் அங்கேயே வைத்து ஆதரித்தால், எத்தனை எத்தனையோ உயர்பட்டம் பெற்ற நம் நாட்டு மருத்துவர் கள் இந்த நாட்டுக்கு வரமாட்டார்களே! அப்படியே பொறி யியல் அறிஞர்களும் நம் நாட்டுச் செலவில் உயர் படிப்பெல் லாம் படித்து, பட்டம் பெற்று, அவர்கள் அங்கே பணியாற்ற வழியில்லாமல் அல்லவா இங்கு வந்து, ஏதோ வாழ வேண்டும் என்பதற்காக வாழ்கிறார்கள். இனியாகிலும் நம் தமிழக அரசும் இந்திய அரசும் இதை எண்ணிச் செய லாற்றுமா என்ற உணர்விலேயே இத் தொடர் குறிப்பில் பலப்பல எழுதத்தோன்றுகிறது. அப்படியே பல்கலைக் கழகங்களில் நடைபெறுகின்ற ஆய்வுகள் எப்படி இந்நாட்டுக் கும் பயன்படுகின்றன என்பதை எண்ணும்போது, நம் நாட்டுப் பல்கலைக்கழகங்கள் அடுக்கடுக்காக அடுக்கி வைத் திருக்கும் ஆய்வுக்கட்டுரைகள் எதற்கும்பயன்படாதுகாட்சிப் பொருளாக உள்ள கொடுமையினையும் என் உள்ளம் எண்ணிற்று. தமிழ்த்துறையில் ஆராய்ப்பெறுகின்ற கட்டுரை கள் தமிழ் மக்களுக்காவது பயன்பட வேண்டாமா? பயன் படுகிறதா? எண்ணிப்பார்க்க வேண்டும். ஏழைகள் வரிப் பணத்தால் பல்கலைக்கழகங்கள் செயல்பட அதன் வழி வரும் ஆய்வுகள் அனைத்தும் அந்த ஏழை மக்களுக்கும் பயன் தர வேண்டாமா? இதை எந்தப் பல்கலைக்கழகமாவது அங்கே எண்ணிப் பார்த்ததுண்டா?

எங்கோ சென்றுவிட்டேன் 'எண்பது கோடி நினைந் தெண்ணுவன்' என்று எனக்காகவேதான் அன்றே 'ஔவையார் பாடினார் போலும். அந்தப் பல்கலைக்கழகங் களையும் மருந்தகங்களையும் பார்வையிட்டுத் திரும்பினேன். இந்த மருந்தகங்களில்தான் பலப்பல பொருள்கள் தேவை யாளருக்குத் தரப்பெறுகின்றன என்றும், எங்கள் பள்ளிக்கும் அறிவியல் ஆய்வு அரங்குக்கும் தேவையானவற்றைச் சொன்னால் கப்பல்வழி அனுப்ப ஏற்பாடு செய்ய முடியும்

என்றும் திரு. கந்தசாமி அவர்கள் கூறியபோது நான் மகிழ்ந்தேன். ஊர் சென்றதும் எங்கள் முதல்வருடன் கலந்து தேவைக்கு முறைப்படி கடிதம் எழுதுகிறேன் என்றேன். அங்குள்ள சில கலை சம்பந்தமான - அறிவியல் சம்பந்தமான பொருட்காட்சிகள் (Museum) பார்க்கத் தக்கன. அவர்கள் ஆராய்ச்சிகளும், கண்டுபிடிப்புகளும் பழைய ஆய்வுப்பொருள்களும் கண்டு, எண்ணி கருத்திருத்திப் போற்றத்தக்கன. அனைத்தையும் கண்டு கொண்டே ஒருமணி அளவில் வீடு திரும்பி உணவு கொண்டோம். நான்கு மணிக்கு விமானத்தில் சிகாகோ புறப்பட வேண்டுமாதலால் அதற்கென ஆவன செய்ய முயன்றேன்

சற்றே ஓய்வு பெற்று மாலை நான்கு மணிக்கு விமான நிலையம் புறப்பட்டேன். திருமதி. விஜயா கந்தசாமி அவர்கள் நன்கு உபசரித்து வழி அனுப்பினார்கள். திரு. கந்தசாமி அவர்கள் விமான நிலையம் வந்து நான் விமான நுழைவாயிலில் செல்லும் வரையில் உடன் இருந்து வழிநெடுக என் பயணம் முழுதும் எப்படி இருக்க வேண்டும் என்பது பற்றியும் உடல் ஓம்பும் முறை பற்றியும் விளக்கிக்கொண்டே வந்தார். நன்றிகூறி அவர்களிடம் விடை பெற்றுப் புறப்பட்டேன். விமானம் சரியாக மாலை 5க்குப் புறப்பட்டது.

சரியாக சிகாகோ நேரப்படி (ஒரு மணிநேரம் பிந்திச் செல்லும்) 5-15க்கு சிகாகோ விமானநிலையத்தில் இறங்கினேன். விமானநுழைவாயிலில், திரு. ஏகாம்பரம் அவர்தம் மருகரும் டாக்டர் மு.வ. அவர்தம் தம்பி மகனுமாகிய திரு. கிருஷ்ணன் அவர்கள் இன்முகத்தோடு வரவேற்றார். காரில் அவருடன் வீடு சென்றதும் திருமதி. விஜயாகிருஷ்ணன் அவர்கள் உபசரித்தனர். உடன் சேலம் பரமத்தி வேலூரிலிருந்து இங்கே பணியாற்றும் மற்றொரு பொறியாளர் திரு. பழநியப்பர் தம் துணைவியாருடன் இருந்தார். அவர்கள் சேலம் சாரதா கல்லூரியில் பயின்றவர்கள். அனைவரும் அமர்ந்து நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். தமிழ் நாட்டு நிலை, தமிழர் நிலை, அமெரிக்காவில் வாழும் தமிழர்

நிலை அனைத்தும் பேச்சில் வந்தன. 'மு.வ.' அவர்தம் பிள்ளைகளைப் பற்றியும் அவர்தம் துணைவியாரைப் பற்றியும் நலம் பல திரு. கிருஷ்ணன் கேட்டறிந்தார்கள். என் துணைவியினையும் அவர்தம் தாயார் நன்கு அறிவர் என்றும் எப்படி உள்ளார்களென்றுக் கேட்டார்கள். அவர் 1958 லேயே மறைந்தமை கூறினேன். வள்ளி முதலியோர் நலனும் கேட்டறிந்து, ஒரு வாரம் தங்கிச் செல்லவேண்டுமென்றார். இடையில் கவாய் ஆதினத்திலிருந்து தொலைபேசியில் நான் வரும் நாளைக் கேட்டறிந்தார்கள். உணவுக்குப்பின் திரு. பழநியப்பன் 60 கல் தொலைவிலுள்ள தம் இல்லத்துக்கு விடைபெற்றுச் சென்றபின், இரவு 10-30 அளவில் உறங்கச் சென்றேன்.

சிகாகோ 13-5-85

விடியற்காலை எப்போதும் போல எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு குறிப்பினை எழுதி முடித்தேன். காலை 6 மணி அங்கே நம்நாட்டில் மாலை 6 மணி. எனவே இதே வேளையில் நம் பள்ளியில் அருட்டிரு சின்மயானந்தர் அவர்களின் கீதைப்பொழிவும் மாநாடும் தொடங்கி கியிருக்கும் என எண்ணி என் சிந்தனை பள்ளியினைச் சுற்றியே வட்டமிட்டது.

ஒரு மாதத்துக்கு மேலாக - 40 நாள் - ஊர் தொறும் 'நாடோடி' எனச் சுற்றி உழன்ற காரணத்தாலோ - அன்றி ஏனோ - என் உடலில் ஓர் அயர்ச்சி காணப்பெற்றது. எனவே நான் இரண்டொரு நாள் எங்கும் வெளியில் போகாது அமைதியாக வீட்டிலேயே இருக்க முடிவு செய்தேன். பல கடிதங்கள் இந்த முகவரிக்கு வந்திருந்தன காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு, எனக்கு வந்த கடிதங்களைக் கண்டு, பதில்கள் அனைவருக்கும் எழுதி முடித்தேன். சோர்வு அதிகமானதால் படுத்து உறங்கி விட்டேன். பிறகு 2 மணி அளவில் மெல்ல எழுந்து உணவு கொண்டேன். உணவுக்குப் பின் சன்னல் அருகே அமர்ந்தேன். நிமிடத்துக்கு ஒன்று என்னு மாறு வானத்தில் விமானங்கள் வட்டமிட்டுப் பறந்தன. நான் இருந்த இடம் விமான நிலையத்துக்குப் பக்கத்தில் இருந்; தால், விமானங்கள் புறப்பட்டுச் செல்வதும் வருவதும் நன்கு தெரிந்தன. நான் நேற்று இறங்கியபோது அந்தச் 'சிகாகோ விமான நிலையத்தைச் சுற்றி நோக்கினேன். நிலையம் மிக

பெரியது உலகிலேயே இதுதான் பெரிய விமான நிலையம் என்றனர். நான் வந்த விமானம் தங்குவதற்கு சுற்றிச் சுற்றி வந்து, உரிய இடத்தில் நிற்க முயன்றபோது, எத்தனை எத்தனை பிரிவுகளும் நிற்குமிடங்களும் இருந்தன என்பதை ஒருவாறு கணித்தறிந்தேன். பின் இறங்கி, வெளி வருவதற்கு எவ்வளவோ தூரம் மின் படிகளின் வழி ஏறியும் இறங்கியும் ஊர்ந்தும் செல்ல வேண்டியிருந்தது. வெளி வருவதற்கும் இறங்கியும் ஏறியும் மாறி மாறி வர வேண்டியிருந்தது. அங்கே, வெளியில் கார் நிறுத்தியிருந்த இடம் பரந்து பல மாடிகள் உடையதாய் - பல - ஆயிரக்கணக்கான கார்கள் நிற்கத் தக்கதாக இருந்தது - அப்படியே இடம் முழுதும் பல 'கார்'கள் நின்றிருந்தன. திரு. கிருஷ்ணன் அவர்கள் தம் கார் விட்ட இடத்தினைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. பின் அதிலிருந்து சுழல் வழியாகக் கார் இறங்கியது. வெளிவருமுன் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. ஒரு மணி நேரத்துக்கு 2 டாலர் (சுமார் 25 ரூபாய்) என்றனர். நாள்தொறும் கார்கள் வழியே பல லட்சம் டாலர்கள் வரும் என எண்ணினேன். இப்படியே விமான நிலையம் பல துறைகளிலும் - விமானம் நிற்பது முதல் - கார் நின்று புறப்படுவது வரை - கடை கண்ணிகள் அனைத்துக்கும் ஒரு நாளைக்குப் பல லட்சங்கள் வருவாய் உண்டு. விமான நிலையங்கள் அரசாங்கத்துக்கோ அந்தந்த நகராட்சிக்கோ உட்பட்டமையின் அனைத்தும் மக்கள் பொது நலத்துக்குப் பயன்படும் என்ற மன நிறைவு அனைவருக்கும் இருந்தது. உலகிலேயே பெரிய விமான நிலய வாயிலில் நிற்கிறேன் என்ற நினைவோடு சிறிது நேரம் வெளியே கண்டு கொண்டிருந்தேன். பின் கடிதங்களைச் செம்மைப் படுத்தி ஒட்டி அஞ்சலகத்துக்கு அனுப்பத் தக்க வகையில் சரி செய்து முடித்தேன்.

பின் தொலைக்காட்சியினைச் சிறிது நேரம் கண்டேன். செய்திகளைப் பற்றி விமரிசனம் நடைபெற்றது. நம்நாட்டில் சீக்கியர் செய்ய நினைக்கும் செயல்களையும் கண்டேன்;

வருந்தினேன். இந்த நாட்டில் இரண்டொரு இடங்களில் நடைபெற்ற தொழிலாளர் வேலை நிறுத்தம் பற்றியும் குறித்தனர். பஸ் நிறுத்தம் -பள்ளி கல்லூரி நிறுத்தம் - மூடு தல் போன்ற தேவையற்ற செயல்கள் இல்லையாயினும் சில சமயங்களில் இத்தகைய வேலை நிறுத்தங்கள் - முதலாளி தொழிலாளிதம் போராட்டம் நடைபெறுவது உண்டாம் இந்த நாட்டிலும் ஏழைகள் நூற்றுக்கு இருபது பேராவது இருக்கிறார்கள். எல்லோரும் இங்கே குபேரர்கள் என்று யாரும் முடிவு கட்டக் கூடாது. நாடு செல்வ நாடாயிருந் தாலும், வறுமையில் வாழும் மக்களும் இங்கே உள்ளனர். ஆயினும் நம் நாட்டைப் போன்று குடிசைகளோ - மாற்று வாரியமோ - மாற்ற மாற்றத் தோன்றும் திடீர் நகர்க் குடிசைகளோ-கிடையா. அவர்களுக்கெனப் பல அடுக்குகள் கொண்ட குடியிருப்புகளை அரசாங்கமே கட்டித் தந்துள்ளது. அப்படியே வயதானவர்களுக்கும் தனிக்குடி யிருப்புகள் உள்ளன. எனவே வறுமையிலும் வயதானகாலத் திலும் ஆதரவற்ற நிலையில் அரசாங்கம் ஓரளவு உதவி புரிந்து வருகிறது.

சென்ற நூற்றாண்டில் (19) இந்நாட்டில் உண்டான பல புரட்சிகரமான மாறுதல்கள் நாட்டின் இன்றைய நிலைக்குக் காரணம் எனலாம். அமெரிக்க உரிமை போருக் குப்பின், உள்நாட்டு போர் (Civil War) நடைபெற்று வரலாற்றிலேப் பயில்கின்றோம். கறுப்பர் வெள்ளையரோடு எல்லா உரிமைகளையும் பெற்றுச் சரிநிகர் சமானமாக வாழும் நிலை உண்டான காலத்தையும் அதைச் செயலாக்கிய 'ஆபிரகாம் லிங்கனை'ப் பற்றியும் நினைத்தேன். அவர் பிறந்த - வாழ்ந்த - சீர்திருத்தம் செய்த ஊர் இந்த ஊரே என்றனர். பெரும்பாலும் விவசாய நாடாக இருந்த இதனைத் தொழில்வள நாடாக்கிய காலத்தில் அந்த மாற்றம் நடை பெற்றது. பல்வேறு இயந்திரங்களைப் படைத்து, அவற்றை பெரும் உழவர்களுக்கு உதவி, அங்கே பணியாற்றிய பல இலட்சம் மக்களைத் தொழில் துறைக்குக் கொண்டு வந்த

அந்தக் காலத்தில் இப் போராட்டமும் மாறாட்டமும் நடை பெற, நாடு முழுவதும் மாறுதல் அடைந்தது. மக்கள் வாழ் வும் ஒரு வகையில் மாறத் தொடங்கியது. 'எல்லாரும் இந் நாட்டு மக்கள்' என்ற உணர்வும் உரிமை வாழ்வும் நிலை பெற்றன. அக்காலத்தில் உண்டான அந்த வாழ்வியல் விதி முறைகள் இன்றளவும் நாடு முற்றும் செயல் பெற்று வரு கின்றன எனலாம். இந்தச் சிகாகோ பெருநகர் அமெரிக்க நாட்டின் இரண்டாம் பெரு நகராக இருந்து, சில மாதங் களுக்கு முன்தான் மூன்றாம் பெரு நகராக மாற்றம் பெற்ற தாம். ஆம்! இரண்டாம் இடத்தை மேலைக் கடற்கரையி லுள்ள லாஸ் எஞ்சிலஸ் (Los Angeles) பெற, இது மக்கள் தொகை கணப்பில் சற்றே பின் தங்கியது போலும், முதலிடத்தினை தொடர்ந்து 'நியூயார்க்' நகரம் பெற்றுச் சிறக்கின்றது.

மாலை திரு. கிருஷ்ணன் அவர்கள் அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தார். அவர் வருமுன் நான் என் அடுத்துவரும் பயணங்கள் பற்றிப் பேசி 1-6-85 வரையில் மேற் கொள்ள வேண்டிய பயணங்களுக்கு உரிய முன் பதிவுகள் அனைத்தை யும் செய்து முடித்தேன். சித்தாந்த சங்கம் உள்ள 'காவாய்த்' தீவுக்கும் சென்று 1-6-85 காலையில் திரும்ப உரிய விமானப் பயணத்திற்கும் ஏற்பாடு செய்யப் பெற்றது. திரு. கிருஷ்ணன் வந்த பிறகு அனைத்தையும் விளக்கி, அந்தச் சித்தாந்த சங்கத்துக்குப் புறப்படும் நேரம் முதலியவற்றைத் தொலைபேசி வழியே தெரிவித்து விட்டேன். பின் இங்கே உள்ள இரண்டொரு அன்பர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். இங்குள்ள தமிழ்ச் சங்கத்தில் பேச வேண்டும் என்றனர்; எனினும் அது பற்றி ஒன்றும் முடிவு செய்ய இயலா நிலையினை விளக்கினேன். நாளை மறுபடியும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளுவதாகவும் இயன்றால் நேரில் வருவதாகவும் சொன்னார்கள்.

உணவுக்குப் பின் திரு. கிருஷ்ணன் அவர் துணைவியார் ஆகியோருடன் நெடுநேரம் பல பொருள்களைப் பற்றிப்

பேசிக் கொண்டிருந்தேன். சென்னையில் பொறியியற் கல்லூரியில் அவர் பயிற்சி பெற்ற காலத்தும், அதற்கு முன் அவர் ஊர் வேலத்தில் வாழ்ந்த காலத்தும் தாம் பெற்ற அனுபவங்களையெல்லாம் கூறினார். உண்மையிலேயே நான் முன்னரே குறித்தபடி, இத்தகைய சிறந்த ஆராய்ச்சி யாளர்களை உருவாக்கிய தமிழகம் அவர்களை அணைத்து அவர்தம் அறிவு, ஆராய்ச்சி, அதன் தெளிவு, பயன் ஆகிய வற்றை நம் நாட்டுக்கே பயன்படுத்தத் தவறிவிட்டதை நினைந்தேன். அவர் ஆய்விற்கு உண்டான அங்கே அமைந்த பல தடைக் கற்களே, அவரை இந்த நாட்டிற்கு அனுப்பி வைத்தன. இப்படிப் பல அறிஞர்கள் - ஆய்வாளர் கள் நம் நாட்டினை விட்டு வெளியேறி, பெற்ற பயனை மற்றவர்களுக்கு வழங்குகின்றனர். இந்த அவல நிலையை இனியாவது தமிழக அரசும் பாரத அரசும் மாற்றுமா?

அவர்தம் மின்அணு ஆய்வின் செயல்முறைகள் பற்றி யும், அதனால் என்னென்ன வகையில் மக்கள் பயன்பெற இயலும் என்பது பற்றியும் நன்கு தெளிவாக - எளிய முறை யில் - எல்லோரும் அறியும் வண்ணம், 'விடியோ'வில் அமைத்து, 20 அல்லது 30 நாட்களில் முறையான பாட அமைப்பில் தர இயலுமாயின், அவற்றை எங்கள் பள்ளியில் இட்டுக் காட்டி, மாணவர்களைப் பயன்பெற்று உயரச் செய்யலாம் எனக் கருதிக் கூறினேன். அப்படியே அவர்தம் துணைவியாரும் 'உயிரியல்' (Biology) அதன் தொடர்பான அறிவியல் கூறுகளைச் சென்னை வரும்போது மாணவர் களுக்குத் தனி வகுப்புகள் நடத்திவைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டேன். இருவரும் அத்தகைய ஆக்கப் பணிகளை விரும்பி மேற்கொண்டு செயல்படுவதாகச் சொன்னார்கள். திரு. கிருஷ்ணன் அவர்கள் அறிவியல் ஆக்கம் பள்ளிக்குப் பயன்பட வேண்டும் என்ற அவாவுடையவர். நெடுநேரம் பேசி இருந்து 11 மணி அளவில் உறங்கச் சென்றேன்.

சிகாகோ 14-5-85

காலையில் எழுந்து கடன்களை முடித்துக்கொண்டு குறிப்பெழுதி, முடித்தேன். நாற்பது நாட்களுக்குமேல் பலவிடங்களில்பட்டு உழன்றமையால் உண்டான சோர்வு இன்னும் உடலைவிட்டு நீங்கவில்லை. எனவே வெளியே செல்ல முயன்றும் முடியவில்லை. இன்றும் ஓய்வு கொண்டேன். மாலை 6 மணிக்குமேல் உணவு கொண்டு பிறகு வெளியே செல்லலாம் என்றனர். திரு. கிருஷ்ணன் அவர்கள், பணிமேற், சென்றார். டோக்கியோவிலிருந்தும். சியாட்டல் வாஷிங்டனிலிருந்தும் இரு பேராசிரியர்களும் தொலைபேசியில் பேசினர். எனக்கென அங்கங்கே தங்கவும் பிற வசதிகளுக்கும் ஏற்பாடு செய்தமை பற்றி விளக்கி உரைத்து, குறித்தபடி குறித்த நாளில் வருமாறு பணித்தனர். யாண்டும் நிறைந்த இறையருளையும் முன்பின் அறியா அப் பேராசிரியர்தம் நல்ல பண்புகளையும் எண்ணிப் போற்றிப் பாராட்டினேன். ஊரிலிருந்து மெய்கண்டான் எழுதிய கடிதமும் வந்தது. பள்ளியின் செயல்முறைகள் பற்றியும். சின்மயானந்தர் விழாவினைப்பற்றியும் விளக்கி எழுதியிருந்தான். டோக்கியோவிலிருந்தும் (தொலைபேசியின்றி) கடிதமும் வந்தது. யாவருக்கும் பதில்கள் எழுதி முடித்தேன். கலிபோர்னியா, லாஸ் ஏஞ்சிலஸ் ஆகிய இடங்களுக்கும் எழுதினேன். பின், பகல் ஒரு மணி அளவில் ஓய்வு கொண்டேன்; நன்கு உறங்கினேன். இடையில் இங்கே இருந்த 'Reader's Digest' என்ற இதழைப் புரட்டினேன். அதிலே 'அமெரிக்கப் பழங்கால அதிசயங்கள்' 'The Mysteries of America's Ancient ones' என்ற (Ronald Schiller) ரெனால்டு சில்லர் அவர்கள் எழுதிய கட்டுரையினைப் படித்தேன். மெக்சிகோ நாட்டில், மாடு மேய்க்கும் சிறுவர்கள் 1888-ல் கண்ட ஒரு ஆழ்நில நகர் ஒன்றினைப்

பற்றிப் படத்துடன் அதில் விளக்கம் காட்டியிருந்தார். அதில் உள்ள பழம்பெரும் உணவுக் கலன்கள், பயன்படுத்திய கருவிகள், சமைத்த அடுப்பின் சாம்பல்கள் இன்னும் அப்படியே உள்ளனவாம். அந்த இடத்தினைத் தற்போது 'கிளிப் பாலஸ்' 'Cliff Palace' என அழைக்கின்றனர். அங்கே வாழ்ந்த மக்களை 'அமெரிக்க இந்தியர்' எனவே அழைக்கின்றனர். ஆனால் அவர்தம் வாழ்வனைத்தும் 13-ம் நூற்றாண்டில் இல்லையாகக் கழிந்ததாகும். அவற்றை ஆழ்ந்து தோண்டிக் காணப் பலப்பல பழம் பெரும் நாகரிக நெறிகள் தெரிந்ததாகவும் எழுதியிருந்தார். புது மெக்சிகோ வடமேற்குப் பகுதியில் சாகோ (Chaco)வில் 15 கல் நீளமும் ஒரு கல் அகலமும் உள்ள இடத்தில் கி. பி. 1150-ல் மக்கள் சிறக்க வாழ்ந்த பல குறிப்புகளைத் தொகுத்துக் காட்டியிருந்தார். 5000க்கு மேற்பட்ட மக்கள் அக் காலத்தில் கட்டிய 12 பெருநகரங்களையும் பிறவற்றையும் சுட்டி, பல அடுக்கு மாளிகைகளையும் அவற்றில் அமைந்த குடியிருப்புப் பகுதிகளையும் விளக்கி எழுதியிருந்தார். மூன்று ஏக்கர் எல்லையில் 800 அறைகள் கொண்ட ஐந்தடுக்கு உடைய 'D' வடிவமான கட்டிடம், வட்டமான கட்டிடம் போன்ற பலவற்றைப் பல விளக்கத்துடன் விளக்கியிருந்தார். சாலைகள் அமைப்பும் பிறவும் காட்டப்பெற்றன. சுமார் கி. பி. 1150-ல் அவர்கள் சிறந்த நாகரிக வளத்துடன் வாழ்ந்தார்கள் என்றும் அது, நான் முன் குறித்துள்ள, தென் அமெரிக்க மாயா நாகரீகத்துடன் ஒத்துள்ளது என்றும் ஆய்ந்து கண்டுள்ளார், (மாயா நாகரிகம் நம் பண்டைய நாகரிகத்துடன் பொருந்தியது என்பதை நான் நியூயார்க் பொருட்காட்சியினைக் கண்ட காலத்தில் சுட்டிக் காட்டியுள்ளேன்). அவர்கள் மாற்றாரிடமிருந்து தம்மைக் காத்துக்கொள்ள மேற்கொண்ட அமைப்புகள், வழிகள் பிறவற்றையும் விளக்கி, சில தொல் பொருள் ஆய்வாளரின் கருத்துப்படி, தண்ணீர் உரிமை போன்ற சிலவற்றிற்காக அவர்களே தமக்குள் சண்டையிட்டு மறைந்திருப்பார்களோ என்ற ஐய வினாவையும்

எழுப்பியுள்ளார். கி. பி. 1300 ல் அவர்கள் பெரும்பாலும் அந்த இடத்தில் வாழவில்லை எனவும் முடிவு கட்டியுள்ளனர். ஆயினும் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேல் பொன்னகரங்களில் வாழ்ந்த அந்த மக்களின் வாழ்வு சிறந்த ஒன்று என்றும் இன்றும் மாலைக் கதிரவன் வாயிலில் அத் தொன்மையான நிலையங்கள் பொன்னென மிளிர்கின்றன வென்றும் காட்டி, அதுபற்றி மேலும் ஆராய வேண்டிய இன்றியமையா நிலையினையும் ஆசிரியர் வற்புறுத்தியுள்ளார். நம் நாட்டில் இத்தகைய அகழாய்வுகள் மேற் கொள்ளப்பெறின் எவ்வளவோ உண்மைகள் புலப்படும் என்று நம் நாட்டு ஆய்வாளர்கள் கூறுகின்றார்களேயன்றி, அவற்றைப் போற்றிப் பாதுகாக்கும் நிலை நாட்டில் இல்லையே. இங்கே குறிக்கப்பெற்ற காலம் நம் நாட்டில், தஞ்சையில் இராசராசன் பரம்பரையினர் ஆண்ட பிற்காலச் சோழர் காலமல்லவா! அக் காலத்தில் கட்டப்பெற்ற எத்தனைக் கோயில்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன; சில உருத்தெரியாமற் போய்விட்டனவே. அதற்கும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்களைப் பெற்ற பெரு நகரங்களைக் கண்ட நாம் இத் துறையில் எவ்வளவு தூரம் கருத்திருத்தி ஆய்வு செய்கிறோம் என்பதை எண்ணி என் நெஞ்சம் புண்ணாகியது. பல கோடி, பல வகைகளில் செலவிடும் தமிழக அரசு, இத் துறையினை விரிவுப்படுத்தி, வேண்டிய உதவிகளைச் செய்து, ஆழ்பொருள் நிலை உணர்ந்து உலகுக்கு உணர்த்தின் நம் பழம் பெருமையை உலகமே கண்டு போற்றுமல்லவா! இன்று இதுவரையில் நான் சுற்றிய நாடுகளில் தமிழகம் பற்றியும் அதன் தொன்மையைப் பற்றியும் அறிந்தவர் மிகமிகச்சிலரேயாவர். வடநாட்டு நகரங்கள், நாகரிகம், மொழி, மக்கள், வாழ்வு நெறி இவை பற்றி அறியும் அளவில் ஒரு சிறு கூறாயினும் தமிழகத் தொன்மை பற்றி அறியப்பெறின் உலகம் நம்மைப் போற்றும் என்பது உறுதி. தமிழக அரசு இத் துறையில் ஆழ்ந்து கருத்திருத்த வேண்டும்.

மாலை 7 மணி அளவில் இந்த ஊர்க்குழு (County) எல்லையில் அமைந்த நூல் நிலையத்துக்கு திரு: கிருஷ்ணன் அவர்களும் அவரது துணைவியாரும் என்னை அழைத்துச் சென்றனர். நான் நியூயார்க், லண்டன், பாரீஸ் முதலிய பெருநகரங்களில் பெரும் நூல்நிலையங்களைக் கண்டமையின் இதைக் காண வேண்டுமா எனக்கூட எண்ணினேன். எனினும் சற்றே வெளியில் சென்று 'சிகாகோ'வின் தன்மையினையும் காணவேண்டியுள்ளமையின் புறப்பட்டுச் சென்றேன். 'Arlington Hights Memorial Library' என்ற நூல் நிலையத்துள் நுழைந்தேன்.

உள்ளே புகுந்தபின்தான் 'நான் வரவேண்டாம்' என எண்ணியது எவ்வளவு தவறு என உணர்ந்தேன். சிற்றூர் நூல்நிலையம் - ஏதோ ஒரு சிறு அளவில் இருக்கும் என எண்ணிய் எனக்கு, அங்கே பெரும் வியப்பே காத்திருந்தது. நம் சென்னைப் பல்கலைக்கழக நூல் நிலையத்திலும் பெரிது எனலாம். அங்கே குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் என அமைந்த மிக விரிவான பகுதியைப் போன்று, இதுவரை நான் எங்கும் காணவில்லை. இளங்குழந்தைகள் விளையாடுதற்குரிய எல்லா விளையாட்டுக் கருவிகளும் இடமும் தனியாக நன்கு காக்கப் பெற்றிருந்தன. சில் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தனர். படங்கள், படத்தொடு கூடிய நூல்கள், சிறுவர் பத்திரிகைகள், பொம்மைகள் - இன்னும் என்னென்ன தேவையோ அத்தனையும் இருந்தன. எண்ணற்ற நூல்கள் - அவைபற்றியெல்லாம் அங்கே துணையாளராக இருந்த ஓர் அம்மையாரிடம் கேட்டேன். அவர்கள் அவைபற்றிய விளக்கங்களையும் நூல்பட்டியல் போன்றவற்றையும் கிடைக்குமிடம் முதலியனபற்றியும் அடுத்த மாதம் நடக்க இருக்கும் நூல் கண்காட்சியினைப் பற்றியும் விளக்கிக்கூறி, சிலவற்றைத் தந்து உதவினர். பின் மறுபக்கம் பெரியவர்களுக்கென அமைந்த பகுதியினைச் சுற்றிப் பார்த்தேன். பல்வேறு துறைகள் - நாவல் - இலக்கியம் - அறிவியல் பிரிவுகள் - கணிப்பொறி போன்றவை

எனப்பலப்பல வகைத் துறைகளில் நூல்கள், படங்கள், விளக்கங்கள் இருந்தன. ஐந்து கணிப்பொறிகள் வருபவர் உபயோகிக்கும் வகையில் இருந்தன. (குழந்தைகள் பகுதியிலும் 7, 8 வயதுக் குழந்தைகள் கற்கும் வகையில் கணிப் பொறி வைக்கப் பெற்றிருந்தது) அப்படியே தட்டெழுத்து செய்து கொள்ளவும், படி எடுத்துக் கொள்ளவும் வேண்டிய சாதனங்கள் பொருத்தப் பெற்றிருந்தன. அங்கங்கே தாள்களும் எழுது கோல்களும் வைக்கப் பெற்றிருந்தன. பெரும் பெரும் வண்ணப் படங்கள் பலகையிடப் பெற்று வைக்கப் பெற்றிருந்தன. (அவற்றை விரும்புவோர் எடுத்து சென்று மூன்று மாதங்கள் வரை வைத்திருக்கலாமாம்) அங்கே தனித்தனியாக உட்கார்ந்து ஆய்வு செய்யவும் அறைகள் ஒதுக்கப் பெற்றிருந்தன. ஆகவே இந்த நூல் நிலையம் பயில வருவாருக்கு உண்மையில் பயன் படக்கூடிய வகையில் அமைந்த ஒன்றாக விளங்கிற்று. வெறும் காட்சிப் பொருளாக அன்றி நூல் வழங்கும் நிலையமாக அல்லாமல், அங்கே அமர்ந்து ஆய்வு செய்து, அறுதி கண்டு, தொகுத்து தட்டெழுத்திட்டு, படி எடுத்து முடிக்கும் வகையில் வழி செய்திருந்த நிலை கண்டு மகிழ்ந்தேன். நம் பள்ளியிலும் குழந்தைகளுக்கு (புள்ளியுள்ள கரிய பலகைகளில் எழுத்துகளைப் பொருத்தல் முதலாய பலவற்றை) ஏன் புகுத்தக் கூடாது என்ற எண்ணம் தோன்றிற்று. இளங் குழந்தைகள் படிக்கத்தக்க சிறுநூல்களையும் வாங்க வேண்டும் எனமுடிவு செய்தேன். இத்தகைய எண்ணங்களோடு, கிருஷ்ணன் தம்பதியரோடு இரவு 9.30க்கு வீடு வந்து சேர்ந்தேன். பின் திரு. இராமநுஜம் அவர்களுடன் பல்கலைக் கழக நிகழ்ச்சி பற்றித் தொலைபேசி வழியே பேசினோம். பின் வேறு பல பேசியிருந்து 10.30க்கு உறங்கச் சென்றேன்.

சிகாகோ 15.5-85

காலை முறைப்படி எழுந்து கடன்களை முடித்துக் கொண்டேன். இன்று இந்த மாநிலத்துக்கு அடுத்துள்ள விஸ்கான்சன் (Wisconsin) மாநிலத்தில் உள்ள பார்க் சயிடு (Park Side) எல்லையில் அமைந்த விஸ்கான்சன் பல்கலைக் கழகத்தினைக் காணப் புறப்பட்டேன். அங்கே தமிழ் உண்டு. திருவாளர் கிருஷ்ணன் அவர்களும் துணைவியாரும் சுமார் 60 கல் தொலைவிலுள்ள அந்நகருக்கு அழைத்துச் சென்றனர். அங்கே பொறியாளர் திரு. பழநியப்பன் அவர்கள் வீட்டிற்குச் சென்று, அந்தப் பல்கலைகழகத்தில் பயிலும் அவர்தம் மனைவியாரை உடன் துணை அழைத்துச் செல்லுவதென முடிவு செய்யப் பெற்றது. அப்படியே காலை 7.30க்கு புறப்பட்டு 9 மணி அளவில் அங்கே சென்றோம். அவர் பணி மேற் சென்றிருந்தார். அம்மையார் இருந்தனர். திரு. கிருஷ்ணன் அவர்களும் வேறு பணியின் பொருட்டு வெளியே சென்று மாலை திரும்புவதாகச் சொல்லிச் சென்றார். அங்கேயே சிறிது நேரம் நாளிதழ்களைப் படித்துக் கொண்டிருந்து பகல் உணவிற்குப் பிறகு நகரைச் சுற்றிப் பார்த்து, பின் பல்கலைக்கழகத்தையும் காணப் புறப்பட்டோம்.

சிகாகோவினைச் சுற்றிய அந்தப் பேரேரியும் பக்கத்திலேயே இந்நகருக்கு வடக்கே 60 கல் தொலையில் இருந்தமையின், அந்த ஏரிக்கரை ஓரமாகச் சென்றோம். அது பெரிய துறைமுகம் போல் காட்சி அளித்தது. பல சிறு படகு

களும் சில சிறு கப்பல்களும் வழிகளில் நிறுத்தப் பெற்றி ருந்தன. இரு பெருங் கப்பல்கள் நேற்றுவரை நிறுத்தம் பெற்றிருந்து, எத்தியோப்பியாவில் உணவின்றித் தவிக்கும் மக்களுக்கு உணவு ஏற்றிக்கொண்டு, நேற்றே புறப்பட்ட தாகக் கூறினர். இத் துறைமுகத்தில் நம் தாயகத்திலிருந் தும் சரக்கு ஏற்றிக் கொண்டு வரும் கப்பல்கள் வந்து தங்கி இறங்குவன இறக்கி ஏற்றுவன ஏற்றிச் செல்லுமாம். சென்னையைப் போன்று பெரிய சுங்கச் சாவடியும் சிறு கலங்கரை விளக்கமும் பிற துறைமுகத்தின் அங்கங்களும் பெற்று அது விளங்கிற்று. இத்தகைய இயற்கைத் துறை முகங்கள் பல இந்நாட்டில் உள்ளன; இயற்கை அன்னை வாரி வழங்கிய செல்வங்கள் இவை. கடலுக்கு அருகில் இன்றேனும் இப்பேரேரிகளின் இணைப்பால் உள்நாட்டில் ஐநூறு கல் வரையில் பெருங் கப்பல்கள் போக்குவரத்து நடை பெறுவது இந்நாட்டின் வாணிப வளத்துக்கும் செல்வ செழிப்புக்கும் ஒரு காரணமாக அமைகின்றது. துறை முகத்தை அடுத்து அந்த ஏரிக்கரையினை ஒட்டியே காரில் சிறிது தூரம் சென்றோம். நல்ல புல்தரை - சாலைக்கும் நீருக்கும் இடையில்; உயர்ந்த பசும் மரங்கள்; நல்ல நீர் ஏரி, இயற்கை தன் அழகினை அள்ளித் தெளித்த அந்த காட்சி யினை மறக்க முடியாது.

இவற்றைக் கண்டு கொண்டு ('Greater America') பெரும் அமெரிக்கா, என்ற சுமார் 15 அல்லது 20 கல் தொலைவிலுள்ள இடத்திற்குச் செல்லலாமா என்றனர். அது நாங்கள் காலையில் வந்த வழியில் இருந்தது. வழியில் பல்வேறு வகைப்பட்ட வெவ்வேறு வெருவத்தக்க விளை யாடல்கள் நிகழும் ஒரு பரந்த நிலப்பரப்பைக் காட்டினார் கள். வானோங்கிய சுழற் சக்கரங்களும் மின்விசை கூடிய சறுக்கு மரங்கள் - அசையும் பாலங்கள் - படிகள் - துறைகள் இன்னும் எத்தனையோ புறத்தில் காணப்பெற்றன. உள்ளே பலவகை விளையாட்டுகளும் சூதாடுமிடங்களும் (Gambling) உள்ளனவாம். அங்கே போக வேண்டாம் என்ற

முடிவிலேயே காலை நேராக வந்துவிட்டோம். எனவே தற்போதும் அங்கே வேண்டாம் என்று சொல்லி, பல்கலைக் கழக எல்லைக்குள் புகுந்தோம்.

விஸ்கான்ஸன் இந்நாட்டின் பல பல்கலைக்கழகங்களுடன் ஒப்ப, கல்வியிலோ மாணவர் எண்ணிக்கையிலோ மிகப் பெரியது என்று கூற முடியாவிடினும் இந்நாட்டின் மிகச் சிறந்த பல்கலைக் கழகங்களில் ஒன்று. சுமார் ஆறாயிரம் மாணவர்களே பயில்கின்றனர். இங்கே தமிழ் இருந்தும் விடுமுறையாதலாலும் நான் முன் ஏற்பாடு செய்யவில்லையாதலாலும் ஒருவரையும் காணமுடியவில்லை. பல்கலைக் கழகமும் விடுமுறைக்கென மூடப்பட்டிருந்தது. பரந்த நிலப்பரப்பில் - நிறைந்த சோலைகளுக்கு இடையில் - புல்பரப்பினைச் சுற்றிக் கொண்டதாக விண்முட்டும் கட்டடங்கள் (மூன்றடுக்கு) பல இருந்தன. நாங்கள் உள்சென்று ஒவ்வொரு பகுதியாகப் பார்த்துக் கொண்டே வந்தோம். வகுப்புகள் நடை பெறவில்லையாயினும் வகுப்பறைகளின் அமைப்பு முதலியன நன்கு அமைந்துள்ள தன்மையினைக் கண்டோம். பல்வேறு வகைப் பாடங்களை பயில் முறைகளைக் கேட்டறிந்தோம். ஜூன் தொடங்கி நடைபெறும் கோடை வகுப்புகளைப் பற்றிய குறிப்பு ஒன்றினையும் எனக்குத் தந்தனர். இந்த நாட்டின் நல்ல முறையினை எல்லாப் பல்கலைக் கழகங்களும் கையாளுகின்றன. பட்டப்படிப்பிற்கு முறையாக செப்டம்பர் தொடங்கி மே வரையில் வகுப்புகள் நடைபெறுகின்றன. அதில் இத்தனைப் புள்ளிகள் எடுத்தால் அதில் தேர்ந்ததாக அறிவிக்கப் பெறுகின்றனர். பாடத்திட்டங்களுக்கும் அமைப்புகளுக்கும் ஏற்ப அவற்றின் எல்லை அமையும் போலும். அவற்றையும் நான் முன்னே குறித்தபடி பத்திலிருந்து நான்கு மணிவரையில், வகுப்பறையில் கட்டாயம் படிக்க வேண்டிய நிலையில் இல்லை. ஆசிரியர்கள் காலை 9 முதல் மாலை 5 வரை ஒரு மணி அல்லது இரு மணி நேரங்களில் குறித்தபடி - அல்லது பயில்வோர் விருப்பப்படி வந்து

விஸ்கான்ஸன் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி மாணவருடன்



உரிய பாடங்களைப் பயிலலாம். நேரமும் ஆசிரியர்களும் கிடைக்கப் பெறின் முழுநேரமும் இருந்து பயிலலாம். அவ்வப் பாடங்களுக்கு உரிய ஆசிரியர்களிடம் கற்பன கற்று, உரிய தேர்வுகளில் வெற்றி பெற்றால் அந்தப் புள்ளிகள் கணக்கிடப் பெறும். தேவையான புள்ளி களில் இரண்டாண்டுகளில் வெற்றி பெற்றாலும் அந்தப் பட்டப் படிப்பினை அவர் முடித்ததாகக் கருதிப் பட்டம் வழங்குவர். அத்தகைய பயிலும் மாணவர், கல்லூரி திறந்திருக்கும் நாட்களில் மட்டுமன்றி, இந்த விடுமுறை நாட்களிலும் தனியாகப் பயின்று அந்தப் புள்ளிகளைப் பெற்றாலும் அவற்றையும் கணக்கிடுவர். அன்றி வேறு துறைகளில் ஓய்வு இன்றிப் பணியாற்றுகின்றவர்களும் இக் கோடை வகுப்புகளில் சேர்ந்து ஒவ்வொரு பகுதியாகப் பயின்று வெற்றி பெற்று, 5 (அ) 6 ஆண்டுகளிலும் பட்டங் களைப் பெறுவர். வெளி நாட்டிலுள்ள ஆசிரியரும் மாணவரும் பிறரும் தம் விடுமுறைக் காலங்களில் இந்த வகுப்பு களில் சேர்வர். எனவே இந்த விடுமுறை வகுப்புகள் அனைவருக்கும் பயன்படுவகையில் அமைகின்றது. பெருந் தொகை கட்டிப் பயிலுவதால் யாரும் இங்கே பட்டப் படிப்பினை வீண் பொழுது எனக் கருதுவதில்லை. அதிலும் சிறப்பாக இந்த விடுமுறை வகுப்புகளில் வெளியிலிருந்தும் சிறந்த வல்லுநர்களும் வந்து பயிற்றுவிக்கின்ற காரணத்தால், இவ்வகுப்புகள் பெரிதும் வரவேற்கப் பெறுகின்றன. வெறும் வாணிப நிலையிலோ, ஏதோ பொழுது போக்கு என்றோ (நம் நாட்டில் பலர் நினைப்பது போன்று) இங்கே இவற்றை நினைப்பதில்லை. உண்மையிலே பலர் இவற்றால் பயன் பெறுகின்றனர்.

பல்கலைக்கழக நூல் நிலையம் பலவகைப் பிரிவுகளைக் கொண்டதாக அமைந்தது. ஓரிரு பகுதிகளைக் கண்டோம். விடுமுறையாயினும் பல ஆசிரியர்களும் மாணவர்களும் அங்காங்கே அமர்ந்து பல நூல்களைப் பயின்று கொண்டும் குறிப்பெடுத்துக் கொண்டும் இருந்தனர். கழக எல்லைக்

குள்ளே அறைகளுள் - விளையாட்டு அரங்கில் - பலவகை விளையாடல்களுக்கு வாய்ப்பு இருந்ததோடு, வெளியில் பரந்த அகன்ற புல்வெளி பெரு விளையாட்டு அரங்கமாக விளங்கிற்று. இவ்வாறு அப் பல்கலைக்கழகத்தின் பல இடங்களைக் கண்டு கொண்டே மாலை 6 மணி அளவில் வீடு திரும்பினோம். அதற்குள் திரு. கிருஷ்ணன் அவர்களும் பழநியப்பன் அவர்களும் தத்தம் பணிகளிலிருந்து திரும்பி வந்தனர்.

நாங்கள் தங்கிய இல்லத்தின் பக்கத்தில் வாழ்ந்த யாழ்ப்பாண அன்பர் ஒருவர் தம் குடும்பத்துடன் அங்கே வந்தார். அவர் தற்போதைய இலங்கையின் அவலம் பற்றியும் பிற பொருள்கள் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார். அவர் தம் மகன் (3 வயது) நான் எங்கும் காண்பது போன்று ஆங்கிலத்தில் வெகுவேகமாகப் பேசினான். தமிழ் வாயில் நுழையவேயில்லை. இவர்கள் தலை முறையில் தாம் தமிழர் என்கிற உணர்வே இல்லையாகும் என்பது உறுதி. தமிழகத்திலிருந்தும் இலங்கை முதலிய இடங்களிலிருந்தும் வரும் தமிழர்கள் இவ்வாறு இங்கே மட்டுமன்றி, செல்லுமிடமெல்லாம் - வட இந்தியா உட்பட - அவரவர் மொழி கற்று வாழ்வதால், தமிழன்னை சங்றே விலகி விடை பெற வேண்டிய நிலையில் உள்ளாள். சிலர் அவளை விடாது பின்பற்ற நினைத்தும் வாய்ப்பும் வழியும் இல்லாமல் சூழலுக்கு உட்பட்டு விலகிச் செல்கின்றனர். இந்த அவல நிலையைப் போக்கத்தக்க வழிகளைத் தமிழக அரசாங்கம் தான் செய்யவேண்டும். தமிழக அரசு ஒன்றும் செய்யாது இருக்குமானால் தமிழர்பற்றி வருங்காலத்தில் வரலாற்றுப் பாடம் இருக்குமே ஒழிய வாழ்வு இருக்காது. இவற்றையெல்லாம் எண்ணிக்கொண்டே திரும்பி வந்து இரவு 10 மணிக்கு உறங்கச் சென்றேன்.

சிகாகோ 16-5-85

இன்று காலை முறைப்படி துயில் எழுந்து கடன்களை முடித்துக் கொண்டேன். இயற்கை அன்னையின் சூழல் என்னை ஆட்கொண்டது. நான் சென்னையினை விட்டுப் பம்பாய் கடற்கரையைத் தாண்டி, ஜினிவாவில் கால்வைத்த நாள் முதல், இங்கே வரும் வரையில் - கிளைவ்லேண்டு எல்லை வரையில் என்னை இறையருள் போன்று பின்பற்றி வந்த மழையும் மப்பும், இங்கே வந்த மூன்று நாட்கள் (12 முதல் 14 வரை) ஏனோ தொடரவில்லை. வெப்பம் அதிகமாக இருந்தது. வெப்பநிலை 84 அளவினைக் கடவா திருந்தும் கடந்த ஒரு மாதமாகக் குளிர்ந்த குழலில் இருந்த காரணத்தால், இது அதிகமாயிற்று போலும். சென்னையில் 100 வரையிலும்கூட ஏற்றுச் சாதாரணமாகப் பணியாற்றும் எனக்கு, இரண்டு நாட்களிலும் ஒரு வேலையும் ஓட வில்லை; ஒரே மயக்க நிலை. நேற்று இரவு அந்த வெப்ப நிலையாலோ ஏனோ உறக்கமும் இல்லை; இங்கே பெரும் பாலான வீடுகளில் மின் விசிறி இல்லை. மாறாகக் குளிர் சாதனப்பெட்டி இருக்கின்றது. நான் தங்கிய அறையிலும் அது இருந்தது. தேவையாயின் பயன்படுத்துவர் போலும். நேற்றுக் காலை திரு. கிருஷ்ணன் எழுந்து வந்ததும் என்னை நோக்கி 'நன்கு உறங்கினீர்களா?' எனக் கேட்டார். நான் உறங்காதது இவருக்கு எப்படித் தெரியும் என எண்ணினேன். உள்ள நிலையும் வெப்பமும்தான் அதற்குக் காரணம் என அவர் கூறி, தேவையானால் இரவுக்குக் குளிர் சாதனப் பெட்டியினைப் பயன்படுத்தலாம் என்றார். ஆனால்

இயற்கை அன்னை அந்த அளவிற்கு என்னை விட்டுவைக்க வில்லை. முன் நாள் இரவு (14.5.85) சிறு மப்பும் மந்தார மாகி இருந்த நிலையில் இரவில் மழை பெய்தது. ஒருவேளை என்னையும் என் உள்ளத்தையும் குளிரச் செய்யவேண்டும் என்றேதான் தொடக்க முதல் மழை பெய்துக் கொண் டிருந்ததோ என எண்ணி, இறைவனை வணங்கினேன்.

நேற்று, காலை முதற்கொண்டே கதிரவன் தோற்ற மில்லை. சிறு தூறல் இருந்து கொண்டே இருந்தது. இரவு திரும்பும்போது நல்ல மழை நெடுக இருந்தது. நான் தங்கியிருந்த பகுதியில் (Mount Prospect) நாங்கள் திரும்பு முன்பே நல்ல மழை பெய்து இருந்தது. நான் வந்ததும் அயற்சி மிகுதியால் படுத்து விட்டேன். இயற்கை அன்னை என் அகப்புற வெப்பநிலையினைத் தகைத்து இனிய குளிர் காற்றினை வீசச் செய்தாள். பக்கத்திலிருந்த போர்வை யினை, கடந்த மூன்று நாட்களில் பயன்படுத்தாத நான், இரவு பயன்படுத்த வேண்டி வந்தது. திறந்திருந்த சன்னல் கதவுகளையெல்லாம் மூடவேண்டிவந்தது. அறை தண்ணி தாக, இதுவரையில் எங்கும் இருந்ததுபோல், நல்ல அன்னை யின் குளிர்மடியென எனக்கு அமைந்தது. நல்ல உறக்கம் பெற்றேன். இன்று காலையிலும் அதே இன்பநிலை. எனைப் பிரியா இறைவனையும் இயற்கை அன்னையினையும் கைதொழுது உளத்தால் வாழ்த்தி என் பணி மேற்கொண் டேன்.

காலை எழுந்ததும் திரு. கிருஷ்ணன் அவர்களை இந்த தட்பவெட்பநிலையின் மாற்றம் பற்றிக்கேட்டேன். அவர்கள் இந்நகருக்கு காற்று நகர் (wind City) என்றே பெயர் என்றும், வடக்கே உள்ள பேரேரியில் பட்டு வரும் காற்று மிகக் குளிர்ச்சியுடையதாக இருக்கும் என்றும், இந்த இளவேனிற் காலத்திலும் இத்தகைய மாற்றம் நடைபெறு மென்றும் கூறினார். (எப்படியாயினும் என் நிலை தெளிய வைத்த இயற்கை அன்னையை வாழ்த்தினேன்.) மேலும் இச் 'சிகாகோ' நகரின் பெயர்க் காரணத்தையும்

விளக்கினார்கள். மிகப் பழங்காலத்தில் நம் தமிழகத்திலிருந்து வந்து இங்கே குடியேறிய இந்தியர்களை 'ராக்கோ இந்தியர்' (Rocko Indians) என அழைப்பார்களென்றும், சில நூற்றாண்டுகளுக்கு முன் அவர்கள் உண்ண உணவின்றி; உடல் ஒடுங்கும் நிலையில் ஊர் ஊராகத் திரிந்தார்களென்றும், இந்த ஊருக்கு வந்தபோது இங்கே பயனற்ற கோசுக் கீரையும் அழுகிய வெங்காயமும் கிடைத்த தென்றும், அவற்றை இணைத்து இப் பெயரை இட்டனர் என்றும் கூறினார் 'சி-கா-கோ' என்ற மூன்று சொற்கள் அடங்கிய பெயரே இவ்வூர்ப் பெயரென்றும் அம்மூன்று சொற்களும் மேலே கண்ட பொருளை உணர்த்துவன என்றும் கூறினார். இது மேலும் எண்ணி ஆராய்தற் குரியது போலும்.

பிற்பகல் உணவுக்குப்பின் பலருக்கும் எழுத வேண்டிய கடிதங்களை எழுதி முடித்தேன். மாலை ஒரு கலைக் காட்சிக்குச் செல்வதாக இருந்தோம். எனினும் மழையின் காரணத்தால் செல்லமுடியவில்லை. பக்கத்தில் இவர்கள் சாமான்கள் வாங்கும் கடைக்குச் சென்றோம். அங்கே எல்லாப் பொருள்களும் கிடைக்கின்றன. உயர்ந்த மூன்றடுக்கு மாடி, அடித்தளம் வேறு; மிகமிகப் பெரிய விசாலமான இடம். இதுவரை இது போன்ற கடை அமைப்பு (Complex) நான் எங்கும் கண்டதில்லை. கடை அமைப்பு பெரியதாக இருந்தது போலவே, அங்கே விற்கும் பொருள்களும் மிகமிக அதிக விலையிடப் பெற்றிருந்தன. சில ஆடைகளுக்கு 50% 30% கழிவு எனக் காட்டியிருந்தனர். இருந்தாலும் அந்த விலைகளும் இங்கேயே வேறு வெளியிடங்களில் விற்கும் விலைக்கும் அதிகமே என்றனர். இவர்கள் வீட்டிற்கு அருகில் உள்ளமையாலும் மாலையாக இருந்தமையாலும் தேவையான மருந்து, உணவுப் பொருள்கள் மட்டும் வாங்கிக் கொண்டு புறப்பட்டனர். வழியில் திரு. கிருஷ்ணன் அவர்கள் பணிபுரியும் பணியகத்தைக் கண்டோம். பரந்த நிலப்பரப்பில் பல உயரிய கட்டடங்கள் கொண்ட

பணியகம் அது. நாங்கள் போன சமயத்திலும் (இரவு 7.30) அங்கே பலர் பணியாற்றிக் கொண்டிருந்தனர். எதிரிலே அடர்ந்த காடு; மான்கள் துள்ளி ஓடின. (இங்கு 8.30 வரை யில் பகல் ஒளி உண்டு) பிறகு அனைவரும் வீட்டுக்கு வந்து, சிறிது நேரம் பல பொருள்கள் பற்றிப் பேசியிருந்து உறங்கச் சென்றோம். நாளை சிகாகோ பல்கலைக்கழகத்தே உள்ள பணி பற்றிய எண்ணத்தோடு நான் உறங்கினேன்.

சிகாகோ 17.5.85

இன்று காலை முறைப்படி எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டேன். இன்று பகல் 11-30க்கு சிகாகோ பல்கலைக்கழகத்தே தமிழ்ப்பயிலும் மாணவருடன் கலந்து பேசவேண்டிய பணி உள்ளது. எனவே வீட்டிலிருந்து 10-30க்குப் புறப்பட வேண்டும். அதற்குள் திரு. கிருஷ்ணன் அவர்கள் அவர் அலுவலகம் சென்று (9 மணிக்கு அலுவலகம் தொடக்கம்) சில பணிகளை முடித்து வருவதாகப் புறப்பட்டார். நானும் சிறிது நேரம் படித்து புறப்படத் தயாரானேன். சிகாகோ நகரில் உள்நகர் (Down Town என்று எல்லாவிடத்திலும் நகரின் பழைய அலுவலகங்கள் உள்ள பகுதியினை வழங்குகின்றனர்) செல்லும் வாய்ப்பு உண்டு. சிகாகோ பல்கலைக்கழகம் இந்நாட்டுப் பழம்பெரும் பல்கலை கழகங்களுள் ஒன்று. பல ஆயிரக் கணக்கான மக்களுக்கு - பல துறைகளில் அறிவூட்டும் ஒரு சிறந்த பல்கலைக் கழகமாக இது பணியாற்றி வருகின்றது. இங்குள்ள தென் ஆசியக் கல்வி பயிலிடத்தேதான் திரு. டாக்டர். இராமானுஜம் அவர்கள் பணியாற்றுகின்றார்கள். அத் துறையிலே தமிழ் பயில்கின்றவர் ஐவர்தான் எனக் கூறினர். எனினும் அவர்கள் பல துறைகளில் பயின்றும் ஆராய்ச்சி செய்தும் வருகின்றனர். அந்த இடத்தினைக் காணச் செல்லும் நோக்குடன் காலை 10-30க்கு வீட்டிலிருந்து புறப்பட்டோம். திரு. கிருஷ்ணன் அவர்கள் எனக்கென இன்று அலுவலகத்தே விடுமுறை பெற்றுக்கொண்டு வந்தார். ஐரோப்பிய நாடுகளிலும்

அமெரிக்க நாட்டிலும் அனைவரும் பலவிடங்களில் வேலை செய்கின்றவர்கள் - எளிமையாக விடுமுறை பெற்று வருதல் இயலாது. நம் நாட்டினைப்போல இங்கே வேலையில் சேர்ந்தபின் எத்தனைநாள் வேண்டுமாயினும் விடுமுறை பெறலாம் என்ற நிலை இல்லை. இங்கே எல்லாத் துறைகளும், நான் முன்னரே சுட்டியபடி, தனியார் முயற்சியாலேயே நடைபெறுகின்றமையின், நல்ல திறமை மிக்கவர்களையே பணியில் அமர்த்துவதுடன் அவர்களை என்றும் நிரந்தரமாக்குவதில்லை. அரசாங்கமும் கட்டுப்படுத்த இயலாது. எனவே இந்த முறை இருசாராருக்கும் நலம் பயக்கும் என்கின்றனர். அவரவர்கள் வேண்டும்போது - தேவையற்றாலோ ஒழுங்காகப் பணி செய்யாவிட்டாலோ வெளியனுப்பவும், அப்படியே பணியாற்றுபவரும் பிடிக்காவிட்டாலோ அன்றி வேறு இடத்தில் அதிக ஊதியமோ அதிகாரமோ பிறவோ பெறும் நிலையிலோ விட்டுச் செல்லவும் வாய்ப்பு உண்டு. இங்கே இந் நாட்டிலேயே சிறந்த அறிவியல் விற்பனர்கள் குறைவாக உள்ளமையில், பலர் இந்தியா போன்ற கீழைநாடுகளிலிருந்தும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் வந்து, நிலைத்துப் பணிபுரிகின்றனர். எனவே இருசாராரும் விதிகளைத் திட்டமாக்கி, தேவையாயின் மாற்று நிலை பெறத்தக்க வழிகண்டு தொழிற்படுகின்றனர். இதனால் தொழில்துறைகளும் அலுவலகங்களும் நன்கு வளர்கின்றன என்கின்றனர். இத்தகைய நிலையில் யாரும் விடுமுறை எடுப்பதில்லை. தொடர்ந்து எடுத்தால் வேலைக்கே ஆபத்து. இவ்வாறு வருகிறவர்களுக்கு - சுற்றிக்காட்டுவதற்கென விடுமுறை எடுத்தால் நன்கு அறிமுகமானவர்கள் பாதி நாள் வேலைக்குச் செல்ல முடியாது; மேலும் சிலவிடங்களில் மணிக்கணக்கில்-அல்லது தொழில்நிறைவு (Contract) நிலையில் ஊதியம். எனவே எல்லாத் துறைகளும் இங்கே நன்கு முன்னேறுகின்றன.

சரியாக 11-30க்கு, குறித்தபடி,- திரு. இராமானுஜம் அவர்கள் அறைக்குச் சென்று சேர்ந்தேன். திருமதி. கிருஷ்ணன் அவர்கள் அப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு

செய்கின்றமையின் மிக எளிமையாக இடம் காண வாய்ப் பாயிற்று. பல்கலைக்கழகம் நகர் நடுவில் இருப்பினும், சுற்றிலும் வேண்டத்தகாத குடியிருப்புப் பகுதிகள் இருப் பினும், பல்கலைக்கழக எல்லையுள் யாவும் இனிமையாக இருந்தன. பரந்த புல்வெளிகள் - நல்ல மரநிழற் சாலைகள் உயர்ந்த கட்டிடங்கள் - வெவ்வேறு துறைகளுக்கென அமைந்த தனிக் கட்டடங்கள் - உணவுச் சாலை, அஞ்சலகம் போன்ற பிற வசதிகள் - விடுதிகள் அனைத்தும் சிறக்க உள்ள பெருநகராகப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. அத்தகைய பல்கலைக் கழகத்தே அன்றுதொட்டு பல பேரறிஞர்கள் சிறக்கப் பணியாற்றி வருகின்றனர். நம் நாட்டைச் சேர்ந்த, சர். சி. வி. இராமன் உறவினரான நோபல் பரிசுபெற்ற டாக்டர். சந்திரசேகரர் இங்கே பௌதிகத் துறையில் சிறந்த ஆராய்ச்சி விற்பனராகப் பணியாற்றுகிறார். அவரையும் காணவேண்டும் என்ற எண்ணத்தோடு திரு. இராமாநுஜம் அவர்கள் அறையுள் காலெடுத்து வைத்தேன்.

திரு. இராமாநுஜம் அவர்கள் மற்றொரு பேராசி ரியரோடு (அமெரிக்கர்) பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் எங்களை அன்புடன் வரவேற்றனர். பின் திருமதி. கிருஷ்ணன் அவர்கள் வெளியே சென்று 3-30க்குத் திரும்புவ தாகவும் (அதற்குள் என் பணி முடிவுறும் என்றும் அறிந்தமை யின்) சொல்லிச் சென்றனர். பின் நான் ஆசிரியர்கள் மாணவர் ஐவரும் பிறரும் இருந்த அறைக்கு அழைத்துச் செல்லப் பெற்றேன். அங்கே பேராசிரியர் என்னை அனைவருக்கும் அறிமுகப்படுத்தினார். பின் தமிழ் இலக்கிய வளர்ச்சிப்பற்றித் தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரையில்-சுமார் 30 நிமிடங்கள் பேசினேன். பின் அவர்கள் சில கேள்விகள் கேட்டனர். கி. பி. 2-ம் நூற்றாண்டிற்கும் 6-ம் நூற்றாண்டிற்கும் இடையில் உண்டான தமிழ் நாட்டு மாறுதல்களைப் பற்றியும் பின் உண்டான பக்தி இலக்கிய வளர்ச்சி பற்றியும் கேட்டறிந்தனர். நானும் அக் காலக்கிய

(இருண்ட கால) இலக்கியங்கள் அமைந்த நிலைபற்றியும் களப்பிரர் போன்றார் புகுந்த நிலைபற்றியும் பின் காஞ்சிப் பல்லவர் காலத்தில் எழுந்த தேவாரம் பிரபந்தர்கள் அமைப் பினைப் பற்றியும், அவை சங்க இலக்கியங்களோடு இலக்கிய மரபில் மாறுபட்டு நின்ற நிலைபற்றியும், சங்க காலத்திலேயே எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, காப்பியம் இவற்றின் இடையில் உண்டான வேறுபாடுகள் பற்றியும் விளக்கி உரைத்தேன். சங்க காலத்தில் ஏற்றம் பெற்றிருந்த பாணர் போன்ற சிறந்த கலைஞர்கள் பிற்காலத்தில் இழிகுலத்தாராக மதிக்கப்பட்ட நிலைபற்றியும் கேட்டனர். இடைக்காலத்திலும் பிற்காலச் சோழர் காலத்திலும் 15, 16, 17 நூற்றாண்டுகளில் வேற்று மக்கள் ஆண்ட காலத் திலும் தமிழகத்தில் உண்டான பல்வேறு சாதிப் பிரிவுகளை யும் அவை வளர்ந்த வகைகளையும் அவற்றால் இக் கலைஞர் கீழே தள்ளப்பட்ட நிலையினையும் சுட்டி, தற்காலத்தில் அந் நிலை மாறிவரும் தன்மையினையும் விளக்கினேன். தற்காலத் தமிழக அரசாங்கம் தமிழ் எழுத்துக்களை மாற்றிய தன்மையினையும் காரணங்களை யும் அறிய விரும்பினர். நானும் முன் ஒரு காலத்தில் - 1950-ல் ஏற்பட இருந்த முழுமாற்றத்தினையும் அதை இராஜிவந்தபோது நிறுத்திவைத்த தன்மையினையும் சுட்டி, தற்போதுள்ள அளவான மாற்றம் தட்டெழுத்துக்கு எளிதாகுமாறு செய்யப்பெற்றதையும் விளக்கினேன். மேலும் ஐ, ஔ இரு எழுத்துக்களின் தனித்தன்மையினை விளக்கி, அவற்றின் மாற்றத்தை அரசாங்கம் திரும்பப் பெற்று, தனி எழுத்தினும் பொருள்தரும் தன்மையினை உணர்ந்து ஆணை பிறப்பித்த நிலையினையும் சுட்டினேன். மேலும் இம் மாற்றங்களை முன்னர் ஓலையில் எழுதுவதற்கு ஏற்றதாக அமைய, இன்று தட்டெழுத்துக்கு ஏற்றபடி பழைய வடிவங் களைப் பெற்ற நிலையினையும் சுட்டிக் காட்டினேன், தமிழ் இலக்கிய மரபு பற்றியும் இன்றைய தமிழ்நாட்டுப் பல்கலைக் கழக ஆராய்ச்சிகள் பற்றியும் கேட்டனர். மேலை நாடுகளில் தமிழர்தம் பழம்பெருங் கலைகளையும் இலக்கி

யங்களையும் பண்பாட்டினையும் விளக்கும் ஆராய்ச்சி களைச் செய்து, ஆங்கிலத்தில் சிறந்த நூல்களைக் கொணரும் பல்கலைக் கழகங்களையும், அவற்றைவிட்டு எங்கோ செல்லும் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி நிலைகளையும் எண்ணி ஓரளவு விளக்கிக் கூறினேன். அனைவரும் நன்கு கலந்து பல பொருள்கள் பற்றி உரையாடினர். 'சங்க இலக்கியங்களையும் பிற்காலச் சமய இலக்கியங்கள் போன்றவற்றையும் இங்குள்ளவர் ஆராய்கின்றனர் என அறிந்தேன். திரு. இராமானுஜம் அவர்கள் பல சங்க இலக்கியப் பாடல்களை நன்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். முடிந்து இன்னும் சில நாளில் வெளிவர இருக்கின்ற (Poetry on War & Love) தமிழகக் காதல், போர் பற்றிய பாடங்களின் ஆங்கில மொழிபெயர்ப்பின் அச்சிட்ட படியினைக் காட்டினர். முன்னரே அவரால் இதுபோன்ற மொழிபெயர்ப்பு நூல்களும் வந்துள்ளன. நம்மாழ்வார் பற்றியும் அவர் பாடல்களையும் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். 'The Interior landscape' என்று குறுந்தொகைப் பாடல்கள் சிலவற்றில் அமைந்த (ஏறக்குறைய 80 பாடல்கள்) இயற்கை நலத்தை எல்லாம் மொழிபெயர்த்து வெளியிட்ட ஆங்கில நூலினையும் எனக்கு அளித்தார். மற்றொரு பேராசிரியர் தேவாரம் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றை எழுதியிருப்பதாகவும் மற்றொருவர் சிலப்பதிகாரத்தை மொழி பெயர்த்திருப்பதாகவும் கூறினர். தலபுராணங்களைப் பற்றிய ஆய்வு நூல் ஒன்றும் அண்மையில் வெளியிட்டுள்ளனர். தமிழ் நூல் நிலையத்தில் எண்ணற்ற பழங்கால இலக்கிய நூல்களையும் இக்காலத்திய புதினங்களையும் வாங்கிவைத்துள்ளமையையும் அவற்றைத் தமிழ் மாணவர் மட்டுமன்றிப் பிற துறையினரும் எடுத்துப் பயன்படுத்துகின்றனர் என்றும் கூறினர். பின் பிற்பகல் 1 மணி அளவில் கூட்டம் முடிந்து உணவுச் சாலைக்குச் சென்றோம்.

அச் சாலை, பேராசியர்கள் கூடி அமைத்த கூட்டுறவு முறையில் நடைபெறும் ஒன்றாகும். மாணவர்களுக்கென

வேறு சில இடங்களும் உண்டாம். எனவே இங்கே பல துறையில் பணியாற்றும் பேராசியர்கள் மட்டுமே வந்து அமைதியாக உண்கின்றனர். உண்ணும் போதே அமைதியாகத் தம் ஆய்வுகள் பற்றியும் சிந்தித்துப் பேசுகின்றனர். டாக்டர். இராமநுஜம் எனக்கு அளித்தது சிறப்பு விருந்தாகையால் அவர்தம் மாணவரும் அங்கே உடன் வந்திருந்தனர். மெல்ல உணவு உண்டு 2 மணி அளவில் அங்கிருந்து புறப்பட்டோம். நாங்கள் உண்ட மேசைக்கு அடுத்த மேசையில் நோபல் பரிசு பெற்ற திரு. சந்திரசேகரர் அவர்களும் உண்டு கொண்டும், பிற பேராசிரியர்களுடன் ஆய்வு பற்றிப் பேசிக் கொண்டும் இருந்தார். சிறிது நேரம் இருந்து, பின் இராமநுஜம் அவர்கள் அறிமுகப்படுத்த அவர்களைக் கண்டு வணங்கி, என் வாழ்த்தினைக் கூறினேன். டாக்டர் C.V. இராமன் அவர்களைப் பெங்களூரில் ஒரு முறை கண்டு மகிழ்ந்த நிலையில் - அவர்தம் உறவினராகிய இச் சந்திரசேகரரை இங்கே 12,000கல் தொலைவு தாண்டி, அவர்பணிபுரியும் பல்கலைக்கழகத்திலேயே காணும் நல் வாய்ப்பினை எண்ணி மகிழ்ந்தேன். அவரும் என்னை பற்றிக் கேட்டறிந்து, என் பயணம் பற்றி அறிந்து மகிழ்ந்து வாழ்த்தினர். பின் விடைபெற்று வெளியில் வந்தோம். டாக்டர். இராமநுஜம் அவர்கள் அவர்தம் மாணவர் இருவரை அழைத்து, நூலகம் முதலிய இடங்களைக் காட்டி வருமாறு அனுப்பி வைத்தனர். எதிர்பாராத விதமாகப் பழம் பெறும் இந்திய நாட்டு இலக்கியங்களை ஆராய்ந்த (தற்போது சுவிஸ் நாட்டில் வாழும்) அறிஞர் திரு. பாஷாம் அவர்கள் 3.30க்கு பகவத்கீதையைப் பற்றி பேசப் போவதாகவும் அதற்குள் முடித்து, அக் கூட்டத்துக்கு வருமாறும் கூறிச் சென்றனர்.

முதலாவது ஒரு வெளியிடத்துக்கு என்னை அழைத்துச் சென்றனர். அங்கே தாமிரத்தில் ஒரு பெரிய குறியீடு ஒரு உயர்ந்த மேடை மேல் பொருத்தப் பெற்றிருந்தது. அதை அவர்கள் காட்டினர். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

அந்த இடத்தில்தான் முதன்முதல் உலகை நடுங்க வைத்த - அதே வேளையில் இரண்டாம் உலகப் போரை நிறுத்திய அணு ஆயுத்தைத் தயார் செய்வதற்கு அடிப்படையான அணுவைப் பிளக்கும் ஆய்வு நடைபெற்று அதைப் பிளந்து காட்டினார்களாம். ஆம்! முதலில் அணுவைப் பிளந்து காட்டியவர் 'ENRICO-FERMI' என்ரிகோ பெர்மி என்ற இத்தாலிய நாட்டினர். அவரும் வேறு சிறந்த ஆய்வாளர் களும் சேர்ந்து 1942 டிசம்பர் இரண்டாம் தேதி இங்கே முதல்முதல் அணுவினைப் பிளந்தார்களாம். அந்த அணுவினைச் சதகூறாக, நூறு நூறு சதகூறாக-இட்ட நிலை யில் ஒரு கூறுஎடுத்து அதைப் பெரிதாக்கி, இங்கே தாமிரத்தில் அதன் உருவம் அமைய ஒரு நினைவினை நிறுவியுள்ளனர் என்று அவர் கூறும்போது நான் உண்மையிலேயே இங்கும் என்னை மறந்தேன்.

'அணுவைச் சத கூறிட்ட கோணினும் உளன்' என்று பிரகலாதன் வாக்கில் ஆயிரல் ஆண்டுகளுக்கு முன்பே நம் கவிஞன் கம்பர் கூறியதை எண்ணினேன். அதைப் பரிகசித் தவர் வியக்கும்படி இந்த அணுவின் கூறுபாடு எத்தனை வகைகளில் (Electronics etc) நம் வாழ்வில் பயன்படுகிறது என்பதை இந்த நாட்டில் உள்ளவர் நன்கு அறிவர். நான் முன்பே சிலவற்றைச் சுட்டியிருக்கிறேன். இங்கே இந்த அணுவினைக் கூறுபடுத்திய நிலையின் ஆய்வு தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. இன்றைய கணிப்பொறி போன்ற வையும் அட்டிற் சாலையின் பொருள்களும் காப்புக்கெனப் பயன்படுவனவும் தவிர்த்துப் பிற சாதாரண, தொலைபேசி மக்கள் வாழ்வில் பயன்படும் பிற பொருள்கள் மட்டுமன்றி, பிற எல்லாத் துறைகளிலும் அதைப் பயன்படுத்தி வரும் நிலையினையும் இன்னும் எந்தெந்த வகையில் பயன்படுத்த லாம் என்ற ஆய்வு நினையினையும், இங்கே கடந்த ஒரு திங்களில் கண்ட நான், உலகவாழ்வின் விரைவுநிலை எங்கே கொண்டு விடுமோ என எண்ணினேன். பல பொருள்கள் ஆக்க நெறிக்குப் பயன்படும் தன்மை ஒருபுறம் இருக்க, உலக

நாடுகளில் இருவல்லரசுகள் இவற்றால் அழிவுப்பொருள்கள் ஆகும் தன்மையினையும் அதனால் என்று என்ன விளையுமோ என்று உலக மக்கள் அஞ்சி அஞ்சி வாழும் தன்மையினையும் எண்ணினேன்.

பிறகு அடுத்திருந்த அந்த அணு ஆய்வுக் களத்திற்கு அழைத்துச் செல்லப் பெற்றேன். அதுபற்றி எனக்கு ஒன்றும் விளங்காவிடினும், அதனையெல்லாம் கண்டு மலைத்து நின்றேன். அங்கே ஓரிடத்தில் நிலம், நீர், காற்று தீ இவற்றின் ஒன்றிய நிலையினையும் அவை பிரியும் நிலையினையும் - ஓவியமாக - கலைதோய்ந்த சித்திரமாக - அறைமுழுதும் பரவிய நிலையில் அமைத்து ஒன்றை ஒன்று பற்றிப் படரும் தன்மைகளை விளக்கியிருந்தனர். மணிவாசகர்தம்

'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் விரிந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி'

என்ற பஞ்சபூத அமைப்பின் தத்துவம் இங்கே நன்கு விளக்கப்பெற்றுள்ளது. 'பண்டாரப் பாட்டு' என்று அதைப் பரிகசிக்கும் 'நல்லவர்' இங்குவந்து காணின் இதன் உண்மையினை உணர்வர். நான் இந்த அடிகளைச் சொல்லி அக்காலத்தையும் விளக்கியபோது, உடன்வந்த அமெரிக்க மாணவர் இருவரும் வியந்து போற்றினர். இதுபோன்ற ஆய்வுக் கூடங்கள் இன்னும் பல இப் பல்கலைக்கழகத்தே உள்ளதெனக் கூறினர். எனக்கு இவற்றை அறிந்துணரும் ஆற்றல் இன்மையாலும் 3.30க்குள் நூல் நிலையத்தையும் பிறவற்றையும் கண்டு முடிக்க வேண்டியிருந்தமையாலும் அங்கிருந்து புறப்பட்டோம்.

நூல் நிலையத்துள் புகுந்தோம்; மிகப் பெரியது. உள் மாணவர் மட்டும்தான் புகலாம். எனவே எனக்குத் தனியாக நுழைவுச் சீட்டு வாங்க வேண்டியிருந்தது. பலதுறை

கள்-பல நூல்கள்; படிக்கும் ஆய்விடங்கள். இருப்பினும் காலம் இன்மையின் தென் ஆசிய நூல்நிலையப் பகுதியினை மட்டும் காணச் சென்றேன். அந்த நூல்நிலைய அலுவலர் (Mr. JAMES NYE, South Asia Librarian Iloo, E. 57th Street, Chicaco ILL. 60637) திரு. ஜேம்ஸ் நீ என்பவர் என்னை அன்புடன் வரவேற்றார். உடன் வந்தவர்கள் அவரிடம்என்னை ஒப்படைத்து வேறு பணிமேற் சென்றனர். அவர் பல பகுதிகளுக்கு என்னை அழைத்துச் சென்றார்.

இந்திய நாட்டு மொழிகளில் உள்ள பெரும்பாலான நூல்கள் இங்கே உள்ளன. நம் நாட்டு நூல்நிலையங்களில் காண முடியாத அளவில் எல்லா மொழிகளிலும் பலப்பல நூல்கள் உள்ளன. தமிழில் ஒவ்வொரு நூலிலும் வெளி வந்த அத்துணைப் பதிப்புகளும் வாங்கி வைக்கப் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்களும் பிற்கால இலக்கியங்களுள் பலவும் நிறைந்திருந்தன. மற்றும் அரசாங்கச் செய்தி வெளியீடுகள் (Gazzeetee) இருந்தன. பத்து ஆண்டுக்கு ஒரு முறை நம் பாரத நாட்டில் எழுதப் பெறும் மக்கள் தொகை கணக்குப் பற்றிய நூல்கள் ஒன்றன் பின் ஒன்றாக வரிசையாக அடுக்கி வைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொன்றிலும் பல படிகள் இருந்தன. அப்படியே மைய, மாநில அரசுகள் அவ்வப் போது இயற்றும் சட்டங்கள் பற்றிய நூல்களும் இருந்தன. இவை அனைத்தையும் அவ்வப்போது கேட்டு வாங்கி, நிறைவு செய்கின்றனராம். தமிழ்ப் பகுதியிலும் பல்வேறு வகைப்பட்ட நூல்கள் - இன்றைய நாவல்கள் உட்பட இருந்தன. பல இதழ்கள் எல்லா மொழிகளிலும் வரவழைக்கப் பெறுகின்றன. இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேசம், பூடான், நேபால், இலங்கை, மால்டிக் தீவுகள் போன்றவை பற்றியும் அண்டையிலுள்ள ஆப்கானிஸ் தான், (மத்திய கிழக்கின் பிரிவு) திபெத் (நெடும் கிழக்கு - Far East) ஆகிய நாடுகளைப் பற்றியும் ஆர்ாய்ச்சி செய் வோருக்கு வேண்டிய அத்தனை நூல்கள், இதழ்கள், அரசாங்க வெளியீடுகள் அனைத்தும் இங்கே உள்ளன.

மேலும் அமெரிக்க நாட்டு இந்திய ஆராய்ச்சிக் கழகத்தின் தலைமையகம் இங்கேதான் உள்ளது. அதன் தலைவர் திரு எட்வர்ட்-சி-டிமாக் (Edward-C-Dimock) என்பவர் இங்கே உள்ளனர். அமெரிக்க நாட்டில் பல பாகங்களிலிருந்து 40க்கு மேற்பட்ட உறுப்பினர் இந்தியா நாடு பற்றிப் பலவகையில் ஆய்வு செய்கின்றனர், (தமிழ் நாடு உட்படத்தான்) 1,83,000 மேற்பட்ட அந்த நாட்டு நூல்களும் இதழ்களும் இங்கே உள்ளன. இவையன்றி மற்றொரு பகுதியில் இந்நாடுகளில் வெளிவராத இதழ்கள், மாநாடுகளில் படித்த கட்டுரைகள், நாட்டுப் பாடல்கள், காட்சிப் படங்கள், இசைத் தட்டுக்கள், நூல் விவரப்பட்டியல்கள் போன்ற பலவும் சேகரித்து வைக்கப் பெற்றுள்ளன. (Room No. 560) எனவே நம் நாட்டைப் பற்றி அறிய வேண்டிய பல தகவல்களை அங்கே அறிய முடியாவிட்டாலும் இங்கே அறிய வாய்ப்பு உண்டு என உணர்ந்தேன். பல ஆய்வாளர்கள் இவற்றைப் பயன்படுத்துகின்றனர்.

நூல் நிலையத் தலைவர் மிக நல்லவராக இருந்தார். அனைத்தையும் அழைத்துச் சென்று காட்டியதோடு, மணி 3-30 ஆகிவிட்டமையால் தம் அறைக்கு அழைத்து வந்து, நூலகம் பற்றி மேலும் விளக்கி, 4 மணி அளவில் நடை பெறும் சிறு விருந்துக்கும் வருமாறு அழைத்தார். அதற்குள் மாணவர் வரவே அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, 'பாஷாம்' சொற்பொழிவுக்குச் சென்றேன். திரு. பாஷாம் அவர்கள் இந்திய நாட்டினை—தமிழ்நாடு உட்பட பலமுறை கண்டவர். வடமொழி நன்கு பயின்றவர். தமிழும் அறிந்தவர். அவர் பகவத்கீதையைப் பற்றி—கீதையில் கடவுள் நெறி பற்றி (Theism in Bagavat Geetha) பேசினார். 5மணி வரை அவர் பேச்சு அமைந்தது. பகவத்கீதை என்பது 'பகவத் கீதம்' என்பதிலிருந்து மருவி வந்த தெனவும், இது இறைவன் பாடிய பாடல் எனப் பொருள் படுவது எனவும் விளக்கிக் காட்டி, கீதையில் பலவிடங்களைத் தொட்டு, அதில் வரும் தெய்வ நெறிகளையும், 'கர்மயோகம்'

போன்றவை பற்றியும் சத்துவ, தமோ, இராசச குணங்கள் பற்றியும் விளக்கிக் காட்டினார். மேலும் பல்வேறு உபநிடதங்களின் ஒப்புமைப் பகுதிகளையும் பிறவற்றையும் விளக்கியதோடு, பின்வந்த பௌத்த சமயத்துக் கொள்கைகளோடு மாறுபட்ட சில கருத்துக்களையும் காட்டினார். அவருடைய வடமொழி இலக்கிய அறிவு நன்கு தெளிவுற்றது.

நான் 5 மணிக்குள் புறப்பட வேண்டியவனாதலாலும், கூட்டம் தொடங்கு முன்பே அவரைக் கண்டு, என் வணக்கத்தையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொண்டேன். ஆதலாலும் முடிந்த நிலையில் உடன் வந்த மாணவரோடு அப்போதே புறப்பட்டேன். எனக்காகக் காத்திருந்த திரு. கிருஷ்ணன் அவர்களைக் கண்டேன். பின் திரு. இராமாநுஜம் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டேன். திருமதி. கிருஷ்ணன் அவர்களும் பகவத் கீதைச் சொற்பொழிவுக்கு வந்திருந்தார்கள். தந்தையாரை நேரே அறியாவிட்டாலும் தன் தந்தையாருக்கு அறிமுகமானவராதலால் திரு. இராமாநுஜம் அவர்கள் திருமதி கிருஷ்ணன் அவர்களையும் வாழ்த்தி அனுப்பினார். பின் நாங்கள் வீடு நோக்கிப் புறப்பட்டோம்.

மாலை 5க்கு மேலாகிவிட்டமையால் கார்கள் சாலையில் மிக மிக நெருக்கமாகச் சென்றன. ஒரு கல் கடப்பதற்கு கால்மணி நேரமாயிற்று. எங்கும் கார்மயம். மெல்ல ஏழு மணி அளவில்தான் வீட்டிற்கு வர முடிந்தது. வழியில் நான் நாளை காணவேண்டிய சில இடங்களை எனக்குச் சுட்டிக் காட்டினர். விடு திரும்பியதும், மிகச் சோர்வாக இருந்தமையின், உணவு கொண்டு சற்று முன்னதாகவே படுக்கச் சென்று விட்டேன்.

சிகாகோ 18-5-85

காலை எழுந்து கடன்களை முடித்துக்கொண்டு குறிப்பினை எழுதி முடித்தேன். காலையில் சான்பிரன் சிஸ்கோ, லாஸ் எஞ்சிலஸ் ஆகிய இடங்களில் உள்ள அன்பர் களுக்கு நான் வரும் நாள் நேரம் முதலியவை குறித்துத் தொலைபேசியில் தகவல் தெரிவித்தேன். இன்று நகரைச் சுற்றிப் பார்க்கவும் மாலையில் டாக்டர் காந்தி (திரு. பழநியப்ப செட்டியார் மகன்) அவர்கள் இல்லத்தில் உணவு கொள்ளவும் ஏற்பாடு. எனவே, அதற்கேற்ப காலை உணவுக்குப்பின் வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து கொண்டு 11 மணி அளவில் திரு. கிருஷ்ணன், அவர்தம் துணைவியார் இருவருடன் நானும் புறப்பட்டேன். சிகாகோ நகரின் நெடுந் தெருக்களில் வண்டி செல்லும்போது, அமைந் துள்ள மேம்பாலங்களின் அடுக்குகளையும் அமைப்புகளையும் கண்டுகொண்டே சென்றேன். எத்தனைத் திருப்பங்கள், உயர்வு தாழ்வுகள், குறுக்குச் சாலைகள் இருப்பினும் நாம் செல்லும் இடத்திற்குக் குறிகாட்டும் சாலையின் எண் அமைந்த வகையினை எண்ணினேன். முதலில் இங்கே மிக மிக உயரமான சீயர்ஸ் கோபுரத்தினை (Sears Tower) காணல் வேண்டும்; இங்கே மட்டுமன்றி அமெரிக்காவிலேயே - ஏன் - உலகிலேயே மிக உயரமான கட்டடம் - கோபுரம் இது என்று கூறினர். நான் மட்டும் தனியாக மேலே சென்று காணலாம் என்றும் அவர்கள் பலமுறை பார்த்திருப்பதாக வும் சொன்னார்கள். அதன் உச்சியில் ஏறிக் காண்பதற்கு மிக அதிகமாகக் கூட்டம், கியூ வரிசையில் நுழைவுச் சீட்டு

எடுக்க, நின்றிருந்தது. நான் அந்த வரிசையில் நின்று 20 நிமிடங்கள் கழித்து நுழைவுச்சீட்டு எடுத்தபின் மேலே மின் தூக்கி வழியாகப் பலருடன் கொண்டு செல்லப்பெற்றேன். அதன் உயரம் 442—மீட்டர் என்றும் 105 அடுக்குகள் உள்ள தென்றும் அதற்கு மேல் இருகூம்புகள் உள்ளன என்றும் கூறினர். எனினும் மேலே ஏதோ பழுது பார்க்கின்ற காரணத்தால் 98வது மாடி வரையிலேயே நாங்கள் செல்ல முடிந்தது. அதன் உயரம் 1288 அடியாகும். அதற்குமேல் ஏழு மாடிகளும் கூம்பும் உள்ளனவாம். நான் முன்னரே நியூயார்க் நகரில் உள்ள உயரிய கட்டிடம் பற்றியும் (Empire Building) அதில் நான் ஏறிக் கண்ட காட்சியினையும் பற்றிக் குறித்துள்ளேன். இது அதனினும் சற்றே உயர்ந்த கட்டடம் என்றனர்.

மேலே ஏறுதற்குக் கட்டணம் உண்டு. எனினும் நான் முன்னரே குறித்தமை போன்று, எனக்கு வயது 65க்கு மேலானமையின் சலுகை உண்டு. வயதானவர்களை 'மூத்த குடிமகன் (Senior Citizen) என்றே குறிக்கின்றனர். அவர் களுக்குத் தங்கத் தனி இடமும் பிற வசதிகளும் இந்த அரசாங்கம் செய்து தருவது போன்றே, எல்லா இடங்களிலும் இரெயில் - பஸ் பிரயாணம் உட்பட - கட்டணச் சலுகை கள் உண்டு. உண்மையாகவே வயதானவர்களைப் போற்ற வேண்டும் என்று செய்கிறார்களாக அன்றிப் பெரும்பாலோர் பிள்ளைகளால் அனாதைகளாக விடப்பட்டமையின் அவ் வாறு செய்கிறார்களா என எண்ணிப் பார்த்தேன். எங்கோ ஒருசிலர் இந்த நாட்டில் தம் மக்களுடன் வாழ்ந்தாலும் பெரும்பாலோர் தனித்தே வாழ்கின்றனர். வாழ இயலாதவர் களுக்கு அரசாங்கம், புகலிடம் தந்து உதவுகிறது. இளைய சமுதாயத்தைக் கேட்டால், 'நாங்கள் பதினெட்டு வயதான வுடனே எங்களை அவர்கள்தாமே வெளியே துரத்தினர். இப்போது எப்படி இணைந்து வாழ்வார்கள்?' என்று கேட் கின்றனர். இங்கே மணமுறிவும் மறுமணமும் மிகச் சாதாரணமாக உள்ளமையின் முன் பெற்ற பிள்ளைகளைப் பற்றிப் பெரும்பாலோர் கவலைப்படுவதில்லை. அவருள்

பலர் வருந்தி உழைத்துப் பொருள் தேடி, தம் கல்வியைக் கற்று, வாழ்வில் முன்னேறுகின்றனர். சிலர் வழுக்கியும் விழுகின்றனர். ஆயினும் அந்த வீழ்ச்சியினையும் இந்தச் சமூகம் தவறாகக் கொள்வதில்லை. அந்த வீழ் வாழ்வில் முளைத்த இளஞ்செல்வங்களைக் காக்கவும் அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளது. தாய் தந்தையரை மறந்த - அறியாத குழந்தைகள் இந்த நாட்டில் உண்டாம். அதனாலேயே நம் நாட்டிலிருந்து இங்கே வந்து வாழும் பல பெரியவர்கள்- சிறப்பாகப் பெண்களைப் பெற்றவர்கள் - விரைவாகத் தாயகம் திரும்பத் திட்டமிடுகின்றனர். இதுபற்றி முன்னரே குறித்துள்ளேன்.

1288 அடி உயரத்தில் அகன்ற தளம் இருந்தது. நாற்புறமும் சுற்றிப்பார்க்கவும் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. தொலை நாடிகளும் இருந்தன. சிகாகோ நகரமும் சுற்றுப் புரங்களும் நன்கு தெரிந்தன. ஒருபுறம் கடல் போன்ற பெரிய ஏரி. இங்கே சிறந்த துறைமுகம் உண்டு. இரு பெருங் கப்பல்கள் நின்றிருந்தன. நான் முன்னமே குறித்தபடி, இயற்கையன்னை இவற்றால் இந்நாட்டுப் பொருளாதாரம் வளர உதவுகிறாள். இவர்களும் சலியாது உழைத்துப் பாடுபட்டுப் பயன்பெறுகின்றனர். மற்றொரு பக்கம் சிறு படகுகள் நூற்றுக் கணக்கில் இருந்தன. மக்கள் உல்லாசமாக அவற்றில் செல்வார்களாம். நகரின் பல்வேறு தொழிற்கூடங்களும், நிலையங்களும் அடுக்கடுக்காகத் தெரிந்தன. அந்த மேல்மாடியில் நம் நாட்டுத் தென்காசியைச் சேர்ந்த அன்பர் ஒருவர் குடும்பத்துடன் இருந்தார். அவர் இருபது ஆண்டுகளாக இங்கே பணி செய்கின்றவர். என்னைக் கண்டதில் மகிழ்ச்சியுற்றார். சுமார் அரை மணி நேரம் அனைத்தையும் பார்த்துவிட்டுக் கீழே மின்தாங்கி வழியே இறங்கினேன். கிருஷ்ணன் தம்பதியார் காத்திருந்தனர். நான் இறங்கியதும் அதன் வாயிலில் நிற்க வைத்துப் புகைப்படமும் எடுத்தனர். மணி ஒன்று ஆகியிருந்தது. எனவே உணவு கொண்டு பின் மற்றவற்றைக் காணலாம் என்றனர். வண்டியிலேயே நாங்கள் கொண்டு வந்த

உணவினை உண்டோம். பொதுவாக இந் நகரில் நான் பிற நகரில் கண்ட மக்கள் நடமாட்டமும் நெருக்கமும் இல்லை. சிலவிடங்களிலே சிலருடைய நடமாட்டம் இருந்தது; ஏனோ தெரியவில்லை. கேட்டால் காரணமும் சொல்லவில்லை.

சிறிது உணவு கொண்டபின் இங்கேயுள்ள கலைக் கண் காட்சியினைக் காணச் சென்றோம். (Art Exhibition). ஆயி னும் அந்தத் தெருக்கள் தடுக்கப்பெற்றிருந்தன. காவல்துறை யினர் வழிவிட மறுத்தனர். அணியணியாகப் படைத்துறை யினரும் பிறரும் ஊர்வலம் போன்று ஒரு பக்கம் சென்று கொண்டிருந்தனர். அந்தப் பக்கம் ஏதோ விழாக்கோலம் பூண்டிருந்தது. வேறு வழியாகவும் செல்ல முயன்றார் திரு. கிருஷ்ணன். ஆயினும் எப்பக்கத்தும் தடை இருந்தது. எனவே அதைப் பார்க்க முடியவில்லை. அங்கே பல்வேறு வகைப்பட்ட ஓவியங்கள், சிற்பங்கள் போன்றவை - மிகப் பழங்காலத்தியவை உட்பட - உள்ளனவாம். 'சரி முடிந்தால் நாளை காணலாம்; இன்றேல் விடலாம்' என்ற எண்ணத்தோடு அறிவியல், தொழில் கண்காட்சிச் சாலை யினைக் காணச் சென்றோம். வழியிலே இறந்த உயிரினக் காட்சியும் (நம் ஊரில் செத்த காலேஜ் என்று சொல்லுவார் கள்) ஒன்றிருந்தது. எனினும் முன் சொன்ன தொழிற் காட்சி மிகப் பெரியதாகையாலும் 5-30க்கு மூடிவிடுவார்க ளாதலாலும், பார்க்க அதிக நேரமாகுமாதலாலும் நேரே அந்தக் காட்சி அரங்கிற்குச் சென்றோம். திரு. கிருஷ்ணன் தன் ஆய்வு சம்பந்தமாக ஏதோ படிக்க எழுத வேண்டி யிருந்ததாகக் கூறி வண்டியில் இருந்தார். திருமதி. கிருஷ்ணன் அவர்கள் என்னை அழைத்துக் கொண்டு காட்சிச் சாலையினைக் காட்ட முற்பட்டார். சரியாக 2-30க்கு அதனுள் புகுந்தோம்.

உலகில் மனிதன் தோன்றிய வரலாறு முதல் அவனுக்குப் பயன்படும் எல்லாப் பொருள்களின் வரலாறுகளும் - அவை

ஒவ்வொன்றும் வளர்ந்த விதமும் பலப்பல வகைகளில் விளக்கப் பெற்றிருந்தன. முதலில் நீர் தோன்றி, பின் நிலம் தோன்றி, கடலில் உயிரினம் தோன்றி, பின் படிப்படியாக மனித நிலை வரையில் அமைந்த கூர்தலறம் (Evolution) விளக்கப்பெற்றிருந்தது. எனினும் அந்தப் பரிணாம வளர்ச்சி அவ்வளவு பொருத்தமாக இல்லை என நான் கருதினேன். நம் மணிவாசகர் கூறிய 'புல்லாகிப் பூடாய்' என்ற அடிகளுக்கு ஒப்ப அமைந்த இந்தப் பரிணாம வளர்ச்சி பற்றி முன் கண்ட பொருட்காட்சிகளைப் பற்றிக் கூறிய போது (நியூயார்க் - லண்டன்) எழுதியுள்ளேன். இங்கே ஏனோ அது சரியாகக் காட்டப் பெறவில்லை. முதலில் நீரில்தான் உயிரினம் தோன்றிற்று என்பதையும் அவ்வுயிரினம் தோன்ற அடிப்படைக் காரணமாய அணுக்களின் தோற்ற அமைப்புகளையும் நன்கு காட்டியிருந்தனர். அப்படியே மனிதன் விவசாயத்தைக் காலந்தொறும் எவ்வாறு வளர்த்தான் என்பதைப் படிப்படியாக 12,000 ஆண்டுகள் கால எல்லையில் காட்டியுள்ளனர். அதற்குமுன் விவசாயம் இல்லை என்பது அவர் கருத்தா என விளங்க வில்லை. இங்கே விவசாயத்துக்குப் பயன்படு கருவிகளின் அமைப்பு முறைப்படுத்தியிருந்தது. இந்நாட்டில் விவசாயம் அனைத்தும் இயந்திரங்களைக் கொண்டே நடைபெறுகின்ற தாகையால், நம் ஊர் மக்களுக்கு இது வியப்பாகலாம். உழவு தொடங்கி அறுவடை தானியம் களஞ்சியம் சேரும் வரையில் இயந்திரங்களே துணை புரிகின்றன. அப்படியே அவன் பயன்படுத்தும் உணவுப் பொருள்களை ஆக்குதற்கு உண்டான முறைகளின் வளர்ச்சியும் காட்டப்பெறுகின்றது. நான் முன்னரே குறித்தபடி, காப்பி வைத்தல் - சமையல் செய்தல் போன்றவை யாவும் மின் அணுக்கள் செயலே யாகும். மிக எளிதில் - நொடியில் - உணவைத் தரும் நிலை யினை இங்கே காண இயலும். மனித உடம்பினைக் கூறு கூறாக்கிப் பிரித்து, பின் இணைத்து வாழவைக்கும் அளவில் அறிவியல் முன்னேறி உள்ள இந்த நாட்டில் இது வியப்பில்லை. ஆனால் ஒன்றே - இது மக்களை முழுச்

சோம்பேறியாக ஆக்குவதோடு மறுபக்கம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் பெருக்குகிறது. இப்படியே யாவும் அணுத்திறன் - கொண்டோ - வேறு அறிவியல் சாதனம் கொண்டோ ஆக்கும் நிலை அமையின் பல மக்கள் வேலை யின்றி நிற்க. அவர்கள் வாழ்வு கட்டாயம் கொள்ளை, கொலை என்ற திருப்பத்தில்தான் செல்லும். இந்த நிலை இப்போதே இங்கே உண்டாகத் தொடங்கிவிட்டது என்கின்றனர் சிலர்.

மனிதனுக்குப் பயன்படும் இரெயில், பிற வாகனங்கள், மோட்டார், விமானம் போன்றவை படிப்படியாக வளர்ந்த வரலாறும், அவை எல்லாப் பொருள்களையும், முறையாக நிறுத்தியே காட்டப் பெறுகின்றன. பழைய இரெயில், விமானம், கார் போன்றவை நிறுத்தப் பெற்றுள்ளன. அவற்றைக் கண்ட - வளர்த்த - இன்றைய நிலைக்குக் கொணர்ந்த பல பேரறிஞர்களின் வரலாறுகளும் விளக்கப் பெற்றுள்ளன. இந்நாட்டில் நோபல் பரிசு பெற்ற (சென்ற ஆண்டு பெற்ற நம் நாட்டுச் சந்திரசேகரர் முடிய) அறிஞர் வரிசை அழகுற உள்ளது, அப்படியே மனிதனின் அன்றாடத் தேவைகளான பல்வேறு வகை ஆசனங்கள், உடைகள், பாண்டங்கள் இவை போன்றவை வளர்ந்த வகைகளும் நன்கு காட்டப் பெறுகின்றன. இவைகள் காலந்தோறும் வளர்ந்த வளர்ச்சி பார்த்து வியக்கக் கூடியதேயாகும்.

அப்படியே அச்சுக்கலை போன்றவையும் பிற கலைகளும் வளர்ந்த வகைகளும் ஒருபுறம் நன்கு காட்டப் பெறுகின்றன. காலங்காட்டும் கருவிகள் பழங்கால முதல் எப்படி எப்படி வளர்ச்சியுற்ற தென்பது ஒரு பக்கத்தே காட்டியுள்ளனர். (இக் கடிகாரத் கண்காட்சி ஒன்றினை - ஜினிவாவில் கண்டது - முன்னரே காட்டியுள்ளேன்). பின்னும் மனிதனுடைய கருவளர்ச்சியினை மிக நுண்ணிய அளவில் பலப்பல கோணங் களில் அழகுற அமைத்து, நாடொறும் வளர்ந்து வரும் வகையில் விளக்குவதும் சிறந்த பகுதி யாகும். அவனுடைய உடற்கூறுகள் பற்றியும், இதயம். நரம்பு, தலை, மூளை

இவைகள் பற்றியும் ஒரு பக்கத்தே விளக்கியுள்ளனர். இதயத்தின் துடிப்பு - அதன் உள்ளமைப்பு போன்றவை அறிய பெரிய இதய உருவம் சமைத்து, அதனுள் துடிக்கும் மெல்லிய ஒலியினையும் புகுத்தி, நம்மை அதனுள்ளேயே புகுந்து அதன் செயல் முறைகளைக் காண வழி செய்கின்றனர். மனிதனுடைய பல், கண், பிற உறுப்புக்கள் ஒவ்வொன்றின் தன்மை, வளர்ச்சி, விளையும் நோய்கள், தடுக்கும் வழிவகைகள் பற்றியும் காட்சியில் காணலாம். இல்வாறே விண்வெளிக் கோளங்களின் அமைப்பினைப் பற்றியும் சிறப்பாக நம் சூரிய மண்டலம் பற்றியும் (Solar System) நன்கு விளக்கியுள்ளனர். இப்படி அணுவளவில் புகுந்து கருவளர் நிலை தொடங்கி, அடங்காது விரிந்துள்ள அண்டகோளம் வரையில் உள்ள அனைத்தையும் முறையாக விளக்கிக் காட்டும் நிலை உண்மையிலேயே போற்றக் கூடியதாகும்.

இங்கே ஒலியினைக் காண முடியும், ஒளியினைப் பேசவைக்க முடியும். இருவகை நிலைகளையும் கண்கூடாகக் காணலாம். இன்றைய அணு ஆய்வு வளர்ச்சியின் விளக்கத்தைப் பலப்பல பகுதிகளில் விளக்கிக் காட்டுகின்றனர். இன்னும் சில நாட்களில் பலப்பல அற்புதங்களை இவ்வணுக்கள் நமக்குக் காட்டும் என்பது உறுதி. திருடனைக் காட்டும்-கொலையாளியினைப் பிடித்துத் தரும். உள்ளத்தைத் தொடும். 'நினைத்தேன் வந்தாய்' என்றபடி நாம் நினைக்க நினைப்பவர் நம் முன்னே நிற்கச் செய்யும். மனிதன் செய்ய முடியாது நிற்கும் எத்தனையோ வேலைகளை இது செய்து முடிக்கும். ஆம்! இவற்றையெல்லாம் ஆக்குபவன் மனிதன் தான். இத்தனை அற்புதங்கள் செய்து, மக்கள் வாழ்வினை மலரச்செய்யும் மனிதன் இந்த நிலை மறந்து, அழிவுக்கு இவற்றைப் பயன்படுத்தினால் ஒரே நிமிடத்தில் உலகம் அனைத்தையும் பிடி சாம்பலாக்கவும் முடியும். இதை எண்ணும் போதுதான் உளம் அஞ்சுகிறது. நான் முன்னரே குறித்தபடி இவற்றையெல்லாம் கண்டு வியந்து, போற்றி, மகிழும் அதே வேளையில், அந்த அழிவுப் பாதையினை

எண்ணும்போது நெஞ்சம் துணுக்குறுகின்றது. உலக வல்லரசுகள் அந்த அவல நிலையை என்று உண்டாக்குமோ என்ற அச்சத்தோடு இவைகளையெல்லாம் சுற்றிப் பார்த்தேன்.

கணிப்பொறி வளர்ச்சி (Computer) பற்றி ஒரு தனிப் பகுதியே உள்ளது. இதைப் பற்றி எண்ணியவர் தொடங்கி, இன்றைய வளர்ச்சி வரை, உதவியவர் தம் படங்களை வரிசையாக வைத்திருப்பதோடு, ஒவ்வொரு நிலையிலும் இக் கணிப்பொறி எப்படி வளர்ந்து, மாறி, வகைப்படுத்தப் பெற்று இன்றைய நிலையினை உற்றது என்ற வரலாறு யாரும் அறிந்து கொள்ளவேண்டிய ஒன்று. அப்படியே அதன் இன்றைய செயல், இனி வருங்காலத்தில் இயங்கப் போகும் நிலை இவை பற்றிக் குறிப்புகளும் அறிந்து குறித்துக் கொள்ளத்தக்கன. கணிப்பொறி பெருக்குகிறது, பாடுகிறது, எழுதுகிறது, எண்ணங்களைத் தருகிறது, மறந்ததை நினைப்பூட்டுகிறது, வேடிக்கை காட்டுகிறது, சிரிக்கிறது, சினக்கிறது இன்னும் என்னென்னவோ செய்கிறது. நான் நம் பள்ளிக்கு இங்கே ஏதேனும் பயன் பெறு நூல்கள் கிடைக்குமா என ஆராய்ந்தேன். இரண்டொன்றின் பெயர்களைக் குறித்து வைத்துள்ளேன்.

ஒலி, ஒளி அலைகளின் அசைவுகள், ஊடுருவிச் செல்லும் நிலைகள் பற்றியும் தனித்தனி அறைகளில் விளக்கம் தரப் பெற்றுள்ளன. இவ்வாறு எத்தனை எத்தனையோ எழுதிக் கொண்டு செல்லலாம். நான் அந்த மூன்று மணி நேரத்தில் முற்றும் பார்த்து விட்டேனா என்று சொல்ல முடியாது; அன்றி நான் பார்த்ததை முற்றும் இங்கே குறித்து விட்டேனா என்பதையும் சொல்லமுடியாது. இலண்டன், பாரிஸ், நியூயார்க், சிகாகோ போன்ற இடங்களில் உள்ள பொருட் காட்சிகள் நம்மை மிக மிகப் பழங்காலத்துக்கு அழைத்துச் செல்வதோடு, வரும் எதிர் காலத்தில் எப்படி எப்படி இருப்போம் என்பதையும் ஓரளவு எண்ண வைக்கின்றன. இத்தகைய எண்ணங்களோடு, மாலை 5.30க்கு அனைத்தையும் மூடிவிடுவார்களாகையால் - சில

துறைகளில் எங்களை வெளியே செல்லலாம் என்று சொல்ல வும், வெளியே வந்தோம் (இடையில், திரு. கிருஷ்ணன் அவர்கள் வந்து, அணு ஆய்வுக் களங்களில் - ஒலி - ஒளி பற்றிய விளக்க இடங்களில் - அனைத்தையும் அறிய எங்களுக்குத் துணைநின்று உதவினார்) ஜூன் 6 முதல் செப்டம்பர் 2 வரை இந்த அரங்கத்திலேயே நம் இந்திய நாட்டின் (India- Festival of Science) அறிவியல் விழாக் காட்சி நடப்பதென அறிக்கை அனைவருக்கும் தந்தனர். அதன் மேலட்டையில் நம் தமிழகச் சிற்பி செதுக்கும் நிலையில் அமைந்த தெய்வத் திரு உருவமே காட்சி அளித்தமைக் கண்டு மகிழ்ந்தேன்.

மாலை 5-30க்கு வெளி வந்து, திரு. காந்தி அவர்கள் இருக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டோம். நீண்ட தூரம் செல்ல வேண்டியிருந்தது. வழியிடைக் கிராமச் சூழலில் அமைந்த பெரும் பண்ணைகள் விதையிடத் தயாராக உழுதுவைத்திருந்த (பெரும் டிராக்டரால்தான்) நிலை கண்டேன். 6 30க்கு திரு. காந்தி அவர்கள் வீடு சென் றோம். அவரும் அவர் துணைவியாரும் அவர் இரண்டாம் மகனும் எங்களை அன்புடன் வரவேற்றனர். (முதல் மகன் தாத்தா வீட்டில் சென்னையில் இருந்து கொண்டு+2 படிக் கிறான்). அவர்தம் தந்தையாரோடு நாற்பது ஆண்டு களாக நான் பழகிய நிலையெல்லாம் பேசிக் கொண்டிருந்து செட்டி நாட்டார் செல்வளம், விருந்தோம்பும் நிலை இவை பற்றியும் உரையாடிக் கொண்டிருந்து, 8-30மணிக்கு உணவு கொண்டோம். இளஞ் செல்வன் கார்த்திகேயன் (கார்த்தி என அன்புடன் அழைக்கின்றனர்) ஐந்தாம் வகுப்பு படிக் கின்றவன்; மின் அணுத் துணையால் அவன் ஆக்கும் பல கருவிகள் அமைக்கும் நிலை முதலியன காட்டினன். மகிழ்ந் தேன். உணவுக்குப் பின் அவர்களிடம் அன்புடன் விடை பெற்றுக்கொண்டு, 9 மணிக்குப் புறப்பட்டோம். நீண்ட பயணம் 60கல் தொலைவிருக்கும். ஒவ்வொரு சனிக்கிழமை யும் இவ்வாறே அமைகின்றது, அனைத்தையும் எண்ணிக் கொண்டே இரவு 10. 30க்கு வீட்டுக்கு வந்து நாளை செய்ய வேண்டுவன எண்ணி, படுக்கச் சென்றேன்.

சிகாகோ 19-5-85

இன்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குறிப் பினை எழுதி முடித்தேன். நாள் உருண்டோடிக் கொண்டு செல்வதை நினைத்தேன். சென்ற ஞாயிறு அன்று இதே சிகாகோ வந்தேன். இன்று ஞாயிறு:—ஒரு வாரம் ஓடி விட்டது. இன்று காலையில் திரு. முருகேசன் அவர்கள் (சென்னை டாக்டர் நடராசன் அவர்தம் மருகர்) வீட்டிற்கு வருவதாகக் கூறினார். அவர்தம் துணைவியார் ஊருக்குச் சென்றிருப்பதாலும், எனக்கும் தொடர்ந்து பணிகள் இருந் தமையாலும் அவர் வீட்டிற்கு நான் செல்லமுடியாத நிலை யிலும் அவரே வருவதாக இருந்தார். காலையில் லாஸ் ஏஞ்சலிஸ், சான்பிரான்சிஸ்கோ ஆகிய இடங்களிலிருந்து தொலைபேசியில் தகவல் வரவும் நான் புறப்பட்டு அங்கு வரும் நாள் நேரம் விமானம் முதலியன பற்றிய குறிப்புக் களைத் தந்தேன். பின் இன்று வெளியில் எங்கும் செல்ல வில்லையாதலால் மேசை மேல் இருந்த சில நூல்களைப் பயின்றேன். நான் தங்கிய இல்லந்தோறும் பொறியாளர், மருத்துவர் போன்றவரும் பள்ளிச் சிறுவரும் இருந்தமையின் எங்கும் நல்ல நூல்கள் இருந்தன. சிலசிற் சமயங்களில் ஓய்வாகச் சில நூல்களைப் படிப்பதுண்டு. அப்படியே இங்கும் காலைச் சிற்றுண்டிக்குப் பின் சில நூல்களைப் படித்துக் கொண்டிருந்தேன். இவர் தமிழ்ப் பற்றும் பயிற்சி யும் உடையவராதலின் நல்ல பல தமிழ் நூல்களையும் வைத் திருந்தார்.

சிறிது நேரம் கழிந்த பின் 10-30க்கு திரு. முருகேசன் அவர்கள் வந்தார்கள். அவர் திரு. கிருஷ்ணன் குடும்பத்துக்கும் வேண்டியவராதலின் அனைவரும் உட்கார்ந்து பல பொருள்கள் பற்றிப் பேசினோம். பல்கலைக் கழகங்களின் நிலை பற்றி அறிய விரும்பிய எனக்குப் பல தகவல்களைத் தந்தனர். பேராசிரியர்கள் பதவி ஏற்கும்போது, அவர் வழியில் கலைக் கழகத்துக்கு மாணியங்கள் பெறப் பல்கலைக் கழகம் முயலுமே ஒழிய, பல்கலைக் கழகம் தன் நிதியிலிருந்து தருவது குறைவு. ஒரு ஆசிரியர் பதவி ஏற்றபின், அவர் கீழ் பயிலுவதற்கென மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் படிப்புக்கு அவர்கள் பணம் கட்டுவதைத் தவிர, அவர்களை ஆதரிப்பதற்கென உயர்ந்த தொழில் நிறுவனங்களை நாடிப் பணம் பெற்றுத் தரவேண்டுமாம். இங்குள்ள தொழில் நிறுவனங்கள் பலவும், தத்தம் தொழிலுக்கு ஏற்ற சிறந்தவர்களைப் பெறப் பல்கலைக்கழங்களை நாடி அவர்கள் தேர்ந்தெடுப்பவருக்கென பல ஆயிரம் 'டாலர்'களைக் கொடுத்து உதவி, பின் அவர்கள் நிறுவனத்திலேயே அமர்த்திக் கொள்ளுமாம். அவ்வாறு உதவி பெறுபவர்கள் நம் நாடுபோல் நிரந்தர அடிமையாகத் தொழில்பட வேண்டிய தும் இல்லை. குறைந்தது ஆறு மாதம் அங்கே பணிசெய்து, பின் விரும்பினால் வேறு எங்கும் செல்ல உரிமை உண்டு. மேலும் இந்த நிறுவனங்கள் இவ்வாறு பெருந்தொகைகள் தருவதால் வருமான வரியில் பெருத்த லாபமும் உண்டாகின்றது. இங்கே வருமானம் உயரஉயர வரி விகிதம் குறையும் என்கின்றனர். (நம் நாட்டில் நேர் மாறாக அல்லவா உள்ளது). இந் நாட்டிலுள்ள பல தொழிற் சாலைகள், ஆய்வு நிறுவனங்கள் - பிற பெரும்பணிமனைகள் - இவ்வாறு பல லட்சக் கணக்கில் மாணியங்கள் தந்து பல்கலைக்கழகங்களுக்கு உதவுகின்றன. நம் நாட்டில் இந்த நிலை ஏது?

நம் நாட்டில் உள்ள பெரும் தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் இந்த முறையில் மாணவர்களுக்குப் பல்கலைக்கழகத்தே மாணியம் அளித்து, தக்கவர்களைத்

தேர்ந்தெடுக்க உதவி, பின் அவர்களையே தம் தொழிற் சாலைகளில் பணியமர்த்தினால் பல நன்மைகள் உண்டாகுமே. வேண்டுமானால் அவர்கள் ஐந்து ஆண்டு, பத்தாண்டுகள் கட்டுப்படுத்தி இருக்க வைக்கலாம். அதனால் தகுதிவாய்ந்தவர் கிடைப்பர். பல்கலைக்கழகத்தின் பொருட் செலவும் பெருமளவில் குறையுமல்லவா! எதற்கெடுத்தாலும் பல்கலைக்கழக மானியக் குழுவையும் அதன் வழி தில்லி அரசாங்கத்தையும் நோக்கியே பழக்கப்பட்ட நமக்கு இந்த மாற்று நெறி ஏற்கப் பெறுமா? எண்ணியாவது பார்க்க வேண்டாமா? நம் நாட்டிலிருந்து வரும் சிறந்த மாணவர் அத்தகைய நிதி உதவி பெற்றுப் பயின்று இங்கேயே பின் பணி ஏற்று, பிறநாடுகளில் அமர்ந்து விடுகின்றனர் என்பதும் அவர்களுக்குத் தெரிந்த ஒன்றுதானே.

இவ்வாறு பல்வேறுவகைப்பட்ட கல்வித்துறையின் அமைப்புகளையும் செயல்முறைகளையும் பற்றி இரு பொறியாளர்களும் விளக்கினர். நான் சிலவற்றை முன்னரே குறித்துள்ளேன். எனவே இங்கே திரும்ப எழுத வேண்டாம் என எண்ணுகிறேன். பகல் ஒரு மணி அளவில் அனைவரும் உணவு கொண்டு மறுபடியும் அமர்ந்தோம். எனக்குச் சற்றே சோர்வு உண்டானமையின் (நேற்றைய கடும் சுற்றினால்) ஓய்வுபெறச் சென்றேன். திரு. முருகேசன் அவர்களும் விடை பெற்றுச் சென்றனர்.

மாலை 4மணி அளவில் எழுந்து, நாளை புறப்பட்டுச் செல்வதற்கென என் ஆடை முதலியவற்றைப் பெட்டியுள் சரிப்படுத்தி வைத்தேன். ஒரு வாரம் எப்படி இந்த சிகாகோ நகரில் ஓடிவிட்டது என்பதை நான் எண்ணிப் பார்த்தேன். முன் நியூயார்க் நகரில் ஒரு வாரம் - இங்கே ஒரு வாரம் இடையில் ஏழு எட்டு ஊர்களில் இருபது நாட்கள்-மொத்தம் 34நாட்கள் இம்மண்ணில் கழித்ததை எல்லாம் எண்ணிக் கொண்டிருந்தேன். மாலை 6 மணிக்குத் தொலைக்காட்சியில் ஒரு மணி நேரத்துக்கு முக்கிய காட்சி உண்டெனக் கூறி,

காணுமாறு திருமதி. கிருஷ்ணன் அவர்கள் கூறினார்கள்; கண்டேன்.

நாட்டில் நடக்கும் பல ஏமாற்றும் செயல்களைக் காட்டும் செய்தியாக இன்று இது அமைந்திருந்தது. மக்களைப் பல வகையில் ஏமாற்றிப் பொருள் பறிப்பதைக் காட்டி, அவற்றி லிருந்து விடுபட மக்களை வேண்டிக்கொள்ளும் வகையில் நல்ல விளக்கம் தரப் பெற்றமை கண்டேன். இந்த ஒரு மணி நேரத்தில், பிற தொலைக்காட்சி நேரங்களில் உள்ளமை போன்று அதிகமான விளம்பரங்கள் இல்லாத நிலை குறிப் பிடத்தக்கது. நாட்டு மக்களைப் பல கொடுஞ்செயல்களி லிருந்து மீட்கும் வகையில் இது அமைந்தது போற்றத் தக்கதே.

முதலில் இந்த நாட்டில் வியாபார ஒன்றியங்கள் (Trade Union) தனித்த முறையில் பல தேர்வுகள் நடத்து வதைப் பற்றியது. படித்த இளைஞர்களுக்கு, பிழைப்புக்குத் தேவையான கல்வியைத் தருவதாகக் கூறி, சம்பளமாகப் பெருந்தொகைகளை வாங்கிக்கொண்டு, ஏதோ சொல்லிக் கொடுத்து, அதற்கெனச் சான்றிதழும் தந்து அனுப்பும் இந்த ஒன்றியங்கள் பயனற்றவை என்பதை விளக்கியது. அதில் தேர்ச்சி பெறுகின்றவர்களை யாரும் வேலைக்கு எடுத்துக்கொள்ளா அவல நிலையைக் காட்டி, அதில் பயின்றார் விடும் கண்ணீரைக் காட்டி, அவர்களுக்கு அறிவுரை கூறுகின்றனர். (அந்த ஒன்றியங்களைச் சட்ட ரீதியாகத் தடுக்க இந்நாட்டு உரிமைச் சட்டம் இடம் தராது போலும்) அறிவுரையோடு அமையாது, அவர்களை அரசாங்கமே நடத்தும் தொழிற் பள்ளிகளில் சேருமாறு சொல்லியும் தேவையாயின் பின் தனித்தனி தொழிற் நடத்த ஆயிரக் கணக்கில் அரசாங்கமே முன் பணம் தந்து ஊக்கு விக்கும் நெறியைக் காட்டியும் ஆற்றுப்படுத்துகின்றனர். இது இன்று நாட்டுக்குத் தேவையானது. நம் நாட்டுக்குத்தான்.

இரண்டாவது வங்கியின் மோசடி, பல்லாயிரக்கணக் கான மக்கள் தத்தம் சேமிப்பினை அதிக வட்டிக்கு ஆசைப்

பட்டு, அரசாங்க ஏற்பு இல்லாத பல பாங்கிகளில் சேர்த்து வைக்க முயன்று பல இலட்சங்களைக் - கோடிகளை கொண்டு குவிக்க ஒரு நாள் திடீரென அது கதவை இழுத்து மூடிச் சென்று விடுவதைக்காட்டி, இத்தகைய பொறுப்பற்ற வங்கிகளில் பணம் இட வேண்டாம் என கேட்டுக் கொண்டனர். நம் நாட்டிலும் இது போன்ற மோசடிகள் சில ஆண்டுகளுக்குமுன் இருந்தன. அரசாங்கத் தலையீட்டால் அது தற்போது தவிர்க்கப் பெற்றுள்ளது.

மூன்றாவது விளையாட்டு அரங்கங்கள் - வேடிக்கை காட்சிகள் ஆகியவை அமைத்து, இலட்சக்கணக்கில் பொருள் சம்பாதிக்கும் அவல நிலை பற்றியது. இது பற்றி நான் முன்னரே குறித்துள்ளேன். நம் நாட்டிலும் பொங்கல் விடுமுறை நாளில் நடைபெறும் பந்து விளையாட்டிற்கு 'டிக்கெட்' பெறப் போட்டியிடும் நிலையினைக் கண்ட எனக்கு இது புதிதாகப் படவில்லை. எனினும் அவற்றையெல்லாம் சுட்டிக்காட்டி, அங்கேயெல்லாம் மக்களைச் செல்ல வேண்டாமெனக் கேட்டுக் கொண்டனர். எனவே இந்தத் தொலைக்காட்சி, பல வேடிக்கையான விரசமான - தேவையற்றவைகளைக் காட்டுவதோடு, இத்தகைய தேவையான பயனுள்ள காட்சிகளையும் காட்டுவதறிந்து மகிழ்ந்தேன்.

பின் 10 மணி வரையில் கொலம்பஸ் அமெரிக்காவினைக் கண்ட படக் காட்சியினைக் கண்டேன். ஆம்! 1942ம் ஆண்டு அக்டோபர் மாதம் 12ம் நாள் அவர் கால் வைத்தவரை - தாய் நாட்டிலிருந்து பல எதிர்ப்புகளுக்கிடையில் புறப்பட்டு, கடல் கடந்து அமெரிக்க நாட்டில் கால் வைத்து மகிழ்ந்த நிலையினைக் கண்டேன். (பிற்பகுதி நாளை தொடருமாம்). அவன் அன்று அடைந்த மகிழ்ச்சியினைக் கண்ட அதே இன்ப நிலையில் இன்று தாயகத்தை விட்டு 12,000 கல் தாண்டிச் சிகாகோவில் இருக்கும் நானும் இருந்தேன். அந்த நிலையில் என்னை மறந்து 10-30 மணிக்கு உறங்கச் சென்றேன்.

சியேட்டல் (வாஷிங்டன்) 20-5-85

காலையில் கண் விழித்து, கடன்களை முடித்துக் கொண்டு 7-30க்குத் தயாரானேன். திரு. கிருஷ்ணன் அவர்கள் 9 மணிக்கு அலுவலகம் செல்ல வேண்டியவராதலின் அதற்கு முன் என்னை விமான நிலையத்தில் சேர்ப்பதாகச் சொன்னார். விமானம் 11 மணிக்காயினும், எனக்கு மேலுள்ள பயணங்களுக்கு முன் கூட்டியே பதிவு செய்தல் முதலிய வேலைகள் இருந்ததால் 8 மணிக்கு -சிற்றுண்டிக்குப் பிறகு புறப்பட்டேன். விமான நிலையத்தினை 8-30 மணிக்குச் சேர்ந்து, டிக்கெட் பதிவு செய்து, அடுத்த ஊர்களுக்குச் செல்ல வேண்டியதற்கும் முன் பதிவு செய்து கொண்டேன். சரியாக 11-30க்கு விமானம் புறப்பட்டது. அது மிகப் பெரிய விமானம், மேலைக் கடற்கரையிலிருந்து கீழை நாடுகளாகிய ஜப்பான், சீனா, பிலிப்பைன்ஸ், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்லும் நெறியில் அந்நாடுகளுக்குச் செல்லுபவர் பயணம் செய்யக் காத்திருந்தனர். இது வரையில் கீழைக் கடற்கரையில் ஐரோப்பிய ஆப்பிரிக்கா நாட்டுக்குச் செல்லும் மக்கள் நிலைக்கும், இந்த மேலைப் பக்க நிலைக்கும் மாறுபாடு கண்டேன். பல மொழி பேசுபவர்; பல நாகரிகத்தினர்; உலகம் கலந்த மரபு காணப் பட்டது. விமானம் 400 பேர் ஏறக்கூடிய அளவில் பெரியது; நிறைந்தும், இருந்தது. 4 மணி நேரம் பயணம். சுமார் 1500கல் தொலைவு இருக்கும். சூரிச் நியூயார்க் பயணத்துக்குப் பின் இதுவே நீண்ட பயணம், பகலெல்லாம் கண் மூடி இருந்தேன். இன்று காலையில் சிறு தூறலாக ஆரம்

பித்த வானம், விமானம் புறப்படும்போது பெருமழையாகப் பெய்தது. எனினும் விமானம் மேலே எழும்பியபின் கதிரவன் ஒளி தெரிந்தது. இரண்டுமணி அளவில் நல்ல காய்கறி உணவு அளித்தனர். உண்ட பின் வெளியே கண்டேன். எங்கும் பனி மூடிய சிகரங்கள் - அடர்ந்த உயர்ந்த மலைகள் - குன்றுகள் - காடுகள். இந்த அமெரிக்க நாட்டில் மேற்பகுதி மிகுந்த காடுகளும் மலைகளும் உடைய தாகும். இப்பக்கம் மக்கள் தொகையும் குறைவே. இது வன்ரயில் கீழைப்பக்கமே சுற்றி வந்த எனக்கு இனி மேலைப் பக்க அனுபவம் பெற வாய்ப்பு உண்டாயிற்று. கீழே காணும் பனி மலைகள், எனக்கு முன் கண்ட ஆல்ப் மலைகளையும் நம் நாட்டு ஸ்ரீநகரையும் நினைவூட்டின. சரியாக 3-30 (மேலைக்கடற்கரை மணி 1-30) விமானம் தரையில் இறங்கியது. இந்நாட்டினைக் கீழ் மேலாக நான்கு பகுதி களாக பிரித்து சூரியன் செல்கதிக்கு ஏற்ப ஒவ்வொரு மணி குறைத்துக் கணக்கிட்டனர். நியூயார்க் பகுதி 12 என்றால் சிகாகோ 11-இடைப்பகுதி 10, மேல்பகுதி 9 என அமையும். எனவே கீழைக் கடற்கரைப் பட்டினமாகிய நியூயார்க்கி லிருந்து மேலைக் கடற்கரை சுமார் மூவாயிரம் கல் தொலை வில் உள்ளது எனக் கொள்ளல் வேண்டும். இந்த கதியின்படி வாஷிங்டன் மாநிலத் தலைநகராகிய சியேடலில் (Seattle) பகல் 1-30க்கு வந்து இறங்கினேன். முன்கண்ட வாஷிங்டன் (D. C.) தலைநகர். இது மாநிலம். இரண்டி னையும் பெயர் கொண்டு பொருந்திப் பார்க்க இயலாது. அது நகரம். இது நாடு. இதன் தலைநகர் சியேடல்.

இங்கே யாரும் வந்திருக்க மாட்டார்கள்; பேராசிரியர் சிப்மென் (Schiffmen) எழுதியபடி பஸ்சில் சென்று, பின் அவர் குறிப்பிட்ட ஓட்டலுக்குச் செல்லவேண்டும் என்ற எண்ணத்தோடு, விமானத்தை விட்டு இறங்கி வெளியில் வந்தேன். விமான வாயிலிலேயே ஒரு அமெரிக்கர் (Dr. T. ADAMS) 'தாங்கள் தானே பரமசிவானந்தம்' என்று கேட்டார். நான் வியப்பில் ஆழ்ந்தேன். அடுத்து மற்றொரு

வயதான அமெரிக்கப் பெண்மணியும் (திருமதி. லி சுலஜ் Lee Shultz) திரு. தேசாய் அவர்களும் (குஜராத்) என்னை வரவேற்றமை மேலும் பெரு வியப்பைத் தந்தது. இருவரும் சின்மயா மிஷினைச் சேர்ந்தவர்கள். அவர்களுக்கு முகவரி மாற்றத்தால் இன்று காலையில்தான் கடிதம் கிடைத்ததாகவும் உடன் புறப்பட்டு வந்ததாகவும் கூறினர். அந்த அம்மையார் நல்ல குடும்பப் பெண்மணியாகவும் சின்மயா மிஷினில் அக்கறை காட்டி வேதாந்த நெறியினைப் போற்றுபவராகவும் இருந்தனர். தேசாயும் ஆழ்ந்த பற்றுடையவர். முன் கூறிய அமெரிக்கர் தமிழ்நாட்டில் - தமிழகத்து உதகையை அடுத்த கடலூரியில் 1½ ஆண்டு தங்கியிருந்து, அங்குள்ள மக்களின் வாழ்க்கைமுறை சாதி, சமயநெறி, பொருளாதார நிலை போன்ற அனைத்தையும் ஆராய்ந்தவர். மதுரை, கோடைக்கானல், சென்னை, காஷ்மீர் முதலிய இடங்களிலும் இருந்து ஆய்வு செய்தவர். எனவே அவர் தமிழ், தெலுங்கு, இந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகளை நன்கு பேசுபவராக இருந்தார். தற்போது இந்தப் பல்கலைக்கழகத்திலேயே மறுபடி டாக்டர் பட்டத்துக்கு உதகை ஆய்வினைப் பற்றி எழுதி அனுப்பியுள்ளாராம். அதன்படி ஒன்றினை நம் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணை வேந்தர் அவர்களுக்கு அனுப்பவும் வைத்திருந்தார். (பின் மாலை அவர் இல்லம் சென்றபோது காட்டினார்) டாக்டர். V.I. சுப்பிரமணியம் அவர் திருவிதாங்கூரில் இருந்த காலத்தில் நண்பராகவும் ஆய்வுக்கு உதவியாளராகவும் இருந்தாராம். அவர் பல்கலைக்கழகத்தின் வழி என்னை அழைத்துச் செல்ல இருப்பதாகவும், இன்று மாலையில் அங்கே பணிபுரியும் கோவையைச் சேர்ந்த ஒரு அன்பர் வீட்டில் உணவுக்கு ஏற்பாடு செய்யப் பெற்றுள்ளதெனவும், நகர் நலம் காட்ட ஏற்பாடு செய்யப் பெற்றிருப்பதாகவும் கூறினர். எனவே நாளை மாலை திருமதி. லீ அவர்கள் இல்லம் வருவதாகச் சொல்லிப் புறப்பட்டோம். அவரும் உடன் அப்போதே வரவில்லையே என்ற குறையோடு சென்றார்.

விமானத்திலேயே நன்கு உண்டதால் பசி இல்லை. எனவே டாக்டர் ஆதாம் அவர்கள் நகரின் பல பகுதிகளைச் சுற்றிக் காணலாம் என, அதற்கு இசைந்தேன். அமெரிக்கா நாட்டு இப்பகுதி அதிக இயற்கை வளம் வாய்ந்ததாக இருக்கிறது. சில குன்றுகளால் ஆகியதே இந்த ஊர். ஊர் மிகப் பெரியதாக இல்லையாயினும் சிறந்ததாகவும் முக்கியமான தாகவும் உள்ளது. பசிபிக் கடலை ஒட்டிய பெரிய துறை முகத்தையும் உடையது. உலகெங்கணும் பறக்கும் போயிங் விமானங்களும் ஜெட் விமானங்களும் இங்கே செய்யப்பெறு கின்றன. வழிநெடுக அவற்றையெல்லாம் காட்டிக் கொண்டே சென்றார்.

சாலைகள் உயர்ந்தும் தாழ்ந்தும் நீலகிரியிலும் கோடைக்கானலிலும் செல்லும் நினைவை உண்டாக்கின. குளிர்நிலையும் அவற்றை ஒட்டியே இருந்தது. பிற இடங் களைக்காட்டிலும் இந்நகர் தூய்மையாக இருந்தது. வளைவு கள்; இறக்க ஏற்றங்கள்; சாலைதொறும் பூத்துக் குலுங்கும் மரவரிசைகள்; சற்றே தள்ளி உயர்ந்த பசுமை மரங்கள்; அவற்றுக்கு அப்பால் குன்றுகள்; நன்னீர் ஏரிகள் இவை இதை ஒரு புது நாடாகவே எனக்குக் காட்டின. அன்பர் இந் நகரை அடுத்த இரு பெருந் தீவுகளுக்கு என்னை அழைத்துச் சென்றார். அங்கே பெருஞ் செல்வர்கள் உயரிய மாளிகை கள் கட்டிக்கொண்டு சிறக்க வாழும் இடங்களைக் காட்டி னார். நகர் எல்லையில் பட்டினியால் வாடுபவரும் உண்டு என்றார். நான் முன்னமே இச் செல்வம் கொழிக்கும் நாட்டிலும் பலர் வறுமையில் வாடுகின்றனர் என்பதைக் குறித்துள்ளேன். இங்கே ஒரு சிலரைக் காணவும் முடிந்தது. இரு தீவுகளைக் கடந்து எங்கும் உள்ளமைபோன்று அமைந்த நல்ல சாலைகள் - மலைகளானமையின் அதிக அகலமில்லாத சாலைகள் - வழியே நகரின் பிற பகுதிகளையும் கண்டு வந்தேன். இந்த நகரைச் சுற்றி நல்ல நீர் ஏரிகளும் உள்ளன. அவை கடல் மட்டத்துக்கு உயரத்தில் உள்ளமையின் வழி உண்டானால் அனைத்தும் கடலில் கலந்து வெற்று

நிலமாக இடம் மாறலாமல்லவா! ஆனால் அரசாங்கம் அதைத் தடுத்துள்ளது. நம் நாட்டில் நகரங்களைச் சுற்றி - சிறப்பாகச் சென்னை நகரத்தைச்சுற்றி உள்ள ஏரிகளை யெல்லாம் வாழ்விடமாக மாற்றிப்பின்வெள்ளத்தால் மக்கள் அவதிப்பட்டால் சோறு போடும் அந்த அவல நிலையினை எண்ணி இவர்களைப் பாராட்டினேன். மேலும் இவர்கள் அப்படியே விட்டு விடவில்லை. இடையில் பெருங் கால்வா யினை வெட்டி, ஆனால் இந்த நல்ல நீர் கடலில் செல்லா வகையில் அணைகளை (மூன்று இடங்களில்) இட்டு தகைத்த தோடு, அவற்றின் வழி இந்த நன்னீர், கடலில் போகா வழியில் கப்பல்களை உள்ளே கொண்டு வரவும் ஏற்பாடு செய்கின்றனர். அந்த அணைகளெல்லாம் சற்றே தள்ளி இருந்தமையின் சென்று காண முடியவில்லை, (நாளை நேரம் இருந்தால் காண இருக்கிறேன்) இந்த நன்னீரில் ஒரு வகை உயரிய மீன் - இங்கே பலருக்கும் உணவாயமைந்த நல்ல மீன் - முட்டையிட்டுக் குஞ்சாகி, பின் கடலில் சென்று வளர்ந்து - மறுபடியும் துள்ளித் தாவி - அந்த அணைகள் வழியே இந்த நன்னீர் ஏரிகளுக்குத் திரும்பி வந்து மக்கள் உணவாகத் தம்மை ஆட்படுத்திக் கொள்ளுகின்றனவாம். இந்த நாட்டின் செல்வ வளத்துக்கு இப்படி இயற்கையும் மனிதனின் கைவண்ணத் திறனும் உலையா முயற்சியும் போட்டியிட்டு உதவுவதாலேயே - வாழ்க்கை முறையும் பண் பாட்டு நெறியும் எவ்வகையில் இருப்பினும் - செல்வ வளமும் பிற நலங்களும் உலகமே வியக்கும்வண்ணம் உயர்ந் துள்ளன.

அன்பர் இந்த இடங்களையெல்லாம் காட்டிக்கொண்டு, பிற்பகல் 3-00 மணி அளவில் எனக்கென அமைந்த விடுதியில் என்னைச் சேர்த்தார். பிறகு 5 மணிக்கு வருவதாகவும் அவர் வீட்டில் மாலைச் சிற்றுண்டிக்கு வருமாறும் கூறிச் சென்றார். நானும் பயணக் களைப்பால் சோர்ந்திருந்தமை யின் சற்றே ஒய்வு கொண்டேன். அந்த விடுதியில் என் அறை மேல் மாடியில் இருந்தமையில் (பல்கலைக்கழகத்தின் பக்கத்

திலேயே) அனைத்தும்—பக்கத்தில் பாய்ந்தோடும் ஆறு, உயரிய மூன்றடுக்குப் பாலம், பிற கோபுரங்கள், உலகப் பொருட்காட்சிநடந்த இடத்தில் உள்ள உயரியகோபுரம்,பிற மாளிகைகள்,பல்கலைக்கழக உயர் கட்டிடங்கள் அனைத்தும் சுற்றியுள்ள இயற்கை வளத்தோடு நன்கு காட்சியளித்தன. ஓய்வுக்குப் பிறகு சரியாக ஐந்து மணிக்குத் தயாராக இருந்தேன். அன்பர் கீழே வந்து தயார்தானே என்று கேட்டு, நான் 'ஆம்' என்றதும் அடுத்த நிமிடம் அறை வாயிலில் நின்றார். இந்திய நாட்டில் பழகிய காரணத்தால் 'இந்தியர் ஐந்து என்றால் 7 மணிக்குத்தானே தயாராவார்கள் எனவே அவ்வாறு கீழிருந்து கேட்டு வந்தேன்' என்றார். எனக்கும் நம் நாட்டில் வழங்கும் 'Indian Punctuality' 'இந்தியன் பக்சுவாலிடி'என்ற தொடர் நினைவுக்கு வந்தது.

மறுபடியும் அவர்தம் காரில் என்னை அழைத்துச் கொண்டு,பல்கலைக்கழக இடங்கள் பலவற்றையும் காட்டி, பின் தம் குடிலுக்கு அழைத்துச் சென்றார். அவர் தற்போது யாதொரு பணியும் இன்றி இருந்தார், துணைவியாரும் பல்கலைக் கழகத்தே பயின்றார். எனினும் 'போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து' என அமைதியாகவும் அதில் உறுதியாகவும் இருந்தார். இந்த நாட்டில் இத்தகைய ஒரு பிறவி உள்ளதைக் கண்டு வியந்தேன். சிறிய வீடு (வாடகை 325 டாலர்),மிகச்சிறிய கார், இருவர் வாழ்வு எல்லாவற்றிற்கு 600 (அ) 700 டாலர் எல்லையே போதுமென வாழ்கின்றனர். இடையில் என்னைப்போல் வருகின்றவருக்கு உதவுகின்றார். வேண்டாம் என்றாலும் விடுவதில்லை. அவர் தமிழ்ப்பற்று அளவிடற்கரியது. 'இருந் தமிழே உன்னால் இருந்தேன்' என்று தமிழகத் தலைவர்களும் பிறரும் வாழ்வதைக் கண்ட எனக்கு, 'இருந் தமிழே உனக்காக இருந்தேன், என்று எங்கோ 13000 12000 கல்தொலைவில் ஒருவர் வாழ்கிறார் என்பதைக் கண்டபோது, தமிழ், தமிழ் நாட்டில் இன்றேனும் உலகில் எப் பகுதியிலானும் என்று முள தென் தமிழாக - கன்னித் தமிழாக வாழும் என்ற நினைவில் அமைதி பெற்றேன்.

அன்பர் 5.30க்கு அவர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். சிறு மனை; எளிய வாழ்வு; அமர வைத்துத் துணைவியாரை அறிமுகப் படுத்தினார். 'பிஸ்கட், ஒரு ஆப்பிள், டீ இவை வழங்கப் பெற்றன. அதற்கு முன் ஒரு சிறு பிளாஸ்டிக் பையில் நான்கு இலைகளோடு கூடிய ஒரு தொகுதியினை என்னிடம் நீட்டினார். நான் என்ன எனக் கேட்டேன். அது நம்மூர் ஆரைக் கீரையைப் போன்று இருந்தது. இந்த இலை பெரும்பாலும் மூன்று பிரிவாகத்தான் இருக்குமாம். நான்கு இலைப் பிரிவுகளோடு இருப்பதில்லையாம். எப்போதோ எங்கோ அது கிடைக்குமாம். அப்படிக் கிடைத்தால் அது கிடைத்தவர்தம் வருங்காலப் பெரு வாழ்வுக்கும் சிறப்புக்கும் செழிப்புக்கும் எடுத்துக் காட்டாக - முன் அறிவிப்பாக - அமையும் என்றார். என்னை விட்டு வீட்டிற்குச் சென்ற போது அவர் வீட்டு வாயிலில் அது காணப் பெற்றதாம். எனவே என் வருங்காலத்தைத்தான் (இது வரையில் இல்லாமையால்) இன்று குறித்தது என்றும் இதை நான் உடன்வைத்துக் கொள்ளவேண்டும் என்று கூறி, என் கையில் திணித்தார். நான் 'தங்கள் வருங்காலம் சிறக்கட்டும்; உங்களிடம் இருக்கட்டும்' என்று கூறியும் கேட்கவில்லை. 'ஆதல் நின்னகத் தடக்கிச் சாதல் நீங்க எமக் கீந்தனையே' என்று அதியமானைப் பார்த்து ஔவை பாடிய அடிகள் என் நினைவுக்கு வந்தன; கூறினேன். அவர் புன்முறுவல் பூத்தார்.

சிற்றுண்டிக்குப் பிறகு ஐந்து கல் தொலைவிலுள்ள பசிபிக் கடல் பக்கம் செல்லலாம் என்றார். இது வரையில் காணாத கடலைக் காணப் போகிறோம் என்ற மகிழ்ச்சியில் புறப் பட்டேன். (எப்போதோ சிங்கப்பூர் சென்றபோது அதன் சார்பான சிறு கடல்களைக் கண்டதுண்டாயினும் அப்பெருங் கடலை - உலகிலேயே பெரிய கடலைக் காணப் போவதில் தனி மகிழ்ச்சி உண்டாயிற்று) வழியில் ஓர் உயிர்விலங்குக் காட்சி உளதென்று சுட்டிக்காட்டி 'நாளை காணலாம்' என்றார். வழிநெடுக நன்னீர்க் கழிகளும், கடல் ஓரத்துக் கழிஞும் அவற்றை ஒட்டிய சாலைகளும் இருந்தன. அங்கெல்

லாம் பலர் கார்களை நிறுத்திவிட்டு ஓடிக் கொண்டிருந்தனர். 5 கல்லுக்கு மேலும் உள்ள தொலைவிலிருந்து காரில் வந்து, இங்கே ஓடுவதைக் காண எனக்கு வியப்பாக இருந்தது. அவர்கள் நடந்தே வரக் கூடாதோ எனக் கேட்டேன். 'இதுதான் நாகரிகம்; உடற் பயிற்சி வேண்டுபவர் நடக்கலாமல்லவா! தங்கள் செல்வ வளத்தையும் காட்ட வேண்டும்; உடல் நலத்தையும் பேண வேண்டும்' என்ற அவர்கள் ஆசையை விளக்கினார். எப்படியோ, நான் பிறவிடங்களில் எங்கும் காணாத வகையில் இங்கே மக்கள் - சிறியரும் பெரியரும் - தம் உடலை ஓம்பும் நிலை கண்டு மகிழ்ந்தேன்.

சுமார் ஒரு மணி நேரம் அப்பகுதியைச் சுற்றி வந்தோம். தூரத்தே நீண்ட தீவும் சிறு குன்றுகளும் இருந்தன. அவற்றின் இடைவழியில் மற்றொரு பக்கத்தில் உள்ள பெருவெளி வழியே கப்பல்கள் துறைமுகத்துக்கு வரும் என்று கூறினார். தூரத்தே பெருந்துறை முகம் காட்சி தந்தது. கீழைப் பகுதியும் மேலைப் பகுதியும் இணையும் பாலமாக இதுவும், அடுத்து நான் காணப் போகும் இரு பெரு நகரங்களும் (சான்பிரான்சிஸ்கோ - லாஸ் ஏஞ்சிலஸ்) அமைகின்ற நிலையினை உணர்ந்தேன்.

அவர்கள் வீட்டில் இருந்தபோது, இங்கே உள்ள தமிழ்த் துறையின் தலைவர் திரு. சிப்மென் அவர்கள் தொலைபேசியில் பேசி என் பயணம் பற்றிக் கேட்டு, நாளை நிகழ்ச்சிகள் பற்றி விளக்கி, இன்று மாலை மற்றொரு தமிழர் வீட்டில் உண்ண ஏற்பாடு செய்யப் பெற்றதையும் கூறி, நாளை காலை 9.30க்குச் சந்திப்பதாகச் சொன்னார். நான் நன்றி கூறி அமைந்தேன். எனவே இரவு 7 மணிக்கு திரு. ஆதம் அவர்கள் அந்த அன்பர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அத் தம்பதிகள் திரு. நடராசன் திருமதி கற்பகம் ஆகியோர் (குழந்தை பிருந்தா 5 வயது - முதல் வகுப்பு) வரவேற்றனர். அவர்கள் பொள்ளாட்சியை அடுத்த ஊர்களைச் சேர்ந்தவரென்றும், திரு நடராசன் கோவையில் பொறியியல் பயின்றதாகவும் எம். ஏஸ் சி (M. Sc.) பி. எஸ். ஜி யில் பயின்றதாக

வும் அப்போது வேதபுரியுடன் பயின்றதாகவும், சென்னையில் பணிபுரிந்து, பின் கனடாவிலிருந்து, இங்கே வந்து மூன்றாண்டுகள் முடியப் போவதாகவும் அவர் தம் பொறியியல் துறையில் டாக்டர் பட்டத்துக்கு உரிய ஆய்வினை முடித்துத் தரப்போவதாகவும் கூறினார். அவர்தம் துணைவியார் கோவையில் மனையியல் கல்லூரியில் பயின்று, தற்போது இங்கே பல்கலைக் கழகத்தே தமிழ் பயிற்றும் பணியில் உள்ளதாகவும் கூறினார். அவர்கள் இருவரும் அன்புடன் ஏற்று நல்ல விருந்து அளித்தனர்; 'இரண்டு நாட்கள் விடுதி உணவுதான்' என்ற எண்ணத்தில் வந்த எனக்கு இந்த உணவு நன்கு அமைந்திருந்தது. மகிழ்வாக இருந்தது. நாளை இரவும் துறைத் தலைவர் வீட்டில் விருந்தாம். (அமெரிக்கர்) தமிழுக்காக - எனக்காக அன்று. இப்படிப்பிற நாட்டினர் தாமே முன்வந்து உதவு நிலையினையும் அங்கேயே வாழும் தமிழர் பெரும் பாலோர் 'தமிழ் தமிழ்' என்று தம்பட்டம் அடித்து அமைதியுறும் நினையினையும் எண்ணினேன்.

திரு. நடராசன் அவர்கள் எங்களைப் புகைப்படம் எடுத்தார். குழந்தை பிருந்தாவும் என்னுடன் ஒட்டிக் கொண்டது. திரு. ஆதாம் அவரும் அவர்தம் துணைவியாரும் விடைபெற்றுச் சென்ற பின் (உணவுக்குப் பிறகு - அவர்கள் நம் உணவினைச் சுவைத்து உண்டனர்.) 9 30க்கு அறைக்கு வந்தேன். பக்கத்தில் இருந்தமையின் திரு. நடராசன் அவர்களும் குழந்தையும் உடன் வந்து விட்டுச் சென்றனர்! நான் இந்த நாட்டு இயற்கை வளத்தையும் அதைப் பயன்படுத்தி வாழ்க்கை வளத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொள்ளும் நிலையினையும் பிறவற்றையும் எண்ணி,(நம் நாடு இந்த நிலையை என்று எய்துமோ!) என்ற உணர்வுடனேயே 10.30 மணி அளவில் உறங்கச் சென்றேன்.

சியேட்டல் 21-5-85

காலை 7மணிக்கு திரு. நடராசன் சிற்றுண்டிக்கு அழைக்க வருவதாகச் சொன்னார். எனவே சற்று அயர்ச்சியாயிருந்த போதிலும் விடியற்காலையிலேயே எழுந்து, கடன்களை முடித்துக்கொண்டு, குறிப்பினையும் எழுதி முடித்தேன். பின் இன்றைய பணி பற்றிச் சிந்தித் தேன். சரியாக 7மணிக்கு நடராசன் அவர்கள் வந்தார்கள். அவர்களுடன் வீட்டிற்குச் சென்று காலைச் சிற்றுண்டி (இடியப்பம்) கொண்டு அறைக்கு வந்து பிற வேலைகளைக் கவனித்தேன். சரியாக 9-15க்குத் திரு. ஆதாம் அவர்கள் வந்தார்கள். அவர்களுடன் பல்கலைக் கழகத்துக்குப் புறப் பட்டேன். பிறகு மாலை வரையில் பல பணிகள் இருந்தமை யாலும் இரவு 8மணிக்குத் திருமதி லீ (Lee & Jerry Shultz) அவர்கள் வந்து தம் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாலும் என் சாமான்களைக் கட்டிவைத்து 12மணிக்கு விடுதி அலுவல் அறையில் வைக்குமாறு சொல்லிப் புறப்பட்டேன். 9-30க்குப் பல்கலைக்கழகம் சேர்ந்தேன். அங்கே நேராகப் பொதுநூல் நிலையம், துறை நூல்நிலையம் முதலியவற்றை பேராசிரியர் சிப்மென் அவர்கள் செயலர் அழைத்துச்சென்று காட்டினர். பல தமிழ்நூல்கள் இருந்தன. தென் ஆசியப் பகுதி அறையில் இப் பக்கம் உள்ள எல்லா மொழிகளுக்குரிய நூல்களும் இருந்தன. அனைத்தையும் பார்க்க முடிய வில்லை. 10-30க்குப் பேராசிரியர் அறைக்குச் சென்றேன். அவர்தம் மாணவர் சிலர் இருந்தனர். இவர்களை அறிமுகம் செய்து வைத்து, கணிப்பொறி இயங்கும் அறைக்கு என்னை

அழைத்துச் சென்றார். அங்கேதான் தமிழ் ஆங்கில அகராதி உருவாகின்றது. விளைச் சொற்களை மட்டுமே எடுத்துக் கொள்ளுகின்றனர். அவற்றை முறைப்படி தொகுத்து, எழுதித்தர நம் சேலத்தைச் சேர்ந்த திரு. பழநிச்சாமி (மணி) என்பவர் இசைந்து, பொறுப்பேற்றுள்ளனர். அவர் எழுதிய கையேட்டுப்படியினை எனக்குக் காட்டினர். நன்கு அமைந்து இருந்தது. அகராதிச் சொல்லமைப்பு முறை-பொருள்வகை முதலியவற்றைப் பேசினோம். கணிப்பொறியில் தமிழ் எப்படி இயங்குகிறது என்பதைக் காட்டினர். கணிப்பொறி ஜப்பானில் செய்தது. ஆகையால் அனைத்து விளக்க விளக்கங்களையும் ஜப்பான் மொழியிலேயே அப்பொறி தருகிறது. ஜப்பான் மொழியில் எழுத்தமைப்பு, நம் தமிழினும் நுண்ணியதாகவும் புள்ளிகள் உடையதாகவும் உள்ளமையின் அதைத் தேர்ந்தெடுத்ததாக அவர் கூறினார். (அமெரிக்கா எவ்வளவு முன்னேற்றமடைந்தாலும் இன்னும் பல பொருள்களுக்கு - கார் - கணிப்பொறி தொடங்கி ஜப்பான் நாட்டையே நம்பி இருக்கிறது.) இம் மேலைப் பகுதி அமரிக்கா பொதுவாகக் கிழக்கமை ஜப்பான் சீனாவுடன் வாணிகத் தொடர்பு அதிகமாகக் கொண்டுள்ளதை அறிந்தேன். எனவே அவர் அக் கணிப்பொறியைத் தேர்ந்ததில் தவறு இல்லை. அது தமிழ் எழுத்துக்களை வரிசைப் படுத்தி, முறையாகத் தருவதையும் சொல் பொருள் ஆக்க நெறி அமைப்பினை உருவாக்குவதையும் விளக்கி, முன் எடுத்தவற்றின் படிகளை வேறு மறுபடி எடுத்து எனக்குத் தந்து உதவினர். விரைவில் அவர் தமிழகம் வர இருப்பதாகவும், திரு. பழநிச்சாமி அவர்களுடனும் மற்றவருடனும் கலந்து, நூலை உருவாக்கும் பணி பற்றி இறுதி முடிவு எடுக்கப் போவதாகவும் கூறினர். அந்த அமைப்பில் ஒன்றை ஈண்டு சுட்டின் நலமாகும். (அனைத்தும் வினைச் சொற்களே எனக் கூறினேன்.)

abandon என்ற சொல்லுக்கு உள்ள பல பொருள்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் முறைப்படுத்தி தந்துள்ளனர்.

கைவிடு, நீக்கு, தள்ளு, ஒதுக்கு, துற, தாழ்த்து, சிறுமைப் படுத்து என வரிசையாகக் காட்டி அவற்றுக்கு நேரான் ஆங்கிலச் சொற்களையும் தந்துள்ளனர். எடுத்துக்காட்டு களும் உடன் உள்ளன. சில ஒலி இல்லாத் தமிழ் எழுத்துக் களில் ஆங்கில எழுத்துக்களையே பெய்து எழுதியுள்ளனர். 'Verb' என்ற சொல்லை 'வெர்' எனக் காட்டியுள்ளனர். அந்த முறை மாற்றப்பெற வேண்டும் எனவும் தமிழ் எழுத்தில் தமிழ் மரபுப்படி ஆக்கம் பெறவேண்டும் எனவும் கூறினேன். அவரும் 'அதுவே சரி' என்றனர். தமிழ் ஆங்கிலச் சொற்களுக்குத் தனித்தனிக் குறியீடுகள் அமைத் துள்ளமை பொருத்தமாகவுள்ளது. கூடியவரையில் தமிழ் வினைச் சொற்கள் அனைத்தையும் தொகுத்து, அவற்றிற் குத் தமிழில் அமைந்த எல்லாப்பொருள்களையும் தமிழிலும் (எடுத்துக்காட்டுடன்) ஆங்கிலத்திலும் விளக்கமுற்பட்டுள்ள னர். அவை பற்றிய ஒரு தொகுப்பினை (சில பக்கங்கள்) உடன் கொண்டுவருகின்றேன்.

சிறிது நேரம் கழித்து, 12-30மணி அளவில் (இங்கே இடைவேளை 12 முதல் 1வரையாகும் - வகுப்புகள் 9க்கே தொடங்கி மாலை 3 அல்லது 4க்கு முடிவடையும்). அவர் தம் மாணவியை அழைத்து அவர்தம் காரிலேயே எனக்கு ஊர் நலம் காட்டி, உயிர்க்காட்சிச் சாலையினையும் (200) காட்டுமாறு சொல்லி, மாலை 6மணிக்கு அவர் வீட்டில் விருந்துக்கு வருமாறும் வேண்டினார். திரு. சிப்மென் (Schifmen) நன்கு தமிழ் பேசுகிறார். தமிழ் நாட்டில் பல நாட்கள் இருந்திருக்கிறார். வங்காளத்திலும் வாழ்ந்திருக் கிறார். அங்கே பிறந்த ஒரு மகன் வீட்டில் உள்ளான் என்றார். எளிமையாகவும் தன்மையாகவும் அனைவருட னும் பழகுகின்றார்.

ஒரு மணி அளவில் அந்த மாணவி, தன் காரில் எனை ஏற்றிக்கொண்டு சியேட்டல் நகர் முழுவதையும் காட்டி, 2-30க்கு மேல் உயிர்க் காட்சி சாலைக்குச் அழைத்துச் சென்றார். 'சியேட்டல்' என்ற ஊரின் பெயர்காரணத்தைக்

கேட்டேன். இந்தப் பகுதியில் முன்னர் 'சியாஸ்' என்ற பழங்குடி மக்கள் பெருவாரியாக வாழ்ந்தனர் என்றும் (அவர் தற்போது பிற சமூகத்துடன் கலந்து ஒன்றி விட்டனர் போலும்) இந்நகர அமைப்பின்போது அவர்கள் வாழ்ந்த இடத்தினை அவர்தம் இனப் பெயராலேயே அமைக்க வேண்டி இப் பெயர் இட்டனர் என்றும் கூறினர். பொருத்த மாக இருந்தது. இந்த அம்மையார் இந்த ஊரைச் சார்ந்த வராதலாலும் இவர் கணவர் இங்கே வாணிபம் புரிவதாலும் இந் நகர் பற்றியும் பிற பற்றியும் நன்கு அறிந்திருந்தார்.

காட்சி சாலையில் பலவற்றைக் கண்டோம். எண்ணற்ற பறவை இனங்கள், விலங்குகள் இருந்தன. பரந்த நிலப்பரப் பில் அமைந்திருந்தது. எனினும் நம் நாட்டில் உள்ள சில மிருகக் காட்சிச் சாலையினும் சிறியது என்றே கூற வேண்டும். ஒட்டைச் சிவிங்கி, மான், காட்டு எருமை போன்ற விலங்கு களும் இருந்தன. மனிதக் குரங்கு உட்படப் பல இனங்கள் - குரங்கு வகைகள் இருந்தன. அன்னம் என்று ஒரு நீர் தேக்கத் தில் இருந்த பறவைக்கு (Swan)ப் பெயரிட்டு இருந்தனர். எனினும் அது நம் ஊர் நாரை அல்லது கொக்கு போன்றே இருந்தது. அந்த இனங்களும் உடன் இருந்தன. நம் இலக்கியங்களில் படிக்கும் அன்னம் நீரொழிந்து பாலுண் குருகு நளனுக்குத் தூது சென்ற அன்னம் இந்த மரபினைச் சேர்ந்ததன்று. அது பெரும்பாலும் அருகி விட்டதென்றே கூறுகின்றனர். நீர்வாழும் பல்வேறு வகைப்பட்ட உயிரினங் கள் காட்சிப் பொருள்களாக இருந்தன. காண்டாமிருகமும் பிறவும் அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தன. ஒரு பக்கத்தே பாம்புகள் பல சேமித்து வைக்கப் பெற்றிருந்தன. ஒரு கண்ணாடி அறையில் நம் நாட்டு நல்லப் பாம்புகள் இரண்டு இணைந்திருக்கக் கண்டேன். ஒன்றையொன்று அவை கட்டித் தழுவி நின்ற காட்சி நான் காணாத காட்சியாகும். நம் நாட்டில் நல்லப் பாம்புடன் சாரைப் பாம்பைச் சார்த்திக் கூறுவர். ஆயினும் இங்கே நான் கண்ட காட்சி

வேறு வகையில் நன்கு அமைந்திருந்தது. பலவகை வெளவால் கூட்டங்கள், பிற பறவைகள், பலவகை எலி, பெரிச்சாலிகள் இருந்தன. நம் நாட்டுக் காக்கைகளை - இது வரை அமெரிக்கா நாட்டில் காணாத காக்கைகளை - இங்கே நம் ஊர்போல் எங்கும் பறக்கக் கண்டேன். அப்படியே நம் ஊர் வீட்டுக் குருவிகளும் அளவற்று இருந்தன. அக் காட்சிச் சாலை எங்கும் பலப்பல வண்ணங்களில் பலவகைப் பூக்கள் பூத்துக் குலுங்கி அழகிய காட்சிப் பொருளாக அமைந்து நின்றன. தென் அமெரிக்க நாட்டிலிருந்தும் இந்நாட்டில் பல பகுதிகளிலிருந்தும் பல அரிய விலங்குகள் - பறவைகள் இங்கே இடம் பெற்றிருந்தன. இடையிடையே தேவையான சிற்றுண்டி, பானங்களை அங்கே இருந்த சிறு கடையில் பெற்றுக் கொண்டோம். பிறகு 5மணி அளவில் சற்றே ஒரு மரத்தடியில் இளைப்பாற அமர்ந்து, பின், பேராசிரியர் இல்லத்துக்குப் புறப்பட்டோம். வழியில் மாணவி, 'ஐஸ்கிரீம்' (குளிர்ந்த பசை உணவு) வாங்கிக் கொண்டார்கள். அவர் எடுத்து வந்த வண்டி பெரிய (Chiverlet) செவர்லெட்; அதுவும் சாமான் ஏற்றக் கூடியது. அதை ஓடவரே செயல்படுத்தல் கடினம். எனினும் அம்மையார் அவர்கள் அதைத் திறம்படச் செலுத்திச் சரியாக 6மணிக்குப் பேராசிரியர் வீட்டு வாயிலில் நிறுத்தினார். அவரும் எங்களை எதிர்பார்த்திருந்து 'வருக' என வரவேற்றார்:

அவரும் அவர்தம் துணைவியாரும் ஐந்து வயது நிரம்பாத இளஞ்செல்வனும் நன்கு தமிழ் பேசுகிறார்கள். அவர்தம் மாமியார் வயதான மூதாட்டியார் அவர்களுடன் இருந்தனர். அமெரிக்க நாட்டில் காண முடியாத இந்த இனிய அருங்காட்சியினைக் கண்டு மிக மிக மகிழ்ந்தேன். அந்த அன்னையாரும் எனை அன்புடன் உபசரித்தனர். அதற்குள் பின் மாணவர் - ஆண்பெண் இருபாலரும் குடும்பங்களுடன் வந்து சேர்ந்தனர். வந்தவர் ஆறு குடும்பங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகைப் பண்டம் செய்து

வந்தனர். இவர் வேறு ஏற்பாடு செய்திருந்தார். அனைவரும் ஒருசேர அமர்ந்து உணவு கொண்டோம். எட்டு மணிக்கு மேலாகி விட்டது. பேராசிரியர் அவர்களும் அவர்தம் துணைவியாரும் நல்ல தமிழில் - வேடிக்கையாகப் பேசி அனைவரையும் மகிழ்வித்தனர். வீட்டுப் பணிகளிலும் இருவருவம் பங்கேற்றனர்.

8-30மணிக்கு என்னை அழைத்துச் செல்ல திருமதி லீ. சட்லஸ் அவர்கள் விடுதிக்கு வருவார். ஆகையால் நான் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டேன். உண்மையில் இது ஒரு குடும்ப விருந்தாக மட்டும் இல்லாது என் பிரிவு ஒரு குடும்பப் பிரிவு எனவே அமைந்தது. திருமதி பேராசிரியர் பலபடிகள் இறங்கி வந்து, கார் வரை நின்று கைகூப்பி விடை கொடுத்த காட்சி மறக்க முடியாதது. திரு. ஆதாம் அவர்கள் என்னை அவர் காரில் ஏற்றிக்கொண்டு 8-30க்கு விடுதிக்கு அழைத்து வந்தார். திருமதி. லீ அவர்கள் தயாராக என் பெட்டிகளை அவர் காரில் எடுத்து வைத்துக் கொண்டு என்னை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். திரு. ஆதாம் தம்பதிகளிடம் விடை பெற்றுக் கொண்டு திருமதி. லீ அவர்களுடன் அவர் மாளிகைக்குப் புறப்பட்டேன். 30கல் தொலைவில் காட்டுச் சூழலில் அமைதி நிலையில் அமைந்த அவர் வீட்டிற்கு, வழி நெடுக அமைந்த இயற்கைக் காட்சிகளையெல்லாம் காட்டிக் கொண்டே, அழைத்துச் சென்றார். வாயிலிலேயே அவர் கணவர் காத்திருந்து வரவேற்றார். இருவரும் இந்த இனிய சூழலில் தோட்டம் அமைத்து, பல பயிர்களும் விலங்குகளும் வளர்த்து இன்பம் காண்பதையெல்லாம் விளக்கினர். உயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றபின், இந்த அமைதி வாழ்வை வேண்டி இங்கே வந்து வாழ்கின்றனர். அமெரிக்க ராயினும் சின்மயா சூழலில் நின்று வேதாந்தம் அறிந்து இந்துவாகவே வாழ்கின்றனர். திருவாளர் சட்லெஜ் அவர்கள் தாம் பெற்ற அனுபவங்களை யெல்லாம் கூறினார். நெடு நேரம் உரையாடிக் கொண்டிருந்து 11 மணி அளவில் உறங்கச் சென்றேன்.

சியேட்டல்-சான்பிரான்சிஸ்கோ 22-5-85

காலைக் கடன்களை முடித்துக் கொண்டு குறிப்பு எழுதி முடித்தேன். இன்று இவர்கள் தோட்டங்களைச் சுற்றிக் காட்டி, பின் அருகில் காடு, மலை, நீர் வீழ்ச்சி முதலிய வற்றைக் காட்டுவதாகக் கூறியுள்ளனர். காலையில் ஏழு மணி அளவில் நான் இருந்த அறையினைச் சுற்றி நோக்கினேன். எங்கும் பசுமை - கதிரவன் நன்கு தோன்றி மேலே எழும்பிக் கொண்டிருந்தான். நாற்புறமும் மலைகள்; இந்த மலைத் தொடர்களே மிகமிக விரிந்து, இந்நாட்டுக் கிழக்குப் பகுதியைப் பிரிப்பனவாம். இடையிடையே நான் முன்னே கூறிய பனிமூடிய மலைகளும் முகடுகளும் உள்ளன. இதுவரை இந்நாட்டில் காணாத இயற்கைச் சூழலில் இன்று நான் என்னை மறந்தேன். பொதுவாக இந்நாட்டு மேலைப் பகுதி நல்ல இயற்கை நலம் சார்ந்தது எனக் கூறினார்.

காலைச் சிற்றுண்டிக்குப் பின் திரு. ஜெரி சட்லெஜ் அவர்கள் என்னைத் தன் பரந்த தோட்டத்தைக் காணுமாறு அழைத்துச் சென்றார். அவரே முயன்று எல்லா வேலைகளையும் செய்கிறார். மொத்தம் 162 ஏக்கர் நிலம் பெற்றுள்ளார். இந்த ஊரின் பெயர் 'இசாக்குவா' (Issaquah) என்பதாகும். இதுவும் சியேட்டிலைப் போன்று, இங்கு வாழ்ந்த பழங்குடி மக்களின் (West Indians) குடிப்பெயர் ஒன்றின் அடிப்படையில் அமைந்தது எனக் கூறினார். மரம் அறுத்தல், உழுதல், நீர்ப்பாய்ச்சுதல் முதலிய எல்லா வேலைகளையும் இவர் நன்கு கற்றுச் செய்கிறார். ஓய்வு பெற்ற

பின்பே, இவை அனைத்தையும் கற்றுக் கொண்டதாகச் சொன்னார். நீர்ப்பாய்ச்சுதலுக்கு நீண்ட குழாய் அமைத்து பத்தடிக்கு ஒன்றாக வெளியே சுற்றுக் குழல் அமைத்து, அதில் தானாகக் குறித்த வேலைகளில் தண்ணீர் சுழற்சியில் பக்கத்தில் உள்ள செடிகளுக்கு நீர்பாய்ச்சும் தானியங்கி முறையைச் செய்துள்ளார். 150' ஆழம் பாறையில் கிணறு தோண்டி, அதற்கென மின் குழாய் அமைத்து, தன் மாளிகை சுற்றிலும் சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தில் உள்ள செடிகள், கொடிகள், பூஞ்செடிகள், புல்தரை ஆகியவற்றிற்கு நீர்ப்பாய்ச்சுகிறார். மற்றைய சுமார் 15 ஏக்கர் நிலம் வளர்ந்தோங்கிய மரங்கள் அடர்ந்த காடாக உள்ளது. இன்னும் வேலியும் இடவில்லையாம். சென்ற ஆண்டு இடையில் ஒரு சிறு ஏரியே (குட்டை) உண்டாக்கி, அதிலே 2000 மீன் குஞ்சுகளை விட்டாராம். அவை 6'' அல்லது 8'' அளவில் வளர்ந்துள்ளன. இன்னும் 2' அளவில் வளரும் என்று சொன்னார்.

குள்ள வாத்துகளும் பெரு வாத்துகளும் வளர்க்கிறார். அவைகளை எடுத்து என் கையில் வைத்தார். அவை பல நாள் பழகியவை போன்று என்னிடம் ஏதேதோ பேசின. என்ன மொழி என்று அறிய முடியவில்லை. கூர்ந்து நோக்கின. கூவின. பின் கீழிறங்கி உணவு - மர இலை - புல் முதலியவற்றை உண்டன. பக்கத்தில் பேரி, செரி, ஆப்பிள் முதலியன பயிரிட்டுள்ளனர். நல்ல ஒட்டுச் செடிகளை - 3 ஆண்டுகளில் பயன் தரு செடிகளை ஆய்ந்து - நட்டுள்ளார். நன்கு வருவிடுகிறார், கலவை உரங்களை லாரியாகவும் மூட்டைகளாகவும் வாங்கி வைத்துள்ளார். ஒரு விவசாய - கிராமத்தான். எனவே எல்லா வகையிலும் அவர் தொழிற் படுகிறார். எனக்கு என் இளமையில் நான் வயல் வெளியில் சென்று செய்த வேலைகளும், உழவும், அறுவடையும் அறுவடைக்குப் பின் வயல்களில் வாத்துகள் மேயும் காட்சியும், ஒட்டுமாந்தோப்பின் காட்சியும் பிறவும் என் கண்முன் நிழற் படம் போல வந்து சென்றன.

அவருடன் உண்மையில் என்னை மறந்து 55 ஆண்டுகளுக்கு முற்பட்ட ஒருவனாகச் சுற்றி வந்தேன். அனைத்தையும் காட்டி விட்டு, பத்து மணி அளவில் வேறு பணியின் பொருட்டு வெளியே செல்வதாகவும், நான் பிற்பகல் 3 மணிக்குப் புறப்படும் வரையில் திரும்பி வர இயலாதென்றும் கூறி, என்னிடம் அவர் தம் புதிய முகவரியையும் தந்து என் பயணம் சிறக்க என வாழ்த்தி விடைபெற்றார். அம்மை யாரும் தம் சமையல் வேலைகளை யெல்லாம் முடித்து, என்னை அடுத்துள்ள காடு, மலை, நீர் வீழ்ச்சி முதலியன காண அழைத்துச் செல்வதாகச் சொன்னார்.

சரியாகப் பதினொரு மணி அளவில் வெளியே புறப்பட் டோம். சுமார் 15கல் தொலைவிலுள்ள அந்த நீர் வீழ்ச்சிக்குச் செல்லு முன் (Sno Quazimie Falls) சில சிறிய கிராமங் களுக்குள் நுழைந்து நுழைந்து அவற்றின் நலன்களையெல் லாம் காட்டிச் சென்றனர். மிகச் சிறிய ஊராயினும் அவை கிராமங்கள் போலன்றி சிறு நகரங்களாகவே இருந்தன. எல்லா வசதிகளும் கடைகளும் கார்களும் அவற்றின் தேவை தீர்க்கும் எண்ணெய்க் கடைகளும் (Petrol Bunk) உணவுக் கடைகளும் பிறவும் இருந்தன. இரண்டு இடங்களில் இருந்த இரு பள்ளிகளுக்கும் அழைத்துச் சென்றனர். ஒன்றில் இடைவேளை நேரம்; எல்லாப் பிள்ளைகளும் வெளியில் விளையாடிக் கொண்டிருந்தனர். ஐந்தாம் வகுப்பு வரையில் உள்ள பள்ளி அது. ஆண் பிள்ளைகள் உடலில் யாதொரு சொக்காய் - கஞ்சுகம் இன்றி இருந்தனர். பின் விளையாட்டு முடிந்ததும் அவரவர் உடைகளை அணிந்து வகுப்பிற்குச் சென்றனர். சிறிய பள்ளியாயினும் எல்லா வசதிகளும் இருந்தன. பஸ் வசதி யும் இருந்தது. சில பிள்ளைகள் கார்களிலும் வருவர் போலும். (பல கார்கள் நிறுத்தப் பெற்றிருந்தன) ஆசிரியர் களும் கார்கள் வைத்திருப்பர். வேறு ஊரில் மற்றொன்று உயர் நிலைப் பள்ளி; அங்கும் ஆண் பிள்ளைகள் திறந்த உடலோடு விளையாடிக் கொண்டிருந்தனர். நாங்கள்

உள்ளே செல்லவில்லை. முன்னரே பல பள்ளிகளைக் கண்டமையின் தேவை இல்லை என்று கூறி விட்டேன். வழியில் பல்வேறு சிறுசிறு தொழிற் சாலைகள் இருந்தன; சாலைகள் எங்கும்போல் மிக அழகாயிருந்தன. கார்களும் (கிராமங்களாயினும்) ஒன்றன்பின் ஒன்றாகவே முறைப்படி சென்று கொண்டேயிருந்தன. பக்கங்களில் வானோங்கிய பெருமரங்கள் அழகுறக் காட்சியளித்தன. எதிரில் மிக உயர்ந்த மலை வரிசை உச்சியில் பனி மூடிய சிகரங்களோடு அழகுற விளங்கிற்று. சிறுசிறு குன்றுகளைக் கடந்து சென்ற தால் சாலைகள் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தன. பரந்த நிலப்பரப்பில் இந் நாட்டு உணவுப் பொருள்களைப் பயிரிடும் பண்ணைகளையும் காட்டினார்கள். பால் பண்ணைகள் முதலியனவற்றையும் கண்டோம். இயற்கையில் மூழ்கிய நிலையிலே அந்த நீர் வீழ்ச்சியின் பக்கல் வந்து சேர்ந்தோம்.

ஸ்நோகியியமி வீழ்ச்சி 268அடி உயரத்திலிருந்து வீழ்கின்றது. இந்த அடர்ந்த காட்டகத்தே அதன் வீழ்ச்சியை எதிரிலிருந்து காண நல்ல மேடைகள் அமைத் துள்ளனர், அதிலிருந்து அதைக் கண்டு கொண்டேயிருந் தோம். பலரும் அக் காட்சியினைக் காண வந்திருந்தனர். ஒரு பள்ளியிலிருந்தும் உலா போந்திருந்தினர். பக்கத்தில் ஒரு பெரிய கட்டடத்தினைக் காட்டி, அது ஒரு பெரிய ஓட்டல் என்றும் அதில் உண்பதற்கெனவே சியேட்டலி லிருந்தும் பலர் அடிக்கடி சிறப்பாக விடுமுறை நாட்களில் வருவர் என்றும் கூறினர். அழகிய வீழ்ச்சியின் நீர்த்திரள் வழியே விழும் கதிரவன் ஒளியில் வானவில் பளிச்சிட்டது; நியாகாராவைப் போன்று அத்துணைப் பெரிய தன்றாயினும் அதைவிட 100அடி உயர் வீழ்ச்சி உடையதாய்த் தனிச் சிறப்புடையதாக விளங்கிற்று. இதிலிருந்து மின்சாரமும் எடுக்கிறார்கள். இந்த இடத்தினை 1848ல் கண்டு தெரிவித் தார்களாம். 1855ல் இப் பகுதியில் மக்கள் குடியேறினார் களாம். இந்த ஆற்று நீர் பக்கத்திலுள்ள மலைகளில் காணும் உயர் பனி உருகி ஓடி வருகின்றதாம். இதன் கரை

யில் வாழ்ந்த பழங்குடிகள் 'சொகா - குவால் - கூ' என அழைக்கப் பெற்றனராம். அதுவே பின் நான் மேல் சொன்ன 'SNOGUALMIE' என்ற பெயரைப் பெற்றதாம். இப்பழங் குடிகள் (West Indian அல்லது Red Indian) மேலை இந்தியர் எனப் பெற்றவராம். இந்தச் சொல்லின் பொருள் இவர்கள் சந்திரன் வழிவந்தவர் என்பதைக் காட்டுகிறதாம். இதைக் கேட்டவுடனே என் மனம் பாண்டிய நாட்டிற்குத் தாவிற்று. அங்கேயும் சந்திரவம்சத்தவராகத் தெற்கே பாண்டியரையும் வடக்கே பாண்டவரையும் அழைக்கிறோமே! ஒரு வேளை இவர்களும் அந்த இனத்தைச் சேர்ந்து எந்தப் பழங்காலத் திலோ இங்கு குடிவந்தவர்களோ என எண்ணினேன். சூரிய வம்சம் எங்கே என்று தேடவேண்டும்.

இந்த இடத்தில்தான் உலகிலேயே முதன்முதல் நிலத்தை அகழ்ந்து அடியில் குழாய் வழி நீரைச் செலுத்தி (Tunnals) மின்சாரம் எடுத்தது எனக் குறித்திருக்கின்றனர். (ஆண்டு 1898) எனவே இத்தகைய சந்திர குலத்தார் வாழ்ந்த பழம் பெரு நிலத்தில் - உயரிய நீர் வீழ்ச்சிக்கருகில், உலகிலேயே நீர் வழி மின்சாரத்தை முதன்முதல் கண்ட பெருமண்ணில் நான் நிற்பதை எண்ணி மகிழ்ந்தேன். இந்த இயற்கைக் சூழலில் இங்கேயே இருந்து விடலாமா என நினைத்தேன். அது நடக்கிற காரியமா? அம்மையார் எனக்கென, அருகிலிருந்த கடைக்குச் சென்று நீர் வீழ்ச்சி யமைந்த இரு படங்களை வாங்கி வந்தனர். சுற்றிலும் இனிய பசும் புல் - மலர்ச் செடிகள் - பின் அடர்ந்த காடுகள் - அதற்கும் சற்றே உயர்ந்த பனிச் சிகரங்கள். இந்த உலகில் இயற்கை வழங்கும் எல்லாச் செல்வமும் உடைய பகுதி இதுவாகும். (நான் கண்ட வரை)

நெடிது இருந்து 1மணிக்கு மேல் அங்கிருந்து புறப்பட்டு இன்னும் உள்ளே சென்றோம். ஓரிடத்தில் இருபுறமும் அடர்ந்த உயர்ந்த மரங்கள் சாலையை மூடிக்கொண்டு வழி இருண்டு இருக்கச் செய்தன. ஒரு குகைக்குள் செல்வது போன்ற உணர்வு உண்டாயிற்று. மேலும் கடந்து, பெரிய

மரங்களை அறுத்து,பயன்படுத்த ஏற்றி அனுப்பும் ஒரு பெரிய தொழிற் சாலையினைக் கண்டோம். பக்கத்திலேயே இரெயில் பாதை - அதனுள்ளும் சென்றது. பல லாரிகள் பெருமரங்களை ஏற்றிக் கொண்டும் இறங்கிய நிலையிலும் சாலைகளில் பறந்து கொண்டிருந்தன. இவை தேவையற்ற அதே வேளையில் மக்கள் வாழ்விற்கு வீட்டமைப்பிற்குப் பயன்படுகின்ற மரங்களாக மட்டும் இருந்தன; விறகுக்கு அன்று என்றனர். இவற்றையெல்லாம் கண்டு கொண்டு வேறு வழியாகத். திரும்பினோம். அந்த வழி கிழக்கையும் மேற்கையும் இணைக்கும் பெரு வழியாகும். அந்தச் சாலையில் கார்கள் பறந்து கொண்டே இருந்தன. 1.30க்கு வீடு திரும்பினோம். வீட்டிற்கருகில் மலையில் சாலைக்குரிய கற்களைத் தயார் செய்யும் பெரிய இயந்திர சாலையினைக் கண்டோம். நாட்டின் பல பகுதிகளுக்கு இங்கிருந்து சாலைக் கற்கள் (Gravels) அனுப்பப் பெறுகின்றனவாம். அனைத்தையும் பார்த்துக் கொண்டு வீடு வந்தோம்.

இந்தக் குடும்பம் அமெரிக்கக் குடும்பமாதலால் நம் நாட்டு வகை உணவுக்கறிகள் தயார் செய்யத்தெரியவில்லை. எனினும் இந்த அம்மையார் மரக்கறி உணவே கொள் பவராதலானும் எனக்கு உணவு சமைக்க வேண்டியும் பல காய்கறிகளை வாங்கி வந்திருந்தனர்; செய்யத் தெரிய வில்லை. நானே உடனிருந்து இரண்டொரு வகைகளைச் செய்து காட்டினேன். அவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள். அடுத்து அவ்வாறே தாமும் செய்ய முயலப்போவதாகவும் கூறினார்கள். இரண்டு மணிக்கு உணவு கொண்டு சற்றே ஓய்வு பெற்றேன். 4-30க்கு சான்பிரான்சிஸ்கோவிற்கு விமானம்; வீட்டில் 3 மணிக்கு புறப்பட வேண்டும்.

விமான நிலையத்திற்கு 3 மணிக்கு புறப்பட்டு, 3-45க்குப் போய்ச் சேர்ந்தோம். அம்மையார் பிரியாவிடை பெற்றுச் சென்றனர். நான் நிலையத்துள் சென்று இன்று நான் செல்ல வேண்டியதற்கு உரிய 'டிக்கெட்' (நுழைவுச் சீட்டு) பெற்றுக் கொண்டு, தொடர்ந்து காவாய் தீவு செல்லும்

வரையிலான பயணத்துக்கும் பதிவு செய்து கொண்டேன். விமானம் 4-30க்கு எனினும் 5-25க்குத்தான் புறப்படும் என்றனர். எனவே ஒரு மூலையில் அமைதியாக உட்கார்ந் தேன். என் சிந்தனை நீண்டது. ஜினிவாவில் வந்து இறங்கிய நாள் முதல் இன்று வரையில் சென்ற நாடுகள், தங்கிய ஊர் கள், கண்ட மக்கள், எனை விருந்தேற்றுப் புரந்த அன்பர் கள், பல காட்சிகள் பல அன்பர்தம் நினைவுகள் என்முன் நிழலாடின. அமெரிக்க நாட்டுப் பயணத்தின் கடைசி கட்டத்தினையும் நான்கில் மூன்று பங்கு நிறைவுற்ற தன்மையினையும் இன்னும் உள்ள கால்பங்கின் பணியினை யும் எண்ணி எண்ணி நின்றேன். இன்று வழியனுப்பிய அமெரிக்க அன்னையார் என்னை மறுபடியும் இந்த நாட்டிற் குக் கட்டாயம் வரவேண்டும் என்று விடுத்த அனைப்பினை யும் 'கட்டாயம் வருவீர்கள்' என்று அவர்கள் விடைபெறு முன் சொல்லிய சொற்களையும் எண்ணினேன். 'எழுபது வயதில் எழுபது நாள்கள் தனியாக உலகம் சுற்றும் நான் - முதன் முதலாகப் பலநாடுகளைக் கண்டு வரும் நான் மற்றொரு முறை அமெரிக்க நாடு வருவதா' என நெடிது நினைந்தேன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உண்மையினை நான் சென்றவிடமெல்லாம் கண்டேனாத லால், அத்தகைய கேளிரை - விருந்து புரந்த நல்லவர்களை - முன்பின் அறியாத - கண்டு பேசிய - பல மக்களை எல்லாம் எண்ணி எண்ணி நின்றேன். ஐந்து மணியாயிற்று. நாங்கள் செல்ல வேண்டிய விமானம் வேறு எங்கிருந்தோ வந்தது. பயணிகள் இறங்கிய பின் நாங்கள் அனுமதிக்கப் பெற்றோம். விமானம் சரியாக 5.25க்குப் புறப்பட்டது. வழிநெடுக மேக மூட்டம். நான் அவற்றை பனிப்படலங்களோ என எண்ணி, விமானப் பணிபெண்களைக் கேட்டேன். அவர்கள் அவை மேக மூட்டமே எனவும் பனிபடர் மலைத் தொடர் இப்பக்கம் இல்லை என்றும் கூறினர். மாலை 7-10க்கு விமானம் தரை கண்டது.

இறங்கி வெளியே வந்ததும் அன்பர் வெங்கடாசலம் அவர்கள் காத்திருந்தனர். ஒருமணி நேரத்துக்கு மேல்

அவரை விமானம் காக்க வைத்து விட்டது. விமான நிலையத்துக்கு அருகிலேயே அவர் மனை இருந்தது. அவர் தம் மனைவியாரும் பிள்ளைகளும் அன்புடன் வரவேற்றனர். இங்கே தமிழர் பலர் உள்ளனராம். சில அன்பர்களுக்குத் தொலைபேசியில் சொன்னார். அவர்தம் மருகர் (தங்கை மகன்) வந்து நெடுநேரம் உடனிருந்து பேசிவிட்டுச் சென்றார். பாக்கியராஜ் எனும் மற்றொரு பொறியாளர் (அன்பர் வெங்கடாசலம் அவர்களும் பொறியாளர்) அவர் களும் வந்து பேசிக் கொண்டிருந்தார். இருவர்தம் தமிழ்ப் பற்றையும் தமிழ்நலம் காணத் துடிக்கும் ஆவலையும் கண்டேன். பொறியியல் சம்பந்தமான நூல்களை - தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக எழுதி - வெளியிடலாம் என்ற கருத்தினையும் கூறினேன். அவர்தம் பொறியியலின் சிறப்புப் பிரிவினையும் எழுதக் கூடிய பொருள்கள் பற்றியும் குறித்துத் தருமாறு வேண்டினேன். நாளை பக்கத்தில் உள்ள 'பார்க்லே' சென்று அங்கே உள்ள அமெரிக்க நாட்டுத் தமிழ் அறிஞர்களாகிய திரு. எமனோ அவர்களையும் (81 வயது) கம்பராமாயணத்தை மொழிபெயர்த்த இந்துவாக மாறியுள்ள மற்றொரு தமிழ் அமெரிக்கப் புலவரையும் (George Hart) கண்டுவர முடிவு செய்தோம். திரு. வெங்கடாசலம் அவர்கள் அவர்களுடன் தொடர்புகொண்டு என் வரவு சொன்னார்கள். இரவு 10-30க்குப் படுக்கச் சென்றேன்.

சான்பிரான்சிஸ்கோ 23-5-85

இன்று சற்று விடியலிலேயே எழுந்து, காலைக்கடன் முடித்துக்கொண்டேன். சுற்றுலா ஊர்தி புறப்படுமிடத்திற்கு என்னை அழைத்துச் சென்றுவிட்டு, 7-30 அளவில் அவர் அலுவலகம் (திரு. வெங்கடாசலம்) செல்வர். நான் சுற்றுலா முடித்துத் திரும்பி வந்தபின் மாலை ஐந்து மணிக்கு வீட்டிற்கு அழைத்து வருவர். பின் 50கல் தொலைவிலுள்ள (Burkley) பர்க்கலே சென்று திரும்ப வேண்டும். இங்கே இன்னும் பல அன்பர்களைக் காண வேண்டுமென்றும் கூடுமாயின் நாளைப் பயணத்தை மறுநாள் தள்ளிப்போட முயலலாம் என்றும் கூறி, உரிய வாணூர்தி உரிமையாளர்களைக் கேட்டு முடிவு செய்யலாம் என்றும் கூறினார்.

சரியாக 8மணிக்கு என்னை ஒரு விடுதி வாயிலில் சுற்றுலா ஊர்தி புறப்படுமிடத்தில் விட்டு, திரு. வெங்கடாசலம் அவர்கள் பணிமேற்சென்றார். ஊர்தி 9க்குப் புறப்படும். அதுவரை அங்கே இந் நகர் பற்றியிருந்த பல குறிப்புகளையும் பார்த்துக் கொண்டே இருந்தேன். சரியாக 9க்கு ஊர்தியும் புறப்பட்டது. இன்னும் சில விடுதிகளுக்கும் சென்று முப்பத்திரண்டு பயணிகளை ஏற்றித்கொண்டது. வழியிலேயே விமானநிலையம் முதலியவைபற்றி விளக்கம் தந்தனர். ஓட்டுநரே விளக்கம் தருபவராக அமைந்தார். நல்ல முறையில் அவர் விளக்கம் அமைந்திருந்தது. மாலை 4 மணி வரையில் பலபல முக்கியமான இடங்களைக் கண்டோம்,

இந்த ஊர் சியேட்டிலைப் போன்று இல்லையாயினும் அகநகர் (Down Town) பெரும்பாலும் குன்றுகளின் மேல் அமைந்திருந்தது. சுற்றிலும் மலைகள் இருந்தன. எனினும் பசுமை இல்லை. பாறைகளோடு வரண்டநிலை அமைப்பே காணப்பெற்றது. இந்த ஊர் தீபகற்பம் போன்றும், இடையில் கடல் உள்ளீடு அமைய மூன்று பக்கமும் பரவி இருந்தது. எனவே அவற்றை இணைக்க அக்கடல் உள்ளிட்டு வழிகளுக்கு உயர்ந்த பாலங்கள் அமைத்துள்ளனர். 'Treasure island' கருவூலத் தீவு என்னும் இடத்தை இணைத்த பாலம் மிகப்பெரியது, உயரியது. மேல், கீழ் இரண்டிடங்களிலும் இருபக்கப் போக்குவரத்தும் அமைய, தொங்குபாலமோ என்னுமாறு காட்சியளித்தது. அது சுமார் 2கல் நீளமிருக்கும். பிறகு அங்கிருந்து நிலத்தின் மற்றொரு பக்கத்திற்கும் அப்பால் அப்பாலம் சென்றது. அத் தீவின் பெயர் Herb (Yerba-suena) island - மூலிகைத்தீவு என்பதாகும். இத் தீவு இயற்கை அன்று எனவும் இந்த நூற்றாண்டிலேயே (1938) மக்களால் ஆக்கப்பெற்ற ஒன்று என்றும் கூறினர். ஒரு வேளை அங்கே மூலிகைகள் அதிகமாக இருந்தமையின் அப் பெயர் பெற்றது போலும். இப் பெயர் இத்தாலி மொழியிலிருந்து வந்ததாகவும் கூறினர். இது 480 ஏக்கர் பரப்பு உள்ளதாம்.

மூலிகைத்தீவில் இருந்து மறுபக்கம் செல்லும் பாலத்தை நோக்கினோம். வேறு ஒரு பக்கத்தில் (பர்க்கலே செல்லும் வழியில்) ஏழுகல் தொலைவில் கடற்வழி மேல் இவ்வாறு பாலம் அமைந்திருப்பதாகவும் சொன்னார். நாங்கள் சென்ற இப்பகுதியில் இந்நாட்டுக் கடற்படை நிற்கப் பெற்றிருப்பதாகவும் உள் செல்ல இயலாதென்றும் கூறவே வந்தவழியே திரும்பி, அகநகர் புகுந்தோம்.

அகநகரில் எங்கும் போன்று பல உயரிய கட்டடங்கள் இருந்தன. தெருக்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் நின்றன. பெருமலைகளில்கூட (உதகை போன்று) காணமுடியாத சரிவுகள் இருந்தன. வண்டிப் போக்குவரத்தும் அதிகம். வழிநெடுக உள்ள பெருங்கட்டடங்களைப் பற்றியெல்லாம்

ஊர்தி ஓட்டுநர் விளக்கம் தந்து கொண்டே சென்றார். தெருக்களிலும் இரெயில் மேம்பாலங்கள் இருந்தன. (சிகாகோவில் தெருவூடே - கீழே சாலை - மேலே ரெயில் பாதை அமைந்து சென்ற நிலையினையும் எண்ணினேன்) இந்த ஊர் ஏறக்குறைய நம் சென்னை நகர் போன்று காட்சியளித்தது. நான் முன்னரே சுட்டியபடி இந்த மேலைப் பகுதி அமெரிக்கக் கீழ்ப் பகுதியினைக்காட்டிலும் பல வகையில் வேறுபட்டிருந்தது. இந்நகரில் சீனா, ஜப்பான், பிலிப்பயன் நாட்டு மக்கள் அதிகம் இருந்தனர். இந்நகர் 1850ல் ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது என்றனர்: நம் ஊர் போலவே இங்கே சைக்கில் வண்டிகள் மிக அதிகம். எனினும் சியேட்டலில் பல்கலைக் கழகப் பகுதியில் சைகில் செல்வதற்கெனவே சாலையில் 8' அளவில் இட ஒதுக்கீடு செய்திருந்தமை போன்று (சென்னை அண்ணா சாலை போன்று) இங்கே ஒதுக்கீடு இல்லை. மேலும் இங்கே நம் ஊர் போன்று சைக்கில் ரிக்ஷா, குதிரை வண்டிகள் (கோச்) வாடகைக்கு இருந்தன. வாடகை மேட்டார் தவிர வேறு வசதியே இல்லை என இது வரையில் நாட்டில் கண்ட நிலைமாறி, இங்கே இந்த வசதிகளை யெல்லாம் கண்டேன். சாலைகளின் நடுவிலே தண்டவாளம் இட்டு, 'டிராம்' வண்டிகள் செல்லுகின்றன. நம் ஊர் போன்று எல்லா இடங்களுக்கும் போக நிறைய 'பஸ்' வசதியும் உண்டு. தெருவில் பல இடங்களில் நம் நாட்டினைப் போன்றே கடைகளைப் பரப்பி வியாபாரம் செய்கின்றனர். மக்களும் பல நாட்டினராய் - பல வகைப் பண்பினராய் - ஒன்றிக் கலந்து வாழ்வதைக் கண்டேன். நிலமும் நம் நாட்டினைப் போன்று வறண்ட - புல்லற்ற தரையாகவே இருந்தது. எங்கள் உந்து வண்டியை நிறுத்தி அந்த 'டிராமில்' அனைவரையும் ஏற்றி 2கல் தொலைவு செல்லவிட்டு, மறுபடி பஸ்சில் ஏற்றிக் கொண்டார். இந்த மாதிரியான 'டிராம்' எங்கும் இல்லையாதலால், மக்கள் அதில் செல்வதை ஒரு பொழுது போக்காகவே, வேடிக்கையாகவே கொள்ளுகின்றனர்.

கலிபோர்னியா தெருவு என்றே இந்த மாநிலப் பெயராலும் ஒரு தெருவு உண்டு. 'கொலம்பியா' தெருவு உண்டு. 'பிரான்சிஸ்கோ தெருவும் உண்டு. இங்கேயும் சீனா நகர் இருக்கிறது. அவர்கள் முதல்முதலாக இறங்கும் இடம் இதுதானே. சுமார் இலட்சம் குடும்பங்கள் இங்கே வாழ்கின்றன என்றனர். அவர்களுள் பெரும்பாலோர் வாணிகம் செய்பவரே. அவர்கள் கடைகள் விடுமுறை என்று இல்லாது, ஏழுநாளும் காலை 10மணி முதல் இரவு 10 வரையில் திறந்திருக்குமாம். அவர்கள் நகரில் பல உயர்ந்த கட்டடங்களுக்கு நடுவே - சந்தியில் ஓர் உயர்ந்த கூடம்பிய பெரிய கோபுரம் இருந்தது. அதுவே மிக உயர்ந்தது. இங்கே இத்தாலிய நகரும் உண்டு. இந்நகரை வளர்த்தவர் பெரும் பாலும் இத்தாலியரே என்றனர். இந்தப் பெரு நாட்டைக் கண்டு பிடித்த கொலம்பஸ்சே இத்தாலியர்தானே. இந்த ஊரில், மற்ற ஊர்களைக்காட்டிலும் அதிகமாக அவர்கள் வாழ்கின்றனர். எனவே 'கொலம்பஸ் தெரு' உண்டு. அருகிலே 12 ஏக்கர் நிலத்தில் ஒரு சிறு தீவு உள்ளது. பசுமை வாய்ந்த நிலப்பரப்பிலே பசுமையான ஒரு கட்டடம் அங்கே உயர்ந்திருந்தது. 'பெரிய பீட்டர்' தொழுகை இடம் அந்த இடத்திற்கே அழகூட்டியது. இங்குள்ள வீடுகளுக்கு நம் ஊர் போன்று சாதாரண ஓடுகளும் இடப் பெற்றிருக்கின்றன. மக்களுள் சிலர் நம் ஊர்க் குருவிக்காரர் போன்று கண்ட கண்ட துணிகளை உடுத்திக்கொண்டு தெருவு தோறும் சுற்று கின்றனர். இப்பக்கத்தில் இதுவும் இன்னும் ஒரு சில நகரங் களும் (நாளை நான் செல்லும் லாஸ் எஞ்சிலஸ்) தாம் சிறந்துள்ளமையில், இவற்றில் மக்கள் தொகை அதிகமாம். இங்கே ஒரு சதுர மைலுக்கு 18,000 மக்கள் வாழ்கின்றன ராம். ஒரு கலைக் கூடமும் அதைச் சுற்றி அழகிய நீர் அகழியும் இருந்தன. இவற்வையெல்லாம் பார்த்துக் கொண்டு, சிறு கடலை ஒட்டிய ஒரு துறைமுகத்தே பகல் உணவுக்காக உந்து வண்டி நிறுத்தப் பெற்றது. அருகிலே நீர்மூழ்கிக் கப்பல், 'எலிகிராப்படர்', சிறு கப்பல்கள், படகு கள் நிறுத்தப் பெற்றிருந்தன. மக்கள் அவற்றில் ஏறி

உல்லாசமாகக் கடலிலும் மேலும் சுற்றி வருகின்றனர். (உரிய கட்டணம் செலுத்தித்தான்) அங்கே பெரும்பாலும் சீனர்களேக்டைகளை வைத்திருந்தனர். கடல் நண்டு களே (பெரிது பெரிது) பக்குவம் செய்து (பொரித்து) வைத்திருந்தனர். பிற மாமிசப் பண்டங்களும் இருந்தன. எனக்கு வேதனையாக இருந்தது. சற்றே தள்ளிச்சென்று இருந்து, பின் பழங்கள், வேர்கடலை முதலியவற்றை வாங்கி உண்டு, குளிர் பானம் அருந்தி அமர்ந்திருந்தேன். மறுபடி யும் சரியாக 1.30க்கு சுற்றுலா தன் பயணத்தைத் தொடங் கியது.

மறுபக்கத்தில் உள்ள பொன்வாயில் பாலத்தின் மேல் வண்டி சென்றது. (Golden Gate Bridge) அப்பக்கத்தில் வண்டியை நிறுத்தி அனைவரையும் இறங்கிக் காணச் செய்தார். சுற்றிலும் மலை - எதிரே கடல், இயற்கைச் சூழல் அழகுற அமைந்திருந்தது. மறுபடியும் சென்ற வழியே திரும்பினோம். வழியில் 1937ல் கட்டப் பெற்ற இராணுவ மருந்தகத்தை (1600 ஏக்கரில்) கண்டோம். நேற்று சியேட்டலில் கண்டதைக்காட்டிலும் இங்கும் வெட்டி வைக்கப் பெற்ற 20'-16' குறுக்களவு கொண்ட பெருமரங் களின் துண்டுக்களைக் கண்டு வியந்தேன். இப்பகுதியில் சீனர்கள் அன்றி ஜப்பானியரும் மிக்கிருந்தனர். கடலை அடுத்த மலைப் பிரிவில் பெரும் மாளிகைகள் உயர்ந்து நின்றன. பம்பாயில் உள்ள செல்வர் வாழிடமே (Marine Drive) என இவை உள்ளன. விளக்குநரும் மிகப் பெருஞ் செல்வர்கள் இங்கு வாழ்கின்றனர் எனக் கூறினர். இந்தப் பகுதியில் இரஷ்யரும் (11,000 பேர்) மிகுதியாக உள்ளன ராம். இந்த நாட்டிலும் கடந்த சில ஆண்டுகளில்தான் 1975க்கு பிறகு (நம் நாட்டினைப் போன்றே) வீடுகள், மனைகள், இவற்றின் விலைகள் அளவிறந்து உயர்ந்து விட்டன என்கின்றனர். வெளிநாட்டினர் மிக அதிகமாக இப் பகுதிக்கு வரவர அதிகமாகின்றது என்றும் அதனால் எல்லாப் பொருள்களுமே விலை ஏறுகின்றன என்றும் கூறினர்.

அடுத்து பசிபிக் கடற்கரையினை - பெருங்கடல் எல்லையை அடைந்தோம். உயர்ந்த அலைகள் மோதின. இடையிடை பெரும்பாறைகள் (Seal Rocks) இருந்தன. எனவே இப்பக்கம் கப்பல் வரவில்லை. மற்றொரு பக்கத்தில் அமைதியான சூழ்நிலையில் உள்ள பெரிய துறைமுகம் கண்டோம். அந்தக் கடல் எல்லையில் இங்கே வாழ்ந்த பழங்குடிமக்கள் - மேற்கு இந்தியர் வழிபட்ட பெரும் பூத உருக்கள் இணைந்த உயர்ந்த கம்பத்தைக் கண்டேன். நேற்றும் சியேட்டலில் நான் கண்ட நீர் வீழ்ச்சிக்கருகில் இதே உருவம் இருந்தது. இந்த இடங்களில்தாம் அவர்கள் கூடி, தெய்வ வழிபாடு செய்வது உண்டாம். நம் நீலகிரியில் தோதர்கள் வழிபடும் உயர்கம்பமும், நம் நாட்டு மன்னார் சாமி கோயில் பேருருவங்களும் என் எண்ணத்தில் வந்தன. இவற்றை எல்லாம் கண்டபோது, நம் நாட்டொடு என்றாவது இவர்கள் தொடர்பு கொண்டவர்களாக இருந்திருக்க வேண்டும் என்ற நினைவு உண்டாயிற்று.

பசிபிக் கடற்கரை நெடுகிலும் பாறைகள். சிலவிடங்களில் மணல் இருப்பினும் மக்கள் அவை ஈர்த்துக் கொள்ளும் என்ற காரணத்தால் அங்கே செல்வதில்லை, அதைத் தாண்டிவேறொரு பக்கமாக அகநகர் நோக்கி திரும்பினோம். வழி நெடுக, சுமார் ஒரு கல் தொலைவு - மலைச்சரிவுகளில் பசுமையும் இனிமையும் ஓங்கிநின்றன; மலர்ச் செடிகளும் கூடத்தான். இதுவரையில் பார்த்த பகுதிக்கு நேர்மாறாக இது அமைந்தது. சிறு நீர்வீழ்ச்சியும் இருந்தது. சிறுசிறு விளையாடுமிடங்களும் குதிரைச் சவாரி செய்யும் இடங்களும் இருந்தன. நல்ல வெளிச்சமாகக் கதிரவன் ஒளிவீசிய நிலை மாறி, திடீரென மேக மூட்டம் தோன்றி, எல்லாப் பகுதிகளையும் மறைத்து விட்டது. சுமார் 1000 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள அந்த பசும் பகுதி மறைக்கப் பெற்றது. பிறகு நாங்கள் அருகிலிருந்த இருபெரும் குன்றங்களில் உச்சிக்கு அழைத்துச் செல்லப் பெற்றோம். வளைந்து வளைந்து செல்லும் அப்பகுதி வரண்டே காணப்பட்டது. ஒரு கல் தொலைவிற்குள் இத்தனை வேறுபாடா என இயற்கை

யினை எண்ணி நின்றேன். அந்த எல்லைக்குள் செல்லுமுன் ஜப்பானியர் தம் பொருள்காட்சிச் சாலையும் எதிரில் நம் நாடு, ரோம் நகரம் போன்று பெரும் சிலைகள் வைக்கப் பெற்ற இடமும் இருந்தன. பல புதிய கட்டங்கள், புதிய புதிய பாதைகள், காட்சி சாலைகள், கலிபோர்னிய பல்கலைக்கழக நகர் பகுதிக் (Universlty City) கட்டடங்கள் சிறுசிறு தொழிலகங்கள் வந்துவந்து சென்றன. இந்நாட்டு உணவுப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதி இக் கலி போர்னியா மாநிலத்தில் விளைகிறது என்று, வழியிடைக் கண்ட நிலப் பண்ணையைக் காட்டி அவர் விளக்கம் தந்தார் (BAYCITY) வளைகுடா நகர்ப் பகுதியும், அக நகரின் பிற பகுதிகளும் அம் மலை உச்சியிலிருந்து நன்கு தெரிந்தன. மேகமூட்டமும் மெல்ல விலக்க ஆரம்பித்தது. பிற இடங் களில் காணாத வகையில் வண்டிகள் நேர் எதிர்ப்பக்கம் திரும்பும் நிலை ('U.Twrn) இங்கே இருந்தது. உந்து வண்டிகள் ஓடிக்கொண்டே இருந்தன. பலவகையில் சாலைகளில் - ஓரிடத்தில் 12 தெருக்கள் சேருமிடத்தில் - குறுக்கும் நெடுக்குமாக ஆறுவகை வளை மேம்பாலங்கள் அமைத்திருந்தன. சிலவிடங்களில் மிக ஏழைகளாக வாழ்பவர் தங்கும் சிறு குடில்கள் - (குடிசைகள் அல்ல) இருந்தன. இந்நகரில் செல்வத்தில் செல்வம் பெற்றவரும் அல்லல் பட்டு ஆற்றாது வாடுபவரும் இருந்த காட்சி நம் நாட்டு நகர்களை நினைவூட்டியது. (ஆயினும் குடிசைகள் இல்லை) சாலைகள் ஒட்டிய பாலங்கள் - கடைத்தெரு, நகர் மண்டபம், நகராட்சி மண்டபம் இவைகளைக் காட்டிக் கொண்டே வந்து, மாலை 4-30க்கு புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து இறக்கினார் ஓட்டுநர். சாலைகளில் கண்ட கண்ட இடங்களில் வண்டிகளை நிறுத்துவது உட்பட, மேலே காட்டிய பிறவும் சேர்ந்து - என்னை நான் அமெரிக்காவைக் கடந்து நம் நாட்டிற்கு வந்து விட்டேனோ என்ற நினைவை உண்டாக்கின. 4-30க்கு அன்பர் வெங்கடாசலம் என்னை வந்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

மாலைச் சிற்றுண்டிக்குப் பின் 50 கல் தொலைவிலுள்ள பர்க்கலே (Burkley) செல்லப் புறப்பட்டோம். அங்கே தமிழ் பயின்ற நல்ல அறிஞரும், தமிழாய்ந்த பழம் பெரும் புலவரும் வாழ்கின்றனர். 'கலிபோர்னியா பல்கலைக் கழகம்' என்ற சிறந்த பழைய பல்கலைக்கழகம் அங்கே உள்ளது. அங்கே தமிழ் உண்டு. அந்த வழியில் நான் கடற் கழியைக் கடக்க 7 கல் தொலைவில் கீழ்ப்பாலம் கட்டி யுள்ளனர். அங்கேதான் அந்தப் பெருங்கழிக்கு அடியில் பாதாள இரெயிலும் ஓடுகிறது. எனக்கு வியப்பாக இருந்தது. இருவரும் மாலை ஏழு மணிக்கு, ஜார்ஜ் ஹார்ட் (George Hart) என்ற அந்தத் தமிழறிஞர் வீட்டிற் குச் சென்றோம். நல்ல தமிழில் வணக்கம் கூறி வரவேற்றார். அவர் நம் மதுரையைச் சேர்ந்த தமிழ்பயின்ற (எம். ஏ.) ஒரு மங்கையை (கொளசல்யா) மணம் செய்து கொண்டிருந்தார். அவரும் நம்நாட்டுப் பெண்போன்று ஆடை உடுத்தி, முகத் தில் பொட்டிட்டு தமிழ்ப் பெண்ணாகவே காட்சி அளித்தார். அவர்கள் வீட்டில் விநாயகர், முருகன், வேங்கடவன், இலக்குமி, சரஸ்வதி படங்களும் விநாயகர் உருவமும் இருந்தன. காரிலும் விநாயகர் படம் ஒட்டி இருந்தனர். அவர் தமிழகம் வந்து தங்கி, தமிழ் பயின்று, சில நல்ல பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தற் போது கம்பராமாயணம் ஆரணிய காண்டத்தை மொழி பெயர்த்து வைத்துள்ளார்; அச்சுக்குத் தரத் தயாராகி உள்ளதாம். அவர் வீட்டிற்குத் துப்புரவு செய்து சுவர், மாடி, மேல்பக்கம் அனைத்தும் வண்ணம் தீட்டப்பெறுகின்ற காரணத்தால் முறையான அமைப்பில் இல்லை. அந்தப் பணியை அக் கல்லூரி மாணவர்களே செய்து, ஊதியம் பெற்றுத் தம் படிப்பிற்குப் பயன்படுத்துகின்றனராம். நான் முன்னரே சுட்டியபடி, இங்கே பலர் தாம் பணிசெய்து பணம் பெற்றே படிக்கின்றனர். அவர்கள் வேலை நன்றாக உள்ளதோடு அவர் பெறும் தொகையும் பிற வேலையாட் களைக்காட்டிலும் குறைவாக உள்ளதாம். அவருக்கும் மாணவருக்கு உதவுகிறோம் என்ற மனநிறைவு

உண்டாகிறது. அவர் நூல்கள் வைத்திருந்த பெரிய அறைக்குள் சென்றோம். தமிழ் நூல்கள் ஆயிரத்துக்கு மேலும் இருந்தன. தணிகைபுராணம் போன்ற அரிய இலக்கியங்களும் கலைக்களஞ்சியம் போன்றவையும் இருந்தன. வடமொழி நூல்களும் ஆங்கில நூல்களும் பலப்பல. தமிழறிந்த அந்தத் தம்பதிகள் தமிழ்நாட்டுப் பல பேராசிரியர்களைக் காட்டிலும் தமிழை நன்கு அறிந்தவராய் - தமிழை வளர்ப்பவராய் உள்ளமை கண்டு மகிழ்ந்தேன். அவர் கணிப்பொறியினையும் சொந்தத்தில் வைத்திருக்கிறார். அதில் தமிழுக்கெனத் தனி அமைப்பை உருவாக்கி செயல்படுத்துவதைக் காட்டினார். கணியன்பூங்குன்றன் பாட்டினை (புறம் 192) அழகாக அது படி எடுத்துத் தந்ததைக் கண்டு வியந்தேன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பெரும்பாடல் அல்லவா அது.

உணவுக்குப்பின் அனைவரும் பல்கலைக்கழகம் காணச் சென்றோம். 8மணிக்கு மேலாகியும் சூரிய ஒளி இருந்தது. எனவே எல்லா இடங்களையும் காணமுடிந்தது. விடுமுறை யாதலால் நூல் நிலையம் உட்பட அனைத்தும் மூடியிருந்தன. உயர்ந்த மணிமண்டபத்தில் மணி 8.15 காட்டியது. அதன் மணி ஒலி இசைபாடுவது போல இருக்குமாம். பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்த்து விட்டு வீடு திரும்பினோம். தமிழ்பற்றி ஆராய்ந்து சொற்பிறப்பின் நிலைகாட்டி அகராதி (Elimnological Dictionary in Tamil) வெளியிட்ட பழம்பெறும் புலவர் திரு. எமனோ (Emeno) என்பவர் (81வயது) இங்கே உள்ளார். அவரைக் காண வேண்டுமென விழைந்து தொலைபேசியில் பேசினார். அவரே இங்கு வருவதாகச் சொல்லிப் பதினைந்து நிமிடத்தில் வந்து விட்டார்.

எங்கோ பிறந்து, தமிழ்மண்ணில் வந்து தமிழ் நலம் கண்டு அதை உலகுக்குக் காட்டிய அப் பெரியவரை வணங்கினேன். அவரைக் காண்பதே அரிது என்ற நிலையில், அவரே வந்து சுமார் ஒரு மணி நேரம் எங்களுடன் பேசிக்

கொண்டிருந்ததில் நான் மிக மகிழ்ந்தேன். தமிழ்ப் பல்கலைக் கழகச் செயல்கள் பற்றி விளக்கினேன். அவர் தற்போது திராவிட மொழியினைச் சார்ந்த 'பிராகுவி' மொழிபற்றி ஆராய்ந்து வருவதாகச் சென்னார். இந்த 81வயதிலும், அவர்தம் துணைவியார் நோய்வாய்ப்பட்டுப் படுக்கையாக இருக்கும் நிலையிலும், எல்லா வேலைகளை யும் தாமே செய்துகொண்டு, நம் மொழிபற்றி ஆராய் கின்றார் என்றால் அவரைத் தமிழ்த் தெய்வத்தின் தலை மைந்தன் என்று சொல்ல வேண்டுமல்லவா! தமிழால் - ஆராய்ச்சி என்ற பெயரால் - தமிழழைக் கொலைசெய்வார் வாழும் நாளில், கைமாறு கருதாது தமிழ்நலம் காணும் அவரை வணங்கினேன். இனிமையாகச் சுமார் ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தோம். மணி 10.30ஆனபடியால் அவரிடத்தும் ஜார்ஜ் ஆர்ட் தம்பதிகளிடத்தும் வணங்கி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டோம். ஐம்பது கல் தொலைவினை ஒருமணி நேரத்தில் கடந்தோம். வழியிடை இப்படிப் பிறநாட்டார் தமிழ்போற்ற, நம் நாட்டார் வேறு நிலையில் செல்வதைப்பற்றி எண்ணிப் பேசிக் கொண்டே வந்தோம். இரவு 11.30மணிக்கு வீடு வந்து சேர, உடன் உறங்கத் தொடங்கினேன்.

சான்பிரான்சிஸ்கோ-
லாஸ் ஏஞ்சலஸ் 24-5-85

காலை உறங்கி எழுந்தேன். வீட்டு அன்னையார் விடியலில் எழுந்து தம் பணி மேற் செல்ல வேண்டியவர், எங்களுக்காகக் காலை உணவு தயார் செய்து வைத்தார். நாள்தோறும் 5மணிக்கெல்லாம் புறப்பட்டு விடுவாராம்; 6மணி அளவில் அலுவலகத்தில் இருக்கவேண்டுமாம். பிள்ளைகளையும் வந்த விருந்தினர்களையும் கவனித்து இப்படி ஓய்வற்று உழைக்கும் அவர்தம் தியாக வாழ்வை எண்ணிப் போற்றினேன். பிறகு என் காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டேன். பிள்ளைகளும் வெங்கடாசலம் அவர்களும் 7.15க்குப் பணிமேற் சென்றனர். கடந்த நான்கு நாட்களிலும் இடையறாத பணிகளும் அலைச்சலும் இருந்தமையாலும் உடல் சோர்வுற்றமையா லும் பெரும் பாலனவற்றைக் கண்டு விட்டமையாலும் நான் இன்று எங்கும் வெளியில் செல்லவில்லை. மாலை 4.30க்கு லாஸ்ஏஞ்லசஸ் செல்ல விமானம். அவர் 3மணிக்கு வந்து விடுவதாகக் கூறிச் சென்றார். செல்லு முன் எனக்கு மதியம் வேண்டிய உணவுகளையெல்லாம் எடுத்து வைத்து, காட்டிச் சென்று புறப்பட்டார். நேற்று மாலை அவர் தம் வங்கியில் எப்படி பணம் எடுத்தார் என்பதைக் கண்டேன். எங்கோ ஒரு வங்கியில் இவர் கணக்கு. அதற்கு ஒரு தனி எண் - ஒரு தனியான அட்டை. அதை தெருவில் உள்ள ஒரு பெட்டியில் போட்டால் 'என்ன வேண்டும்? அடுத்து என்ன செய்ய

வேண்டும்?' எனக் குறிப்பு வருகின்றது. தன் எண்ணைக் குறித்து தொகையான பணம் பற்றியும் சுட்டவேண்டும். 'விரைவில் வரும்' என்ற குறிப்பும் வருகிறது. அடுத்த நிமிடத்தில் குறித்த தொகை வந்து நிற்க, முன் மறைக்கும் சிறு கதவைத் தள்ளி எடுத்துக் கொண்டார். தெருவில் ஒரு மூலையில் - ஒரு வங்கியோடு இணைந்த இப்பெட்டி, அவர் கணக்கு இன்றேனும், கணிப்பொறி அமைப்பில் அவர் வங்கியின் கணக்கைச் சரிபார்த்து, வேண்டிய தொகையினை மிகு விரைவில் தந்த அந்த இயந்திர வளர்ச்சியினைக் கண்டு வியந்தேன். நம் நாட்டிலும் இது போல ஓரிடத்தில் உள்ள தெனக் கேட்டும், இங்கேயும் பலவிடங்களில் இருந்தும் இது வரையில் நான் நேரில் காணவில்லை. அதே வேளையில் நம் நாட்டில் 1|2மணி 1மணி நேரம் காத்திருந்து, அந்த வங்கியில் பணி புரியும் கடை நிலை ஊழியர் முதல் அனைவர் தயவை யும் நாட்டி நின்று, கூறும் வசைச் சொற்களையும் ஏற்று ஏங்கி ஏங்கி நம் பணம் பெறும் நிலையினையும் இதையும் எண்ணினேன். இங்கே நேரில் பணம் பெறச் சென்றாலும் இரண்டொரு நிமிடத்தில் பெறலாம் என்றார் அவர்.

உடல் ஓய்வு தேவை என்றது. எனவே அனைவரும் பணிமேற்சென்ற பின் நான் சிறிது ஓய்வு பெற்றேன். பின் பகல் 12மணி அளவில் எனக்கென வைத்திருந்த உணவினை உண்டேன். 3மணிக்குப் புறப்படவேண்டி அதற்கென ஏற்பாடுகளைச் செய்து கொண்டேன். லாஸ் ஏஞ்சலஸ்சில் உள்ள திருமதி. உஷா அவர்களுக்கு மறுபடி தொலைபேசி வழியில் நான் வரும் நேரம் முதலியன பற்றிக் குறித்தேன். அனைவரும் சென்றபின் என் சிந்தனை நீண்டது. இந்த நாட்டிலும் ஐரோப்பிய நாடுகளிலும் அலுவலகங்களும், பள்ளி, கல்லூரிகளும் 8 அல்லது 9க்கு தொடங்கி, அவர்கள் விரைந்து தொழிற்படுவது போன்று ஏன் நம் நாட்டிலும் செய்யலாகாது? சில சமயங்களில் சூரியன் 8—9க்கும் புறப் படும் நாட்டில் இயலும்போது 6மணிக்குப் புறப்படும் நாட்டில் ஏன் இயலாது? தொழிற்சாலைகளின் உற்பத்திப்

பெருக்கு இந்நாட்டின் செல்வ வளத்தை வளர்ப்பது போன்று நம் நாட்டில் ஏன் வளர்க்கக் கூடாது. பிற நாடு களிலிருந்து கோடி கோடியாகக் கடன் வாங்கும் நாம், கடன்தரும் இந் நாடுகளைக் கண்டாயினும் பாடம் கற்றுக் கொள்ளக்கூடாதா! இளம் பிள்ளைகள் எவ்வளவு தெளிவோடு காலைவேளைகளில் கல்வி பயில ஆர்வம் காட்டுகின்றனர். மாலை 3 மணிக்கே பள்ளிகள் விடப் பெற்றதும் வீட்டுக்கு வந்து விளையாடி, மாலையில் வீட்டுப் பாடங்களைப் படித்தும் எழுதியும் முடித்து 6 அல்லது 7 மணிக்கே உணவு கொண்டு உரிய வேளையில் உறங்கி, உடல் நலத்தைப் பேணி நெடுங்காலம் வாழ இளமையிலேயே கற்றுக்கொள்ளுகின்றனரே. பெரியவர்களும் அப்படியே வாழ்ந்து வாழ்நாள் பெருகவும் நோயின்றி வாழவும் வழி காணுகின்றனரே. எத்தனை எத்தனை புதிய கண்டு பிடிப்பு கள்—எத்தனை எத்தனை புதுப்புதுக் கைத் தொழில்கள்— எத்துணைப் பொருள்கள் ஏற்றுமதி. இயற்கை வளமும் மக்கள் பெருக்கமும் உள்ள நம் நாட்டில் முயன்றால் இந்த நாட்டைவிட எத்தனையோ மடங்கு முன்னேறலாமே. பிற நாடுகளில் தம் வாழ்வையும் வளத்தையும் நாடி, யாராவது திறனாளர்—பொறியாளர்—மருத்துவர்—அறிவாளர் செல் வார்களா? பாவம்! இவற்றை எண்ணிப் பார்க்க நம் தலைவர்களுக்கு நேரம் இல்லையே. நம் நாடு உலக நாடு களுடன் உயர்ந்த நிலையைப்பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்க வில்லையே 'நாடென்ப நாடா வளத்தன நாடல்ல நாட வளம் தருநாடு என்ற குறளை நாட்டு வாழ்வில் செயலாக்க வேண்டும் என யாராவது என்றாவது எண்ணியது உண்டா?

பிற்பகல் 3.30 மணிக்கு அன்பர் வெங்கடாசலம் வர அவருடன் விமானநிலையம் புறப்பட்டேன். அவர்கள் விமானநிலையத்தில் டிக்கெட் தரும் இடம் வரை வந்து விட்டுப் புறப்பட்டனர். நான் பிறகு விமானம் புறப்படும் இடம் சென்று அமர்ந்தேன். விமானம் 4.50க்குப் புறப் பட்டது. வழியிடையெல்லாம் மலைகள் மலப்பல; கானாறு

கள் பல. சுமார் 400கல் தொலைவு கடந்தது. சிலவிடங் களில் பயிர்ப்பண்ணைகளும் இருந்தன. சரியாக 6.15க்கு லாஸ்ஏஞ்சிலஸ் கால் வைத்தேன். இந்த ஊர் இந்நாட்டின் இரண்டாவது பெருநகர். (நியூயார்க் நகருக்கு அடுத்து) எனவே விமான நிலையத்தில் பெருங்கூட்டம். பெட்டிகள் எடுக்குமிடத்தில்—ஒரு சுற்றில் மூன்று விமானப்பெட்டிகளை அனுப்பினார். பலரும் கூடி விட்டனர். என் பெட்டிவரும் நிலைகண்டு, அவசரத்தில் நெருக்கடியில் அதை எடுக்க மற்ற வருடன் மண்டி நெருக்க, பக்கத்தில் கைப்பையை வைத்தேன். ஒரு நிமிடம்கூட ஆகவில்லை. திரும்பிப் பார்க்கப் பை இல்லை. உடனே ஓடி அலைந்தேன்—அதில் தான் பாஸ்போர்ட்,டிக்கெட் அனைத்தும் இருந்தன. (பணம் இல்லை) எனவே மிக்க திகில் கொண்டு அருகிலிருந்த காவல் துறையினரிடம் கூறினேன். உடனே, அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் அவர்கள் பையினை என்னிடம் கொண்டு வந்து சேர்த்தனர். அவர்கள் பணியினை வியந்து போற்றினேன். பின் என் பெட்டியினை எடுத்துக் கொண்டு, வெளிவரும் போது, (இங்கே யாரும் வரமாட்டார்கள் 'டிஸ்டினிலேண்டு' வரை பஸ்ஸில் வந்து இறங்கி. தொலைபேசியில் சொன்னால் அவர்கள் கார் கொண்டு வருவார்கள்) நான் வந்த 'வெஸ்டர்ன்' (Western Airlines) விமானத்திற்கு உரிய அலுவலகத்தினர் என்னை இலவசமாக ஏற்றிச் செல்ல வழி உண்டு என்வும் வீட்டிலேயே கொண்டு இறக்கி விடலாம் எனவும் கூறி, அதற்கெனத் தனிப் பயணச்சீட்டினையும் தந்தனர். அந்த வண்டியில் ஏறி இரவு 8 மணிக்கு வீடு அடைந்தேன். திரும்தி. உஷா ஐயர் அவர்கள் நான் தொலைபேசியில் ஏழு மணிக்குக் கூப்பிட வில்லையே என எண்ணி இருந்த வேளையில் நானே நேரில் சென்றமை கண்டு மகிழ்ந்தனர். ஐயர் அவர்கள் வெளியூர் சென்றிருந் தார். அவர்தம் பெண்கள் இருவரும் ஷிலாவும், சாந்தியும் - ஒரு பணிப் பெண்ணும் (மெக்சிகோ நாட்டைச் சேர்ந்தவர்) இருந்தனர். குழந்தைகள் அன்புடன் பழகின. அம்மையாரும் இன்முகத்துடன் வரவேற்று, உணவிட்டு ஊர்நலம் பற்றி

யெல்லாம் கேட்டனர். அவர்தம் இளையமகளுக்குச் சற்றே காய்ச்சலும் இருமலும் இருந்தன. அவர்களே டாக்டராயினும் வேறொரு டாக்டரைக் கேட்டு மருந்து கொடுத்தனர். அது தான் முறையும்கூட. பின் நாளை மறுநாள் இரு விடுமுறை நாட்களிலும் எங்கெங்கே செல்ல வேண்டும் என அவர்கள் தீட்டிய திட்டத்தினைச் சொன்னார்கள். திரு. ஐயர் அவர் கள் ஞாயிறு காலை வந்துவிடுவர். நெடுநேரம் பேசியிருந்து இரவு 10.30க்குப் படுக்கச் சென்றேன்.

லாஸ் ஏஞ்சிலஸ் 25-5-85

காலை சற்று மெல்லவே எழுந்தேன். காலைக் கடன் களை முடித்துக் கொண்டு, குறிப்பு எழுதி முடித்தேன். அம்மையார், குழந்தைக்கு இரவு இருமல் சற்று அதிகமாக இருந்ததெனவும் மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும் எனவும் கூறி, 'டிஸ்னிலேண்டு' காண, மூத்த மகள் ஷீலாவை உடன் அனுப்புவதாகக் கூறினார். காலைச் சிற்றுண்டிக்கு பிறகு நான் என்னை மறந்தேன். எங்கே இருக்கிறேன் என்று தெரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தேன்; எதுவும் புரியவில்லை.

திடீரென என்னைச் சுற்றிப் பல வண்ண நிறக் கிளிகள்—சிறு பறவைகள்—பெரும் பருந்துகள் சத்தமிட்டன—இல்லை பேசின—அழகாகப் பாடின. அவைகள் மொழியிலன்று—மக்கள் பேசும் மொழியில்—அமெரிக்க ஆங்கிலத்தில் நெடு நேரம் பேசின. என்ன? பறவைகள் பேசினவா என்று கேட்கிறீர்களா? ஆம்! தவறுதான்—பறவைகள் மட்டுமல்ல ஓரறிவுடைய செடிகளில் மலர்ந்த பலவகை வண்ண மலர்கள் வாய் திறந்து பேசின. ஆறறிவுடைய மக்கள் தவறிழைத்த வழி, அந்தப் பறவைகளையும் மரம், செடி, கொடிகளையும் அழைத்து உதாரணம் காட்டுவது நம் நாட்டு மரபு அல்லவா!

நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாஞுண்ட நீரைத்
தலையாலேதான் தருத லால், என்று மரம் காட்டியும்,

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி' என்று பறவைகள் காட்டியும்

ஔவையார் என்றோ மனிதனுக்கு அறிவூட்டவில்லையா! அந்த நிலையினை இன்று என் கண்முன்னேயே கண்டேன். அவை பேசின—பேசிக் கொண்டே இருந்தன. மலர்களும் இதழ்களாகிய—செவ்வாய் இதழ் திறந்து பேசின. என்ன வென்று எனக்குத் திட்டமாகப் புரிய வில்லையாயினும், இவை மனிதனை மகிழ்விக்க வேண்டி அத்தகைய பாடல் களையும் பேச்சுகளையும் உதிர்த்தன. நான் அவைகளை எட்டிப் பிடிக்க நினைத்துக் கை நீட்டினேன். ஆனால் அவை திடீரென மறைந்தன; அங்கே ஒரு காடு.

ஆம்! காட்டு நடுவிலே நான் செல்கிறேன். பலவகை மிருகங்கள், நான் செல்லுவது ஒரு காட்டாறு; சிறுபடகில் ஊர்ந்து செல்கிறேன். பக்கத்திலே பெருமீன்கள், முதலை கள்—காண்டாமிருகங்கள்—பிற நீர்வாழ்வன எப்போது என் படகைக் கவிழ்க்குமோ என அஞ்சுகிறேன். கரையில் செல்லலாமா என்றால் அங்கெல்லாம் என்னை வைத்த விழிவாங்காமல் பார்க்கும் சிங்கங்கள்-புலிகள் - யானைகள். கரடிகள் - இன்னும் என்னென்னவோ. அச்சத்தால் கண் மூடித்திறந்தேன். நல்லவேளை அவைகள் இல்லை. ஆனால் அவற்றினும் கொடிய பழங்கால நாகரிக மக்கள் கைகளில் வில்லும் வாளும் பிறவும் ஏந்தி - மக்களைப் பிடித்து விழுங்கும் கொலை நோக்கோடு - கரைகளில் காத்து நிற்கின்றனர். வனவிலங்குகளிலிருந்து தப்பினாலும் தப்ப லாம், இவர்களிடமிருந்து தப்பமுடியாதே என வருந்தினேன். சிலர் மிக அருகே வந்து என்னைப் பிடிப்பது போலவே இருந்தனர். தூரத்தே அவர்கள் தொழும் தெய்வம் மர நிழலில் பெரு உருவில் நின்றது. நான் இன்று இந்த தெய்வத் திற்குப் பலியாவேனோ என எண்ணி அத் தெய்வத்தைப் பரவிக் கண்ணை மூடினேன்.

அச்சத்தால் மூடிய கண்ணைத் திறந்தேன் - காடுகள் பற்றி எரிந்தன. மனிதர்கள் யாருமில்லை. ஆனால் ஆற்றங்கரையில் அழகிய வண்ண உடை அணிந்த தெய்வ உருவில் பல பெண்களும் ஆண்களும் ஆடியும் பாடியும் வரிசை வரிசையாக நின்றிருந்தனர் - ஆடினர் சிலர் - வீணை வாசித்தனர் சிலர் - பிடில் போன்ற சில வாத்தியங்களும் முழங்கின. வாய் திறந்தும் பலர் பாடினர். 'வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாம் ஒலிக்க, கொட்டிமுழக்கு மந்தக் கூட்ட முதல் பாட்டினிலே என்னைப் பறிகொடுத்தேன்' - எங்கிருந்தோ இன்னிசை முழக்கம் கேட்டது. அப்படியே மகிழ்ச்சியில்-காட்டு விலங்குகளிலிருந்தும் காட்டு மனிதர்களிடமிருந்தும் காப்பாற்றிய அந்தத் தெய்வத்தை நினைத்துக் கண்ணை முடினேன்.

திறத்து பார்க்கும்போது நான் நிலத்தில் இல்லை. நான் வந்த படகு இல்லை.பழைய ஆறு இல்லை - பாட்டு இல்லை - ஆட்டம் இல்லை - எங்கோ வானவெளியில் வட்டமிட்டுக் கொண்டிருந்தேன். என்ன இது? இது என்ன உலகம்? எங்கே இருக்கிறேன்?'ஒன்றுமே புரியவில்லையே! இடியொடு கலந்து மேகம் கொட்டு மழையை விட்டு இருந்தது. எனினும் விண்வெளிக்கலம் என்னை எங்கெங்கோ தூக்கிச் சென்றது. பல கோளங்கள் - உயிரற்ற பரந்த உலகங்கள் - உருண்டைகள். அவை வெகு வேகமாக ஓடிச் செல்லும் வான வீதி. அந்த ஓடும் உருண்டைகள் பெரியன சில. சிறியன சில. அவற்றின் வேகத்தை என்னால் அளவிட முடியவில்லை. மாணிவாசகர் சொல்லிய திருவண்டப் பகுதி அடிகள் என் நினைவுக்கு வந்தன.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப் பருந்தன்மை வளப்பருங் காட்சி
.....
.....
இல்நுழைவு கதிரின் துன்அணுப் புரைய
நூற்றொரு கோடியின் மேற்பட்ட விரிந்தன—

என்ற மாணிக்கவாசகர் அடிகள் என் கண் முன் உண்மைக் காட்சியாக விளங்கின. இவற்றை என்றைக்கோ எண்ணிப் பாடிய அந்தப் பெருந்தகையாரை நான் எண்ணிப் போற்றினேன். அதற்குள் அந்த வானவீதியில்தான் எத்தனை எத்தனை வண்ண ஜாலங்கள்! - வெடிகள் - அதிர்ச்சிகள் - இன்னும் என்னென்னவோ! என்னால் விளக்க முடியவில்லை (ஒரு வேலை வானாராய்ச்சி செய்யும் வல்லவர் கள் சொல்வார்களோ என்னவோ!) 'அத்தனை வண்ணக் களஞ்சியம் ஆகப் பலப்பல உலகுகள் சமைத்தாய், என்று பலகோடி இன்பம் வைத்த இறைவனைப் பாடிய பாரதியார் அடிகள்தான் என் எண்ணத்துக்கு வந்தன.

அங்கிருந்து எங்கோ தாவினேன்! அது ஒரு உலகம். அங்கே மனிதர்களே இல்லையே! இது என்ன! மண்ணும் கல்லும் பிறவும் நம் பூமி போல் இருக்கிறதே - ஆனால் இது இந்தியாவோ அமெரிக்காவோ இல்லையே. ஒருவர்கூட - ஓர் உயிர்கூட இல்லையே என அச்சத்தோடு அங்கும் இங்கும் பார்த்தேன். எங்கிருந்தோ இனிய குரல் ஒன்று கேட்டது. 'அன்பா! அஞ்சாதே! இதுதான் செவ்வாய்க் கிரகம்! இதில் மக்கள் வாழலாம். உங்கள் பூமியைவிட்டு, பொல்லாத மனிதர்களை வீட்டு நீ நெடுந்தூரம் வந்துவிட்டாய். மனிதன் இங்கே வாழ நினைத்தான் - வளைந்து வளைந்து ஆராய்ச்சி செய்தான் - ஆனால் அதற்குள் அவன் மூளை அழிவுப் பாதைக்கு அவனை அழைத்துச் சென்று விட்டது. உலகை அழிக்க ஒரு அணுகுண்டு போதும் அல்லது அமெரிக்காவில் ஓர் ஊரிலுள்ள (சியேட்டல்) ஆயிரம் அணுகுண்டுகள் மட்டும் உலகையே இதுபோல உயிரற்ற வெட்டவெளியாக்கி விடும். ஆனால் இருபெரு வல்லரசுகளும் - இன்னும் சிலரும் போட்டியிட்டுக் கொண்டு ஆயிரமாயிரமாக அணு குண்டு களைச் செய்து குவிக்கின்றனர். ஆம்! அவை என்றாவது ஒருநாள் - அவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் திடீரென பூகம்பத்தாலோ - பிற அசைவு ஆட்டங்களி னாலோ வெடித்து காளமா முனிவர் பூதத்தால் விழுங்கப்

பெற்றமை போன்று - செய்த அவனையே - அவன் மனித இனத்தையே - உயிரினத்தையே அழித்து உவகை வெறும் தரையாக்கும். அவன் திருந்தினால் வழி உண்டு! எங்கே திருந்தப் போகிறான், ஒரு வேளை உன் வாழ்நாளிலேயே இவற்றைக் காணலாம். ஆனால் நீ மட்டும் காண இருக்கப் போகிறாயா?' என்று கேட்டது. அப்பா நான் செத்தேன் என்று அஞ்சி வெறுவினேன். நாளை உலகம் எப்படி எப்படி இருக்கும் என்று எண்ணினேன்.

ஆம்! நாளை உலகம் - அணு ஆய்வில் தன்னைப் பரிகொடுத்த அந்த உலகில் திடீரெனத் தள்ளப்பெற்றேன். அந்த மனிதன் அணுவினைக் கொண்டு என்னென்னவோ செய்து கொண்டிருந்தான். பலப்பல விதமான காட்சிகள் - விளைவுகள் — விபரீதங்கள் - வேடிக்கைகள் - என்னென்னவோ, அவை எனக்குப் புரிந்தால்தானே - ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரிந்தது. அவன் அணு ஆராய்ச்சியெல்லாம் உலகைச் சாம்பலாக்கும் என்ற உணர்வு மட்டும் உள்ளத்தில் தோன்றியது. நான் நினைத்தது தவறோ என்னவோ - திடீரெனக் கீழே தள்ளப்பெற்றேன்.

அமெரிககா நாட்டிலே எங்கெங்கோ சுற்றித் திரிந்தேன். பனிபடர்மலைகள் - காடுகள் - பாறைகள் செறிந்த மலைச்சரிவுகள் - அவற்றின் வழி அலைந்தோடும் கானாறுகள் - வண்ணப் பசுந்தரைகள் - நெடிய மரங்கள் - உயரிய சிகரங்கள் - பனிக்கட்டிகள் - அவற்றில் சறுக்குமரம் விளையாடும் பாவையர்கள் - அந்நாட்டிலே பறக்கும் வண்ணப் பறவைகள், பெருவிலங்குகள் - மனிதன் அமைத்த மாடமாளிகைகள் - உயரிய கோபுரக் கட்டிடங்கள் - அவன் கண்ட ஆராய்ச்சிகள் - வான ஊர்தி இப்படித்தான் அன்று தொட்டு இன்று வரை வளர்ந்தது எனக்காட்டும் திரைப் படங்கள் - இன்னும் என்னென்னவோ கண்டு - நல்ல வேளை அமெரிக்காவிற்கு வந்துவிட்டோம் என்ற மகிழ்ச்சியில் என்னை மறந்தேன் - எதிரில் 'அமெரிக்கா பாடுகிறது'

(America Sings) என்ற ஒரு பலகையைப் பார்த்தேன். என்ன? ஊர் - நாடு பாடுகிறதா? நம் இலக்கண மரபில் கூறியபடி 'ஆகு' பெயராக இருக்கும் என எண்ணிக் கொண்டிருந்தபோதே என் எதிரில் விதவிதமான கருவிகள் - பிற விலங்குகள் நாடகமாடத் தொடங்கிவிட்டன. பாடின - இனிய ஹார்மோனியம் போன்ற கருவிகளை வைத்துப் பாடத் தொடங்கின. அவற்றின் இசையும் நடனமும் கண்ணையும் கருத்தினையும் கவரும் வகையில் இருந்தன. அடிக்கடி அந்த நாடகக் காட்சி மாறி மாறி வந்தது. எத்தனையோ வகைக்காட்சிகள், அதைக்காண நான் இருந்த இடமே சுழன்றது. உலகம் சுழல்கிறது என்ற உண்மை அறிவேன் - இதோ சுழலுவதை நேரே பார்த்தேன். ஒரு வேளை உலகத்தைத் தாண்டி அண்ட கோளத்தில் நின்று அச்சுழற்சியைக் காண்கிறோமோ என்ற எண்ணமே உண்டாயிற்று. திடீரெனச் சுழற்சி நின்றது - பாட்டு நின்றது - ஆட்டம் காணோம். நான் திகைத்தேன். 'நாம் போகலாமா' என்று குரல் கேட்டுத் திரும்பினேன். ஆம்! என்னைத்தான் செல்வி ஷீலா அழைத்துக் கொண்டிருந்தாள். என் நினைவு திரும்ப, திகைத்து நாற்புறமும் சுற்றிப் பார்த்தேன். நீங்களும் திகைக்கிறீர்களா! ஏதோ பயித்தியக்காரன் எங்கெங்கோ சென்று எதை எதையோ கண்டு உளறுகிறானே என்று; கவலை வேண்டாம். அமெரிக்கா வந்து லாஸ்ஏஞ்சலஸ் 'டிஸ்னிலேண்டில்' நுழையுங்கள்.

காலையில் திருமதி. உஷா அவர்கள் தாம் சொல்லியபடி தம் மூத்த மகளுடன் என்னை இந்த உலகத்துக்கு - நம் உலகத்துக்கு அப்பால் உள்ள உலகத்துக்கு - என்னை அழைத்து வந்து விட்டுச் சென்றமை உணர்ந்தேன். காலை 8.15க்கு இங்கே விட்டுச் சென்றார்கள். அப்போது தூறல் இருந்தது - குடையினையும் தந்து சென்றார்கள். இப்போது வெய்யில் கொளுத்துகிறது. அதற்கும் குடை பயன்படும். இந்த நாட்டில் இயற்கையும் மனிதனின் மனம் போல

அடிக்கடி மாறிக்கொண்டே இருக்கின்றது. நான் இந்த உலகிற்கு வந்து நாற்புறமும் திரும்பிப் பார்த்தேன்.

நான் கடந்த ஐந்து மணி நேரமாக 8.30 முதல் 1.30 வரை கண்ட காட்சிகளே நான் மேலே கூறியவை என நானே உணர்ந்து கொள்ள நெடுநேரமாயிற்று. நான் பார்த்தவை சில; பார்க்க வேண்டியவை பலப்பல. அடுத்து எந்தப்பக்கம் போகலாம் என நினைத்தும் எதைப் பார்க்க லாம் என எண்ணியும் நாற்புறமும் நோக்கினேன், எங்கும் மக்கள் கடல். நான் காலையில் வந்தபோது கூட்டம் இல்லாமையால் மிக எளிமையாக எல்லாவற்றையும் காண முடிந்தது. இப்போது எத்தனையோ மக்கள் - இருபதா யிரத்துக்கு மேலும் இருக்கலாம் என்றும் விடுமுறையாதலால் இக் கூட்டம் என்றும் அறிந்தேன். எங்கெங்கும் கியூ ('Q') வரிசை. ஒரு புறம் கப்பல். ஒரு புறம் பாய்மரக் கப்பல் - ஒரு புறம் கட்டுமரம், ஒருபுறம் பல படகுகள், இவை நீரில் மிதந்து எண்ணற்ற மக்களை ஏற்றிச் சுற்றிச் சுற்றி வருகின்றன. ஒரு புறம் நீராவி இரெயில்-ஒரு புறம் 'மின்சார இரெயில் - ஒருபுறம் அணு ஆக்க இரெயில், ஒரு புறம் மேலே வானில் மோட்டார்கள். இப்படிப் பலப்பல வண்டிகளில் மக்கள் ஏற்றிக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்தனர். ஒரு புறம் கீழ் மேல் சுழலும் இராட்டினம்; ஒரு புறம் நாற்புறம் 'ஆடும் ஊஞ்சல்' ஒரு புறம் வளையவரும் இராட்டினம். இப்படிப் பலப்பல விளையாட்டு இடங்களும் உள. இவற்றில் குழந்தைகள் மட்டுமன்றிப் பெரியவர்கள் வயோதிகர்கள் அனைவரும் ஏறிச் சவாரி செய்கிறனர்.

எங்கும் மக்கள் கூட்டம். ஒரு புறம் வரிசை வரிசை யாகப் பலவற்றைக் காண நிற்பவர். ஆம் கியூவில் நின்று இரண்டு மணி நேரம் கழித்தே உள் புகவேண்டும். அங்கே பார்ப்பதோ பத்து நிமிட நேரம்தான். எனவே அதற்குமேல் அங்கே புதுமையாக - முக்கியமாகப் பார்ப்பதற்கு ஒன்று மில்லையாதலாலும் எங்கள் இருவருக்குமே சோர்வு தட்டிய காரணத்தாலும் உடனே புறப்பட நினைத்தோம். பிறகு

புகு முன் ஏதேனும் உண்டு - பசி நீங்கிச் செல்லலாம் என உணவுச்சாலை ஓரம் சார்ந்தோம். பல உணவுச்சாலைகள். ஆயினும் எங்கும் கூட்டம். உள்செல்ல ஒருமணி நேரத்துக்கு மேலாகும். சென்றாலும் எங்களுக்கு வேண்டிய மரக்கறி உணவு கிடைக்குமா என்பது ஐயம். எனவே வெளியில் கிடைத்த சோளப்பொறியினையும் குளிர்ந்த பழ நீரையும் வாங்கி அருந்தினோம். (அதற்கும் அரைமணிநேரம் காக்க வேண்டியிருந்தது.)

*மணி 2-30தைக் கடக்கும் நேரம். மக்கள் வெள்ளமோ அலை அலையாகப் புரண்டது. எனவே வீட்டுக்குச் செல்வதே சிறந்த வழி என்று அன்னையாருக்குத் தொலை பேசி வழியே தகவல் சொன்னோம். அவர்களும் உடனே வந்து வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். அவர்தம் இளைய மகள் நோய் நீங்கி விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டு மகிழ்ந்தேன்.

'Disney land' 'டிஸ்னி நிலம்' என்னும் பகுதி 'டிஸ்னி' என்பரால் முப்பது ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பெற்று, பலவகைகளில் மெல்ல மெல்ல வளர்ச்சியுற்று இன்று இந்த நிலையில் சிறந்துள்ளது. சுமார் 100 ஏக்கர் நிலத்துக்கு மேல் இதன் பரப்பு இருக்கலாம். எத்தனையோ வகையான அறிவியல் - அணுவியல் காட்சிகள் - பழம் பெரும் மக்கள் வாழ்க்கை முறை - இன்றைய அமெரிக்கா - சில உலக அரங்கக் காட்சிகள் - வேடிக்கை விளையாட்டுகள். ஊர்தி விளையாட்டுகள் எனப் பல உள்ளன. இன்னும் விரிவாக்கம் பெறத் திட்டங்கள் உள்ளனவாம். இதே போன்ற அமெரிக்க நாட்டின் தென் கோடியில் உள்ள பிளாரிடா (Florida) மாநிலத்திலும் ஒன்று உண்டு என்றும் இரண்டில் ஒன்றினைக் காட்டாயம் நான் காண வேண்டும் என்றும் சென்னையிலேயே பல அன்பர்கள் கூறினர். இங்கே வந்த பிறகு இரண்டில் இதுவே சிறந்ததுஎனக் கூறினமையாலும் நான் பிளாரிடா செல்லப் போவதில்லையாதலாலும் இதனைக்கண்ட் மன் நிறைவு பெற்றேன். இந்த லாஸ்

ஏஞ்சலஸ்க்கு 'டிஸ்னிநிலம்' (1) படம் எடுக்கும் 'ஆலிவுட்' (2) சென்னை போன்ற பரந்த நிலப்பரப்பினை, மணல்வெளியினை உடைய நீண்ட கடற்கரை (3) இம்மூன்றும் அழகூட்டி இதற்குச் சிறப்பைத்தருகின்றன. நாள்தோறும் - அதிலும் விடுமுறை நாட்களில் இவற்றைக் காண இந்நாட்டின் பிற பகுதிகளிலிருந்தும்வெளிநாடுகளிலிருந்தும் மக்கள் வந்து கொண்டே இருக்கின்றனர். 'டிஸ்னிநிலத்'தைத் தொடர்ந்து காண மூன்று நாள் வரை டிக்கெட் வழங்குகின்றனர். அவ் வளவு பெரிது; நான் முக்கியமானவற்றை கண்ட மனநிறை வோடு, நாளை ஆலிவுட், கடற்கரை இரண்டையும் காண முடிவு செய்து அமைந்தேன்.

வீட்டுக்கு வந்தவுடன் அம்மையார் அளித்த உணவினை உண்டு சிறிது நேரம் ஓய்வு பெற்றேன். பின் ஆறுமணி அளவில் தமிழ்ப்படம் (வீடியோ) தொலைக்காட்சியில் இட்டுக் காண்பித்தனர். எட்டு மணிக்கு உணவு கொண் டோம். திருவாளர். பத்மநாபன் அவர்கள் 9 மணி அளவில் வந்து சேர்ந்தனர். அவர்கள் உணவு கொண்டு வந்தபின், நெடுநேரம் அவர்களுடன் பேசிக்கொண்டிருந் தேன். அவர்கள் தமிழராயினும் திருவனந்தபுரத்தைச் சேர்ந்தவர்களாதலின் பள்ளியில் மலையாளம் பயின்றார் களாம், எனினும் நல்ல தமிழில் பேசவும் எழுதவும் அறிந் தவர். என்னிடம் தமிழிலேயே பேசிக்கொண்டிருந்தார். அவருடைய உறவினர்கள் சென்னையில் உள்ளனர்.

தமிழ்நாட்டு நிலைபற்றியும் இந்திய நாட்டு நிலை பற்றியும் பேசினார். அந்த நாட்டு அரசாங்கம் அறிவில் சிறந்தவர்களையெல்லாம் இப்படி வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டு, வாளா இருந்து, அறிவுச் சூனியமாகி நிற்கின்றதே என்று வருத்தப்பட்டார். ஆம்! இங்கே நான் கண்ட பல பொறியாளர்கள், மருத்துவர்கள், பேராசிரியர் கள் அனைவரும் சிறந்த விற்பனராக இருந்து இங்கே புதுப் புது ஆய்வுகளைக் கண்டு இந்த நாட்டுக்கு வழங்குகின்றனர். இவை அனைத்தும் நம் நாட்டுக்குப் பயன்பட்டால்

எவ்வளவு சிறப்பாக இருக்கும் என நான் எண்ணினேன். அறிவின் திறன் உலகுக்கு உணர்த்தப்பெறுவதோடு நாடும் பொருளாதாரத்தில் எவ்வளவோ முன்னேற்றம் கண்டிருக் குமே என்பதை முன்னும் கூறியுள்ளேன்.

10 மணி அளவில் திரு. சபரிநாதன் அவர்களோடு தொலைபேசியில் பேசினேன். சிகாகோ சான்பிரான் சிஸ்கோ ஆகிய இடங்களில் முயன்றும் கிடைக்காத அன்பர் இன்று கிடைத்தார். அவர் பம்பாய்த் தமிழ்ச்சங்கச் செயலாளராக இருந்த காலத்தில் நான் சென்று பேசியுள் ளேன். அதையெல்லாம் நினைவூட்டி, புறப்படுமுன் நாளை இரவாயினும் அவர் வீட்டிற்கு வருமாறு அழைத் தார். பள்ளிக்கும் ஏதேனும் நன்கொடை வழங்குவதாகவும் சொன்னார். நான் திரு. பத்மநாபன் அவர்களுடன் கலந்து எப்படியும் புறப்படுமுன் காண்பதாகவும் நான் நாளை 'ஆலிவுட்' சென்று திரும்பியபின் தொலைபேசியில் பேசி ஆவன செய்யலாம் என்றும் கூறினேன். எப்படியும் காண வேண்டும் என்ற அவர்தம் அன்பினை எண்ணினேன். திரு. பத்மநாபன் அவர்களும் அவருடன் பேசியதில் அவர் பண் பினை உணர்ந்தார். இரவு 11 மணி அளவில் துயிலச் சென்றேன்.

லாஸ் ஏஞ்சிலஸ் 26-5-85

விடியற்காலை முறைப்படி எழுந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டேன். 9-மணி அளவில் பொறியாளர் திரு. நாராயணன் அவர்கள் வீட்டில் ஷீலாவையும் என்னையும் விட்டுவீட்டு, அவர்களுடன் ஆலிவுட் நகரைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்தனர். அவரும் சென்னை பிரம்பூரைச் சேர்ந்தவர். இரண்டு பிள்ளைகள், அவர்தம் துணைவியார் அனைவரும் வரவேற்றனர். பின்னர் அப்பிள்ளைகளுடன் நாங்களும் திரு. நாராயணன் காரிலேயே 40கல் தொலைவில் உள்ள அந்த அதிசய உலகம் நோக்கிப் புறப்பட்டோம். பிறகு மாலை நான்கு மணிக்குத் திரும்பினோம். அடுத்து திரு. பத்மநாதன் அவர்கள் குடும்பத்துடன் உலகிலேயே நீண்ட கடற்கரையைக் காணப் புறப்பட்டு அங்கே இருந்து இரவு 8மணி அளவில் வீடு திரும்பினோம். இந்த இரண்டு நாட்களிலும் பலவிடங்களில் சுற்றிப் பார்த்ததில் நான் முன் சொன்னபடி, அமெரிக்க நாட்டின் இம் மேலைப் பகுதி எல்லாவற்றிலும் நம் நாட்டொடு ஒத்து இருந்தது என உறுதி செய்தேன். முன் சியேட்டல், சான்பிரான்சிஸ்கோ இரு இடங்களில் எழுதிய குறிப்புக்களில் நம் நாட்டின் நிலையோடும் வாழ்வொடும் இப்பகுதி எவ்வாறு பொருந்திற் றெனக் காட்டியுள்ளேன். இங்கே இன்னும் சில கண்டேன். நம் நாட்டினைப் போன்று இப்பக்கத்தில் சாலை ஓரங்களில் மரங்களை வைத்து வளர்க்கின்றனர். அழகிய நிழல்தரு மரங்கள். எங்கெங்கும் பனைமரங்கள் - ஈச்சமரங்கள் நிறைய உள்ளன. தென்னையும் மாவும் இங்கே பயிராகிப் பயன் தருகின்றன. வாழை அழகாக மடல் விரிந்து வளர்ந்து,

நரசர் துப்புரவும் கண்டாம். வாரத்துக்கு இருதடவை மோட்டார் வாரி வருவாம். ஒவ்வொரு வீட்டிலும் உள்ள குப்பைக் கூளங்களை கவிய பெரிய வாகனில் இட்டுத் தந்தம் வாசலில் வைத்திருப்பர். (நான் இதை முதலில் பார்கில் கண்டபோது ஏதோ சாமான் மூட்டைகள் என நினைத் தேன்). மறும் வாரில் அதைத் எடுத்துப்போட்டுக் கொண்டு செல்வர். தெருக்கள் பழுது இல்லாதாலும் வீட்டு எல்லைகள் பெரும்பாலும் பூ மரப்பாக உள்ளவையா லும் இவற்றில் குப்பை சேர்தாகல் அற்றந்த வீட்டில் உள்ள வர்களே துப்புரவு செய்வதாலும் தெருக்களில் அதிக குப்பை கள் சேருவதில்லை. இல்லாத நகர ஆட்சேர் தம்மை மீனைப் பாதுகாக்கின்றனர். அவர்களிடம் கல்வி, நுகர் துறை, பெரு சாலைகள், மக்கள் பிற தேவைகள் அனைத்தும் ஒப்படைக்கப் பெற்றுள்ளவாம். அப்படியே ஒவ்வொரு மாவட்ட ஆட்சிபிடமே அனைத்தும் உள்ளன. நம் நாட்டு தும் அல்லாத அனைத்தும் மாவட்ட ஆட்சிபிடம் (District Boards) ஒப்படைக்கப்பட்டிருந்த காலம் கண்டு. நான் அப்போது அரியலில் உபவிட்டவளாதலால் அத்தகை ஆட்சி குழுவில் உறுப்பினராக மக்களால் தேர்ந் தெடுக்கப் பெற்றுப் பணியாற்றினேன். (1938-1944) ஆகினும் இன்ற தமிழகத்தில் அந்த நிலையினை, பஞ்சாயத்து ஒன்றியங்கள் இருப்பினும் என்ன அதிகாரம் களையும் அவர்களிடம் ஒப்படைக்கப்பெறவில்லை யவையா! இத்தகை மாற்றங்கள் பற்றியும் பிற நிருவாகங்கள் பற்றி யும் பின்னொன்றிடை ஒரு பணி நேரம் கலவிலிட்டு 6 பணி அளவில் வீடு திருப்பினோம்.

இந்தாட்டின் பற்றியும் சிறு நினைக்கத் தோன்று தொடர் வார் வேண்டுமானாலும் எதற்கு வேண்டுமானா லும் வழக்குத் தொடுக்கலாம். ஒரு பெண் தலைவரே பெ விடுப்பத்காக வழக்கள் (நிறுவனம்) தொன்றியபோது, பல நாள்களுக்கு முன் ஒரு முடிவெட்டகத்தில் (Saloon) வெட்டிக்கொண்டமையே காரணம் என அதன் வேர்

YELU NADUKALIL YELUPATHU NAATKAL.max - PageView
File Edit View Page Annotation Tools Help
YELU NADUKALIL YELUPATHU NAATKAL.max (PaperPort Document) White point: Black point 1356 x 2204 300 DPI, black & white 212 of 478 64%
4:13 PM 11/5/2012

பெரும் குலைகளை ஈனுகின்றது. நான் தங்கிய வீட்டிலேயே பெருமரங்கள் வளர்ந்து குலை தள்ளியுள்ளமை கண்டேன். நம் நாட்டினைப் போலவே, காய், பூ, பழம், தண்டு, நார் இலைகளைப் பயன்படுத்துகின்றனர். இங்கே ஓரளவு குளிர் இருப்பினும் மலரும் மலர்கள் மணம் வீசுகின்றன. கரப்பான், எட்டுக்கால் பூச்சி போன்றவையும் காக்கையும் நம் நாட்டுப் பறவைகளும் காணப்பெறுகின்றன. கடற்கரையில் வேறு பெயரில் மீன்களைப் பிடிக்கும் பறவைகள் இருப்பினும் அவை நம் நாட்டுக் கருடனை ஒத்திருக்கின்றன. இத்தகைய இயற்கை நிலையொடு மக்கள் செயற்கை அமைப்பும் பல வகையில் ஒத்துள்ளன. வீடுகள் நம் நாட்டுக் கூரை வேய்ந்த - ஓடுகள் அடுக்கிய வகையில் அமைந்துள்ளன. சாலைகளில் திருப்பங்கள் உள்ளன. கட்டுப்பாடுகள் அவ்வளவாக இல்லை. கார்களைத் திருப்ப நம் நாட்டினைப்போன்று பலவிடங்களில் வசதிகள் செய்துள்ளனர். இந்த ஊரில் ஓடுகின்ற 'ஏஞ்சிலஸ்' என்ற ஆற்றில் நம் பாலாற்றைப் போன்று மணல்தான் ஓடுகிறது. இந்த நாட்டில் எந்த இடத்திலும் கடந்த ஐம்பது நாட்களில் எங்கும் இதுபோன்ற மணல் ஆற்றினைக் காணவே இல்லை. எங்கும் வெள்ளப் பெருக்கினைக் கண்ட எனக்கு இது வியப்பை அளித்தது. சுற்றிலும், குன்றுகள் பலப்பல பழ மரங்கள். சோளம் பயிரிடு பண்ணைகள். 'சப்போட்டா' போன்ற பலவகைப் பழமரங்கள், இவை அனைத்தும் நான் நம் நாட்டுக்கே வந்து விட்டேன் என்ற ஓர் உணர்வைத் தந்தன. ஆம்! இடையில் இன்னும் 15 நாட்கள்தானே. மேலும் இப்பெரு நிலப்பரப்பில் இன்றுதான் நான் இருக்கிறேன். நாளை இந்நாட்டு ஆட்சியோடு ஒன்றியதாயினும், அத்தீவு - உறாவாய் நிலப்பகுதி இங்கிருந்து 2000கல்லுக்கு மேலும் அப்பால் ஜப்பான் செல்லும் வழியில் நடுப்பகுதியில் உள்ளது. எனவே இந்த நாளில் இந்த நிலமென்னும் நல்லாள் தன் முழுப் முழுப் பொலிவையும் பூரிப்பையும் இயற்கை நலத்தையும் காட்டி, என்னை வாழ்த்தி வழியனுப்பினாள் என்று கூறுதல் பொருத்தமாகும்.

காலை மணி ஒன்பதுக்கே நாங்கள் புறப்பட்டு 'ஆலிவுட்' அடைந்தோம். நேற்றைப் போலவே காலை யாதலால் அதிகக் கூட்டம் இல்லை. எனவே நுழைவுச் சீட்டினை எடுத்து அனைவரும் உள்ளே சென்றோம். உலக மக்களைப் படக் காட்சிகள் மூலம் மகிழ்விக்கும் ஒரு பெரு நகரில் புகுந்தோம். அங்கே சுற்றிக் காட்டும் இரெயில் ஒன்று பல இடங்களுக்கு அழைத்துச் சென்று, படங்கள் எவ்வாறு எடுக்கப் பெறுகின்றன; இயற்கைக் காட்சிகளும் செயற்கைக் காட்சிகளும், பெரும் போர்களும் சண்டைகளும் பிறவும் எப்படி நடக்கின்றன என்பவற்றை யெல்லாம் விளக்கிக் காட்டுகின்றனர். அவற்றுடன் தனியாக நான்கைந்து இடங்களில் வேறு சில விலங்கொடு பழகும் காட்சிகள், தற்காலப் போர்க் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகள் போன்றவற்றையும் காட்டுகின்றனர். எங்களுக்கு இரெயிலில் செல்ல 11.30க்கு நேரம் குறித்திருந்தபடியால், அதற்குள் உள்ளே சில இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். எங்கேயும் உள்ளமை போன்று இங்கேயும் பெருங்கடைகளும் உணவகங்களும் எண்ணற்றுக் காட்சி தந்தன. அவற்றுள்ளும் மக்கள் கூட்டம் குறையவில்லை.

படங்களில் காட்டும் எத்தனையோ பிரமிப்பூட்டும் காட்சிகள் இங்கே கண்முன்னே காட்டப் பெறுகின்றன. அவை எவ்வளவு எளிதாக, சாதாரண முறையில் அமைக்கப் பெற்று, பின் வியக்கும்வண்ணம் காட்சிகளாக மாற்றப் பெறுகின்றன என்பதை விளக்கினர். முதலில் பறவைகள், விலங்குகள் (நாய், பூனை, குரங்கு, கரடி முதலியன) எவ்வாறு எளிமையாகப் பழக்கப் பெறுகின்றன என்பதைத் தனியாக ஒரு காட்சிக் சாலையில் காட்டினர். அவற்றைக் காண்பதற்கென—மேலே சீலைகள் இட்ட, அகன்ற, உள்அடுக்குப் பலகைகள் அமைந்த பெரு அரங்கங்கள் அமைக்கப் பெற்றிருந்தன. விலங்குகள், பறவைகள் காட்டும் வினோதக் காட்சிகளைக் கண்ட நாங்கள் அடுத்து, தனி மனிதர் துப்பாக்கி ஏந்தி எவ்வெவ்வகையில் போரிடு

கின்றனர் என்ற காட்சியினைக் கண்டோம். அஞ்சத்தக்க போர்க் காட்சிகள்—தனிமனிதத் தாக்குதல்கள்—குத்துச் சண்டைகள்—புரட்டி எடுக்கும் போர்கள்—இரத்தம் பீரிட்டு வருமாறு காணும் காட்சிகள்—சாட்டை அடிகள் இவை எவ்வளவு எளியதாக, யாருக்கும் ஊறு நேராவகையில் எடுக்கப் பெறுகின்றன என்பதைக் கண்டு வியந்தோம். இவற்றைக் கண்டு கலங்கிக் கண்ணீர் விடும் நம் நாட்டு மக்கள் இவற்றைக் கண்டால் 'இவ்வளவுதானா' என எண்ணி மகிழ்வர்; அக்காட்சி முடிவும் இரெயிலில் செல்ல எங்களுக்குக் குறித்த நேரம் (11.30) வரவும் நாங்கள் அந்தச் சுற்றும் இரெயிலில் ஏறி அமர்ந்தோம்.

420 ஏக்கர் நிலப்பரப்பில் - மலைகளின் சரிவுகளிலும் உயரத்திலும் தாழ்வரையிலும் அமைந்த அந்த 'யூனிவர்சல் ஸ்டுடியோ' என்னும் ஆலிவுட் நகரின் பலபாகங்களுக்கு அந்த ரெயில் அழைத்துச் சென்றது. வழிகாட்டி ஒருவர் எங்கள் கூடவே (4 பெட்டிகள் - ஒவ்வொன்றில் ஐம்பது பேர்) வந்து அனைத்தையும் விளக்கிக்கொண்டே வந்தார். பலவிடங்களில் இறங்கி, உள்ளறைகளில் (Indoor shooting) அடுப்பறை உட்படப் பலப்பல வீட்டு நிகழ்ச்சிகள் எப்படி உண்மையெனுமாறு எடுக்கப் பெறுகின்றன என்பதை விளக்கிக் காட்டினர். வண்டியில் இருக்கும்போது,சாலையின் இருமருங்கிலும் உள்ள பல நூற்றுக்கணக்கான பல்வேறு வகைகளில் அமைந்த கட்டடங்கள் எவ்வெவ்வாறு எவ் வெவற்றிற்குப் பயன்படுத்துகின்றனர் என்பதை விளக்கினர். பெருமழை, மின்னல், இடி, தூறல், பெரும் காற்று வெள்ளப் பெருக்கு. வேரற்றுமரம் விழும் நிலை இவைகளையெல்லாம் கண்முன் காணுமாறு காட்டி விளக்கினார்கள். அவை மிக எளிமையாக அவ்வளவும் உண்மையே என்னுமாறு உள்ளன என்பதைக் காண வியப்பாக இருந்தது. கடலுள் பெருந் திமிங்கலங்கள், அவை கப்பலைக் கவிழ்க்கும் நிலை, அதில் மக்கள் (பொம்மைகள் - மிக உண்மையான மனிதத் தோற்றத்தில்) மூழ்கும் நிலை காட்டி, அப்பெரு மீன்கள்

திடீரெனத் தோன்றி அச்சமூட்டும் நிலை இவற்றையும் ஒருபுறம் காட்டினர். எங்கள் இரெயில் பக்கத்தில் ஒரு பெருஞ் சுரு தோன்றிய நிலை, சிறு குழந்தைகளுக்கு நடுக்கத்தை உண்டாக்கியது.

பூகம்பங்கள், நிலச்சரிவுகள், பிளவுகள், வீழ்ச்சி, அதிர்ச்சி, வழிகள் தூர்த்தல், வீழ்தல் போன்றவற்றை எங்கள் அனுபவமாகவே வண்டியில் இருந்தே காணும்படி செய்தது சிறந்ததாக இருந்தது. பாலம் ஓடியும் - உலகம் சுழலும் - பல உறுமும் ஒலிகள் அச்சுறுத்தும்-பேரிருள் புகும் - பெரும் வெள்ளம் புரளும் - தலைகீழாக வண்டி உருளும் - எல்லாம் பகல்கனவாகவே - நாங்கள் அசையாமல் அந்த வண்டிகளில் இருக்க. அவையும் துளியும் நகராமல் - அப்படி நகருவது போலும் நெளிவது போலும் தோன்றச் செய்தனர். ஓரிடத்தில் சிறு கால்வாய் சுமார் 40' அடி இருக்கும். தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது. அதைக் கடக்க வேண்டும். எப்படி என அச்சமாக இருந்தது. இரு பக்கமும் தரையிலிருந்து சுவர் எழும்பிற்று; தண்ணீர் இருபுறம் அளவிலேயே நின்றது. மேலே சிறு கசிவு; வழி நன்கு இருந்தது - நாங்கள் அச் செங்கடலைக் கடந்தோம். என்ன விழிக்கிறீர்களா? அங்கே ஏது செங்கடல் என்று தானே? ஆம்! அவ்வாறுதான் பத்து கட்டளைகளில் (Ten Commandments) இயேசு பெருமான் செங்கடலைக் கடந்தார் - நாங்களும் கடந்தோம். எனவே நாங்கள் அனைவரும் இயேசுவே ஆனோம். 'இருநிற முந்நீர் வளைய உலகத்து, ஒரு நீயாகத் தோன்ற விழுமிய, பெறலரும் பரிசில் நல்குமதி' என்று நக்கீரர் திருமுருகாற்றுபடையில் முருகனை நோக்கி வேண்டிய அடிகள் நினைவுக்கு வந்தன. ஆம்! நாங்கள் அவரே ஆனோம். உலகம் மக்களையே பெருவியப்பிற்கு உள்ளாக்கிய அந்தக் காட்சி, இப்படி மிக எளிமையாக இங்கே எடுக்கப்பெற்றது என அந்த வழிகாட்டி விளக்கியபோது 'அப்படியா' என அனைவரும் வியந்தனர். இவ்வாறு இன்னும் எத்தனையோ வகையான காட்சிகளைக் காட்டிய அந்த இரெயில்-தண்டவாளம் இன்றித் தரையில்

ஓடியது; நாங்கள் புறப்பட்ட இடத்திற்கே கொண்டுவந்து சேர்ந்தது. மணி பிற்பகல் 2-30 உடன் உருகிருந்த மற்றொரு காட்சியினைக் கண்டோம். அங்கே பெரும் பீரங்கி, துப்பாக்கி, டாங்கி போன்றவற்றைக் கொண்டு நடத்தப்பெறும் பெரும் போர்களைக் காட்டினர். அஞ்சத் தக்கதாக இருந்தது. பல கோர்வை வெடிகள், கொளுத்தும் காட்சிகள் - இடியும் மனைகள் - இப்படி எத்தனை எத்தனையோ! மணி 3. 'இந்த உலகமே நாடகம்' என்று நல்ல அடியவர் பாடிய அடிகள் நினைவுக்கு வர, 'நாடகமே உலகம்' என்று தமிழ்ப்பட உலகில் பாடிய பாட்டும் நினைவுக்குவர, இவை 'எல்லாம் வெளிமயக்கே' என்று, நகரின் எல்லைக்கு வெளிவந்து வீட்டிற்குப் புறப்பட்டோம்.

வீட்டில் சிறிது இனிய பானம் பருகினோம். 'காரி' லேயே நாங்கள் கொண்டு சென்றிருந்த சிற்றுண்டிகளை உண்டோம். எனவே வீட்டில் சிறிது பானம் பருகி, இரு. பத்மநாபன் குடும்பத்துடன் உலகிலே உயர்ந்த, நீண்ட கடற்கரையினைக் காணப்புறப்பட்டேன். 15 கல் தாண்டி அக்கடற்கரை இருந்தது. நான் முன் கூறியபடி வழியிடை நம் நாட்டு மரங்கள் - பழச்செடிகள் - ஆரஞ்சு, மா முதலிய மரங்கள் கண்டேன்; கடற்கரையில் நிரம்பப் பனையும் ஈந்தும் இருந்தன. ஓரத்தில் வண்டியை நிறுத்தி, கடல் அருகில் சென்றோம். மிகப்பரந்த ஆழமான பசிபிக் கடற்கரையில் - சென்னையில் இருப்பது போன்ற நினைவு வந்தது. அகன்ற மணல்வெளி - ஆனால் அசுத்தப்படுத்து பவர் - 'மல்ஜலம்' கழிப்பவர் இல்லை. கட்டுமரங்கள் வரிசையாக நிறுத்தப் பெறுநிலை இல்லை. எங்கும் விரித்த வலை இல்லை. விற்பனையாக் வடையும் முறுக்கும் சுண்டலும் இல்லை. தூய்மையாக இருந்தது. பலர் கடலில் நீந்தி, குளித்து, விளையாடினர். 500 அடிக்கு ஓரிடத்தில் ஒரு மரப்பொதும்பர் இருக்க - அங்கிருந்து காவலர் ஒருவர் கடல் நோக்கியும் தரையைச் சுற்றிக் கண்டும் காவல் புரிகின்றார். கடலில் யாரேனும் தவறி வீழின் தூக்கி வரவும், தரையில் திருட்டு முதலியன நடந்தால் கண்டு

பிடிக்கவும் வைத்த கண் வாங்காது நின்றிருக்கின்றனர். மிகச் சிறந்ததாக, உலகத்தில் இரண்டாவதான - முதலாவ தான இதற்கு அடுத்த சென்னைக் கடற்கரை எப்படி நிலைகெட்டிருக்கிறது என்பதை நினைக்க எனக்கு மிக்க வருத்தமே உண்டாயிற்று. நான் என்ன செய்யமுடியும்? சுமார் 60 ஆண்டுகளாக அமைதியாக அதைக் கண்டு வருபவன் நான். இக் கடற்கரையில் ஒருமணி நேரத்துக்கு மேலே உட்கார்ந்திருந்தோம். இந் நாட்டு மக்களுள் பலர் இங்கே அதற்கென அமைந்த இடத்தில், அடுப்பிட்டு உணவாக்கி உண்டு, இடத்தைத் துப்புரவு செய்து செல்லு கின்றன. ஆழ்கடலில் அமிழ்ந்து எழுகின்றனர். ஆம்! ஆனந்தக் கடலிலும்தான். அவர்கள் பொழுதுபோக்கு அந்த கடலுக்குப் பொலிவைத் தருகிறது. இளஞ்சிறுவர்கள் நம் நாட்டைப் போன்றே காற்றாடி விடுகின்றனர். காற்றும் கடலும் நிலமும் உணவைச் சமைக்கும் நெருப்பும் அவற்றின் மேலாகிய விண்ணும் ஆகிய ஐம்பூத அமைப் பினைக் கண்டு 'நிலம் நீர் தீ வளி விசும்பு' என நின்ற இறைவனை வணங்கி அங்கிருந்து புறப்பட்டேன்.

வரும் வழியில் - கடற்கரை ஓரமே இரண்டு கல் சென்றோம். பல இயந்திரங்கள் இயங்கிக்கொண்டிருந்தன. ஆழ்கடலில் கப்பல் போன்ற ஒன்று காட்சி அளித்தது. அக் காட்சி கப்பல் அன்று எனவும் ஆழ்கடலில் எண்ணெய் எடுக்கும் இடத்தில் உள்ள இயந்திரம் என்றும் கரையில் உள்ள ஆயிரக்கணக்கானகுழாய்க் கிணறுகள் வழி,பொறிகள் அந்த எண்ணெயை எடுக்க அமைக்கப்பெற்றவை என்றும் கூறினர். இந் நாட்டில் இப் பகுதியில் தரைக்கடியிலும், ஆழ்கடலிலும் எண்ணெய் இருப்பதாகவும், அதை எடுத்துச் சேர்த்து, தூய்மைப்படுத்தி, பயன்படுத்துவதாகவும், அதன் அளவு விரிவடைய விரிவடைய உலகச் சந்தையில் எண்ணெய் (Petrolium) விலை குறையத் தொடங்கியுள்ள தெனவும் கூறினர். நான் சென்ற இடத்திலெல்லாம் இந்த இயந்திரப்பணி கடலை ஒட்டி நடந்துக்கொண்டே இருந்தது. அத் தானியங்கிகள் தம் பணியினை இடை

விடாது செய்து, நாட்டுக்கு நலம் தருகின்றன. இவை அனைத்தும் தனியார் முறையில் திறம்பட இயங்குகின்ற காரணமே நாட்டின் செல்வ வளத்துக்கும் உலகத்தையே கட்டியாளும் பொருளாதார நிலைக்கும் காரணம் என்கின்றனர்.

இத்தகைய அரும் காட்சிகளையெல்லாம் கண்டு, 8-30 மணி அளவில் வீடு திரும்பினோம். என்னை விரும்பி வீட்டுக்கு அழைத்த திரு. சவுரிநாதன் அவர்களுடன். நேற்றே சொன்னபடி, இன்று இருமுறை தொலைபேசியில் தொடர்பு கொள்ள முயன்றோம். அவர் தம்முடைய கடை, வீடு இரண்டிடங்களிலும் உள்ள தொலைபேசியில் பதிலே இல்லை. இன்று இங்கே பெரும்பாலும் ஞாயிறுதோறும். பல இடங்களில் கருநாடக இசையரங்குகள் நடைபெறும் என்றும் தமிழ் மக்கள் அனைவரும் செல்வார்களென்றும் ஒரு வேளை அவர்களும் சென்றிருப்பார்களென்றும் கூறினர். நாளை காலை மறுபடி முயலலாம் என நின்றோம். திரு. பத்மநாபன், நாராயணன் ஆகியோர் பல தமிழ் நாடகங்களில் இங்கே நடித்துள்ளனராம்.

பின் 'ஹாவாய்' தீவிற்குத் தொலைபேசி வழி எப்படி அங்கு நாளை வந்து சேர்வது என்ற நிலை அறிந்து, அதற் கேற்ப, இங்கிருந்து ஊர்திக்குப் பயண உறுதி செய்து கொண்டோம். பரந்த பாரதத்தை விட்டு, அகன்ற அமெரிக்க நாடுவந்து கடந்த 42 நாள்கள் தங்கிய நான் நாளை இந்தப் பெருமண்ணை விட்டுப் புறப்பட வேண்டும், 'ஹாவாயும்' இந்த நாட்டொடு ஆட்சி முறையில், இணைந்த தாயினும் (50வது மாநிலம்) 2200 கல் அப்பால் ஒரு தீவுத் தொகுதியாக அது உள்ளது. அண்மையில் - இரண்டாம் போருக்குப் பின்தான் இதனோடு இணைந்தது என்றனர். எனவே என்னை ஏற்றி இத்தனை நாள் தன்னை விளக்கி, தன் நிலைகாட்டியதோடு, எனக்கு இடமளித்து பரிந்து உதவிய மண்ணுக்கும் தமிழ் அன்பர்களுக்கும் பிறருக்கும் தலை தாழ்ந்த வணக்கம் செலுத்தி, வணங்கி இறைவனைப் போற்றி இரவு 11 மணிக்கு உறங்கச் சென்றேன்.

சைவசித்தாந்த மடம்-ஹாவாய் 27.5-85

இன்று சற்று விடியலில் எழுந்து, காலைக்கடன்களை முடித்துக்கொண்டு நேற்றைய குறிப்பினை எழுதிமுடித்தேன். பயணத்துக் குரிய ஏற்பாடுகளையும் செய்து 8-45 அளவில் புறப்படத் தயாரானேன். இரவு ஹாவாயிலிருந்து இன்றைய குறிப்புகளை எழுதுவேன். மறுமுறையும் இப்பெருநிலம் 'வாழ்க' என வாழ்த்தினேன். காலை 7-30க்குச் சிற்றுண்டி செய்து தந்து திருமதி. உஷா அம்மையார் அவர்கள் விழியனுப்பி வைத்தார்கள்; குழந்தைகளும் கூடத்தான். திரு. பத்மநாபன் அவர்கள் தம் தம் காரிலேயே அழைத்து வந்து விமான நிலையம் செல்லும் 'பஸ்'சில் அனுப்பி அன்புடன் உபரித்தார். விமானம் 11-20.க்குத்தான். நான் 9.க்குள் வந்துவிட்டேன். அங்கே பம்பாய் தமிழ்ச் சங்கத்தில் இருந்த சவுரிநாதன் அவர்கள் குடும்பத்துடன் வந்திருந்து விழியனுப்புவதாகக் கூறினர். அப்படியே 10.30 அளவில் அவரும் அவர் தம் துணைவியாரும் இனிப்பு, காப்பி முதலிய வற்றுடன் வந்து அவற்றை எனக்குத் தந்ததோடு, எங்கள் பள்ளிக்கும் 100 டாலர் (ரூ. 1200/-) அன்புடன் தந்தனர். அமெரிக்க நாட்டில் தமிழ் மக்கள் தம் மொழியினையும் சமயத்தையும் மறந்து எங்கோ செல்லும் நிலை எண்ணி இருவரும் வருந்தினர். (திரு. பத்மநாபன் அவர்களும் அதே கருத்தினை இரண்டு நாட்களும் வற்புறுத்தி, இதற்கு ஏதேனும் மாற்று மருந்து கண்டு பிடியுங்கள் என்று சொன்னார்.) இவ்வாறு ஒரு சிலர் நம் பண்பாடும் மொழியும் பிறவும் நலிவுறுவதைக் கண்டு வருந்துகின்றனர். ஆனால்

நம்மவர் பெரும்பாலோர் தம் மக்களை இந்நாட்டு நாகரிகத்தில் மூழ்க் வைக்கின்றனர். பின் வகை கெட்டபின்பு சிலர் வருந்தவும் செய்கின்றனர். திரு. சவுரிநாதன் அவர்கள் சிறந்த வகையில் தமிழும் சைவமும் வளர வேண்டும் என்ற உள்ளத்தில் தொண்டு செய்கின்றவர். எனவே இந்தப் போக்கினைக் கண்டு வருந்துகின்றனர். அவர்தம் துணைவியாரும் அவ்வாறே ஆழ்ந்த வருத்தத்தினைத் தெரிவித்தார். நாட்டிற்குச் சென்று ஏதேனும் நல்ல வழி காணுமாறு வேண்டினர். இத்தகைய உள்ளம் வாய்ந்தவர் பத்துக்கு ஒருவர் இருந்தாலும்கூட, எவ்வளவோ உயர் நிலையில் நம் மொழியும் சமயமும் வாழ்வும் அமையுமே என எண்ணினேன். செல்வவளம் மட்டும் வாழ்வு என்று நம்மவர் சிலர் நினைந்து இங்கேவந்த போதிலும் - அப்படியே பெருஞ் செல்வம் பெற்ற போதிலும் அவர்கள் மனதில் அமைதியில்லை என்பதை மட்டும் நான் கண்டேன். இதற்கெல்லாம் இந்திய அரசு வழித்துறை கண்டு, நம்மவர், அவரவர் மனப்படி இந் நாட்டில் உள்ள தனியார் உரிமை அனைத்திலும் உள்ளபடி செயலாற்றும் வகையில் ஏற்பாடு செய்யின் இங்கே பெறும் செல்வத்தை அங்கேயே பெற்று மனநிறைவும் பெறுவர். நாடும் பொருளாதாரத்தில் முன்னேறும்.

திரு. சவுரிநாதன் தம்பதிகள் பலப்பல பேச விரும்பினர். எனினும் நேரம் கிட்டியதால் 11-20க்கு இருவரிடமும் விடை பெற்று விமானத்தில் ஏறினேன். சுமார் ஆறு மணி நேரம் (2200கல்) விமானத்தில் கடந்து செல்லவேண்டும். விமானத்தில் சைவ உணவு இன்றேனும் கேட்டபோது பழம் முதலியன தந்தனர். பொழுதுபோக்க நல்ல திரைப்படம் காட்டினர்; என்மனநிறைவு தரும் வகையில் அது அமைந்தது. இந்தப் பெரு நிலத்துக்கும் ஹாவாய் தீவிற்கும் 3மணி நேரம் வேறுபாடு. அந்த மணிப்படி பிற்பகல் 1-45க்குத் தரையில் காலை வைத்தேன். பின் அங்கிருந்து சைவ சித்தாந்த மடம் இருக்கும் ஹாவாய் தீவிற்கு வேறு விமானத்தில் செல்ல வேண்டும். அந்த விமானம் 3-25க்கு என்று சொன்னார்கள்.

ஆனால் 4-15க்குத்தான் புறப்பட்டது. நான் அதற்கெனத் தனி டிக்கெட் எடுத்து, அதன் வழியே 'ஹாவாய்' தீவினை அடைந்தேன். சிறு விமான நிலையம். எனவே தொல்லை இல்லை. மடத்தில் இருந்து துறவியர் ஒருவர் கார் எடுத்து வந்திருந்தார். கழுத்தில் நீண்ட உருத்திராட்ச மாலையும் நெற்றியில் திருநீற்றுப் பொலிவும் விளங்கின. சுமார் 20கல் தொலைவிலுள்ள மடத்துக்குச் சென்றோம். அங்கே மதுரை கருமுத்து சுந்தரம் செட்டியார் மகன் சொக்கலிங்கம் தம் இரு பிள்ளைகளுடன் வந்திருந்தார். அவர்தம் பிள்ளை களை அமெரிக்காவில் படிக்க விடுவதற்காக வந்துள்ளார். நான் மதுரை தியாகராயர் கல்லூரியில் ஓராண்டு பணி யாற்றியபோது அங்கே படித்து, பின் இந்நாட்டில் கல்வி பயின்றனர். அவர் இந்த மடத்தில் ஈடுபாடு கொண்டவர். தொலைபேசியில் நேற்று, தமிழ் நாட்டிலிருந்து சொக்க லிங்கம் என்பவர் வந்துள்ளார் என்று கூறியபோது, நான் யாரோ என எண்ணினேன். வந்தபின் என் உற்றவராகவும் மாணவராகவும் இருந்தார். அவரோடும் வந்த துறவியா ரோடும் தோட்டங்களைச் சுற்றிப் பார்க்கச் சென்றோம். ஒரு பக்கத்தில் உருத்திராக்க மரங்கள் உயர்ந்திருந்தன. அவற்றின் பழங்கள் தரையில் சிதறிக் கிடந்தன. ஆயினும் இங்குள்ள துறவியர் இது பற்றி அதிகம் கவனம் செலுத்த வில்லை. நாங்கள் அவற்றைச் சேகரித்து, தூய்மைப்படுத்தி காசி, தமிழ்நாடு ஆகிய இடங்களுக்கு அனுப்பினால் மிக்க நன்மையாகும் என்றோம். அவர்கள் எப்படித் தூய்மை செய்வது என்பதும் தெரியவில்லை. நான் விளக்கிச் சொன் னேன். உருத்திராக்க மணியில் ஒரு முகம் முதல் 16 அல்லது 18 முகம் வரையில் இருக்கும். நானும் சிலவற்றை ஊருக்குக் கொண்டு வருவதற்காக எடுத்து வைத்துக் கொண்டேன்.

பின், அங்கே சுயம்பு இலிங்கமாகத் தோன்றிய இடத் தில் பூசை நடக்குமென்றும் (மாலை 6 மணி) அங்கே செல்ல வேண்டும் என்றும் கூறினர். நானும் சென்றேன். அங்கே துறவியார் ஒருவர் மலர் கொய்து, அபிடேகம் முதலியன

செய்து வழிபாடாற்றினார். பின் அனைவரும் மடத்துக்குத் திரும்பி வந்தோம். 7-30க்கு உணவுக்கு அழைத்தனர். அட்டிற் சாலையின் பக்கத்தில்தான் நடராசர் திருக் கோயில் இருக்கிறது. எனவே நான் அங்கே சென்றபோது, நடராசருக்கு தனி ஆராதனை செய்து, திருநீறு, சந்தனம், குங்குமம் தந்தனர். இவை அனைத்தும் நல்ல முறையில் செய்யப் பெற்றன அல்ல; கடையில் விலை கொடுத்து வாங்கியவைதான். வெறும் வண்ணம் கலந்த கோதுமை அல்லது மைதா மாவே குங்குமம். சந்தனம் முறையான நிறமும் மணமும் பெறவில்லை. திருநீறும் அப்படியே. நானும் சொக்கலிங்கமும் அவை முறையாக எவ்வாறு அமைய வேண்டும் எனக் கூறினோம். யாரையோ சென்னையில் நம்பி இவர்கள் சொல்ல, அவர்கள் எதையோ வாங்கி அனுப்புகிறார்களாம். உண்மையில் சமயம் இப்படியும் வளருமா என எண்ணிக் கவன்றேன். மஞ்சளிலிருந்து எப்படிக் குங்குமம் எடுக்க வேண்டும், திருநீறு எவ்வாறு எடுக்க வேண்டும் என்வும் சந்தனம் அரைக்க வேண்டியுள்ளதையும் விளக்கிக் கூறினேன். ஆயினும் அவற்றை முறையாகச் செய்து தர வேண்டுமே எனக் கவன்றேன். எல்லாவற்றி லும் கலப்பு செய்யும் நம் நாகரிகம் இதையும் கலக்கின்றது. இப்படியும் சமயம் வளர்கின்றது. ஆயினும் இவற்றை இவர் களிடம் சொல்ல விரும்பவில்லை. உண்மையில் சமயம் வளரப் பாடுபடும் இவர்கள் நல்ல மனம் துன்பப்படக்கூடாது அல்லவா!

பின் சைவ உணவு படைத்தனர். அது ஆங்கில முறையில் அமைந்தது. எனவே நான் உண்ணவில்லை. எனினும் இங்கே தயார் செய்யும் நல்ல தேனும் பாலும் எனக்கு உணவாயின. இங்கே நல்ல தேன் எடுக்கிறார்கள். சொந்தப் பண்ணை யில் மாடுகள் வளர்த்து, பாலும் நெய்யும் வெண்ணையும் தயிரும் தயாரித்துத் தருகிறார்கள். துறவியரே எல்லாப் பணிகளையும் செய்கின்றனர். உணவுக்குப் பின் ஆறுமுகச் சுவாமி என்கிற துறவியார் என்னுடன் உரையாடிக் கொண்

டிருந்தார். நான் அவர்கள் சமயத்தை வெளியில் பரப்புமுன் இந்த நாட்டில் வாழும் தமிழ்ச் சமுதாயத்திடம் பரப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். நான் மேலே காட்டியபடி நம் தமிழரில் சிலர், அங்குமட்டுமன்றி இங்கும் 'தாய்க்கொலை சால்புடைத்து என்பாரும் உண்டு' என்ற முது மொழியைப் பின் பற்றுகிறவர்களாதலின் அவர்களைத் திருத்த வேண்டும் என்றேன். அவரும் ஓரளவு இங்குள்ள தமிழர் பற்றி அறிந்தவராதபின், என் கருத்தை ஏற்றுக் கொண்டார். எனினும் என்ன செய்வார்கள் என்பது தெரியாது. பின் 9மணிக்கு நடராசருக்கு தீபாராதனை நடைபெற்றது. நம் ஊர் ஐயர்தான். 3மணிக்கு ஒருமுறை 24 மணிநேரமும் நடைபெறுகிறது) கூத்தப் பெருமானையும் இருபுறமும் உள்ள அவர்தம், மக்களையும் வணங்கி, 9.30க் கெல்லாம் துயிலச் சென்றேன்.

சைவ சித்தாந்த மடம்-ஹாவாய் 28-5-85

காலையில் துயிலெழுந்தவுடன் கடன்களை முடித்துக் கொண்டு குறிப்பு எழுதி முடித்தேன். பூசை செய்யும் ஐயர் தந்த காலைச் சிற்றுண்டி கொண்டேன். இன்னும் இங்குள்ள மடத்துத் தலைவரைக் காணவில்லை; இன்று பத்துமணிக்குக் காணலாம் என்றனர். காலைச் சிற்றுண்டி தனியாகச் செய்து தந்தனர்; உண்டோம்; பின் இங்கே கோயில்பூசை செய்யும் திரு. குமாரசாமி குருக்கள் என்பவரிடம் சிறிதுநேரம் உரையாடிக் கொண்டிருந்தேன். இங்கே கும்பாபிஷேகம் செய்வதற்காக அவர் அழைத்து வரப்பெற்ற விதத்தினையும் இங்கே உள்ளவர் கொள்கைக்கும் தம் கொள்கைக்கும் உள்ள முரண்பாடு பற்றியும் விளக்கி உரைத்தார். நடராசன் சிவலிங்கம், விநாயகர், முருகன், அர்த்தநாரீஸ்வரர் ஆகியோரை இங்கே மூர்த்திகளாக வழிபட்ட போதிலும் இவர்கள் கொள்கையில் வேதாந்தவாடை விசுவதறிந்தேன். திருக்கோயில் அழகாக உள்ளது. முன்னே பெரிய நந்தியும் கொடி மரமும் உள்ளன. அழகிய விநாயகர், முருகன், சிவலிங்கமும், நடராசன் உமாமகேச்சுவரர் விக்கிரகங்களும் உள்ளே உள்ளன. மற்றொரு பக்க வாயிலில் திருவள்ளுவர், திருமூலர் உருவங்கள் உள்ளன. இந்த இடம் ஒரு குன்றின் மேல் உள்ளது. அங்கிருந்து எதிர் நோக்கின் அழகிய பள்ளத்தாக்கும் அதில் சலசலத்து ஓடும் கானாறும் எங்கும் பசுமை நிறைந்த சோலைகளும் தூரத்தே கரும்பு, சோளம், பயிராகும் பசும் வயல்களும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தா யமைந்தன. இங்கே பக்கத்திலேயே தோகை

விரித்தாடும் ஆண் மயிலும் சில பெண் மயில்களும் களி நடம் புரிந்தன. இந்தச் சூழல் உண்மையில் உடலுக்கு ஓய்வும் உரமும் தந்ததோடு உளத்துக்கு உணர்வும் அமைதியும் ஊட்டிற்று. இவற்றில் தோய்ந்து நின்ற என்னைக் குருதேவர் (சுவாமி சுப்பிரமணியா) காண அழைக்கிறார் என்றனர். அவரிடம் சென்று நான் வந்த வகையினையும், நான் சென்னையில் ஆற்றிவரும் பல்வேறு பணிகள் பற்றியும் இங்கே கண்ட பல்கலைக் கழகங்கள் பற்றியும் கூறினேன். சென்னையில் பள்ளியிலே சமயப் பாடம் உண்டா என்றனர். பள்ளிக்குள் கோயிலும் வார வழிபாடும் இசையோடு பாடல் பயிற்றும் முறையும் உண்டு எனச் சொன்னேன். அரை மணிநேரம் அவர்களுடன் பேசிக் கொண்டிருந்து வெளி வந்தேன். அங்குள்ள துறவியர் தனியாக உட்கார்ந்து சில பொருள்களைப் பற்றிப் பேச விரும்பினர். இங்கே சிலரே உள்ளமையின் வேறு சொற்பொழிவுகளோ பிறவோ வேண்டாமெனவும் கூடியோ தனித்தனியோ சமயம் பற்றிப் பேசலாம் எனவும் முடிவு கொண்டேன். சமயம் பற்றிய— கோயில், தேவாரம் பற்றிய என் நூல்களைப் பயின்றதாகவும் அவற்றால் பல உண்மைகள் உணர்ந்ததாகவும் அவர்கள் கூறினர்.

12 மணி அளவில் திரு. சொக்கலிங்கம் அவர்கள் பிள்ளைகளுடன் 15 கல் அப்பாலுள்ள நகர் சென்று வரலாம் என்றார். நானும் புறப்பட்டேன். அங்கே உள்ள பெரிய கடைக்குள் நுழைந்தோம். இது மிகச்சிறிய ஊர். சாலைகள் எங்கும் போல அழகாக உள்ளன. இச் சிறு தீவைச் சுற்றிலும் இத்தகைய சாலைகள் உள்ளன என்றும் மக்களும் இந்த ஓரங்களில்தான் வாழ்கிறார்கள் என்றும் தீவு நடுவில் மலைகளும் காடுகளும் உள்ளன என்றும் கூறினர். செல்லு மிடமெல்லாம் பெரிய பெரிய தென்னஞ் சோலைகளும் வாழைச் சோலைகளும் கரும்பு, சோளம், செரி பழங்கள் விளையும் பெரும் வயல் வெளிகளும் நிறைந்திருந்தன. ஆங்காங்கே சிறுசிறு நீர் வீழ்ச்சிகளும் இருந்தன. வீடுகள்

நம் நாட்டு வீடுகளைப் போன்று இருந்தன. இப்பகுதி நம் பழங்கால வளமிக்க சோலை சூழ்ந்த சோழ நாட்டை— இன்றைய வரண்ட சோழ நாட்டை அல்ல—எனக்கு நினைவூட்டின. இதை எண்ணிக் கொண்டே அந்தக் கடைக்குள் புகுந்தோம். நியூயார்க் நகரிலோ—பால்டி மோரிலோ—வாஷிங்டனிலோ அன்றி வேறு எந்தப் பெரு நகரிலோ உள்ள அத்துணைப் பெரிய அளவில்—மக்கள் தேவைக்கான எல்லாப் பொருள்களையும் விற்பனைக்கு உரியதாய் வைத்து நின்றதைக் கண்டு வியந்தேன். இப்படியே இன்னும் இரு பெரிய கடைகள் இந்தப் பகுதி யிலும் வேறு கடைகள் தீவின் வேறுபகுதிகளிலும் உள்ளதாக அறிந்தேன். அத்தனையிலும் நன்கு வியாபாரம் ஆவதாக வும் கூறினர்.

இந்தத் தீவில் பழங்குடிமக்கள் சில காலத்துக்கு முன் வாழ்ந்ததாகவும் அவர்கள் தற்போது அருகிவிட்டதாகவும் அவர்கள் வழிபட்ட ஐந்து முக்கிய இடங்கள் இன்றும் உள்ளன எனவும் அறிந்தேன். நான் முன்னரே குறிப்பிட்ட படி, இப் பழங்குடி மக்கள் பழம் பெருந்தெய்வங்கள் நம் நாட்டு காளி, மன்னர்சாமி போன்ற தெய்வங்களை நினைவூட்டுவனவாக இருந்தன. முன் சியேட்டலை அடுத்த கிராமங்களில் கண்ட மக்கள் வாழ்க்கை முறை வழிபாட்டு முறை போன்றவற்றை இங்கும் காண முடிந்தது. அது போன்றே எங்கும் பசுமையும் குன்றுகளும் கானாறுகளும் காணப் பெற்றன.

பிற்பகல் 2மணிநேர அளவில் இம்மடத்தின் முக்கிய துறவி ஒருவரோடு சமய உண்மைகள் பற்றியும் 1957ல் இந்த மடம் தோன்றிய வரலாறு பற்றியும் பேசினேன். பின் இருவருக்கும் வேறு பணி இருந்தமையின் நாளை தொடர நினைத்தோம். மாலை 6மணிக்கு வழிபாடு (முருகன்— கோயில்) முடித்து உணவு உண்டு, சீக்கிரமே படுக்கச் சென்றேன்.

சைவ சித்தாந்த மடம் ஹவாய் 29-5-85

இன்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பலருக்கு எழுத வேண்டிய கடிதங்களை எழுதி முடித்தேன். இந்த நாட்டில் அஞ்சல் துறை ஒன்றுதான் அரசாங்கத்தின் நேர்ப் பார்வையில் அமைந்துள்ளது. எனவே சரிவர உரிய நாளில் அஞ்சல்கள் பெற முடிவதில்லை. சீயேட்டலில் 6-5-85 எனக்கு அனுப்பியது சிகாகோவிற்கு 15-5-85ல் வந்ததைப் பற்றி முன்னரே குறித்தேன். ஆகவே இங்கும் நான் எதிர் பார்த்த அஞ்சல்கள் (ஊரிலிருந்தும் பிற இடங்களிலிருந்தும் இன்றுவரை வரவில்லை மாலை வரலாம் என்றனர். சிறிது ஓய்விற்குப் பிறகு பகல் 12மணிக்குக் கோயில் வழிபாட்டிற்கு வரச் சொன்னார்கள். நாள் முழுதும் கோயில் திறந்திருக்கும்; மூன்று மணிக்கு ஒருமுறை வழிபாடு நடைபெறும். மாலை 6மணி முருகர், 9மணி நடராசன், 12மணி அர்த்த நாரீச்சுவரர் விடியல் 3மணிவிநாயகர் 6மணி முருகர் 9மணி நடராசன், 12மணி அர்த்த நாரீச்சவர் மாலை 3மணி விநாகர் என்று முறையாக நான்கு மூர்த்திகளுக்கு வழிபாடு செய்கின்றனர். அனைத்தும் கோயிலில் ஒன்றை ஒன்று சார்ந்தே நிற்கின்றன. 12மணிக்கு அர்த்தநாரீச்சுவரர் பூசை ½மணிநேரம் நடைபெற்றது. பிறகு சுவாமி கதிர் அவர்கள் என்னுடன் 2மணி வரையில் இருந்து பல சமய உண்மைகளைப் பற்றி ஆராய்ந்ததோடு, தம் திருமடம் சமய வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டுகளை விளக்கினார். மொரிஷியஸ், மலேயா ஆகிய இடங்களில் இவர்கள் மேற் கொண்டுள்ள தொண்டுகளைப் பற்றியும் பலர் மீண்டும்

சைவமாம் சமயம் சாரும் நிலையினையும் விளக்கி உரைத்தனர். இவர்கள் சீடர்கள் அந்த இடங்களிலெல்லாம் இருந்து சமயம் பரப்பும் வழிகளையும் இவர்கள் சைவ சமய வகுப்பு (அஞ்சல் வழி) நடத்துவதையும் கூறி அதற்கு அனுப்பப் பெறும் பாடங்களையும் காட்டினர். நான் சைவ சமய அடிப்படைகளைத் தேவாரம், திருவாசகம் போன்றவற்றிலிருந்து எடுத்துக் காட்டி, இறைவன் ஒப்பற்ற நிலையில் உள்ளமையை விளக்கினேன். இரண்டு மணிக்கு முடிந்து உணவு கொண்டோம்.

உணவு கொண்டபோது ஆண்மயில் எங்கள் அண்டையில் வந்து நின்றது. பசி போலும், நாங்கள் உண்டதில் கழிவு இருப்பின் உண்ண வந்தது போலும். நான் அடிகளாரிடம் சொல்லி வேறு கிண்ணத்தில் உணவு கொண்டு வரச் செய்து ஊட்டினேன். அதற்குள் பெண்மயில் ஒன்றும் வந்தது. இரண்டும் கலந்து உண்டன. ஒன்று உண்ண ஒன்று காணும்; மற்றொன்று உண்ண முன்னது காணும். இரண்டும் கலந்து உண்டும் கலத்தில் சிறிது இருந்தது. குறையவே இல்லை. எனக்குப் பழைய சங்கப் பாடல் நினைவுக்கு வந்தது. ஆண்யானையும் பெண்யானையும் ஒரு தடாகத்தில் - மிகக் குறைந்த அளவில் நீர் இருக்க - உண்ணச் சென்றன. இரண்டும் துதிக்கையை நீட்டித் தண்ணீரில் ஆழ்த்தின. இரண்டும் குடித்தன - ஆனால் நீர் குறையவில்லை - காரணம்? ஆண் குடிக்கட்டும் என்று பெண்ணும், பெண் குடிக்கட்டும் என்று ஆணும் நிற்க - தண்ணீரும் அப்படியே இருந்தது. இதைக் காட்டித் தலைவன் தலைவியர் வாழ வேண்டிய வழியினைச் சுட்டிய புலவரைப் போற்றினேன்.

இரண்டின் நிலைகண்டு பின் மறுபடியும் சோறும் கறியும் கொண்டு வந்து கலத்தில் பெய்தேன். பின் இரண்டும் விருப்புடன் உண்டு மகிழ்ந்தன. அருணகிரிநாதர் மயில் விருத்தம் வாயில் வந்தது; 'இமயகிரி குமரி மகன் ஏறு நிலக்கிரீவ ரத்தனக் கலாப மயிலே' எனப் பாடிற்று.

அவை உணவு கொள்ளும் நிலையினைக் கண்டு - அப்படியே எதிரில் முகில் தவழும் பசுமையும் வளமும் நிறைந்த குன்று களைக் கண்டு - இயற்கையை - இறைவனை - முருகனை - என்னைவிட்டு எப்போதும் பிரியாது உறையும் பிரானை நினைத்துக் கொண்டே தங்கும் அறைவந்து சேர்ந்தேன்.

மாலை நான்கு மணிக்கு மற்றொரு துறவியுடன் சமய ஆராய்ச்சி இருந்தது. மறுபடி ஏழு மணிக்கு நேற்று விட்ட முருக அடிகளுடன் ஆய்வு உண்டு. மாலை 4மணி முதல் 5-30 வரையில் அவருடன் பல பொருள்கள்பற்றி ஆராய்ந்தேன். முதலில் அவர்கள் இந்த மடத்தை நிறுவிய தன்மையினை யும் நோக்கத்தையும் வெளியிட்டதோடு, பயிற்சி வகுப்பிற் குத் தயாரித்த பாடங்களைப் பற்றியும் சொன்னார்கள். நான் அவற்றை முன்னரே கண்டமை கூறவே அவற்றை விட்டு, அடுத்த இரண்டாம் பகுதியைக் காட்டினர். அதில் இறைவனை அடையும் வழிகள் பலவற்றை விளக்கி, ஒவ்வொன்றிற்கும் பெரிய புராண நாயனார் ஒருவரை ஏதுக் காட்டி எழுதி இருந்தது. மேலும் சமயம் வாழ்வொடு பொருந்தியது எவ்வாறு என்பதும் குறிக்கப்பெற்றிருந்தது. நானும் அவை பற்றிய பல்வேறு கருத்துக்களை எடுத் துரைத்தேன்.

பின் இங்கே அமெரிக்க நாட்டுச் சைவர்கள் - சிறப் பாகத் தமிழகச் சைவர்கள் தம் சமயத்தை நழுவவிடும் கொடுமையைப் பற்றி விளக்கினர். 50 பேருக்குச் சமய உண்மைகளை விளக்கும் முதல் நூலையும் சமய நெறி பற்றிய குறிப்பினையும் அனுப்பியும் ஒருவர்கூட அதைப் பெற்றுக் கொண்டமை பற்றியும் எழுதவில்லை என்றனர். எனக்கு இந்த நிலை முன்னரே ஓரளவு தெரிந்ததாதலின், நான் பலவிடங்களில் கண்ட சமயம் - தமிழ் இவை மறந்த மக்களை எப்படியும் திருத்த முயலவேண்டும் எனக் கேட்டுக் கொண்டேன். பல ஆயிரம் தமிழ்ச் சைவர்கள் வாழும் இந் நாட்டில் இதனை எண்ணினேன். நம் நாட்டிலும் என்ன வாழ்கிறது? மடங்கள் என்ன செய்கின்றன? மற்றவர்கள்?

பின் பள்ளியில் பயிலும் இளம் உள்ளங்களில் சமய உணர்வை வளர்க்க என்ன செய்ய வேண்டும் என ஆராய்ந்தோம். சென்னையில் விஸ்வ இந்து பரிட்சத், சின்மயா சங்கம், சங்கரர் மடம் போன்றவை இத் துறையில் சில ஆண்டுகளாக மேற்கொண்டுள்ள செய்ல்களைக் கூறினேன். அவர்களும் அவர்கள் மடத்தைச் சேர்ந்த அன்பர்களும் மௌரிஷீயஸ் தீவிலும் மலேயாவிலும் சமயம் வளரச் செய்யும் தொண்டுகள் பற்றி விளக்க உரைத்தார். அவற்றுள் எவ்வெவ்வகையான மாற்றங்கள் செய்யின் பயன் விளையும் எனவும் எண்ணினோம். பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம். நான் கொண்டுவந்த சமயம் பற்றிய இரு கட்டுரைகளையும் தந்தேன்.

பின் சென்னையில் நம் வள்ளியம்மாள் பள்ளி பற்றியும் அதில் பயிலும் பிள்ளைகள் பற்றியும் சமயம் எந்த வகையில் போற்றப்படுகின்றதென்பதையும் விளக்கிக் கூறினேன். சமயம் பற்றி அவர்கள் வெளியிட்ட முதல் நூலை அவர் என்னிடம் தந்து, அதில் உள்ள பொருள்களை நன்கு ஆராய்ந்து, இறுதியில் உள்ள வினாக்களுக்கும் பிள்ளை களை விடை தரச் சொல்லலாம் என்றார். (அதனை நம் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த இராமசேஷன் என்பார் தமிழில் மொழி பெயர்த்துள்ளாராம்) நானும் பல வகையில் முயலலாம் என்று கூறினேன். நீண்ட நேர ஆய்வுக்குப்பின் இருவரும் கலந்து செய்ய வேண்டிய பணி களைப் பற்றியும் ஓரளவு ஆய்ந்து விடைபெற்று அறைக்கு வந்தேன்.

சிறிதுநேர ஓய்வுக்குப் பின் கதிர் அடிகளார் 8 மணி அளவில் கலந்து பேசலாம் என்றனர். நானும் எட்டுமணி அளவில் சென்று ஒருமணி நேரம் அவர்களுடன் அவர்தம் செயல்கள், அடிப்படைக் கொள்கைகள், சைவம் வளரச் செய்ய வேண்டிய பணிகள் பற்றிப் பேசினேன். விநாயகர் வழிபாடுபற்றிப் பேசியபோது, விநாயகர் வழிபாடு தமிழ் நாட்டில் கி. பி. 7-ம் நூற்றாண்டில் (கி. பி. 642)-ல் சிறுத்

தொண்டரால் (பல்லவன் சேனைத் தலைவர் பரஞ் சோதியார்) வாதாபியிலிருந்து கொண்டுவர, வளர்க்கப் பெற்றதென்ற வரலாற்று உண்மையினைக் கூறினேன். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டாலும், முக்கிய இடத்தை அவர்கள் விநாயகருக்குத் தந்துள்ளமையின் அவர்தம் கருத்துப்படி எங்கேனும் முளைத்து நின்ற நிலையினைக் கொள்ளலாம் என்றனர். நான் மேலும் காலத்தால் பின்பு வந்த ஒரு வழிபாடாயினும், இன்று அந்த விநாயகர் வழிபாடே வீடுதோறும், தெருவுதோறும்; ஊர்தோறும் - பிற தெய்வங்களுக்கு இல்லாத சிறப்போடு நடைபெறுகின்ற தென்பதையும் சுட்டினேன். பிறகு அவர்கள் சைவ சமயத்தவர் கொள்ளவேண்டிய - கடைபிடிக்க வேண்டிய ஒழுக்க நெறிகள் - வாழ்க்கை முறைகள் முதலியன பற்றிக் கூறினார். நானும் சமய நூல்களிலிருந்து எடுத்துக் காட்டுக்கள் தந்து விளக்கம் தந்தேன். பிறகு அவர்களுக்கு 9 மணிக்குக் கடமை இருந்ததால், செயல்வழிச் சென்றார் கள்.

இங்கே மடத்தில் 11 துறவியரும் சில முயல்வாரும் இருக்கின்றனர். இரண்டொருவர் புதிதாகச் சேர்ந்திருக்க லாம். தலைவர் சுப்பிரமணியா என்றவர் பெருந்துறவி, அவர்தம் குரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர். அவர்தம் குரு தமிழகத்தைச் சேர்ந்தவர். எனவே இவர்கள் பரம்பரை தமிழகத்திலேயே தொடங்குகின்றது. இங்குள்ள துறவியர் அனைவருமே தலைவர் தவிர - எல்லாப் பணி களையும் செய்கின்றனர். தலைவரும் சில பணிகளைச் செய்கின்றார். சுமார் 50 ஏக்கருக்கு மேலுள்ள நிலங் களைப் பயிரிடுவது, அவற்றைச் செம்மைப்படுத்துவது, காப்பது, களஞ்சியம் சேர்ப்பது, விற்பனைக்குத் தருவது அனைத்தையும் செய்யவேண்டும். மடத்தினைச் சுற்றியுள்ள சுமார் ஐந்து ஏக்கர் நிலத்தில் உள்ள தென்னை, ஆல் போன்ற மரங்களைக் காப்பது, பூஞ்செடிகளை வைப்பது, பல்லை வெட்டித் துப்புரவு செய்வது, மலர் பறித்து மாலை

கட்டி இறைவனுக்குச் சாத்துவது, அனைவருக்கும் வேண்டிய உணவினைச் சமைப்பது, அவற்றிற்கு வேண்டிய சாமான்களை வாங்குவது, பாத்திரம் சுத்தம் செய்வது, மடத்தைத் துப்புரவு செய்வது போன்ற எல்லா வேலைகளையும் இவர்களே செய்யவேண்டும். இவற்றுடன் பழமையானவர்கள் முறைப்படி இறைவனுக்கு எட்டுவேளை பூசைகளையும் மாறிமாறிச் செய்யவேண்டும். இவற்றுடன் சமய ஆய்வு, நூல், மலர் வெளியீடுகள், பயிற்சி பெறுவோருக்கு பாடங்களைத் தயார் செய்வது, அச்சிடுவது (இங்கேயே அச்சகம் உண்டு) அஞ்சல் செய்வது போன்ற வற்றையும் செய்யவேண்டும். இவற்றையெல்லாம் இரண்டு நாட்களாகக் கண்ட நான், புறவேலைகளுக்கு வேறு தக்க வரை - இங்கே ஆள் கிடைப்பது கடினமாயினும் முயன்றால் பெறலாம் - நியமித்து, துறவியர் அனைவரும் 'சமய விசாரத்'தில் ஈடுபடுதல் நலமாகும் என்றேன். அப்பர் உழவாப் படை கொண்டு கோயில்களைத் தூய்மை செய்தார் என்றாலும், தற்போது சைவநெறிக்கு அதிகப் பணிகள் தேவை என்பதைச் சுட்டினேன். அப்பர் காலத்தில் உண்டான சமய வேறுபாட்டு அலை போன்ற இன்றும் தமிழ் நாட்டில் அலை வீசத் தொடங்கியதைச் சுட்டினேன். தேவையாயின் உலகெங்கணும் சென்று சமயநெறியைப் பரப்பவேண்டிய அவசியத்தையும் வற்புறுத்தினேன். அவர் களும் (சிலர்) இதுபற்றித் தலைவருடன் கலந்துபேசி தக்கன செய்யலாம் என்றனர். பின் 9-30க்கு அறைக்கு வந்தேன். இன்றுவரை எனக்கு வரவேண்டிய கடிதங்கள் (10-5-85-ல் சிகாகோவில் இட்டது உட்பட) வாராத நிலை யில் உள்ள அஞ்சல் துறையை நெடிது நினைத்தேன்; பின் சற்றே இருந்து, திருமடத்தில் தந்த ஆங்கில இதழ்களைப் படித்து 10-30 அளவில் உறங்கச் சென்றேன்.

சைவசித்தாந்த மடம் - ஹாவாய் 30-5-85

இன்று காலை முறைப்படி எல்லாப் பணிகளையும் முடித்துக் கொண்டு, அன்பர் சொக்கலிங்கத்திடமும் குமார சுவாமி குருக்களிடமும் சமயம் பற்றிப் பல பொருள்களைப் பேசிக் கொண்டிருந்தேன். சுற்றிலும் இருந்த தோட்டத்தையும் சுற்றி வந்தேன். இங்கே உள்ள ஆலமரம், விழுதுகள் விட்டு இறங்குகின்றதேனும் இலைகள் நம்நாட்டு ஆலமரத்து இலைகள் போல் இல்லை; மிகச் சிறியன. இது அதன் இனத்தைச் சேர்ந்ததாக இருக்கலாம். ஐந்நிறக் கிளி ஒன்று அருகில் வா என அழைத்தது. அதன் அருகில் சென்று,

> 'ஏரார் இளங்கிளியே எங்கள் பெருந்துறைக்கோன்
> சீரார்திருநாமம் தேர்ந்துரையாய்—ஆருரான்
> செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்
> செப்புவதுபோல்
> எம்பெருமான் தேவர்பிரான்' என்று சொல்லுமாறு

கேட்டுக் கொண்டேன். அதுவும் பதிலுக்கு ஏதோ சொல்லிற்று. எனக்கு அந்த மொழி புரிந்தால்தானே. இறைவனைப் போன்று அது தெரிந்தும் தெரியாதது போல இருந்தது. பின் பலவிடங்களை நோக்கினேன். எங்கேயோ இருந்த மயில் எனைக் கண்டு ஓடி வந்தது. நான் கையில் வைத்திருந்த உணவுப் பொருளை அதற்கு இட்டேன். அது தோகை விரித்து ஆடிக்காட்டி, அச் சிறு உணவை உண்டது. 'முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்' அளித்த முன்னோரைப் போன்று நான் வள்ளல் இல்லையாயினும்

ஏனோ அந்த மயில் என்னிடம் தன்னை ஒப்படைத்தது. நான் மகிழ்ந்தேன்.

பின் இறைவனை வணங்கி, அறையில் சில சமய நூல்களைப் படித்துக்கொண்டிருந்தேன். இரண்டு மணி அளவில் காபா (KAPAA) நகர் சென்று பயணச்சீட்டு முதலியன பற்றிக் காண வேண்டியிருந்ததால் தொண்டாற்றும் துறவி ஒருவரோடு சொக்கலிங்கம் உடன்வரப் புறப்பட்டேன். முதலில் அஞ்சலகம் சென்றேன். அதன் செயல்பாட்டின் அவல நிலையை முன்னரே குறிப்பிட்டுள்ளேன். இதற்கு முன்னும் சிலவிடங்களில் அஞ்சலகம் சென்றுள்ளேனாயினும் இங்கே உள்ளே சென்றும் கண்டேன். அகன்ற இடம்; நம் நாட்டுப் பெருநகரங்களில்கூட இவ்வளவு வசதி கிடையாது. இது மிகச் சிறிய ஊர் 20,000 மக்கள் இருப்பார்களா என்பது ஐயமே. அதற்கு இத் துணைப் பெரிய அஞ்சல் நிலையமா என வியந்தேன். ஆயினும் அதன் செயல் பாட்டு முறை காண விழைந்தேன். இந்தச் சிறுநகரில் எத்தனை எத்தனை அலுவலகங்கள். ஒரு தனி நாளிதழ். பெருங்கடைகள், பெரிய வங்கிகள் - 20,000க்கு மேற்பட்ட கார்கள். பல கார் நிற்கும் இடங்கள். கார் எண்ணெய்க்குப் பல கடைகள். பரந்த விளையாட்டிடங்கள்; பல பள்ளிகள். எங்கும் தொலைபேசி. இந்த நிலை நம் மாநிலத் தலைநகரங்களில் கூடக் காணமுடியாத ஒன்று. இது நம் நாட்டு ஐந்து அல்லது ஆறாம் நிலையில் வைத்து எண்ணக் கூடிய ஒரு ஊர்.

திரும்பி வருமுன் வங்கிக்குச் சென்று பணமாற்றம் செய்து கொண்டேன். வங்கியில் பணிபுரியும் பெண்கள் எவ்வளவு அன்புடனும் பரிவுடனும் வருபவரை ஏற்று, உதவி, ஆவன செய்கிறார்கள். அப்பப்பா! நம்நாட்டு வங்கிகளை நினைக்க அழுகையே வந்தது. நம் பள்ளியிலேயே உள்ள வங்கி, ஒரு கடிதத்துக்கு ஒரு வருடமாகியும் - பலமுறை நினைவூட்டியும் பதில் போடாத நிலையினை எண்ணினேன். இவை அனைத்தும் தனியார் நிறுவமாக இருப்பதோடு, பணியாளர் சிறக்கப் பணியாற்றினால்தான் மறுநாள் வாழ்வு

உண்டு என்ற நிலை இருப்பதோடு, 'செய்வன திருந்தச் செய்யும்' உளப்பண்பு உள்ளமையே இவர்கள் நாட்டை உலகில் உயர்த்துகின்றது. இவை இல்லாத காரணத்தால் நம்நாடு எங்கோ எப்படியோ சென்று கொண்டிருக்கின்றது.

செல்லும் வழியெல்லாம் நிலத்தின் செழுமை தெரிந்தது. கடந்த ஒன்றரை மாதங்களாக இச் செழுமையைக் கண்ட நான், 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்ற சங்க காலப் புலவரின் அடிகளை உள்ளத்தில் நினைந்து, 'இந்நாடு இன்னும் சிறக்கட்டும்; மக்கள் தனி வாழ்வும் செம்மையாகட்டும்' என வாழ்ந்தேன். பார்க்கு மிடமெல்லாம் தென்னஞ் சோலைகள் - கருப்பஞ்சாலைகள்- இந்தத் தீவில் மட்டும் மூன்று சர்க்கரை ஆலைகள் இருக் கின்றன என்றால் நம்ப முடிகிறதா? இப்படியே எல்லா வகையான தொழில்களும் இங்கே வளர்கின்றன; மக்கள் வளமாக வாழ்கின்றனர். பழமரம் நாடும் பறவை போலப் பல நாட்டுமக்கள் இங்கே பறந்தோடி வந்து வாழ்கிறார்கள்- வாழ நினைக்கிறார்கள். 'நாடென்ப நாடா வளத்த' என்று வள்ளுவர் இதை எண்ணித்தான் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சொன்னாரோ என எண்ணினேன். அதை உண்மையாகக் காட்டுமாறோ எனோ இக்காவாய்த் திருமடத்தில் முன் திருவள்ளுவர் தம் 8 அடி உயரமுள்ள உயர்சிலையில் நூல் வடிப்பது போன்று காட்சியளித்து நிற்கின்றார். இம்மடத்தின் வாயிலில் ஒருபக்கம் திருமூல வரும் ஒரு பக்கம் திருவள்ளுவரும் இருந்து அனைவரையும் வாழ்த்தி வாழ வைக்கின்றனர். ஆம்! இருவர்தம் பிறப்பும் முடிவு கட்டப்பெறா நிலையில் - இருவரும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் இயற்றிய நிலையில் - இருவரும் வாழ்ந்த காலத்தையும் கணக்கிட முடியாத நிலையில் - இருவரும் வையம் வாழப் பெரு நூல்கள் செய்த நிலையில் இவர்களைப் போற்றி, வடித்து, இங்கே நிறுத்தி, உலகம் உய்ய இவர்கள் காட்டியதைக் காட்டும் இத்துறைவியரைப் போற்றினேன்.

பின் ஏழுமணி அளவில், நான் இதுவரையில் காணாத அருட்திரு நடராச அடிகளார் என்பவர் வந்து தம்மை அறிமுகம் செய்து கொண்டார்கள். உயர் நிலையில் துறவு நிலை எய்திய பதினொரு துறவிகள் இங்கே உள்ளதாகவும், ஒவ்வொருவருக்கும் தனித்தனி பணிகள் உள்ளமையாலும், அவர்தம் பணிவழிநின்ற காரணத்தால் கடந்த மூன்று நாட்களிலும் என்னைக் காண முடியவில்லை என்றும் சொன்னார்கள். 'தவம் செய்வார் தம் கருமம் செய்வார்' என்ற வள்ளுவர் வாய் மொழியை நினைத்தேன். பின் அவர்கள் இந்த மடத்தில் உள்ள மூவகை நிலைகளையும் படிப்படியாக உயர் நிலையில் கால்வைக்கும் முறைகள் பற்றியும் விளக்க உரைத்தனர். எங்கும் யாரும் திடீரெனத் துறவியாக முடியாதல்லவா! எந்தனைத் துறவிகள் - எல்லாச் சமயங்களிலும் துறவு நிலையைத் துறந்து இல்லற வாழ்வை மேற் கொள்கின்றனர். பழங்காலத்திலும் நல்ல துறவிகளும் நல்லாசிரியர்களும் வருபவர்களையெல்லாம் மாணவராகவும் தொண்டர்களாகவும் ஏற்றுக் கொள்ளுவதில்லை. பலநாள் இருக்கவைத்து 'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவீசும்' தன்மை கண்டு, தியாக வாழ்வை நினைத்து எண்ணி, பின்தானே அவர்களை ஏற்றுக் கொள்வர் எனக் கேட்டிருக்கிறோம். இவர்களும் அந்த நிலையில் புதிதாக வருபவரை மூன்றாண்டுகள் தனிநிலையில் விட்டு, செம்மையாயின் மறுபடி மூவாண்டு தந்து, இவ்வாறே 12 ஆண்டுகள் கழித்து, உயர் நிலைத் துறவியாக்குகிறார்களாம். இடையில் திருத்திய நெறிகாணின் அவர்களுக்கு ஒருவகை உடை (மஞ்சள்) தந்து அவர் காலத்துக்குள் நெறி விளக்கமில்லையாயின், அவர்களைத் திரும்பவும், இல்லற வாழ்வுக்குச் செல்லுமாறு ஆணையிடுகின்றனர். வள்ளுவர்காட்டும் 'கூடா ஒழுக்கம்' 'கூடாவகைக்கு இந்நெறி நல்லதெனவே நான் நினைத்தேன். இங்கே மகளிர் துறவியாகும் நிலை இல்லை. அவர்கள் இல்லறத்திலே இருக்கவேண்டும் என இவர்கள் வற்புறுத்துகின்றனர். ஆடவரும் துறவுநிலையில்தான் இறைவனை அடைய முடியும் என வற்புறுத்துவதில்லை. ஆடவரும் மகளிரும்

இல்லற வாழ்வில் இருந்தே - உள்ளத் தூய்மையும் செயல் ஒழுக்கமும் வையம் வாழ வகைசெய்யும் பண்பும் பெறின் - கடவுளைக் காணலாம் என்று கூறி, பெரியபுராணத்தில் இல்லற நெறி நின்று இறைநிலையுற்ற அடியார்களைக் காட்டுகின்றனர். அத்தகைய இவர்தம் ஆற்றுப்படுத்தும் முறை சாலச் சிறந்ததேயாகும்.

பின் எட்டுமணி அளவில் என்னுடன் நேற்று பேசிய கதிர் அடிகளார் மறுபடியும் பேச நினைத்தார். இந்த மடத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் பிறவற்றையும் நேற்றே தொட்டுப் பேசினோம். இன்றும் தொடர்ந்து இம்மடத்தின் விதிமுறைகள் பற்றியும் விளக்கி உரைத்தார். நானும் பண்டுதொட்டு, தமிழகத்தின் அறநிலையங்கள் வளர்ந்த நிலைபற்றியும் பிறவற்றையும் விளக்கி, உண்மைத் துறவிகள் இன்றேல் எந்த மடமும் ஏற்றமுறாது எனக் காட்டினேன். சைவசித்தாந்த நெறிபற்றியும் அதன் தொன்மை பற்றியும் விளக்கிய, சமயம் (Religion) தத்துவம் (Philosophy) தர்க்கம் (Logic) இவை மூன்றின் வேறுபாடுகளைக் காட்டி, இன்று நம் நாட்டில் சைவ சமயம்-இந்து சமயம் இருக்கின்ற நிலையில் தத்துவம், தர்க்கம் இவற்றைத் தள்ளிவைத்து, நம்பிக்கையின் அடிப்படையிலே அமைந்த சமயத்தையும் பக்தி மார்க்கத்தையும் நாட்டு மக்களிடம் பரப்பவேண்டும் என விளக்கினேன். ஏழாம் நூற்றாண்டில் நிலைமாறிக் கிடந்த தமிழகத்தை அப்பர், சம்பந்தர் போன்ற நாயன்மார்களும் ஆழ்வார்களும் இந்த முறையைக் கையாண்டுதான் நம் சமய நெறிக்குக் கொண்டு வந்து வாழவைத்தனர் என்றும் அவர்களோடு திலகவதியார், மங்கையர்க்கரசியார் போன்ற மகளிரும் பங்கு கொண்டு சமயம் வளரப் பாடுபட்டனர் என்றும் அந்த நிலையில் இன்று இறைவனைப் பாடிப் பாடிப் பக்தியை வளர்த்து, மக்களை இணைத்துப் பிணைக்கவேண்டும் என்றும் கூறினேன். மாறாக பௌத்தம் தமிழ் நாட்டில் தலைதூக்கித் தனியரசு செய்த காலத்தில் சாத்தனார் சமயம் மறந்து,

தத்துவம் பேசி, 'சமயக் கணக்கர் தம் திறம் 'கேட்டதே' அச்சமயம் தமிழகத்திலிருந்து அடியோடு மறையக் காரணமா யிற்று என்பதையும் விளக்கினேன். ஆக்க நெறிக்கு உடனிருந்து ஆவன செய்வதாகச் சொன்னேன். அவர்கள் தேவாரம் திருவாசகம் போன்ற திருமுறைப் பாடல்கள் பற்றிய நல்ல பெயர்ப்பு தேவை என்றனர். தமிழ்ப் பல்கலைக் கழக வாயிலாகவோ வேறு வழியிலோ அதைச் செய்ய வாய்ப்பு உண்டு என்றும் உணர்த்தினேன்.

இறைவழிபாட்டில் இங்கே வடமொழியே வழக்கத்தில் உள்ளது. சைவ சித்தாந்தத்தை உண்மையில் அறிய வேண்டுமாயின் தமிழ் பயின்று, அதிலுள்ள நூல்களை ஆராய்ந்து காணவேண்டும் எனவற்புறுத்தினேன். என்னுடன் பேசிக் கொண்டிருந்த கதிர் அடிகளார் தாம் தமிழ் பயின்று வருவதாகவும் விரைவில் தெளிவு பெறக் கூடும் என்றும் கூறினர். மேலும் நான் திருக்கோயில் வழிபாட்டின் இடை யில் தமிழ்ப்பாடல் பாடவேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன். இனி அப்படிச் செய்வதாகவும் எளியதான பாடல்களை எழுதித் தருமாறும் கேட்டனர். நாளையே நான்கு மூர்த்தங்களுக்கும் நான்கு பாடல்கள் தருவதாகச் சொன்னேன். இவ்வாறு பல பொருள்கள் பற்றி ஆய்ந்து, அடிகளாரிடம் விடை பெற்றுக் கொண்டு அறைக்கு வந்து துயிலச் சென்றேன்.

சைவசித்தாந்த மடம்-ஹாவாய்த்தீவு 31-5-85

இன்று காலை வழக்கம்படி எழுந்து கடன்களை முடித்துக் கொண்டேன். இன்று மாலை புறப்படுவதாக இருந்ததை மாற்றி, நாளை காலை 7மணிக்கு இங்கே புறப்பட்டு, ஹானலூலூ சென்று அங்கிருந்து 10 45க்கு ஜப்பான் புறப்பட ஏற்பாடு செய்யப் பெற்றது. மாலை நான்கு மணிக்குச் சொக்கலிங்கம் இறைவனுக்கு அபிடேகம் செய்ய ஏற்பாடு செய்தார். நானும் அர்ச்சனை செய்ய ஏற்பாடு செய்தேன். காலைச் சிற்றுண்டிக்குப் பிறகு இங்கே அச்சிடும் அச்சகத்தைப் பார்க்க நினைத்தேன். மடத்துத் தலைவர் அவர்களும் வழியிடைப் பார்த்து அச்சகத்தைக் காண வேண்டும் என வற்புறுத்தினர். உள்ளே சென்றேன். அனைத்தும் கம்பியூட்டர் வழியே அச்சாகின்றன. நால்வர் - அனைவரும் துறவிகளே - பணி செய்திருந்தனர். அருட்டிரு. கதிர் அடிகளார் பொறுப்பில் அவை இயங்குகின்றன. மிக எளிதில் தேவையானவற்றை அச்சிட வசதி செய்யப் பெற்றுள்ளது. அச்சிடுவது, வெட்டுவது, மடிப்பது முதல் அனைத்துமே இயந்திரங்கள் கொண்டே நடை பெறுகின்றன. குறைந்தது இருபது ஆட்கள்செய்யும் பணியினை இந்த இயந்திரங்களின் உதவியால் இருவரே செய்து முடிக்கின்றனர். வேலைக்கு ஆட்கள் கிடைக்காத நாட்டில் - கிடைத்தாலும் தாளாத நாட்டில் - கூலி தரவேண்டிய நாட்டில் - இந்த இயந்திரங்களே சிறந்த வரப்பிரசாதமாக அமைகின்றன. பல கடிதங்களும் கம்பியூட்டர் மூலமே 'டைப்' செய்யப் பெற்று (படியுடன்) விரைந்து அனுப்பப் பெறுகின்றன. படி

எடுக்கும் இயந்திரமும் பிறவும் உள்ளன. குறைந்த ஆள் மட்டுமன்றி குறைந்த இடத்திலேயே இதைத் தொழிற் படுத்தி அதிக வேலை செய்ய முடியும் என அறிந்தேன். நம் நாட்டிலும் இந்த வகையில் அச்சகங்கள் அமையின், அத் துறையில் நிலவும் ஆளில்லாக் குறை நிவர்த்தியாவதோடு, குறைந்த காலத்தில் நிறைந்த விளைவுகளைக் காணலாம். ஆனால் அதற்கு மின்சாரம் ஒத்துழைக்க வேண்டுமே! உழைக் குமா! எல்லாத் துறைகளையும் வளரவிடாது தடுப்பது மின்சாரமல்லவா! அதனாலேயே உற்பத்தி குறைய விலை யும் ஏறுகிறதே. இவற்றையெல்லாம் எண்ணி மக்களை மலரச் செய்வார் யார்?

நேற்று சொன்னபடி காலையிலேயே உட்கார்ந்து நடராசர், விநாயகர், முருகன், அர்த்தநாரீச்சுரர் ஆகியோருக்கு உரிய இனிய தமிழ்ப் பாடல்களை (தேவாரம் - திருப்புகழ் - செய்யுட்கோவை) எழுதி, அவற்றை ஆங்கிலத்திலே அப்படியே அமைத்து (Transliteration) இருபடிகள் எடுத்துக் கொடுத்தேன்; மகிழ்ந்தனர். நேற்று மாலையே இது பற்றிப் பேசி முடிவு செய்தார்கள் என்றும் உடன் தமிழ்ப் பாடல் பாட ஏற்பாடு செய்யப் பெறும் என்றும் கூறினார்கள்; அதே நாளில் அவற்றைக் கேட்டேன். இன்று மாலை நடந்த அபிடேக ஆராதனை முடிவில், தீபாராதனை முடிவில், 'திராவிட வேதம்' பாடப் பெறும் என்று சொல்ல, நானும் சொக்கலிங்கத்தின் மகனும் தேவாரப் பாடல்களைப் பாடினோம். பிறகு ஐந்து முகத் தீபாராதனை நடைபெற்றது. தமிழ் இல்லாத ஒரு கோயில் தமிழை - தேவாரப் பாடலை இறைவன் முன் பாடும் நிலை அறிந்து, நான் இங்கே வந்ததன் பயன் இதுவோ என மகிழ்ந்தேன்.

பிற்பகல் சோலைகளைச் சுற்றிக் கண்டு, மயிலொடு மகிழ்ந்து சிறிது நேரம் இருந்து உணவு கொண்ட பின் ஓய்வு கொண்டோம். அபிடேகம், 4.30க்கு ஆகையால், அருகில் சலசலத்து ஓடும் கானாற்றில் இறங்கி நீர்கொண்டுவர நானும் ஆறுமுக அடிகளும் சென்றோம். இயற்கைச் சூழலுக்கு

இடையில் அச்சிற்றாறு செல்லுகிறது. அதுதான் இந்தத் தீவின் புனித நதி என்றும் இங்கேதான் தோன்றுகிற தென்றும், இதன் உச்சியில் பண்டைக் காலப் பழங்குடிகள் ஆண்டுக்கு ஒருமுறை விழாவாற்றுவார்களென்றும் கூறினர். பின்னும் வேறு ஏதோ சொன்னார் எனக்குப் புரியவில்லை, தண்ணீர் கொண்டு வரவும் அபிடேகம் தொடங்கவும் சரியாக இருந்தது. குமாரசாமி குருக்கள் அவர்கள் அன்புடனும் பக்தியுடனும் இலிங்கமூர்த்திக்கு அபிடேகம் செய்து, நான்கு மூர்த்திலிங்கங்களுக்கும் உணவு படைத்து தீபாராதனையும் செய்து முடித்தார். முடிவில் நான் மேலே காட்டியபடி தேவாரமும் பாடப் பெற்றது. இனி நடை பெறும் ஒவ்வொரு பூசையிலும் இல்வாறே தேவாரம் பாடப் பெறும் என்றனர்.

வழிபாடு முடிந்து இறைவனிடம் விடைபெற்றுக் கொண்டு விடுதி திரும்பினேன். அங்கே விமான நிலையத் துக்குச் செல்ல, திரு. சொக்கலிங்கமும் அவர்தம் மக்களும் தயாராக இருந்தனர். அவர் 7மணிக்குப் புறப்பட்டு ஹானலூலூ வழியாக அமெரிக்க நாட்டிற்குச் (சான்பிரான் சிஸ்கோ) செல்லுகின்றனர். துறவியர் இருவரும் வந்திருந்து வழியனுப்பி வைத்தனர்.பின் விடியல் ஆறு மணிக்கு எனக்கும் 'கார்' வரும் என்றும் தயாராக இருக்குமாறும் கூறிச் சென்றனர். இன்று வெள்ளிக்கிழமை - பிரைதோடம் - இம் மே மாதக் கடைசி நாள் - நாளை இருநாளை (முதல் - இரண்டாம் தேதிகள் உலகில் நாள் மாறும் எல்லைவழி நாளை நான் செல்வதால் திடீரென முதல்தேதி இரண்டாம் தேதியாக மாறும்) ஒரே சமயத்தில் கடக்கும் போகும் நிலை இவற்றை எல்லாம் எண்ணிக் கொண்டு இங்கே கழித்த நான்கு நாட்களையும் கடந்த இரண்டு மாதங்களையும் எண்ணி எண்ணி இக் குறிப்பினையும் எழுதி முடித்தேன். குருக்களும் கோயிலுக்குப் பூசை செய்யச் சென்றார். நான் புறப்பட வேண்டியதற்கு ஆயத்தமாக எல்லாவற்றையும் சரிசெய்து, குருக்கள் வந்தபின் உணவு கொண்டு 9மணிக்குப் படுக்கச் சென்றேன்.

டோக்கியோ 1, 2-6-85

இன்று காலை 4 மணிக்கு முன்பே படுக்கையைவிட்டு எழுந்து, காலைக் கடன்களை முடித்துக்கொண்டு நான் இருந்த அறையினையும் துப்புரவு செய்து, பயணத்துக்கு ஏற்பாடு செய்து முடித்தேன். மணி 5-30 ஆயிற்று. குருக்கள் காலை எழுந்து எனக்குப் பால் கலந்த உணவும் காப்பியும் தயார் செய்தார். அருந்தினேன். நான் புறப்படு முன் இம் மடத்தின் தலைவரைக்கண்டு செல்லல் நலம் எனவும் காலை 5-45க்குக் காணலாம் எனவும் சொன்னார் கள். அப்படியே அவர் தங்குமிடம் சென்றேன். பிற துறவியர் அனைவரும் புடைசூழத் தலைவர் அவர்கள் வீற்றிருந்தார்கள். (நான்தொறும் காலை ஒருமணி நேரம் அனைவரும் கூடி, வழிபாடாற்றித் தத்தம் கடமைகள் பற்றியும் ஆய்வார்களாம்). தலைவரையும் மற்றவர்களை யும் கைகூப்பி வணங்கி, அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டேன். அதற்குள் முயல்வார் (Sataga - என அழைப்பார்-துறவியாகும் முன்நிலை) காரினைத் தயாராகக் கொண்டுவந்தார். சரியாக 6 மணிக்குப் புறப்பட்டு 6-30க்கு விமான நிலையம் வந்து சேர்ந்தேன். இடையில் இயற்கைக் காட்சியில் தோய்ந்து என்னை மறந்தேன். சிறு தீவாயினும் வேண்டிய அனைத்தையும் நல்கும் இத் தீவை நினைத்தேன் விமான தளத்தில் எனை விட்டு அடிகளார் விடைபெற்றுச் சென்றார். நானும் விமானம் ஏறி 7 மணிக்குப் புறப்பட்டு 7-30க்கு ஹானலூலூ வந்து சேர்ந்தேன். (Inter Island. Service) விமானநிலையத்தில் பலவகையான 'ஐஸ் க்ரீம்'கள்

மாமிச உணவுப்பொருள்கள், வற்றல்கள், அன்னாசிப் பழங்கள் போன்றவை மலைபோல் அடுக்கி வைக்கப் பெற்றிருந்தன. இவை யாவும் ஜப்பானுக்கு ஏற்றுமதியா கின்றனவாம். முன்னேற்றம் காணும் அந்த நாட்டில் ஐஸ்கிரீமுக்கும் பஞ்சமா என்று அங்கே அவற்றைச் சரிபார்க்கும் ஜப்பானியரைக் கேட்டேன். பஞ்சமில்லை என்றாலும் இதற்குத் தனிச் சிறப்பு உண்டு. என்ன விலை யானாலும் வாங்குவர் என்றார். அப்படியே பிறபொருள் களும்.

நிலையத்திலும் இதுவரையில் கண்ட நிலைக்கு மாறாக அதிக ஜப்பானிய மக்களே இருந்தனர். சில சீனாக்காரரும் பிலிப்பையன் மக்களும் இருந்தனர்.

இந்த நிலைத்தில் பூக்களை மாலையாக அணிந்து கொள்வார் பலர் இருந்தனர். நான்கு காசு தாளாத மலர் களையெல்லாம் - காட்டு மலர்களையெல்லாம் மாலைக ளாக்கி நான்கு ரூபாய்க்கு விற்கும் நிலைக் கண்டேன். ஜப்பானியர் இவற்றை அணிவதில் மகிழ்ச்சி கொள்ளுகின் றனர். மற்றவருள் ஒரு சிலரும் அப்படியே. (இம் மலர் பற்றிக் கவாய் கோயிலில் நடைபெறும் வியாபாரம் பற்றி முன்னரே குறித்தேன். நிறைய மலர்கள் தம்மிடமே இருந்தும், சாதாரண மலருக்கு நாளுக்கு 2 டாலர் தரும் அவர்களை எண்ணினேன்.)

இங்கிருந்து டோக்கியோ செல்ல, ஜப்பான் விமானத் (அரசாங்கம் நடத்துவது 51% முதலீடு)தில் செல்ல வேண்டும். பெட்டியை நேராக டோக்கியோவிற்கே அனுப்பச் சொல்லி விட்டமையால் சிறிது தூரம் நடக்க நேர்ந்த போதிலும் தொல்லை இல்லை. பெரு விமான நிலையத்தில் (International Airport) ஜப்பான் விமானத் துறையினரிடம் சென்றேன். அங்கே பணிபுரிகின்ற அனைவரும் மிக அன்புடனும் மரியாதையுடனும் நடந்து கொண்டனர். பேராசிரியர் என்பதால் செல்லுமிடமெல்

லாம் தனி மதிப்பினைப் பெற்றேன். என்றாலும் இவர்கள் என்னிடம் காட்டிய மதிப்பு உயர்ந்தது. என்னை அவர்கள் முன் (counter) நிற்க விடவில்லை. அருகில் ஓரிடம் காட்டி, அதில் என்னை உட்கார வைத்து, வேண்டியவற்றையெல் லாம் அவ்வப்போது என்னிடம் வந்து கேட்டுச் சென்றனர். எனக்கெனப் பயணச் சீட்டில் குறிப்பிட்ட வகுப்பில் இடமில்லை என்றும் அடுத்த கீழ் வகுப்பில் பயணம் செய்ய லாம் என்றும் (எனக்கு 2 மாதங்களுக்கு முன் பதிவு செய்யப் பெற்றதாயினும் அண்மையில் அதுபற்றி உறுதி செய்து கொள்ள வேண்டுமாம்) அதற்கென அமைந்த வித்தியாசத் தொகையை நான் சென்னை சென்ற பின் எனக்குச் சிட்டுத் தந்த 'ஸ்விஸ்' விமானத்தாரிடம் பெற்றுக் கொள்ளலா மென்றும் கூறி, அதற்கெனச் சான்றிதழும் தந்தனர். மற்றும் மேல்வகுப்பிற்குரிய எல்லாச் சலுகைகளும் தந்தனர். பின்னும் அங்கேயே இருக்க வைத்து பயணத்திற் குரிய எல்லாச்சீட்டுகளையும் கொண்டு வந்து தந்து மரக்கறி உணவு முதலியவற்றிற்கும் ஏற்பாடு செய்து என்னை உடன் அழைத்துச் சென்று, நல்ல இடத்தில் இருக்க வைத்து, விமானத்திற்குச் செல்லும் வழியினையும் உணவு முதலியன கொள்ளும் இடத்தினையும் காட்டி, என் பயணம் சிறக்க என வாழ்த்தியும் சென்றனர். விமானத்தில் வகுப்பு மாறினாலும் இருக்க நல்ல வசதியான இடத்தினையும் ஒதுக்கித் தந்தனர். நான் அவர்கள் வழியே ஜப்பானிய மக்களின் பண்பாட்டையும் அந் நாட்டின் நலத்தினையும் அங்கே செல்லு முன்பே உணர்ந்து கொண்டேன்.

10-30க்கு விமானத்துள் நுழைந்தேன். விமானம் பெரியது; நான் முன் பம்பாயிலிருந்தும், ஸ்விஸ் நாட்டி லிருந்தும் வந்த பெரு விமானத்தை ஒத்தது. 500 பேர் அமரக்கூடியது; மூன்று வகுப்புகள் இருந்தன. அனைவரும் எப்போதும் போன்று சுறுசுறுப்புடனும் பயணிகளிடம் அன்புடனும் பழகினர். 10-50க்குப் புறப்பட்ட விமானம் 7 ¾ மணி நேரம் பயணத்துக்குப்பின் - டோக்கியோ

கரையை 3200 கல் கடந்து அடையும். இடைமுழுதும் பரந்த பசிபிக் கடல் 5 மணி நேரம் வித்தியாசம். இடையில் நாள் மாறும் நிலையும் உண்டு. எனவே அமைதியாக இருந்தேன். போர்வை முதலியனவும் தந்தனர். தேவை இல்லை என்றாலும் அதைப் பலர் பயன்படுத்தி உறங்கினர். விமானம் பறந்து சென்ற காலை, நாள் மாறிய இடம் கடக்கும்போது, விமானி அந்த இடம் பற்றியும் 'நாம் ஒரு நாள் கடந்து விட்டோம்' என்பதையும் உணர்த்தினார். நான் இப்படியும் 'சூரியன்' கதி இல்லாமலேயே நாள் குறையும் நிலையினை எண்ணி என் வாழ்நாளில் ஒருநாள் குறைப்பட்டதே எனக் கவன்றேன். (உண்மையில் அந்த 24 மணியும் மேல்நோக்கிச் சென்ற பயணங்கள் வழி சரியாகப் போய்விட்டது என்றாலும் என் மனம் அமைதி யுறவில்லை) நல்ல உணவு, சிற்றுண்டி, பானங்கள், வறுத்த வேர்க்கடலை, பாதாம் இடையிடையே தந்து கொண்டே வந்தனர். படக் காட்சிகளும் இருந்தன. பிற்பகல் 2 மணி முதல் 4மணி வரை அனைவரும் உறங்கினர். விமானம் ஹானலூலூ மணிப்படி 6-25க்கும் டோக்கியோ மணிப்படி 1-25க்கும் விமான நிலையத்தில் இறங்கியது. மேலைப் பகுதியிலிருந்து கீழைப் பகுதிக்கு வந்த மகிழ்ச்சியில் திளைத்தேன். இன்னும் என் தாய்நாட்டிற்கும் எனக்கும் மூன்றுமணி இடைவெளியே உண்டு. இங்கிருந்து 6 மணி நேரத்தில் பம்பாய், தில்லியை அடையலாம். எனவே என் பயணம் இன்னும் 10 நாட்களில் நிறைவேறும் வகையில் மிக அண்மையில் திரும்பிவந்த நிலை நினைந்தேன். விமான நிலையத்தில் முறையான நாட்டு நுழைவுச் சான்றிதழ் முதலியன கண்டு, சாமான்கள் சோதனை சாலை (என்னைச் சோதனை இடவில்லை) கடந்து வெளியே வந்தேன்.

பிற்பகல் 2-30க்குள் மறுபடி 5-6-85வர 'ஹாங்காங்' போவதற்கும் பயண உறுதி செய்து, உந்துவண்டியில் நகர் நோக்கிப் புறப்பட்டேன். இதுவரையில் உதவிய ஆங்கிலம் இங்கே முற்றும் உதவாது என்பதை அறிவேன்; நேரில்

அறிந்தேன். டோக்கியோ இரெயில் நிலையத்தில் இறங்கு முன் சுமார் நாற்பது கல் கடந்துவந்தேன். இங்கே வண்டி கள் நம் நாட்டு முறையில் (keep to the left) ஓடுகின்றன. இங்கேயும் கால்நடைகளும் பிற பொது வாகனங்களும் பிறவும் இல்லை. சாலைகள் செம்மையாகவே உள்ளன, எங்கும் பலப்பல புதிய சாலைகள் - இரெயில் - சாதாரணப் பாதைகள் - ஆக்கப்பெறுகின்றன. செல்லும் பாதை வழி இருபுறமும் உயரிய மதில் எழுப்பி உள்ளனர். ஒரே சாலையில் எதிர் எதிராகச் செல்லுபவர் காணா வகையிலும் இடையில் சுவர்கள் எழுப்பப்பெற்றுள்ளன. வழிநெடுக இயற்கைக் காட்சி சிறந்திருந்தது. எங்கும் பசுமை - வயல்கள் நம் நாட்டினைப் போன்று சிறுசிறு பிரிவுகளில் பயிர் செய்யப் பெற்றிருந்தன. பல தொழிற்சாலைகளும் தென்பட்டன. அழகிய வளைந்த மேம்பாலங்கள் பல, ஒரே இடத்தின் மூன்று பாதைகள் கடக்கும் மேம்பாலமும் உண்டு. கடலி லிருந்த கழிகள் ஊர்ப்புறத்திலும் நகரின் நடுவிலும் ஊடுருவிச் செல்ல, அவற்றில் சிலவிடங்களில் படகுகளும் சிலவிடங்களில் கப்பல்களும் செல்லுகின்றன. இங்கும் வானளாவிய 10, 14, 16 அடுக்குக் கட்டடங்கள் உள்ளன.

இரெயில் நிலையத்தில் இறங்கி, பக்கத்தில் இருந்த வாடகை மோட்டார் ஓட்டுநரிடம் 'YMCA' செல்லக்கேட் டேன். அவனுக்கு ஒன்றும் புரிய வில்லை. பக்கத்தில் சென்ற ஜப்பானியர் வலிய வந்து நான் தந்த முகவரியை அவனுக்கு விளக்கிச் சொல்லி, அழைத்து செல்லக் கூறி, எனக்கும் வணக்கம் தந்து விடை பெற்றார். ஓட்டுநரும் உடன் என்னை உரிய இடத்தில் விட்டு வாடகை பெற்றுச் சென்றார். எனக்கெனப் பேராசிரியர் 'காரசிம்மர்' அவர் கள் முன்னரே பதிவு செய்தபடி 630வது அறையில் (6வது மாடி) இடம் பெற்றேன். இன்று ஞாயிறு ஆனமையின் அதிக நெருக்கமில்லை (ஆம் அங்கே சனிக்கிழமை 1-6-85 காலை 10-45க்குப் புறப்பட்டு இங்கே ஞாயிறு 2-6-85 மாலை 2க்கு வந்தேன்).

அறைக்கு வந்ததும் பேராசிரியர் அவர்களுடன் தொலை பேசியில் நான் வந்து சேர்ந்ததைக் கூறினேன்; மகிழ்ந்தார். நாளை 10 மணி அளவில் அவர் மாணவர் ஒருவரை அனுப்புவதாகவும் அவருடன் 1மணி வரையில் பல்கலைக் கழகத்தில் அவர் துறைத் தலைவருடன் மற்றவர்களுடனும் கலந்திருந்து, பின் நகர் நலம் காணலாம் என்றும் கூறினர். நான் மகிழ்ந்தேன். ஓரிரு பள்ளிகளையும் காண விழைந்தேன். பிறகு இங்கேயே உணவு உண்டு, சோர்வு மிகுதியால் ஒன்றும் செய்ய இயலாது அறையிலேயே படுத்து உறங்கி விட்டேன்.

டோக்கியோ 3-6-85

விடியற் காலை 4 மணிக்கே எழுந்து பிற கடன்களை முடித்துவிட்டு 5 மணிக்குக் குளிக்கச் சென்றேன். குளியல் அறை பூட்டியிருந்தது.(YMCAவில் எல்லாம் பொதுக்குளியல் அறைகள்தாம் உள்ளன போலும்) முகப்பில் மாலை 5 முதல் இரவு 12 வரை திறந்திருக்கும் என்ற குறிப்பு இருந்தது. நான் விழித்தேன். பின் கீழிறங்கிக் காவலரிடம் சொன்னேன். அவர் வந்து திறந்து கொடுத்தார். பின் குளித்து, 7மணிக்குள் இந்தக் குறிப்பினையும் எழுதிமுடித்துப் பிற பணிகளையும் மேற் கொண்டேன். 10 மணிக்குள் தயாராக வேண்டுமல்லவா! இன்றுடன் இருமாதங்கள் முடிவடைகின்றன; இடையில் ஒருவாரம் உள்ளது ஊர் செல்ல என நினைத்தேன். பிறகு சிற்றுண்டி உட்கொண்டேன்.

சரியாக 9-30 மணிக்கு பேராசிரியர் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். முன்னாள் சொன்னபடி, எதிர் பாராத வேலைகளின் காரணத்தால் காலை 10 மணி அளவில் பேச இயலவில்லை எனவும்10-30க்குத்தம் மாணவர் ஒருவரை அனுப்புவதாகவும் காண வேண்டுவகண்டு மாலை 4 மணிக்குப் பல்கலைக் கழகம் வந்தால் நல்லது என்றும் சொன்னார். அப்படியே அம் மாணவரும் (திரு. சுகிரா ஹாயாஷி) 10-30க்கு வந்தார். பக்கத்திலுள்ள வங்கியில் இந்நாட்டு நாணயமாற்றம் செய்து கொண்டேன். (ஒரு நிமிடம்கூடக்காக்க வைக்காமல் உடனுக்குடன் எந்த வேலையையும் முடித்து அனுப்புகின்றனர்) பின், வந்தவருடன்

கல்வி நிலையங்களைக் காண விழைந்தேன். அவருக்கு எந்தப் பள்ளியும் தெரியாது என்றும் தெரிந்தாலும் முன் அறிவிப்பும் இசைவும் இன்றிச் செல்ல இயலாதென்றும் கூறினர். கல்வி இயக்குநர் அலுவலகம் செல்லலாம் என்றாலும் அதுவும் தெரியாதென்றார். நல்ல வேளை அவர் நண்பர் திரு. தகாபீமிகிமுரா என்பவர் - அலுவலகப் பணியாகச் செல்பவர் எதிர் வந்தார். அவரிடம் சொல்லவே, அவர் தமக்குக் கல்வி இயக்குநர் அலுவலகம் தெரியுமென்று சொல்லி, அவர் தம் அலுவலகத்துக்குத் தொலைபேசிவழியே காலம் தாழ்த்து வர இசைவு பெற்று, எங்களுடன் வந்தார். மூவரும் பாதாளரயிலில் சென்றோம். பாரிஸ், லண்டன், நியுயார்க்குப் பிறகு இங்கேதான் பாதாள ரெயிலில் செல்ல வேண்டி இருந்தது. உரிய இடத்தில் விட்டுவிட்டு, வந்தவர் சென்றார். நாங்கள் உள்ளே சென்று கேட்டறிந்து துணைக் கல்வி இயக்குநர் திரு. இட்டேடாக்கா சானோ (Hide Taka Sano) என்பவரைக் கண்டோம். அவர்கள் தாம் இருந்த அறையை விட்டு வெளிவந்து, தகவல் தரும் துறைக்கு அழைத்துக் கொண்டு சென்று அங்கிருந்த இருநூல்களைத் தந்தார். அதில் இந்நாட்டு ஆரம்பக் கல்வி முதல் கல்லூரி பல்கலைக் கழகக் கல்வி வரை எப்படிச் செயல் பெறுகின்றது என்ற தகவல்கள் இருந்தன. எனினும் அதில் முக்கியமான ஒரு நூலின் தனிப்படி இல்லை எனக் கூறி வெளியில் வாங்கிக் கொள்ளச் சொல்லி இடமும் குறித்துத் தந்தார். அத்தகைய உயர் பதவியிலுள்ள அவருக்கோ அவர் துணையாளருக்கோ - யாருக்கும் ஆங்கிலம் தெரியவில்லை. நல்ல வேளை என்னுடன் வந்தவர் ஆங்கிலமும் ஓரளவு அறிந்தவராதலின் என் கருத்தினை அவர்களுக்கு விளக்கி வேண்டிய உதவிகளைப் பெற்றுத் தந்தார். துணை இயக்குநர் சிறிது நேரம் இருந்து தேநீர் தந்து வாழ்த்தி (ஜப்பான் மொழியில்தான்) வழி அனுப்பினார். கடையில் அந்த நூலை வாங்கப் புறப்பட்டோம். வழியில் அஞ்சலகம் சென்று, ஊருக்குத் தபால் எழுதிவிட்டுப், பிறகு நூல் விற்பனை நிலையம் சென்றோம். அங்கும் அந்த நூல் இல்லை எனக்கூறி, தனித் தனியாக

நான்கு வகை நூல்களைத் தந்தனர். 99-99%வீதம் கல்வி பெற்றுள்ள இந்த நாட்டில் இத்துறையினர் எவ்வாறு செயல் படுகின்றனர் என்பதை அறியவே அவற்றை வாங்கினேன். (முன்னரே துணை இயக்குநர் வேறு இரு நூல்களைத் தந்துள்ளனர்). பிறகு - மணி 1 ஆகவே அருகில் உள்ள உணவுச் சாலைக்குச் சென்றோம். அவர் உணவு கொண் டார். ஏனோ எனக்கு இன்று கால் முட்டி நோயும் வயிற்று வலியும் 12 மணி அளவில் தொல்லை தந்தன. சிறிது நேரம் அஞ்சலகத்தில் அப்படியே உட்கார்ந்திருந்து பிறகே புறப் பட்டேன்.

அமெரிக்க நாட்டினைப்போன்று இந்தநாடு அத்துணைச் செல்வமிக்க நாடு அன்று. எனவே இந்நாட்டில் அகநகரி லும் பிற இடங்களிலும் உந்துவண்டிகள் (Bus) பல சென்ற போதிலும், பாதாள இரெயில் பல பகுதிகளுக்குச் சென்ற போதிலும், பலர் சாலைகளில் இருபுறங்களிலும் நடந்தே சென்றதைக் கண்டேன். பாதாள இரெயில்கள் இரண்டாம் போருக்குப்பின்னே போடப்பெற்றனவாம். டோக்கியோ வின் பல பகுதிகளையும் இணைக்கினவாம். இந்த நகரின் நடுத்தர மக்களுக்கு இது ஒரு 'வரப்பிரசாதம்'என்கின்றனர். செல்வவளம் இன்றேனும் வாழ்க்கைத் தரம் ஒன்றும் அந்த நாடுகளுக்குக் குறைவாக இல்லை. பழங்களும் பிற உணவுப் பொருள்களும் அங்கே உள்ளதைக்காட்டிலும் அதிகமாகவே உள்ளன. ('YMCA'வில் சற்றே விலை குறைவாக உணவு வழங்குகிறார்கள்.) மேலும் அந்த மேலைநாடுகளைப்போல கண்ட இடங்களில் நடுத் தெருவிலே தின்று கொண்டும் கடித்துக்கொண்டும் பருகிக்கொண்டும் செல்லும் நாகரிகத் தையும் இங்கே காணவில்லை. அந்நாடுகளைப் போல், பெண்கள் அதிகமான பணிகளில் இல்லை எனலாம். பல பணி மனைகளை இன்று சுற்றிக் கண்டதிலும், பல்கலைக் கழக ஆசிரியர் மாணவர்களைக் கண்டதிலும் நான் கண்ட உண்மை இதுவாகும், மாடு, குதிரை, வண்டிகள் கிடையா, ஊர் நெடுகிலும் பலவிடங்களில் புதிய சாலைகளும் இரெயில்

பாதைகளும் போட்டவண்ணம் இருக்கின்றனர். நேற்று விமான நிலையத்திலிருந்து வந்தபோது பல புதிய சாலைகள் பணியிடை வளர்வதைக் கண்டேன். அகநகரில் நாங்கள் சென்றபோது, சாலைகளில் மட்டுமின்றி, ஓடைகளிலும் படகுகள் மூலம் வாணிபம் நடைபெறக் கண்டேன்.

பிற்பகல் உணவுக்குப் பிறகு நேரம் இருந்ததால் நாட்டின் சிறந்த பொருட் காட்சியினைக் (Museum) காண நினைந்து வாடகை மோட்டாரில் சென்றோம். ஆயினும் அங்கே சென்று கண்டபோது, திங்களன்று அவை மூடப் பெறும் விடுமுறை நாள் என அறிந்தோம். என்னுடன் வந்த மாணவர் நல்லவரே. ஆயினும் அவருக்கு ஒன்றும் தெரிய வில்லை. இன்றேல் இன்னும் பல இடங்களைக் கண்டிருக் கலாம். காட்சிச் சாலை இல்லை எனவே இந்நகரின் பெரிய பூங்காவினுள் புகுந்தோம். அதன் வழியாகவே பல்கலைக் கழகம் செல்லலாம் என்றார். எனவே சோர்வினும் தளராது, சாலை நிழலில் நடந்தேன். இங்கே சற்று வெய்யில் கடுமையாக இருந்தது. மெள்ள, பூங்காவின் சாலை களினுள்ளே செல்லும்போது வழியிடை பெரிய நீர்த் தேக்கம் கண்டோம், அதில் பல படகுகளில் காதலர் களி நடம் புரியப் படகோட்டி மகிழ்ந்தனர்; சாலைகளிலும் அவ்வாறே. எனவே இது காதலர் பாதை என்றேன். அவரும் ஆம் என்றார். புதுமணத் தம்பதிகள் தேன்பிறை நாட்கள் கொண்டாடுவது போன்று இங்கே வந்து மகிழ்வார்களாம். பூங்காவும் அழகாக இருந்தது. பலர் ஆங்காங்குள்ள பலகை களின் மேல் படுத்து உறங்கினர்.

வழியிடை இந்நாட்டுப் பெருங் கோயில் (அதிட்ட அன்னை) (Godess of Fortune) ஒன்றினைக் கண்டோம். அது புத்தர் கோயிலன்று. இந்நாடு புத்தர் பிரானைப் போற்றும் நாடாயினும் பிறதெய்வ வழிபாடுகளும் உள்ளன. புத்தர் பிறந்த நம் நாட்டில் அந்த மதம் வாழவில்லையாயி னும் இங்கேயும் அண்டை நாடாகிய சைனாவிலும் அது சிறக்க வாழ்கின்றது. எனினும் அவர் கொள்கையாகிய

'கொல்லாமை' இங்கே போற்றப் பெறவில்லை. எல்லாச் சமயங்களும் அப்படித்தானே. கொள்கைகளைக் காற்றில் விட்டு, சடங்குகள், வெளிவேடங்கள் இவற்றைக் கொண்டு தானே இன்று சமயங்கள் வாழ்கின்றன.

மேலை நாடுகள் போலவே இந்நாட்டிலும் 18 வயதுக்கு மேல் பிள்ளைகள் தாய் தந்தையருடன் இருப்பதில்லையாம். என்னுடன் வந்தவரும் அப்படிப்பட்டவரே. அவருக்கு 20 வயது இருக்கும். 'எம். ஏ' பயில்கிறார். எனினும் இவரே சம்பாதித்துத்தான் வாழ்கிறாராம். கல்லூரி அல்லது பல்கலைக் கழகப் படிப்பிற்கு, அமெரிக்கா நாட்டினைப் போல அவ்வளவு செலவு செய்ய வேண்டியதில்லைபோலும், எனினும் கல்வியின் தரம் மிக உயர்ந்துள்ளது எனக் கூறினர். ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்லூரிவரையில் அரசாங்க நேரடிப் பர்வையிலேயே உள்ளனவாம். தனிநிலை (Autonamus)த் தகுதியும் தனியார் பள்ளிகளும், ஒரே தேர்விற்குப் பலவகையான பாடமுறைகளும் இங்கே கிடையா. அனைவருக்கும் அரசருக்கும் ஆண்டிக்கும் ஒரே வகையான கல்வி முறைதான். நம்நாட்டை நினைத்துப் பார்த்தேன். தமிழ் நாட்டில் 10வது வகுப்பில்தான் எத்தனை வகையான தேர்வு. எங்கோ உள்ள ஒரு தனிநபர் தேர்வு நடத்தி அனுப்பினாலும் அதுவும் சரி என்று கொள்ளும் பரந்த மனப்பான்மை - மொத்தத்தில் தரத்தின் நிலை?

3மணி அளவில் பல்கலைக் கழகம் சென்றோம். வழியிடைக் கண்ட பல பிரிவுகளையும் (மருத்துவக் கல்வி உட்பட) கண்டோம். அவர் அறைக்கும் சென்று, தொலை பேசி வழி நாளைச் சுற்றுலாவுக்கும் மறுநாள் ஹாங்காங் பயணத்துக்கும் உறுதி செய்து கொண்டோம். திரு. காரசிம்மா அவர்கள் அறைக்குச் சென்றபோது அவர் தம் தனி நூல் நிலையத்தைக் கண்டேன். அங்கே தமிழ் நாட்டைப் பற்றிய பல ஆங்கில நூல்கள் இருந்தன. கல்வெட்டில் வரும் சோழர் காலப் பெயர் பற்றிய விளக்கங்களை இவரே மூன்று தொகுதிகளில் வெளியிட்டுள்ளார்.

இராமலிங்கர் போன்றார் பற்றிய நூல்களும் இருந்தன. இவர் தம் தமிழ்ப் பற்றே - முன்பின் அறியாத எனக்கு எல்லா உதவிகளும் செய்யத் தூண்டின என எண்ணினேன். மொழி பற்றிப் பல பேசினோம்; பிறகு தத்துவத்துறையினையும் வடமொழி துறையினையும் கண்டு வர அனுப்பினர். தத்துவத்துறைப் பேராசிரியர் அவர்களும் என்னை வரவேற்றுத் தம் நூல்நிலையத்தைக் காட்டினார். இந்திய நாட்டு எல்லாத் தத்துவங்களும் சைவசித்தாந்தம் தவிர - அங்கே பயிற்றப் பெறுகின்றன - நூல்கள் உள்ளன. சைவ சித்தாந்தந்தைப்பற்றிக் கவலைப் படுவார் யார்? முன்னரே இது பற்றிக் குறித்துள்ளேன். பேராசிரியருக்கு அது புரியவே யில்லை. நான் விளக்கிச் சொல்லி, வேண்டுமானால் சில ஆங்கில நூல்களை அனுப்ப முயல்வேன் என்று கூறினேன். அவரும் எழுதுவதாகக் கூறினார். என் முகவரியும் தந்தேன். வடமொழிப் பேராசிரியர் (ஜப்பானியர்தாம்) வகுப்புக்குச் சென்றிருந்தார். அவர் நூல் நிலையம் கண்டேன். இராமாயணம், பாரதம், வேதம் போன்றவற்றின் ஆங்கில ஜப்பானிய மொழி பெயர்ப்புகள் இருந்தன. இவற்றைக் காட்டிய மாணவர், பின், தாம் காந்தி அடிகளைப் பற்றி ஆராய்வதாகவும் (எம். ஏ. தேர்விற்கு) அவரைப் பற்றிச் சில தகவல் சொல்ல வேண்டும் எனவும் கேட்டார்; சென்னேன். பின் பேராசிரியர் காரசிம்மா அறைக்கு வந்தேன். அவருக்குத் தொடர்ந்து அங்கே வேலை உள்ளதெனக் கூறி, தெருவில் வந்து, வாடகைக் காரினை ஏற்பாடு செய்து, அவனுக்கும் செல்லவேண்டிய இடம் பற்றி விளக்கி, கைகூப்பி வழி அனுப்பினார். அவர் தற்போது பல்கலைக் கழகத் துணைவேந்தருக்கு அணுக்கத் தொண்டராய் - தனி அலுவலருக்கும் மேற்பட்டவராய் உதவி புரிகிறார். அடுத்த சூலையில் சென்னை வரும்போது பள்ளிக்கு வருவதாகவும் சொன்னார். தேவையானவற்றைத் தொலைபேசியில் சொல்லச் சொன்னார். அவரிடம் விடைபெற்று வந்து எட்டு மணி அளவில் ரொட்டி, ஜஸ்கிரீம், பிஸ்கட் உண்டு இந்தக் குறிப்பினையும் எழுதி முடித்து 9.30க்கு உறங்கச்சென்றேன்.

டோக்கியோ 4-6-85

'எங்கும் ஜப்பான் எதிலும் ஜப்பான்' என்பதைக் கண்டேன். பெரிய தொழிலகங்கள், அலுவலகங்கள், அரசியல் நிலையங்கள். இரெயில் நிலையங்கள் எங்கும் ஜப்பான் மொழியே. தெருப்பெயர், வண்டிகள் செல்லும் நெறி, விடுதி யாவும் அம் மொழியிலேயே. பேசுபவர் அம் மொழியிலேயே. ஒரு சிலரே ஆங்கிலம் அறிந்தவர். எனவே இங்கே புழங்குவது இதுவரை இருந்தது போன்று இல்லை; சற்றே கடினமே. அரசாங்க அலுவலகமே இப்படி இயங்கின் என் செய இயலும்? இந்நாட்டுக்கு அரசியாக ஆட்சிபுரிந்தவர் இன்று ஓய்வு ஊதியம் பெற்று, புதிய அரசியல் சட்டத்தின் கீழ் அதிகாரம் அற்றவராக உள்ளார். எனினும் அவருக்கு வேண்டிய சலுகைகள் அனைத்தும் தரப்பெறுகின்றன. நாட்டின் கோடியில் உதயசூரியன் காட்சி அளிக்கிறான். உண்மையிலே இந்நாட்டிலிருந்துதான் நாளே உதய மாகின்றது; பிறகுதான் பிற நாடுகளில். இதன் நிலையினை நான் அன்று வரும்போது கண்டேன். இவற்றை எல்லாம் எண்ணிக்கொண்டே உறங்கிய நான் விடியலில் கண் விழித்துக் கடன்களை முடித்துக்கொண்டேன். 7.30க்குச் சிற்றுண்டி கொண்டேன். சிற்றுண்டி உண்ணும்போது, சென்னையிலிருந்து (மயிலை) டாக்டர் கணபதி என்பவர் (நேற்று இரவு வந்தவர்) அறிமுகமானார். அவரும் நகர் காண நான் பதிவு செய்த அதே 'பஸ்'சில் பதிவு செய்திருந்தார். எனவே இருவரும் ஓட்டல் பாலஸ் சென்றோம். அங்கே என்னைக் காபா மடத்தில் சந்தித்த திரு. சாமி

என்பவர் (சென்னையில் பெரு வாணிபர்) குடும்பத்துடன் கலந்து கொண்டார். எனவே பயணம் தமிழர்களுடன் அமைந்தது. பஸ் பலரையும் பல ஓட்டல்களில் ஏற்றிக் கொண்டு ஊர் முழுவதும் சுற்றி வந்தது. நகர எல்லைக்குள் பல இடங்களையும் எங்களுக்குக் காட்டி விளக்கினர்.

இந் நாட்டின் நிலை பற்றியும் கேட்டோம். இந் நாட்டில் அரசராக இருந்தவர் இப்போது இல்லை என்பதை முன்பே குறித்தேன். ஐந்து பெரும் கட்சிகள் நாட்டில் உள்ளனவாம். அவற்றுள் (Democratic party) டெமாக் கிரடிக் பார்டியே ஆளும் கட்சியாக உள்ளதாம். தலைமை அமைச்சர் திறம்படச் செயல்புரிகிறாராம். அடுத்து சோஷிய லிஷ்டு கட்சி உள்ளதாம். இவ்வாறு ஆட்சி முறையினைப் பற்றி விளக்கி, கல்வியைப் பற்றியும் கூறினார். டோக்கியோ நகரில் ஒரு கோடியே இருபது இலட்சம் மக்கள் வாழ்கிறார் கள் என்றும் 500 மேல் நிலைப் பள்ளிகள் (Junior College), 900 உயர் நிலைப் பள்ளிகள், 15,000 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன என்றும், அனைத்தும் அரசாங்கமே நடத்துவன என்றும் தனியார் பள்ளிகளே கிடையாது என்றும் பாட நூல்கள் அனைத்தும் அரசாங்கமே வெளியிடுகிற தென்றும் கூறினார். ஆசிரியர் ஒருவருக்கு 45 மாணவர் உள்ளனராம். ஆரம்பப் பள்ளியில் பயில்வோருள் 94 சதவீதம் உயர்நிலைப் பள்ளிக்குச் செல்லுகிறார்களென்றும் 40 விழுக்காடு மேல் நிலைப்பள்ளிக்கும் அதில் 44 விழுக்காடு பல்கலைக்கழகங் களுக்கும் செல்கிறார்கள் என்றும் கூறினார். அனைத்தும் சரியா என அரசாங்க வெளியீடான நான் வாங்கிய நூல்கள் வழியே கண்டறிதல் வேண்டும்) எனினும் இங்கே கட்டாயக் கல்வி திட்டமாக அமுலில் இருப்பதால் (நம் நாட்டைப் போலன்று) படிக்காதவர்களே இல்லை எனலாம்.

நகர் எல்லையில் புகுந்தபோது மேலும் அவர் சொன்னது துணுக்குறச் செய்தது. இங்கே அடிக்கடி எரிமலை குமுறும் என்றும், கடந்த பல ஆண்டுகளாக இல்லாமையால் பலப்பல உயரிய கட்டடங்கள் உயர்ந்

துள்ளன என்றும் விரைவில் எரிமலை குமறிக் கக்கும் காலம் வரப் போகிற தென்றும் அதற்குரிய முன்குறிப்புக்கள் தோன்றி விட்டன என்றும் கூறினார். ஏனோ இதைச் சொன்னார் என்பது புரியவில்லை. மேலும் நாட்டில் 400 விமானங்கள் உள்ளதென்றும் கூறினார். சிவ, நாக, கந்தா போன்ற பெயர்களில் சாலைகளும் பகுதிகளும் உள்ளமை யின் ஒரு காலத்தில் இந்நாடு நம் நாட்டொடு மொழியாலும் பிற வகையாலும் தொடர்பு கொண்டிருந்தது உண்மையோ என்னுமாறு இருந்தது. 1867ல் உள்நாட்டுப் போர் வந்த தாகவும், பிறகே நாட்டுப் பொருளாதாரம் கடந்த ஒரு நூற்றாண்டில் நன்கு வளர்ந்ததாகவும் கூறினார்.

இந்நாட்டின் அரசியாகவும் அரசராகவும் இருந்த வரும் போருக்குப் பின் முழு ஓய்வு பெற்று, அரசியல் தலைமையை விட்ட பின்பு அவர்கள் வாழப் பெரிய இடம் சுமார் 400 ஏக்கர் நிலத்தில், கட்டிடங்கள் பல உட்பட தரப் பெற்று அதில் சிறக்க வாழ்கின்றனராம். வாயில்களில் தக்க காவலர் நின்றனர். உள்ளே செல்ல இசைவு பெற வேண்டும். எனவே வெளியே இருந்து கண்டோம். ஆழ்ந்த அகழி, சுற்றிய மதில், அதற்குள் சோலை - உள்ளே அரண்மனை என்ற அதன் தோற்றம் பழங்காலத் தமிழக அரசர் மாளிகையை நினைவூட்டிற்று. வாயிலும் பழங்காலக் கோட்டை வாயிலாகவே இருந்தது.

இந்நாட்டில் சப்பானிய மொழியன்றிப் பிற மொழி களைக் காண இயலாது எனக் குறித்தேன். எங்கோ ஓரிரு இடங்களில் ஆங்கிலம் இருப்பினும் இவை அமெரிக்க உச்சரிப்பைக் கொண்டுள்ளன (உதாரணம் நகரம் - Citi) ஆயினும் போக்குவரத்து அனைத்தும் நம் நாடுகளைப் போன்றே உள்ளது. பெருங் கடைத் தெருக்களும் பெரு வங்கிகள் நிறைந்த கடைத் தெருக்களும் கடந்தோம். இசை, நாடகம், நாட்டியம், ஆகிய கலை வளர்க்கும் பெருங்கூடம் ஒன்றும் கண்டோம். அப்படியே சுமார் 75, 000 பேர் தங்கிக் காணக் கூடிய ஒரு விளையாட்டரங்கமும் கண்டோம்.

நேற்று அதிட்ட அன்னை கோயிலைக் கண்டேன். (Goddess of Fortune) இன்று அன்புக்கன்னைக் கோயிலைக் கண்டேன் (Goddess of mercy). பழமையோடு புதுமையும் விரவியநிலை அங்கே குடி கொண்டிருந்தது. இந் நாட்டின் சமயம் பௌத்தமாயினும் 'ஷண்டோ' சமயமே பழம் சமயமாகவும் இன்றும் பலரால் கொள்ளப்படும் சமயமாகவும் உள்ளதாம். அக் கோயிலில் பசுமரத்தடியில், நம் நாட்டில் ஓலைச் சுவடிகளில் எழுதுவது போன்று மரங்களை மெல்லியனவாக்கி அவற்றில் இந்நாட்டு மொழியில் பலவற்றை எழுதித் தொங்க விட்டிருந்தனர். அக்கோயில் 175 ஏக்கர் பரந்த நிலப்பரப்பில் சோலைகளுக்கு நடுவில் அமைந்திருந்தது. இச் சமயம் இயற்கையின் அடிப்படையில் அமைந்ததாம். அத் தெய்வம் உள்ள கோயில் ஒன்றினையும் சென்று கண்டோம். பௌத்த சமயத்தைப் போன்றே கோயிலில் மூர்த்தி இல்லை. வாயில் காவலர் இருந்தனர் (துவாரபாலகர்). பௌத்தர் கோயில்களிலும் துவாரபாலகர் உள்ளனர் தெய்வங்களி லெல்லாம் அன்னையராகவே உள்ளனர். ஒரு கோயில் 8-ம் நூற்றாண்டில் கட்டப் பெற்றதாம். ஒரு கோயிலில் கோபுரத்தில் ஐந்து நிலைகள் இருந்தன. அந்த ஐந்தும் மண், நீர், நெருப்பு, காற்று, விண் ஆகிய பஞ்ச பூதங்களைக் குறிக்கும் என்றனர். 'நிலம் நீர் தீ வளி விசும்பு என்றைந் தின் திறம் உள்ளானை' என்று நம் அடியவர் பாடிய பாடல்கள் நினைவுக்கு வந்தன.

ஒரு பெரிய இரும்புக் கோபுரத்தின் மேல் ஏற வைத்தனர். அதன் உயரம் 1092 அடி; ஆனாலும் 500 அடிதான் ஏறி னோம். சுற்றிக் கண்டோம். அமெரிக்க நாட்டு உயர் மாடங்களுக்கும் கூடம்புகளுக்கும் பாரிஸ் நகர் இரும்புக் கோபுரத்துக்கும் இது இணையாகாது. 13ம் நூற்றாண்டில் இப் பகுதி 'ரோம் நாட்டுக் கீழைச்சாம்ராஜ்யம்' என அழைக் கப் பெற்றதாக அவர் கூறினார். அது வரலாற்றாளரிடம் கேட்டு அறிய வேண்டிய ஒன்றாகும். பல பெருங் கட்டிடங் களையும் பெரும் பூங்காக்களையும் காட்டினர். பலவிடங்

கள் இளங் காதலர் உலவுவதற்கெனவே அமைக்கப்பட்ட னவெனவும் கூறினார். பெரிய நூல் நிலையத்தே (National Library) 2,100,100 நூல்கள் உள்ளனவாம். இந்திய நாட்டு மொழிகளில் (தமிழ் உட்பட) நூல்கள் உள்ளனவாம். இந்த நாட்டு அதி உயர் நீதிமன்றத்தினை (Supreme Court)யும் கண்டோம். இங்கே பல பெரிய ஓட்டல்கள் உள்ளன. நாளுக்கு 100 டாலர்கள் (ரூ. 1200,) வாங்குவன உண்டாம். ஒரு ஓட்டல் (New Olionic) 2000 அறைகள் கொண்டு பரந்த நிலப்பரப்பில் உள்ளமை கண்டோம். இன்னும் இது போன்ற விடுதிகள் பல.

வழியிடை முத்துக் குளித்தெடுக்கும் - தூய்மைப் படுத்தும் அலுவலகம் சென்றோம். இந்நாட்டில் இது பெருங்கலை போலும். சாதாரணச் சிப்பியிலிருந்து எப்படி முத்து உண்டாகிறது? அதை எப்படி எடுப்பது? என்பன வற்றையெல்லாம் காட்டினர். சங்கிடை முத்துப் பிறப்பதை யும் காட்டினர். 'கத்தும் தரங்கம் எடுத்தெறியும் சங்கின் முத்து' என்ற பழம் பாடல் நினைவுக்கு வந்தது. உயர்ந்ததான முத்துக்கள் பலபல அளவில் இருந்தன. ஒரு அங்குல விட்ட முள்ள முத்தும் இருந்தது. ஆயினும் விலைகள் அதிகம் - பல ஆயிரம். எல்லாமே நல்ல முத்துக்களானமையின் விலைகள் அதிகம். 'NADE' என்ற சிப்பியில் இருந்து நல்ல முத்து கிடைக்குமாம். காணச் சென்றவருக்கு எண் தந்தனர். 8 'எண்ணுக்கு முதல் பரிசு, ஒரு முத்து. 5000 எண் (250 ரூபாய்) பெருமான முத்தை அளித்தனர். இந்த நாட்டிற்கு '8' அதிஷ்ட எண்ணாம். '4'ம்6ம் 9ம் கெட்ட எண்களாம். விமானத்தில் கூட உட்கார 4(D)6(H) 9(I) கிடையாது.

பின் வேறுசில கோயில்களையும் காட்டினர், புத்தர் சாம்பல் புதைத்த இடத்தினையும் அதன்மேல் எழுந்த கோயிலையும் பிறவற்றையும் கண்டோம். எங்களுக்கு வழி யில் இடையிடையே சில ஜப்பான் சொற்களைக் கற்றுத் தந்தார். கூலா (KULA) என்றால் எவ்வளவு (How much) (KARAI) காரை என்றால் அதிகம் (Too much) என்று சொல்லித் தந்தார். இன்னும் பல சொற்கள்.

பின் வானொலி, தொலைக்காட்சி நிலையங்களைக் கண்டோம். ஒவ்வொரு பகுதியினையும் நுழைந்து பார்த்தோம். 50% அளவில் அரசாங்க பொது மக்கள் கலந்த உடைமையாம். பொது மக்களையும் பள்ளிப் பிள்ளைகளையும் காண விடுகின்றனர். பல தொலைக்காட்சிகள் எடுக்கப் பெற்றன. இவ்விரண்டிலும் இந்நாட்டு மொழியே இடம் பெறுமாம், எப்போதோ சில சமயங்களில் ஆங்கில நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றனர். அழகிய ஆறடுக்கு மாளிகையில் இந்த நிலையம் அமைந்துள்ளது. தொலைக்காட்சி ஏழு குழாய்கள் வழியாக அனுப்பப் பெறுவதாகவும் அவற்றுள் இரண்டு கல்வி பற்றியே உள்ளதாகவும் கூறினர். பல பெருங்கடைகள் வழி வந்தோம். 'Departmental Store' எனப் பல உண்டு என்றார். அவை அரசாங்கக் கடைகளா என்றேன். அவர் சிரித்தார். இந் நாட்டில் அரசாங்கம் வாணிபம் செய்யாது; ஆனால் விலைகளை உயர விடாது என்றார். இப்பெருங்கடைகளெல்லாம் விடுமுறை நாட்களில் (ஞாயிறு உட்பட) திறந்திருக்கும் என்றும் அன்று மக்கள் பலரும் அங்கே கூடுவார்களானமையின் எந்த வாகனமும் அந்த வழியாகச் செல்ல அனுமதிக்கப்படமாட்டா என்றும் கூறினார். மக்கள் அந்த நாட்களை விழா நாட்களைப் போலவே தெருக்களில் ஆடியும் பாடியும் மகிழ்ந்து, வீட்டிற்குத் தேவையானவற்றையும் வாங்கிக் கொண்டு செல்வர் என்று கூறினார். பல தெருக்கள் - மேலும் கீழும் வளைந்த நெளிந்த பாலங்கள் - கடந்தோம். கடைசியாக ஒரு கிராம வீட்டிற்கு வந்தோம் அங்கே ஜப்பானின் பழைய பண்பினைக் காண முடிந்தது.

கிராம வீடு மரத்தால் ஆனது. யாரும் வாயிற்படி தாண்டி காலில் செருப்பு - பூட்ஸ்சு அணிந்து செல்லலாகாது. உள்ளறையில் கோரைப்பாய் விரித்திருந்தது. எங்களுக்கெல்லாம் தேநீர் தந்தனர். கீழே தரையில் தடுக்கு இட உட்கார்ந்து எதிரிலுள்ள சிறு பலகைமேல் வைத்தே சாப்பிட்டோம். குழந்தைகளை இட சிறு தொட்டில்கள், சாமான்கள் வைக்க உயர் ஊஞ்சல்கள் இருந்தன.

அறைகள் கீழ் - மேல் இருமாடங்களிலும் தூய்மையாகவும் பொருள்கள் செம்மையாகவும் வைக்கப் பெற்றிருந்தன. பண்டைய ஜப்பானிய மக்கள் விருந்தோம்பும் முறையும் வாழ்வியலும் நன்கு விளக்கப் பெற்ற அந்த வீட்டினைக் கண்ட உணர்வுடனேயே நாங்கள் விடுதிக்குத் திரும்பினோம்.

இந் நகர் எல்லையில் 1970க்குப் பின் தற்போதுதான் (மார்ச் 17 தொடங்கி செப்டம்பர் முடிய) உலக பொருட் காட்சி நடைபெறுகிறது. (EXBO) ஆயினும் அதுபற்றி இங்கே யாரும் கவலைப்படவில்லை. யாரும் வெளிநாட்டு மக்களும் அதற்கென அதிகமாக வரவும் இல்லை, சாதாரணமாக வரும் யாத்தியகர் கூட்டமே இப்போது குறைவு என்றனர். நான் சிலரிடம் கேட்டேன் அங்கே லாஸ்ஏஞ்சலசில் 'டிஸ்டினி லேண்டு' பார்த்தபின் இதைப் பார்க்க வேண்டுவதில்லை என்றனர். அறிவியல் முன்னேற்ற அடிப்டையில்-நுண் அணு Electronic, ஆய்வு நெறி வளர்ச்சியில் அமைந்த காட்சி அது என்றும் பெரும் பகுதி மக்கள் விளையாட்டு, வேடிக்கைகளுக்கே உரிய இடமென்றும் கூறினர். நான் நாளை ஒரு வேளை தங்கி வேண்டுமாயினும் கண்டு செல்லலாம் என எண்ணினேன். ஆயினும் பயணச்சீட்டு மாற்ற வேண்டி வருமாதலாலும் யாரும் அதற்கு முக்கியத்துவம் தராத காரணத்தாலும் அந்த எண்ணத்தைக் கைவிட்டேன்.

விடுதிக்கு வந்து சற்றே சோர்வாயிருந்தமையால் ஓய்வு கொண்டு, இந்தக் குறிப்பினை எழுதி முடித்தேன். இங்கே 'YMCA'ல் நடைபெறும் ஆங்கிலப் பள்ளியினைப் பார்த்தேன். பெரியவர்களுக்கென ஆங்கிலம் பயிற்றும் பள்ளி வரையறுத்த பாடத் திட்டங்களோடு, சிறந்த முறையில் நடைபெறுகின்றது. முதியோர் ஆங்கிலம் அறிய நல்ல வாய்ப்பு, இங்குள்ளவர்களே ஆசிரியராக உள்ளனர். இவ்வாறு கடந்த நாட்களில் உலகின் கீழைக் கோடியில் நாள் காணும் நல்ல நாட்டின் தலைநகரினைக் கண்ட மனநிறைவில் இரவு உணவு உண்டு படுக்கச் சென்றேன். காலை 6மணிக்கே புறப்படவேண்டும்.

ஆங்காங் 5-6-85

டோக்கியோவில் காலை 4மணிக்கே காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஆறு மணிக்கே புறப்படத் தயாரானேன். எனினும் 'EXBO'வைக் காணலாமா என்ற எண்ணம் தோன்றிற்று. நேராக நகரில் உள்ள விமானப் பண்மனை சென்றேன். அங்கே ஒரு சிலரை விசாரித்தேன். யாரும் அது தரம் உயர்ந்ததென்றோ பார்க்கக் கூடிய ஒன்று என்றோ சொல்லவில்லை. பயணச் சீட்டு வழங்குபவரிடமும் விசாரித்தேன். அமெரிக்க நாட்டில் பலவகை நுண்ணணு ஆய்வினையும் தொழிற்சாலைகளையும் கண்டவர்களுக்கு இது ஒன்றும் புதியது அன்று எனவும், எல்லாவற்றையும் ஒரு சேரக் காண்பதன்றி வேறு சிறப்பு இல்லை எனவும், மக்கள் யாருமே இப்போது அதுகுறித்து, வெளிநாட்டிலிருந்து வரவில்லை எனவும் பெரும்பாலும் பிள்ளை விளையாட்டுப் பெருந்திடல் (Greater America என்ற விளையாட்டிடம்) என்றும் கூறினர். எனவே நான் செல்லவேண்டும் என்ற ஆசையை விட்டேன். அப்படியே சென்றாலும் நான் முன் ஒருமுறை கூறியபடி, எனக்கு அந்த அறிவியல் வளர்ச்சியின் நுணுக்கங்கள் எங்கே தெரியப் போகின்றது. நம் சென்னையில் ஆண்டு தோறும் நடைபெறும் பொருட்காட்சியினும் அளவில் பெரியதாய் - உலக நாடுகளின் கடைகள் பல உடையதாய் - சற்றே அறிவியல் வளர்ச்சியினை அதிகமாக விளக்கிக் காட்டுவதாய் அமைந்திருக்கும் என்ற முடிவில், குறித்தபடி என் பயணத்தை மேற் கொள்ள முயன்றேன்.

அதிகம் நடக்க முடியாமல் உடல் நலமும் சரி இன்மையால் குறித்தபடி புறப்பட்டேன்.

இங்கே நகர் நடுவிலேயே விமானப் பயணத்துக்கு ஏற்பாடு செய்துள்ளனர். எல்லா விமானப் போக்குவரத்துக்கும் (இந்தியா உட்பட AIR INDIA) இங்கே வசதி உண்டு. இது போன்ற நிலை வேறு எங்கும் எந்த நாட்டிலும் காண வில்லை; எனக்கு இது பெரிய அதிசயமாக இருந்தது. நான் என் சாமான்களை இங்கேயே பதிவு செய்து, உந்து வண்டியில் புறப்பட்டேன். 7.30க்கு விமான நிலையம் வந்து சேர்ந்தேன். உந்து வண்டி நான்கைந்து கல்தூரம் மேல் இரண்டாம் மாடிப்பாலத்தின் மேலேயே வந்தது. புறப்பட்ட இடமும் அப்படியே. இருபுறமும் உயர் மதில்கள் - வெளியே இன்ன உள்ளன என்று தெரியாது. ஒரு வேளை வெளி நாட்டார் கண்படக் கூடாது என்று அப்படி அமைத்துள்ளார் களோ என எண்ணினேன். பலப்பல சிறுசிறு தொழிற் கட்டடங்கள் தெரிந்தன. வழியில் நான்கு இடங்களில் 'டோல்கேட்' எனும் பாதைச் சுங்கவரி வாங்கிவிட்டனர். ஒரே வண்டி எத்தனை முறை சென்றாலும் திரும்பினாலும் ஒவ்வொருமுறைக்கும் வரிகட்டவேண்டும். இந்த நிலை சற்றே எனக்கு அதிகமாகப்பட்டது. நம் நாட்டில் ஒரு நாளைக்கு ஒருமுறை கட்டினால் போதும். முப்பது கல்லுக்குள் நான்கு முறை (ஒருமுறைக்குக் குறைந்தது 200என் - 10ரூபாய் - வாங்குகிறார்கள் என்றால், ஒருமுறை விமான நிலையம் சென்று வர 80ரூபாய் அதற்கே செலவாகும்) இது அதிகம் தானே. ஆயினும் அனைத்தும் அரசாங்கமே மேற் கொண்டுள்ள காரணத்தாலும் வருவாய் அத்தனை யும் சாலை வளர்ச்சிக்கே பயன்படுவதாலும் மக்கள் விருப்போடு தருகின்றனர் என அறிந்தேன். உயரிய பாலம் கீழே இரு பாதைகள் இப்படித் தொடர்ந்து ஐந்து கல் தொலைவு - இதை எண்ணிப் பார்க்க முடியவில்லை. அரசாங்கமும் பொது மக்களும் 50% 50% விதம் இட்டு, எல்லாத் துறைகளையும் இயக்குகின்றனர்.

இந் நாட்டுக் காவல் முறை சிறந்தது. எங்கும் சாலை களிலும் சாலைகள் இணைப்பிலும், உந்துவண்டி நிற்குமிடங் களிலும் விமான நிலையத்திலும், அரசு அலுவலகங்களிலும் கல்வி நிலையங்களிலும் திறம்படக் காவல் புரிவதோடு, அறியாதோருக்குச் சிறந்த வழிகாட்டிகளாகவும் உள்ளனர். அவர்கள் செயல் நினைந்து விமானநிலையம் வந்தபோது, எனக்கு அத்தகைய காவலர் ஒருவர் உதவி செய்தார். இவ் விமானநிலையம் மேலை நாட்டு விமான நிலையங்களைப் போன்று மிகப் பெரியது. முறைப்படி, காவல் துறை, சுங்கத்துறையினர் பிற அதிகாரிகள் ஒவ்வொரு பயணியை யும் சோதித்து அனுப்புகின்றனர். மிக்க மரியாதையோடு அனைவரையும் நடத்துகின்றனர். நான் விமான நிலையம் வந்து, காலைச் சிற்றுண்டி கொண்டேன். நாணய மாற்றமும் செய்து கொண்டேன். எனக்குரிய இடத்தில் அமர்ந்து, சரியாக 9.30க்கு விமானத்தில் ஏறினேன். முன் கூட்டியே எனக்கு மரக்கறி உணவுக்கு ஏற்பாடு செய்திருப்ப தைச் சொன்னார்கள். பொதுவாக எல்லாப் பணியாளர் களும் அன்புடன் எல்லாப் பயணிகளையும் நடத்துவது மகிழ்ச்சி தரத்தக்கதாக இருந்தது. விமானமும் சரியாகப் 10மணிக்குப் புறப்பட்டது. கீழை நாட்டுத் திலகமாகிய ஜப்பான் நாட்டை வணங்கி விடைபெற்றேன். (இரவே திரு. பேராசிரியர் காரசிம்மா அவர்களுக்குத் தொலைபேசி வழியில் கூறி விடைபெற்றேன். அவர் ஜூலையில் சென்னை வருவதாகக் கூறினார்).

ஜப்பானிய மக்கள் பெரும்பாலும் நடுத்தர வகுப்பினைச் சார்ந்தவர்களே. பெரும் ஆடம்பர வாழ்வோ போக வாழ்வோ அவர்கள் அறியார் - பெரும்பாலோர் நடந்தும் பொதுப்போக்குவரத்து வழியுமே செல்கின்றனர். பஸ்களும் நிறைய உள்ளன. பொருள்கள் விலை மேலைநாடுகளைப் போன்று உயர உள்ளதால் பலர் உண்மையில் வாடுகின் றனர். பலர் (flat) அடுக்குகளில் வாழ்கின்றனர். துணிகளை யெல்லாம் துவைத்து தத்தம் பகுதியில் உள்ள புறநிலையில்

(Balcony) காய வைகின்றனர். துவைக்கும் காயவைக்கும் மின்சாரப் பெட்டியினை (நம் நாட்டினைப் போன்று) பலர் அறியார். பம்பாய்போன்ற நகரங்களில் மாடி அடுக்களில் ஆடைகள் காய்வதுபோல இங்கும் காய்வதைப் பலவிடங் களில் கண்டேன். குளியல்கூடத் தொட்டிக் குளியல் போன்ற நிலை இல்லை. 'YMCA' போன்ற உயரிடத்தி லேயேயும் தொட்டிக் குளியல் இல்லை. பொழிவு (Shower)க் குளியலும் உண்டு. ஆயினும் பலர் குழாய்க்கடியிலிருந்து நீர் வாளியில் தண்ணீர் பிடித்து வைத்து, மணை இட்டு உட்கார்ந்து கொண்டு குளிப்பதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர் என்பதை 'YMCA'விலேயே கண்டேன். பொதுவாக மக்கள் வாழ்க்கைத்தரம் அவ்வளவு உயர்வாக இல்லையாயினும் நாட்டுப் பற்றுடன் நாட்டு முன்னேற்றத் திற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் அனைவரும் அயராது பாடுபடுகின்றனர். சுரண்டல், ஏமாற்றல் இல்லை என இவர்கள் பெருமைப்படுகிறார்கள். சமயப்பொறை உண்டு; சுற்றம் தழுவலும் மற்றவர் போற்றலும் உண்டு. இவர்தம் இத்தகைய நல்ல பண்புகளே மிகச் சிறிய நாடாயினும் உலகில் முதலிடத்தில் இதன் வாழ்வை உயரவைக்கின்றன.

டோக்கியோ நகர் முழுதுமே தூய்மையாக உள்ளது. தெருக்கடைகள் கிடையா; தெருவில் கண்டபடி நடக்கும் மக்கள் கூட்டமும் இல்லை. ஒருவரை ஒருவர் காணும் போதும் நாம் 'அப்படியா' 'ஹோ - ஹோ' என்பது போல இவர்கள் 'ஹோ, ஹோ' என்கிறனர். அமெரிக்கர் 'உம், உம்' என்பர். இருநாட்டவரும் அறியாதவர்களாயினும் வழியிடைக் கண்டால் இந்த முறையில் வாழ்த்திச் செல்வதை வழக்க மாகக் கொண்டுள்ளனர். இந்நாட்டு மக்கள் பழக்கவழக்கங் களும் உடை முதலியனவும் பெரும்பாலும் மேலை நாட்டு மக்களுடையதை ஒத்ததாக இருப்பினும், வாழ்வு முறை முதலியவற்றால் முற்றிலும் கீழ் நாட்டு மக்களை ஒத்தே காண்கின்றனர்.

விமானத்தில் நல்ல வகையில் மரக்கறி உணவு தந்தனர். விமானம் சரியாக 1-30 (ஆங்காங் நேரம் டோக்கியோ

நேரத்துக்கு ஒருமணி நேரம் பிந்தியது) இறங்கியது. நான் யாரையும் எதிர் பார்க்கவில்லை. அங்கேயே நாணயம் மற்றிக் கொண்டு, திரு. சொங்கலிங்கம் கொடுத்த இருவருக்கும் தொலைபேசியில் பேசினேன். திரு. அருணாசலம் கிடைக்கவில்லை. திரு. குமரப்பன் அவர்கள் என்னை நேராக அருகில் உள்ள 'இண்டர் நேஷனல் ஓட்டலுக்கு' செல்லுமாறு சொல்லி) அங்கே 5-30க்கு வந்து காண்பதாகச் சொன்னார். நான் உடனே வாடகை வண்டி எடுத்துக் கொண்டு (International Hotel) விடுதிக்குச் சென்றேன். முதன் முதல் எனக்குப் பதிவு செய்து வைத்த இடம் அது. ஒரு நாளைக்கு அமெரிக்க் டாலர் 55 ஆகியது (இந்த ஊர் டாலர் 391) நம் ஊர் ரூபாய் 791 (340+10% 5%) இங்கே அறையில் (பெரிய அறை)யில் ஒய்வு கொண்டேன். குமரப்பன் அவர்கள் 5-30க்கு வந்து சேர்ந்தார். அவர் அரசாங்கத்தில் (P.W.G) பணியாற்றுகின்றவராம்; சிறந்த பொறியானர்.

அவருடன் கடைத் தெருப்பக்கம் சென்றேன். விடுதி பெரும் கடைத் தெரு நடுவில்தான் உள்ளது. துணிகள் மிக மிக மலிவாக உள்ளன. என் கைப் பெட்டி கிழிந்துவிட்டதால், உடன் வேறொன்று வாங்கினேன். பலகடைகளில் நுழைந்து, பல பொருள்களைப் பற்றி விசாரித்தோம். தொலைக்காட்சி, இரண்டும் ஒன்று; வானொலி, புகைப் படக்கருவி, அழுக்குத் தூய்மைப்பொட்டி, பிற நுண் அணுவால் ஆக்கப் பெற்ற பொருள்கள் அனைத்தும் சற்றே விலை குறைந்தே காணப்பெற்றன. துணிகள் மிக மலிவு. அதிலும் தைத்த ஆடைகள் மிகக் குறைவு. சிங்கப்பூரிலும் இதே விலைக்குத்தான் கிடைக்கும் என்றனர். இரண்டிடத்தும் எந்தப் பொருளுக்கும் வரி இல்லையாதலால் விலை குறைவே. எனினும் உணவுப் பொருள்களும், வீட்டுவாடகையும் மிகமிக அதிகமாம். எனவே மக்கள் மிச்சப்படுத்துவது சற்றே கடினம் போலும், நம்நாட்டு உணவுக் கடையும் இரண்டொன்று இங்கே இருப்பதாகக் கூறி ஓரிடத்திற்கு என்னை அழைத்துச் சென்று விட்டு, அவர் வீடு சென்றார்.

நப் ஊர்க்காரர்; திருநெல்வேலி - நடராஜ ஐயர்; நல்ல சைவ உணவு விடுதியினை நடத்துகிறார். நான் இட்டலி 4 சாப்பிட்டேன். 15-50 டாலர்; அமொரிக்க டாலர் 2-25க்கு-நம் ரூபாய் சுமார் 28 ரூபாய். ஒரு இட்டலி 6 ரூபாய் வரி 1 ரூபாய் ஆக ஏழு ரூபாய் ஆகிறது. தயிர்சாதம் 30 ரூபாய்; மசால் தோசை 30 ரூபாய். இப்படியே உணவு பொருள் களின் விலை அதிகம். அவர் நல்ல தமிழர். அங்கு பணியாற்றுபவரும் தமிழர். அவர் ஆங்கிலத்தில் பட்டம் பெற்றவர். இங்கே வந்து பல ஆண்டுகளாக நல்ல வியாபாரம் செய்து முன்னுக்கு வந்துள்ளார். நம்நாட்டு இன்றைய அரசியலைப் பற்றியும் நன்கு அலசிப் பேசுகிறார். அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டேன்.

ஹாங்காங் ஆகிய இந்த சிறு பகுதி ஆங்கிலேயர் வசம் உள்ளது. ஆனால் சீனா நாட்டைச் சேர்ந்தது. 100க்கு 98 பேர் சீனர்களே வாழ்கின்றனர். மொழி ஆங்கிலமும் சீனமும். மக்கள் நன்கு பழகுகின்றனர். பல வியாபாரம் சீனர்களுடையதே. வடஇந்தியர் சிலரும் கடைகள் வைத் துள்ளனர். இது இந்தியாவைப் போன்ற ஆங்கிலேயர் தம் நேரடி ஆட்சியில் இருந்தது. இப்போதும் அப்படித்தான். 'காலனி' என்ற பெயரில் உள்ளது. இதன் தனித்தன்மையால் இந்தக் கோடியில் ஆங்கிலேயர் ஆதிக்கம் ஓங்க. அன்று வழி செய்தது. ஒப்பந்தப்படி 1997ல் இது சீனர்கள் வசம் ஒப்படைக்கப் படுமாம். தற்போது இங்கிலாந்து கவர்னர் ஒருவரே - ஒரு சில அமைச்சர்கள் துணை கொண்டு - ஆட்சி நடத்தி வருகின்றனர். ஆட்சிமுறை ஒழுங்காக உள்ளது என் கின்றனர். எங்கும் காவல்துறையினர் ஆண்களும் - பெண் களும் - பாதுகாவல் புரிகின்றனர். சாலைகளில் செல் வோரை ஆற்றுப்படுத்துகின்றனர். பலருக்கு ஆங்கிலம் தெரியவில்லை; சீனமொழியே. இங்கே பள்ளிகளில் ஆங்கில மும் சீனமும் கற்றுத் தரப் பெறுகின்றன. இங்கே தனிப் பல்கலைக்கழகமும் உண்டு.

இது ஒரு தனித் தீவாயினும் அடுத்த நிலத்தின் ஒரு பகுதியும் சேர்ந்தே இது தனிநாடாக (காலனி) உள்ளது.

இடையில் சுமார் 7கல் கடலுக்குள் இரெயில் பாதையும் சாலையும் அமைத்துள்ளனர். நாற்புறமும் மலைகள் உள்ளன. இயற்கை நன்கு இப் பகுதியினை அழகு படுத்து கிறது. கடலில் படகு விடும் விளையாட்டுப் பொழுதுபோக்கு மிக் அதிகம் என்றனர். பிலிப்பைன் நாட்டுமக்களும் இங்கே பலர் வாழ்கின்றனர். சீனா நாட்டின் பகுதியாயினும் நம் நாட்டின் புதுச்சேரி போன்று, இப்பகுதியின் பண்பும் பிறவும் தனித்த முறையில் நன்கு போற்றப்பெறுகின்றன. 1997 க்குப் பிறகு என்னாகும் என்பதை யாரும் சொல்ல முடியாது.

திரு. குமரப்பன் அவர்கள் நான் நாளை இங்கே என்னென்ன காணவேண்டும் என்பது பற்றி விளக்கிச் சொல்லி அங்கே செல்லும் வழிகளைப் பற்றியும் ஓரளவு விளக்கினர். சிறிது தூரம் அழைத்துச் சென்று அந்த இடங் களையும் காட்டினர். முழுத் தகவல்களையும் விசாரித்து நாளை காலை 7 மணிக்குள் தொலைபேசியில் பேசுவதாகக் கூறினர். நானும் அவர் விட்டுச் சென்றபின் ஒரு சில கடை களுள் நுழைந்து கண்டேன். பிறகு அறைக்கு வந்தேன். வெளியில் வெப்பமாக இருந்த போதிலும் உள்ளே குளிர் சாதனம் இருந்த படியால் அதிகக் குளிராயிருந்தது. நான் அதை நிறுத்தச் சொன்னேன்.

மாலையும் இரவும் தெருப்பக்கம் உள்ள தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்தேன். மக்கள் நம்நாட்டு 'மவுண்டுரோடு' சைனாபஜார் போன்ற இடங்களில் செல்வது போன்று சாரி சாரியாகச் செல்லுகின்றனர். அலுவலகம் விட்டபின் 5-30க்குப் பலர் (ஆணும் பெண்ணும்) அவலுலகங்களிலிருந்து வரிசை வரிசையாகச் செல்கின்றனர். இது பெரிய கடைத் தெருப் பகுதியானதலின், மக்கள் - பல வெளிநாட்டு மக்கள் பலர் கடைகளில் சாமான்கள் வாங்கச் சூழ்ந்து நின்றனர். நான் எல்லா ஊர்களிலும் விமானநிலையங்களிலும் வரியற்ற கடைகளைக் (Tax free Shops) கண்டுள்ளேன் (லண்டன். பாரிஸ், நியூயார்க், சிகாகோ, ஜப்பான்). எனினும் இங்குள்ள

கூட்டம் எங்கும் இல்லை. விலைகளும் மிகக் கொள்ளை மலிவுதான். எனவே பலர் கூடியிருப்பதில் வியப்பில்லை. ஜப்பான் நாட்டு மக்கள் பலர் ஜப்பானில் உண்டாகும் பொருள்களையே இங்கே வந்து வாங்கிச் செல்வதாகச் சொல்லுகிறார்கள். பலர் நடுத்தர, ஏழ்மை நிலையில் உள்ளனர். தெருக்கள் நெருக்கமானவை. பல மாடிக் கட்டடங்கள் மிக அதிகம். பல பழைய கட்டங்களும் (100 ஆண்டுகளுக்கும் மேல்) ஆங்காங்கே இருந்தன. நெருக்கடியான ஒரு பகுதி) கடைகள் வரிசைவரிசையாக உள்ளறைகள் அமைப்பில் பல இருந்தன - தெரு (Street Shops) நோக்கிய கடைகள் மிகுதி. தெருவில் நடமாடும் - நிற்கும் கடைகள் கிடையா. நடைபாதைகளும் மிகச் சிறியவை. மக்கள் மகிழ்ச்சியோடே காண்கின்றனர்.

9 மணிக்குக் குமரப்பன் தொலைபேசியில் பேசி நாளை செல்ல வேண்டிய வழி முதலியன சொல்லி 4 மணிக்கு அவர் அலுலலகம் வரச் சொன்னார். பின் சிறிது நேரத்தில் காலையிலேயே பெட்டியுடன் வீட்டிற்கு வந்து தங்கி எல்லாவற்றையும் கண்டு மறுநாள் புறப்படலாம் என்றார். நான் நாளை காலை எண்ணி முடிவு செய்யலாம் என்றேன். பிறகு உறங்கச் சென்றேன்.

ஆங்காங் 6-6-85

காலையில் சற்று விடியலிலேயே எழுந்து எண் பணிகள் அனைத்தையும் முடித்து, பெட்டிகளில் சாமான்களை மாற்றி அடுக்கி, காலையிலேயே அவர் வீட்டிற்குச் செல்ல முடிவுசெய்து, ஏற்பாடுகளைச் செய்து முடித்தேன். பின் விடுதிக்குத் தர வேண்டியதைக் கணக்கிட்டுக் கொடுத்தேன். இந்நாட்டு 391 டாலர் தந்தேன். (சுமார் 55 அமெரிக்க டாலருக்கும் அதிகம்) இது வரையில் நான் கொடுத்த விடுதி கட்டணத்தில் இதுவே அதிகம் (அடுத்தபடி ஜினிவாவில் நாற்பது டாலர்) கணக்கு முடித்து பெட்டிகளுடன் வாடகை மோட்டாரில் புறப்பட்டேன். நான் இருந்த இடம் சீனப் பெரு நிலைத்தை ஒட்டியது. அன்பர் வாழ்ந்த இடமோ ஆங்காங் தீவு. இந்த இரண்டு இடங்களும் மற்றொரு பகுதி யும் சேர்ந்தே இன்று ஆங்கில ஆதிக்கத்தில் உள்ளன. இவை யன்றி எத்தனையோ சிறு தீவுகளும் உள்ளன அனைத்தும் நான் முன்னரே கூறியபடி 1997ல் சீனா நாட்டின் முழு இணைப்பாக அமையும்.

இங்கே ஆங்கில ஆதிக்கம் இருப்பதால், அதன் ஆட்சிப் பொறுப்பை கவர்னரே (Governor) கவனிக்கிறார். அவர் மாளிகை தீவின் நடுவில் நெருக்கடியான இடத்தில் உள்ளது. தக்க துணையாளர்களுடன் அவர் ஆட்சி நடைபெறுகிறது. எனினும் பெரும்பாலாகச் சீனர் மொழியே வழக்கத்தில் உள்ளது. எங்கும் சீனப் பெயர்ப் பலகைகளும் இணைந்த ஆங்கிலப்பெயர்ப் பலகைகளும் உள்ளன. டோக்கியோவைப் போன்று வெறும் நாட்டு மொழி மட்டும் இல்லை. ஒரு

வேளை 1997 க்குப் பிறகு மாறலாம். சீனாவிலும் அம் மொழியே யாண்டும் உள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் கட்டிய பழங் கட்டிடங்கள் - இன்று புதிதாகத் தோன்றிய வானளாவிய 40, 50, 60 மாடிக் கட்டடங்கள் எங்கும் உள்ளன. எப் பக்கம் நோக்கிலும் மலை - மறுபக்கம் கடல். இயற்கை இவர்களுக்கெல்லாம் எல்லா நலங்களையும் வாரி வழங்கி, நம் நாட்டைத்தான் வறிதாக்கி விட்டது.

நான் சென்ற வாடகை வண்டி இடையில் உள்ள கடலைக் கடக்கவேண்டும். அதற்கென ஆழ்கடல் அடியில் பாதை இட்டுள்ளனர். பாதாள இரெயிலும் உடன் ஓடுகிறது. எனவே மேலே அலைமோத - கீழே அமைதியான பாதையில் நான் சென்று தீவை அடைந்தேன். கட்டடங் கள் பெரும்பாலும் குன்றுகளின் மேலேயே கட்டப் பெற்றுள்ளன. பலவிடங்களில் கடந்து செல்ல சுழிக் கப்பல்கள் - பஸ்கள் - பாதாள இரெயில் - மேல் செல்லும் ரெயில் என்பவற்றோடு, நம் நாட்டுப் பழங்காலத்தைப் போன்று சாலையில் பாதையிட்ட 'டிராம்' வண்டிகள் உள்ளன. நான் முன்னரே சுட்டியபடி, இங்கே நடுத்தர மக்களும் ஏழைகளும் அதிகமாக உள்ளமையில் இவற்றை நம்பியே இவர்கள் வாழ்வு நடைபெறுகின்றது. ஏழ்மை இருப் பினும் நம் நாட்டினைப் போல் வீட்டு வேலைகள் செய்ய ஆள் கிடைக்காது. கிடைப்பினும் 'இந் நாட்டு பிராங் 1500 அல்லது 2000 (சுமார் ரூ. 3000/-க்கு மேல்) சம்பளம் தரவேண்டும். எனவே பிற நாடுகளைப் போன்று இங்குள்ள வரும் தத்தம் பணிகளைத் தாமே செய்கின்றனர்.

இந் நாட்டிலும் (ஆங்காங்) அனைத்தும் தனியார் உடைமையே. (அஞ்சலகம் தவிர) எனவே பல தொழில்கள் நன்கு வளர்ந்துள்ளன என்கின்றனர். பிற நாட்டார் முதலீடும் உண்டு. இங்கே என்றும் எங்கும் தொழிற் சங்கம் கிடையாது; எனவே வேலை நிறுத்தம் என்ற சொல்லுக்குப் பொருளே தெரியாது. முதலாளி, தொழிலாளி நன்றாக இருந்தாலே தன் வளம் பெருகும்

என எண்ணி அவர்களை வாழவைக்கிறான். முதலாளிக்கு நல்ல லாபம் வந்தால்தான் தம் வாழ்வும் தொடர்ந்து உயரும் எனத் தொழிலாளி நினைக்கிறான். என்ன கனவு காண்கிறேன் என்கிறீர்களா? தமிழ் நாட்டில் உள்ளவருக்கு அப்படித்தான் தோன்றும். ஆனால் இங்கேவந்து பார்த்துத் துணியுங்கள். இந்த நாட்டில் (மூன்று பகுதிகளிலும்) மொத்தம் 50 லட்சம் மக்கள் வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் பிற நாடுகளுக்கு ஆண்டுதோறும் ஏற்றுமதி செய்யும் தொகையின் மதிப்போ, பரந்த பாரதம் முற்றும், ஏற்றுமதி செல்வதைவிட மூன்று மடங்கு அதிகம் என்கின்றனர். பாரத நாடு அதிலும் தமிழ்நாடு - தொழில்துறையில் எங்கே பாதாளத்தில் வீழ்ந்து கொண்டிருப்பதாகத்தானே அங்கே அனைவரும் பேசிக்கொள்ளுகின்றனர். இங்கே முக்கியத் தொழில்கள் நுண் அணு (Electronic) பற்றியும் ஆடைபற்றியுமேயாகும். அவற்றிற்கு மூலப்பொருள்கள் வெளியிலிருந்துதான் வருகின்றன. எனினும் காலை 7 மணி முதல் மாலை 5மணி வரை சலியாது உழைக்கும் இம் மக்கள் நம் பாரத மக்களைக் காட்டிலும் பலவகைகளில் உயர்ந்துள்ளார். அவர்கள் ஆக்க நெறிகளிலும் அரசாங்கம் போட்டியிடாமல், அவர்கள் தொழில் வளர உதவுகிறது. உணவுப் பொருள்கள் மட்டும் வெளிநாட்டிலிருந்து வருகின்றமையின் அவற்றின் விலை அதிகம். இன்று பகல் ஒரு மலை உச்சி ஓட்டலில் 2 ரொட்டித் துண்டுக்கு 8 டாலர் (25 ரூபாய்) தந்தேன். இங்கே பால் விலை லிட்டர் 10 ரூபாயாயிருக்கிறது.

ஊர் அமைப்பு செம்மையாயினும் ஒருசில பெருந்தெருக்கள் தவிர்த்து மற்றவை நெருக்கமாக உள்ளன. மலைகளின் மேல் வளைந்து செல்லுவதால் அகலமில்லை. முன்னமே குறித்தபடி தெருப் பெயர்களில் ஆங்கில நாட்டு ஊர், புலவர் பெயர்கள் முதலியன இடம் பெறுகின்றன. இந் நாட்டு நாணயமும் இராணி உருவம் அமைந்த ஒன்றே. இந் நாட்டில் ஜூலை, ஆகஸ்டு மழைக்காலமாம். எனினும்

இன்று முழுதும் மேக மூட்டம் இருந்தது. சிறு தூறலும் இருந்தது.

அன்பர் வீட்டிற்கு நான் காலை 8மணி அளவில் சென்று சேர்ந்தேன். வாடகைவண்டி ஓட்டுநர் படங்களைப் பார்த்தே இடத்தைக் கண்டுபிடித்தார். எதற்கும், மேலை நாடுகள் போன்று, தெருப் பெயர் - வீட்டு எண்கள் உட்பட, படங்கள் இருப்பதால் யாருக்கும் இடம் காணல் எளிதாக முடிகிறது. 8மணிக்கு அவர்தம் துணைவியாரும் அவரும் வரவேற்றனர். காலை 8-30 அளவில் சிற்றுண்டி கொண்டு, அவர் அலுவலகம் (9 மணிக்கு) செல்லப் புறப்படும்போது நானும் புறப்பட்டேன். இன்று நான் என்னென்ன காணவேண்டும்; எங்கெங்கு எவ்வெவ்வாறு செல்லவேண்டும் என்பன போன்ற குறிப்பு அனைத்தையும் தந்தார் முதலில் பெருங் கடற்பூங்கா (Ocean Park) சென்றேன். இரு உந்து வண்டிகள் மாறி 9-30க்குச் சென்றேன். அது மிக அழகான இடமென்றும் கட்டாயம் காணவேண்டியதென்றும் கூறினர். எனவே நான் சென்றேன். உள்நுழைய 70 டாலர் (கமார் 125 ரூபாய்) ஆனால் உள்ளே சென்ற பின் ஏன் வந்தோம் என ஆயிற்று. குளிக்கும் குளங்களும் - பிள்ளை விளையாட்டிடங்களும், மின் பண்ணையும், ஓரிடத்தில் 'டால்பின்' காட்சியும் இருந்தன. பெண்கள் தம்மை மறந்து-பெரு நிர்வாணமாக நீச்சலடிக்கும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தார் பலர். ஏறக் குறைய இதே அளவு நுழைவு கட்டணம் செலுத்தி மலாஸ் ஏஞ்சலஸ் - 'டிஸ்டினிலேண்டு' காட்சியில் நூறில் ஒரு பகுதிகூட இல்லை. ஆயிரம் ஆயிரக்கணக்கான மக்கள் செல்கிறார்கள். பல வெளிநாட்டு மக்கள் இது ஏதோ பெரிய காட்சி இடம் என எண்ணி ஏமாறுகின்றனர். மலை மேல் மின் கம்பிவழி சென்று மற்றொரு மலை அடைந்து பல விளையாடல்கள் காணலாம். அவ்வளவே - நான் விரைவில் வெளியே வந்தேன். 'டால்பின்' காட்சியும் நான் நியாகாரா வீழ்ச்சியில் கண்டதில் 10-ல் ஒரு பகுதியே யாகும்.

1 மணி அளவில் வெளியே வந்து, அடுத்து நான் செல்ல வேண்டிய மலை உச்சிக்கு வழி கேட்டேன். அங்கே உள்ள அலுவலர், காவல்துறையினர், உயர் அதிகாரிகள் யாரும் எதையும் தெரிந்தவராகவோ - அல்லது மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் உள்ளவராகவோ இல்லை. பிற நாடுகளைப் போலன்றி, இந் நகர் மக்கள் நின்றுகூடப் பதில் சொல்வதில்லை. கண்டும் காணாததுபோல் உள்ளனர் (காவலர் உட்பட). பிறகு எப்படியோ கேட்டறிந்து இரு உந்து வண்டிகள் ஏறி, பிற்பகல் 2-3க்கு அந்த மலை உச்சியினை (Peak) அடைந்தேன். அங்குள்ள ஒரு பெரு ஓட்டலில் (விலை அளவில்) புகுந்து சன்னல் ஓரமாக உட்சார்ந்து கடலையும் துறைமுகத்தையும் ஊர்ந்து செல்லும் கப்பல் விசைப் படகுகளையும், மாடிக் கட்டடங்களையும் பிறவற்றையும் கண்டு கொண்டே மெல்ல ரொட்டித் துண்டு உட்கொண்டேன். சுற்றிலும் சிறு குன்றுகள் கடல் நடுவே நின்றன. அவை வரண்டே காணப்பெற்றன - மரங்கள்கூட இல்லை. கடல்நீர் அலையற்றிருந்தது. நடுவில் நீரில் மேடு பள்ளம்போல் காணப்பட்டது. ஒருவேளை அடித் தரை அமைப்பு அப்படியோ என எண்ணினேன். நெடிது இருந்து நீள நினைந்து பிறகு 3-30க்கு வெளிவந்து நாற்புறமும் கண்டு, அங்கிருந்து 'டிராம்' வண்டி வழியே கீழே இறங்கினேன்.

ஊருக்குள் ஓடும் 'டிராம்' வண்டிக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இதன் பழமையைக் காப்பதற்கெனவே இதை வைத்துள்ளனர். இது 1888-ல் அமைக்கப்பெற்றதாம். பல செல்வர்கள் உயர்மலைகளில் மாளிகை அமைக்க நினைத்தபோது வேறு வழிச் சாலைகள் இன்மையில் இதையே பயன்படுத்தினார்களாம். 1300 அடி உயரம் உள்ள சிறு மலைச் சரிவில் இது ஓடுகிறது. ஒரே ஒரு வண்டி; சுமார் 60 பேர் அமரலாம். திரும்பத் திரும்ப 10 நிமிடங்களுக்கு ஒரு முறை ஓடுகிறது. சிலவிடம் செங்குத்தாக உள்ளது. அடிப்பாதையில் (இரும்புத் தண்டவாளம்)

உள்ள பிணைப்பு அதை மெல்லக் கீழே தள்ள உதவுகிறது, மேல் செல்வதற்கும் அப்படியே. அதில் இறங்கிக் கீழ்த்தளம் வந்தேன். பக்கத்திலேயே அன்பர்தம் அலுவலகம் இருந்தது. (நம் நாட்டுப் பொதுப்பணித்துறை -P. W. D. போன்றது) இவ்வூர்க் கட்டடங்களில் வரைப்படங்கள் அனைத்தும் இங்கே அனுப்பி, இசைவு பெற்ற பிறகே கட்ட வேண்டுமாம். இசைவு பெறாத கட்டடங்களே இரா என்கின்றனர். அலுவலகம் பொதுமக்கள் தொடர்புடைய தாதலால் மக்கள் வந்தும் சென்றும் நின்றும் இருந்தனர். நான் அவர் அறைக்குச் சென்றேன்.

மாலை 5 மணிக்குமேல் அவருடன் பல கடைகளுக்குச் சென்றேன். நேற்று கடலில் மறுபக்கம் கண்டமை போன்று பல பெருங் கடைகள் இருந்தன. சிலவற்றின் உள்ளே நுழைந்தோம். பல பொருள்கள் நம் நாட்டு விலைகளைக் காட்டிலும் மிகக் குறைவாகவே உள்ளன. பலவிடங்களைக் கண்டு உந்து வண்டி ஏறி 7மணி அளவில் வீடு வந்து சேர்ந்தோம். சற்றே ஓய்வு தேவையாக இருந்தது. இரு நாள் கடும் அலைச்சல்-நடை-என்னைத் திணற வைத்தது. இரண்டு மாதங்களாகக் காரிலேயே சுற்றிச் சோம்பேறியான நான், கடந்த நான்கு நாட்களாக அதிக நடை மேற் கொள்ளவே தொல்லை நேர்ந்தது. எனவே மேலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

அன்பர் தம் நண்பர் - இவ்வூர்த் தமிழ்ச் சங்கத்தலைவர் வந்தார்; சுந்தரம் என்பவர். அவர் கோவையில் வேதபுரி யிடம் பயின்றவராம். நம்நாட்டு அரசியலை அலசினார். இங்கே தமிழ்ச் சங்கத்தில் கீழைக்கரை, நாகை வாழ் முகமதியர்களே அதிகம் உள்ளனராம், எனினும் தமிழுக்கு என இவர்கள் ஒன்றும் செய்வதில்லை. கூடி உல்லாச உலா செல்வார்களாம்; அவ்வளவே. நெடுநேரம் பேசிக் கொண் டிருந்தார். பின் உணவு உண்டு அவர் செல்ல, நான் சென்றேன்.

கோலாலம்பூர் 7-6-85

விடியற்காலை 4 மணிக்கே எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டு இந்த நாட்குறிப்பை 7 மணி அளவில் எழுதி முடித்தேன். இனி பிற்பகல் 3மணி அளவில் தான் விமானம். எனினும் எங்கும் வெளியில் செல்லவில்லை. முடியவும் முடியாது. 12மணி அளவில் வாடகை வண்டியில் சிறிது தூரம் சென்று, பின் உந்து வண்டியில் ஏறி, பிற்பகல் 2.30க்கு விமான நிலையம் சேர வேண்டும்.

ஆங்காங் பகுதியின் கல்வி முறை பற்றியும் சிறிது காண வேண்டும். ஆங்கில ஆட்சியில் இது உள்ளமையின் அவர்கள் காலத்தில் நம் நாட்டிலிருந்த முறையே இங்கும் கையாளப் பெற்றது. ஐந்தாம் வகுப்பு - பிறகு உயர்நிலை - I Form VI form-பிறகு கேம்பிரிஸ் கல்வி முறை - இங்கேயும் ஒரு பல்கலைக்கழகம் உண்டு. எனினும் அவ்வளவு சிறந்ததாக இல்லை என்று கூறுகின்றனர். நம் நாட்டைப் போன்றே இங்கே அரசாங்கக் கல்விக் கூடங்களும் உண்டு; தனியார் நடத்தும் பள்ளிகளும் உண்டு. எங்கும் போன்று தனியார் பள்ளிகளில் நல்ல தரம் உண்டு என்கின்றனர். சம்பளம் அதிகமாக இருந்தாலும் அவற்றில் சேர்க்க - நம் நாட்டினைப் போல் - இங்கும் மக்கள் போர்வம் காட்டுகின்றனர். தமிழர் சிலராயினும் அவர்கள் தம் பிள்ளைகளைக் கல்வி பயிலத் தாயகமே அனுப்புகின்றனர். ஏனோ என்றால் சரியானபதில் இல்லை.

காலைப் பொழுது இனியது; நாற்புறமும் நோக்கினேன்- கடல், மலை, இயற்கை எழில் ஒருபுறம். மனிதன் கைவண்ணத் திறனால் எழுந்த கோபுரக் கட்டடங்கள் ஒரு புறம் - அசைந்தாடும் கப்பல்கள்; பொதுவாக அதிக கார் ஓட்டம் இல்லை; எனினும் இன்று காலையும் வானத்தில் 'காரோ'ட்டம் இருந்தது. மழை இல்லை. நான் தங்கி இருந்த வீட்டில் எதிரிலேயே ஒரு ஆங்கிலப் பள்ளி இருந்தது. கீழ் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை (+2) பாடம் உண்டு. அவ்வகுப்புகளுக்கு 'பாரம்' (Form) என்ற பெயரே ஐந்தாம் வகுப்புக்கு மேல் அமைந்தது. தற்போது தேர்வுக் காலம். சில பிள்ளைகள் வெளியிலிருந்து படித்துக் கொண்டிருந்தனர். பெரியமண்டபத்தில் சில பிள்ளைகள் தேர்வு எழுதிக் கொண்டிருந்தனர். கீழ் வகுப்புப் பிள்ளைகள் வண்ணப் படங்கள் தீட்டிக் கொண்டிருந்தனர். அவர்களிடமெல்லாம் பேசினேன். கல்வியில் விருப்பமுடையவர்களாக இருந்தனர். இளம் பிள்ளைகள் நல்ல படங்கள் எழுதினாலும் ஆய்வு, கட்டுரை முதலியன எழுதினாலும் அவற்றைப் பள்ளி விளம்பரப் பலகையில் இட்டுச் சிறப்புச் செய்கின்றனர். பிள்ளைகளுக்குச் சம்பளம் மிக அதிகம். ஆங்கில நாட்டு மக்களாலேயே நடத்தப் பெறுவதால் மதிப்பு அதிகம் என்றனர் சில பெற்றோர். தீவுப் பள்ளி (Island school) என்றே இதற்குப் பெயர். வளர்ந்த பிள்ளைகள் புகைபிடிப்பார்கள் போலும். தேர்வு மண்டப வாயிலில் 'புகை கூடாது' என்ற பலகை இருந்தது. வகுப்பறைகள் விசாலமாகவும் தூய்மையாகவும் இருந்தன. ஒரு மாணவனுக்கு ஒரு இடம் என இருந்தது. சுமார் 40 மாணவர் வரை வகுப்பில் இருப்பார்கள் போலும். பள்ளியைப் பற்றியும் கோடையில் அவர்கள் நடத்தும் வகுப்புகள் பற்றியும் உள்ள குறிப்புகளை அலுவலகத்தில் தந்தனர்.

பின் வீட்டிற்கு வந்து உணவு கொண்டு 12.15க்குப் புறப்பட நினைத்தேன். வாடகை வண்டி அனுப்புமாறு தொலைபேசியில் கேட்டால் இல்லை என்று கூறிவிட்டனர். வெளி

யிலோ பெருமழை பெய்ய ஆரம்பித்து விட்டது. குடை எடுத்துக் கொண்டு வெளியே சென்று - பாதி நனைந்து - ஒரு வாடகை வண்டி கொண்டு வந்து, விமான நிலையம் செல்லும் உந்து வண்டி நிலையம் வரை சென்று, பின் இரண்டு மணிக்கு விமான நிலையம் வந்து சேர்ந்தேன்; முழுதும் நனைந்தேன். என் பயணத் தொடக்கத்தே பாரிசிலும் இலண்டனிலும் நனைந்த நான், பயண முடிவிலும் நனைய நேர்ந்ததை நினைத்தேன்-இயற்கை அன்னை வழி இறைவன் என்னைத் தாலாட்டி நீராட்டி அழைத்து வருகின்றாள் என நினைத்தேன். 'சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே சித்தாந்த முத்தி முதலே' என்ற தாயுமானவர் அடி நினைவுக்கு வந்தது. கொண்டு வந்த மருந்தில் ஒன்றை (நோவல்ஜீன்) சூடான காப்பியுடன் உண்டேன். சோர்வு நீங்கிற்று. விமானத்துக்குச் செல்லுவதற்கென எல்லா ஏற்பாடுகளையும் முடித்து, 3.15க்கு உள்சென்றேன். விமானம் 3.45க்கு புறப்பட்டது - ஆம்! கொட்டுமழைக்கு நடுவில்தான். என் ஆடைகளும் மெல்ல உலர ஆரம்பித்தன. விமானப் பணியாளர் என்னிடம் மிக அன்பாக இருந்து வேண்டிய உதவிகளைச் செய்தனர். நல்ல சைவ உணவு தந்தனர் - இரண்டு மூன்று முறை பழரசம் தந்தனர். என் முகத்தின் சோர்வு கண்டோ - ஏனோ - அவர்கள் அனைவரும் பிற பயணிகளைக் காட்டிலும் என்னிடம் பரிவு காட்டினர். விமானம் சரியாக 7மணிக்குக் கோலாலம்பூர் நிலையம் வந்தது. நான் 1948ல் வந்தபோது இங்கே விமானப் போக்குவரத்து கிடையாது. பல்கலைக் கழகம் இல்லை. இன்று எல்லா நலமும் பொருந்தி மிக வளர்ந்து சிறந்துள்ளது. இந்நாட்டு மக்களாகிய மலாய்க்காரரும் பல இடங்களில் சிறக்கப் பணியாற்றி, நாட்டு நலம் காணப் பாடு படுகின்றனர். தமிழர் வாழ்வுதான் நான் முன் கண்ட நிலையிலும் சற்றே தாழ்ந்திருக்கலாம். இவற்றையெல்லாம் எண்ணிக் கொண்டு, விமான நிலையச் சடங்குகளையெல் லாம் முடித்து வெளியே வந்தேன். டாக்டர். தண்டாயுதம் திரு. இலக்குமணன் செட்டியார் மற்றொரு ஆசிரியர் நண்பர்

திரு. வடிவேலு மூவரும் எனக்காக வந்திருந்தும் ஏனோ என் கண்ணில் படவில்லை. வெளியே வந்து தொலை பேசியில் பேச நினைக்கும் போதுதான், நான் இந்நாட்டு நாணய மாற்றுச் செய்யாதது நினைவுக்கு வந்தது. அதற்காக மறுபடியும் உள்ளே சென்றேன். அப்போது தான் மூவரும் என்னைக் கண்டனர். விரைந்து வந்தனர்— மகிழ்ந்தனர். காரில் தண்டாயுதம் வீடு சென்றோம். செட்டியார் அவர்களும் உடன் தம் காரில் வந்தனர். வீட்டில் தண்டாயுதத்தின் மனைவியார் மக்கள் இவர்களைக் கண்டு மகிழ்ந்தேன். டாக்டர் வேலாயுதம் அவர்களும் (செட்டியார் மகன்) வந்தார்கள். அனைவரும் நாளை மறுநாளில் என்னென்ன செய்யவேண்டும் என்பது பற்றிப் பேசினர். இரு நாட்களுக்கும் திட்டமான ஒரு செயல் முறை தீட்டினர்.

நான் எழுதிய வழுவிலா மணிவாசகர் இங்கே நானகு ஆண்டுகளாகப் பள்ளி மாணவருக்குப் பாடமாக வைக்கப் பெற்றுள்ளது. எனவே நாளை அல்லது மறுநாள் அது பற்றிப் பள்ளி ஆசிரியர் - மாணவர் கூட்டத்தில் பேச வேண்டும் என்றனர். திரு. செட்டியார் அவர்கள் 40கல் தொலைவில் உள்ள சிரம்பானில் இருக்கிறார். சென்னையில் உள்ள மருகர் திரு. வடிவேலு அவர்கள் கட்டாயம் சிரம்பான் சென்று வர வேண்டும் என்று சொன்னதோடு, அவர்களுக்கும் கடிதங்கள் எழுதியிருந்தார். எனவே ஞாயிறு காலை அவர்களுடன் சிரம்பான் சென்று, 10 மணி அளவில் கூட்டத்தில் பேசிவிட்டு, அவர்கள் வீட்டில் உணவு கொண்டு, பிற்பகல் திரும்பலாம் என முடிவு செய்தனர். நான் 1948ல் இங்கே வந்த பணி பற்றியும் அதன் வழியே தமிழ் இங்கே பல்கலைக்கழகத்தே முக்கிய இடம்பெற்றிருப்பதையும்நினை வூட்டினர். எனக்கும் நினைவு வந்தது. மலேயா பல்கலைக் கழகம் தொடங்கும் போது, இந்திய மொழித்துறை இருக்க வேண்டும் என முடிவு செய்யப் பெற்றது. எந்த மொழிக்கு முதலிடம் தருவது என்ற வினா எழ, ஒரு பெரியவர்

அதற்கென இங்கே வந்து, வடமொழிக்கே முதலிடம் என இந்திய அரசாங்கத்துக்கு எழுதி விட்டார். அப்போது தமிழ் நாட்டில் திரு. ஓமந்தூரார் முதல்வர் - திரு. பக்தவச்சலம் கல்வி அமைச்சர். அவர்கள் அதை ஏற்காது என்னை அனுப்பி நிலை கண்டு வரச் செய்தனர். நான் தமிழே முதலிடம் பெறத் தக்கது எனக் காரணம் காட்டி விளக்கினேன். சிங்கப்பூரில் (அப்போது மலேசியாவுடன் இணைந்திருந்தது) தமிழ் முரசு நடத்திய திரு. சக்கரபாணி அவர்களும் தம் நாளிதழில் வற்புறுத்தி எழுதியும் பல ஆயிர மக்கள் கையொப்பம் வாங்கியும் தமிழுக்கு ஆக்கம் தேடினார் இன்று மலேசியா பல்கலைக்கழக இந்திய மொழிப் பகுதியில் தமிழே முதலிடம் வகிக்கிறது. இன்று அதன் தலைவராக என் அருமை மாணவ நண்பர் திரு. தண்டாயுதம் இருக்கிறார். இதோ இன்று இங்கு அவருடனே தங்குகிறேன். இந்த எண்ணங்களுக்கிடையே, செட்டியாரும் மற்றவரும் விடைபெற்றபின் சிறிது ஓய்வு கொண்டு உணவு கொண்டேன். மணி 10க்கு மேலாகிவிட்டமையாலும் இன்று மழையில் நனைந்து, விமான நெடும் பயணம் செய்ததால் உண்டான சேர்வினாலும் உடன் படுக்கச் சென்றேன்.

கோலாலம்பூர் 8-6-85

விடியற்காலையில் எப்போதும் போல் எழுந்து காலைக் கடன்களை முடித்துக் கொண்டேன். ஆங்காங்கிற்கும் மலேசியாவுக்கும் நேரத்தில் மாறுபாடு இல்லை. இங்கே 7-30மணிக்குத்தான் சூரியன் தோன்றுகிறான். மணியைச் சற்றே தள்ளிவைத்துள்ளார். 7மணி நம் நாட்டிற்கும் இதற்கும் உள்ள வேறுபாடு 2மணி நேரம் இருந்ததை 2½ ஆக ஆக்கியுள்ளார்களாம். எனவே விடியல் நீடிக்கிறது. மாலை 8-30க்குச் சூரியன் மறையும் போலும். காலை 8-30க்கு சிற்றுண்டி முடித்தோம். பின் 9-30க்குப் பல்கலைக்கழகம் சென்றோம். அங்கே (பல்கலைக்கழகம் விடுமுறை) ஆசிரியர் பதின்மர் இருந்தனர். அவர்களுடன் 10மணிமுதல் 12மணி வரை சற்றே என் உலகப் பயணம் பற்றியும் நம் நாட்டில் தமிழ் உள்ள நிலைபற்றியும் உலக நாடுகளில் தமிழர் வாழ்வு,வளம்,மொழி பற்றியும்கலந்துரை யாடினோம். பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை இவ்வளவு விரிவடைந்த நிலையினைக் கண்டு பெற்ற தாயினைப் போல் பெரிதும் மகிழ்ந்தேன். சிரம்பான் செட்டியார் அவர்களும் வந்திருந்தனர்.பின் அனைவரிடமும் விடைபெற்றுக்கொண்டு வீடு வந்து உணவு கொண்டோம். நான் பார்த்த காலத்தைக் காட்டிலும் (35 ஆண்டுகளுக்கு முன்) தற்போது கோலலம்பூர் எவ்வளவோ விரிவடைந்த போதிலும் அதைக் காண அன்பர் கள் அழைத்த போதிலும், கடந்த நாட்களின் அலைச்சலா லும் நேற்றை மழையில் நனைந்தமையாலும் மிகவும் சோர் வுற்றிருந்தமையின் எங்கும் செல்லவில்லை. எனினும்

பல்கலைக்கழகம் சென்று வந்தபோது கண்ட சாலைகள் அமைப்பு அமெரிக்க நாட்டை நினைவூட்டியது. மிகவும் தூய்மையாகவும், கோடிட்டும் வாகனங்கள் விரைந்து செல்லும்வகையில் பல குறையீடுகள் இட்டும் அமைந்திருந்த நிலை கண்டேன்.. ஊர் அழகியது. முன்னரே நான் இவ்வூர்ப் பெயரே அழகைக் குறிக்கும் என்று என் 'தமிழன் கண்ட மலேயா'வில் குறித்துள்ளேன். கோலம் ஆலும் ஊர் என்று பிரித்து அழகு நடமாடும் ஊர் என்று நான் பொருள் கொண்டேன். மலாய் மொழியில் 'கோலா' என்றால் அதற்குத் தமிழில் 'கூடல்' என்று பொருள். இரு ஆறுகள் கூடுவதால் இப்பெயர் பெற்றதென்று அன்றே இங்குள்ளவர் கூறினர். எப்படியாயினும் அழகு கூடியுள்ள ஊர்தானே என அன்று விளக்கினேன். இன்றும் அந்த அழகு குறையவில்லை. மனிதனின் கைவண்ணத்தால் பலப்பல கட்டடங்கள் ஓங்கியுள்ளன. வெற்றிடமாக இருந்த மலையில் பல்கலைக்கழகச் சம்பந்தமான பல கட்டடங்கள் எழும்பி உள்ளன. ஊரும் விரிவடைந்திருந்தது. இந்த நாட்டு மலேசிய மக்கள் அன்று கல்லா நிலையில் இருந்த தன்மையினையும் இன்று ஆளும் தலைவர் முதல் அனைத்திலும் அவர்கள் சிறப்பிடம் பெற்றுள்ளதையும் அறிந்தேன். சீனர்களும் தமிழர்களும் பெரும்பாலும் முன் இருந்ததைவிடக் குறைந்தே இருந்தனர். அன்று சிங்கப்பூர் இத்துடன் இணைந்திருந்தது. இன்று அது தனியாட்சி பெற்ற தீவாக அமைந்துவிட்டது. அங்கே சீனர் 100க்கு 80 பேருக்கு அதிகமாக இருப்பார்கள் என்கின்றனர். ஆங்காங் போல அதுவும் முற்றும் சீன நாடாக ஆயினும் ஆகலாம் போலும். இவற்றை எல்லாம் எண்ணி இடையில் சற்றே ஓய்வு கொண்டேன். மாலை ஆறு மணிக்கு அருள்நெறித் திருக்கூட்டத்தில் ஒரு நிகழ்ச்சி - சமயச்சொற்பொழிவு.

4மணி அளவில் இங்கே சிறக்க நடைபெறும் தமிழ் நாளிதழான 'தமிழ்நேசன்' பத்திரிகையின் சார்வாளர் என்னைக் காணவந்தார். என் செயல்கள் பற்றியும் பயணம்

பற்றியும், நூல்கள் பற்றியும் பிற தகவல்களையும் கேட்டறிந் தார். ஞாயிறு மலரில் சிறுகட்டுரை வெளியிடப் போவதாக. வும் கூறினார். 'தமிழ்நேசன்' நான் முன் வந்தபோதே (1948) சிறப்பாக நடைபெற்ற இதழ். என்னை இந் நாட்டிற்கு அறிமுகப்படுத்தி வைத்தது. இப்போது அதன் உரிமை வேறுகைக்கு மாறினும் தொடர்ந்து இங்குள்ள தமிழ் மக்களுக்கு நல்ல தொண்டு செய்து வருகின்றது. (சிங்கப்பூர் 'தமிழ் முரசு'ம் நடைபெறுகின்றதாயினும் திரு. சாரங்கபாணி அவர்களுக்குப் பிறகு அவ்வளவு சிறப்பாக நடைபெறவில்லை என்று கூறினர்). என்னைக் காண வந்தவர் தமிழ்நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பயின்றவர் (புலவர்). நல்ல தமிழ் உள்ளம் வாய்ந்தவர். முருகையன் என்ற அன்பர். நெடுநேரம் பேசிக்கொண்டிருந்து விடை பெற்றுச் சென்றார்.

பிறகு திரு. தண்டாயுதமும் நானும் அருள் நெறித்திருக் கூட்டம் நடைபெறும் மண்டபம் சென்றோம். வழிநெடுகக் கோலாலம்பூர் புதுவகையில் பூத்துக் குலுங்கும் இயற்கையும் மக்கள் கை வண்ணத்திறனும் சேர்ந்த காட்சிகளைக் கண்டு கொண்டே சென்றேன். கூட்டம் நடைபெறுமிடம் சொந்த மாகவே வாங்கிக் கட்டப்பெற்றதாம். தமிழ்நாட்டில் பல சங்கங்கள் ஒண்ட இடமின்றி ஒதுங்கி, ஒடுங்கி வாழும் நிலை யில் இங்குள்ள மக்களின் ஆக்கப்பணி அறிந்து மகிழ்ந்தேன். இதற்கு அடிகோலி ஆக்கப்பணிபுரிந்தவர், முன் பயணத்தில் இங்கே என்னை வரவேற்று உடனிருந்து எல்லா உதவிகளை யும் செய்து உதவிய திரு. கா. இராமநாதன் செட்டியார் அவர்கள். அவர்தம் புகைப்படம் மண்டபத்தை அலங்கரித் திருந்தது. நடராசர் திருவுருவம் நடுவில் வைக்கப் பெற்றி ருந்தது. கூட்டத் தலைவரும் பிறரும் கூடி இருந்தனர். அனைவரும் சிறந்த தமிழ்ப்பற்றும் சமய உணர்வும் உடையவர்களாக இருந்தனர். பெண்டிரும் பத்துப் பன்னிரண்டுபேர் வந்திருந்தனர். மொத்தம் எண்பது பேர் இருக்கலாம். ஆயினும் அனைவரும் உணர்வுடைய நிலையில் உள்ளமை அறிந்தேன். பலரும் நன்கு கற்றவராகவும்

இருந்தனர். 6 மணிக்குக் கடவுள் வாழ்த்துடன் கூட்டம் தொடங்க, தலைவர் முன்னுரையுடன், திரு. தண்டாயுதம் அறிமுகத்துடன் 6.15க்குப் பேசத் தொடங்கி ஒரு மணி நேரம் பேசினேன். சமய உண்மைகளையும் விழாக்களின் அடிப்படைகளையும் அறிவியல் கண்ணோட்டத்தில் சமயச் சடங்கு, பழக்க வழக்கம், கொள்கை, நெறி முதலியவை பற்றியும் பேசியதோடு கவாய் ஆதினத்தின் கொள்கை களைப் பற்றியும் கூறி, அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டிய சூழ்நிலையினை விளக்கி உரைத்தேன். கவாய் கொள்கையின் போக்கைக் கண்டித்து நால் எழுதிய அன்பரும் உடனிருந்தார். அவர் எழுதிய நூல்களையும் அவரிடம் பெற்றேன். (முன் கவாயில் படித்தறிந்த ஒன்று).

கூட்ட முடிவில் தலைவர் மதுரைப் பல்கலைக்கழகத்தே சைவ சித்தாந்த வகுப்பு நடத்தத் தாங்கள் முயன்று மூன்று இலட்சம் ரூபாய் தந்தும் அது திறம்படச் செயல்படா நிலையை வருத்தத்துடன் தெரிவித்து, கூடுமானால் என்னை அதன் துணைவேந்தருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்து உதவுமாறு கேட்டுக்கொண்டார். தற்போது அத் துறையில் உள்ள திரு. கங்காதரன் அவர்கள் நேர்முகத் தேர்வில் நானும் ஓர் உறுப்பினனாக இருந்தமை சொல்லி அப்போது, அத்துறை வளர்க்கவேண்டிய வகைபற்றிச் சொல்லி வந்ததைக் கூறி, மறுபடியும் உரியவர்களைக் கண்டு ஆவன செய்ய முயல்வதாகக் கூறினேன்.

இரவு 8மணி அளவில் வீடு திரும்பினோம். நாளை நான் செய்யவேண்டிய பணிகள் பற்றியும் சிங்கப்பூரிலிருந்து தாயகம் செல்லவேண்டிய தகவல்கள் பற்றியும் பேசினேம். உணவு கொண்டபின் அடுத்து இங்கே அவர்கள் நடத்த இருக்கும் சைவ சித்தாந்த மாநாட்டினைப் பற்றிக்கூறி அதில் நான்கலந்து கொள்ளவேண்டும் என்று திரு. தண்டாயுதம் கூறினார். (1986 மே) நான் பிறகு முடிவு செய்யலாம் என்று கூறினேன். பின் உறங்கச் சென்றேன்.

கோலாலம்பூர்/சிங்கப்பூர் 9-6-85

இன்று காலை சற்று மெல்லவே 5மணி அளவில் எழுந்து 7மணிக்குள் காலக்கடன்களை முடித்துக்கொண்டேன். சிற்றுண்டி கொண்டேன். 10மணிக்கு, சிரம்பனில் 'வழுவிலா மணிவாசகர்' பயிலும் பிள்ளைகளுக்கும் பிற பொதுமக்களுக் கும் என ஒரு கூட்டம் தண்டாயுதபாணி கோயிலில் ஏற்பாடு செய்திருந்தனர். இங்கே மிகப் பழங்காலத்தில் வந்த செட்டிநாட்டு நகரத்தார் பெருமக்கள் ஊர்தொறும் தண்டாயுதபாணியாகிய பழநியாண்டவர் கோயில் கட்டி வழிபடுவது வழக்கம். அக்காலத்திலெல்லாம் அவர்கள் பெண்களுடன் வெளிநாடு - கடல் கடந்து செல்லுவதில்லை. நல்ல தமிழ் 'மரபினராதலின்' 'முந்நீர் வழக்கம் மகடு வோடு இல்லை' என்ற தொல்காப்பிய நெறியைப் பின் பற்றினார் போலும். (இன்று முந்நீர் இன்றி - வான் வழி வழக்கம் வந்து விட்டமையின் மகளிரையும் உடன் அழைத்துச்செல்லுகின்றனர் போலும்). அவர்கள் தனியே வந்து இங்கே வாணிபம் புரிந்தமையின், தம்மைப்போன்றே ஆண்டவனையும் தனியாக அமைத்து - பழநியாண்டியாக வழிபட்டார்கள் என்றனர். மலேயா நாடு முழுவதும் உள்ள ஊர்களில் அவர்கள் வாழ்ந்த காரணத்தால், எல்லா ஊர் களிலும் பழநியாண்டி-தண்டாயுதபாணி கோயில் இருக்கும். வேறு தெய்வங்களுக்கும் சில இடங்களில் கோயில் கட்டி யுள்ளனர். இந் நாட்டில் சைவ நெறி வாழ்கின்றது என்றால் அந்தப் பெருமை இந் நகரத்தார் மரபினையே சேரும். எனவே இன்று சிரம்பான் நகரில் நான் தண்டாயுதபாணியின்

திருக்கோயில் முன் நின்று அவர்களை நினைத்தேன். அவர் மரபினராய் அறம் காக்கும் திரு. இலக்குமணன் செட்டியார் இதோ இன்று அருகில் இருக்கிறார். இவரே இக் கோயிலின் முழுப் பொறுப்பையும் கவனிக்கிறார். சிலவிடங்களில் விழாக்களுக்கு வருபவர்களுக்கு இடையறாது உணவளிக்க, அட்டிற்சாலை அமைத்து, ஆள் உயர அண்டாக்களில் (பெரும்பாத்திரம்) குழம்பு, இரசம் அமைத்து, குழாய் வழியாகத் திறந்து பெற்று, மக்களுக்குச் சோறு ஊட்டி வந்த மரபினை நான் முன்பு இங்கே வந்தபோது (1948) கண்டிருக் கிறேன். அத்துணைப் பெரும் அளவில் இன்றேனும் இன்றும் அவர்கள் அறம் வழுவற நடந்து கொண்டுதான் இருக்கிறது.

நான் முன் வந்தபோது சிங்கப்பூரும் மலேயாவும் இணைந்து ஆங்கில ஆதிக்கத்தில் விடுபடு நிலையில் இருந்தன. இந்நாட்டு மலாய் மக்கள் கல்வி அறிவற்ற நிலையில் எங்கோ ஒருசிலர்தாம் பதவிகளில் இருந்தனர். (இவற்றையெல்லாம் என் 'தமிழன் கண்ட மலேயா' என்ற நூலில் குறித்துள்ளேன்). ஆனால் உரிமைபெற்றபின் (ஒன்பது மாநிலத்து மன்னர்களும் பிறரும் முழு உரிமை பெற்று - சிங்கப்பூர் தனியாகப் பிரிய, மலேசியா என்ற பகுதி அமைந்தது) அம்மக்கள் கல்வி கற்று உயர்நிலையில் எல்லா இடங்களிலும் பணி புரிவதோடு, ஆட்சியிலையும் ஏற்று நடத்துகின்றனர். அவர்தம் மலாய்மொழிக்கு எழுத்து இன்றேனும் 'ரோமன்' எழுத்தினைக் கொண்டு தம் மொழிச் சொற்களையே எங்கும் பொறித்துள்ளனர். என் பல்கலைக் கழகச் சொற்பொழிவினைப் பற்றிக்கூட மலாய் மொழி யில் (ரோமன் எழுத்து) தான் எழுதி வெளியிட்டுள்ளனர். எனக்கே புரியவில்லை. அவை அவ்வாறு இருப்பதால் படிக்கமுடியும் என்றாலும் மலாய் மொழியாகையால் பொருள் புரிந்து கொள்ள இயலாது. எங்கும் அவர்கள் மொழி ஆட்சி செய்கிறது. பலவிடங்களில் தமிழும் இடம் பெறுகின்றது மலேயாப் பல்கலைக்கழகத்தில் மட்டுமன்றி, ஆரம்பப் பள்ளிகளிலும் தமிழ் கட்டாயமாக உள்ளது. ஊர்

தொறும் தமிழே பயிற்சிமொழியாகக் கொள்ளும் பள்ளிகள் உள்ளன. இடைநிலையிலும் 10,12ம் வகுப்புகளிலும் தமிழ்ப் பாடங்கள் உள்ளவெனும், 15 மாணவர் இருந்தால்தான் ஆசிரியர் நியமிக்கப்படுவராம். ஆனால் மாணவர் தனியாகப் படித்துத் தமிழில் தேர்வு எழுத இடம் உண்டாம்.

10 மணிக்குத் திருக்கோயில் வழிபாடு தொடங்கிற்று. தண்டாயுதபாணி கோயிலாயினும் அங்கே வள்ளி தெய்வ யானையோடு கூடிய முருகன், விநாயகர், சிறு உருவத்தில் கூத்தபிரான் போன்ற தெய்வங்களும் இருந்தன. வழி பாடாற்றிய பின் அதன் சுற்றில் அமைந்த சொற்பொழிவு மண்டபத்தில் கூட்டம் தொடங்கிற்று. திரு. செட்டியார் அக் கோயிலில் அறங்காவலர் தலைவர்; பழங்காலம் முதற் கொண்டே சமூகப் பணியே தன் வாழ்வுப் பணி என வாழ் கின்றவர். இந்தியப் படை சுபாஷ் சந்திரபோஸ் தலைமை யில் இயங்கியபோது (1940-42) இவர் சுபாசுக்கு அணுக்க நெறியில் அவருடன் தோளொடு தோள் சேர்ந்து பணிபுரிந் தவர். அக்காலத்தில் கையில் அடிபட்டு எலும்பு முறியும் அளவு தொண்டாற்றிச் சிறந்துள்ளார். தற்போது பல நிறுவனங்களில் பொறுப்பேற்றுச் செம்மையுற நடத்து கின்றார். பிற்காலத்தில் வரும் இளந் தலைமுறை வாழ் வினை எண்ணி - நம்பண்பாடு எவ்வாறு நிலை குலைகின்றது என உளம் நைந்து, எப்படியாவது அவர்களை முன்னேற்ற வழிகாணவேண்டுமெனத் துடிக்கிறார். வயது எழுபத்தைந்து ஆனபோதிலும் இளையராய், 'காரினை'த்தாமே ஓட்டிக் கொண்டு பல இடங்களுக்குச் சென்று சலியாது உழைக் கின்றார். அவர்கள் தலைமையேற்க, கூட்டம் தொடங்கப் பெற்றது. திரு. வடிவேலு வரவேற்க, செட்டியார் முன்னுரை வழங்க, பின் நான் பேசினேன். எனது உலகப் பயணம் பற்றி முதலில் சிறிது விளக்கி, சைவ சமய நெறி பற்றி எடுத்துக் காட்டி, பின் வழுவிலா மணிவாசகர் பற்றி யும் சிறிது விளக்கினேன். பிள்ளைகள் மிக்க ஆர்வத்துடன் கேட்டனர். சுமார் நூறு பிள்ளைகளும் 40, 50 பெரியோர்

களும் கூட்டத்தில் இருந்தனர். அனைவரும் 12-30 மணி வரையில் அமைதியாக இருந்து பங்கு கொண்டனர். 'மணிவாசகர் பணத்தைத் திருப்பி அனுப்பியதற்கு சான்று உண்டா?' என ஒருவர் கேட்டார். அதற்கு நான் எழுதிய நூலிலேயே விளக்கம் உள்ளதைக்காட்டி, அவர் கோயில் கட்டியது அவர் பொருளே என்பதை விளக்கினேன். திருப்பி அனுப்பியதற்குத் தெளிந்த சான்று இருப்பின் இந்த வரலாறே இருந்திருக்காதே என்றேன். மற்றும் முறையற்ற வகையில் மற்றவர் பணத்தால் - அதுவும் அரச ஆணையை மீறி - செயலாற்றும் புன்மையுடைய ஒருவரால் எழுதப் பெற்றபாடல் இன்றளவும் காலம் - நாடு - மொழி - இனம் கடந்து வாழ முடியாது என்ற உண்மையினைப் பல சான்றுகள் காட்டி விளக்கினேன்.

கூட்டம் முடிந்தபின் திரு. செட்டியார், வடிவேலு, ஆகியோருடனும் வேறு சில அன்பர்களுடனும் வீடு சென்று உணவு கொண்டோம். பொதுவாக, சமயம் மொழிபற்றியும் இந்நாட்டில் தமிழர் நிலையில் தாழ்ந்து வரும் தன்மை பற்றியும் சிறிது நேரம் பேசினோம். பின் ஓய்வு கொண்டு, கோலாலம்பூருக்குப் புறப்பட்டு மாலை 5 மணிக்கு வந்து சேர்ந்தோம். இந்நாட்டிற்கே சிறப்பாக உரிய 'டொரியம் பழம்' என்ற ஒன்றினையும் மங்குஸ்தான் என்பதையும் செட்டியார் அவர்கள் உணவுக்குப்பின் வாங்கி உண்ணுமாறு சொன்னார்கள். மங்குஸ்தான் தற்போது நம் நாட்டிலேயே கிடைக்கிறது. மற்றொன்று கிடைப்பதரிது. அதன் மணம் ஏற்கக் கூடியதன்று; ஆனால் சுவை விடக் கூடியதன்று. வேடிக்கையாகச் சொல்லுவது உண்டு. 'மூக்கைப் பிடித்துக்கொண்டு வாயில் போட்டுக்கொள்ள வேண்டும்' என்பர். வழிநெடுக இரப்பர் மரங்களும் 'பாம்' எண்ணெய் தரும் மரங்களும் காட்சி தந்தன. முன்பெல்லாம் இந்நாட்டு வாழ்வு 'இரப்பர்' தோட்டங்களாலேயே அமைந்தது. ஆயினும் தற்போது பலர் 'பாம் ஆலிவ்' மரம் பயிரிடுகின்றனராம், நம் நாட்டுக்கு இந்த

எண்ணெய் பெருமளவில் ஏற்றுமதி செய்யப்பெறுகிறது. நம் நாட்டு உணவுப்பங்கீட்டு முறையில் இதற்கும் ஒரு முக்கிய இடம் உண்டு அல்லவா! ஆம்! இத்தகைய சிறு நாடுகளிட மும் கையேந்தி நாம் வாழ வேண்டியுள்ளது.

காடுகளும் மலைகளும் பிற இயற்கை வளங்களும் நாட்டில் வற்றாத ஆறுகளையும் - ஓடைகளையும் பேரேரி களையும் பிறவற்றையும் வாழ வைக்கின்றன. காடு எங்கே - எந்த நாட்டில் செழித்து வளர்கின்றதோ அங்கெல்லாம் பருவமழை தவறுவதில்லை. விளையும் பயனும் கெடுவ தில்லை. இந்நாட்டின் பெருநகரங்களுக்கிடையிலெல்லாம் கூட அடர்ந்த காடுகள் உள்ளனவே. ஏன்? நான் பார்த்த பிற நாடுகளும் இத்தகையனவே. ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும் ஜப்பானிலும் மலேயாவிலும் சிறு தீவுகளாகிய ஆங்காங், சிங்கப்பூரிலும் அடர்ந்த சோலைகள் - காடுகள் - உள்ளனவே. மலைச்சாரிவுகளை - பாறைகளைப் பார்க்க முடியவில்லையே. மரம் காக்கும் - காடு வளர்க்கும் - செவ்வியை எல்லா நாட்டவரும் போற்றி வளர்க் கின்றனர். பல்கலைக்கழகங்கள் - பரந்த உயர்ந்த அலுவலகங்கள் - நினைவுச் சின்னங்கள் அனைத்தும் சோலை கள் நடுவே - தண்ணீர்ச் சாலைகள் நடுவே அமைந்துள்ள தன்மையை நாடுதொறும் நேரில் கண்டு மகிழ வேண்டும். இங்கும் நீர் மின்சாரம் எடுக்கிறார்கள். அதற்கெனக் காடு களை அழிப்பதில்லை (இங்கும் நியாகாராவிலும் அடர்ந்த காடுகளுக்கிடையில் அவை அமைந்ததைக் கண்டேன்).

மரம் மனிதனை வாழ வைக்கிறது; மனிதன் விடும் நச்சுக்காற்றைத் தான் உண்டு அவன் உட்கொள்ள நல்ல காற்றைத் தருகின்றது. தன் கழிவுப்பொருள்களையும் தழைகளையும் அவன் உணவுக்குரு எருவாக்குகிறது. தன்னையே அவனுக்குத் தந்து அவன் வீடுகட்டவும் உட்கார வும் வேறு வகைக்கும் மரப்பொருள்களாக உதவுகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக எங்கோ செல்லும் மேகத்தை நிறுத்தி 'இங்கே மழை பெய்' என்று ஆணையிட்டு நிலத்

தைப் பயிரிடப் பண்படுத்துகிறது. எத்தனை எத்தனையோ நூற்றாண்டுகளாக நம் நாட்டு பல பெரியவர்கள் இத்தனையும் சொல்லி வைத்தும் எழுதி வைத்தும் சென்ற போதிலும் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் மரங்கள் அழிக்கப்பெறுகின்றனவே. (அண்மையில் பெங்களூரில் நடைபெற்ற மாநாட்டில் அறிஞர் காட்டிய குறிப்பு நம்மை அலற வைக்கின்றதே). 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்ற பழம்பாடல் மறந்து, மனிதன் வன்கண்ணனாக மாற, இயற்கையும் அவன் வாழ்வைக் குலைக்கிறது. இவை எண்ணி, இனியாயினும் - பிறரைக் கண்டாயினும் நம் நாட்டு மக்களும் இந்நாட்டு மக்களும் நல்லது செய்ய முற்படுவார்களா?

பகலில் (இரு நாட்களிலும்) வெப்பம் அதிகமாக இருந்தது. இந்நாட்டுக் காடுகள் பல அழிக்கப் பெற்ற மையே இதற்குக் காரணம் என்றனர். தமிழர் இங்கே அதிக மாக வாழ்வது காரணம் என்றனர். திரு. இரா. தண்டாயுதம் அவர்கள் வீட்டில் எங்கள் வருகைக்குக் காத்திருந்தனர். கவாய் மடத்துத் துறவியர் கோலாலம்பூரில் ஒரு அன்பரைக் காணுமாறு கொடுத்த குறிப்பின் வழி, அவரை மாலை 5 மணிக்கு வரச்சொல்லி இருந்தபடி, அவரும் வந்தார். பெயர் 'திருவாசகம்'. எனக்கு மகிழ்ச்சி. 'திருவாசகத்தை படித்திருக்கிறேன். கேட்டிருக்கிறேன் - நூலாகக் கண்டிருக்கிறேன். ஆனால் மனித உருவில் இன்று தான் காண்கின்றேன்.' என மகிழ்வோடு கூறி அவர்களுடன் மடத்துச் சைவ சித்தாந்தக் கொள்கை பற்றிப் பேசினேன். இன்றைய நாட்டு நிலையிலும் சமயம் நாட்டில் மாற்றாரால் பெறும் நிலையினையும் கூறி, சில காலம் தத்துவத்தை மறந்து, சமயத்தை வளர்க்க வேண்டும் என வற்புறுத்தினேன். இவ்வாறு தத்துவம் பேசியதால் சமயம் வீழ்ச்சியடைந்த வரலாற்றைச் சுட்டினேன். இங்குள்ள அன்பர்களும் கவாய் ஆதினமும் சிறிது காலம் தத்துவத்தை மறந்து சமயம் வளர்ப்பதில் கருத்திருத்த வேண்டிய அவசியத்தை

வற்புறுத்தினேன். தேவையாயின் பின் அறிஞர் கூடி நின்று அதுபற்றி ஆராயலாம் என்றேன். அனைத்தையும் மடத்துக்கு எழுதுமாறும் கூறி விடைபெற்றேன்.

சிரம்பானில் திரு. செட்டியார் அவர்கள் சிங்கப்பூரில் நான் தந்த முகவரிக்கு உரியவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். என்னை விமான நிலையத்தில் வந்து காண்பதாகவும் ஊரில் பலர் கடிதம் எழுதியுள்ளதாகவும் எல்லா உதவிகளையும் செய்வதாகவும் என் ஜப்பான் முகவரிக்குக் கடிதம் எழுதிய அந்த அன்பர் அவ்வாறு வர இயலாதென்றும் நான் அங்கே வரவேண்டாமென்றும் கூறினார். எனக்கு வியப்பாக இருந்தது. அவர்தம் முதலாளி உட்பட எழுதியும் அவரே அழைப்பதாகஇசைந்தும் இப்படிச் சொல்லுகிறாரே என்று அனைவரும் வருந்தினர். 'அப்பொழுது எழுதினேன் இப்பொழுது முடியாது' என்று கூறினார். எனக்கும் இந்தப் பயணத்தில் இப்படி ஒரு பாடம் இருந்ததை எண்ணினேன். முன்பின் அறியாத நாடுகளில் - யாரும் அறிமுகம் செய்யா நிலையிலும் - என்னைப் பரிந்தேற்று, உணவிட்டு, பாராட்டி, அன்பு காட்டிய அத்தனை அன்பு உருவங்களும் என்முன் நிழலிட்டன. இப்படியும் ஒன்றா என எண்ணினேன். 'எத்தாயர் வயிற்றில் பிறந்தார்களும் ஒத்தால் பரதன் பெரிதுத்தம னாவதுண்டோ' என்ற கம்பன் அடி நினைவுக்கு வந்தது. மற்றவர்கள் பெருமையைக் காட்டத்தான் இப்படிச் செய்தாரோ இவர் என நினைத்தேன். நல்ல வேளை செட்டியார் அவர்கள் அவருடன் சில காலம் இருந்து பணியாற்றியவரும் தற்போது சிங்கப்பூரில் செயலாற்றுபவருமாகிய மாணிக்கம் செட்டியார்என்பவருக்கு உடன்தொலைபேசியில் பேசினார். அவர் இல்லையாயினும் அவர்தம் துணைவியார் என்னை அவர்கள் வீட்டிற்கே வருமாறும் வேண்டியவற்றிற்குத் தாமே உடனிருந்து உதவுவதாகவும் கூறினாராம். செட்டியார் அவர்களும் அந்த அம்மையார் நிறைந்த அனுபவம் உடையவர்களென்றும், நம் நாட்டவர் வைத்

துள்ள கடைகளுக்கும் பிற இடங்களுக்கும் அழைத்துச் சென்று எல்லாவற்றையும் காண உதவுவார்களென்றும் கூறினார். பின் மறுபடியும் 4 மணி அளவில் திரும்பவும் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு, திரு. மாணிக்கம் செட்டியார் அவர்களிடமே எல்லாவற்றையும் சொல்லி, பயண ஏற்பாடு முதலியவற்றைக் கவனித்துக் கொள்ள சொன்னார்கள்.

7 மணி வரையில் அனைவரும் பேசிக் கொண்டிருந்து உணவு கொண்டு 7-45க்கு விமான நிலையம் புறப்பட்டோம். நான் வந்தபோது, அவ்வளவாகக் காணவில்லையாதலால் இன்று விமான நிலையத்தை நோக்கினேன். மிகப் பெரியதாக இருந்தது. இங்கும் பல வெளி நாட்டு விமானங்கள் வந்து செல்லுமாம். நான் செல்ல வேண்டிய விமானம் சிங்கப்பூரிலிருந்து வந்து திரும்ப வேண்டுமாம். அது வரக் காலம் தாழ்த்தமையின் சுமார் ஒரு மணி நேரம் தாழ்த்து 9-30க்கு புறப்படும் என்றனர். இரு ஊர்களுக்கும் உள்ள தூரம் 220கல்லாக - சுமார் 35 நிமிடப் பயணத்துக்கு மணிக் கணக்காகக் காக்க வேண்டியிருந்தது. அவனவரும் அது வரை உடனிருந்து பின் பிரியா விடைபெற்றுச் சென்றனர்.

விமான நிலைய உட்புறத்திலும் விமானத்திலும், சிங்கப்பூரில் விமான நிலையத்திலும் தமிழ்நாட்டில் வாழ்ந்த ஒரு முகமதிய நண்பர் என்னுடன் வலிய வந்து எல்லா உதவிகளையும் செய்தார். என்னை அழைத்துச் செல்ல வந்தவர் (வெளியே) இருக்கிறார் என்று சொன்ன பிறகே அவர் விடைபெற்றுச் சென்றார். (இன்றேல் அன்று அவருடன் வந்து தங்கலாம் என்றார். நான் முன்னே குறிப்பிட்ட அந்த அன்பரையும் முன்பின் அறியாத இந்த முகமதிய நண்பரையும் எண்ணிப் பார்த்தேன்).

விமான நிலைய வாயில் திரு. மாணிக்கம் செட்டியார் அவர்கள் காத்திருந்தார். உடனே ஒரு வாடகை வண்டி ஏற்பாடு செய்து வீட்டிற்கு இரவு 11-15க்கு வந்து சேர்ந்தோம். வீட்டில் அன்னையார் அவர்கள் வரவேற்று நன்கு

உபசரித்தார்கள். நாங்கள் வருவதற்குள் சிரம்பானிலிருந்து திரு. செட்டியார் அவர்கள் நான் வந்து சேர்ந்து விட்டேனா என, 11மணி அளவில் கேட்டிருக்கிறார். நான் அதுவரை வரவில்லையாதலால் அரைமணி நேரம் கழித்துப் பேசுவ தாகச் சொன்னாராம். அப்படியே நாங்கள் படுக்கப் போகும்போதும் பேசினார். வழிப்பயணம் எப்படி இருந்த தென்று கேட்டு, நல்லபடி தாய் நாடு சென்று கடிதம் எழுதும்படியும் சொன்னார். அவர்தம் அன்புளத்தை எண்ணி எண்ணிப் போற்றினேன். சென்னையில் இருந்து என்னை அவரிடம் ஆற்றுப் படுத்திய அவர்தம் மகளாரையும் மருகரையும் எண்ணினேன். இத்தகைய நல்லவர் வாழ் வாலேயே உலகம் வாழ்கிறது என நினைத்தேன். 'பிறர்க் கென முயலுநர் உண்மையானே, உண்டாலம்ம இவ்வுலகம்' என்ற பழம் பாட்டின் அடி என் நினைவிற்கு வந்தது. இத்தகைய எண்ணங்களுடன் இன்னும் இரண்டு நாட்களில் தாயகம் சென்று விடுவோம் என்ற எண்ணமும் உள்ளத்து அமைய, நடு இரவு 12மணி அளவில் உறங்கச் சென்றேன்.

சிங்கப்பூர் 10-6-85

காலை 5மணி அளவில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டேன். நான் முன்னரே குறித்தபடி, இங்கே நேரத்தை மாற்றி வைத்த காரணத்தால், 7மணிக்குத்தான் பொழுது விடிகிறது. காலைக்கடன்களை முடித்துக் கொண்டு 8மணி அளவில் சிற்றுண்டி கொண்டேன். இடையில் குறிப்பினை எழுதி முடித்தேன். பின், ஊர் செல்வதற்குரிய பயணம் பற்றிக் கேட்டறிந்தேன். நாளை காலை வரச் சொல்லியுள்ளார்கள். உலகம் முழுவதும் சுற்றி வந்த நிலையில், எந்த இடத்திலும் நான் அலுவலகம் சென்றதில்லை.முன்னரே பதிவு செய்தபடி உரியஇடத்தை எனக்குப் பல விமானக் கூட்டாளர்கள் அங்கங்கே ஒதுக்கி விடுவர். ஆனால் நான் ஹானலூலுவிலிருந்தும் ஆங்காங்கிலிருந்தும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கூறியும் 3-4-85லேயே முன்னதாகப் பதிவு செய்தும் நாளைதான் திட்டமாகச் சொல்லுவதாகக் கூறுகிறார்கள். உண்மையிலேயே நம் நாட்டு விமானப் போக்குவரத்தினைக் கண்டு பிற நாட்டார் நகைக்க மாட்டார்களா என்ற எண்ணம்தான் எனக்கு உண்டாயிற்று.

காலை இங்குள்ள வானொலியைத் திருப்பினர். காலை 6மணி முதல் இரவு 12மணிவரை தொடர்ந்து தமிழில் ஒலிபரப்பாகும் நிலை இங்கே உண்டு. பள்ளிகளுக்கெனப் பல பகுதிகள் - பாடல்கள் - நாடகங்கள் - உரையாடல்கள் இப்படிப் பலப்பல வகையில் நாடோறும் தமிழ் ஓசை தொடர்ந்து கேட்க ஏற்பாடு செய்துள்ளனர் இந்த ஆட்சி

யாளர். இது தமிழகத்திலும் காணமுடியாத ஒன்றல்லவா! பகல் 1மணிவரை ஓய்வாக இருந்து, இந்த வான் ஒசை வழியே பல நாட்களுக்குமுன் நான் கேட்ட நல்ல பாடல்களையெல் லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். பின் பகல் உணவு கொண் டோம். (திரு. மாணிக்கம் அவர்களும் உடல் நலமில்லை யாதலால் அலுவலகம் செல்லவில்லை) - பிறகு இரண்டு மணிக்குக் கடைகளுக்குச் சென்று பள்ளிக்குத் தேவையான இரண்டுடொரு பொருள்களை வாங்க நினைத்து அன்னை யாருடன் புறப்பட்டேன்.

பல கடைகள் - சில நம் தமிழர்களே வைத்துள்ளவை - சென்று பள்ளிக்குத் தேவையான ஓரிரு கருவிகள் வாங்கி னோம். அங்கே தமிழர்தான் பலர். தெருவுதோறும் தமிழர் கூடியுள்ளனர். தமிழ்மட்டும் அறிந்தவர்கள் யாரும் இங்கே யாதொருசிக்கலுமின்றி வாழ முடியும். பலவிடங்களில் நம் நாட்டு உணவுச் சாலைகளும் உண்டு. வணிகர் பலர் நம் நாட்டைச் சேர்ந்த - வடநாட்டினையும் உட்படத்தான் - நல்லவர்களாக உள்ளனர். எனவே எந்தப் பொருளையும் வாங்குவதில் கடினமில்லை. எனினும் கூட்டம் அதிகமாக உள்ளமையின் விரைவில் செயலாற்ற முடியவில்லை.

அனைத்தையும் கண்டு முடித்தபின் நாங்கள், 6மணிக்கு மேல் வீடு திரும்பினோம். பின் இங்குள்ள தண்டாயுதபாணி கோயிலுக்குச் செல்ல நினைத்தோம். அம்மையார் அவர் களுடன் அவர் தம் மற்றொரு உறவினரும் உடன் வந்தனர். இங்கே வாடகை வண்டிக்காரர்கள் நேர்மையாக இருப்ப தில்லை. 'கார்'களில் நால்வர் செல்லலாம் என வழி இருப்பினும், இருவருக்கு மேல் ஏறினால் ஒருவருக்கு 50 காசு (½ வெள்ளி) தனியாகத் தர வேண்டுமாம். கொஞ்சம் சாமான்கள் இருந்தாலும் தனியாகக் காசு தர வேண்டும். காசு மிகுதியிருப்பின் அதையும் தரமாட்டார்கள். எங்கும் காணாத இந்தப் புதுமை கண்டு வியந்தேன்.

கோயில் மிக அழகாக - தூய்மையாக வைக்கப் பெற்றி ருந்தது. அண்மையில்தான் கோயிலைச் செப்பம் செய்து

குடமுழுக்கு விழா நடத்தினார்களாம், தண்டாயுதபாணி கோயிலில் பூசை செய்பவர் பழநியைப் போன்று பண்டாரமே யாவர். (நேற்று சிரம்பானில் ஐயர் இருக்கக் கண்டேன்) இங்கும் பிற பிற சந்நிதிகளில் - சிவன் - சக்தி - ஐயர் பூசை செய்கிறார். நான் மற்றவர்களுடன் சுற்றி வலம் வந்து வழி பாடாற்றி இறையருள் வேண்டப் பெற்று மகிழ்ந்தேன். நான் சென்ற வேளையில் கோயிலில் நம் நாட்டைச் சேர்ந்த சேலம் ஜெயலட்சுமி அவர்தம் இன்னிசைக் கச்சேரிக்கு ஏற்பாடு ஆகி இருந்தது. அழகான நல்ல தமிழில் திருப் புகழ், திருமந்திரம், கந்தரனுபூதி, தேவாரம் ஆகிய பாடல்களைப் பாடினர். 8-45 வரையில் இசை அரங்கு நடை பெற்றது. பிறகு அவர்களைக் கண்டு நலம் வினவி விடை பெற்றேன். அவர்களும் திரும்புவதற்கு முடியா நிலையில் சில நாட்கள் தங்கப்போகிறார்களாம். நான் தங்கிய வீட்டில் வந்த அம்மையார் ஒருவரும் ஒருவாரமாக இருந்து, நாளை மறுநாள் என்னுடன் நான் செல்லும் விமானத்தில்தான் புறப்பட்டுச் சொல்ல இருக்கிறார்களாம்.

இரவு 9-30க்கு வீட்டிற்கு வந்தோம். பிறகு அம்மையார் அனைவருக்கும் சிற்றுண்டி தயார் செய்து தந்தார்கள். அவர்கள் மூன்று பெண்களும் ஊரில் தத்தம் கணவருடன் வாழ்கின்றனர் என்றும் ஒரே மகன் சேலம் கல்லூரியில் (Statistics) பயில்கிறான் என்றும் அவர்களுக்கு நவம்பர் 12ல் மணிவிழா நடைபெறப் போகிறதென்றும் அறிந்தேன். சிறிது நேரம் பல பொருள்கள் பற்றி அனைவரும் பேசிக் கொண் டிருந்தோம். பதினொரு மணி அளவில் உறங்கச்சென்றேன்.

சிங்கப்பூர் 11-6-85

சிங்கப்பூர் நகரம் பலவகையில் வளர்ச்சி அடைந்துள்ளது. எங்கும் பல மாடிக் கட்டடங்கள்; நல்ல சாலைகள். தெளிந்த சாலை வழிகாட்டும் முறைகள். பலவிடங்களில் பூங்காக்கள் - சிறுவர் விளையாடுமிடங்கள். இப்படிப் பல வகையில் மக்கள் வாழ்வு கருதிப் பல அரிய செயல்களை இந்த ஆட்சியாளர் செய்துள்ளார். இது ஒரு தனித்தீவு; சிறியது. நம் சென்னை நகர் எல்லையினும் சிறியது. மக்கள் ஒரு சில இலட்சம் இருக்கலாம். தனி ஆட்சி. அமைச்சரவை உண்டு. நகர்நலம் போற்றப் பெறுகிறது.

என்னுடைய இந்நெடிய உலகப்பயணத்தின் கடைசிக் கட்டமாகிய இந்த மூன்று நாட்களிலும் இறைவன் நிலை கண்டு மகிழும் வாய்ப்பினைப் பெற்றேன். 9-6-85-ல் சிரம்பானில் தண்டாயுதபாணி கோயிலில் இறைவழிபாடும் நேற்று இங்கே தண்டாயுதபாணி கோயிலில் முருகன், சிவன், அம்மை வழிபாடும் பெற நின்ற நிலையில் இன்று சீனிவாசப் பெருமாள், இலக்குமி, சிவன், சக்தி ஆகிய கடவுளரை ஒருசேரக் கண்டு மகிழும் பேறு பெற்றேன். இன்று காலையில் சாமான்களையெல்லாம் சரிசெய்து கட்டிவைத்தேன். சிற்றுண்டிக்குப்பின் திரு. மாணிக்கம் செட்டியார் அவர்கள் பயணம் உறுதிபெற உரிய அலுவலகம் அழைத்துச் சென்றார். அங்கே என் பயணம் உறுதி செய்யப்பெற்றது. அதுபற்றி எண்ணி மகிழ்ந்தேன்; நன்றி கூறினேன். இங்கே நம் நாட்டுக்குப் போக்குவரத்து மிக அதிகமாக

உள்ளமையின் சிலர் நெடுநாள் காக்க வேண்டியும் வரும் போலும். பலர் இடம் பெறப் போட்டியிடுகின்றனர். இத்துணை அதிகமான தேவை இருந்தும் 'ஏர்இந்தியா'வோ, 'சிங்கப்பூர் ஏர்லைன்ஸ்' சோ அதிகமான விமானங்களைவிட ஏனோ எண்ணவில்லை. சில ஊர்களுக்கு இடையில் ஒரு நாளைக்கு 10 முறை - 8, 6, 4 முறை எனப் பல பயண ஏற்பாடுகள் இருக்கும்போது இங்கு மட்டும் ஒரு நாளைக்கு ஒன்று என இருக்கிறது. ஏர்இந்தியா வாரத்தில் மூன்று நாட்கள்தாம் போலும். இன்னும் ஒரு நாளைக்கும் ஒரு விமான மூலம் விடின் நல்ல வருவாய் அவர்களுக்கும் உண்டு; பொதுமக்களும் நலம்பெறுவர். எண்ணுவார்களா? எனக்கு ஒருவேளை நான் முதலில் தங்க ஏற்பாடு செய்திருந்தவர் இசைந்திருந்தால், என் பயண ஏற்பாடு முற்றுப் பெற்றி ருக்குமோ என்பது ஐயமே. எனவே அன்று அப்பா 'சிவநேயம் தந்த சூலையேஉனக்கு வணக்கம்' என்று கூறியபடி,'என்னை ஏற்க முடியாது என்று கூறிய அன்பரே! உமக்கு வணக்கம்' என்று சொன்னேன். அவர் இயலாது எனக் கூறியபோது வருத்தம் இருந்தபோதிலும் இப்போது, இறைவன் எதையும் நம் நலன் பொருட்டே செய்கிறான் என்பதும் உறுதியா யிற்று.

பின் கடைத்தெருவுக்குச் சென்று பிற அன்பர்களையும் கண்டு வீடு திரும்பினோம். அவர்கள் பணிமனை செல்ல வேண்டியிருந்ததால் சென்று விட்டனர். நான் படுத்து ஓய்வுகொண்டேன். மாலை 7 மணிக்குக் கோயிலுக்குப் போகவேண்டும் என்றனர். சீனிவாசப்பெருமாள் கோயிலில் வசந்தோற்சவம் என்றும் இன்று கடைசிநாள் என்றும் அவசியம் சென்று காணவேண்டும் என்றும் கூறினர்.எனக்கும் தாயகம் செல்லுமுன் இதுவே கடைசி நாளானமையின், இறைவழிபாடு ஏற்றதென எண்ணினேன். அடுத்த அடுக்கு மாளிகையில் குடியிருக்கும் அம்மையாரும் அவர்தம் பிள்ளைகளோடு வந்திருந்தார். அனைவரும் ஏழுமணிக்குத் திருக்கோயில் சென்றோம். சிவன், திருமால் வேறுபாடு

இன்றி, இருவரும் இணைந்து காட்சி தரும் வகையில் கோயில் அமைப்பு இருந்தது.

விசுவநாதர் விசாலாட்சி அம்மையின் கோயிலில் சென்று இறைவனையும், அன்னையையும் வணங்கினோம். கோயில் தூய்மையாக இருந்தது. அர்ச்சனைக்குப் பழம் கொண்டு செய்தால் 50 காசு எனவும் தேங்காய் கொண்டு செய்தால் ஒரு டாலர் எனவும் எளிய வகையிலேயே கட்டணம் அமைத்திருந்தனர். பலர் அங்கே வழிபாடாற்று வதைக் கண்டேன். ஆங்கில நாட்டு மக்களும், சீனா மக்களும்கூட வழிபாட்டில் கலந்துகொண்டு, தம்மை மறந்து நின்ற நிலையினை எண்ணினேன். நானும் என்னை மறந்து, இறைவனை வழிபட்டு, அடுத்து, திருமால் - சீனிவாசர் கோயிலுக்குள் நுழைந்தேன்.

பெருமாள் கோயிலில் விநாயகருக்குத்தான் முதல் வழிபாடு. சில கோயில்களில் 'தும்பிக்கை ஆழ்வார்' என்று நம் நாட்டில் பெயரை மாற்றுவதுபோல இங்கே செய்ய வில்லை. ஆண்டாளுக்கும் அம்மை இலக்குமிக்கும் தனியா கச் சன்னதிகள். ஆழ்வார் மூவருக்கு (திருமங்கை ஆழ்வார், நம்மாழ்வார், பெரியாழ்வார்) மட்டும் தனிச் சன்னதி. ஆழ்வார் பிறர் இல்லையே என்றேன். விரைவில் ஏற்பாடு செய்யப் போவதாகச் சொன்னார்கள்.

நாங்கள் சென்றபோது, வசந்தத்தின் கடைசிநாள், இறைவன் இருபுடை அன்னையார் சூழ - சீதேவி -பூதேவி - காட்சி அளித்தான். ஐந்து நாதசுரமும் ஐந்து தவுலும் சேர்ந்த வாத்தியக் கச்சேரி; சிறு கோயில்; அதை இறைவன் வலம் வரச் சுமார் 3 மணி நேரம் ஆயிற்று. அத்துணை அளவும் வாத்தியக் கோட்டியினர் மிகஉருக்கமாக வாசித்து இறைவன் கருணையைப் பெற்றதோடு, வந்திருந்த மக்கள் உள்ளத் தையும் உருக்கினர். நம் நாட்டில்கூட இதுவரையில் ஒருசேர ஐந்துநாதசுரக்காரர் சேர்ந்து வாசித்த சிறப்பினை நான் கண்டதில்லை. இங்கே சிங்கப்பூர் மக்கள் கொடுத்து வைத்

தவர்கள். ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். வந்து வந்து, சென்று கொண்டேயிருந்த மக்கள் எண்ணற்றவர். மொத்தம் பத்தாயிரம் 'மக்கள்' இன்று வந்து சென்றிருப்பார்க ளென்றனர். இறைவன் திருக்கோலமும் மூலவர் தோற்றமும் உள்ளம் கவர் வண்ணமாக இருந்தன. அங்கே வழிபாடியற்றும் அந்தணர் அனைவரும் கோதை பிறந்த வில்லிப்புத்தூரைச் சேர்ந்தவர்கள். பொதுவாகவே வைணவர் இறைவனைப் போற்றும் மரபு நெறி - அன்பு கலந்த பக்தி நெறி இங்கே போற்றப்பட்டது. நன்கு வருபவரை ஏற்று வழிபாடியற்றினர். நானும் இறைவனைப் போற்றி மண்டபத்தில் ஒரு பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன்.

பத்து நாள் விழாவினையும் ஒருவரை ஒருவர் போட்டியிட்டுச் செய்கின்றனர். நேற்று கண்ட தண்டாயுதபாணி கோயில் செட்டியார் மரபுக்கே உரியது. இது ஊர்ப் பொது. எனவே எல்லோரும் கலந்து தொண்டாற்றுகின்றனர். இன்று சிறப்பாகச் செய்தவரும் ஒரு தமிழர். வந்த மக்களுள் பெரும்பாலோர் தமிழர். சில வடவர், சில சீனர் இருந்தனர். அனைவரும் வழிபாடாற்றினர். வந்த அத்தனை பேருக்கும் இறைவன் அருட்பிரசாதம் வழங்கினர். (வேர்க்கடலைச் சுண்டல்-கேசரி - புளிச்சாதம்) பாய் விரித்து காகித இலையிட்டு அனைவரையும் உட்கார வைத்துப் பரிமாறினர். ஆயிரம் பேரும் உண்ணத்தக்க அளவு அனைத்தையும் தயார் செய்திருந்தனர். இறைவன் வழிபாடு முடிந்தும் உணவு படைத்து முடிக்கப் பத்து மணியாயிற்று. இறைவன் திருக்கோலமும் ஒவ்வொரு சன்னதியிலும் ஆற்றிய வழிபாடும், உலா முடிந்தபின் மண்டபத்தில் ஐவர் இருந்து வாசித்த வாசிப்பும், அதைக் கேட்டுக்கொண்டே உணவு கொண்ட மக்கள் நிலையும் உள்ளத்தில் பதிந்தன. நாளை இதே நேரத்தில் இந்திய மண்ணில் இருப்போம் என்ற உணர்வுடன், இறைவனை வணங்கி, 10 மணிக்கு மேல் விடை பெற்றுப் புறப்பட ஆயத்தமானேன்.

வந்திருந்த மக்களைப்பற்றி எண்ணினேன். எல்லோரும் தமிழகத்தினர். சிலர் வடவர் - சிலர் பிறர். பெரும் பாலோர் ஆண்கள், வேட்டி உடுத்தி இருந்தனர். காற் சட்டை இட்டவரும் சிலர். பெண்கள் பல வகையில் காட்சி தந்தனர். வடவரைப் போன்று சிலர் - வெள்ளையரைப் போன்று சிலர். இப்படிப் பலவகை உடை இருப்பினும் காதில் கம்மலும் - தொங்கட்டமும் மூக்குத்தியும் - சிலர் காதில் சிமிக்கி போன்ற பிறவும் இருந்ததோடு முகத்தில் பொட்டும் இட்டுத் தம்மை இந்து சமயத்தவர் எனக்காட்டிக் கொண்டனர். அனைவரும் வீழ்ந்து வணங்கி அன்புடன் போற்றினர். அவர்தம் உடைமாற்றம் உள்ளத்தில் இல்லை என்பதை வழிபாடாற்றும் வகையில் கண்டேன். எப்படியோ இங்கு இந்த வகையில் இறையுணர்வு சிறக்க உள்ளதை எண்ணி எண்ணி மகிழ்ந்தேன். இறைவனை மறுமுறையும் வணங்கி விடைபெற்றுப் புறப்பட்டேன். கோயில் அருள் உணவு பெற்றதால் வீட்டில் உணவு கொள்ளவில்லை. 'சென்ற காலத்தின் அருமையும் இனி வருங்காலத்தின் பழுதிலாச் சிறப்பும், எண்ணியவாறு படுக்கச் சென்றேன். வாழி!

சென்னை 12-6-85

இன்று காலை சிங்கப்பூரில் எழுந்து கடன்களை முடித்துக்கொண்டு, இந்த நாட்குறிப்பினை (நேற்றையது) எழுதிக்கொண்டிருந்தபோது, சிரம்பான் இலட்சுமணன் செட்டியார் தொலைபேசியில் கூப்பிட்டார். அவர் என் பயண நிறைவு பற்றிக் கேட்டு மகிழ்ந்தார். அவர் அன்பினை எண்ணி மகிழ்ந்தேன். ஊர் சென்றதும் கடிதம் எழுதுவ தாகக் கூறினேன். மாலை 6 மணிக்கு விமானமாயினும் 3மணிக்கே அங்கே சென்று சாமான்களை ஒப்படைக்க வேண்டும் என்றனர். அதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்து முடித்தேன். திரு மாணிக்கச் செட்டியார் அவர்கள் அலுவல் மேற்சென்றார். இன்று மற்றொரு செட்டியார் திரு. நடராசன் அவர்கள் தம் வீட்டிற்கு விருந்துக்கு அனைவரையும் அழைத்திருந்தார். நேற்று மாலை அவர் குடும்பத்துடன் எங்களோடு கோயில் வந்திருந்தார். அப்போது அவர் சொல்லி அழைத்தார். எனவே நாங்கள் அவர் வீட்டிற்குச் சென்றோம். செட்டியார் அவர்கள் நேராக அலுவலகத்திலிருந்து அங்கே வந்துவிட்டார். அனைவரும் உணவு கொண்டபின், வீடு திரும்பினோம். மணி மூன்று ஆனபடியினால் நாங்கள் உடன் விமான நிலையம் புறப்படத் தயாரானோம். அன்னையார் அவர் களும் உடன் விமான நிலையம் வருவதாகச் சொன்னார்கள். நான் வேண்டாம் எனக்கூறியும் கேட்கவில்லை. சரி இதுவும் இறையருளே! அம்மையப்பராக வந்து இருவரும் என்னை வாழ்த்தி வழியனுப்புகிறார்கள் என்று மகிழ்ந்தேன்.

விமான நிலையம் சென்னைப் பயணிகளால் நிரம்பி வழிந்தது. இதுவரையில் எந்த விமான நிலையத்திலும் காணாத வகையில், 'டிக்கெட்டி'ற்குக் கையேந்தி நிற்கும் இருநூறு பேருக்கு மேற்பட்டாரைக் கண்டேன். இந்திய சிங்கப்பூர் கப்பல் போக்குவரத்து நின்றதால் இக் கூட்டம் என்றனர் சிலர். நாள்தொறும் கள்ளத்தனமாகப் பொருள் களை வாங்கிச் சென்று விற்பதால் சேரும் கூட்டம் இது என்றனர் சிலர்.

சாமான்கள் அதிகமாக இருந்தமையின் முன் எடை யிட்டு, அதிக எடைக்குப் பணம் கட்டி உறுதி செய்த பின்பே டிக்கெட் எடுத்து, உள் செல்ல அனுமதி தந்தனர். செட்டியாரும் அவர்தம் துணைவியாரும் அதுவரை உடன் இருந்து, எல்லாச் சாமான்களையும் பொறுப்புடன் ஒப்படைத்து, நான் உள் செல்லும் வரையில் உதவினர். மணி 5 ஆனதும் நான் உள் செல்லவேண்டும். இருவரிடம் பிரியாவிடை பெற்று, 70 நாட்களுக்குப் பிறகு புறப்பட்ட அதே இடத்திற்கு—தாயகத்துக்குச் செல்லப்போகும் நிலையினை எண்ணினேன். என்றும் போல இந்த எழுபது நாட்களிலும் வழித்துணை மருந்தாக இருந்த இறைவனை வணங்கினேன்.

விமானம் பல புதியவர்கள் ஏறிய காரணத்தால் சிறிது தடைப்பட்டு 6.30க்குப் புறப்பட்டது. அது கோலாலம்பூர் சென்று போகுமாம். எனவே மொத்தம் 5½மணி நேரம் விமானத்தில் இருக்க வேண்டும். கோலாலம்பூரில் விமானம் இறங்கி -ஏறக்குறைய ஒரு மணி நேரம் ஆயிற்று. எப்படியோ 8.30க்கு அங்கிருந்து விமானம் புறப்பட்டது. நான் கடந்த எழுபது நாட்களையும் எண்ணி எண்ணி நின்றேன். நாளை முதல் மறுபடியும் பள்ளி, ஆசிரியர், பிள்ளை கள், பிற பணிகள் இவைமாறிமாறித் தொடர்ந்துகொண்டே இருக்கும். நாளைக்கு ஒரு ஊர்—வேளைக்கு வேண்டியோ வேண்டாமலோ பலவகை உணவு—பலப்பல புதிய மனிதர் கள்—புதிய வாழ்க்கை நெறிகள்—இயற்கைச் சூழல் இன்ன

பிறவற்றையெல்லாம்—கடந்த எழுபது நாட்களில் பெற்ற அனுபவங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கண்ணை மூடிக்கொண்டு எண்ணிக்கொண்டே மணிக்கு 400 கல்லுக்கு மேலாக வேகத்தில் பறந்து கொண்டே இருந்தேன். இடையில் விமானத்தில் தந்த உணவு முதலியனவெல்லாம் வெறும் கனவெனக் கழிந்தன. என் எண்ணத்தில் கண்மூடி மௌனியாகிப் பறந்து வந்த என்னை, 'இதோ சென்னை விளக்குகள்' என்று பக்கத்து உள்ளார் கூறிய சொற்கள் நான் தாயகத்தில் இருக்கிறேன்—மேலே பறக்கிறேன் என உணர்வு கொள்ளச் செய்தன. எவ்வளவோ வகையில் பிற நாடுகளை நோக்க, என் தாயகம் தாழ்ந்த நிலையில்—ஏழ்மை நிலையில் இருந்தபோதிலும் என் சொந்த மண்ணில் கால் வைக்கப்போகிறோம் என்ற உணர்வு என்னை ஆட்கொண்டது. எத்தனையோ மாறாட்டங்களுக்கும் போராட்டங்களுக்கும் இடையில் பழம் பெருமையும் பண்பாடும் முற்றும் வற்றாநிலையில்-உலகுக்குப் பக்தி நெறியையும் பண்பாட்டு நெறியையும் உணர்த்திக்கொண்டிருக்கும் பாரதத்தையும்—சிறப்பாகத் தமிழகத்தையும் எண்ணி வாழ்த்தி வணங்கினேன்.

விமானம் சரியாக ஒன்பது மணிக்கு (இந்தியமணி) தரையில் இறங்கியது. உடன் முறைப்படி விமானத்திருந்து இறங்கி, தமிழ் மண்ணில் கால் வைத்து, அதைக் கைதொட்டு வணங்கினேன். பின் உரியவகையில் சுங்கச் சோதனைகள் முதலியவை நடைபெற்றருந்தன. பின் வெளியே வந்து, வந்திருந்த மெய்கண்டான், மற்றவர்களோடு இரவு பதினொரு மணி அளவில் வீடுவந்து சேர்ந்தேன். உடன் வந்தவர்களையெல்லாம் வாழ்த்தி அனுப்பிவிட்டு, என் அறையினை அடைந்தேன். அன்னையின் அடிமலர் வணங்கி ஆண்டவன் பாதம் நினைந்து, வழித்துணைநாதனை வாழ்த்தி, என்றும் உடனிருக்கும் அவன் தாள் போற்றி மகிழ்ந்து உறங்கினேன். எழுபது நாட்களின் வாழ்க்கை நெறி என்னை ஆட்கொண்டது.

7-9-85ல் இந்நூலை வெளியிட்ட மாண்புமிகு ஆர். செங்கோட்டுவேலன் அவர்கள் கூறியவற்றுள் ஒரு சில

———

இது ஒரு பயண நூல்; பல பயண நூல்களைப் படித்துள்ளேன். நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பெரியவர் பயணம்பற்றி எழுதியுள்ளார், எங்கள் கோவைப்பக்கம் இருந்த 'பகடலா' நரசிம்ம நாயுடு. இந்தியா முழுவதும் பயணம் செய்து இந்தியப் பயண நூல் எழுதினார். அந்தப் பயண நூலைப்போன்று வேறு சிறந்த நூலை, இந்தப் பயண நூலைப் பார்க்கும்வரையில் நான் பார்க்கவில்லை.

* * *

இந்நூலைப் படித்தபோது ஒரு எண்ணம் வந்தது. மணிமேகலையில் அவர்தம் அமுதசுரபியில் 'ஆருயிர் மருந்தாகிய' சோறிட்ட ஆதிரையின் கணவன் சாதுவன் வெளிநாடு செல்கிறான். அவன் சென்ற தீவில் இருந்த மக்களின் 'மது, மங்கை' என்ற வாழ்க்கையினை மாற்றி அமைத்தான். அதுபோன்றே இந்நூலாசிரியரும் வெளிநாடுகளில் உள்ள மக்கள் வாழ்வை கண்டு, கசிந்து, மாற்றி அமைக்க வற்புறுத்தியுள்ளார். அந்த முறையில் இந்த நூல் போற்றுதற்குரியது.

* * *

மேலை நாடுகளில் சென்று அங்கு நடக்கின்ற பல தீமைகளைப் பார்க்கும்பொழுது நம்முடைய நாடு எவ்வளவு சிறந்தது என்று ஆங்காங்கே குறித்திருப்பதைப் பார்க்கிறேன். அந்த முறையில் மிகச் சிறந்த வகையில் நம்முடைய நாகரிகம் சிறந்தது என்ற உறுதிப்பாட்டை நமக்குக் கொடுக்கிற நூல் இது.

* * *

அங்கே சமயம் இருக்கும் நிலையைப் பார்க்கிறார். கிறிஸ்தவ சமயத்தை அவர்கள் கடைப்பிடிக்கிறார்கள்.

ஆனால் 'ஒரே ஒரு கிறித்தவர் இருந்தார்; அவரும் சிலுவையில் மாண்டார்' என்ற ஜார்ஜ் பெர்னாட்ஷாவின் வார்த்தைகள் இவருடைய நினைவிற்கு வருகின்றன.

* * *

அங்கே பாரிசில் பெரிய நூல் நிலையம் இருக்கிறது. ஆனல் அங்கே கம்பனும் இல்லை; இளங்கோவும் இல்லை; வள்ளுவரும் இல்லை: பாரதியும் இல்லை என்று அங்கலாய்க்கிறார். அந்த உணர்வு—தமிழ்நாட்டில் பிறந்த உணர்வு—அங்கே பாரிசில் வருவதைப் பார்த்து என்போன்றவர்தம் உள்ளத்தை உலுக்குகிறது.

* * *

உரோமுக்குச் செல்லுகிறார். போப் ஆண்டவரைப் பார்க்கிறார். இவர் சாதாரண மக்களைப் போன்று 'என்னை ஆசீர்வதியுங்கள்' என்று சொல்லாது—வேண்டாது 'இந்த வள்ளியம்மாள் பள்ளியில் பயிலும் பிள்ளைகளை ஆசிர்வதியுங்கள்' என்று வேண்டுகிறார். உரோம் நகரிலே தங்கியபோது, அந்நாட்டு மக்கள் யவனர் என்ற பெயருடன் பழைய காவிரிப்பூம்பட்டினத்தில் தங்கியிருந்த 'யவனர் இருக்கை' நினைவுக்கு வருகிறது. அங்குள்ள பெரிய மாதா கோயிலைப் பார்க்கும்போது தஞ்சைப் பெரிய கோயில் இவர் நினைவில் வருகிறது. அங்கே செல்லுகின்ற எத்தனை பேருக்கு இத்தகைய நினைவுகள் வரும்?

* * *

இலண்டன் மாநகரத்திலே மக்கள் காலத்தை வீணாக்காது ஓடி உழைக்கின்றதைக் காண்கிறார். ஆனால் நம் நாட்டில் பலர் 'சும்மா இருப்பதே சுகம்' என்று 'சும்மா' இருப்பதை எண்ணி வருந்துகிறார். அவர்கள் சுறுசுறுப்பும் வேலைகளில் காட்டும் ஊக்கமும் இவரைக் கவர்கின்றன.

* * *

பிற நாடுகளில் நம் சமயத்தைபற்றி அறிந்துகொள்ளப் பலர் முனைப்போடு இருக்கிறார்கள். ஆனால் நம் சமய

உண்மைகளை அவர்களுக்கு விளக்கிச் சொல்ல ஆட்களோ நூல்களோ இல்லை என்று வருந்துவதோடு, நம் நாட்டு மடாலயங்கள் இவைபற்றி ஒன்றும் செய்யாததை எண்ணிப் பார்க்கிறார். அப்படியே இந்நூலில் குறித்திருக்கிறார்.

* * *

அந்நாடுகளில் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் தேர்வுமுறைகள் ஒழுங்காகவும் செம்மையாகவும் நடைபெறுவதைக் காண்கிறார். நம்நாட்டில் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் அத்தகைய நல்ல முறைகளில் தேர்வுகள் நடைபெறாத நிலையினை எண்ணி வருந்துகிறார். அப்படியே ஆய்வுப்பட்டங்கள் பெறுவதற்கு அந்த நாடுகளில் பல்கலைக்கழகங்கள் கொண்ட விதிமுறைகளையும் நடைமுறைகளையும் சுட்டிக் காட்டுகிறார். ஆனால் நம் நாட்டில் அந்த ஆய்வுப்பட்டங்கள் பெறுகிற நிலை இவர் உள்ளத்தைத் தொடுகிறது.

* * *

இங்கே சம்பளம் நாள்கணக்கில்—மாதக்கணக்கில் வேலை செய்தால் கிடைக்கும். அந்நாடுகளில் மணிக் கணக்கில்—அதுவும் அவர்கள் வேலை செய்யும் அளவிற்கு ஏற்றபடி சம்பளம் கிடைக்கிறது. அதுவும் இந்த ஆசிரியர் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது,

* * *

அட்லாண்டிக் மகாசமுத்திரத்தை விமானத்தில் கடக்கிறார். அப்போது கம்பருடைய 'கடல் தாவு படலம்' இவர் நினைவுக்கு வருகிறது. ஒரு சிறு 'பாக்ஸ் சலசந்தி'யை அனுமன் கடந்ததை அப்படலத்தில் அவ்வளவு அழகாகப் பாடிய கம்பன், இப்போது இருந்தால் இக் கடல்தாவு நிலையை எப்படி எப்படிப் பாடியிருப்பான் என அங்கலாய்க்கிறார். இந்த நாட்டில் பிறந்ததன் அடிப்படைத் தமிழ் உணர்வு இவரிடம் இருந்த காரணத்தாலேயே அட்லாண்டிக் மாகடலைக் கடக்கும்போது கம்பனது கடல் தாவு படலம்

நினைவுக்கு வருகிறது. இவ்வுணர்வு அனைவருக்கும் வராது. இத் தமிழ் உணர்வில் இந்நூலாசிரியர் முதல்வர். எனவே இவர்தம் தமிழ் உணர்வைப் போற்றுவோம்.

* * *

அந்நாட்டு மக்களெல்லாம்—சிறப்பாக அமெரிக்கர் நம் நாட்டு விழாக்கள், பழக்கவழக்கங்கள், பொட்டிடுதல், மஞ்சள் பூசுதல், திருநீறு அணிதல் போன்றவற்றின் பொருள்கள்பற்றி அறிய விரும்புகிறார்கள். பாட்ரிமோரில் டாக்டர் பெரியசாமி அவர்தம் மனைவியார் அவைபற்றி யெல்லாம் இவரிடம் கேட்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் விளக்கம் தந்து, மேலும் தேவையானவற்றை எழுதி அனுப்புவதாகவும் கூறியுள்ளார். நம் நாட்டிலேயே பலருக்கு இவைபற்றித் தெரியாதே. எனவே நம் நாட்டுக் கலாசாரம் பழக்க வழக்கங்களை அறிந்து வெளிநாடு சென்றால்தான் மதிப்பிருக்கும் எனத் தெரிந்து கொண் டேன்.

* * *

அங்கே ஒரு அணில் ஓடுகிறது. அது ஆசிரியர் கவனத்தை இழுக்கிறது. அதன் முதுகில் முன்று கோடு இல்லை, அது சேது அணையினைக்கட்டும் காலத்தில் அதை இராமர் தடவ உண்டானவை என்று கூறுவார்கள். இதை நினைக்கிறார் ஆசிரியர். இங்கே இந்த அமெரிக்காவிற்கு—அன்று தெரியாத நாட்டிற்கு—இராமன் வரலில்லை யாதலால் இவைகளுக்கு அக்கோடுகள் இல்லையோ என எண்ணுகிறார்.

* * *

இவ்வாறு நூல்முழுதும் மேற்கும் கிழக்கும் இணைந்து காணும் பல காட்சிகள் உள்ளன. அனைவரும் படித்துப் பயன் பெறத்தக்க பயணநூல் இதுவாகும்.

* * *





95
55
54
6